


ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார்

அருளிய

கந்தபுராணம்

யுத்த காண்டம் சூரபதுமன் வதைப்படலம்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

320, செட்டியார் தெரு, கொழும்பு -11.

தொலை பேசி : 334004

உ

சிவமயம்

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்

அருளிச் செய்த

கந்தபுராணம்

யுத்த காண்டம் சூரபதுமன் வதைப்படலம்
(மூலமும் உரையும்)

உரையாசிரியர் :-
பண்டிதர் இயற்றமிழ் வித்தகர்
ச. சுப்பிரமணியம் அவர்கள்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் வீதி, கொழும்பு - 11.

உ

சிவமயம்

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் துதி

போதமுனு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலில் படிந்ததன்கட் பொருள தான
மேதகுவன் பனல்அருந்தி வையம் உய்ய
வெய்யதுயர்ப் பிறவிஎனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டில் ஏறிச்
சலதிஅமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தஅருட் கொண்ட லான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்.

ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான்

விலை ரூபா 200/=

Computer Type Setting By: Global Publications
No: 108/2 Sri Kathiresan Street, Colombo -13.

உ

சிவமயம்

பதிப்புரை

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த பரம் பொருளான சிவபெருமானின் முக்கண்களாக விளங்கும் புராணங்கள் முறையே பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் என்னும் மூன்றுமாம். பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப் பூங்கோதை இடப்பாங்குறையும் முக்கட்பரஞ்சோதியின் நுதற்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாக உதித்த ஆறுமுகனின் வரலாற்றை விரித்துக்கூறும் கந்தபுராணம் நெற்றிக் கண்ணுக்கு நேராகும்.

இக் கந்தபுராணம் காஞ்சிக் கந்த கோட்டத்து முருகவேளால் திகடசக்கரமென அடி எடுத்துக் கொடுக்கப்பெற்ற சிறப்புடையது; கச்சியப்ப சிவாச்சாரியாரால் அருளிச் செய்யப் பெற்றது. உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மயேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷிகாண்டம் என்னும் ஆறுகாண்டங்களாக வகுக்கப்பெற்றது; 10345 செய்யுட்களைக் கொண்டது. நவில்தொறும் நூல்நயம் பயப்பது பயில்தொறும் பக்தியை விளைவிப்பது; நுணுகி ஆராய்வார்க்குத் தத்துவஞானம் தரவல்லது; இடையறாது ஒன்றிய சிந்தையராய் ஓதவல்லார்க்குக் கந்தப்பெருமானின் கடியேறும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொள்ள வல்லது.

இன்னோரன்ன சிறப்புகளையுடைய கந்தபுராணத்தை நம் ஈழநாட்டில் ஆலயங்களில் அவற்றுள் பிரதானமாக யுத்த காண்டத்தின் சூரபதுமன் வதைப்படலத்தை கந்தசஷ்டி விரதநாட்களில் படித்து பயன் சொல்லுவது வழக்கம்.

சைவஅன்பர்கள் பலர் தற்போது இதனைப் பெறுவது அரிதாக இருப்பதால் இந்நூலினை அச்சிட்டு உதவ மேண்டுமென எம்மிடம் வேண்டிக்கொண்டார்கள். நாமும் இதற்கு தகுதியான ஒருவர் கிடைக்கும்வரை தாமதப்படுத்தினோம் **"சைவநீதி"** ஆசிரியர் திரு. செ. நவநீதகுமார் மூலம் **பண்டிதர் ச. சுப்பிரமணியம்** அவர்களின் சிறப்பை அறிந்து இப்பணியை நிறைவேற்றித் தருமாறு கேட்டோம். அவரும் அன்புடன் ஏற்று உரை எழுதி, திருத்தங்கள் கவனித்து பூரணமாக வெளியிட உதவினார்கள். அறுமுகப்பெருமானின் அருள் விளையாடல்களைக் கூறும் இப்புராணத்தை அன்பர்கள் பலரும் பெற்று நாடோறும் ஓதி பக்தி நலம் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பல அருள் நூல்களை அச்சிட்டு வழங்கும் சீரிய பணியில் எம்மை ஈடுபடுத்தி ஆட்கொள்ளும் கருணைக்கடலாகிய சிவபெருமானின் திருவடிக் கமலங்களை மனம்மொழி மெய்களால் வணங்கி எமது பணிவான வணக்கங்களை இந்நூல் உருவாவதற்கு துணையாயிருந்த அனைவருக்கும் அன்பு செலுத்திக் கொள்கிறேன்.

என்றும் இறைபணியில்
ஆறுமுகம் கந்தையா
பதிப்பாசிரியர்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி,
கைதடி.
17 - 10 - 2000

உ

சிவமயம்

"வேலும் மயிலும் துணை"

உரைஉரைத்தார் முன்னுரை

முருகன்துதி:

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தாகதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

அவையடக்கம்

கற்ற கேட்ட கருத்தவெலாம் கந்தன் கருணைக் கறவைமுனம்
உற்றங் கூட்டும் உடைமையவாம், உடன்நின்(று) எழுகும் உழும்ஏர்நாம்
உற்ற உறவாம் உவனடியார்க்(கு) உறுமே உறுமே உறாதவர்க்கும்
பெற்றம் அளித்த பால்பிறர்பாற் பெறினும் பெறுவர் பெரியோரே

வரன்முறை :

கந்தை யாவாம் பெயர்ப்பாட்டன் கனிந்தே கல்வி தரப் பெற்றேன்;
கந்தை யாவாம் கருதெட்டுக் கமலை பெயர்காண் தொழிற்கர்த்தர்,
கந்த சுவாமி சூர்கடந்த காதைக் குரைகண் டுதவுகென,
இந்த உரையாம் எழுதஇதை ஏற்றோன் அச்சி(டு) ஈந்ததுவே.

வேண்டலுரை:

கந்தன் கணத்தடியர் கையேற்றுக் கற்றுணர்க;
முந்தன்பு முற்றுகவேல்முன்பு
குமர குருபரன் குலமாட் கொள்கவே.
நலமே பெருகுக நாடெலாம் வாழ்க.
"வேலும் மயிலும் துணை"

பண்டிதர் இயற்றமிழ்வித்தகர் ச. சுப்பிரமணியம்
சிவன்வீதி, ஆவரங்கால், புத்தூர்
11A, 1ம் சப்பல்லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
17.10.2000

ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார் வரலாறு

சான்றோர்கள் மிக்கிருக்கும் தொண்டை நாட்டில், "நகரங்களிலே சிறந்தது காஞ்சி" எனப் பாரட்டப் பெறும் காஞ்சிபுரத்தில் கந்தகோட்டத்தில் பரம்பரை அர்ச்சகராக இருந்து வரும் ஆதி சைவகுலத்தில் கி. பி. 14ம் நூற்றாண்டில் காளாத்தியப்ப சிவாசாரியார்க்கு மகனாகப் பிறந்தவர் கச்சியப்ப சிவாசாரியார் ஆவார். இவர் வட மொழியும் தென்தமிழும் நன்கு கற்று அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார். கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். முருகப் பெருமானிடம் அளவற்ற பக்தி பூண்டு ஒழுகி வந்தார்.

ஒரு நாள் கச்சியப்பரின் கனவிலே முருகப்பெருமான் காட்சி தந்து "வடமொழிக் காந்த புராணத்தின் ஆறு சங்கிதைகளில் சங்கர சங்கிதையின் முதற் காண்டமான சிவரகசியத்துள்ளே நமது சரிதை கூறப்பட்டுள்ளது. அச்சரிதையைக் கந்த புராணம் என்னும் பெயரில் தென் தமிழ் நூலாகச் செய்திடு" என்று ஆணையிட்டு "திகடசக்கரம்" என்று அடிஎடுத்துக் கொடுத்து மறைந்தார். விழித்தெழுந்த கச்சியப்பர் வியந்து மகிழ்ந்தார். மெய்ம் மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வளர்ந்து முருகப் பெருமானின் சந்நிதியில் அமர்ந்து கந்தபுராணம் இயற்றத் தொடங்கினார். நாடோறும் ஏறத்தாழ நூறு பாடல்கள் வீதம் எழுதி, அவ்வோலைச் சுவடியை முருகப்பெருமான் திருவடியில் வைத்துவிட்டு வீடு திரும்புவார். மறுநாள் அச்சுவடியை எடுத்துப்படித்துப் பார்க்கும்போது ஓரிரு இடங்களில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதைக் காண்பார். இங்ஙனம் முருகப் பெருமானால் திருத்தப் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த புராணம் ஆறு காண்டங்களாக 10345 செய்யுட்களால் பாடி முடிக்கப் பெற்றது.

பிறகு ஒருநாள் கந்த புராணத்தை அரங்கேற்ற விரும்பிய கச்சியப்ப சிவாசாரியார் தொண்டைமண்டலப் புலவர்க்கெல்லாம் அழைப்பு விடுத்து முருகப்பெருமானின் சந்நிதியில் அவை கூட்டினார். முறைப்படி புராணத்தைப் பூசித்து முதற் செய்யுளைப் படித்துத் 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்ற முதல் வரிக்கு விரிவுரை செய்தார். அவையில் இருந்த பெரும்புலவர் ஒருவர் இடைமறித்துத் "திகழ் தசக்கரம் என்ற சொற்கள் திகடசக்கரம் என்று புணர்வதற்கு விதியாது" என்றும் "இதற்கான விதி தொல்காப்பியம் முதலான நூல்களில் காணப்படவில்லையே" என்றும் வினாவினார். அப்பெரும் புலவரின் தடைக்குக் கச்சியப்பர் விடைகூற இயலாமையாலே, "புலவர் ஏறே! இதற்கான விதியை யானும் அறிகிலேன்; ஆயினும் இத்தொடர்

முருகப்பெருமானால் அடிஎடுத்துக் கொடுக்கப்பட்ட வாக்காகும். ஆதலின் அதனை ஏற்கலாமே" என்றார். தடை எழுப்பிய புலவர் கச்சியப்பரை நோக்கி "இது முருகனின் வாக்கு எனில் அவரே வந்து விதி கூறவேண்டும். அல்லது இதற்கான விதியை நீரே காட்டவேண்டும். அல்லதுவழி நூல் அரங்கேற விடோம்" என்று வன்மை பேசினார். இதனால் அவையத்தார் கலைந்து போயினர். பின்னர் மிகவும் மனம் நொந்த கச்சியப்பர் முருகப் பெருமான் சந்நிதியில் வீழ்ந்து புரண்டு அழுது "ஐயனே! நீ கூறிய தொடர்க்கு நீயே விதி கூறவேண்டும்; இல்லையேல் என் உயிரை நின்னடி சேர்ப்பிப்பன்" என்று புலம்பினார். இந்நிலையில் கச்சியப்பர் அயர்ச்சிமிக்குக் கண் அயர்ந்தார். அவரது கனவில் முருகப் பெருமான் தோன்றி, "நாளையும் அவை கூட்டுக: சோழநாட்டுப் புலவன் நூலோடு வந்து விதி காட்டுவான்" என்று சொல்லி மறைந்தார்.

கச்சியப்பர் இலக்கணவிதி காட்டுவதாகக் கூறி மறு நாளும் எல்லாப் புலவர்களையும் அழைத்தார். அவை கூடியது. புலவர்களின் நடுவே புதிய புலவன் ஒருவன் இளம் வயதினனாய் செம்மேனியனாய், கையிலோர் சுவடி ஏந்தியவனாய் அமர்ந்திருந்தான். முதல் நாள் தடையை எழுப்பிய புலவர், மறுநாளும் அத்தடையைக் கூறி விடையளிக்க வேண்டுமென்றார். உடனே புதிய புலவன் எழுந்து "நாம் சோழநாட்டினோம்; எம்மிடம் உள்ள இச்சுவடி வீரசோழியம் என்னும் இலக்கணநூல். இந்நூலை நீவிரும் அறிவீர். இந்நூலின் சந்திப் படலத்தில் 18ம் பாடலில் ழகரமும் கூடி டகர மாவதற்கு விதி கூறப்பட்டிருக்கிறது. இவ்விதியை நீவிர் அறிவீரோ" என்றான்.

அப்போது அவையத்தார் "ஆம் ஆம், வீரசோழியமும் அறிவோம்; அவ்விதியையும் கற்றவர்தாம். ஆயினும் இவ்விதி எங்கள் அனைவர்க்கும் நினைவெழாதிருந்தது பெருவியப்பே" என்று கூறினர்; அவ்வளவில் புதிய புலவன் மறைந்தான். அங்ஙனம் புதியனாக வந்து அறிவுறுத்தியவன் முகப் பெருமானே என உணர்ந்து கச்சியப்பரைப் பாராட்டினர். பின்னர் சின்னாட்களில் நூல் செவ்வனே அரங்கேறியது. தொண்டை நாட்டின் இருபத்து நான்கு கோட்டத்தாரும் கூடிக் கச்சியப்பரை கந்தபுராண நூற் சுவடியையும் தந்தப் பல்லக்கில் ஏற்றுவித்து நகர்வலம் செய்வித்து மரியாதைகளும் செய்தார்கள்.

கச்சியப்பர், தம்மாணாக்கராகிய ஞான வரோதயர் முதலானோர்க்கு இந்நூலைப் பாடஞ்சொல்லிப் பல பகுதிகளாக எழுதச் செய்தார். பின்னும் முருகனைப் பூசித்திருந்து பிரானருள் பெற்று இருமையும் ஒருமையாம் ஒடுக்கத்தோங்கினார்.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்

விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். 1

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம். 2

கந்தசுவாமி காப்பு

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி 3

நூற் பயன்

இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் நன்னைக் காதலித் தோது வோரே. 4

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விங்குக வுலக மெல்லாம்.

வேலும் மயிலும் துணை

உ

சிவமயம்

கந்தபுராணம் யுத்தகாண்டம்
சூரபதுமன் வதைப்படலம்

திருச்சிற்றம்பலம்

"வேலும் மயிலும் துணை"

கொற்ற வேற்படை பரித்திடும் ஆயிர கோடி
ஒற்றர் தங்களை நோக்கியே சூரனாம் உரவோன்
மற்றென் ஆட்சியாம் அண்டங்கள் எங்கணும் வைகிச்
சுற்று தானையைத் தம்மினோ கடிதெனச் சொன்னான். 1

பொருள் : கொற்ற வேற்படை பரித்திடும் - வெற்றிவேற்படை தாங்கும், ஆயிர கோடி ஒற்றர் தங்களை நோக்கி - பல கோடி எண்ணிக்கையான தூதுவர்களை அழைத்து, சூரனாம் உரவோன்-சூரபதுமனாகிய அறிவாற்றலுடையவன், மற்றென் ஆட்சியாம் அண்டங்கள் எங்கணும் வைகிச் சுற்றுதானையை-எனது ஆட்சியிலுள்ள ஆயிரத்தெட்டு அட்டங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து எமதேவல்வழிநிற்கும் அசுரசேனைகள் அனைத்தையும், கடிது தம்மினோ எனச் சொற்றான்-விரைவிலே அழைத்து நம்முன் தருவீர்எனப் பணித்தான்.

பொ.எ. சூரபதுமன் பலகோடி தூதுவரை விளித்து நீவீர் விரைவாக எமதாட்சியிலுள்ள அண்டங்களில் வாழும் அசுரப்படைகளை அழைத்து இங்கே தருவீர் என்றான்.

குறிப்புரை : படலந்தோறுமின்றிக் காண்டமுதல் தோறும் கந்தன் வந்தனை கூறும் கச்சியப்பர் இங்கே கந்தனின் பிரதிநிதியாயுள்ள வெற்றிவேலை போற்றுமின் எனக் குறிப்பிட்டார்.

சொன்ன காலையின் நன்றென வணங்கியே தூதர்
பன்ன ருங்கதி கொண்டனர் விண்டனர் படர்ந்து
பொன்னின் மேதகும் அண்டங்கள் இடைதொறும் புகுந்து
மன்னர் மன்னவன் தன்பணி முறையினை வகுத்தார். 2

பொருள் : சொன்ன காலையில் தூதுவர் நன்றென வணங்கியே-சூரன் பணித்த மாத்திரமே தூதுவர் மன்னருக்கு நலமாக எனவாழ்த்திவணங்கி விடைபெற்று, பன்னரும் கதிகொண்டனர் விண்டனர் படர்ந்து-சொல்லொணாத அதிவேகம் கொண்டவராய் அங்கிருந்து புறம் போந்து, பொன்னின் மேதகும் அண்டங்களிடைதொறும் புகுந்து-பொன்னிலும் மேல் ஒளிமிகும் அண்டங்களினிடந்தோறும்சென்று, மன்னர்மன்னவன் தன்பணி முறையினை வகுத்தார்-இராசாதிராசனாகிய சூரபதுமனின் ஆணை முறையினை ஏவருமறிய வகுத்துக் கூறினர்.

பொழிப்பு : பணியேற்ற ஒற்றர், சூரனை வாழ்த்தி வணங்கிவிடைபெற்றுப்போய் அண்டங்கள் தோறும் துருவிச் சென்று அங்குள்ள அசுரமன்னர்முன்பு மாமன்னன் ஆணை முறையை வகுத்துரைத்தனர்.

வகுத்த காலையில் ஆண்டுறை அவுணமன் னவர்கள்
தொகுத்த நாற்பெருந் தானையங் கடலொடுந் துவன்றி
மிகுந்த அண்டத்தின் புடைதொறும் புடைதொறும் மேனாட்
பகுத்து வைத்திடும் வாயிலின் நெறிகளாற் படர்ந்தார். 3

பொருள் : வகுத்த காலையில் ஆண்டுறை அவுண மன்னவர்கள்-ஒற்றர் உரைத்தபோதே ஆங்காங் குறையும் அவுணமன்னவர்கள், தொகுத்த நாற்பெருந் தனையங்கடலொடும் துவன்றி-தாம் ஆங்கே கூட்டிய நால்வகையான கடல்போன்ற பெரும் சேனைகளோடு சேர்ந்து, மிகுத்த அண்டத்தின் புடைதொறும் புடைதொறும் மேல்நாள் - பலவாகிய அண்டத்தின் கோளகை தோறும் ஆதிநாளில் படைத்த பிரமனே பகுத்து வைத்திடும் வாயிலின் நெறிகளிற்படர்ந்தார்-வெவ்வேறாக வைத்த வாயில்களின் வழியே மகேந்திரம் நோக்கி விரைந்து சென்றனர்.

பொழிப்பு : ஒற்றருரைத்த சூரன் ஆணைகேட்டபோதே ஆங்குள்ள அசுரமன்னவர்கள் தத்தம் சதுரங்கசேனா சமுத்திரங்களுடன் அண்டகோள வாயில் வழியே மகேந்திரம் நோக்கிச் சென்றனர்.

முந்தை அண்டத்தின் நெறிதனில் முழங்கிருஞ் சேனை
வந்து வந்திவட் செறிவன வீதியொடு மாறாய்ச்
சுந்த ரங்கெழு மாயன்இவ் வுலகுயிர் துய்ப்ப
உந்தி யின்வழி அங்கவை தோன்றுமா றொப்ப. 4

பொருள் : முந்தை அண்டத்தின் நெறிதனில் முழங்கிருஞ்சேனை- பழைய அண்டங்னளுக்கிடையிலான வழியிலே ஆரவாரத்தோடு வரும் அவுணப்பெருஞ்சேனை, வந்துவந்திவண் செறிவன- மேன்மேலும்வந்து மகேந்திரநகரிலே சேருதல் எங்ஙனமிருந்ததெனில், விதியொடுமாறாய்ச் சுந்தரங்கெழுமாயன் இவ்வுலகுயிர் துய்ப்ப- பிரமனோடு மாறுபட்டு அழகு மிக்க விஷ்ணு தேவர் இவ்வுலகையும் உயிர்களையும் உண்டு வயிற்றில் வைத்தபின், உந்தியின் வழி அங்கவை தோன்றுமாறு ஒப்ப - மீண்டும் அவனருளால் அவனுந்திக்கமலத்திலிருந்து அவையாவும் அவ்வாறே வெளிவந்து சேர்வது போலமைந்தது.

பொழிப்பு : படைத்த பிரமாவுடன் மாறுபட்ட விஷ்ணு உலகையும் உயிர்களையும் ஒருங்கே உண்டு வயிற்றிலடக்கி, அருளினாலே மீளப்பிறக்க எண்ணுதலும் அவை உந்திக்கமலத்தினூடாக வெளிவந்ததுபோலவே அவுண சேனைகள் இவ்வண்டவாயிலூடாக வந்து மகேந்திர நகரில் நிறைந்தன.
விதி - பிரமா, மாயன் - விஷ்ணு, துய்ப்ப - உண்ண, உந்தி - தொப்பூழ்.

பூதம் யாவையும் உயிர்களும் புவனமுள் ளனவும்
பேதம் நீங்கிய சுருதியா கமங்களும் பிறவும்
ஆதி காலத்தின் அநாதியாம் எம்பிரான் அளப்பில்
பாத பங்கயத் துதிப்பவும் போன்றன பகரின். 5

பொருள் : பகரின்-படைகளின் வருகைக்கு மற்றோர் உவமை கூறின், பூதம் யாவையும் உயிர்களும் புவனமுள்ளனவும் - ஆதிகாரணமாயுள்ள ஐம்பூதமும் நிமித்தமாகிய உயிர்களும் அவற்றுக்குப் போகமும் புவனமுமெனவுள்ள பற்பல உலகமும்,

பேதம் நீங்கிய சுருதி ஆகமங்களும் பிறவும் - தம்மிடையே பேதமின்றி மெய்யுணர்வு தரும் வேதாகமங்களும் அவற்றை ஓதியுணர்வதற்குக் கருவியாகும் - ஏனைய கலைகள் வித்தைகளும், ஆதிகாலத்தில் அநாதியாம் எம்பிரான் அளப்பில் பாத பங்கயத்து - ஆதிப் படைப்புக் காலத்தில் அநாதிமூலப்பொருளாய் என்றுமுள்ள எங்கள் சிவபிரானது, அளப்பில் பாதபங்கயத் துதிப்பவும் போன்றன- அளவறியப்படாத திருவடிக்கமல மலரினின்றும், உதிப்பவும் போன்றன அவனருளாலே தோன்றிமலரும் தன்மையும் போன்றிருந்தன.

பொழிப்பு : பூதங்களும் உயிர்களும் புவனங்களும் பேதமில்லாத வேதாகமங்களும் மற்றுமுள்ள கலைவித்தை ஆகிய அனைத்தும் சிருட்டியாரம்பத்திலே என்றுமுள்ள ஈசனின் சங்கற்பப்படி அவனது பாத கமலத்திலிருந்து வெளிவந்தவாறு போலவுமிருந்தது சேனைப்பெருக்கவரவு.
சுருதி ஆகமம் பிற-ஞானத்துக்கு ஏதுவாகிய வேதமும் ஆகமும் இவற்றை ஓதியுணரக்கருவியான பிற கலைகளும் வித்தைகளும், வேதாந்தம் சித்தாந்தம் தம்முள் பேதமென்பது மெய்யுணரார் சொல். அபேதமானவை என்பதே உண்மை.

இனைய தன்மையால் அண்டத்தின் நெறிதனில் ஏகும்
வனைக ருங்கழல் அவுணர்தம் படையிவண் வரலுங்
கனலி தன்சுடர் மறைந்தன நடுங்கினன் கனலும்
அனிலன் தானுமெய் வியர்த்தனன் நெருக்கமுற் றயர்வான். **6**

பொருள் : இனைய தன்மையால் அண்டத்தின் நெறிதனில் ஏகும் வனைகருங்கழல் அவுணர் தம் படை இவண்வரலும்-இத்தன்மையாக அண்டவாயில் வழியாக வருகின்ற பெரிய வீரக் கழலணிந்த அவுணர்களின் படைஇங்கு வந்துறுதலும், கனலி தன் சுடர் மறைந்தன-சூரியனின் கதிரொளிகள் மறைந்தன, கனலும் நடுங்கினன் - அக்கினிதேவனும் அஞ்சி நடுங்கினான் - அநிலன் தானும் மெய் வியர்த்தனன் வாயுதேவனும் பயந்து மேனிவியர்ப்புற்றான், நெருக்கமுற்று அயர்வான்-நெருக்முற்றுக்சோர்ந்தான்.

பொழிப்பு : செறிந்து சேரும் படையால், சூரியஒளி மறைந்தது, அக்கினி தேவன் அஞ்சி நடுங்கினான், வாயுதேவன் மேனிவியர்வையுண்டாகச் சோர்வடைந்து போயினான்.

அனலி சூரியன், அநிலன் - வாயு, கனல் - அக்கினி.

ஆர்த்த ஓசையால் அகிலமுந் துளங்கிய அவுணர்
கார்த்த மெய்யொளி கதுவலால் இருண்டன ககனந்
தூர்த்த பூழியால் ஆழிகள் வறந்தன துணைத்தாள்
பேர்த்து வைத்திடு தன்மையால் அண்டமும் பிளந்த. 7

பொருள் : ஆர்த்த ஓசையால் அகிலமும் துளங்கிய-அவுணர்களின் ஆரவாரஒலியால் அனைத்துலகும் நடுக்கமுற்றது, அவுணர் கார்த்த மெய்யொளி கதுவலால் ககனம் இருண்டன-அவர்களின்கரிய மேனியொளி செறிதலால் ஆகாய வெளியும் இருண்டது, தூர்த்த பூமியால் ஆழிகள் வறந்தன-படைநகர எழுந்து நிறைந்த புழுதிபடிய சமுத்திரங்கள் நீர்வற்றின, துணைத்தாள் பேர்த்து வைத்திடு தன்மையால் அண்டமும் பிளந்த-இருபாதங்களையும் மாறி எடுத்து வைத்து நடத்தலால் நிலமேயன்றிவான் முகடும் பிளந்தன.

பொழிப்பு : படையின் பேரார்ப்பரிப்பால் உலகம் நடுங்கியது, கரிய மேனியொளி செறிய வானம் இருண்டது, எழுந்த புழுதியால் கடல்கள் வற்றின, அடிபெர்த்து நடக்க மண்ணும் விண்ணும் பிளந்தன.

துணைத்தாள் - இரண்டுகால், அண்டமும் என்னும் எச்ச உம்மையால் தரையும் என்பது கொள்க. துளங்கின முதலியன அ.றிணைப்பன்மை முற்றுகள்.

கூடும் இப்பெருந் தானையை நோக்கிமெய் குலைவுற்
றோடு தற்கிடம் இன்றிநின் றிரங்கினர் உம்பர்
விடி னானென வாசவன் மருண்டனன் விதியும்
நீடு மாயனும் முடிவதென் னோவென நினைந்தார். 8

பொருள் : கூடும் இப்பெரும் தானையை நோக்கி - வந்து சேர்ந்த இந்தப் பெரியசேனையைப் பார்த்ததால், மெய்குலைவுற்று ஓடுதற்கிடமின்றி நின்று இரங்கினர் உம்பர் - தேவர்கள் மேனி நடுக்கமுற்றஞ்சித்தப்பிஓடி உயிர்ப் பிழைக்க இடங்காணாது இரங்கினர், வாசவன் வீடினானென மருண்டனன்-இந்திரன் இறந்தவன்போல அவசமாய் மயங்கினான், விதியும் நீடுமாயனும் முடிவது என்னோ என நினைந்தார்-பிரமனும் நெடியவனான விஷ்ணுவும் இன்றைய போரின் முடிவு என்னாகுமோ எனப்பெருங்கலையுற்றார்.

பொழிப்பு : அசுரப்பெரும்படையைப் பார்த்த போதே அஞ்சி ஓடிஒளிக்க இடம் காணாது தேவர்நடுங்கி இரங்கினர், இந்திரன் இறந்தவன் போலச் செயல் இழந்தான், அயனரி இருவரும் முடிவுயாதாகுமோ என எண்ணி ஏங்கினர்.
உம்பர் - தேவர், வீட்டினான் - இறந்தான், வாசவன் - இந்திரன், விதி மாயன் - அயனரி.

பூத லந்தனில் அம்பர நெறிதனில் புடைசூழ்
மாதி ரங்களில் அளக்கரில் வரைகளில் வழியில்
பாத லங்களில் பிறவினில் அவுணர்தம் படைகள்
ஏதும் வெள்ளிடை இன்றியே சென்றன ஈண்டி 9

பொருள் : பூதலந்தனில் - பூமியிலும், அம்பரநெறிதனில் - ஆகாயவெளியிலும் புடைசூழ் மாதிரங்களில் - எப்புறமும் சூழ்ந்த எட்டுத்திசைகளிலும், அளக்கரில் - சமுத்திரங்களிலும், வரைகளில் வழியில் - மலைகளிலும் இடையே வழிகளிலும், பாதலங்களில் - பாதாள உலகங்களிலும், பிறவில் - மற்றுள்ள இடங்களிலும், அவுணர்தம் படைகள் ஏதும் வெள்ளிடையின்றியே ஈண்டிச் சென்றன - பார்க்குமிடம் எங்கும் அவுணப்படைகளாகவே சிறிதும் வெற்றிடமில்லாத படியே நெருங்கிப்பரந்துசென்றன.

பொழிப்பு : பூமி வானம் எட்டுத்திசை கடல் மலை பாதலம் செல்வழிய ஆகிய எவ்வெவ்விடத்தும் சிறிதும் வெற்றிடமில்லாமல் அவுணப்படைகளே செறிந்து சென்றன.

மலர யன்பதம் மால்பதம் முனிவர்கள் வைகும்
உலகம் வாசவன் தொன்னகர் ஏனையோர் உறையுள்
அலரி யாதியர் செல்கதி பிலங்களில் அனிகம்
பலவும் நின்றன செல்லிடம் பெறாதபான் மையினால். 10

பொருள் : மலரயன்பதம்-மலராசனான பிரமனின் சதிய லோகத்திலும் மால் பதம்-அரியின்வைகுந்தலோகத்திலும், முனிவர்கள் வைகும் உலகம்-முனிவர்கள் வாழும் உலகிலும், வாசவன் தொன்னகர்-இந்திரனுக்குரிய பழைய சுவர்க்கலோகத்திலும், ஏனையோர் உறையுள் - மற்றும் திக்குப்பாலகர்முதலியோர் வாழ்பதிகளிலும், அலரி ஆதியர் செல்கதி - சூரிய சந்திரர் முதலியோர் செல்லும் கதிகளிலும், பிலங்களில் - கீழே உள்ள எழுபாதலங்களிலும் ஆகிய எவ்விடங்களிலும், செல்லிடம் பெறாத பான்மையினால் அனிகம் பலவும் நின்றன - மேலே மகேந்திரம் செல்வதற்கு வழியின்றித்தடையானதனாலே அவுண சேனைகள் பலவும் சென்றவழியிடையே அங்கங்கு நின்றன.

பொழிப்பு : வந்த அவுண சேனைகள் மகேந்திரத்தைச் சென்றுசேர எங்கும் வழிகள் செல்லமுடியாது தடைபடவே அங்கங்கு நின்றன.

மாறி லாதன தொல்லையண் டங்களின் வந்த
வீறி லாததோர் தூசிகள் படர்ந்திடும் எல்லை
நூறு கோடியோ சனைகளென் றறிஞர்கள் நுவன்றார்
வேறு பின்வருந் தானையின் பெருமையார் விதிப்பார். 11

பொருள் : மாறிலாதன தொல்லை அண்டங்களில் வந்த - மாறுபாடில்லாத பழைய அண்டங்களிலிருந்து வந்துற்ற, ஈறிலாததோர் தூசிகள் படர்ந்தும் எல்லை - எண்ணெல்லை முடிவில்லாத தூசிப்படையணி செல்லும் எல்லையானது, நூறு கோடி யோசனைகள் என்று அறிஞர்கள் நுவன்றார் - நூறுகோடி யோசனைப் பரப்பாம் என்று அறிந்தோர் கூறினர் என்றால், வேறு பின்வரும் தானையின் பெருமையார் விதிப்பார் - முன்னணிப்படை அளவெல்லை அதுவேல் மேலும் பின்னே வரும் அசுரப்படையின் அளவெல்லையின் பெருக்கத்தை யார் அளவிட்டு வகுத்துரைக்க வல்லார்.

பொழிப்பு : மாறில்லாத மற்றைய பல அண்டங்களிலுமிருந்த முன்னணிப் படையின் அளவு நூறு கோடி யோசனையென்று சூதமாமுனிமுதலிய அறிஞர்கள் கூறினராயில் பின்வரும் படைப்பெருக்கத்தின் அளவை அறிந்துரைப்பார். எவரும் வல்லரல்லர் என்பதாம்.

முன்னணி - தூசி - இருகையணிகள், கடைக் கூழை என நான்காக வகுக்கப்படும். முன்னணியெனும் தூசி அளவிலும் ஆற்றலிலும் குறைந்தது. கையணி என்பது அளவிலும் ஆற்றலிலும் மிக்கது. கடைக்கூழைப்படையே எல்லாவகையிலும் மேம்பட்டு விளங்குவதாகும். சிற்றளவைக் கூறிப் பேரளவை எம்மையே கணிக்க விட்டார்.

குறுமை யாமுயிர் வாழ்க்கையர் கொண்டதொல் வளம்போற்
சிறுமை யோவிது விரிந்திட அவுணர்கோன் சேனை
அறிஞர் கூறிய பெருந்தொகை தன்னினும் அடங்கா
பிறிது மற்றிதற் குவமையும் ஒன்றிலை பேசின். 12

பொருள் : குறுமையாம் உயிர் வாழ்க்கையர் கொண்டதொல்வளம் போல்-குறுகிய காலம் உயிர்வாழும் சாதாரண மக்கள் தேடிக்கொண்ட முன்னையோர் படைத்துள்ள ஆக்கம் போல இவ்வளவென அளவிட்டுக்கூற, இது சிறுமையோ இந்தச் சூரபதுமன் பெற்றுன ஆக்கம் சிறிய அளவினதோ, அவுணர்கோன்சேனை விரித்திட-அசுரேந்திரன் சூரனின் சேனைப்பெருக்கமானது விரித்துக்கூற, அறிஞர்கூறிய பெருந்தொகை தன்னினும் அங்டகா-எண்கணிதம் வல்ல அறிஞர்கூறிய சங்கம் பதுமம் முதலிய பேரெண்கள் எவற்றினும் அடங்காது, பிறிது மற்றிதற்கு உவமையும் ஒன்றிலை பேசின் - பேசும் போது எண்ணிறந்த தென்பதல்லது, இது போல இருக்கும் என்று சொல்ல ஒப்பான பொருள்தானும் உலகில் ஒன்றுமில்லை.

பொழிப்பு : மனிதர் சில்லாண்டுவாழ்வோர் சிற்சத்தியே உள்ளவர்கள் இவர்கள்தேடும் ஆக்கமும் சிறிதே எண்ணிலுள் அடங்கிவிடும். சூரனோ நூற்றெட்டு யுகம் நீண்ட வாழ்வும் சிவனிடமே பெற்றுள்ள

ஆயிரத்தெட்டண்டங்களை ஆளும் பேராக்கமும் பெற்றவன் ஆதலின் சூரனதாக்கம் எண்ணிறந்தது என்பதாம்.

அஞ்சு பட்டிடு பூதங்கள் பல்லுரு வமைந்து
நெஞ்சு பட்டிடும் உயிர்கொடு நேருமேல் நிகரும்
மஞ்சு பட்டிடு பொருப்பெலாஞ் சூறைமுன் மயங்கும்
பஞ்சு பட்டிட நடந்திடு தூசிமுற் படையே. 13

பொருள் : அஞ்சு பட்டிடு பூதங்கள் பல்லுரு அமைந்து-ஐந்தாக அமைந்த பூதங்களும் கலந்து பலவேறு உருவங்களாகிநின்று, நெஞ்சு பட்டிடும் உயிர்கொடு நேருமேல்-அவ்வுருவங்கள் தோறும் உள்ளமும் உயிரும் தோன்றும்படி கொண்டு எதிர்நிற்குமாயின் அத்தோற்றமே, மஞ்சுபட்டிடும் பொருப்பெலாம் சூறை முன் மயங்கும் பஞ்சுபட்டிட-முகில் படிந்திருக்கும் பெரிய மலைகள் எல்லாம் பெரும் சூறாவளியின் முன்பு நிலைதடுமாறிச் சுழலும் பஞ்சுபடும் பாடுபோல-அலைவுற்றிட, நடந்திடும் தூசிமுற் படையே-வேகமாக நடந்து வரும் தூசி எனப்படும் முன்னணிப்படைக்கு, நிகரும்-ஒப்பாக உரைக்கலாம்.

பொழிப்பு : ஐந்தாயுள்ள பூதங்களும் பல்வேறு உருவங்கொண்டு அவற்றில் உள்ளமும் உயிரும் கொண்டு முன்வருமாயின் அத்தோற்றமே, முகில்படியும் மலைகளும் சூறைக்காற்றின்முன்பு பஞ்சுபடும் பாடுபோல அலையும்படிசெய்யும் வேகத்தோடு நடக்கும் தூசிப்படைக்கு ஒப்பெனலாம்.

அந்த மின்றியே அகன்புவி கொண்டஅண் டத்தில்
வந்தி டுந்திறற் படைகளின் பெருமையார் வகுப்பார்
முந்து தூசிகள் மகேந்திரப் பெருநகர் மூடி
இந்த வண்டத்தின் இடமெலாம் நிறைந்தன இமைப்பில். 14

பொருள் : முந்து தூசிகள் மகெந்திரப்பெருநகர்மூடி - முன்னேவந்த தூசிப்படைதானே மகேந்திர நகர்முழுவதும் நிரம்பி அதன் மேலும், இந்த அண்டத்தின் இடமெலாம் இமைப்பில் நிறைந்தன - இந்த

அண்டத்தின் இடம் முழுதிலும் ஒரு இமைப் பொழுதினுள்ளே நிரம்பிவிட்டனவாயின், அந்தமின்றியே அகன்புவி கொண்ட அண்டத்தின் வந்திடும் - முடிவிலாததாய் இந்தப் பிருதுவியாம் பூதத்தின் பாங்கிலுள்ள ஆயிரத்தெட்டண்டங் களிலுமிருந்து வருகின்ற, திறற் படைகளின் பெருமையார் வகுப்பார் - ஆற்றல்மிக்க அசுரப்படைகளின் பேரளவை அளவிட்டுரைக்க வல்லவர் யாவர்.

பொழிப்பு : சிற்றளவான தூசிப்படையே இவ்வளவாயின் பின்னே வரும் பெரும் படையின் அளவை யார் அளந்து கூற வல்லார். தூசிப்படையே மகேந்திரத்தை நிறைத்து அண்டத்தை மூடிவிட்டதாயின் மேலும் மேலும் வரும் படையை ஊகித்துக்கொள்க என்பதாம்.

ஆன காலையில் ஒற்றர்போய்ச் சூரனை யடைந்து
பானல் மெல்லடி கைதொழு தையநீ படைத்த
சேனை வந்தயல் நின்றன தூசிமுற் சென்று
வானு லாவுபேர் அண்டத்தை நெருக்கின மன்னோ. 15

பொருள் : ஆனகாலையில் ஒற்றர் போய்ச்சூரனை அடைந்துபானல் மெல்லடி கைதொழுது-படைவந்தடைந்த சமயத்திலே ஒற்றர்கள் சென்று சூரன் முன் புற்று கருங்குவளை மலர் போன்ற மென்மையான அவன் பாதங்களை வணங்கி கை தொழுது நின்று விண்ணப்பிப்பார், "ஐய நீபடைத்த சேனைவந்தயல் நின்றன"-அரசே நீ அமைத்துள சேனைகள் வந்து பாங்கரில் நிற்கின்றன, தூசி முற் சென்று-தூசிப் படையானது முதல் வந்து, வானுலாவு பேரண்டத்தை நெருக்கின மன்னோ-வானத்தில் நிமிர்ந்துபரந்துள்ள அண்டவெளியடங்க நெருகமாகி நிற்கின்றன.

பொழிப்பு : அப்போது ஒற்றர் சென்று சூரனை வணங்கிநின்று "அரசே உமது சேனைகள் வந்து அண்டத்தின்புறத்தே சேர்ந்தன", தூசிப்படையே இப்பெரிய அண்டவெளி முழுவதையும் நெருக்கி நிற்கின்றன.

குறிப்பு : மன் ஓ - அசைநிலை, ஐய - விளி தலைவனே.

என்னும் எல்லையில் நன்றென அவுணர்கோன் எழுந்து
தன்ன தாகிய உறையுள்போய்த் தடம்புன லாடித்
துன்னும் ஐவகை உணவுடன் அறுசுவை தொடர்ந்த
அன்னம் உண்டனன் நஞ்சுகொல் மருந்துகொல் அதுவே. 16

பொருள் : என்னும் எல்லையில் அவுணர் கோன் நன்றென எழுந்து - என்று ஒற்றர் கூறிய அளவிலே சூரன் நன்றென மகிழ்ந்து ஆசனத்திலிருந்தெழுந்து, தன்னதாகிய உறையுள்போய்த் தடம்புனல் ஆடி - தனக்குரிய மாளிகையையடைந்து பெரிய நீர் நிலையிலே நீராடி, துன்னும் ஐவகை உணவுடன் அறுசுவை தொடர்ந்த - சுவை செறிந்த ஐவகை உணவுடன் ஆறுசுவையும் அமைந்ததான, அன்னம் உண்டனன் - அன்னத்தை உண்டான், நஞ்சுகொல் மருந்துகொல் அதுவே - அவ்வாறுண்ட அவ்வுணவு நஞ்சோ அன்றி அமிர்தமோ என்னென்போம்.

பொழிப்பு : ஒற்றர் உரை கேட்ட சூரன் நன்றென எழுது தனது கோயிலையடைந்து நன்கு நீராடி ஆறுசுவையும் செறிந்த ஐவகையான உணவை உண்டான் அந்த இறுதி உணவை நஞ்செனலாமோ? அமுதெனலாமோ?
குறிப்பு : இவ்வுலக வாழ்வை முடித்தலால் நஞ்சுமாம் மேலே அழிவற்ற பெரும் பேறான வீடுதருதலால் அமுதமாகவும் கூறத்தகும். உண்பனதின்பன நக்குவன பருகுவன சுவைப்பன ஐவகை உணவு.

நற னீந்தனன் நெற்றிமெய்ந் நிறைவிரை களபச்
சேற னீந்தனன் பூந்தொடை பங்கிற் செறித்தான்
மாறில் பொற்சுடர்க் கலையுடன் அணிகலன் மாற்றி
வேறு வேறுரன் கினியன புனைந்தனன் வீரைவில். 17

பொருள் : நெற்றி நீறணிந்தனன் மெய்நிறைவிரைகளபச் சேறணிர்க்னன் - பின் தன் நெற்றியில் திருநீறணிந்தான், மேனியெங்கும் நிறைந்த வாசனையுள்ள கலவைச் சாந்தையும் அணிந்தான், பூந்தொடைபங்கியில் செறித்தான் - பூமாலையையும் சிரசிலே சேர்த்தான், மாறில் பொற்சுடர்க்கலையுடன் அணிகலன்

மாற்றி - நிகரில்லாத பொன்போ லொளிரும் பட்டாடையுடன் ஏனைய அணிகலன் பலவற்றையும் (பழையன கழித்து) மாற்றி, வேறு வேறு நன்கு இனியன புனைந்தனன் விரைவில் - வேறுவேறாக நன்றாக இனியன புதியனவாக விரைவில் அணிந்தனன்.

பொழிப்பு : நெற்றியில் நீறணிந்து மேனியில் வாசனைக்கலவைபூசி மலர் மாலையைக் குடுமியிற் கட்டிப் பீதாம்பரமும் புத்தம் புதிய பல ஆபரணங்களும் விரைவாக அணிந்து கொண்டான். உணவு கொள்ளமுன் நீறணியாமல் பின்பு அணிவது அசுரர் ஆசாரம்.

ஈசன் மாப்படை ஏனையோர் பெரும்படை யாவும்
மாசில் ஆயிர கோடிதேர் செலுத்தியே அவையுங்
கேச ரித்திறல் யானமுங் கேடில்பொற் றேரும்
பாச னத்திறல் அவுணர்கொண் டேகுவான் பணித்தான். **18**

பொருள் : ஈசன் மாப்படை ஏனையோர் பெரும்படை யாவும்-தலைமையான சிவப்படையும் மற்றுமுள்ள தேவர்களின் பெரும்படைகளும் ஆகிய படைக்கலம் யாவும், மாசில் ஆயிரகோடிதேர் செலுத்தியே அவையும்-குற்றமில்லாத ஆயிரகோடி தேர்களைச் செலுத்தி அப்படைகளோடு தேர்களும், கேசரித்திறல் யானமும்-சிங்கமாகிய திறல் மிக்க ஊர்தியும், கேடில்பொற்றேரும் கேடுறாத இந்திரஞாலத்தேரும் எனும் போருக்குரிய உறுப்பனைத்தையும், பாசனத் திறல் அவுணர் கொண்டேகுவான் பணித்தான்-பரிசனர்களான திறமைமிக்க அவுணர்கள் போர்முனைக்குக்கொண்டுவருமாறு ஏவினான்.

பொழிப்பு : சிவப்படையாதி தெய்வப்படை அனைத்தும் ஆயிரகோடியான சேமத்தேர் கொண்டுவரவும் சிங்கவாகனம் இந்திரஞாலத்தேர் என்பவற்றையும் கொண்டுவருமாறும் பரிசனரான அவுணரைப் பணித்தான்.

ஆங்க வெல்லையிற் சூரபன் மாவெனும் அவுணன்
பாங்கர் வந்திடு வலவர்தந் தொகையினைப் பாரா
ஓங்கு மோர்தடந் தேரினைக் கொணர்திரென் றுரைப்பப்
பூங்க ழற்றுணை வணங்கியே நன்றெனப் போனார். 19

பொருள் : ஆங்கவ் எல்லையில் சூரபன்மா எனும் அவுணன்-சூரபதுமா எனும் அசுரேந்திரன் அங்கு அவ்வாறு ஏவியபின், பாங்கர் வந்திடும் வலவர்தம் தொகையினைப் பாரா - தனதயலிலே எதிர் பார்த்து நிற்கும் தேர்ச்சாரதிகளைப் பார்த்து ஓங்குமோர்தடந் தேரினைக் கொணர்திர் என்று உரைப்ப - ஒப்பற்ற உயர்ந்த பெருந்தேர் ஒன்றைக் கொண்டுவருமாறு பணித்தலும், பூங்கழல் துணை வணங்கியே நன்றெனப் போனார் - பணியேற்ற சாரதிகளும் சூரனது இருமலர்போன்ற பாதங்களையும் வணங்கி நலம் உண்டாக என வாழ்த்திப் பணிமேற் சென்றனர்.

பொழிப்பு : சூரன் அப்போது அயலிலுள்ள தேர்ப்பாகர்களைப்பார்த்து உயர்ந்த பெருந்தேர் ஒன்றைக் கொண்டுவருக என பணிக்கவே அவர்களும் சூரன் பாதங்களைப் பணிந்து நன்றெனச் சென்றனர்.

வாட்டு கேசரி எழுபதி னாயிரம் வயமாக்
கூட்டம் அங்கணோ ரெழுபதி னாயிரங் கூளி
ஈட்டமாகிய தெழுபதி னாயிரம் ஈர்ப்பப்
பூட்டி நன்குறப் பண்ணினார் ஆங்கொரு பொலன்தேர். 20

பொருள் : வட்டு கேசரி எழுபதினாயிரம் - பகையை வாட்டி வதைக்கும் சிங்கம் எழுபதினாயிரமும், வயமாக்கூட்டம் அங்கணோர் எழுபதினாயிரம் - வீரமிக்க குதிரைக்கூட்டம் அங்கு எழுபதினாயிரமும், கூளியீட்டமாகியது எழுபதினாயிரம் - பூதகூட்டம் எழுபதினாயிரமும் ஈர்ப்பப்பூட்டி - தேரையிழுத்துச் செல்லுமாறு நுகத்திற்பூட்டி, ஆங்கொருபொலந்தேர் நன்குறப் பண்ணினார் - பாகர்கள் அங்கே ஒரு பொற்றேரை நலம்பொருந்தப் பண்ணிஅமைத்தனர்.

பொழிப்பு : எழுபதினாயிரம் சிங்கமும் குதிரையும் பூதகணமும் ஆகியவை தேரை இழுத்துச் செல்லுமாறு பூட்டி ஒரு பெருந்தேரை நன்றாகப் பண்ணமைத்தனர்.

மண்ட லத்தினும் ஆன்றபேர் இடத்தது மருங்கில்
தெண்டி ரைக்கட லாமென ஆர்ப்பது செறிந்த
அண்ட மாயிர கோடியுந் தன்னிடத் தாற்றிக்
கொண்டு நின்றிடும் வலியது மடங்கலங் கொடித்தேர். 21

பொருள் : மண்டலத்தினும் ஆன்றபேரிடத்தது - அத்தேரானது பூமண்டலம் போல அகன்ற பெரிய பார்த்தட்டுள்ளது, மருங்கில் தெண்டிரைக்கடலாமென ஆர்ப்பது - பூமியின் புறத்தே சூழ்ந்துள்ள தெளிந்த திரைகடல் போல ஆரவாரிப்பது, செறிந்த அண்டம் ஆயிரகோடியும் தன்னிடத்து ஆற்றிக்கொண்டு நின்றிடும் வலியது - செறிந்துள ஆயிரகோடி அண்டங்களையும் தன்னுள்ளே அடங்கக்கொண்டு நின்றிடும் பேராற்றலுள்ளது, மடங்கலம் கொடித்தேர் - சிங்கத்தின் இலச்சினையுள்ள கொடியுடையது மாயிருந்தது (அத்தேர்).

பொழிப்பு : சிங்கக்கொடியோடுள்ள அத்தேரானது, மண்ணுலகத்தின் பரப்பிலும் விசாலமான பார்த்தட்டுள்ளது,
சூழவுள்ள சமுத்திரங்களிலும் பார்க்கப் பேரொலியோடோடுவது, ஆயிரகோடி அண்டங்களையும் தன்னகத்தடங்கக் கொண்டு நிற்கும் பெருவலியுள்ளது.

தான் அசுரேந்தரனாயிருத்தலால் மிருகேந்திரனான சிங்க இலச்சினையுள்ள கொடியைக் கொண்டனன்.

முடியும் எல்லையில் எழுதரு மருத்தினும் முந்திக்
கடிது செல்வது சென்றிடு வீசையினால் ககுபத்
தடநெ டுங்கிரி அலமரத் தபனருங் குளிர
வடவை யங்கிக்கள் விளிந்திடப் புரிவதம் மான்தேர். 22

பொருள் : முடியும் எல்லையில் எழுதரும் மருத்தினும் முந்திக்கடிது செல்வது - உலகம் அழியும் ஊழிநாளில் எழும் பிரசண்டவாயுவின் வேகத்திலும் அதிவேகமாக ஓடவல்லது, சென்றிடுவிசையினால் ககுபத்தடநெடுங்கிரி அலமர - தான் செல்லும் கடுவேகத்தினாலே எண்டிசையில் உள்ள பெரிய உயர்ந்த மலைகளும் நிலைகுலைந்து தள்ளாடவும், தபனரும் குளிர-சூரியர்களும் வெப்பம் நீங்கிக் குளிரவும், வடவை அங்கிகள் விளிந்திடப் புரிவதம் மான்தேர் - ஊழிவடவைத்தீ முதலிய அக்கினிகள் அவிந்தடங்கவும் செயவல்லது அப்பேரிரதம்.

பொழிப்பு : அத்தேரானது செல்லும் கடுவேகத்தினாலே ஊழியில் எழும் சண்டமாருதத்தினும் விஞ்சியது, அட்டகுலாசலங்களும் நிலைதப்பி அலையச் செய்வது, சூரியனைக் குளிரச் செய்வது, வடவாமுகாக்கினியை அவிந்து போகச் செய்வது இப்படிபெருவரியுள்ளது.
ககுபம் - திக்கு (குலாசலம் எனப்படும் பெருமலைகள்)

ஏழு நேமியும் இடைப்படு தீபமும் யாவுஞ்
சூழு கின்றபேர் அடுக்கலும் ஒன்றிய தொடர்பின்
கேழில் பன்மணீ ஓவியப் பத்திகள் கெழுவும்
ஆழி தாங்கிய அண்டமொத் திலங்கியத கன்தேர். **23**

பொருள் : ஏழு நேமியும் இடைப்படு தீபமும் யாவும் சூழுகின்ற பேர்அடுக்கலும் ஒன்றியதொடர்பில் - ஏழு சமுத்திரங்களும் அவற்றிடையே அமைந்துள்ள ஏழுதீவுகளும் இவ்வனைத்தையும் சூழ்ந்து நிற்கும் பெரிய சக்கரவாளமலையும் ஆகியவை ஒருங்கிணைந்து கிடக்கும் தொடர்ச்சி போல, கேழில் பன்மணி ஓவியப்பத்திகள் கெழுவும் - நிகரில்லாத பலவகை மணிகள் பதித்தியற்றிய சிற்பசித்திர வரிசைகளுள்ளதாய், ஆழி தாங்கிய அண்டமொத்து இலங்கியதுஅகன்தேர் - ஓடும் சில்லுகளும் இணைந்ததாய் விளங்கும் அண்டத்துக்கு ஒப்பான தோற்றமுள்ளது அகன்ற அத்தேர்.

பொழிப்பு : அப்பெரியதேரானது, ஏழுசமுத்திரங்களும் ஏழு தீவுகளும், இவற்றை உள்ளடக்கிப் புறஞ்சூழ்ந்துள்ள சக்கரமாளமலையும் போல நவமணி அழுத்திச் செய்த சிற்பசித்திரங்களை யுடையதாயிருந்தமையால் உருளைக ளுடனமைந்த அண்டத்துக்கு நிகராக விளங்கியது.
அண்டம் சில்லுடையதன்று ஆதலின் இல்பொருளுவமை.

தொழுத குந்திறல் அவுணர்கோன் வேள்வியில் துஞ்சி
எழுவ தாகிய எல்லையில் தோன்றிய தெதிர்ந்தார்
குழுவி ரிந்திடத் துரப்பது நான்முகக் குரிசில்
அழியும் நாளினும் அழிந்திடா திருப்பதவ் வகல்தேர். 24

பொருள் : தொழுதகும் திறல் அவுணர் கோன் வேள்வியில் துஞ்சி எழுவதாகிய எல்லையில் தோன்றியது-எவர்களும் வணங்கத்தக்க வீரம்மிக்க அவுணரின் தலைவனான சூரன் தான் செய்த வேள்வித் தீயில் வீழ்ந்திறந்து சிவபிரானால் உயிர்பெற்று எழந்த போது தோன்றியது, எதிர்ந்தார் குழு இரிந்திடத்துரப்பது-எதிர்த்துவரும் பகைவர் கூட்டம் அஞ்சி ஓடத்துரத்தவல்லது, நான்முகக்குரிசில் அழியும் நாளிலும்-நான்முகனாகிய பிரமா துஞ்சும் ஊழிநாளிலும், அழிந்திடாதிருப்பதவ் வகன்தேர்-அழிவின்றியிருக்கும் தன்மையது அந்தப்பெருந்தேர்.

பொழிப்பு : சூரன் வேள்வித் தீயில் மாண்டு மீண்டெழுந்த போது எழுந்தது, எதிரும் பகைவர்கூட்டம் அஞ்சியோடத் துரத்துவது, பிரமா துஞ்சும் ஊழிநாளிலும் அழிவின்றியிருப்பது அத்தேர்.

கண்ண கன்படை அளப்பில பரித்தது காமர்
வீண்ண வர்க்குள வலியெலாங் கொண்டது மேனாள்
அண்ணல் நல்கிய இந்திர ஞாலமும் அனைய
தெண்ணின் மேற்படு மியாணர்பெற் றுடையதவ் விரதம். 25

பொருள் : அவ்விரதம் - அந்தத்தேரானது, கண்ணகன்படை அளப்பில பரித்தது - பேருருவாகியபடைகள் பலவற்றைக் கொண்டது,

காமர்விண்ணவர்க்குளவலியெலாம் கொண்டது - அழகிய தேவரினத்தவர்களின் வலிமைகளையெல்லாம் வெற்றி கொண்டது, மேனாள் அண்ணல் நல்கிய இந்திரஞாலமும் அனையது - முன்னாளில் சிவபிரான்வரமாக ஈந்த இந்திரஞாலத் தேருக்கு நிகரானது, எண்ணில் மேற்படும் யாணர் பெற்றுடையது-எண்ணற்ற அதிவிசித்திர அலங்காரமுள்ளது. (அத்தேர்)

பொழிப்பு : அத்தேரானது, எண்ணிறந்தபடைக்கலங்களைக் கொண்டுள்ளது, தேவர்களின் ஆற்றலைவென்றுகொண்டுளது, முன்னேசிவன் கொடுத்த இந்திரஞாலத்தேருக்குநிகரானது, அற்புதஅலங்காரமுள்ளது.

அனைய தாகிய தேரினை வலவர்கொண் டணைந்து
தினக ரன்தனை வெகுண்டவன் தாதைமுன் செலுத்தத்
துனைய மற்றதில் இவர்ந்தனன் இவர்தலுந் தொழுது
புனைதி வானகையென் றவுணர்கள் பூமழை பொழிந்தார். 26

பொருள் : அனையதாகிய தேரினை வலவர் கொண்டணைந்து-அத்தகு சிறந்த தேரைப்பாகர்கள் கொண்டுவந்து, தினகரன்தனை வெகுண்டவன்தாதைமுன் செலுத்த-பானுகோபனுக்குத் தந்தையான சூரன்முன் சேர்த்தலும், துனையமற்றதில் இவர்ந்தனன் இவர்தலும்-விரைந்து அத்தேரிலே சூரன் ஏறினான் ஏறுதலும், அவுணர்கள் தொழுது-சூழநின்ற அவுணர்கைதொழுது, வானக புனைதி என்று-வெற்றி பூணுக என்று ஜயகோஷம் செய்து, பூமழை பொழிந்தார்-மலர்மாரிபொழிந்து வாழ்த்தினர்.

பொழிப்பு : பாகர் தேரைக்கொண்டுவருதலும் சூரன் தேரிலே விரைந்தேறினான்; அவுணர்கள் தொழுது "அரசே வெற்றி பெறுக" என வாழ்த்தி மலர்மழை பொழிந்தனர்.

பொழிந்த காலையில் வலவர்கள் அங்கதிற் புக்குக்
கழிந்த சீர்த்தியான் ஆணையால் தேரினைக் கடவத்
தழிந்த ழீமெனப் பல்லியம் இயம்பின சகங்கள்
அழிந்த நாளெழு கடலென அவுணர்கள் ஆர்த்தார். 27

பொருள் : பொழிந்த காலையில்-மலர்மாரிபொழிந்துவாழ்த்தும் போது, வலவர்கள் அங்கதிற்புக்கு-சாரதிகள் அத்தேரில் ஏறியமர்ந்து, கழிந்தசீர்த்தியான் ஆணையால் தேரினைக்கடவ-புகழ் கழிந்த சூரனது ஆணையினாலே தேரைச் செலுத்தவே, தழிம் தழீம் எனப் பல்லியம் இயம்பின-தழிம் தழீம் எனும் ஒலிக்குறிப்புடன் பல்வகைவாத்தியங்களும் எழுந்தொலித்தன, சகங்கள் அழிந்த நாள் எழு கடலென அவுணர்கள் ஆர்த்தார்-உலகம் ஒருங்கு அழியும் ஊழிநாளில் கொந்தளித்தெழும் சமுத்திரங்களைப் போல அவுணவீரர்கள் கிளர்ந்து வீரமுழக்கம் செய்தனர்.

பொழிப்பு : மலர்மாரி பொழிந்தபோது, பாகர்கள் சூரனது உத்தரவினால் தேரிலேறிச் செலுத்தவே பலவாத்தியங்களும் ஒலித்தன, யுகாந்த காலத்தில் பொங்கியெழும் கடல் போல அவுணவீரர் ஆர்ப்பரித்தனர்.
கழிந்த சீர்த்தியான் - சீர்கழிந்தவன், தழிம் தழீம் - ஒலிக்குறிப்பு.

அங்கி யன்னபொற் படியகங் கோடிகம் அடைப்பை
திங்கள் வெண்டகுடை கவரிகொண் டொழுகினர் சிலதர்
துங்க மிக்கவன் சீர்த்தியும் ஆணையுந் தொடர்ந்து
மங்க லந்திகழ் உருக்கொடு சூழ்ந்திடும் வகைபோல். 28

பொருள் : அங்கியன்ன பொற்படியகம் கோடிகம் அடைப்பை திங்கள் வெண்குடை கவரிகொண்டு-தீபோலச்சிவந்த பொற்படிக்கமும், பூந்தட்டும், தாம்பூலத்தட்டும், சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையும், வெண்சாமரமும் ஆகிய வரிசைகளைத் தாங்கிக்கொண்டு, ஒழுகினர் சிலதர் - பணிபுரிந்து சென்றனர் எவலர், அவ்வரிசைகள் எவ்வாறிருந்தனவெனில் துங்கம் மிக்கவன் சீர்த்தியும் ஆணையும் தொடர்ந்து - மிக்குயர்ந்த சூரனின் புகழும் ஆணையும்

அவனைவிடாது அநுசரித்து, மங்கலந்திகழ் உருக்கொடு சூழ்ந்திடும் வகைபோல் - மங்கலகரமான வரிசைப் பொருள்களாகிய உருவங்களைத் தாங்கிச் சூரனைச் சூழ்ந்து செல்லும் வகைபோலிருந்தது.

பொழிப்பு : சூரபதுமனின் புகழும் ஆணையுமாகிய இரண்டும் மங்கல வரிசைப் பொருள்களாகிய படிக்கம் பூந்தட்டு அடைப்பை கொற்றக்குடை சாமரம் ஆகிய உருவங்களைத் தாங்கிப் பணிபுரிந்து உடன்போவதுபொலிருந்தது.

குறிப்பு : புகழ் வெண்மை, ஆணை செம்மை நிறத்தன.

அண்ணல் மேவரு கோநகர் எல்லையுள் அடைந்த
எண்ணில் மாப்பெருஞ் சிகரியின் வாயில்கள் இகந்தே
கண்ண கன்ஞெள்ளல் ஆயிர கோடியுங் கடந்து
வண்ண மாமணிக் கோபுர முதற்கடை வந்தான். 29

பொருள் : அண்ணல் மேவரு கோநகர் எல்லையுள் அடைந்த-தலைவனாம் சூரன் வீற்றிருக்கும் அத்தலைநகரின் எல்லைக்குள் பொருந்திய, எண்ணில் மாப்பெரும் சிகரியின் வாயில்கள் இகந்தே-எண்ணற்ற மிகப்பெரிய சிகரங்களுடன் விளங்கும் பலகோபுரவாயிலையும் கடந்து, கண்ணகன் ஞெள்ளல் ஆயிரகோடியும் கடந்து-இடமகன்ற ஆயிரக் கோடி தெருவீதிகளையும் நீங்கிச்சென்று, வண்ணமாமணிக் கோபுர முதற்கடைவந்தான்-பலவண்ண மணிகள் அழுத்திய பெரிய கோபுரவாயிலின் முகப்பில்வந்தான்.

பொழிப்பு : சூரபதுமன் தன்கோயிலுடன் அடுத்த அகநகரில் உள்ள பலசிகரங்களுடன் விளங்கும் வாயில்களைக் கடந்து, அகன்ற பெருவீதிகள் பலவற்றையும் நீங்கிச் சென்று முதற்கோபுரவாயிலின் முகப்பிலுற்றான்.

வேறு

தானவர் கோமகன் தடம்பொற் றேரொடு
மாநகர் முதற்கடை வாயில் போதலும்
ஆனது நோக்கியே அங்கட் சூழ்தரு
சேனைகள் ஆர்த்தன உடுக்கள் சிந்தவே. 30

பொருள் : தானவர் கோமகன் தடம்பொற்றேரொடு மாநகர் முதற்கடைவாயில் போதலும் - அசுரேந்திரனான சூரன் பெருந்தேரேறி அம்மாநகரத்து முதற் பெருவாயிலின் புறத்தே வருதலும், ஆனது நோக்கியே - அவன்வரவைக்கண்டு, அங்கட் சூழ்தருதானைகள் - அங்கே குழுமிநின்ற அசுரசேனைகள், உடுக்கள் சிந்த ஆர்த்தன - நட்சத்திரங்கள் நிலைதவறிவிழும்படி பேராரவாரம் செய்தன.

பொழிப்பு : சூரன் யுத்த சன்னத்தனாகத்தேரேறி நகரவாயிற்புறம் வரக்கண்ட அவுணசேனைகள் நட்சத்திரங்களும் தவறித்தரையில் உதிரும்படி பெரிய வீரமுழக்கம் செய்தனர்.

ஞெலித்திடு பரவையின் நீல வெவ்விடம்
ஒலித்தெழுந் தாலென உலப்பில் தானைகள்
கலித்தன படர்ந்தன கண்ண கன்புவி
சலித்தது கொடியரைத் தரிக்கொ ணாமையால். 31

பொருள் : ஞெலிந்திடு பரவையில் நீல வெவ்விடம் ஒலித்தெழுந்தாலென - கடையப்பட்ட பாற்கடலில் நீல நிறமான கொடுநஞ்சு பேரொலியோடு எழுந்துவந்ததுபோலவே, உலப்பில் தானைகள் கலித்தன படர்ந்தன - அளவில்லாத அசுரப்படைகள் போர்முழக்கத்துடன் விரைந்து சென்றன, கண்ணகன் புவி கொடியரைத் தாங்க கொணாமையாற் சலித்தது - பரந்த இடமுள்ள பூமிகொடிய அசுரப்படையின் சுமைதாங்கொணாது சலிப்படைந்தது.

பொழிப்பு : ஆலகாலம் எழுந்துவந்ததுபோல அவுணப்படை எழுச்சி பெற்றுச் செல்ல அவர்பாரம் தாங்கமாடாது பூமிசலிப்புற்றது.

குறிப்பு : ஞெலித்தல் - கடைதல்.

நேரியம் பரியதோர் நிசாளஞ் சல்லிகை
பேரியம் பணைவயிர் பிறங்கு தண்ணுமை
தூரியங் காகளந் துடிமு தற்படு
சீரியம் பலவுடன் இயம்பிச் சென்றவே. 32

பொருள் : நேர் இயம்பரியதோர் நிசாளம் சல்லிகை - ஒப்புரைக்க ஒண்ணாத நிசாளமும் சல்லிகையும், பேரி அம்பணை வயிர்பிறங்குதண்ணுமை - பேரிகையும் அழகிய பணையும் கொம்பும் விளங்கும் தண்ணுமைக்கருவியும், தூரியம் காகளம் துடிமுதற்படு - தூரியமும் காகளமும் துடியும் முதலாகவுள்ள, சீரியம் பலவுடன் இயம்பிச்சென்ற சிறந்த போர்க்களத்தில் இசைக்கும் பலவாத்தியங்களையும் இயம்பிக்கொண்டு படையணிகள் சென்றன.

பொழிப்பு : தோற்கருவிதுளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி என அக்காலத்துப் பயன்படுத்திய வாத்தியங்களை ஒலித்துச்சென்றனர்.

சேயின குஞ்சிகள் செறிந்த தானவர்
பாயின தானையில் படர்ந்த பூழிகள்
வாயின பரவைமேல் வடவைத் தீவிராய்ப்
போயின நாளெழு புகையைப் போன்றவே. 33

பொருள் : சேயின குஞ்சிகள் செறிந்த தானவர் பாயின தானையிங் படர்ந்த பூழிகள் - சிவந்த தலைமயிருள்ள அசுரர்கள் பரந்து செறிந்த சேனை செல்லும் போது எழுந்து பரவும் புழுதிப்படலம், வாயின பரவை மேல் வடவைத்தீ விராய்ப் போயினநாள் - அலைதாவும் கடல்மீது வடவைத்தீ தோன்றிச் செறிந்து பரவும் ஊழி காலத்தில்-எழுபுகையைப் போன்ற-எழுந்து பரவும் புகைபோலிருந்தது.

பொழிப்பு : தீச்சுவாலை போலும் செம்மயிர்த்தலையுள்ள அவுணர்சேனை செல்லும்போது கிளரும் புழுதிப்படலம், ஊழிநாளில் கடலிலே தோன்றும் வடவைத்தீயில் தோன்றும் புகைபரவுவது

போலிருந்தது.
அவுணர் கருமேனி கருங்கடல், செந்நிற முடிமயிர் ஊழித்தீ, புழுதிபுகை.

வானினும் மண்ணினும் மாதி ரத்தினுந்
தானிறை கடலினுந் தணப்பின் றாகியே
மேனிறை பூழிகள் மிடைய எங்கணுஞ்
சோனைகொள் பின்பனித் தூவல் போன்றவே. **34**

பொருள் : வானினும் மண்ணினும் மாதிரத்தினும் - வானவெளிபூமி எட்டுத்திசை, தான்நிறைகடலினும் தணப்பின்றாகியே - தான் நீர் நிரம்பிய கடலினும் ஆக எவ்விடமும் நீக்கமின்றியே, மேல்நிறை பூழிகள்மிடைய - மென்மேலெழும் புழுதிப்படலம் செறிதலால், எங்கணும் சோனைகொள்பின்பனித்தூவல் போன்றவே - எவ்விடமும் பின் பனிகாலத்து விடாதுபெய்யும் பனித்தூவல் போன்றிருந்தது.

பொழிப்பு : வானம் நிலம் எட்டுத்திசை சமுத்திரம் ஆகிய எவ்விடமும் இடையீடின்றி புழுதி எழுந்து செறிந்தமையால் பின்பனி காலத்தில் எங்கும் இடைவிடாது பனித்தூவல் விழுவது போலிருந்தது.

சூரனி கத்தெழு தூளி அந்நகர்
ஆரகில் ஆவியும் யாரும் ஆடிய
பூரிகொள் சுண்ணமும் பொருந்திப் போவது
காரின மின்னெடு கடலுண் டேகல்போல். **35**

பொருள் : சூர் அனிகத்தெழு தூளி-சூரனின்படைசெல்ல எழுந்த பூதூளியானது, அந்நகர் ஆரகில் ஆவியும்-அந்நகரத்திலிருந்தெழும் அகிற் புகையும், ஆரும் ஆடிய பூரிகொள் சுண்ணமும் பொருந்திப் போவது-மாந்தர் எவரும் பூசும்பொற்சுண்ணமும் என்றிவையும் தன்னுடன் பொருந்திவரப்போகும் தன்மையானது, காரினம் மின்னொடு கடலுண்டு ஏகல்போல்-கருமுகிற்கூட்டம் கடல் நீரையுண்டு மின்னலுடன் சேர்ந்து செல்வதுபோலிருந்தது.

பொழிப்பு : படைசெல்ல எழும் பூதூளியானது அகிற்புகை பொற்சுண்ணமும் தன்னோடு பொருந்தச் செல்லுதல் முகில் கடல்நீர்பருகிமின்னலுடன் செல்வது போல விளங்கியது. சேனைகடல், புகை முகில், சுண்ணம் மின்னல் ஒப்பாம்.

திண்டிறற் கரிகளில் தேரில் வெண்கொடி
மண்டுறு பூழிதோய் வானிற் செல்வன
கொண்டலின் இருதுவிற் கொக்கின் மாலைகள்
தண்டுளி யுறைப்புழிப் படருந் தன்மைபோல். 36

பொருள் : திண்டிறற்கரிகளில தேரில் வெண்கொடி - பெருவலியுள்ள யானை தேர்களின்மீது நிமிர்ந்தாடும் வெள்ளைக் கொடிகள், மண்டுறு பூழிதோய்வானில் செல்வன - அடர்ந்த பூதூளியினிடைவானிலே செல்லுதல், கொண்டலின் இருதுவில் - கார்காலத்தில், கொக்கின்மாலைகள் - கொக்குகளின் வரிசைகள், தண்டுளி உறைப்புழிப்படரும் தன்மைபோல் - குளிர்ந்த மழைநீர்த் துளிகளினிடையே பறந்து செல்லும் காட்சிபோலிருந்தது.

பொழிப்பு : யானை மீதும் தேர் மீதும் பொருந்திய வெண்ணிறக கொடிகள் புழுதிக்கிடையே வானிற் பறத்தல்,மழைப்பருவ காலத்தூறலின் நடுவே வெண்கொக்குகள் பறப்பது போலிருந்தது. கொண்டல்-மழை, இருது-பருவகாலம்.

படைவகை திசையெலாம் படரப் பாயிருள்
அடைவது சூரறிந் தண்டம் யாவினும்
மிடைதரு கதிர்களை விளிக்க வந்தெனக்
குடைநிரை எங்கணுங் குழுமு கின்றவே. 37

பொருள் : படைவகை திசையெல்லாம் படர - நால்வகைப் படையும் திசை எங்கும் செறிந்து செல்வதால், பாயிருள் அடைவது சூர் அறிந்து - பரந்த இருள் எங்கும் நிறைவதைச் சூரன் அறிந்து (இருள் நீக்கி ஒளி தருமாறு) அண்டம் யாவினும் மிடைதரு கதிர்களை விளிக்க வந்தென - பல அண்டங்களிலும் செறிந்துள்ள

சூரியர்களை அழைக்க அவர்கள் வந்து மேலே நிற்பதுபோல, குடைநிரை எங்கணும் குழுமுகின்றவே-குடைகள் எங்கும் நிரையாக நிரம்பி நிற்கின்றன.

பொழிப்பு : சேனைப்பெருக்கால் எங்கும் இருள் சூழ்வதை எண்ணிய சூரன் ஒளிதரச் சூரியர்களை அழைக்க வந்து நிற்பது போலக் குடைவரிசைகளும் எங்கும் நிறைந்தன.

வெம்பரி கரியுழிழ் விலாழி மாமதம்
இம்பரின் நகரெலாம் யாற்றின் ஏகலால்
உம்பர்மற் றல்லதை ஒருவன் தானைகள்
அம்புவி சென்றிடற் கரிய தானதே. 38

பொருள் : வெம்பரி கரி உமிழ்விலாழி மாமதம் - வேகமுள்ள குதிரைகள் உமிழும் வாய்நுரையும் யானைகள் பொழியுமதநீரும் ஆகியவை, இம்பரில் நகரெலாம் யாற்றின் ஏகலால்-இங்கு நகரம் எய்கும் ஆறுபோலப் பெருகி ஓடுதலால், ஒருவன்தானைகள்-ஒப்பற்ற சூரனின் சேனைகள், உம்பர்மற்றல்லதை-வானவழியிலே செல்ல முடிந்ததன்றி, அம்புவிசென்றிடற்கு அரிய தானதே-நிலத்திலே நடந்து செல்வதற்கு இடம் அரியதாயிற்று.

பொழிப்பு : குதிரைகளின் வாய்நுரை யானைகளின் மதநீர் இவை ஆறுபோல நகரெங்கும் நிரம்புதலாலே சூரன் சேனை வான் வழியன்றி நிலத்திற் செல்வது முடியாத காரியமாயிருந்தது.

இவ்வகை தானைகள் ஈண்டிச் சென்றிடத்
தெவ்வலி அவுணர்கோன் செம்பொற் றேரின்மேல்
மைவரை மேருவின் வருவ தாமெனக்
கவ்வையின் அமர்புரி களரி ஏகினான். 39

பொருள் : இவ்வகைதானைகள் ஈண்டிச் சென்றிட - இவ்வாறு சேனைகள் எங்கும் நெருங்கிச் செல்லவே - தெவ்வலிஅவுணர் கோன் - பகைமேற் கொண்ட வலிமிக்க அசுரர் கோனானவன்,

சொம்பொன் தேரின்மேல் - செம்பொன்னாலான தேர் மேலுள்ளவனாக, மைவரைமேருவில் வருவதாமென - கரியமலை ஒன்று பொன்மலை மேலேறிவருவது போலவே, கவ்வையின் அமர்புரிகளரி ஏகினான் - பேராரவாரத்தோடு போர்புரியும் யுத்தகளத்தை அணுகினான்.

பொழிப்பு : இவ்வாறு சேனை சூழப் பகைமேற்கொண்டவலிய சூரன், பொற்றேரில் கருமலை ஒன்று பொன்மலைமேல் வருவதுபோலப் போர்களத்துக்கு அணித்தாக வந்தான்.

பூசலின் எல்லையில் புவர லன்செலத்
தூசிய தாகியே தொடர்ந்த தானைகள்
ஈசன தருள்மகன் இனிது வைகிய
பாசறை சூழ்ந்தன படியும் வானுமாய். **40**

பொருள் : பூசலின் எல்லையில் புரவலன் செல - போர்களத்தில் அரசனான சூரன் வரக்கண்டபோது, தூசியதாகியே தொடர்ந்த தானைகள் - தூசிப்படையாக முன் தொடர்ந்த சேனைகள், ஈசனதருள் மகன் இனிதுவைகிய - சிவனது அருட்குமரன் இனிதுவீற்றிருக்கும், பாசறைபடியும் வானுமாய் சூழ்ந்தன - ஏமகூடம் எனும் பாடிவீட்டை பூமிவானம் ஆகிய இரு புறத்திலும் சூழ்ந்து முற்றிகையிட்டன.

பொழிப்பு : சூரன் போர் முனையில் வரக்கண்ட தூசிப்படையான அவுணர்சேனை சிவகுமாரன் இனிதிருக்கும் பாசறையை மண்ணும் விண்ணும்மாகிய இருபுறமும் சூழ்ந்து வளைந்து கொண்டன.

உரற்றிய கணமழை உம்பர் சூழ்ந்தென
விரற்றொடு சூழ்படை ஈட்டம் நோக்கியே
மரற்றுறு பலங்களில் வாரி கண்வர
அரற்றினர் வெருவினர் அமரர் யாவரும். **41**

பொருள் : உரற்றிய கணமழை உம்பர்சூழ்தென - முழங்கும் முகிற்கூட்டம் வானத்தில் வளைத்துக்கொண்டது போல்,

இரற்றொடுசூழ்படை ஈட்டம் நோக்கியே - ஆரவாரத்தோடு வந்து சூழ்ந்து கொண்ட படைப்பெருக்கை நோக்கியதும், மரல்துறுபலங்களின் வாரிகண்டவர - மரல் எனும் கொடியிலுள்ள பழமுதிர்வது போல, வாரிகண்வர - கண்ணீர் பெருக நின்று, அமரர் யாவரும் அரற்றினர் வெருவினர் - தேவர் யாவரும் புலம்பினர் அச்சமடைந்தார்.

பொழிப்பு : முழங்கும் முகிற் கூட்டம் மொய்த்ததுபோல அசுரசேனை வந்து ஆரவாரத்தோடு குமரன் பாசறையைச் சூழ்ந்தது கண்டவுடனே கண்டதேவர் யாவரும் அஞ்சியவராய் கண்ணீர் பெருகப்புலம்பினர்.

அழுங்கினன் புரந்தரன் அகிலம் யாவையும்
வீழுங்குறும் இருவரும் வீம்மி னாருளம்
புழுங்கினர் வீரர்கள் பூதர் ஏங்கினார்
கொழுங்கனல் இடைப்படு விலங்கின் கொள்கைபோல். 42

பொருள் : புரந்தரன் அழுங்கினன் - இந்திரன் மனம்மறுகினான், புவனம் யாவையும் விழுங்குறும் இருவரும் - உலகம் முழுவதையும் விழுங்கியவர்களான அரிபிரமர் இருவரும், விம்பினார் உள்ளம் - மனம் பொருமினார்கள், வீரர் புழுங்கினார் - இலக்கத்தெட்டுவீரரும்- உள்ளம் வியர்த்தனர், பூதர் ஏங்கினார் - பூதவெள்ளத்தர் ஏக்கமுற்றார், கொழுங்கனலிடைப்படும் விலங்கின் கொள்கை போல் -சுவாலித்தெரியும் காட்டுத் தீயினிடை அகப்பட்ட விலங்குகள் போல.

பொழிப்பு : நாற்புறமும் சூழ்ந்தெரியும் காட்டுத்தீயினுள் அகப்பட்ட விலங்குகள் பிழைத்தோட வழியின்றித் தவிப்பதுபோலவே சூழ்ந்த அசுரப்படையிலிருந்து தப்பிச் செல்லமாட்டாது வீரர் பூதர் தேவர் வருந்தினர்.

ஆவதோர் காலையில் அரியும் நான்முகத்
தேவனும் ஏனைய திசையி னோர்களும்
மூவிரு முகமுடை முதல்வன் தன்னிரு
பூவடி பணிந்திவை புகறல் மேயினார். 43

பொருள் : ஆனதோர் காலையில் அரியும் நான்முகத் தேவனும் - அவ்வாறான சமயத்தில் விஷ்ணுவும் நான்முகத்தயனும், ஏனைய திசையினோர்களும் - மற்றும்எட்டுத்திக்குப்பாலகருமாம் அவர்கள், மூவிருமுகமுடைமுதல்வன் தன்னிரு பூவடிபணிந்து - தலைவராகும் ஆறுமுகப் பெருமான் முன் ஓடிவந்து அவரிருமலரடிகளையும் வணங்கி நின்று, இவை புகறல் மேயினார்-பின் வருமாறு உற்றதுரைப்பாராயினர்.

பொழிப்பு : அப்போது அரி அயன் அட்டதிக்குப்பாலகர் என்போர் ஓடி வந்து தேவசேனாபதியாம் குமரன் மலரடியிணையை வணங்கி நின்று பாசறைப்பாங்கரில் சம்பவித்ததை விண்ணப்பிப்பாராயினர்.

வேறு

அந்தமி லாத அண்டம் ஆயிரத்தெட்டுத் தன்னில்
வந்திடு தானை யோடு மாபெருஞ் சூர பன்மன்
உந்திய தேரின் மேலான் உறுசமர் புரிவான் போந்தான்
முந்திய தூசி நந்தம் பாசறை மொய்த்த தென்றார். **44**

பொருள் : அந்தமில்லாத அண்டம் ஆயிரத்தெட்டுத்தன்னில் - எல்லையிலாத ஆயிரத்தெட்டண்டங்களிலுமிருந்து, வந்திடு தானையோடு மாபெரும் சூரபன்மன் - வந்து சேர்ந்த பெரும் சேனைகளுடன் மிகப்பெரிய சூரன், உந்தியதேரின்மேலான் - செலுத்தும் தேர் மீதேறியவனாய், உறுசமர் புரிவான் போந்தான் - பெரும் போர் புரியுமாறு வந்துவிட்டான், முந்திய தூசிநந்தம் பாசறை மொய்த்ததென்றார் - முன்வரும் தூசிபடை எங்கள் பாடி வீட்டைச் சூழ்ந்து மொய்த்துள்ளது என்று சுவாமிக்கு விண்ணப்பித்தனர்.

பொழிப்பு : சுவாமீ! சூரன் ஆயிரத் தெட்டண்டங்களிலுமுள்ள சேனைகளுடன் பெரும் போர் புரிவதற்கு யுத்த சந்நத்தனாகத்தேரேறி வந்துள்ளான். முன்னணிப்படை பாசறையைச் சூழ்ந்து கொண்ட என்றனர்.

என்னலும் முறுவல் செய்தாங் கிலங்கெழில் தவிசின் வைகும்
பன்னிரு கரத்து வள்ளல் பவனைக் குறிப்பின் நோக்க
முன்னம துணர்ந்து வல்லே முளவுகோல் கயிறு பற்றிப்
பொன்னவிர் மனவே கப்பேர்ப் புரவிமான் தேர்முன் உய்த்தான். 45

பொருள் : என்னலும் முறுவல்செய்து- எனக்கூறவே பெருமான் சிறு நகை செய்தருளி, ஆங்கு இலங்கெழில் தவிசில் வைகும்பன்னிரு கரத்துவள்ளல் பாசறையில் விளங்கும் அழகிய அரியணையில் வீற்றிருக்கும் பன்னிகரமுள்ள அருள்வள்ளலாகிய குமரன், பவனனைக் குறிப்பின் நோக்க தேர்ப்பாகனாம் வாயுதேவனைக் குறிப்பாக பார்த்தருள, முன்னம் அது உணர்ந்து வல்லே பெருமானது திருவுளக்குறிப்பை உணர்ந்த பாகன் அதிவிரைவாக, முளவுகோல் கயிறுபற்றி தன்கருவிகளான முளவுகோல் கயிறு என்பன கைக்கொண்டு, பொன்னவிர் மனவேகப் பேர்ப்புரவிமான் தேர்முன் உய்த்தான் பொன் வண்ணமாக மிளிரும் மனோவேகமெனும் பெயர்கொண்ட பிரானுக் குரிய பெருந்தேரை முன்னே கொண்டு வந்தான்.

பொழிப்பு : அமரர் சொல்லக்கேட்ட பெருமான் அருள்நகைபுரிந்து பாகனாகும் வாயுதேவனை தேரைச்சித்தம் செய்க எனும் குறிப்புடனே பார்த்தருளவே குறிப்புணர்ந்த அவன் சாரதிக்குரிய கருவிகள் தாங்கி விரைவாகவே மனோவேகமெனும் தேரைப் பெருமான் சந்நிதியிலே கொணர்ந்து சேர்த்தான்.

குறிப்பு : சுராசுரர்களுக்கு அறக்கருணை மறக்கருணை இரண்டையும் ஒருங்கே வழங்கும் குறிப்பால் வள்ளல் என்றார் பவனன். வாயுதேவன் முன்னம் குறிப்பு. தலைவர்களின் கண்ணே குறிப்பைச் சொல்லவும் கேட்கவும் வல்லது.

உய்த்திடு கின்ற காலத் தொய்யென எழுந்து காமர்
புத்தலர் நீபத் தாரான் புகர்முழுக் குலிசஞ் சூலஞ்
சத்திவாள் பலகை நேமி தண்டெழுச் சிலைகோல் கைவேல்
கைத்தலங் கொண்டான் என்னின் அவன்தவங் கணிக்கற் பாற்றோ. 46

பொருள் : உய்த்திடுகின்ற காலத்து ஓய்யென எழுந்து தேர்வந்தபோதே விரைந்து எழுந்தருளி, காமர்புத்தலர் நீபத்தாரான் அழகிய அன்றலர்ந்த கடப்பமலர் மாலை அணிந்த குமரநாயகன், புகர்மழு குலிசம் சூலம் சத்திவாள் பலகை நேமிதண்டு எழுசிலைகோல் கைவேல் கைத்தலம் கொண்டான் என்னில் இரத்தக்கறையுள்ள மழுவும் குலிசமும் சூலமும் சத்திவேலும் வாளும் பரிசையும் சக்கரமும் தண்டும் எழுவும் வில்லும் அம்பும் கைத்தலம் அகலாத வேலும் ஆகிய படைகளைத் திருகரத்தேந்தினாராயின், அவன் தவம் கணிகற் பாற்றோ அச்சூரபன்மன் செய்தவமும் பெற்ற வரப்பேறும் அளவிடற் பாலதாகக் கருதலாமோ. அளப்பரிதாம்.

பொழிப்பு : வலவன் தேரைக்கொண்டுவந்ததும் கடப்பமாலையணிந்த கந்தசாமியார் சிம்மாசனத்தினின்றும் விரைந்தெழுந்து குறித்த வேலந்தமான படைகளைக் கரத்தேந்திப் போருக்குப் புறப்பட்டார் என்றால் சூரன் செய்தவமும் வரப்பேறும் அளவிடக்கூடியதாகுமா! ஆகா.

மாறிலா அருக்கன் நாப்பண் வைகிய பரம னேபோல்
ஆறுமா முகத்து வள்ளல் அலங்குளைப் புரவி மான்தேர்
ஏறினான் வீர வாகு இலக்கரோ டெண்ம ராகும்
பாறுலாங் குருதி வேலார் பாங்கராய்ப் பரசி வந்தார். 47

பொருள் : மாறிலா அருக்கன் நாப்பண் வைகிய பரமனேபோல் நிகர் இல்லாத சூரியமண்டல மத்தியில் வீற்றிருக்கும் பரமசிவன் போலவே, ஆறுமாமுகத்து வள்ளல் அலங்குளைப் புரவிமான் தேர் ஏறினான். அருள்வள்ளலான சண்முகர் அசையும் பிடர்மயிருள்ள குதிரை பூண்டசெம்பொற்றேரிலே ஏறியருளினார். அவ்வளவில், வீரவாகு இலக்கரோடு எண்மமராகும் வீரவாகு தேவரும் மற்றும் இலட்சத்தெண்மரும் எனப்படுகின்ற, பாறு உலாம் குருதிவேலார் பாங்கராய்ப் பரசீவந்தார் - பருந்துகள் சூழும் இரத்தம் தோய்ந்த வேல்வீரர்கள் பெருமான் பாங்கராகி அவரது புகழ்பாடி உடன் செல்வாராயினர்.

பொழிப்பு : ஆறுமுகப்பெருமான் சூரியன் மத்தியிலே சுடர்தரும் சிவபிரான் போலவே மனோவேகப் பொற்றேரில் ஏறியருளினார் அப்போது தம்பியராகிய வீரவாகு முதலிய இலக்கத்தொன்பதின்மரும் பெருமான் புகழ் பாடியவாறு பாங்கரிலே சென்றனர்.

இராயிர வெள்ள மாகும் எண்டொகைப் பூதர் யாரும்
மராமரம் பிறங்கல் ஈட்டம் வரம்பறு படைகள் பற்றி
விராவினர் சூழ்ந்து சென்றார் விரிஞ்சனே முதலோர் யாரும்
பராவொடு புடையின் நின்று பனிமலர் மாரி தூர்த்தார். **48**

பொருள் : இராயிர வெள்ளமாகும் எண்தொகைப்பூதர் யாரும்- இரண்டாயிரம் வெள்ளம் எனும் எண்ணுத்தொகை கொண்ட பூதப்படையினர் யாவரும், மராமரம் பிறங்கலீட்டம் வரம்பறு படைகள் பற்றி - பெரிய மரங்களும் மலைகளும் அளவற்ற படைக்கலங்களும் ஏந்தி, விராவினர் சூழ்ந்து சென்றார் - செறிவுற்றுப் பிரானாரைச் சூழ்ந்து சேவித்து உடன் சென்றார்கள்; விரிஞ்சனே முதலோர்யாரும் - பிரமாமுதலிய தேவர்கள் யாவரும், பராவொடு புடையில் நின்று பனிமலர்மாரி தூர்த்தார்-பெருமான் பக்கமா நின்று துதிகூறி குளிர்ந்த மலர்களை மழைபோலப் பொழிந்து சென்றனர்.

பொழிப்பு : ஈராயிர வெள்ளப் பூதப்படையினர் மரம் மலை படைவகை ஏந்தி நெருங்கிச் சூழ்ந்து சென்றனர்; பிரமா முதலான தேவர்கள் துதிபாடிக்கற்பகப் பூமாரி பொழிந்து அயலிலே சென்றனர்.

தூர்த்திடு கின்ற காலைச் சுருதியின் தொகைக்கும் எட்டாத்
தீர்த்தன்மான் றேர்மே லாகித் திண்புவி அண்டந் தன்னில்
பேர்த்திடும் உயிர்கள் மாற்றப் பின்னுறு முன்னோன் போல
ஆர்த்திடு தானை வெள்ளத் தவுணர்கள் மீது போனான். **49**

பொருள் : தூர்திடுகின்ற காலை - மலர்மாரி சொரியும்போது, சுருதியின் தொகைக்கும் எட்டாத் தீர்த்தன் மான்தேர்மேலாகி - வேதமந்திரங்களின் தொகையாலும் அறியப்படாத பரம் பொருளாகிய

குமரன் தேர்மேல் வீற்றிருப்பவராகி, திண்புவி அண்டந்தன்னில் பேர்த்திடும் உயிர்கள் மாற்றப் பின்னுறும் முன்னோன் போல-திண்ணிய பிருதுவி அண்டங்களில் மீட்டுமீட்டுப் பிறந்துழலும் உயிர்களைச் சர்வசங்காரம் செய்ய ஊழி நாளிலே பின்பு தோன்றும் முன்னவனாகிய சிவன் போலவே, ஆர்த்திடு தானை வெள்ளத்து அவுணர்கள் மீது போனான்-ஆர்த்துச் செறிந்து சூழும் பல வெள்ளம் எண்பெற்ற சேனைகளான அவுணர்மேற் சென்றார்.

பொழிப்பு : வேதங்களும் அறிதற் கெட்டாத அறுமுகப் பெருமான் தேரூர்ந்து, ஆர்த்துச் சூழும் அவுணப்படை வெள்ளங்களை அழிக்குமாறு வந்தருளினார் அவர் வருகை முன்னைப் பழம் பொருளான சிவபிரான் பின்னே ஊழிநாளில் பிருதுவி அண்டத்துயிர்களைச் சங்கரிக்கவரும் செயல் போலிருந்தது.

குறிப்பு : படைப்பும் சங்காரமும் ஊழிதோறும் பேதப்படும், தீர்த்தன் - எல்லையற்றவன், புனிதன்.

ஆங்கது காலை தன்னில் ஆறிரு தடந்தோள் ஐயன்
பாங்குறு பூதர் யாரும் பாரொடு திசையும் வானும்
நீங்குத லின்றிச் சூழும் நேரலன் படையை நோக்கி
ஏங்கினர் தொல்லை வன்மை இழந்தனர் இனைய சொற்றார். 50

பொருள் : ஆங்கு அதுகாலை தன்னில்-அங்கு அப்போது, ஆறிருதடம் தோள் ஐயன் பாங்குறு பூதர் யாரும்-பன்னிருதிருப்புயங்களுள்ள பெருமானின் பாங்கிலுள்ள பூதப்படையினர் யாவரும், பாரொடு திசையும் வானும் நீங்குதலின்றிச் சூழும்-பூமி எட்டுத்திசை வானகம் ஆகிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்து சூழ்ந்துள்ள, நேரலன்படையை நோக்கி-பகையான சூரனின் படையைப் பார்த்து, ஏங்கினர்-ஏக்கமுற்றார், தொல்லைவன்மை இழந்தனர்-தமது பழையவலியும் உரமும் இழந்தனர், இனையசொற்றார்-தம்முள் பின்வருமாறு பேசுவாராயினர்.

பொழிப்பு : அப்போது முருகனின் பாங்கிலுள்ள பூதப்படையினர் மண்ணும் விண்ணும் எல்லாத்திசையும் நெருங்கிச் சூழ்ந்துள்ள அசுரப்படையைப்பார்த்து வலியிழந்து மெலிவுற்றுப் பின்வருமாறு தம்முள்ளே பேசிக்கொண்டனர்.

தீயன புரியுஞ் சூரன் செய்திடு தவத்தாற் பெற்ற
ஆயிர விருநான் கண்டத் தவுணரும் போந்தார் அன்றே
ஏயதோ ரண்டம் ஒன்றில் இருந்தனர் இவர்மற் றன்றால்
மாயிருந் திசையும் விண்ணும் வையமுஞ் செறிந்து நின்றார். 51

பொருள் : தீயன புரியும் சூரன் செய்திடு தவத்தாற் பெற்ற - தீவினையே செய்யும் தன்மையனான சூரபதுமன் தான் செய்த வேள்விப்பயனாப் பெற்றுள்ள, ஆயிரஇருநான்கு அண்டத்தவுணரும் போந்தாரன்றே - ஆயிரத்தெட்டண்டத்திலுமுள்ள அவுணர்யாவரும் வந்துளார் போலும், ஏயதோர் அண்டந்தன்னில் இருந்தனர் இவர்மற்றன்றால் - பொருந்திய இந்த ஓரண்டத்தில் மாத்திரஉள்ள அவுணர்கள்தாம் இவர்யாவரும் அல்லர், மாயிரும் திசையும் விண்ணும் வையமும் செறிந்து நின்றார். ஏனெனில் பெரியதிசைகளிலும் வானிலும் பூமியிலும் எங்கும் வெள்ளிடையில்லாமலே செறிந்து நிற்கின்றார்களே ஆதலின்.

பொழிப்பு : தீவினையாளனான சூரன் செய்த வேள்விப்பயனாகவே பெற்ற ஆயிரத்தெட்டண்டத்திலுள்ள அவுணசேனையாவும் இங்கு வந்து சேர்ந்தனவாகும், அன்றிஇந்த ஓரண்டத்துச்சேனை மாத்திரமல்ல இவை; ஏனெனில் வானும்திசையும் பூமியும் ஆகிய எவ்விடமும் இடையின்றி எங்கும் சேனை செறிந்து நிற்கின்றனவாதலின்.

குறிப்பு : மற்று வினைமாற்று, ஆல் ஏ அசைநிலை.

வரத்தினிற் பெரியர் மாய வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போர் ஊக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச் செய்கையிற் பெரியர் தாங்குங்
கரத்தினிற் பெரியர் யாருங் காலனிற் பெரியர் அம்மா. 52

பொருள் : யாரும்-எதிர்ப்படும் அசுரர் யாவருமே, வரத்தினிற்பெரியர் - வரபலம் மிகப்பெற்றவர், மாயவன்மையில் பெரியர் - மாயப்போரிலும் மிகவல்லவர், மொய்ம்பின் உரத்தினில் பெரியர் - தோளிலும் மார்பிலும் உள்ள வலியும் மிக்கவர், வெம்போர் ஊக்கத்தில் பெரியர் - கொடியபோர் புரியும் ஊக்கத்திலும் சிறந்தவர், எண்ணில் சிரத்தினில் பெரியர் - எண்ணில் அடங்காத சிரங்களும் பலவுள்ளனர், சீற்றச்செய்கையிற் பெரியர் - கடுஞ்சினங்கொண்டு கொடுமை புரிவதிலும் மிக்கவர்கள், தாங்கும் கரத்தினில் பெரியர் - அமைந்த கரங்களும் பற்பல உடையவர்கள், காலனில் பெரியர் - இயமனிலும் வலிசான்றவராயுள்ளனர்.

பொழிப்பு : முன்வந்த அசுரவீரர் யாவருமே தனித்தனியே வரத்திலும் மாயத்திலும் தோள்வலி உள்ளத்துறுதியிலும் போருக்கத்திலும் பலபலதலைகளுள்ளமையிலும் கடுஞ்சினக் கொடுந்தொழிலும் பலகைகள் உள்ளமையிலும் மிக்கவராயுள்ளனர் எவருமே காலனையும் கடந்தவர் ஆக அவுணவீரர் யாவரும் எம்மிலும் மேம்பட்டவராயுள்ளனர்.

குறிப்பு : பெரியர் என்பது சொற்பின்வருநிலையணி, யாரும்-சிறப்போடு முற்றும்மை, இல்-என்பது ஏதுப்பொருளில் வந்தது, காலனில்-எனபதில் ஒப்பு எல்லைப் பொருளாக நின்றது.

மாகத்தின் வதிந்த வானோர் வன்மையும் வளனும் வவ்விச்
சோகத்தை வீளைத்து வெம்போர் தொடங்கியே தொலைவு செய்தோர்
மோகத்தின் வரம்பாய் நின்றோர் முழுதுயிர்க் கடலுண் வேட்கை
மேகத்தின் வலிந்த தீயோர் விரிஞ்சன்ஏற் றிடினும் வெல்வோர். 53

பொருள் : மாகத்தில் வதிந்தவானோர் வன்மையும் வளனும் வெளவி வானுலகில் வாழ்ந்த அமரர்களின் வலிமையையும்

செல்வங்களையும் கவர்ந்து, வெம்போர் தொடங்கியே தொலைவு செய்து சோகத்தை விளைத்தோர் - தேவருடன் கொடும் போர் தொடுத்து அழிவுசெய்து அவர்களுக்குத் துயரமே விளைவித்தவர், மோகத்தில் வரம்பாய் நின்றறோர் - மயக்க உணர்வுக்குத்தாமே எல்லையாக நின்றவர், முழுதுயிர்க்கடல் உண்வேட்கை மேகத்தின் வலிந்த தீயொர் - கடல் நீர்பருகும் மேகம் போல முற்றவும் உயிரினங்களை உண்டொழிக்கும் வலிமை வாய்ந்த தீயவர், விரிஞ்சன் ஏற்றிடினும் வெல்வோர்-பிரமனே எதிர்த்துவரினும் பொருது வெல்லவல்லவராவர்.

பொழிப்பு : இவ்வவுணர்கள் உயர்ந்தோரான தேவரோடு பொருது அவர்வலி செல்வங்களைப்பறித்து அழிவு செய்து துயரம் விளைவித்தவர் அறிவீனருக்கு வரம்பானவர், உயிர்க்குலத்தைக் கடல்நீர் உண்ணும் முகில் போல் உண்டொழிப்பவர், தீயர், அயனையும் வெல்லும் விறல்மிக்கவராவர்.

கூற்றெனும் நாமத் தண்ணல் கொண்டிடும் அரசுஞ் செங்கேழ்
நூற்றிதழ்க் கமல மேலான் நுனித்தனன் விதிக்கு மாறு
மாற்றிடுஞ் செய்கை வல்லோர் மாநில முழுதுண் டாலும்
மாற்றரும் பசிநோய் மிக்கோ ரண்டங்கள் அலைக்குங் கையோர். 54

பொருள் : கூற்றெனும் நாமத்தண்ணல் கொண்டிடும் அரசும்-காலன் என்னும் பெயர்பெற்றவன் கொண்டுள அரசுரிமையும், செங்கேழ் நூற்றிதழ்க் கமலமேலான நுனித்தனன் விதிக்குமாறும் - சிவந்த நூறிதழ்த்தாமரை மலரயன் கருதி உலகுயிர்களைப் படைக்கும் செய்கையும் ஆகியவற்றை, மாற்றிடும் செய்கை வல்லோர் - எண்ணினால் தாம்விரும்பிய படியே மாற்றியமைக்கவும் ஆற்றலுள்ளோர், மாநிலம் முழுதுண்டாலும் மாற்றரும் பசிநோய் மிக்கோர் - பேருலகம் முழுவதையும் ஒருங்கே உண்டாலும் தீராத பசிபிணி பீடித்தோர், அண்டங்கள் அலைக்கும் கையோர் - அண்டங்களையே பந்துபோல அலைத்து விளையாடவல்ல வலிமைவாய்ந்தோர்.

பொழிப்பு : இவ்வசுர வீரர் இயமனும் பிரமனும் சிவனாணைப்படி செய்யும் அந்தமும் ஆதியுமான செயல்களையே மாற்றியமைக்க வல்லவர்கள், பூமண்டலத்தை ஒருங்கே உண்டாலும் மாறாதபெரும் பசியினர். அண்டங்களையே பந்தாடவல்ல பராக்கிரமசாலிகளாயுளர்.

குறிப்பு : உடலுயிர் வேறு கூறாக்குதலால் இயமன் கூற்றன் உயிர்களின் வினைப்போகம் எண்ணிப்படைத்தலால் நுனித்துப்படைத்தல்.

வெங்கனல் சொரியுங் கண்ணார் விரிகடற் புரைபேழ் வாயார்
பங்கமில் வயமேற் கொண்டோர் பவத்தினுக் குறையு ளானோர்
செங்கதிர் மதியந் தோயுஞ் சென்னியர் செயிர்தீர் ஆற்றல்
அங்கத விறையும் பேர அடிபெயர்த் துலவும் வெய்யோர். 55

பொருள் : வெங்கனல் சொரியும் கண்ணார் - கொடிய கோபத்தீ கொப்பளிக்கும் கண்ணுள்ளோர், விரிகடல் புரைபேழ்வாயார் - பரந்த சமுத்திரம் போலப் பிளந்த பெருவாயுள்ளவர், பங்கமில்வயம் மெற்கொண்டோர் - தடை - படாத வெற்றி பூண்டவர்கள், பவத்தினுக்கு உறையுளானோர் - பாவம் குடியிருக்கும் மனையாயுள்ளவர், செங்கதிர் மதியம் தோயும் சென்னியர்- சூரியனையும் சந்திரனையும் தீண்ட நீண்டதலையுள்ளோர், செயிர்தீர் ஆற்றல் அங்தஇறையும் - வெறுப்பில்லாமலே பூபாரத்தை சுமக்கும் ஆற்றலுள்ள அராவரசனாகிய சேடனும், பேர அடிபெயர்த்து உலவும் வெய்யோர் - வெய்வர் சுமைபொறாது தளர அடி பெயர்த்து நடக்கும்அவவசுரவீரர்கள்.

பொழிப்பு : சினத்தீசிதறும் கண்ணினர், கடல்போலவிரிந்தவாயினர் தடையுறாத வெற்றிபூண்டவர், பாவத்தின் உறைவிடமானவர், சூரியசந்திரர்களை அணவும்படி உயர்ந்த தலைகளுள்வர்கள், சலிப்புறாது பூபாரத்தைச் சுமந்துள்ள பாம்பரசனாகிய சேடனும் சுமக்கமாட்டாது நிலைபெயரும்படி அடிபெயர்த்து உலாவுகின்ற கொடியவர்கள் அவ்வசுரர்கள்.

அங்கிமா முகத்தி னான்போல் அடைந்தனர் பல்லோர் யாளித்
துங்கமா முகத்தி னான்போல் தோன்றினர் பல்லோர் சூழி
வெங்கைமா முகத்தி னான்போல மேயினர் பல்லோர் மேலாஞ்
சிங்கமா முகத்தி னான்போல திகழ்ந்தனர் பல்லோர் அன்றே. 56

பொருள் : அங்கிமா முகத்தினான் போல் அடைந்தனர் பல்லோர்-அவர்களில் அக்கினிமுகன் போல் வந்தோர் பலராவர், யாளித்துங்கமா முகத்தினான் போல் தோன்றினர் பல்லோர் - சிறந்த யாளிமுகாசுரன் போல் தோற்றம் படைத்தோரும் பலராவர், சூழி வெங்கைமா முகத்தினான் போல் மேயின்ர் பல்லோர் - முகபடாமணிந்த வலிய கைமாவாகிய யானைமுகத்தசுரன் போலவும் வந்தோர் பலராவர், மேலாம் சிங்கமாமுகத்தினான் போல் திகழ்ந்தனர் பல்லோரன்றே - முன்கூறியவரில் மேலான சிங்க முகாசுரன் போல விளங்கியவரும் பலராவர்.

பொழிப்பு : அவ்வசுரர்களிலே பலர் அக்கினிமுகன் போலவும், வேறு பலர் யாளி முகன் போலவும் மற்றும் பலர் யானை முகமுள்ள தாருகனைப் போலவும், இன்னும்பல இவர்களிலும் மிக்க சிங்கமுகன் போலவும், வலிமை வீரம் வெற்றிமிக்கவராக வந்தனர்.

மதுவொடு கைட பன்போல் வந்தனர் பல்லோர் யாருந்
துதியுறு புகழ்ச்சுந் தோப சுந்தரிற் செறிந்தோர் பல்லோர்
அதிர்கழற் சலந்த ரன்போல ஆர்த்தனர் பல்லோர் ஆற்ற
முதிர்சின மகிடன் போல மொய்த்தனர் பல்லோர் அம்மா. 57

பொருள் : மதுவொடு கைடபன் போல் வந்தனர் பல்லோர்-மதுவும் கைடபனும் எனும் அசுரர்போலவந்தோரும் பலராவர், யாரும் துதியுறு சுந்த உபசந்தரில் செறிந்தோர் பல்லோர் - எவர்களும் புகழும் சுந்தன் உபசுந்தன் எனப்பட்டவீரர் போலவந்தவரும் பலர், அதிர் கழற் சலந்தரன் போல் ஆர்த்தனர் பல்லோர் - ஆர்க்கின்றவீரக் கழலணிந்த சலந்தரனைப்போல் ஆர்த்துவந்தவரும் பலராவர், ஆற்ற முதிர்சின மகிடன் போல மொய்த்தனர் பல்லோர் அம்மா - மிகமுதிர்ந்த சினம் கொண்ட மகிடாசுரன் பொல நெருங்கிச்

சூழ்ந்தவரும் பலருண்டு, இவர்கள் ஆற்றலும் தோற்றமும் அம்மா மிக அதிசயமாயிருந்தது.

பொழிப்பு : மது கைடபன் என்போர் அரியால் வெல்லப்பட்ட அசுரர்; சுந்தன் உபசுந்தன் இருவரும் ஒருபெண்ணாசையால் தாமே பொருது மடிந்தோர்; சலந்தரன் சிவன் காட்டிய சக்கரத்தைத் தானே தலையில் வைத்து இறந்தோன்; அம்பிகையால் அழிக்கப்பட்டவன் மகிடன் (எருமை உருவினன்) இவர்கள் முன்வாழ்ந்து முடிந்த வீரம்மிக்க அசுரர்கள் இவர்களைப்போன்றவராகவே அசுரவீரர்பலரும் தோன்றினர். அம்மா - வியப்புக் குறிப்பு, அசைச்சொல்லுமாம்.

அரன்படை பரித்தோர் பல்லோர் அப்புயத் தவிசின் மேவும்
வரன்படை பரித்தோர் பல்லோர் மழுவொடு தண்டந் தாங்குங்
கரன்படை பரித்தோர் பல்லோர் கால்படை பரித்தோர் பல்லோர்
முரன்படை படுத்த கொண்டல் முதுபடை பரித்தோர் பல்லோர். 58

பொருள் : அரன்படை பரித்தோர் பல்லோர் - சிவப்படை கொண்டுவந்தவரும்பலர், அம்புயத்தசின் மேவும் வரன்படை பரித்தோர் பல்லோர் - தாமரை மலராசனராகிய அயன்படை கொண்டவரும் பலர், மழுவொடுதண்டம் தாங்கும் கரன்படை பரித்தோர் பல்லோர் - மழுவும் தண்டும் ஏந்து கையினனாகிய காலனின் படை ஏந்தியவரும்பலர், கால்படை பரித்தோர் பல்லோர் - வாயுதேவனின் படைகொண்டவரும் பலர், முரன்படைபடுத்த கொண்டல் முதுபடை பரித்தோர் பல்லோர் - முரனையும் படையுடன் அழித்த முகில் வண்ணரான அரியின் படைகொண்டவரும்பலராவர்.

பொழிப்பு : சிவனது உருத்திரபடையும் அயனின் பிரமாஸ்திரமும் இயமனது படையும் (சூலம்) வாயுதேவன் படையும் விஷ்ணுவின் சக்ரம் நாராயணாஸ்திரம் என்னும் தெய்வப்படைகளையும் தவத்தால் வரப்பிரசாதமாகப் பெற்றவர்களாகிய அசுரவீரரும் பற்பலர் வந்தனர்.

ஆனதொ ரவுண வெள்ளம் அநந்தகோ டியதாம் என்றே
தானுரை செல்வ தல்லாற் சாற்றவோ ரளவும் உண்டோ
வானமும் நிலனும் ஏனை மாதிர வரைப்பும் எங்குஞ்
சேனைக ளாகிச் சூழின் யாமென்கொல் செய்வ தம்மா. 59

பொருள் : ஆனதோர் அவுணவெள்ளம் அநந்த கோடிய தாமென்றே தானுரை செய்வதல்லால் - அவ்வாறான வீரர்களுள்ள அவுணசேனா வெள்ளம் அநந்தகோடியாகலாமென்றுதானே சொல்லா மென்பதன்றி, சாற்ற ஓர் அளவும் உண்டோ - இவ்வளவுதான் என்று சொல்வதற்கு ஒரு எண்மான எல்லை உண்டாமோ? இல்லையே, வானமும் நிலனும் ஏனை மாதிரவரைப்பும் எங்கும் - விண்ணும் மண்ணும் திக்கெல்லையளவும் எங்கும், சேனைகளாகிச் சூழின் - அசுரசேனைகளாகவே சூழ்ந்து செறிந்தனவாயின், யாம் என் கொல் செய்வது அம்மா - பூதர்களாகிய நாம் இவர்களோடு எவ்வாறு போர் செய்யவல்லோம், வெற்றிபெறுவது இயலாத காரியம்.

பொழிப்பு : எண்ணிலடங்காத பேரளவினர் பேராற்றலுள்ளோர் பலவகைப்படைக்கலச் சிறப்புள்ளோர், இவர்கள் பார்க்குமிடமெங்கும் அசுரவீரராகவே செறிந்துள்ளனர் இவர்களைப் பூதரராகிய நரம் போராடி வெல்ல ஏது செய்ய முடியும், இயலாது.

ஓரண்டத் தவுணர் போரால் உலைந்தயாம் ஒருங்கே யெல்லாப்
பேரண்டத் தோருந் தாக்கிற் பிழைப்புறு பரிசும் உண்டோ
காரண்ட அளக்கர் சாடிக் கனவரை எறியுங் கால்கள்
ஏரண்டச் சூழல் புக்கால் அவைபின்னும் இருக்க வற்றோ. 60

பொருள் : ஓரண்டத் தவுணர்போரால் உலைந்தநாம் - இந்நாள்வரை ஓரண்டத்திலிருந்து பேரரிடவந்த அசுரரோடு பொருதே மிக உலைந்தோம், ஒருங்கே எல்லாப் பேரண்டத்தோரும் தாக்கில் - இன்று பெரிய ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ளோர் ஒருங்கு சேர்ந்து தாக்குவாராயின், பிழைப்புறு பரிசும் உண்டோ - போரில் நாம் உயிர்பிழைக்க வழியும் உண்டோ, கார் அண்ட அளக்கர்சாடிக் கனவரை எறியும் கால்கள் - முகிலைச் சென்றணவும்படி கடலின்

திரைகளை வீசச்செய்து பெரிய மலைச்சிகரங்களை முரித்தெறியவல்ல பிரசண்டமாருதங்கள், ஏரண்டச் சூழல்புக்கால் - ஆமணக்கின் புதர்களிலே புகுந்து மோதினால், அவை பின்னும் இருக்கவற்றோ - அந்த ஆமணக்குகள் வேரோடுபெயர்த் தெறியப்படாமல் தரையில் ஊன்றி நிற்கவல்லனவாகுமோ; மாட்டா

பொழிப்பு : ஓரண்டத்திலுள்ள அசுரரோடு மாத்திரம் போராடி உலைந்து மெலிந்த நாம் ஆயிரத்தெட்டுப் பேரண்டங்களிலுமுள்ள அசுரர் ஒன்று திரண்டு போராட வந்துள்ளபோது உயிர்பிழைக்க வழியுண்டோ, அலை எழுந்து முகிலைத்தொடவும் பெருமலைச் சிகரங்கள் சாய்ந்துவிழவும் தாக்கும் சண்டமாருதம் ஆமணக்குகளின் சூழலிலே சென்றுதாக்கினால் அவை முற்றும் அழிவதல்லாமல் நிலை நிற்க வல்லனவோ, நம்நிலையும் அதுவே.
காரண்டம் கடற்காக்கையுமாம். ஏரண்டம் - ஆமணக்கு, வற்றோ - வல்லனவோ, ஓகாரம் எதிர்மறை.

ஒருவரே எம்மை எல்லாம் உரப்பியே துரப்பர் பின்னை
இருவரே சென்று தாக்கின் யார் இவண் உய்ய வல்லார்
துருவரே யனைய துப்பிற் சூழுறும் அவுணர் யாரும்
பொருவரே என்னில் நேர்போய்ப் பூசலார் தொடங்கற் பாலார். 61

பொருள் : ஒருவரே எம்மைஎல்லாம் உரப்பியே துரப்பர்-அவுணவீரருள் ஒருவனே தனது உரப்பும் ஒலியினாலே நம்மையெல்லாம் அஞ்சியோடச் செய்யவல்லான், பின்னை இருவரே சென்றுதாக்கின் யாரிவண் உய்யவல்லார்-பின்னே வீரர் இருவர் இணைந்துவந்து தாக்குவராயின் எம்மில் எவர்தான் உயிர்பிழைக்கவல்லவர், எவருமில்லை; துருவரே அனையதுப்பில் சூழுறும் அவுணர் யாரும்-தனித்தனி எவரும் துருவனுக்கு ஒப்பான ஆற்றல் கொண்டவராகச் சூழும் அசுரவீரர் யாவரும் ஒருங்கே, பொருவரேயென்னில்-போர் புரியவரின், நேர்போய்ப் பூசல் ஆர் தொடங்கற்பாலார்-அவர்கள் முன்நின்று எவர்தான் போராடவல்லார்.

பொழிப்பு : ஒருவனே உரப்பி எம்மை துரத்துவான், பின் இருவர் தாக்கினால் யார் உயிர்தப்புவார், துருவனுக்கு நேரானவலிசான்ற அசுரர் யாவரும் ஒருங்கே தாக்கவரின் யாவர்தான் முன்னின்று போராடவல்லார்? எவருமில்லை.

எல்லையில் ஆற்றல் கொண்ட எம்முடைத் தலைவர் யாரும்
அல்லன வீரர் தாமும் அவுணரை எதிர்க்க லாற்றார்
கல்லொடு மரத்தால் யாமோ அவர்திறல் கடக்க வல்லேம்
ஒல்லைநம் உயிரும் இன்றே ஒழிந்தன போலும் அன்றே. 62

பொருள் : எல்லையில் ஆற்றல் கொண்ட எம்முடைத்தலைவர்யாரும்-எல்லையில்லாதவலி மிக்க எமது தலைவர்களாயுள்ள யாவரும், அல்லன வீரர்தாமும்-மற்றுமுள்ள இலக்கத்தொன்பது வீரர்களுமே-அவுணரை எதிர்க்கலாற்றார்-அவுணப்படையை எதிர்த்து நிற்க ஆற்றலிலராம், கல்லொடு மரத்தால் யாமோ அவர்திறல் கடக்கவல்லோம்-(பெருவீரர் நிலையே அதுவானால்) கல்லும்மரமுமே படைக்கலமாகக்கொண்ட பூதராகிய நாமோ அவுணப்படையினர் திறமையை வெல்ல வலவர், முடியாது, ஒல்லை நம் உயிரும் இன்றே ஒழிந்தது போலுமன்றே ஒல்லை நம் உயிரும் இன்றே ஒழிந்து விட்டது போலும்.

பொழிப்பு : பூதசேனைத்தலைவர்கள் பேராற்றலுள்ளவர்கள் அவர்களும் அவரினும் ஆற்றலும் படைக்கலமும் உள்ளவர்கள், இலக்கத்தொன்பது வீரர்கள் அவர்களும் எதிர்நிற்கமுடியாதெனில் கல்லும் மலையுமான கருவிகளே கொண்டுள்ள பூதராகியநாமோ இந்த அவுணப்படையெதிர் பேரராட வல்லவர்.

நாற்படை அவுணர் தாக்கின் நாமெலாம் வீளிதும் வீரர்
காற்படு பூளை யேபோற் கதுமென இரிவர் வாகைப்
பாற்படு திறலோன் நிற்கிற் பழிபடும் இனைய ரோடும்
வேற்படை யொருவன் அன்றி வேறியார் எதிர்க்க வல்லார். 63

பொருள் : நாற்படை அவுணர்தாக்கில் நாமெலாம் விளிதும்-நால்வகைப்படையுள்ள அவுணர்தாக்குதலால் பூதராகிய நாமெல்லாம் இறப்போம், வீரர்காற்படு பூளையே போல் கதுமென இரிவர்-இலக்கத்தெட்டுவீரரும் காற்றின் முன்பஞ்சுபோல எதிர்நிற்கலாற்றாது புறங்காட்டி ஓடுவர், வானகப் பாற்படுதிறலோன் நிற்கில் பழிபடும்-வீரவாகுதேவராகிய பெருவீரரும் எதிர்த்து நின்றால் ஆற்றாது மெலிவுற்றார் எனும் பழிப்புக்குரியவராவர், இனையரோடும்-இத்தன்மையான அவுணப்படையினரோடு, வேற்படை ஒருவன் அன்றி-வேற்படை ஏந்திய ஒப்பற்ற சேனாபதியான குமரன் அல்லது, வேறுயார் எதிர்க்கவல்லார்-வேறு எவர்தான் எதிர்நின்று போராடி வெல்ல வல்லவர்.

பொழிப்பு : இந்த அவுணப்படைதாக்கினால் பூதப்படையாகிய நாம் இறந்துபடுவோம், இலக்கத்தெட்டுவீரரும் சூறைக்காற்றின் முன் பஞ்சு போலவே பயந்தோடுவர், பெருவீரரான வீரபாகுதேவரும் ஆற்றலின்றி மெலிந்தார் எனும் பழிப்புக்கு ஆளாவார், இந்த அவுணரோடு வேற்படை ஏந்திய குமரப் பெருமான் ஒருவரே முன்னின்று பொருது வெல்வதல்லது பிறரால் இயலாது.

நீடுறு திசையும் வானும் நிலனும்வெள் ளிடைய தின்றிப்
பாடுற வளைந்து கொண்டார் பற்றலர் அதனால் யாமும்
ஓடியும் உய்ய லாகா ஒல்லுமா றவரைத் தாக்கி
வீடுதல் உறுதி யென்றே விளம்பிமேற் சேற லுற்றார். 64

பொருள் : நீடுறு திசையும் வானும் நிலனும் வெள்ளிடையதின்றி-நீண்ட திசைகளிலும் வான்வெளியிலும் நிலத்திலும் வெற்றிடம் இல்லாதபடி, பற்றலர் பாடுறவளைந்துகொண்டார்-பகைவர் எப்புறமும் சூழ்ந்துகொண்டார்கள், அதனால் யாமும் ஓடியும் உய்யலாகா-அதனால் நாம் அவர்களிலிருந்து ஓடித்தப்பவும் முடியாது எனவே ஒல்லுமாறு அவரைத் தாக்கி-முடிந்தவரை பகைவரைத்தாக்கிநின்று, வீடுதல் உறுதிஎன்றே விளம்பி-இயலாவிடின் வீரமரணமடைவதே உறுதியாகும் என்று கூறி, மேற்சேறலுற்றார்-பகைவர்மேலே தாக்கமுற்பட்டனர்.

பொழிப்பு : திக்கிலும் வானிலும் புவியிலும் எங்கும் பகைவர் சூழ்ந்துளார் ஆதலின் தப்பி ஓடியும் உய்யமுடியாது எனவே இயன்றவிதம் அவர்களைத்தாக்கி முடியாவிடில் வீரமரணமடைவதே எஞ்சியுள்ள உறுதியான செயலென்றுகூறி பகைவர்மேலே தாக்கச் சென்றனர்.

மற்றது காலை தன்னில் மாபெரும் பூத சேனைக்
கொற்றவர் பலரும் ஏனை வீரர்தங் குழுவி னோரும்
வெற்றிகொள் மொய்ம்பன் தானும் மிடைந்துசூழ் படையை நோக்கி
இற்றன கொல்லோ நந்தம் வன்மையென் றெண்ண முற்றார். 65

பொருள் : மற்றது காலைதன்னில்-அவ்வாறு துணிந்த போதில், மாபெரும் பூதசேனைக் கொற்றவர்பலரும்-மிகப்பெரிய பூதசெனையின் தவரான பலரும், ஏனை வீரர்தம் குழுவினோரும்-மற்றுமுள்ள இலட்சத்தெட்டு வீரர்கூட்டத்தினரும், வெற்றிகொள்மொய்ம்பன்றானும்-வீரவாகுதேவரும் ஆகியவர்கள், மிடைந்து சூழ் படையை நோக்கி-செறிந்து சூழ்ந்துள்ள அவுணப்படையைப் பார்த்து நந்தம்வன்மை இற்றன கொல்லோ என்று எண்ணமுற்றார்-நமதுவீரமும் வலியுமெல்லாம் இவர்கள் முன் இன்று அழிந்தனவோ என்று மனம் கவன்றார்.

பொழிப்பு : பூதர்கள் நிலை அவ்வாறாக, பூதசேனைத்தலைவர்களும் இலட்சத்தெட்டுவீரரும், வீரவாகுதேவரும் அடர்ந்து சூழந்த அசுரப்பட்டையை நோக்கி இவர்களெதிரில் இன்று நாம் எம்முடையவலியும் வீரமும் இழந்தவராவோமோ என்று மனக்கிலேசம் கொண்டார்கள்.

அண்டர்கள் முதல்வன் தானும் அமரரும் அகில மெங்குந்
தண்டுத லின்றிச் சூழுந் தானவர் அனிக மெல்லாங்
கண்டனர் துளங்கி அஞ்சிக் கவன்றனர் அவருட் காரீ
வண்டுள அலங்கற் சென்னி வானவற் கினைய சொல்வான். 66

பொருள் : அண்டர்கள் முதல்வன்தானும்-தேவர்தலைவனான இந்திரனும், அமரரும் - ஏனைத்தேவரும், அகிலமெங்கும் தண்டுதலின்றிச் சூழும் தானவர் அனிகமெல்லாம் கண்டனர்-முழுஉலகத்திலும் இடையீடின்றிச் சூழ்ந்துள அவுணர்சேனை முழுவதையும் உற்றுநோக்கினர், துளங்கி அஞ்சிக் கவன்றனர்-அஞ்சி நடுங்கிக்கவலையுற்றனர், அவருட்காரி-அந்தத் தேவருள்ளே தலைவனான கரிய இந்திரன், வண்டுளவலங்கற் சென்னி வானவற்கு-வளஞ் சிறந்த துழாய் மாலை அணிந்த சிர்சினரும் தேவிற்சிறந்தவருமாகிய அரிமுன், இனையசொல்வான்-இவ்வாறு தன்குறையைக் கூறுவானாயினான்.

பொழிப்பு : இந்திரனும் தேவரும் சூழ்ந்துள்ள அசுரர் பெரும்படையை நோக்கி அஞ்சிநடுங்கிக்கவலை யுற்றார்; அவர்களில் இந்திரன் துழாய் அணிந்த சென்னியரான திருமாலுக்கு இவ்வாறு சொல்வாராயினான்.
அண்டர்கள் முதல்வன் - தேவர்தலைவன் காரி-கரிய நிறத்தவன்-இந்திரன்.

ஆண்டகை முருகன் தன்மேல் ஆயிர விருநா லண்டத்
தீண்டிய தானை யெல்லாம் இறுத்தன இவற்றி னோடு
மூண்டமர் இயற்றி வெல்ல வூழிநாள் முடியும் என்றால்
மாண்டிடு கின்ற தெங்ஙன் அவுணர்கள் மன்னன் மன்னோ. 67

பொருள் : ஆண்டகை முருகன்தன்மேல்-பேராண்மையுள்ள முருகப்பிரான் மீது பொர, ஆயிர இரு நால் அண்டத்து ஈண்டிய தானை எல்லாம் இறுத்தன - ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமிருந்து வந்த அவுணசேனையெல்லாம் சூழ்ந்துள்ளன, இவற்றினோடும் மூண்டுஅமர்இயற்றிவெல்ல - இப்படைகளுடனே போர்தொடங்கி நடத்தி வெற்றி கொள்வதற்கே, ஊழிநாள் முடியும் - ஒரு ஊழிகாலம் கழிந்துவிடும், என்றால் - இப்படி நீண்டகாலம் கழியில் அவுணர்கள் மன்னர்மன்னன் மாண்டிடுகின்றது எங்ஙன் மன்னோ - அவுணர்களின் மன்னர் மன்னனான சூரன் மாண்டுமடிவது எவ்வாறு எந்நாளில் நடைபெறுமோ.

பொழிப்பு : முருகப் பெருமான் மேல் போர்குறித்து ஆயிரத்தெட்டு அண்டத்திலுமுள்ள அவுணப்படைவந்து சூழ்ந்தன, இப்படையைப் பொருதழித்து வெற்றிகொள்ளவே கற்பாந்த காலம் கழியும் போலும், அங்ஙனமாயின் அசுரர் மாமன்னனான சூரன் மாண்டுபோம் காலம் எக்காலமோ.

அடுதிறல் வலிபெற் றுள்ள அவுணராம் பானாட் கங்குல்
விடிவதும் அமரர் தங்கள் வெஞ்சிறை வீடு மாறும்
நெடியதொல் வெறுக்கை தன்னை நீங்கிய நமது துன்பம்
முடிவது மில்லை கொல்லோ மொழிந்தருள் முதல்வ என்றான். 68

பொருள் : அடுதிறல் வலிபெற்றுள்ள அவுணராம் பாநாட்கங்குல்-பகைவரை அழித்து வெல்லும் வீரமும் வலியுமுள்ள அசுரர் எனப்படும் நள்ளிரவானது, விடிவதும் - விடிந்து ஒளிவருவதும், அமரர்தங்கள் வெஞ்சிறை வீடுமாறும்-தேவர்களது கொடிய சிறைத்துன்பம் போய்ச்சுகம் பெறுவதும், நெடியதொல் வெறுக்கை தன்னை - நீண்ட காலமாய் நமக்குரித்தான பழம்பெரும் செல்வவாழ்வை, நீங்கிய நமது துன்பம் முடிவதும் - இழந்திருக்கும் நமது துன்பத்துக்கு முடிவுகாண்பதும், இல்லைகொல்லோ-அண்மையில் நிகழ்வதில்லையோ, முதல்வமொழிந்தருள் என்றான்-தலைவரான முகுந்தரே மொழிந்தருளுக என்றான்.

பொழிப்பு : வலிய அவுணராகிய நள்ளிரவு போய்விடிவதும், தேவர்கள் கொடுஞ்சிறையிலிருந்து மீளுவதும், பெருஞ் செல்வவாழ்வை இழந்து வருந்தும் நமது துன்பம் நீங்கி இன்புறுவதும் நிகழாதோ? தலைரே சொல்லும் என இந்திரன் கூறினான்.

இந்திரன் இனைய தன்மை இசைத்தலும் இலங்கை காத்த
ஐந்திரு சென்னி யானை அடுதிறல் கொண்டு நின்ற
செந்திரு மருமத் தண்ணல் தேவரை அளிக்குந் தொல்லோன்
புந்திகொள் கவலை நாடி இனையன புகலா நின்றான். 69

பொருள் : இந்திரன் இணையதன்மை இசைத்தலும்-இந்திரன் இத்தன்மையைக் கூறுதலும், இலங்கை காத்த ஐந்திருசென்னி யானை-இலங்கையை ஆண்டபத்துத்தலை அரக்கனை-அடுதிறல் கொண்டு நின்ற-அழித்து வீரமும் வெற்றியும் பெற்றுநிற்கும், செந்திருமருமத் தண்ணல்-திருவாழும்மார்பினரான திருமால், தேவரை அளிக்கும் தொல்லோன் புந்திகொள்கவலை நாடி-தேவர்களின் பழைய காவலனாகிய இந்திரனது மனதிலுள்ள கவலையை எண்ணி அதை நீக்குமாறு, இனையன புகலாநின்றான்-பின்வருமாறு தேறுதல் மொழிகள் கூறுவாராயினார்.

பொழிப்பு : இந்திரன் இங்ஙனம் கூறுதலும், இலங்காதிபதியான தசக்கிரீவனைக்கொன்றவரும் வெற்றிவீரரும் இலக்குமிவாழும் மார்பினருமாகிய திருமால் தேவராசனாகிய இந்திரனின் கவலையைத் தீர்க்கப்பின்வருமாறு தேறுதல் கூறுவாராயினார்.

காலமாய்க் காலம் இன்றிக் கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோலம் இன்றிக் குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு மகங்கொண் டுற்றான். 70

பொருள் : காலமாய்-காலதத்துவமாகியும், காலமின்றி-காலத்தைக் கடந்துநிற்பவராயும், கருமமாய் - பஞ்ச கிருத்தியகருத்தாவாகியும், கருமமின்றி - கன்மங்களைக் கடந்தவராகியும், கோலமாய் - தடத்த நிலையிலே அருளாகிய திருமேனிகளையுடையராயும், கோலம் இன்றி - சொரூப நிலையிலே அருவாயும், குணங்களாய் - முத்தொழில் முதல்வனாங்கால் ஏற்ற முக்குணமுள்ளவருமாய், குணங்களின்றி - இயல்பாகவே குணாதீதராயும், ஞாலமாய்-பிருதுவிமுதலிய பூதகாரியமான உலகமாயும், ஞாலமின்றி-உலகத்திலே தோய்வின்றிநிற்கும் நிராதாரமானவராயும், அநாதியாய்-என்று முள்ள நித்தராயும், நங்கட்கெல்லாம் மூலமாய் - அயன் முதலாக எண்ணப்படும் நமமனைவருக்கும் தோன்றிநின்று ஒடுங்குவதற்கு மூலமானவராயும் இருந்த வள்ளல்-இருப்பவரான அருள்வள்ளல் பரமசிவனே, மூவிரு முகம்கொண்டு உற்றான்-

துட்டநிக்கிரகசிட்ட பரிபாலனம் செய்வதோர் திருவிளையாடலின் பொருட்டு ஆறுதிருமுகமுள்ள முருகனாக நம் முன்வந்தருளினார்.

பொழிப்பு : காலமும் கருமமும் கோலமும் குணங்களும் உலகமும் ஆகியும் அன்றியும் அனைத்தையும் கடந்த வாம்பிலாப் பொருளாகியும், அநாதி நித்தியராயும் உலகும் நாமனைவரும் தோன்றிநின்று ஒடுக்குதற்கு இடமான மூலப்பொருளாயும் உள்ள அருள் வள்ளலாகிய சிவனே அறுமுகப்பிரானாக அருளுருத்தாங்கி நம்முன்வந்துள்ளார்.

குறிப்பு : "அவையே தானாய்" என்ற இருசொல்லின் சிவஞான போதம் கூறிய பதியின் நிலை கூறுவது இப்பாடல். இவ்வுண்மையை இலய போக அதிகாரம் எனவும் வேறாய் ஒன்றாய் உடனாய் எனவும் அறிஞர் கூறுவர். இறைவனுக்கு சொரூபநிலை தடத்தநிலை என இருவகை உண்டு. விளக்கம் சித்தாந்த நூல்களில் காணலாம்.

குன்றுதொ றாடல்செய்யுங் குமரவேள் மேரு வென்னும்
பொன்றிகழ் வெற்பின் வந்து புவனங்கள் முழுதும் அங்கட்
சென்றுறை உயிர்கள் முற்றுந் தேவருந் தன்பாற் காட்டி
அன்றொரு வடிவங்கொண்ட தயர்த்தியோ அறிந்த நீ தான். 71

பொருள் : குன்றுதொறாடல் செய்யும் குமரவேள்-குன்தோறும் ஆடல் புரியும் குமரப்பெருமான், மேருவெனும் பொன்திகழ்வெற்பில் வந்து-(முன்னாளிலே) பொன்மலையிலே வந்து, புவனங்கள் முழுவதும் அங்கண்சென்றுறை உயிர்கள் முற்றும் தேவரும்-அண்டம் புவனம் யாவும் (வினைக்கீடாக) ஆங்காங்குத் தோன்றிவாழும் ஆன்மாக்களும் அவற்றை ஆட்டும் தேவர்களாகிய நாமும் அடங்க, தன்பாற் காட்டி-தம்முடைய விசுவரூபத்தில் வியாப்பியமாக உள்ளதை காணும் படி காட்டி, அன்றொரு வடிவங்கொண்டது-அந்நாள் ஒருதிருப்பெருவடிவங்காட்டியதை-அறிந்த நீதான் அயர்த்தியோ-அவரருளாலே கண்டுகொண்டபக்குவனாகிய நீயும் இன்று அவர் பெருமையை மறந்தனையோ.

பொழிப்பு : குன்றுதொறாடும் குமரன் முன்னொருநாள் அருளாடலாகவே சர்வமும் தாமெனும் உண்மையை விசுவரூபங்காணக்காட்டி உணர்த்த உணர்ந்த இந்திரனே இன்று அதனையும் அவர்நிலையும் மறந்துபேசலாமோ.

பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவனாகி நல்கும்
என்னுரு வாகிக் காக்கும் ஈசன்போல் இறுதி செய்யும்
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படை போலும் அன்னான்
தன்னுரு மறைகளாலுஞ் சாற்றுதற் கரிய தன்றே. 72

பொருள் : பொன்னுரு அமைந்த கஞ்சப்புங்கவனாகிநல்கும்-பொன்வண்ணராய் கமலமலரில் உறையும் பிரமனாகவும் படைப்பார், என்னுருவாகிக்காக்கும்-திருமாலாகிய என்னுருவில் நின்று காத்தல் செய்வார், ஈசன் போல் இறுதிசெய்யும்-உருத்திரமூர்த்திபோல நின்று சங்காரமும் புரிவார், மின்னுரு என்ன யார்க்கும் வெளிப்படைபோலும்-அன்பராணார் எவர்க்கும் மின்னல் போலவெளிப்படத்தோன்றிவேண்டும் அருள் செய்வார், அன்னான் தன்னுரு-அவ்வியல்பினரான குமாரப்பிரானின் பதித்துவ இயல்பானது, மறைகளாலும் சாற்றுதற் கரியதன்றே-இறைவன் இயம்பிய வேதநூல்களாலும் உள்ளவாறு உரைத்தற்கரியதாகும்.

பொழிப்பு : அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளையும் அதிட்டித்து நின்று முத்தொழிலும் இயற்றுகின்றார். அன்பரானவர் எவர்க்கும் மின்னொளி போல வெளிப்படத்தோன்றி வேண்டியாங்கருளுவார், அவரது அருளுருசெயல் இவையென்று வேதமும் சொல்லமுடியாததாம்.

பாயிருங் கடலிற் சூழ்ந்த பற்றலர் படையை எல்லாம்
ஏயெனும் முன்னம் வீட்டுஞ் சிறுவனென் றெண்ணல் ஐய
ஆயிர கோடி கொண்ட அண்டத்தின் உயிர்கட் கெல்லாம்
நாயகன் அவன்காண் நாஞ்செய் நல்வினைப் பயனால் வந்தான். 73

பொருள் : பாயிரும் கடலில் சூழ்ந்த பற்றலர் தொகையையெல்லாம்-பரந்தபெருங்கடல் போலச்சூழ்ந்துள்ள பகைவர் சேனை அனைத்தையும், ஏ எனும் முன்னம் வீட்டும் - ஏ என்ற சொல் முடிவதன்முன் அழிப்பார், சிறுவன் என்று எண்ணல் ஐய-சுவாமியைச்சிறுபாலனென எண்ணாதே ஐயனே, ஆயிரகோடி கொண்ட அண்டத்தின் உயிர்கட்கெல்லாம் - ஆயிரகோடி அண்டபுவனத்துள்ள ஆன்மகோடிகளுக்குமெல்லாம், நாயகன் அவன்காண் - சர்வலோக ஏக நாயகனாயுள்ளவன் அக்குமரனே, நாம் செய் நல்வினைப்பயனால் வந்தான் - நாம்செய்துள்ள புண்ணியப் பயனாக அவர் பாலகுமரனாகி அருள் பாலிக்கவந்தார்.

பொழிப்பு : கடல்போலச்சூழ்ந்தபகைப்படையை ஒருகணத்திலே அழிப்பார், சிறுவனென நினையேல், அனைத்துஅண்டசரா சரங்களுக்கும் ஒரு நாயகன் அவனே அறிவாய் நாம் செய்த புண்ணியத்தால் நமக்கருள வந்தான்.

குறிப்பு : ஐயகுழந்தாய் என இந்திரனை அழைத்தார் வழுவமைதி.

சூரனே முதலோர் தம்மை இமைப்பினில் தொலைக்க உன்னின்
மூரலால் அடுவன் கொண்ட முனிவினால் அடுவன் வாய்மைச்
சீரினால் அடுவன் நாட்டச் செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற் பாலார். 74

பொருள் : சூரனே முதலோர் தம்மை இமைப்பினில் தொலைக்க உன்னில் சூரனை முதல்வனாகக் கொண்டுள்ள இவ்வசுரர் யாவரையும் இமைப்பொழுதிலே அழிக்க எண்ணினாரேல், மூரலால் அடுவன் - புன்னகையாலும் அழிப்பார், கொண்டமுனிவினால் அடுவன் - தோற்றுவித்த கோபக் குறிப்பாலும் அழிப்பார், வாய்மைச் சீரினால் அடுவன் - சத்தியவாக்கினாலும் அழிப்பார், நாட்டச் செய்கையால் அடுவன் - திருக்கண்ணோக்கத்தாலும் அழிப்பார், என்றால் - இவ்வாறே எளிதில் முடிக்கவல்லார் என்றால், நேரிலா முதல்வன் வன்மையாவரே நிகழ்த்தற்பாலார் - தன்னேரில்லாத சண்முகனாரது ஆற்றலை யாவர்தான் சொல்லவல்லார்.

பொழிப்பு : அறுமுகப்பிரான் சூராதி அவுணரை அழிக்கத்திருவுளங் கொண்டால் அக்கணத்திலேயே, சிறுநகை கோபக்குறிப்பு ஒருவாய்ச்சொல் திருநோக்கம் என்றிவற்றில் ஒன்றாலேயே முற்றும் அழிக்கவல்லர், ஒப்பிலியாகிய அவர்வன்மையை யாவரே சொல்லவோ செய்யவோ வல்லார் எவருமிலர் என்பதாம்.

குறிப்பு : அடுவன் என்பது பின்வருநிலையணி.

பாரிடர் சேனை யோடு படர்ந்ததும் இலக்கத் தொன்பான்
வீரர்கள் புடையிற் போற்ற மேயதும் படைகள் பற்றிச்
சூரனை அடுவான் வந்த சூழ்ச்சியுந் தூக்கின் மாதோ
வாரண முதலா மேலோற் கனைத்துமோ ராட லேகாண். 75

பொருள் : பாரிடர் சேனையொடு படர்ந்ததும் - பூதசேனையோடு வந்தருளியதும், இலக்கத்தொன்பான் வீரர்கள் புடையிற் போற்றமேயதும் - இலட்சத்தொன்பது வீரர்கள் பாங்கரிலே போற்றிவரப்புகுந்ததும், படைகள் பற்றிச் சூரனை அடுவான் வந்த சூழ்ச்சியும் தூக்கின் - பன்னிருகரத்திலும் தெய்வப்படைகளை ஏந்திவந்த சூழ்ச்சியும் ஆகியவற்றை எல்லாம் ஆராய்ந்தால், ஆரணமுதலாம் மேலோற்கு - வேதநாயகனாகிய அந்தப் பகவானுக்கு, அனைத்தும் ஓர் ஆடலேகாண் - எல்லாமே சீவராகிய எம்பொருட்டுச் செய்து காட்டும் ஒரு திருவிளையாடலே அறிவாயாக.

பொழிப்பு : எங்கும் நிறைந்து எல்லாம் செயவல்ல பெருமான் எண்ணிய எண்ணியாங்கு இயற்றும் அருளினாலே பூதரும் வீரருமாகிய படையினர் புடைவரப்படைக்கலமேந்திப் போரிடவந்தார்., இது ஓர் அருள் விளையாட்டு அன்றி அவருக்கு அருவினையன்று.

குறிப்பு : ஆடலேடஏகாரம்தேற்றம். மாதோ - அசை.

துய்யதோர் குமர னேபோல் தோன்றிய முதல்வன் சூழ்ந்த
வெய்யதா னவரை யெல்லாம் வீரைந்துடன் அறுத்து நீக்கிக்
கையில்வேல் அதனாற் சூரன் ஆற்றலுங் கடக்கும் யாதும்
ஐயுறேல் காண்டி யென்றான் அறிதுயில் அமர்ந்த பெம்மான். 76

பொருள் : தூயதோர் குமரனேபோல் தோன்றிமுதல்வன் - தூய்மையான சிறுகுழந்தை போல வந்த உலகநாயகனான பெருமான், சூழ்ந்த வெய்ய தானவரை யெல்லாம் விரைந்துடன் அறுத்துநீக்கி - சுற்றிய கொடிய அசுரர் யாவரையும் விரைவிலே அறுத்தழித்து, கையில் வேலதனால் சூரன் ஆற்றலும் கடக்கும் - திருக்கரத்திலுள்ள வேற்படையால் சூரபன்மனின் ஆற்றலையும் வெற்றி கொள்வார், யாதும் ஐயுறேல் காண்டி - இவையாதும் இனிது நிகழும், சிறிதும் ஐயுறாதே காண்பாய் தெளி, என்றான் அறிதுயில் அமர்ந்த பெம்மான் - என அறிதுயில் கொள்ளும் பெம்மானாம் திருமால் இந்திரன் மனந்தெளியத் தெருட்டினார்.

பொழிப்பு : சிறுபாலகனாகத் தோன்றும் குமரன் அவுணப்படை அனைத்தையும் கணப்போதில் அழித்தொழித்துப்பின் கைக்கொண்ட வேற்படையால் சூரனது ஆற்றலையும் அடக்கி ஆண்டருளுவார். இது சத்தியம் இந்திரனே ஐயுறாதே பின் கண்டு தெளிவாய் என்று திருமால் தெருட்டினார்.

மாலிவை பலவுங் கூறி மகபதி உளத்தைத் தேற்றி
ஓலமொ டவுண வெள்ளம் உம்பருஞ் செறிந்த செவ்வேள்
பாலுற நின்று போரின் பரிசினைப் பார்த்து மென்றே
வேலுடை முதல்வன் பாங்கா விண்ணவ ரோடும் போந்தான். 77

பொருள் : மால் இவை பலவும் கூறி மகபதி உளத்தைத் தேற்றி - திருமால் இவ்வாறு பலவும் கூறி இந்திரன் சிந்தையைத் தெளியச்செய்து, ஓலமொடு அவுணவெள்ளம் உம்பரும் செறிந்த - மேலும் சொல்வாராய் ஆரவாரத்தோடு அசுரசேனா வெள்ளம் மண்ணிலும் விண்ணிலும் செறிந்தன, செவ்வேள்பால் உறநின்று போரின் பரிசினைப்பார்த்தும் என்றே - ஆதலால் செல்வேட்பெருமான் பாங்கரிலே போய்நின்று போர் நிகழ்ச்சியைப் பார்ப்போம் என்று கூறி, விண்ணவரோடும் வேலுடைமுதல்வன் பாங்காப் போந்தான் - தேவர்களும் உடன்வர வேற்கைப்பிரானின் பாங்கரிலேபோய் அடங்கி நின்றார்.

பொழிப்பு : திருமால் பலவும் கூறி இந்திரனை மனந்தெளிவித்து, அவுணப்படை வானிலும் நிலத்திலும் சூழ்தலால் நாம்குமரன் பக்கத்தில் ஒதுங்கிநின்று போர்நடைபெறுவதைப் பார்ப்போம் என்று தேவருடன் போய்ச் சேர்ந்தார்.

அன்ன தன்மைகண் டறுமுகன் முறுவல்செய் தடுபோர்
உன்னி யேகலும் வானமும் வையமும் ஒன்றாத்
துன்னு தானவப் பெருங்கடல் ஆர்த்தமர் தொடங்க
முன்ன மேகிய பாரிடர் யாவரும் முரிந்தார். 78

பொருள் : அன்ன தன்மைகண்டு அறுமுகன் முறுவல் செய்து - அத்தன்மைகளைக்கண்டு ஆறுமுகப்பிரான் புன்னகை புரிந்து, அடுபோர்முன்னி ஏகலும் - பகையை அழிக்கும் போரைக்கருதி முன்செல்ல, வையமும் வானமும் ஒன்றாய்த் துன்னுதானவப் பெரும்படை - மண்ணும் விண்ணும் ஒன்றாயிணையச் செறிந்த அசுரப் பெரும்படை, ஆர்த்து அமர்தொடங்க - ஆர்ப்பரித்துப் போர்தொடங்குதலும், முன்னம் ஏகிய பாரிடர் யாவரும் முரிந்தார். - முன்னணியிற் சென்ற பூதப்படையினர் யாவரும் முனையழிந்தார்.

பொழிப்பு : சுரர் அசுரர் செயல்கண்டகுமரன் புன்னகையோடு போர்முனைமுன்ஏக அவுணர் ஆர்த்துப் போர் தொடங்கவே தூசிப்படையான பூதவீரர் முனை முரிந்தடங்கினர்.

முறிந்த காலையில் பூதரின் முதல்வர்கள் முரட்போர்
புரிந்து சாய்ந்தனர் இலக்கரோ டெண்மரும் பொருதே
இரிந்து நீங்கினர் இன்னதோர் தன்மைகள் எல்லாந்
தெரிந்து திண்டிறல் மொய்ம்பினோன் சிலைகொடு சேர்ந்தான். 79

பொருள் : முரிந்தகாலையில் - பூதர்கள் போரில் மெலிந்ததும், பூதரின் முதல்வர்கள் முரட்போர் புரிந்துசாய்ந்தனர் - பூதசேனைத்தலைவரும் வலியபோரைச்செய்து ஆற்றாதவராயினார், இலக்கரோடு எண்மரும் பொருதே - இலக்கத்தெட்டுவீரரும் போராடி எதிர்நில்லாது பின்வாங்கினர், இன்னதோர் தன்மைகளெல்லாம்

தெரிந்து இவ்வாறான களநிலமைகளை யெல்லாம் அறிந்து, திண்டிறல் மொய்ம்பினோன் சிலைகொடு சேர்ந்தான் - வீரவாகு தேவரானவர் வில்லேந்தி முனைமுகத்தில் சேர்ந்தார்.

பொழிப்பு : பூதரும் தலைவரும் இலக்கத்தெண்மரும் அசுர சேனைமுன் முனையழியக் கண்ட வீரவாகுதேவர் வில்லோடு முனையில் சென்றார்.

சேர்பு தன்சிலை வாங்கியே சரமழை சிதறி
நேர்பு குந்திடும் அவுணர்கள் நெடுந்தலை புயங்கள்
மார்பு வெங்கரங் கழலடி வரைகளாய் வீழ
ஈர்பு நின்றமர் இயற்றினன் சிறுவரை இகலி. 80

பொருள் : சேர் புதன் சிலை வாங்கியே சரமழை சிதறி - சேர்ந்த அறிஞராகிய வீரபாகு வில்வளைத்து அம்புமழை பொழிந்து, நேர்புகுந்திடும் அவுணர்கள் நெடுந்தலை புயங்கள் - எதிர்த்துவந்த அசுரர்களின் நீண்ட தலைகளும் புயங்களும் - மார்பும் வெங்கரம் கழலடி வரைகளாய் வீழ - மார்பும் கரங்களும் கழற்கால்களும் வெட்டுண்டு மலைபோலவீழ, சிறுவரை இகலி ஈர்ப்பு நின்று அமரியற்றினன் - சிறிது நேரம் இகலுடன் வெட்டி வீழ்த்தி நின்று போர் புரிந்தார்.

பொழிப்பு : முனைபுகுந்த வீரவாகுதேவர் வில்வளைத்து அம்பு பொழிந்து அசுரவீரர்களின் அங்கங்கள் வெட்டுண்டு வீழ்ந்து மலையாகக் குவியப் போராடினார்.
குறிப்பு : சேர் + புதன் - சேர்ந்த அறிவன் வீரபாகு, சேர்பு + தன் சிலை - சேர்ந்து தனதுவில்லை, சேர்பு - செய்பு வாய்பாட்டு வினை எச்சம். ஈர்பு என்பதும் அவ்வினை எச்சம்.

மாக மேல்நிமிர் ஆயிர கோடிமா கடலுள்
நாக மொன்றுசென் றலைத்தென நண்ணலர் எதிர்போய்
ஆக வம்புரிந் குலப்புறாத் தன்மைகண் டழுங்கி
ஏக நாயகன் தனதுபால் வந்தனன் இளவல். 81

பொருள் : மாகமேல் நிமிர் ஆயிர கோடிமாகடலுள் - வானளாவ மேலே அலை நிமிர்ந்து கொந்தளிக்கும் ஆயிரகோடி கடல் சேரிடத்தில், நாகம் ஒன்றுசென்று அலைத்தென - ஒரு யானை புகுந்து கலங்கக் கடைந்தது போல, நண்ணலர் எதிர்போய் ஆகவம் புரிந்து - பகையவுணப் படை முன்சென்று கலங்குமாறு கடும்போர் புரிந்தும், உலப்புறாத்தன்மை கண்டு அழுங்கி - பகைவரின் படைவெள்ளம் அழிந்து வற்றாமையைக்கண்டு மனஞ்சோர்ந்து இளவல் ஏகநாயகன் புடைவந்தனன் - தம்பியாகிய வீரவாகு ஒரு தனி முதல்வராம் குமரனது பாங்கரில் வந்தார்.

பொழிப்பு : கொந்தளிக்கும் ஆயிரகோடிகடல்கூடியுள்ள சூழலில் யானை ஒன்ற சென்று கலக்கியது போல அசுரப்படை கலங்கப்பொருதும் சேனைக்கடல் வற்றாமைகண்டு சோர்ந்து வீரபாகு சுவாமியின் பக்கம் வந்தார்.

காலை யங்கதில் அவுணர்தந் தானையோர் கணத்தின்
சாலம் ஓடின பூதரில் தலைவருஞ் சாய்ந்தார்
கோல வெஞ்சிலை வீரரும் முரிந்தனர் குழவிப்
பால னேயிவண் வருமெனச் சூழ்ந்தனர் பலரும். 82

பொருள் : காலை அங்கதில் - அச்சமயத்தில், அவுணர்தம் தானையோர் - அவுணசேனைவீரர்கள், "கணத்தின் சாலம் ஓடின - பூதப்படை ஓடிவிட்டது, பூதரில் தலைவரும் சாய்ந்தார் - பூதப்படைத்தலைவரும் முனைசாய்ந்தனர், கோலவெஞ்சிலை வீரரும் முரிந்தார் - அழகிய வில்வீரரும் மெலிந்தகன்றார் ஆதலின்இனி, குழவிப்பாவனே இவண்வருமெனச்சூழ்ந்தனர் பலரும் - சிறு குழந்தை சிவபாலகனே வருவான்", அவனைப் பொருது வெல்லல் எளிதெனப் பலரும் முன்சூழ்ந்தனர்.

பொழிப்பு : அப்போது அசுரப்படைவீரர் "பூதகணம் தோற்றது, பூதசேனாபதிகள் முனையழிந்தார், வில்வீரரும் மெலிந்தனர், இனிப்பொர எஞ்சிநிற்பதுசிவபாலனே வேறல்எளிதென" எண்ணிப் பலரும் சூழ்ந்தனர்.

தண்டு நேமியுங் குலிசமுஞ் சூலமுந் தனுக்கள்
உண்டு மிழ்ந்திடு வாளியும் உடம்பிடித் தொகையும்
பிண்டி பாலமுங் கணிச்சியும் பாசமும் பிறவும்
அண்டர் தந்திடு படைகளுஞ் சொரிந்துநின் றார்த்தார். 83

பொருள் : தண்டும்..... படைகளும் - தண்டம் சக்கரம் குலிசம் சூலம் வில்லிலிருந்துசெல்லும் அம்பு வேல் பிண்டிபாலம் மழுவும் பாசமும் மற்றும் தெய்வப் படைபலவும் ஆகிய படைக்கலங்களை, சொரிந்து நின்று ஆர்த்தார் - பெருமான் மீது சொரிந்து நிற்பவராய் ஆரவாரித்தனர்.

பொழிப்பு : தண்டம் முதலாகத் தெய்வப்படை அந்தமான பலபடைக்கலங்களையும் பெருமான் மீது சொரிந்து நிற்பவராய் அவுணர் ஆரவாரித்தனர்.

பாரி டங்களின் படையெலாம் நெக்கதும் பாங்கர்
வீர மொய்ம்பனும் இளைஞரும் வருந்திமீண் டதுவுங்
காரி னம்புரை அவுணர்தஞ் செய்கையுங் காணா
மூரல் செய்தனன் எவ்வகைத் தேவர்க்கு முதல்வன். 84

பொருள் : பாரிடங்களின் படையெலாம் நெக்கதும் - பூதப்படைமுழுவதும் மெலிவுற்றதையும், வீரமொய்ம்பனும் இளைஞரும் வருந்திப் பாங்கர் மீண்டதும் - விரவாகுவும் தம்பியரும் சமராடிச்சலித்து மீண்டு தம்பக்கத்தில் வந்ததையும், காரினம் புரை அவுணர்தம் செய்கையும் காணா - கருமுகிற்கணம் போன்ற அவுணர்களின் செயலையும் கண்டருளி, எவ்வகைத் தேவர்க்கும் முதல்வன் மூரல் செய்தனன் - எவ்வெத்தேவரிலும் மேலானவரான அறுமுகப்பிரான் நகைத்தருளினார்.

பொழிப்பு : பூதப்படையும் வீரரும் ஆற்றாது மெலிந்ததையும் அசுரப்படையினர் ஆர்த்தமர் முயல்வதையும் கண்டு கந்த சுவாமியார் முறுவலித்தார்.

நாட்டம் மூன்றுடைத் தாதைபோற் சிறிதிறை நகைத்து
நீட்ட மிக்கதோர் சிலையினை நெடுங்கரம் பற்றிக்
கோட்டி நாணொலி கொண்டிட அண்டருங் குலைந்தார்
ஈட்ட மிக்கபல் லுயிர்களுந் துளக்கமெய் தினவே. 85

பொருள் : நாட்டம் மூன்றுடைத் தாதைபோற் சிறிது இறை நகைத்து - கண் மூன்றுள்ள தந்தை சிவன் போலவே குமரக்கடவுள் சிறுநகை செய்து, நீட்டம் மிக்கதோர் சிலையினை நெடுங்கரம்பற்றி - மிக்க நீளமான வில்லொன்றைத்தம் நீண்ட கரத்திலெடுத்து, கோட்டி நாணொலிகொண்டிட அணடரும் குலைந்தார் - வளைத்து நாணேற்றி நாணொலி எழுப்பவே கேட்ட தேவர்களும் நடுங்கினர், ஈட்டமிக்க பல்உயிர்களும் துளக்கம் எய்தினவே - பல சீவகோடிகளும் அஞ்சி அலமந்தன.

பொழிப்பு : குமார சுவாமியும் சிவபிரான் போலவே முறுவலித்து நீண்ட வில்லொன்றைக் கரத்தேந்தி வளைத்து நாணொலிகாட்ட அமரரும் அஞ்சி நடுங்கினர், உலகத்துள்ள சிவகோடிகளும் பயந்துபதறின.

வேறு

முக்கணன் உதவிய திருமுருகன் முரணுறு வரிசிலை முதிரொலிபோய்த்
தொக்கன செவிதொறும் நுழைதலுமே தொலைவறும் அவுணர்கள் தொகைமுழுதும்
நெக்கன பகிர்வன இரதமெலாம் நிரைபட வருபரி புரள்வனவே
மைக்கரி தரைமிசைவிழுவனவான் மதிதொடுநெடுவரை மறிவனபோல். 86

பொருள் : முக்கணன் உதவிய திருமுருகன் முரணுறுவரிசிலை முதிரொலி போய் - முக்கண்முதல்வர் தந்த குமரனின் வல்வில்லிலெழுந்த பேரொலி சென்று, தொக்கன செவிதொறும் நுழைதலுமே - களத்தைச் சூழச் செறிந்த செவிகள் தோறும் புகுந்த போது அதிர்ந்து, தொலைவறும் அவுணர்கள் தொகை முழுதும் - தொலைவுறாத அவுணர்களின் தொகை முழுவதும், நெக்கன - உறுதிகுலைந்தன, இரதமெலாம் பகிர்வன - தேரெல்லாம் பிளந்தன, நிரைபடவருபரி புரள்வன - வரிசையாய்வரும் குதிரைகள்

புரண்டன, மைக்கரி தரை மிசை விழுவன - கரிய யானைகள் தரையிலே சாய்ந்தன, மதிதொடுநெடுவரை மறிவனபோல் - மதிதமழும் மலைசாய்ந்தது போல (யானை வீழ்ந்தன என்க).

பொழிப்பு : குமரேசன் வில்நாணொலிகாதில் நுழைந்த போதிலே அதிர்ச்சியடைந்து அவுணர்கள் உட்கினர், இரதங்கள் பிளந்தன, குதிரைகள் புரண்டன, மலை பாறிவீழ்ந்தது போல யானைகளும் வீழ்ந்தன.

மாசறு மறைகளின் மறையதனை மலைமுனி யுணர்வகை யருள் புரியுந்
தேசிக முதலவன் வரிசிலையிற் செறிமுகில் உறைவகை சிதறுவபோல்
ஆசுகம் அளவில கடவினனால் அடல்கெழும் அவுணர்கள் புடைவளையும்
காசினி அகலமும் விரிகடலுங் ககனமும் மிடைவன கணையெனவே. 87

பொருள் : மாசறு மறைகளின் மறையதனை - அறியாமையை அறுக்கும் வேதங்களின் உட்பொருளை, மலைமுனி உணர்வகை அருள்புரியும் - பொதிய மலை முனி அகத்தியருக்குத் தெளிவுறப்போதித்தருளும், தேசிக முதல்வன் - பரம குருவாகிய முருகன், வரிசிலையில் செறிமுகில் உறைவகை சிதறுவபோல் ஆசுகம் அளவிலகடவினன் - தம்கை வில்லிலிருந்து பருவகாலத்துச் செறிந்த முகில்கள் நீர்த்துளிகளை விடாது பொழிவது போல அளவில்லாத அம்புகளை ஏவினார், அவ்வம்புகளால், அடல்கெழும் அவுணர்கள் புடைவளையும் காசினி அகலமும் - வலிமிக்க அவுணர் புடைசூழ்ந்துள்ள பூமண்டலப்பரப்பு முழுவதும், விரிகடலும் ககனமும் மிடைவனகணைஎனவே - பரந்த கடற்பரப்பும் வானவெளியும் ஆகிய எவ்விடத்தும் செறிந்துள்ளவை அம்புகளே பிறிதில்லை எனுமாறிருந்தது.

பொழிப்பு : வேதத்தின் மெய்ப்பொருளை அகத்தியருக்கு உபதேசிக்கும் பரமகுரு நாதரான பெருமான் பருவகால முகில்மழை பொழிவது போல வில்லிலிருந்து அம்புகளைச் செலுத்தினர் பூமியிலும் கடலிலும் வானிலும் எங்கும் செறிந்துற்றவை அம்புகளே பிறிதில்லை எனுமாறிந்தது.

குறிப்பு : மாசறுமறை - தானும் மாசிலதாய் ஓதுவாரின் மாசை (அறியாமை) அறுக்கவல்லது. மறைகளின் மறை - வேதத்தில் புதைந்து கிடக்கும் மெய்ப்பொருள் மறை - ஓம் எனும் பிரணவமுமாம்.

கொடிகளை அடுவன அளவிலவே குடைகளை அடுவன அளவிலவே படைகளை அடுவன அளவிலவே பரிகளை அடுவன அளவிலவே கடகரி அடுவன அளவிலவே கனையொலி இரதமொ டவுணர்கள் தம் முடிகளை அடுவன அளவிலவே முழுதுல குடையவன் வீடுசரமே. 88

பொருள் : கொடிகளை அடுவன அளவிலவே - அம்புகளில் எண்ணில்லாதவை அவுணப்படையிலுள்ள கொடிகளை அழித்தன, குடைகளை அடுவன அளவிலவே - அளவில்லாதன குடைகளை அழித்தன, அவ்வாறே, ஏயியபடைகளையும் பரிகளை - குதிரைகளையும் கடகரி - மதயானைகளையும், கனையொலி இரதமொடு அவுணர்கள் தம் முடிகளை - பேரோலியோடுவரும் தேருடன் அவுணர்களின் தலைகளையும் அழிக்கின்றன, முழுதுலகுடையவன் விடுசரம் - எவ்வுலகிற்கும் நாயகனாகிய முருகன் செலுத்திய அம்புகளிலே எண்ணில்லாதன அடும் எனமுன் கூட்டுக.

பொழிப்பு : குமரவேள் விடுத்த அம்புகளிற் பற்பல பகைவரின் கொடிகுடை படைகளையும் பரிகளையும் கரிகளையும் இரதமொனடவுணர்கள் முடியுமெல்லாம் அழித்து நின்றன.

குறிப்பு : அருவன அளவில என்பது பின்வருநிலை அணி.

பரவிய தருவினம் என அவுணப் படைநிரை வீழுவன தொடுகடலில் திரையென வீழுவன புரவிகினந் திருநெடு வரைகளின் வீழுவனதேர் கருமைகொள் மணிமுகில் கினமெனவே கடகரி வீழுவன கனவரைசூழ் இரவியும் மதியமும் வீழுவனபோல் எழுவன கவிகையும் வீழுவனவே. 89

பொருள் : பரவிய தருவினம் என அவுணப்படை நிரைவிழுவன - (குமரன் அம்புகளாலே தாக்குண்டு) காட்டிலே பரந்து நிற்கும்

தருக்கள் பாறிவிழுவது போல அவுணவீரர் சாய்ந்தனர்) தொடுகடலில் திரையென விழுவன புரவியினம் - சமுத்திரத்தில் அலைமடங்கி விழுவதுபோலக்குதிரைப்படை வீழ்ந்தன, திருநெடு வரைகளின் விழுவனதேர் - திருநெடுமலைகள் சாய்ந்தவாறு தேர்கள் வீழ்ந்தன, கருமைகொள்மணி முகிலினமெனவே கடகரிவிழுவன - கரிய இந்திர நீலமணி வண்ணமுகில்கள் விழுவது போல மதயானைகள் வீழ்ந்தன, கனவரை சூழ்இரவியும் மதியமும் விழுவனபோல் - மேருமலையை வலம் வரும் சூரியசந்திரர் விழுமாறு போல் எழுவன கவிகையும் விழுவனவே - உயர எழுந்துமேல் நிற்கும் குடைகளும் விழுவனவாயின.

பொழிப்பு : குமரப்பெருமானது அம்புகளால் அடிபட்டு, தருக்கள் சாய்ந்தது போல அவுணரும், கடலில் திரைபோலக் குதிரைகளும், மலைகள் சாய்வது போல தேர்களும், முகில்கள் விழுவது போல யானைகளும், சூரிய சந்திரர் வீழ்வது போல உயர்ந்து நிற்கும் குடைகளும் சாய்ந்து வீழ்ந்தன.

செல்லுறு தாள்களும் அடுபடைகள் சிந்திய செங்கைகளுந் திறலே
சொல்லிய வாய்களும் வீம்மலுறுந் தோள்களும் நோக்குறு துணைவீழியுங்
கல்லென ஆர்த்திடு கந்தரமுங் கவசமும் வீரர்கள் துவசமுடன்
எல்லையி லாதமர் தனிமுதல்வன் எய்திடும் வாளிகள் கொய்திடுமே. 90

பொருள் : செல்லுறுதாள்களும் - நடத்தற்குக் கருவியான கால்களும், அடுபடைகள் சிந்திய செங்கைகளும் - கொலைக்கருவியான படைகளை ஏவிய சிவந்த கைகளும், திறலே சொல்லிய வாய்களும் - தங்கள் வீரங்களைப் பேசிய வாய்களும், வீம்மலுறும் தோள்களும் - போரென்றால் பூரித்தெழும் புயங்களும், நோக்குறு துணைவிழியும் - பார்க்கும் இணையான கண்களும், கல்என ஆர்த்திடு கந்தரமும் - கல்லெனும் ஒலிக்குறிப்பெழ ஆர்ப்பரிக்கும் கழுத்தும், கவசமும் வீரர்கள் துவசமுடன் - வீரர்கள் அணிந்துள்ள கவசங்களும் வெற்றிக்கொடிகளுடனே ஒருங்கே, எல்லையிலாதமர்தனிமுதல்வன் எய்திடும் வாளிகள் கொய்திடுமே - ஆதியந்தமின்றி என்றுமுள்ள உலகுக்கு ஒருமுதல்வனாகிய முருகன் எய்த வாளிகள் கொய்துதரையிலிடும்.

பொழிப்பு : சுவாமி தூவிய அம்புகள் அவுணவீரர்களது உறுப்புகளை எல்லாம் கொய்து தரைப்பட வீழ்த்தின. இதில் செய்கருமங்களும் அதற்குரிய கருவிகளும் இணைத்துக்கூறப்பட்டுள்ள.

வேறு

வட்டணை கொண்டிடு மால்வரையும்
எட்டெனும் ஓங்கலும் யானைகளும்
பட்டுரு வீக்கணை பாறினவால்
ஒட்டலர் எங்ஙனம் உய்குவதே. **91**

பொருள் : வடடணைகொண்டுடிடுமால்வரையும் - ஏழுதீவையும் சூழ்ந்து வடடமாயிருக்கும் சக்கரவாளமலையும், எட்டெனும் ஓங்கலும் - எட்மென்னும் குலமலைகளும், யானைகளும் - எட்டுத்திக்குயானைகளும், பட்டு உருவிக்கணை போயினவால் - அவைகளிலே தாக்கி ஊடுருவிக் கணைகள். அப்பாலும் சென்றனவாயின், ஒட்டலர் எங்ஙனம் உய்குவதே - முனைமுகத்தில் நின்ற பகையசுரர்கள் அக்கணைகளிலிருந்து தப்பி உய்வதெவ்வாறு? முடியாது.

பொழிப்பு : அறுமுகப்பிரானின் அம்புகள் நெடுந்தொலைவிலுள்ள வலிய சக்கரவாளமலை குலமலை திக்குயானைகளிலே பட்டு உருவிப் போயினவென்றால் போர்முனையிலுள்ள அவுணர் அடிபடாது உய்யலாகுமோ? முடியாது.

பொன்னுல கெல்லைபு குந்துலவும்
அன்னமுயர்த்திடும் அண்ணல்பதந்
துன்னுறும் அச்சுதர் தொல்லுலகின்
மின்னென வேசெலும் வேல்கணையே. **92**

பொருள் : பொன்னுலகெல்லை புகுந்துலவும் - சுவர்க்கலோகத்திலும் போய் உலாவரும், அன்னம் உயர்த்திடும் அண்ணல்பதம் துன்னுறும் - அன்னவாகனனான பிரமனது உலகிலும் செல்லும், அச்சுதர் தொல்லுலகில் மின்னெனவே செலும் - நாராயணனது

வைகுந்தத்திலும் மின்போல் விரைந்து செல்லும், வேள்கணையே - செவ்வேட்பெருமான் செலுத்திய அம்புகள்.

பொழிப்பு : செவ்வேள் விடுத்த அம்புகள் தடையின்றியே சுவர்க்கலோகம் சத்தியலோகம் வைகுந்த லோகம் ஆகிய எப்புவனத்திலும் மின்போல விரைந்து சென்றன.

மேதினீ கீண்டு விரைந்துபுகும்
பாதல மூடு பரந்துசெலும்
மூதகும் அண்ட முகட்டுருவும்
மாதிரம் ஏகுறும் வள்ளல்சரம். 93

பொருள் : மேதினிகீண்டுவிரைந்துபுகும் - புவியைப்பிளந்து கீழே விரைந்து செல்லும், பாதல மூடு பரந்துபுகும் - பாதல உலகங்கிலும் பரந்துசெல்லும், மூதகும் அண்ட முகட்டுருவும் - பழைய அண்டச்சுவரின் முகட்டை உருவிப்போகும், மாதிரம் ஏகுறும் - திக்கெல்லையெங்கும் செல்லும், வள்ளல்சரம் - சண்முகனாரது அம்புகள்.

பொழிப்பு : சண்முகன் சரங்கள் பூமியைப் பிளந்து பாதலங்களிலும் பரந்து செல்லும் அண்டமுகட்டையும் உருவும் திகாந்தரங்களிலும் செல்லும்.

மூவிரு செய்ய முகத்தொருவன்
ஏவிய செஞ்சரம் எங்குமுறா
மேவலர் தங்களை வீட்டிடும்வே
றேவர்கள் கண்ணும் இறுத்திலவே. 94

பொருள் : மூவிரு செய்ய முகத்தொருவன் - ஆறுமுகமுள்ள ஒப்பற்ற முருகன், ஏவியசெஞ்சரம் எங்கும் உறா - ஏவிய செம்மையான அம்புகள் எங்கும் சென்று, மேவலர்தங்களை வீட்டிடும் - அங்குள்ள பகை அவுணர்களை அழித்தன, வேறு ஏவர்கள் கண்ணும் இறுத்திலவே - வேறு எவர் மீதும் தீண்டி ஊறு செய்யாதே உலாவின.

பொழிப்பு : ஆறு முகப்பிரான் ஏவிய அம்புகள் எங்கும் போய் பகையசுரரைத் தப்பாதழித்தன மற்றெவரையும் ஊறு செய்தில.

ஆனனம் ஆறுள அண்ணல்சரம்
தானவர் சென்னிகள் தள்ளுதலும்
வானிடை போயின மாண்கதிர்கள்
மேனிம றைப்புறும் வெய்யவர்போல். **95**

பொருள் : ஆனனம் ஆறுள அண்ணல்சரம் - முகம் ஆறுள்ள தலைவர் விடுத்தசரங்கள், தானவர்சென்னிகள் தள்ளுதலும் - அவுணர் சிரங்களை வெட்டி வீழ்த்துதலும், வானிடை போயின - சிலதலைவானிலே வீசப்பட்டன அவை செல்லும் காட்சி, மாண்கதிர்கள் மேனிமறைப்புறும் வெய்யவர் போல் - மாண்புடைய சூரியசந்திரர்களின் உருவை மறைக்கின்ற கொடிய இராகுகேதுக்கள் போலத் தோன்றின.

பொழிப்பு : ஆறுமுகப்பிரானின் அம்புகள் வெட்டித்தள்ள விண்ணிலே பறந்த அவுணர் தலைகள் சூரிய சந்திரரை மறைக்கவரும் இராகு கேதுக்கள் போலத் தோன்றின.

வாளெழு வேல்பிற வாங்கினர்தந்
தோள்களை வாளி துணித்தெறிய
நீளிடை சென்று நிரந்திடுதங்
கேளிரை அட்டன கீழ்மையர்போல். **96**

பொருள் : வாள் எழுவேல் பிறவாங்கினர்தம் தோள்களை - வாளும் எழுவும் வேலும் பிறவுமாகியவை ஏந்தி ஓங்கியவர்கைகளை, வாளி துணித்து எறிய - அம்புகள் துண்டித்துவீச, நீளிடை சென்று அவை நீண்ட தூரம் விண்ணிற் சென்று, நிரந்திடு தம் கேளிரை அட்டன - உற்ற உறவினரான அவுணர்மேல் வீழ்ந்து அழிந்தன, அச்செயல் கீழ்மையர்போல் உள்றாரையே கொல்லும் கீழோர் செயல் போலிருந்தது.

பொழிப்பு : படைக்கலங்கள் ஏந்திய கைகளை அம்புகள் வெட்டிவீச அவை வானிற் சென்று உற்றாராகிய அவுணர்மேல் வீழ்ந்து கீழோர் போல அழித்தன.

மாசகல் வானக மாதிரவாய்
காசினீ வேலைகளத் தின்அகம்
பாசறை சுற்றிய பாடியெலாம்
ஆசற அட்டனன் அற்புதனே. 97

பொருள் : மாசகல் வானகம் மாதிரவாய் - மாசில்லாத வானகமும் திக்கெல்லைகளும் காசினிவேலைகளத்தினகம் - பூமி சமுத்திரம் போர்க்களம், பாசறை சுற்றிய பாடியெலாம் - பாசயைச் சூழ்ந்துள்ள பாடி ஆகிய எவ்விடங்களிலும், மாசுஅற அட்டனன் அற்புதனே - அவுனரெனும் இருளாகிய மாசு அறவே அற்றிட அழிந்தார் அற்புதராகிய குகப்பெருமான்.

பொழிப்பு : அற்புதராம் பெம்மான், வானம் திசைமுகம் பூதலம் சமுத்திரம் - யுத்தகளம் பாசறை சூழிடம் எங்கும் இருள் மாசுபோலச் செறிந்த அவுணப்படை முழுவதையும் அழித்து நீக்கினார்.

அட்டிடு கின்றுழி அம்புயன்மால்
ஒட்டுறு வாசவன் உள்மகிழாக்
கெட்டனர் தானவர் கேடில்துயர்
விட்டனம் என்று விளம்பினரே. 98

பொருள் : அட்டிடுகின்றுழி - அவ்வாறழித்தருளிய போது, அம்புயன் மால் ஒட்டுறு வாசவன் உண்மகிழா - பிரமாவிஷ்ணு சார்ந்துள்ள இந்திரன் ஆகியயாவரும் உளம்மகிழ்ந்து, கெட்டனர் தானவர் - அவுணர் அழிந்தனர், கேடில் - இனி எமக்குக் கேடில்லை, துயர்விட்டனம் என்று விளம்பினரே - நாம் துயர் நீங்கப்பெற்றோம் என்று கூறி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பொழிப்பு : பெம்மான் அவுணப்படையை அழித்தருளக்கண்ட அயனும் அரியும் இந்திரனும் உளம்மகழ்ந்து அவுணர்கெட்டனர், இனிக்கேடு இல்லை துயர் நீங்கியது என்று கூறி மகிழ்ச்சியாரவாரம் செய்தனர்.

அடைந்தனர்விம்மிதம் ஆங்கவுணர்
மிடைந்தது நோக்கினர்வேற்படையோன்
தடிந்தது காண்கிலர் தாரணிமேற்
கிடந்தது கண்டனர் கேசரரே. 99

பொருள் : கேசரர் - விண்ணவர்கள், ஆங்கு அவுணர்மிடைந்தது நோக்கினர் - அங்கே அவுணப்படைமிடைந்ததனை சற்று முன்கண்டனர், தடிந்தது காண்கிலர் - வேற்கைப்பெரும் பொருதவாற்றைக் காணப்பெற்றிலர், தாரணிமேற் கிடந்தது கண்டனர் - தானவர் யாவரும் வெட்டுண்டு வீழ்ந்து பிணமாகக்கிடப்பதையே ஒரு கணத்துள்ளே கண்டார்கள், அடைந்தனர்விம்மிதமே - அதனால் மிகவும் விம்மிதமுற்றனர்.

பொழிப்பு : கேசரர், பாசறையை அவுணர்சூழ்ந்ததைக்கண்டனர், மறு கணம் ஆகுமுன்னே அவர்கள் வெட்டுண்டு பிணமாய் வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர், வேலவன் பொருதவாற்றைக் கண்டிலர், எல்லாம் இமைப் பொழுதில் முடிந்ததால் அவர்கள் மிக விம்மிதராயினர்.

குறிப்பு : கேசரர் வானுலகவாசிகள்.

அமலரு பாரிடர் அவ்வவர்தந்
தலைவர்கள் ஏனையர் தானவர்தம்
மலிபடை சாய்த்து வயம்புனைவிற்
புலவனை ஆர்ப்பொடு போற்றினரே. 100

பொருள் : அலமருபாரிடர் - அலைவுற்ற பூதரும், ஆங்கவர்தம் தலைவர்கள் - பூதசேனாபதியினரும், ஏனையர் - மற்றுமுள்ள இலட்சத்தொன்பது வீரர்களும் ஆகிய யாவரும், தானவர்தம் மலிபடைசாய்த்து வயம்புனை - அசுரசேனையை அழித்து வெற்றிபெற்ற, விற்புலவனை ஆர்ப்பொடுபோற்றினர் - வில்லாண்மையின் வித்தகரானகுமரப்பெருமானை ஆனந்த ஆரவாரத்தோடு போற்றிப் புகழ்ந்தனர்.

பொழிப்பு : பூதரும் தலைவரும் ஏனைவீரரும் அவுணப்படையை அழித்துவெற்றி பூண்டவில்வித்தகரான வேலவரை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு போற்றிப் புகழ்ந்தனர்.

வள்ளல்ச ரம்பட வான்முகடு
கொள்ளுறு தானை குழாந்தொலைய
வெள்ளிடை யாயின வீண்ணவர்தம்
உள்ளக மாற்றவு வப்புறவே. 101

பொருள் : வள்ளல் சரம்பட - குமரப்பெருமானது பாணங்கள் தாக்கியதால், வான்முகடு கொள்ளுறுதானை குழாம் தொலைய - வான் முகடு வரை செறிந்துநின்ற தானவர் சேனையின் குழாம் அழிந்து பட்டதால் வெள்ளிடையாகின - எங்கும் வெள்ளிடமாயிற்று அதனால் விண்ணவர் தம் உள்ளகம் ஆற்ற உவப்புறவே - தேவர்களது உள்ளங்கள் மிகவும் உவப்புற்றன.

பொழிப்பு : முருகன் பாணங்கள் சென்றுதாக்க வான்முகடுவரை செறிந்து சூழ்ந்த தானவப்படை யாவும் அழிந்தது, அது கண்டவானவர்களின் உள்ளங்கள் எல்லாம் மிகமகிழ்வெய்தின.

அண்டக டாகம தப்புறமாய்க்
கொண்டிடு தானவர் கொள்கையிது
கண்டிறை வன்கழல் காணநெறி
உண்டினி யென்றனர் உண் மகிழ்வார். 102

பொருள் : அண்டகடாகமது அற்புறமாயக் கொண்டிடு தானவர்தானை - இவ்வண்டத்தினுள்ளே புகமுடியாது, கோளகைக்கு அப்புறம் நின்ற தானவர்கள் சேனையானது, கொள்கை இது கண்டு - முன்புகுந்த சேனை முடிவாகி முற்றும் வெற்றிடமான இதனைக்கண்டு, இறைவன் கழல்காண நெறி உண்டினி என்றனர் உள் மகிழ்வார் - நமதரசன் சூரனின் பாதங்களைக் காண்பதற்கு வழி உண்டாயிற்று இனிச்செல்வோம் என்று உளம்மகிழ்ந்துரைத்தார்.

பொழிப்பு : அண்டத்தின் புறம் நின்ற அவுணசேனையோர், நடந்தது கண்டு "நாம் இனி அரசனைக் காண வழிபிறந்தது என்று மனம் மகிழ்ந்து உரைத்தார்.

காற்றென அண்ட கடாகநெறி
தோற்றிய வாயில் தொடர்ந்துபுகா
மேற்றிகழ் தேர்கரி வெம்பரியின்
ஏற்றமொ டொல்லென ஏகினரால். 103

பொருள் : அண்டகடாக நெறி தோற்றியவாயில் காற்றென தொடர்ந்து புகா - அண்ட கோளகையிலே வழியாயுள்ள வாயிலூடாக வாயுவேகமாகவே தானையிலுள்ளோர் தொடர்ந்து சென்று, மேல் திகழ் தேர் கரி வெமபரியின் ஏற்றமொடு - மேம்பட்ட தேரும் யானையும் குதிரையும் ஆகிய ஊர்திகளில் பெருமிதமாக, ஏகினர் - சூர்முன் வந்தனர்.

பொழிப்பு : அண்டவாயிலூடாக விரைந்து யானை தேர் பரியெனும் ஊர்திகளுடன் வந்துசேர்ந்தனர்.

அந்நெறி ஏகியிவ் வண்டமெலாந்
துன்னினர் வான் புவி சூழ்ந்துவெளி
என்னது மில்லென ஈண்டினரால்
முன்னுற வந்து முடிந்தவர்போல். 104

பொருள் : அந்நெறி ஏகிஇவ்வண்டமெலாம் துன்னினர் - அவ்வழியில் வந்து இவ்வண்டம் முழுவதும் நிறைந்தார்கள், வான்புவி சூழ்ந்து வெளி என்னதும் இல்லென ஈண்டினர் - வானிலும் மண்ணிலும் சூழ்ந்து வெற்றிடம் சிறிதும் இல்லையெனமிடைந்தனர், முன்னுறவந்து முடிந்தவர் போல் - முன்னமேவந்து முடிந்தவர் நிலை போலவேயிருந்தது இவர்நிலையும்.

பொழிப்பு : அவ்வழிவந்த அசுரப்படையினர் விண்ணிலும் மண்ணிலும் எங்கும் இடையீடின்றிச் செறிந்து முன்வந்து முடிந்தவர்போலவே மொய்த்தனர்.

சூரன் எனப்படு தொல்லிறைவன்
பேரமர் ஆற்றிடு பெற்றியினால்
தேரிடை வந்துறு செய்கைதெரீஇ
ஆர்வமொ டேநெடி தார்த்தனரே. **105**

பொருள் : சூரன் எனப்படு தொல்லிறைவன் - சூரனாம் பழம் பெருமன்னன், பேரமர் ஆற்றிடு பெற்றினால் - பெரும் போர் புரியும் வண்ணமாக, தேரிடை வந்துறு செய்கைதெரீஇ - தேர்மேல்வந்துற்ற செயலைத் தெரிந்து, ஆர்வமொடே நெடிதார்த்தனர் - போரார்வத்தோடு பெரிதும் ஆரவாரித்தனர் தானவர்.

பொழிப்பு : அவுணப்படையினர், தலைவன் சூரன் போராடத்தேர் மீது வந்துள்ளமை தெரிந்து போர் விரும்பினராய் பெரிதும் ஆர்ப்பரித்தனர்.

ஆர்த்தனர் தம்முன் அடைந்துளர்தாம்
பேர்த்திடு கின்ற பிணக்கிரியாய்
ஈர்த்திடு சோரி இடைப்படுதல்
பார்த்தனர் சிந்தை பரிந்தனரே. **106**

பொருள் : ஆர்த்தவர் - ஆர்ப்பரித்த அவர்களே, தம்முன் அடைந்தவர்தாம் - தமக்கு முன் முனையிற் சென்றவர், பேர்த்திடுகின்ற பிணக்கிரியாய் - வேறாக எறியும் பிணமலைகளாகி, ஈர்த்திடு சோரியிடைப்படுதல் - இழுத்துச் செல்லும் இரத்தவெள்ளத்திடை அலைபடுதலை, பார்த்தனர் சிந்தை பரிந்தனர் - பார்த்தார்கள் - உள்ளம் பரிதாபப்பட்டார்கள்.

பொழிப்பு : ஆர்த்த அவுணர், அடுத்த கணமே, முன்வந்தோர் முடிந்து பிணமலையாகிச் சோரியில் இழுக்கப்படக் கண்டு மனம்பதைத்தார்கள்.

பரிந்தனர் நம்படை பட்டிடவே
புரிந்திடு வானொடு போர்புரியா
வீரைந்து லயங்கொடு மீடுமெனாத்
தெரிந்தனர் சிந்தனை தேற்றினரே. 107

பொருள் : பரிந்தவர் - பதைத்த அவர்கள், நம்படைபட்டிவே புரிந்திடுவானொடு போர்புரியா - நமது சேனையோர் அழியுமாறு பொருத பகைவனோடு போராடி, வயங்கொடு மீடும் எனா - வெற்றிகொண்டு மீளுவோம் என்று, தெரிந்தனர் சிந்தனை தேற்றினரே - துணிந்தவராகி மனத்தைத் தேற்றினார்கள்.

பொழிப்பு : முன்னோர் முடிந்தமைக்கு வருந்தியவர்கள், பின் அவர்களை அழித்த பகைவனை நாம் பொருது வென்று மீள்வம் என மனந்தெளிந்தார்.
மீளுதும் - மீள்தும் - மீடும் - மீளுவோம், தன்-பன்-வினைமுற்று.

தேற்றிடு கின்றுழி தேவரெலாம்
போற்றிட வீரர் புடைக்கணுற
ஆற்றல்கொள் பூதர்கள் ஆர்த்திடவே
தோற்றினன் ஈறொடு தோற்றமிலான். 108

பொருள் : தேற்றிடுகின்றுழி - தேற்றியவேளையில், தேவரெலாம் போற்றிட - தேவர்கள் சூழ்ந்து போற்றவும், வீரர் புடைக்கணுற - வீரர்கள் பாங்குறவும், ஆற்றல் கொள்பூதர்கள் ஆர்த்திடவே - வலிசான்ற பூதர்கள் ஆர்ப்பரிக்கவும், தோற்றினன் ஈறொடு தோற்றமிலாம் - ஈறும் முதலுமிலா நித்தன் முருகன் தோன்றினான்.

பொழிப்பு : அவுணர் தேற்றமுறும் போது, ஆதியந்தமில்லாத நித்தனாம் குமரன் தேவர் போற்றவும் வீரர் பாங்குறவும் பூதரார்க்கவும் நடுவே காணநின்றார்.

சேயுரு வாகிய சீர்முதல்வன்
மேயது கண்டு மிகச்சீறியன்
பாய்பரி யானை படைத்துமிலான்
ஏயிவ னேநம தெண்ணலனே. 109

பொருள் : சேயுருவாகிய சீர் முதல் வன் மேயது கண் டு - குழந்தையுருவான சீமிக்க குமரன் வெற்றி வீரராக விளங்கக்கண்டு, மிகச்சிறியன் - எதிர்நிற்பவனோ மிகச்சிறியனாயுள்ளான், பாய்பரியானை படைத்துமிலான் - அங்கமாகிய யானை குதிரையாகிய படையும் படைத்திலன், ஏ இவனோ நமது எண்ணலனே - ஏ இவனா நம்பகைவன் என எண்ணினர்.

பொழிப்பு : குழந்தைக் குமரனைப் பார்த்து, இவன் சிறுபிள்ளை, படைவகையும் கொண்டிலன், இவனா இந்த அழிதொழில் செய்தவன், இவனாபகைவன் என வியப்பும் இழ்ச்சியும் தோன்ற இவனா எண்ணலன் என்றார்.

குறிப்பு : எண்ணலன் - கணித்தற்குரியவனல்லனே என இகழ்ச்சியும் தோன்றும்.

ஆண்டகை மைந்தனிவ் வண்டமெலாம்
ஈண்டிய தானை இமைப்பொழுதின்
மாண்டிட அட்டனன் மற்றிதுதான்
ஈண்டிடும் அற்புத நீர்மையதே. 110

பொருள் : ஆண்டகை மைந்தன் - ஆண்மையுள்ள இப்பிள்ளை, இவ்வண்டமெலாம் ஈண்டியதானை - இவ்வண்டம் முழுவதும் செறிந்தசேனையை, இமைப்பொழுதில் மாண்டிட அட்டனன் - ஒருகணப்பொழுதில் மாளவே அழித்துவிட்டான், மற்றிதுதான் - பின்னே இச் செயல்தான் - ஈண்டிடும் அற்புத நீர்மையதே - ஈங்கு நாம் எண்ணவேண்டிய் அற்புத சம்பவமாகும்.

பொழிப்பு : இச்சிறுமைந்தன் அண்டம் முற்றும் நிறைந்த அவுணசேனையை ஒரு கணத்தில் முற்றும் அழித்தானே எவ்வாறு இதுவே எண்ணவேண்டும் அற்புதம்.

அன்னது நின்றிட அங்கவன்மேல்
மன்னவர் மன்னவன் வந்துபொரு
முன்னமர் ஆற்றி முடிக்குதும்யாம்
என்ன இயம்பினர் யாவருமே. 111

பொருள் : அன்னது நின்றிட - இவ்வாராய்ச்சி நிற்பதாக, அங்கு அவன் மேல் மன்னவர் மன்னவன் வந்து பொருமுன் - அத்தகைய பாலகனோடு மாமன்னன் சூரன் வந்து போர் தொடங்குமுன், யாம் அமராற்றிமுடிக்குதும் - நாமே போர் தொடுத்துப் பகை முடிப்போம், என்ன இயம்பினர்யாவரும் - என்று சொல்வாராய் யாவரும் முனைந்தார்.

பொழிப்பு : ஆய்வை நிறுத்துவோம், நம் அரசன் சூரன்வந்து அவனோடு போர்தொடங்குமுன் நாமே தொடங்கி முடிப்போ மெனயாவரும் முனைந்தனர்.

தற்பமொ டின்னன சாற்றியவண்
முற்படு தானவர் முக்கணுடைத்
தற்பரன் நல்கிய சண்முகனை
வற்புடன் ஆர்த்து வளைந்தனரால். 112

பொருள் : தற்பமொடு இன்னன சாற்றி அவண்முற்படுதானவர் - செருக்குடன் இவைகூறி அங்கு முனைந்த அவுணர்கள், முக்கணுடைத்தற்பரன் நல்கிய சண்முகனை - முக்கட்பகவராம் சிவன் தந்த சண்முகப் பிரானை, வற்புடன் ஆர்த்து வளைந்தனர் - வன்கண்ணராய் ஆர்த்துச் சூழ்ந்தார்கள்.

பொழிப்பு : அகந்தையோடு இவைகூறி அவுணர், சிவகுமாரராம் சண்முகப் பெருமானை வண்கண்ணராக ஆர்த்துச் சூழ்ந்தார்கள்.

வளைந்திடு காலையில் வானவர்கள்
உளைந்தனர் பூதர்கள் உட்கிமனந்
தளர்ந்தனர் வீரர் சலித்தனரால்
வீளைந்தது பேரமர் மீட்டுமெனா. 113

பொருள் : வளைந்திடு காலையில் - வளைத்தபோது, வானவர்கள் உளைந்தனர் - கண்டதேவர்கள் மிகக்கலங்கினர், பூதர்கள் உட்கிமனம் தளர்ந்தனர் - பூதர்கள் உறுதியிழந்து மனந்தளர்ந்தனர், வீரர் சலித்தனர் - வீரர்களும் மனம் சலிப்புற்றார், மீட்டும் பேரமர்விளைந்ததெனா - மீண்டும் பெரும் போர் மூண்டுவிட்டதே என்பதால் அவர்கள் அவ்வாறாயினர்.

பொழிப்பு : மீண்டும் பெரும் போர் மூண்டுள்ளதே என்றெண்ணி தேவரும் பூதரும் வீரரும் மிகவும் விசனமுற்றனர்.

ஐயன்ம ருத்தினை அத்துணை நோக்கிக்
கையணீ நெற்றி கடைக்குழை யாகி
வெய்யவர் தானைகள் மேவுழி யெல்லாம்
வையம்வி டுக்குதி வல்லையில் என்றான். 114

பொருள் : ஐயன் மருத்தினை அத்துணை நோக்கி - குமரப்பெருமான் அச்சமயம் பாகனாம் வாயுதேவனைப் பார்த்து, கையணி நெற்றி கடைக்குழைஆகிவெய்வர்தானைகள் மேவுழி எல்லாம் - இருபக்கமும் முன்னெற்றியும் கடைக் கூழையுமாகிக் கொடிய அவுணசேனை பொருந்துமிடமெங்கும், வல்லையில் வையம் விடுக்குதி என்றான் - விரைவாகத் தேரைச் செலுத்து என்றார்.

பொழிப்பு : அப்போது சுவாமி வாயுதேவனை நோக்கி, முன்னும் பின்னும் இருபக்கத்திலும் அசுர சேனை உள்ளஇடமெல்லாம் விரைந்து தேரோட்டுக என்றார்.

அட்டுறு நீப அலங்கல் புனைந்தோன்
கட்டுரை கொண்டு கரந்தொழு காலோன்
ஒட்டுறு நண்ணலர் உற்றுழி காணா
விட்டனன் அம்ம விறற்பரி மான்தேர். 115

பொருள் : அட்டுறுநீப அலங்கல் புனைந்தோன் கட்டுரை கொண்டு மட்டஞ்செய்த கடப்பமாலையரான முருகன் பணிஏற்று, கரந்தொழு காலோன் - கைதொழுத வாயுதேவன், ஒட்டுறு நண்ணலர் உற்றுழி காணா - முனை முகத்துற்ற பகையவுணர் சேர்விடம் நோக்கி, விறற்பரிமான்தேர் விட்டனன் - வலியகுதிரை பூண்டதேரை விரைந்து செலுத்தினான்.

பொழிப்பு : கடம்பன் கட்டளை ஏற்றுக் காலோன் கைதொழுது முனைபுகுந்த பகைவர் சேரிடமெங்கணும் தேரைச் செலுத்தினான்.

மண்ணிடை சென்றிடும் மாதிர நீந்தும்
விண்ணிடை சூழ்தரும் வேலையின் மீதாங்
கண்ணுறும் எப்படி கைதொழும் வானோர்
எண்ணினும் நாடரி தெந்தைபி ரான்தேர். 116

பொருள் : எந்தை பிரான் தேர் - எம்பிரான் ஊரும் தேரானது, மண்ணிடை சென்றிடும் - தரையிலும் ஓடும், மாதிரம் நீந்தும் - திகாந்தரமும் கடந்து செல்லும் - விண்டைசூழ்தரும் - வானிலும் வட்டமிடும், வேலையின் மீதாம் கண்ணுறும் - கடல்களின் மேலிடத்தும் காண்வரும், எப்படி கைதொழும் வானோர் எண்ணிலும் நாடரிது - எங்கும் எப்படிச் செல்கிறது என்று கைதொழும் இமையவர் கண்களாலும் காணக்கருத ஒண்ணாதிருந்தது.

பொழிப்பு : எம்பிரான் தேர் பூமி வானகம் திகாந்தரம் கடற்பரப்பு என எண்ணுமிடம் எங்கும் சென்றது இமையாத கண்ணரான தேவராலும் தெரியமுடியவில்லை.

சேயது காலை திறத்திற மாகி
மூயின தானவர் மொய்ம்புறு தானை
சாய்வுற ஓர்தொடை தன்னில் அநந்தம்
ஆயிர கோடிக ளாக்கணை தொட்டான். **117**

பொருள் : அதுகாலை சேய் - அப்போது சேயவனும், திறத்திறமாகி மூயின - பலவேறுதிறத்தினராய் மொய்த்த, தானவர்மொய்ம்புறுதானை - அவுணர்களது வலிமிக்கசேனை, சாய்வுற - சாய்ந்தழியுமாறு, ஓர் தொடை தன்னில் - ஒவ்வோர் தொடையிலும், அநந்தம் ஆயிரகோடிகளாக்கணை தொட்டான் - அநந்தமும் ஆயிரகோடியுமாகப் பாணங்கள் தொடுத்தார்.

பொழிப்பு : குமரப்பரனும் அப்போது பல்வேறு திறத்தினராய்ச் சூழ்ந்த அவுணர்படை மீது அநந்தம் ஆயிரகோடியாக ஒவ்வோர் தொடையிலும் அம்புகளைத் தூண்டினார்.

பரிந்தன சூழ்ந்தவர் பாணிகள் மொய்ம்பு
சிரந்துணி வுற்றன செம்புன லாழி
சொரிந்த பிணக்கிரி குற்றிய வற்றால்
நெரிந்தது வையம் நெளிந்தது நாகம். **118**

பொருள் : பரிந்தன சூழ்ந்தவர் பாணிகள் மொய்ம்பு - குமரன் தூண்டியகணைகளால் சூழ்ந்த அவுணரது கைகளும் தோள்களும் தறிந்தன, சிரம்துணிவுற்ற - தலைவெட்டுண்டன, செம்புனலாழி சொரிந்த - குருதிக்கடல் சொரிந்தன, பிணக்கிரிதுற்றிய - பிணங்கள் மலையாகக் குவிந்தன, அற்றால் - அதனால், நெரிந்தது வையம் - நிலம்நெரிந்தது, நாகம் நெளிந்தது - சுமக்கும் சேடனும் சுமைதாங்கமாட்டாது நெளிந்தான்.

பொழிப்பு : அம்புகள் பாய அவுணரது கரங்கள் புயங்கள் துணிந்தன சிரம்வீழ்ந்தன இரத்த வெள்ளம் பாய்ந்தது பிணமலை செறிந்தது பூமி நெரிந்தது சேடன் நெளிந்தான்.

பொய்கொலை ஆற்றிய பூரியருக்கார்
செய்குவர் நன்மை செறிந்துள ரேனுங்
கைகெழு ஞாளிக ளேகறித் துண்ட
மைகெழு தானவர் மாண்டிடும் யாக்கை. **119**

பொருள் : பொய் கொலை ஆற்றிய பூரியருக்கு ஆர்செய்குவர்நன்மை - பொய்யும் கொலையும் தொழிலாயுள்ள புல்லருக்கு ஆர்தான் நன்மை செய்வார், செறிந்துளரேனும் செறிந்த உற்றாரும் செய்யார், கைகெழு ஞானிகளே கறித்துண்ட - கையில் பற்றிக்கொண்டு சென்ற நாய்களே கடித்துத் தின்றன, மைகெழு தானவர்மாண்டிடும் யாக்கை - அகமும் புறமும் இருண்ட அவுணர்களின் செத்த உடம்பை உண்டன.

பொழிப்பு : கொலைபுரியும் புல்லருக்கு உற்றாரும் சமயத்தில் உதவார்கள், உதாரணம் வளர்த்த நன்றிமறவா நாயே கையிலே பற்றிச் சென்றநாயே அவர் பிணம் தின்றது.

ஒன்னலர் மீதின் உயிர்க்குயி ரானோன்
மின்னென வீசிய வெஞ்சர மாரி
பின்னுற முந்து பெயர்ந்திடு மென்றால்
அன்னவன் தேர்வீரை வார்கணிக் கின்றார். **120**

பொருள் : உயிர்குயிரானோன் - ஆன்ம நாயகனான முருகன், ஒன்னலர் மீதின் மின் என வீசிய வெஞ்சரமாரி - பகைவர் மீது மின்னல் வேகமாகத் தூண்டிய கொடிய அம்புமழை பின்னுற முந்து பெயர்ந்திடுமென்றால் - பிற்படுமாறுதான் அவற்றின் முன்பு ஓடுமாயின், அன்னவன் தேர்விரைவார் கணிக்கின்றார் - பிரான் ஊரும் தேரின் விரைவை யார் கணித்துக் கூறவல்லார்.

பொழிப்பு : மின்வேகமுள்ள முருகனம்பிலும் முந்தி அவன் தேர் ஓடுமாயின் அத் தேரின் வேகத்தை யார் அளவிடவல்லார்.

பரத்தினு மேதகு பண்ணவன் வார்வில்
கரத்தினை யும்விரை வாற்கரந் தூண்டுஞ்
சரத்தினை யுந்தடந் தேரினை யுங்கால்
உரத்தினை யும்புகழ் வார்புடை யுள்ளார். 121

பொருள் : பரத்தினும் மேதகு பண்ணவன்வார்விற்கரத்தினையும் - பராபரனாம் அறுமுகப்பெருமானது நீண்ட வில்லேந்திய கரத்தினையும், விரைவாற்கரந்தூண்டும் கரத்தினையும் - விரைவாகக் கரத்தால் ஏவப்படும் சரத்தினையும், தேரினையும் தேரின் திறலையும், கால் உரத்தினையும் - வாயுதேவனின் அறிவாற்றலையும் - புகழ்வார் புடையுள்ளார் - பாங்கு நின்று காண்பவர் ஒன்றிலொன்று மேலானது எனப்புகழ்வார்கள்.

பொழிப்பு : பாங்குநின்று பார்ப்பவர், முருகன் விற்கைத்திறம், தூண்டும் அம்பின் திறம் வேகத்தேரின் திறம், தூண்டும் பாகன்திறம் ஆகியவற்றில் வேகம் குறித்து மெச்சிப் புகழ்ந்தனர்.

வெவ்விச யப்படை வீட்டிடும் வாளிச்
செவ்விசை தேர்விசை நாடினர் செவ்வேள்
கைவிசை யோநெடுங் கால்விசை தானோ
வெவ்விசை யோவிசை என்றனர் வானோர். 122

பொருள் : வெவ்விசயப்படை வீட்டிடும் வாளிச் செவ்விசை தேர்விசை நாடினர் - கொடிய வெற்றிமிக்க அவுணப்படைகளை அழிக்கின்ற அம்புகளின் சிறந்த வேகம் தேரின் வேகம் அளவிட நோக்குவோர், செவ்வேள் கைவிசையோ - குமரப்பிரானின் கையின் விசையோ, நெடும்கால்விசைதானோ - சாரதிகாற்றோனின் விசையோ, எவ்விசையோ விசை என்றனர் வானோர் - இருவிசைகளில் எந்த வேகம் அதிவேகமென அறியாது ஐயுற்றார்கள் தேவர்கள்.

பொழிப்பு : அசுரப்படைகளை அழிக்கும் அம்புகளின் வேகம்தேரின் வேகம் இவற்றை நாடும் தேவர், முருகன் கைவேகமோ காலவன் வேகமோ மேல் என ஐயுற்றார்.

துய்யவன் வாளி துணித்திட வீரர்
கையொடு வானிடை செல்வ கணிப்பில்
ஐயிரு வட்டம ராப்புடை பற்ற
வெய்யவர் பற்பலர் வீண்ணெழல் போலும். 123

பொருள் : செய்யவன்வாளிதுணித்திட - சேந்தன்கணைகள் சேதிக்ச, வீரர்கையொடு வானிடை கணிப்பில் ஐயிருவட்டம் செல்வ - வீரர்கரங்களுடன் வானிலே எண்ணற்ற அழகிய கரிய பரிசைகள் பரந்து செல்வன, அராப்புடை பற்ற - பகையான பாம்பு பற்றிய நிலையில், வெய்யவர்பற்பலர் வீண் எழல்போலும் சூரியர் பற்பலர் வானிலே எழுந்துதோன்றுதல் போலும்.

பொழிப்பு : சேந்தன் கணை சேதிக்கப்பற்றியகையுடன் பரிசைகள் பலவானிலே செல்லுதல் இராகுவால் பற்றப்பட்டவாறு சூரியர் பலர் வானில் எழல் போலும்.

காலொரு பாங்கர் கழுத்தொரு பாங்கர்
வாலொரு பாங்கர் மருப்பொ டெருத்தம்
மேலொரு பாங்கர் வியன்கையொர் பாங்காத்
தோலீனம் இவ்வகை யேதுணி கின்ற. 124

பொருள் : காலொருபாங்கர்.....வியன்கை ஓர் பாங்கா - வெட்டுண்ட கால்கள், கழுத்துகள், வால்கள், கொம்புகள், தலைகள், சிறந்த துதிக்கைகள் எனும் அங்கங்கள் அங்கங்கு வெவ்வேறாக விழவே, தோலினம் - யானைகள் இவ்வகையே துணிவுற்ற - இவ்வாறு அங்கபங்கமாய் வீழ்ந்தன.

பொழிப்பு : யானைகள் கால்முதல் துதிக்கைவரை உறுப்புகள் துணியவீழ்ந்தன.

பல்லணம் அற்றன பன்முழு தற்ற
செல்லுறு தாளொடு சென்னியும் அற்ற
ஒல்லொலி அற்ற உரந்துணி வுற்ற
வல்லமர் நீந்துறு மாத்தொகை முற்றும். 125

பொருள் : வல்லமரர் நீந்திடும் மாத்தொகைமுற்றும் - வலிய போர்க்கடலை நீந்திக்கடக்க உதவும் குதிரைகள், பல்லணம் அற்ற - கலணையை இழந்தன, பல்முழுதற்ற - பல்முழுதும் இழந்தன, செல்லுறுதாளொடு சென்னியும் அற்ற - ஓடும் கால்களும் தலைகளும் இழந்தன, ஒல்லொலிஅற்ற - கனைப்பொலி இழந்தன, உரம்துணிவுற்ற - மார்பும் துண்டிக்கப்பட்டு மடிந்தன.

பொழிப்பு : போரில் வெற்றிபெற உதவும் குதிரைகளும் அணிகளும் அங்கங்களும் வெட்டுண்டு வீழ வீழ்ந்துவீடின.

மாழைகொள் வையம் மடிந்திட நேமி
ஆழிகொள் சோரியின் ஆழ்வன மேருச்
சூழுறும் வெய்யவர் தொல்புவி கீண்டே
கீழுறும் எல்லை கெழீஇயின போலும். 126

பொருள் : மாழை கொள்வையம் மடிந்திட - பொன்வண்ணத்தேர் சிதையவே, நேமி ஆழிகொள் சோரியின் ஆழ்வன - சில்லுகள் கடல் போன்ற குருதி வெள்ளத்திலே அமிழ்ந்துதல், மேருச்சூழுறும் வெய்யவர் - மேருவைவலம்வரும் சூரியர்கள், மேதினி கீண்டே கீழுறும் எல்லை கெழீஇயின போலும் - பூமியைக் கிழித்துக் கொண்டு கீழேயுள்ள பாதல எல்லைக்குச் செல்வது போலிருந்தது.

பொழிப்பு : பொற்றேர் சேதமாகவே அதன் உருளைகள் உதிர வெள்ளத்திலே மூழ்குதல் மேருவை வலம்வரும் சூரியர்கள் தரையைப் பிளந்து பாதலம் போவது போலும்.

ஏறிய தேர்களும் யானைகள் யாவுஞ்
சூறைகொள் வாசிக ளுந்துணி வுற்றே
வீறகல் வீரர்மி சைப்பட வீழ்ந்த
மாறவை ஆற்றிடும் வல்வினை யேபோல். **127**

பொருள் : ஏறிய தேர்களும் யானைகள் யாவும் - அவுணர் ஏறிவந்த தேர்களும் யானைகளும், சூறைகொள்வாசிகளும் துணிவுற்றே - சூறாவளிபோல் ஓடும் குதிரைகளுமாகிய ஊர்திகள் வெட்டுண்டு, வீறகல்வீரர் மிசைப்பட வீழ்ந்த - அடியுண்டு வலிபோய் வீழ்ந்த வீரர்மேல் வீழ்ந்து கிடந்தன, மாறு அவை ஆற்றிடும் வல்வினையேபோல் - பழிக்குப்பழிதீர்க்கும் வன்செயல் போல ஊர்ந்தார் மேலே ஊர்திகள் வீழ்ந்து கிடந்த

பொழிப்பு : புண்பட்டு மெலிந்து வீழ்ந்த வீரர் மேலே அவரூர்ந்துவந்த ஊர்திகள் தறிந்து முறிந்து கிடப்பது பழிதீர்க்கும் செயல் போலுளது.

ஞாலமும் வானமும் நண்ணலர் ஆவி
மாலொடு வாரி மடங்கல் உலைந்தான்
சாலுமி வற்கிது தாள்வலி யாற்கொல்
கால னெனப்புகல் கட்டுரை பெற்றான். **128**

பொருள் : ஞாலமும் வானமும் நண்ணலர் ஆவி - பூமியிலும் வானத்திலும் உள்ள பகைவரின் உயிரை, மடங்கல்மாலொடுவாரி உலைந்தான் - இயமன்மோகத்தோடு திரிந்து பறித்து உலைவுற்றான், சாலும் இவற்குஇது - தக்கதொழிலே இவனுக்குஇது, தாள்வலியாற்கொல் காலன் எனப்புகல் கட்டுரைபெற்றான் - அங்குமிங்கும் விரைந்தோடி வினைபுரியும் செயலினாற் போலும் காலன் எனக்காரணப் பெயர் பெற்றான்.

பொழிப்பு : ஞாலத்திலும் வானத்திலும் மடியும் அவுணர் உயிர்களை எல்லாம் ஆசையோடு ஓடியோடிக்கவர்ந்தான் அத்தகைய விடாமுயற்சி (தாள் - கால்) யின் வலிகண்டே காலன் என்றனர் போலும்.

எறிபடை யாவையும் ஏமம தாகச்
செறிபடை யாவையுஞ் சேயவன் ஏவால்
முறிபடு கின்ற முனிந்துவ ணப்புட்
கறிபட மெய்துணி கட்செவி யேபோல். 129

பொருள் : எறிபடையாவையும் ஏமமதாகச் செறிபடையாவையும் - ஏவப்பட்ட படையும் சேமமாயிருந்த படையுமெல்லாம், சேயவன் ஏவால் முறிபடுகின்ற - முருகவேளம்புகளால் முறிந்து முடிந்தன, முனிந்து உவணப்புள்கறிபட - கோபித்துக்கருடன் கறிக்க, மெய்துணி கட்செவியே போல் - உடம்பு துண்டமாகும் பாம்பு போல.

பொழிப்பு : எறிந்தபடையும் சேமப்படையும் முருகன் கணைகளாலே முறிந்தன, கோபித்துக் கருடன் கறித்தலால் பாம்பு துணிகளாய் வீழ்வது போன்றது அது.

முன்னுறு வார்கள் முரட்படை தூவிப்
பின்னுறு வார்பெய ராதுபு டைக்கண்
துன்னுறு வார்கள் எலாந்துணி வாக
மின்னென எங்கணும் வேள்கணை தூர்த்தான். 130

பொருள் : முரட்படை தூவி முன்னுறுவார்கள் - வலியபடைகளை ஏவியவராக முன்னே வருவாரும், பின்னுறுவார்கள் - பின்னே தொடர்ந்து வருவாரும், பெயராது புடைக்கண்துன்னுறு வார்கள் - விலகாது இருபுறமும் நெருங்கிவருவாருமாகிய, எலாம் துணிவாக - எல்லாப்படைவீரரும் வெட்டுண்டு வீழவே, எங்கணும் வேள் கணைவிட்டான - எத்திசையிலும் செல்ல வேட்பெருமான் கணைகள் ஏவினார்.

பொழிப்பு : படைகள் செலுத்தியவாறு விலகாது முன்பின் இருபக்கமான எத்திசையிலும் வரும் எவரும் துணிந்து மடியச் சேந்தன் பாணம் செலுத்தினார்.

சூலம தேகொல் கணிச்சிகொல் தொல்லை
மாலெறி நேமிகொல் வச்சிர மேகொல்
காலொடு சென்ற கனற்குழு வேகொல்
வெலது கொல்லென வேள்கணை விட்டான். 131

பொருள் : சூலமதேகொல் - இது சிவனது சூலமோ, கணிச்சிகொல் - மழுவோ, தொல்லை மால் எறி நேமிகொல் - பழைய திருமால் எறியும் சக்கரமோ, வச்சிரமே கொல் - இந்திரனது வச்சிரமோ, காலொடு சென்ற கனற்குழுவே கொல் - சூறைக் காற்றோடு வந்த தீயின் கூட்டமோ, வேலதுகொல் - முருகனது வேலோ, என எங்கனும் வேள்கணைவிட்டான் - இவை அம்பல்ல, அப்படைகளில் எதுவோ என்றுமருளுமாறு வெங்கணைகளை வேள் தூண்டினார்.

பொழிப்பு : இவை சமானியபாணமல்ல தனித்தனி திவ்விய சூலமும் மழுவும் நேமியும் வச்சிரமும் போலுளவே, யாதோ என ஏவரும் மருண்டனர்.

ஏவறு
மழைத்திடு மெய்யுடை மாற்றலர்கள்
இழைத்திடு மாய இயற்கைகளும்
விழுத்தக வீசும் விறற்படையும்
பிழைத்தன தாங்கள் பிழைத்திலரால். 132

பொருள் : மழைத்திடுமெய்யுடைமாற்றலர்கள் - தழைத்தமேனியுள்ள அவுணர்கள், இழைத்திடு மாய இயற்கைகளும் - செய்த மாயாவல்லபங்களும், விழுத்தகவீசும் விறற்படையும் - விழுப்பம்மிக வீசிய வலியபடைகளும், பிழைத்தன - முருகன் கணையால் பிழையாயினவேயன்றி, தாங்கள் பிழைத்திலரால் - தங்களில் ஏவரும் உயிர்பிழைத்துய்ந்திலர்.

பொழிப்பு : தடித்தமேனியரான தானவர் இயற்றியமாயமும் ஏவியபடைகளும் எல்லாம் முருகன் கணைமுன் பயன்படாது பிழைக்கத்தாமும் உயிர்பிழைத்திலர், மாண்டனர்.

முக்கணன் மாமகன் மொய்கணைகள்
தொக்கவர் யாக்கை துணித்திடலும்
மெய்க்கிடு பல்கலன் மீன்வீழல்போல்
திக்குல விப்படி சிந்தினவே. **133**

பொருள் : முக்கணன் மாமகன் மொய்கணைகள் - சிவகுமாரரின் செறிவுற்ற பாணங்கள், தொக்கவர் யாக்கை துணித்திடலும் - முனையிலே திரண்டபகைவர் உடலங்களை வெட்டுதலும், மெய்க்கு இடுபல்கலன் - அவர்மேனியில் அணிந்துள்ள பல அணிகளும், மீன் விழல்போல் திக்குலவிப்படி சிந்தினவே - உடுக்கள் உதிர்வது போலப்பலதிசையும் பரந்து தரையில் வீழ்ந்தன.

பொழிப்பு : முருகன் கணைகள் மொய்த்த அவுணர் அங்கங்களை அறுக்க அங்கு அணிந்திருந்த அணிகள் பலதிசையிலும் பறந்து படியிலே நட்சத்திரங்கள் விழுவது போல விழுந்தன.

அண்ணல் சரங்கள் அறுத்திடலும்
எண்ணலர் யாக்கைகள் இற்றவைதாம்
மண்ணை யளந்தயில் மாலெனவே
வீண்ணை யளந்து வீழுங்கினவே. **134**

பொருள் : அண்ணல் சரங்கள் அறுத்திடலும் - ஐயனின் அம்புகள் அறுத்து வீழ்த்தவே, எண்ணவர் யாக்கைகளிற்றவைதாம் - பகைவருடலிருந்து உதிர்ந்த அங்க அணிகள் தாம், மண்ணை அளந்து அயில் மாலெனவே - தரையை அளந்தும் உண்டும் ஒடுக்கிய திருமால் போல, விண்ணை அளந்து விழுங்கினவே - மண்ணையும் விண்ணையும் ஒருங்கே அளந்தும் விழுங்கியும் தம்முள் அடக்கின.

பொழிப்பு : வெட்டுண்ட அவுணர் அங்கமும் அணிகளும் வீழ்ந்து மாயன் மண்ணும் விண்ணும் அளந்தும் உண்டும் ஒடுக்கியது போல மூடிக்கொண்டன.

குறிப்பு : விண்ணையும் என்பதில் எச்ச உம்மை தொக்கது விகாரம்.

சூழுறு தானை துணிந்தஉடல்
ஏழெனும் நெமியும் எண்டகுபேர்
ஆழியும் வீண்னும் அடைத்திமையோர்
வாழுல கங்களை வெளவியவே. **135**

பொருள் : சூழுறுதானை துணிந்தவுடல் - சூழ்ந்த சேனையின் வெட்டுண்ட உடம்புகள், ஏழெனும் நேமியும் - ஏழுகடலும், எண்டகு பேராழியும் - எண்ணத்தகும் புறவாழிக்கடலும், விண்ணும் அடைத்து - வான வெளியையும் நிரப்பி, விண்ணோர் வாழுலகங்களை வெளவியவே - விண்ணோர் வாழ்உலகங்களையும் விழுங்கினவே.

பொழிப்பு : வெட்டுண்டு மடிந்த சேனையின் பிணங்கள் ஏழுகடலும் புறவாழியும் விசும்பும் நிறைந்து விண்ணவர் உலகங்களையும் விழுங்கியிட்டன.

காடி யிழந்து கவந்தமதாய்
ஆடின வெள்ளமும் ஆயிரமா
கோடி யதுண்டு குகன்கணையால்
வீடின எல்லை விதிக்குநர்யார். **136**

பொருள் : காடி இழந்து கவந்தமதாய் - தலையிழந்து குறையுடலமாய், ஆடினவெள்ளமும் ஆயிரமா கோடியது உண்டு - கூத்தாடிய உடல்களின் எண் ஆயிரம்மகாகோடி என்று உண்டெனில், குகன் கணையால் வீடின எல்லை விதிக்குநர்யார் - குமரன் கணையால் மடிந்த தானவரின் எண்ணிக்கையின் எல்லையாரறிந்து சொல்வார்.

பொழிப்பு : தலைபோய்க் குறையுடலாகக் கூத்தாடிய தானவர் சடலங்கள் ஆயிமாகோடியெனில் மாண்டவர் அளவை யார் அறிந்துரைப்பார். இயலாது.

குறிப்பு : காடி - மூளை, தானியாகுபெயராய்த்தலையைக் குறித்தது, கவந்தம் - குறையுடல்.

வீழுறு மாற்றலர் மெய்க்குருதி
ஆழிக ளாகி அகன்புவியில்
பூழைக ளோடு புகுந்துபிலம்
ஏழுள எல்லையும் ஈண்டியதே. **137**

பொருள் : வீழுறுமாற்றல் மெய்க்குருதி - மடிந்தபகைவரின் உடலுதிரம், ஆழிகளாகி - பலகடல்களாகி, அகன் புவியில் பூழைகளோடு புகுந்து - பூமியிலுள்ள பிலவழிகளிலே நுழைந்து சென்று, பிலம் ஏழுள எல்லையும் ஈண்டியதே - ஏழுபாதல எல்லைவரையும் செறிந்து நிரம்பியது.

பொழிப்பு : மாண்ட பகைப்படையின் குருதி நீர் நிலத்தில் பிலவழிபுகுந்து கீழறங்கிச் சென்று ஏழுபாதலங்களிலும் நிரம்பியது.

வேறு
பாதல எல்லை பரந்திடு சோரி
பூதல மீண்டு புகுந்து பராவி
ஓத நெடுங்கடல் ஓங்கிய வாபோல்
மாதிரம் எங்கும் மறைத்தன அன்றே. **138**

பொருள் : பாதல எல்லை பரநதிடு சோரி - பாதலங்களின் எல்லை எங்கும் பரந்த இரத்த வெள்ளம், பூதலம் மீண்டு புகுந்து பராவி - அங்கும் சேரஇட மின்மையால் பூதலத்துக்கே மீண்டு வெளியேறி, ஓதநெடுங்கடல் ஓங்கியவாபோல் - திரைமிக்க ஊழிப்பெரு வெள்ளம் கிளர்ந்தது போல, மாதிரம் எங்கும் மறைத்தன வன்றே - திக்கெல்லைகளை யெல்லாம் மூடி மறைத்தன.

மீனுடு வாக வீளாங்கிய திங்கள்
பானு மலர்ந்திடு பங்கய மாகச்
சோனைகொள் மாமுகில் தோணிய தாக
வானிமீர் செம்புனல் மாகடல் ஒக்கும். **139**

பொருள் : வான்நிமிர் செம்புனல் - வானளவும் நிறைந்த இரத்த வெள்ளமானது, மீன் உடுவாக - மீன்கள் நட்சத்திரமாக, விளங்கிய திங்கள் பானு - மேல்விளங்கும் சந்திர சூரியர்கள், மலர்ந்திடு பங்கயமாக - மலர்ந்த செந்தாமரை வெண்டாமரை மலர்களாக, சோனைகொள்மாமுகில் தோணியதாக - மழைமுகில் தோணியாக, மாகடல் ஒக்கும் - அமையத்தோன்றலால் பெருங்கடல் போலிருந்தது.

பொழிப்பு : உடுக்கள் மீன் சந்திர சூரியர் இருதாமரைமலர் முகில் தோணியாக உருவக அங்கமாக அமையக் குருதி வெள்ளம் கடல்போலத்தோன்றிற்று, உருவக உவமை.

மாசறு கூற்றனும் மற்றுளர் தாமுங்
கேசர ராகிய கிங்கரர் யாரும்
பாசம லைந்திடு பல்பிணி பற்றா
வீசினர் ஆருயிர் மீன்கள் கவர்ந்தார். 140

பொருள் : மாசறு கூற்றனும் மற்றுளர்தாமும் - குற்றமில்லாத இயமனும் மந்திரிபிரதானிகளும், கேசரராகிய கிங்கரர்தாமும் - வானில் சஞ்சரிக்கும் கிங்கரரும் ஆகிய எரும், பசம்மலைந்திடு பல்பிணிபற்றா - பாசத்தோடு கட்டியவலைகளைக் கொண்டு வீசினர் ஆருயிர் மீன்கள் கவர்ந்தார் - எங்கெங்கும் வீசி மாயும் அவுணர் உயிராகிய மீன்களைப்பிடித்தனர்.

பொழிப்பு : காலனும் சார்ந்தோரும் வலைவீசிமாயும் அசுரப்படை ஆவிமீனைக்கவர்ந்தார்.

பாலுறு கின்ற பணிக்கிறை நாப்பண்
மாலரு ளில்துயில் மாட்சிமை யென்ன
நீலுறு திங்கள் நிணங்கெழு செந்நீர்
வேலையின் மீது விளங்கிய தம்மா. 141

பொருள் : பால் உறுகின்ற பணிக்கிறை நாப்பண்மால் அருளில் துயில் மாட்சியதென்ன - பாற்கடலிலே பொருந்திய அநந்த

சயனத்தில் மாயன் அருளோடு அறிதுயில் கொள்ளுமாறு போலவே, நீல் உறுதிங்கள் நிணங்கெழுசெந்நீர் வேலையின் மீது விளங்கியது - நீலக்களங்கம் உள்ள சந்திரன் நிணம்படிந்தகுருதிக் கடல் மீது விளங்கியது, அம்மா - என்ன அழகு.

பொழிப்பு : பாற்கடலில் அநந்த சயனத்தில் மாயவன் அறிதுயில் கொள்காட்சி போலவே வெள்ளை நிணம்மூடிய சோரிக்கடல் மேல் நீலக்களங்கமுள்ள சந்திரன் விளங்கினான், அழகிது.

மட்டறு செம்புனல் வாரிதி நீந்தி
ஒட்டலர் யாக்கையின் ஓங்கல் அறுத்துத்
தட்டுறு செங்கதிர் சண்முக மேலோன்
விட்டிடு நேமியின் விண்மிசை செல்லும். **142**

பொருள் : மட்டறு செம்புனல் வாரிதி நீந்தி - வரம்பற்ற சோரிக்கடலை நீந்தியும், ஒட்டலர் யாக்கையின் ஓங்கல் அறுத்து - பகைவர் பிணமலையை ஊடுருவியும், தட்டுறு செங்கதிர் - தேர்த்தட்டிலிருந்து செல்லும் சூரியனானது, சண்முக மேலோன் - ஆறுமுகப்பெருமான் விட்டிடு நேமியின் விண்மிசை செல்லும் ஏவிய சக்கரப்படை போலவே விண்ணிலே சென்றது.

பொழிப்பு : தேர்மீது வானிற் செல்லும் செங்கதிரோன் குமரனால் ஏவப்பட்டுக் கடல் சுவறவும் கிரவுஞ்சம்பிளக்கவும் செய்த சக்கராயுதம் போலச் சென்றது.

குறிப்பு : கடல் சுவறவும் கிரவுஞ்சம் பிளக்கவும் செய்தது குமரன் வேலேயாம் ஒற்றுமைபற்றிச் சக்கரத்தின் செயலாக உவமேயத்திற்குப் பொருந்தக் கூறப்பட்டது உபசாரவழக்கு.

சிறைப்புற வுக்கருள் செய்திட மெய்யுன்
அறுப்பவன் என்ன அடைந்தனர் வீண்ணீர்
நெறிப்படு வானவர் நேரலர் யாக்கை
உறப்படு சோரிமெய் உற்றிடு நீரால். **143**

பொருள் : விண்ணில் நெறிப்படுவானவர் - வான்வழியே செல்லும் தேவர்கள், நேரலர் யாக்கை உறப்படு சோரி - துணிபடும் தானவர் உடற்குருதியானது, மெய்யுற்றிடு நீரால் - தெறித்துத் தம் மேனியெங்கும் படிந்த தன்மையாலே, சிறைப்புறவுக்கு அருள் செய்திட - (தன்னிடம் தஞ்சமடைந்த) சிறகுள்ள புறாவின் உயிர்காக்கக்கருதிக் கருணையினாலே, மெய்யூன் அறுப்பவன் என்ன அடைந்தனர் - (துலைகோலின் தட்டில் புறாவின் நிறை நிகராகத்) தனது உடம்பினை அரிந்திட்ட சிபிச்சக்கரவர்த்தியின் கோலத்தில் தோன்றினர்.

பொழிப்பு : வானிற்சென்ற தேவர் தம்மீது, துணிபட்டதானவரின் குருதி தெறித்துப்படிந்ததாலே புறாவைக்காக்கத் தனது தசை அரிந்திட்ட சிபியெனும் தயாள சீலன்போலத்தோன்றினர்.

ஆனதொ ரெல்லையில் அண்ட நிறைந்த
சேனைகள் வீழ்ந்தன செம்மல் சரத்தால்
ஊனுயிர் பூதமொ ழிந்தன முக்கண்
வானவன் மூரலின் மாய்ந்திடு மாபோல். **144**

பொருள் : ஆனதொர் எல்லையில் அண்டம் நிறைந்த சேனைகள் செம்மல்சரத்தால் வீழ்ந்தன - அச்சமயத்தில் அண்டம் நிறையச் செறிந்த அசுரசேனை முற்றும் சேந்தன் கணைகளால் சாய்ந்து மடிந்தன, ஊனுயிர்பூதம் ஒழிந்தன - ஊனோடு வாழும் உயிர்வகையும் மற்றுமுள்ள பூதகாரியமான அண்ட புவனங்களுமெல்லாம், முக்கண் வானவன் மூரலில் மாய்ந்திடுமாபோல் - முட்கட்பகவரும் பெருந்தேவருமான சிவனது புன்னகையாலே சர்வசங்கார காலத்தில் அழிவது போலவே தானவர்தானை அழிந்த.

பொழிப்பு : சங்கார காலத்தில் சங்கரன் புன்னகையால் உலகும் உயிரும் ஒருங்கழிவது போல குமரன் கணையால் அண்டம் நிறைந்த அசுரசேனைகள் முற்றும் முடிந்தன.

அண்டம் ஈங்கிது முற்றொருங் கீண்டிய அவுணர்
தண்ட மாய்தலும் ஏனைய அண்டங்கள் தம்மில்
கொண்ட தானைகள் பின்னரும் வந்திடக் குமரன்
கண்டு மற்றவை தொலைத்தனன் செலுத்திடு கணையால். **145**

பொருள் : அண்டம் ஈங்கிது முற்றொருங்கு ஈண்டிய - இங்கு இவ்வண்டம் முழுதும் ஒருங்கு செறிந்த, அவுணர்தண்டம் மாய்தலும் - அவுணர்சேனை அழிந்ததும், ஏனைய அண்டங்கள் தம்மில் கொண்ட தானைகள் பின்னரும் வந்திட - ஏனைய அண்டங்களிலிருந்து வந்து புகப் பெறாது நின்ற அசுர சேனைகள் பின்னும் தொடர்ந்து வர, குமரன்கண்டு - குமரன் அதனைக்கண்டு, செலுத்திடு கணையால் மற்றவை தொலைந்தனன் - செலுத்தும் அம்புகளாலே அவற்றையும் முற்றும் தொலைத்தருளினார்.

பொழிப்பு : அண்டமுற்றும் செறிந்த சேனை அழிந்தமை கண்டு ஏனை அண்டங்களிலிருந்து வந்த சேனைகள் மென்மேலும் இங்குவருவதை குமரன் கண்டு செலுத்தும் அம்புகளால் அவற்றையும் தொலைத்தார்.

அறுத்து வெம்முனைத் தானையை யாண்டுசெல் லனீகம்
மறித்தும் வந்துவந் தடைதரும் இவணென மனத்துட்
குறித்து வெங்கணை மாரியால் அண்டகோ ளகையின்
நெறித்த ரும்பெரு வாயிலை யடைத்தனன் நிமலன். **146**

பொருள் : வெம்முனைத்தானையை அறுத்து - கொடிய போர்முனை புகுந்த சேனையை அறுத்து, ஆண்டுசெல் அனிகம் - அங்குவரவுரியதாய்ப் புறத்துள்ள சேனையும், மறித்து வந்துவந்து அடைதரும் இவண் எனமனத்துட் குறித்து - மீண்டும் வந்துவந்து இங்கு சேருமே எனத்திருவுளத்தெண்ணி, வெங்கணைமாரியால் - செலுத்திய கொடிய கணைமழையாலே, அண்டகோளகையின் நெறித்தரும் பெருவாயிலை - அண்டகோளகையில் வருதற்கு வழியாயுள்ள பெரிய அண்டவாயிலை, நிமலன் அடைத்தனன் - மலரகிதரான பெருமான் அடைத்துவிட்டார்.

பொழிப்பு : முன்வந்த சேனையை அழித்தபின்னும் பிற அண்டங்களிலிருந்து வந்தசேனை உள்வரக்கண்டு, அவை மென் மேலும் வருமே என எண்ணிவராவகையாக, அண்டவாயிலைச் செலுத்தியகணைகளாலே காப்புச் செய்தார்.

ஆண்டு சென்னெறி மாற்றியே அண்ணல்வெங் கணையால்
மாண்ட தானைகள் சோரியுங் களேவர மலிவும்
நீண்ட பாதலங் கடற்புவி கொண்டுவான் நிமிர்ந்தே
ஈண்டு கின்றது கண்டனன் வரைபக எறிந்தோன். 147

பொருள் : வரைபக எறிந்தோன் - கிரவுஞ்சமலை பிளவாக வேல்விடுதபிரான், ஆண்டுசெல் நெறிமாற்றியே - ஆங்குவரும் அண்டவாயிலை அடைத்து, அண்ணல் வெங்கணையால் - பேராற்றலுள்ள கொடியகணைகளால், மாண்டதானையின் சோரியும் களேவரமலிவும் -மாண்டுகிடக்கும் சேனையின் குருதி நீரும் பிணமலைத்தொகையும் ஆகியவை, நீண்டபாதலம் கடற்புவி கொண்டுவான் நிமிர்ந்தே - ஆழ்ந்து நீண்டபாதலமும் கடல்சூழ்ந்தபுவியும் நிறைந்துகொண்டு வானிலும் மேனிமிர்ந்து, ஈண்டுகின்றது கண்டனன் - செறிந்திருபதைக்கண்டார்.

பொழிப்பு : குற்றமெறிந்த குமரன், அண்டவாயிலை அடைத்து, முன்னமேமடிந்த அவுணசேனையின் சோரியும் பிணமும் பாதலம் பூமி எங்கும் நிரம்பி விண்ணிலும் நிமிர்ந்து செறிந்திருப்பதைக் கண்டார்.

நெற்றி நாட்டத்தின் உலகெலாம் அட்டிடு நிமலன்
பெற்ற மாமகன் பன்னிரு விழிகளும் பிறங்கு
கற்றை வெஞ்சுடர் வடவைபோல் ஆக்கியக் கனத்தில்
உற்று நோக்கினான் எரிந்தன களேவரத் தோங்கல். 148

பொருள் : நெற்றி நாட்டத்தின் உலகெலாம் அட்டிடும் நிமலன் பெற்ற மாமகன் - நெற்றிக்கண்ணோக்கினாலே சர்வசங்காரம் செய்யும் சிவன்தந்த பெருமகனாம் குமரன், பன்னிருவிழிகளும் பிறங்கும்

கற்றை வெஞ்சுடர் வடவை போலாக்கி - தமக்குள்ள பன்னிரு திருக்கண்களும் ஒளிவிளங்கும் கற்றையான கொடிய தீக்கொழுந்துகள் கொண்ட வடவைத்தீயாகுமாறு சங்கற்பித்து, அக்கணத்தில் உற்றுநோக்கினன் - அதேகணத்தில் உற்றுப்பார்த்தார், களேவரத்தோங்கல் எரிந்தன - பிணமலைகளும் சோரிக்கடலும் எரிந்துபோயின.

பொழிப்பு : சிவகுமரன் தமது பன்னிரு கண்களையும் வடவைத்தீயாகுமாறு சங்கற்பித்து உற்றுநோகப் பிணமலைகளும் குருதிக்கடலும் எரிந்தொழிந்தன.

வெந்து நுண்டுகள் பட்டன களேவரம் விசும்பின்
உந்து சோரிநீர் வறந்தன மூவகை உலகு
முந்து போலவே அமைந்தன முளரியான் முகுந்தன்
இந்தி ராதியர் ஆர்த்தனர் குமரனை ஏத்தி. **149**

பொருள் : வெந்துநுண் துகள்பட்டன களேவரம் - பிணங்கள் எரிந்து நுண்ணிய சாம்பராயின, விசும்பில் உந்து சோரிநீர்வறந்த - வானளாவிய குருதிவெள்ளமும் வற்றியொழிந்தன அதனால், மூவகை உலகும் முந்துபோலவே அமைந்தன - மூவுலகமும் முன்பிருந்தவாறு மலினமின்றியே அமைந்தன அது கண்டு, முளரியான் முகுந்தன் இந்திராதியர் - மலரவனும் மாயவனும் இந்திரனும் முதலிய தேவர்கள், குமரனை ஏத்தி ஆர்த்தனர் - குமரனைப் போற்றி ஆர்ப்பரித்தனர்.

பொழிப்பு : பிணங்களும் குருதியும் சாம்பராகி எங்கும் புனிதமானதாலே மூவகை உலகும் முன்னிருந்தவாறேயாயிற்று, அதனைக்கண்ட அரியிரமேந்திராதி தேவர் மகிழ்ந்து குமரனைப் போற்றி செய்து ஆரவாரித்தனர்.

பாறு லாவரு களேவரத் தமலையும் படிமேல்
வீறு சோணித நீத்தமும் வேவுற விழித்து
நீற தாக்கினான் சூரனை அட்டிலன் நின்றான்
ஆறு மாமுகன் ஆடலை உன்னின னாங்கொல். 150

பொருள் : பாறு உலாவரு களேவரத்து அமலையும் - பருந்துகள் வட்டமிடும் பிணக்குவைகளும், விசும்பில் வீறுசோணித நித்தமும் - வானில் மிக்கெழுந்த சோரிக்டலும், வேவுற விழித்து நீறதாக்கினான் - வெந்துசாம்பராக நோக்கிய குமரநாயகன், சூரனை அட்டிலன் நின்றான் - ஒருங்கு அவற்றோடு சூரனையும் அழித்துவிடாமலே தவிர்த்துவிட்டார், ஆறுமாமுகன் ஆடலை உன்னினனாம்கொல் - எண்ணும்போது ஆறுமுகப்பிரான் சூரனோடு விளையாடுதலையும் ஆட்கொள்ள வேண்டிய செவ்வியையும் திருவுளம்கொண்டார் போலும்.

பொழிப்பு : பருந்துமொய்க்கும் பிணமும் குருதியும் தம் நோக்கால் நீறாகச் செய்து விட்டுச் சூரன் எஞ்சி நிற்க விடுத்தார், இ.ஃதேன் என்று சிந்தித்தால் அவனோடு விளையாடுவதையும் ஆட்கொள்ளும் செவ்வியையும் திருவுளம் கொண்டார் போலும்.

குறிப்பு : ஆடல் - விளையாட்டு, ஆள் + தல் - ஆடல் ஆளாகக் கொண்டருளல்.

ஆகும் எல்லையின் ஒல்லையின் அடுகளத் தடைந்த
சேகு நெஞ்சுடைச் சூரன் இத் திறமெலாந் தெரிந்து
மாக நீடுநந் தானையை அலைத்தமாற் றலனை
நாகர் தம்மொடு முடிக்குவன் யானென நவின்றான். 151

பொருள் : ஆகுமெல்லையில் ஒல்லையில் அடுகளத்து அடைந்த - அவ்வாறான சமயத்தில் விரைந்து போர்முனை சேர்ந்த, சேகுநெஞ்சுடைச் சூரன் இத்திறமெலாம் தெரிந்து - நெஞ்சுரங் கொண்ட சூரன் கள நிகழ்வுகளை நோக்கி, மாகம் நீடு நம் தானையை அலைத்த மாற்றலனை - வானளாவச் செறிந்தநம்

சேனையை அலைத்தழித பகைவனை, நாகர்தம் மொடு முடிக்குவன் யானென நவின்றான் - தேவர்களோடும் சேர ஒருக்கே அழிப்பேன் நானே என்று கூறினான்.

பொழிப்பு : அப்போது விரைந்துற்ற வன்னெஞ்சச் சூரன் அனைத்தையும் நோக்கி நம் பெரும்படையை அழித்த பகைவனைத் தேவர்களொடு ஒருங்கே நானே முடிப்பேன் என்று வீரியம் பேசினான்.

மாற்றம் இத்திறம் இசைத்திடும் அவுணர்கோன் மனத்தில்
சீற்ற மூண்டிட அமர்வினை குறித்தனன் திகிரிக்
காற்றின் ஒல்லைவந் தேற்றலும் மருத்துவன் கடவிப்
போற்று தேர்மிசை முருகனுஞ: சென்றெதிர் புகுந்தான். 152

பொருள் : மாற்றம் இத்திறம் இசைத்திடும் அவுணர்கோன் - இவ்வாறு வீரியம் பேசிய சூரன், மனத்தில் சீற்றம் மூண்டிட - மனதில் சினத்தீ முண்டெழ, அமர்வினை குறித்தனன் - போர் புரியும் கருத்தினனாக, திகிரிக் காற்றின் ஒல்லை வந்து ஏற்றலும் - சூறைக்காற்றுப் போலவிரைந்து பெருமானை எதிரேற்றலும், மருத்துவன் கடவிப் போற்றுதேர்மிசை முருகனும் - வாயுதேவன் போற்றிச் செலுத்தும் தேர்மீதமர்ந்த முருகப்பிரானும், சென்று எதிர்புகுந்தான் - சென்று சூரன் முன் புகுந்தருளினார்.

பொழிப்பு : வீரியம் பேசிய சூரன் வெஞ்சினம் மூளப்போரிடக் கருதிச் சூறை மாருதம் போல எதிரேற்றுவர வாயுதூண்டும் தேர் மீது குமார சுவாமியும் சூர்முன் சென்றார்.

புக்க காலையில் அறுமுகன் தோற்றமும் புடையின்
மிக்க பன்னிரு கரங்களும் வியன்படைக்கலனுந்
தொக்க வீரமும் வன்மையும் நோக்கியே தொலைத்
தக்க னேயென அவுணர்கோன் இன்னன சாற்றும். 153

பொருள் : புக்ககாலையில் - பெருமான் எதிர்ப்பட்ட போது, அறுமுகன் தோற்றமும் - ஆறுமுகனது தோற்றமும், புடையின்

மிக்க பன்னிருகரங்களும் வியன்படைக்கலனும் - மருங்கில் உள்ள மேலான பன்னிரு கரங்களும் தாங்கிய சிறந்த படைகளும், தொக்க வீரமும் வன்மையும் நோக்கியே - அமைந்துள்ள வீரமும் வலியும் என்றுள்ள, பெருமைகளைப் பார்த்து, அவுணர் கோன், தொல்லைத்தகனே என சூரனும், முன்னைய தக்கன் போலவே அகங்காரத்தோடு இவை கூறுவான்.

பொழிப்பு : முன்னாளிலிருந்த தக்கன் போலவே ஆறுமுகப்பிரானின் திருக்கோலத்தையும் படைக்கலன்களையும் நோக்கிச் சினமும் செருக்கும் மிகக் கூறுவான் சூரன்.

குறிப்பு : ஆட்ட ஆடும் பாவை நாம் - சூரனிடம் திரோதான சத்தியைத் தூண்டி ஆணவம் மிகச்செய்து அருளத்திருவுளம் பற்றினார்.

சிறந்த வான்மதி மிலைச்சினோன் அருள்புரி செயலால்
இறந்தி டேனியான் என்றுமிப் பெற்றியாய் இருப்பேன்
மறந்தும் என்னொடு பொருதிலர் தேவரும் மலைந்தே
இறந்து ளார்பலர் உணர்ந்திலை போலுநீ இதுவே. **154**

பொருள் : சிறந்த வான்மதி மிலைச்சினோன் அருள்புரிசெயலால் - "சிறுபாலனே, முன் சந்திரசேகரனான உன்தந்தை தந்தவரபலத்தால், இறந்திடேன் யான் - நான் இறப்பெய்தேன், என்றும் இப்பெற்றியாய் இருப்பேன் - என்றென்னும் இவ்வாறே வாழ்ந்திருப்பேன், மறந்தும் என்னொடு பொருதிலர் - மறந்து போயும் எவரும் என்னுடன் பொரவந்திலர், தேவரும் மலைந்தே இறந்துளார்பலர் - பலதேவரும் பொருது தோற்றுப்புறந்தந்தனர், நீ உணர்ந்திலை போலும் இதுவே - நீ இதனை அறிந்தாயில்லை போலும், இதுவே எனது மாண்பாகும்.

பொழிப்பு : பாலகனே உன் தந்தை சிவன் தந்த வரபலத்தால் நான் இறப்பதில்லை என்றும் இவ்வாறிருப்பேன். எவரும் மறந்தும் என்னோடு பொருவார் இல்லை. தேவரும்பலர் பொருது புறங்காட்டினர். இது எனது மாண்பாகும், நீ அறியாய் போலும்.

உள்ளம் நொந்துநொந் தென்பணி ஆற்றியே உலைந்து
தள்ளு றுஞ்சுரர் மொழியினைச் சரதமென் றுன்னிப்
பிள்ளை மென்மதி யாலிவண் வந்தனை பெரிதும்
அள்ள லுற்றுழிப் புகுந்திடுங் கயமுனி யதுபோல். 155

பொருள் : உள்ளம் நொந்து நொந்து என்பணி ஆற்றியே - மனம்வருந்தியவாறே எனது ஏவல்எல்லாம் செய்தே, உலைந்து தள்ளுறும் சுரர் மொழியினைச் சரதமென்று உன்னி - உலைபவராய் நிலை கெட்ட தேவர்கள் கூறியதை உண்மையென எண்ணி, பிள்ளைமென்மதியால் இவண் வந்தனை - சிறுபிள்ளையே உனது குழந்தைப் புத்தியால், இவண்வந்தனை - இங்கு என்னெதிர் பொரவந்தனை, பெரிதும் அள்ளல் உற்றுழிப் புகுந்திடும் கயமுனியதுபோல் - உன் செய்கையானது, பெரியபுதைகுழியாகிய சேறுள்ள இடத்தில் புகுந்து சிக்கிய யானைக்கன்றின் நிலைபோலாகும், மீளரிது.

பொழிப்பு : எனது ஏவல்களையே செய்தவாறும் மனம்வருந்தியும் உழலும் நிலை கெட்ட தேவர் சொல்லை உண்மையென எண்ணிவந்தாய் பிள்ளாய்! உன் செயல் புதை குழிச்சேற்றில் கால் புதைந்த யானைக்கன்று தன்சுமையால் தான் பகைவிலங்கிலிருந்தும் தப்பமுடியாது தவிக்கும் அதுபோல் நீயும் சிக்குண்டாய். கயமுனி - யானைக்கன்று.

உடைப்பெ ரும்படை செறுத்தனை பாலனென் றுன்னை
விடுப்ப தில்லையால் வெரிந்து கொடுக்கினும் விரைவில்
படுப்பன் வானவர் தொகையுடன் பாரிடர் தமையுங்
கெடுப்ப னென்றனன் தன்பெருங் கிளையுடன் கெடுவான். 156

பொருள் : உடைப்பெரும்படை செறுத்தனை - என்னுடைய பெரும்படையை அழித்தாய், பாலன் என்றுன்னை விடுப்பதில்லை - பெருங்குற்றம், சிறுபிள்ளையென்று உன்னைத் தண்டியாது விடேன், வெரிநது கொடுக்கினும் விரைவிற்படுப்பன் - நீ அஞ்சி முதுகு காட்டி ஓடினாலும் விரைவிலே கொல்வேன், வானவர் தொகையுடன்

பாரிடர் தமையும் கெடுப்பன் - தேவர் தொகையோடு பூதசேனையையும் அழிப்பேன் என்றனன், தன்பெருங்கிளையுடன் கெடுவான் - தன்பெருங்கிளஞரோடு தானும் ஒருங்கே அழியும் விதிவழி நின்ற சூரன் பின்விளைவறியாது பிதற்றினான்.

பொழிப்பு : என்பெரும்படை அழித்து என்னையும் அழிக்க நினைவாய் இப்பிழையால் உன்னைப்பிள்ளையென்றுவிடேன்; புறங்காட்டினாலும் தருமம் பாராது கொல்வேன்; உன்னைத் தூண்டிப்பின்னிற்கும் தேவரையும் துணைவந்த பூதரையும் அழிப்பேன் என்றான் தான் தன் கிளையோடு அழியும் விதிவசமான சூரன்.

குறிப்பு : "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்" எனும் தமிழ்மறை சரதம் என்பதைச் சூரன் செய்கை சொல்லில் உணர வைத்தார்.

வெம்பு ரைத்தொழிற் கொருவனாங் கயவநீ வெறிதே
வம்பு ரைத்தனை யாவதொன் றில்லைநின் மார்பஞ்
செம்பு ரைப்பட யாம்விடு கின்றதோர் திறல்வாய்
அம்பு ரைத்திடு மாறுனக் கென்றனன் அமலன். 157

பொருள் : வெம்புரைத் தொழிற்கு ஒருவனாம் கயவ - (சூருரைக்கு முருகன் மாறுரை கூறுவாராய்) கொடிய பயனில் செயலுக்கு நிகரில்லாதவனான கயவனே, நீவெறிதேவம்பு உரைத்தனை - நீவீணான புதுமையானவற்றைக் கூறினாய், ஆவதொன்றில்லை ஆனால் நீகூறியவாறு ஒன்றுமே ஆகுமாறில்லை பேசிப்பயனில்லை, நின்மார்பம் செம்புரைப்பட - சூரனே உன் மார்பு பிளந்து சிவந்த புண்ணாகுமாறு, யாம்விடுகின்றதோர் திறல்வாய் அம்பு - நாம் ஏவும் ஆற்றல் மிக்க அம்பொன்றே, உனக்குமாறு உரைத்திடும் என்றனன் அமலன் - உனக்கு உரிய பதிலைக் கூறக்காணுவாய் என்றருளினார் நிமலரான பெருமான்.

பொழிப்பு : தீவினையாளனுக்கு உதாரணமான கீழ்மகனே, வீண்வம்புரைத்தாய், ஏதும் ஆகாது, பேசிப்பயனில்லை, நின்மார்பு புண்ணாக நாம் ஏவும் ஏவே பதில் கூறும் காண்க என்றார் குமரநாயகன்.

ஆரும் நேரிலாப் புங்கவன் சேயின தறையச்
சூர னாகிய அவுணர்கோன் துண்ணெனச் செயிர்த்து
மேரு நேர்வதோர் வரிசிலை யெடுத்துவீண் ணிழியும்
வாரிபோன்றிடு நாணினை ஏற்றியே வளைத்தான். 158

பொருள் : ஆரும்நேரிலாப்புங்கவன் சேய் இன்னது அறைய - எவரும் ஒப்பிலியான சிவகுமாரர் இவ்வாறுரைப்ப, சூரனாகிய அவுணர்கோன் துண்ணெனச் செயிர்த்து, சூரனாம் அசுரேந்திரன் வேகமாகக் கோபித்து, மேரு நேர்வதோர்வரிசிலை எடுத்து - மேரு மலை போலும் வரிசிலை ஒன்றேந்தி, விண்ணிழியும் வாரிபோன்றிடு நாணினை ஏற்றியே வளைத்தான் - விண்ணிலிருந்து வீழும் நீரொழுக்குப் போன்ற நாணை வில்லை வளைத்துப் பூட்டினான்.

பொழிப்பு : ஒப்பிலியாம் ஈசனின் மகன் கூற்றைக் கேட்ட சூரன் கோபாவேசனாக மேருபோலும் வில்லேந்திவளைத்து நாணேற்றினான். ஏற்றிவளைத்தான் வளைத்தேற்றினான்.

வளைத்த டங்கிரி புரைவதோர் சிலையினை வயத்தால்
வளைத்த செய்கையைக் காண்டலும் பாரிடர் வானோர்
வளைத்த டங்கடல் வந்திடு நஞ்சொடு மலைவான்
வளைத்த தன்மைபோல் அவுணர்தம் முதல்வனை வளைத்தார். 159

பொருள் : வளைத்தடங்கிரி புரைவதோர்சிலையினை வயத்தால் வளைத்த செய்கையை - வளைந்துள்ள சக்கரவாளமலை போன்ற பெருஞ்சிலையை வலியினால் வளைத்த செயலினை, காண்டலும் பாரிடர் - கண்டபூதர்கள், வளைத்தடங்கடல் நஞ்சொடு மலைவான்வானோர் - வளைந்த பாற்கடலிலெழுந்த ஆலகாலத்தோடு பொருதிட வானவர்கள், வளைத்த செய்கைபோல் - சூழ்ந்து சென்றது போல், அவுணர்தம்முதல்வனை வளைத்தார் - அசுரத்தலைவனான சூரனைச் சூழ்ந்து எதிர்த்தார்.

பொழிப்பு : சூரன்வில்வளைக்கக்கண்ட பூதர், முன்கடலிலெழுந்த ஆலத்தின் எதிர் சென்ற வானவர் போல வளைத்தனர்.

குறிப்பு : வளைதடம் கிரிவல்லொற்றுமிக்கது விகாரம். ஆலகாலத்தை எதிர்த்த அமரர் மெலிந்தவாறு சூரனை எதிர்த்த பாரிடரும் மெலிவர் என்பது உவமக்குறிப்பு.

சிலையை வீசினர் கொடுமரம் வீசினர் செறிமூ
வீலையை வீசினர் படையெலாம் வீசினர் எதிர்ந்தார்
உலைய வீசியே அடல்செயும் மும்மதத் துவாவை
வலையை வீசியே பிணித்திட மதித்துளார் என்ன. 160

பொருள் : சிலையை வீசினர் - சூழ்ந்த பூதர் சூர் மீது மலைகளை வீசினர், கொடுமரம் வீசினர் - பெரியமரங்களை வீசினர், செறிமூவிலையை வீசினர் - முத்தலைச் சூலத்தை வீசினர், படையெலாம் வீசினர் - வேறுபல படைகளையும் வீசினர், எதிர்ந்தார் உலைய வீசியே அடல் செயும் - எதிர்த்தவர் உலையும்படிதாக்கிக் கொலை புரியும், மும்மதத்து உவாவை - மும் மதம் பொழியும் யானையை, வலையை வீசியே பிணித்திட மதித்துளார் என்ன - சாதாரண வலை வீசிப்பிடித்துக்கட்ட நினைத்தார் செயல் போல்.

பொழிப்பு : மலையும் மரமும் சூலமும் பிறபடையும் வீசி எதிர்த்த பாரிடர் செய்கை, அலைகொலை புரியும் மதயானையைச் சிறுவலை வீசிப்பிடிக்க முயல்வது போலும் செயலாகும் முடியாது.

கண்டு மற்றதை அவுணர்கோன் வில்லுமிழ் கணையாங்
கொண்டல் நுண்குளி சிதறியே கணங்கள் கூட்டறுத்து
வீண்டு லாவர அரக்கினாற் குயின் றதோர் வெற்பைச்
சண்ட வெங்கனல் உடைப்பது போலவே தடிந்தான். 161

பொருள் : அவுணர் கோன் மற்றது கண்டு - சூரன் அதனைக்கண்டு, வில்லுழிழ்கணையாம் கொண்டல் நுண்டுளி சிதறியே - வில்லிலிருந்து ஏவப்படும் அம்புமழை தூவி, கணங்கள் கூட்டறுத்து - பூதகணக்கூட்டத்தை அறுத்து, வீண்டுலாவர அரக்கினாற் குயின்றதோர் வெற்பை - விண்ணளாவ மெழுகினாற் செய்யப்பட மலையை, சண்ட வெங்கனல் உடைப்பது போலவே தடிந்தான் - பெருந்தீயானது பற்றி அழித்தது போலவே நிர் மூலமாக்கினான்.

பொழிப்பு : வானளாவச் செய்த மெழுகுமலையைப் பெருந்தீப்பற்றி ஒழிப்பது போல சூரன் பூதப்பெரும்படையாவையும் வில்லிலிருந்து அம்புமழை பொழிந்து அழிவு செய்தான்.

வீடி னார்களும் புயங்கரந் துணிந்திட மெலிந்து
வாடி னார்களும் மயங்கிவீழ்ந் தார்களும் வல்லே
ஓடி னார்களும் ஓடவும் வெருவிவேற் றுருவங்
கூடி னார்களும் ஆயினர் பாரிடக் குழாத்தோர். 162

பொருள் : வீடினார்களும் - பாணங்கள் தாக்க இறந்தவரும், புயம்கரம் துணிந்திட மெலிந்துவாடினார்களும் - தோளும் கையும் வெட்டுண்டு சோர்ந்தவரும், மயங்கி வீழ்ந்தார்களும் - மயங்கி விழுந்தவரும், வல்லே ஓடினார்களும் - பயந்து விரைந் தோடியவரும், ஓடவும் வெருவிவேற்றுருவம் கூடினார்களும், ஆயினர் பாரிடக் குழாத்தோர் - ஓடவும் பயந்து வேறுவடிவங்கொண்டவருமாகப் பாரிடக் குழாத்திலுள்ளவர்கள் முனையழிந்தனர்.

பொழிப்பு : சூரன்கணைகளால் அடிபட்டு இறந்தவரும் அங்கமிழந்து மெலிந்தவரும், மயங்கியவரும், ஓடியவரும் ஓடவும் பயந்து வேறுருவமானவருமாக பூதப்படை தொலைவுற்றது.

பூதர் சாய்ந்துழி இலக்கரோ டெண்மரும் பொருவில்
தேவ நாயகன் தூதனுஞ் சூழ்ந்துடன் மேவிக்
கோதை தூங்கிய கொடுமர மாயின குனித்துச்
சோதி வான்கணை மாரிகள் அவுணன்மேற் சொரிந்தார். 163

பொருள் : பூதர் சாய்ந்துழி - பூதப்படை தொலைதலும், இலக்கரோடு எண்மரும் - கண்ட இலக்கத்தெட்டு வீரரும், பொருவில் வேதநாயகன் தூதனும் உடன் சூழ்ந்து - நிகரில்லாத வேதநாதனாம் குமரன் தூதரும் (வீரவாகு) ஆகியயாவரும் ஒருங்கு சூழ்ந்து, மேவி - சூரனெதிர்வந்து, கோதை தூங்கிய கொடுமரமாயின குனித்து - மாலையணிந்த விற்களைவளைத்து, சோதிவான்கணை அவுணன் மேல் சொரிந்தார் - சுடர்விடும் அம்புமழையைச் சூரன் மீது சொரிந்தனர்.

பொழிப்பு : பூதர் சாய்ந்த போது, இலக்கத்தொன்பது வீரரும் ஒருங்கே சூரனைச் சூழ்ந்து எதிர்த்து வில்வளைத்து அம்புமழையை அவன் மேற்பொழிந்தனர்.

சொரிந்த வெங்கணை எங்கணும் வருதலுஞ் சூரன்
தெரிந்து வாளிதொட்டறுக்கலன் நின்றதோர் செவ்வி
விரைந்து வந்தவை ஆங்கவன் மெய்ப்பட விளிந்து
பரிந்து போயின செய்ததொன் றில்லைஅப் பகழி. 164

பொருள் : சொரிந்த வெங்கணை எங்கணும் வருதலும் - ஏவிய தீவாய்க்கணைகள் எப்புறமும் சூழ்ந்துவருதலும், சூரன் தெரிந்தும் மற்றது வாளி தொட்டு அறுக்கலன் - சூரன் அது கண்டும் அம்பேவி அறுக்க எண்ணாது, நின்ற தோர் செவ்வி - வாளாநிற்கும் சமயத்தில், விரைந்து வந்தவை ஆங்கவன் மெய்ப்பட - விரைந்துவந்த அக்கணைகள் அச்சூரனது வச்சிர மேனியிற் பட்ட மாத்திரமே, விளிந்து பரிந்து போயின - முனை ஒடிந்து வலியழிந்து போனதேயன்றி, அப்பகழி செய்தது ஒன்றில்லை - அவ்வம்புகள் அவனுக்கு செய்யவல்ல ஊறுபாடு ஒன்றுமில்லை.

பொழிப்பு : வீரர் விடுத்த அம்புவரக்கண்டும் சூரன் எதிரம்பு தொடாமலே சும்மா நின்றான், அவைவந்து வச்சிர மேனியிற்பட்டு முனைமுறிந்து வீழ்ந்ததேயன்றி அவனுக்கு ஒரு சிறிதும் ஊறு செய்யமாட்டாவாயின.

பரப்பின் ஈண்டிய வீரர்தஞ் சூழ்ச்சியைப் பாரா
உரப்பி ஆவலங் கொட்டியே வெகுளிகொண் டொருதன்
பொருப்பு நேர்சிலை குனித்துவெஞ் சிலீமுகம் பொழிந்து
திருப்பெ ருந்தடந் தேரொடுஞ் சாரிகை திரிந்தான். 165

பொருள் : பரப்பின் ஈட்டிய வீரர்தம் சூழ்ச்சியைப் பாரா - பரந்து செறிந்து வந்த வீரர்களின் சூழ்வைப்பார்த்து, உரப்பி ஆவலங்கொட்டியே வெகுளிகொண்டு - உறுக்கி ஆரவாரித்துச் சினந்து, வெஞ்சிலீமுகம் பொழிந்து - கொடிய அம்புகளை

மழைபோலப் பொழிந்து, திருத்தகும் தடம் தேரோடும் சாரிகை திரிந்தான் - திருத்தக்க தடந்தேருடன் சாரிவந்தான்.

பொழிப்பு : சூழ்ந்த இலக்கத் தொன்மரின் சூழ்வினை நோக்கி, உறுக்கி ஆர்த்து முனிவு கொண்டு தன்வில்லை வளைத்து அம்புபொழிந்து தேருடன் சாரிவந்தான் சூரன்.

நூறு கோடிவெஞ் சரமொரு தொடையுற நூக்கிச்
சூறை யாமென வட்டணை திரிந்துளான் சூழ்வோர்
மாறு தூண்டிய சரங்களைத் துணித்துமற் றவர்கள்
ஏறு தேருடன் பிடித்திடு சிலைகளை இறுத்தான். 166

பொருள் : நூறுகோடி வெஞ்சரம் ஒரு தொடையுற நூக்கி - நூறுகோடி கொடுஞ்சரம் ஒவ்வோர் தொடையிலே தூண்டி, சூறையாமெனவட்டணை திரிந்துளான் - சூறைமாருதம் போல வட்டணை சூழ்ந்து சாரிவந்த சூரபதுமன், சூழ்வோர்மாறுதூண்டிய சரங்களைத்துணித்து - எதிராகச் செலுத்திய கணைகளைத்துணித்து வீழ்த்தி, மற்றவர்கள் ஏறுதேருடன் பிடித்திடு சிலைகளை இறுத்தான் மற்றும் அவர் ஏறியதேர் பிடித்தவில் என்பவற்றையும் சிதைத்தான்.

பொழிப்பு : ஓர்தொடையில் நூறு கோடி அம்புகளை ஏவி, சூறைமாருதமாகச் சாரிதிரிந்து சூரன், சூழ்ந்தவீரர் ஏவிய சரங்களை அறுத்து தேரும் வில்லும் சிதைத்தான்.

வையம் வில்லுடன் இற்றபின் மற்றவர் மலைவு
செய்ய உன்னுமுன் மொய்ம்பினும் உரத்தினுஞ் சிரத்துங்
கையி னுங்கணை ஆயிர மாயிரங் கடுந்தீப்
பெய்யும் மாரிபோற் செறித்தனன் செம்புனல் பெருக. 167

பொருள் : வையம் வில்லுடன் இற்றபின் மற்றவர் மலைவுசெய்ய உன்னுமுன் - தேரும் வில்லும் இழந்தபின் அவர்கள் மேலும் பொருவதற்கு எண்ணுமுன்னே, மொய்ம்பினும் உரத்தினும் சிரத்தும் கையிலும் அவ்வீரரின் தோளிலும் மார்பிலும் தலையிலும்

கைகளிலும் தைக்க ஆயிரம் ஆயிரம் - பல்லாயிரமாக, கடுந்தீப்பெய்யமாரிபோல் கணை - கொடிய தீமழைபொழியும் முகில் போல அம்புகளை செம்புயல் பெருகச் செறித்தனள் - மேனியில் குருதி பெருகும்படி அழுந்தச் செலுத்தினான்.

பொழிப்பு : தேர்வில் இழந்தவீரர் மேலும் போர் புரியச் சித்தமாகும் முன்பே அவர்கள் உறுப்புக்கள் தோறும் அக்கினி மழை பொழிவதுபோல கொடியகணைகள் அழுந்துமாறு ஏவிச் செறிவித்தான்.

புரந்த னிற்செறி கறையினார் புலம்புகொள் மனத்தார்
உரந்த ளார்ந்துளார் வில்வலி இழந்துளார் ஒருங்கே
இரிந்து நீங்கினர் இலக்கரோ டெண்மரும் இளவல்
திருந்த லன்தடந் தேர்மிசைப் பாய்ந்தனன் சினத்தால். 168

பொருள் : புரந்தனிற் செறிகறையினார் - உடம்பில் உதிரம் ஒழுகலுற்றவராய், புலம்புகொள் மனத்தார் - தளாந்த மனத்தராய், உரந்தளர்ந்துளார் - ஊக்கம் குறைந்தவராய், வில்வலி இழந்துளார் - வில்லாண்மை குன்றியவராய், ஒருங்கே இரிந்து நீங்கினர் இலக்கரோடு எண்மரும் - ஒருங்கே இலக்கத்தெட்டு வீரரும் பின்வாங்கி முனை முகத்தினின்று நீங்கினர், இளவல் -வீரவாகுதேவர், சினத்தால் திருத்தலன் நடந்தேர்மிசைப்பாய்ந்தனன் - அப்போது சினங்கொண்டு திருந்தாத சூரனது தேர்மேற்பாய்ந்தேறினார்.

பொழிப்பு : இலட்ச்த்தெண்மரும் மேனியெங்கும் குருதியாகப்புண்பட்டு ஊக்கமும் வில்வலியுமிழந்து மெலிந்து பின்வாங்கி ஒருங்கே முனையிலிருந்து நீங்கவும், வீரவாகுதளராது சினத்தோடு சூரன் தேர்மேற் பாய்ந்தார்.

பாய்ந்து திண்டிறல் மொய்ம்பினான் பரமன்முன் னளித்த
நாந்த கந்தனை யுரீஇக்கொடு நண்ணலர்க் கிறைவன்
ஏந்து வில்லினைத் துணித்தனன் துணித்தலும் எரிபோல்
காய்ந்து வெய்யவன் புடைத்தனன் உரத்திலோர் கரத்தால். 169

பொருள் : திண்டிறல் மொய்பினான் பாய்ந்து - வலியும் வீரமுமுள்ள வீரவாகுதேவர் பாய்ந்து, பரமன்முன் அளித்த நாந்தகந்தனை உரீஇக்கொடு - முன்னாள் சிவபிரான் தந்தவாளை உறைகழித்து எடுத்து, நண்ணலர்க்கிறைவன் ஏந்து வில்வினைத் துணித்தனன். - பகைவர் தலைவன் சூரன்பிடித்தவில்லைத் தறித்தார், துணித்தலும் எரிபோல் காய்ந்து வெய்யவன் - தறித்தபோது தீபோலக் கோபித்து வெய்யசூரன், உரத்தில் ஓர் கரத்தாற் புடைத்தனன் - தேவர் மார்பிலே ஒரு கரத்தாலே அடித்தான்.

பொழிப்பு : பாய்ந்த வீரர் சிவன்தரப் பெற்ற உடைவாளை எடுத்து சூரனின் கைவில்லை இருதுணியாக வெட்டினார். சினந்த சூரன் வீரர் மார்பில் கையால் அடித்தான்.

அங்கை கொண்டுசூர் ஒருபுடை புடைத்தலும் அகலம்
பொங்கு சோணிதம் அலைத்திட வாகையம் புயத்துச்
சிங்கம் வீழ்ந்தயர் வுற்றிடத் தூதனைச் செகுத்தல்
இங்கெ னக்கடா தென்றெடுத் தும்பரின் எறிந்தான். 170

பொருள் : அங்கைகொண்டு சூர் ஒருபுடை புடைத்தலும் - சூரன்கையாலே ஓரடி அடித்தலும், வாகையம்புயத்துச் சிங்கம் அகலம் பொங்குசோணிதம் அலைத்திட வீழ்ந்து அயர்வுற்றிட - வீரவாகு எனும் சிங்கேறு மார்பிலே பொங்கும் குருதி கொப்பளிக்க வீழ்ந்து சோர்தலும், தூதனைச் செகுத்தல் இங்கெனக்கு அடாது என்றெடுத்து - தூதனாக முன்வந்த ஒருவனைக்கொல்லுதல் இவ்விடத்து தகாது என்று எடுத்து, உம்பரில் எறிந்தான் - மேலே வீசினான்.

பொழிப்பு : சூரனின் ஓரடியால் மார்பில் குருதிகொப்பளிக்க வீரவாகு எனும் சிங்கேறு வீழ்ந்து மயக்கமுற அவன் தூதனைக் கொல்வதடாதென்று எடுத்துமேலெறிந்தான்.

எறிந்த காலையில் விண்ணிடைப் படர்ந்திடும் ஏந்தல்
அறிந்து மீண்டுசென் றாறுமா முகன் புடை அடைந்தான்
தறிந்து போகிய சிலையினைத் தரைமிசை யிட்டுச்
சிறந்த தோர்தனு எடுத்தனன் தீயரில் தீயோன். 171

பொருள் : எறிந்ந்த காலையில் உம்பரில் படர்ந்திடும் ஏந்தல் - எறியப்பட்டு வானிலே சென்ற வீரவாகு, அறிந்து மீண்டு சென்று ஆறுமாமுகன் புடை அடைந்தான் - உணர்வுபெற்று மீண்டுபோய் அறுமுகப்பிரான் பாங்கடைந்தார், தறிந்து போகிய சிலையினைத் தரை மிசையிட்டு - தறிபட்டவில்லைத்தரையிலே போட்டுவிட்டு, சிறந்ததோர் தனு எடுத்தனன் தீயரில் தீயோன் - தீயவரிலெல்லாம் தீயனான சூரன் சிறந்ததோர் சேமவில்லைக் கையில் எடுத்தான்.

பொழிப்பு : எறியப்பட்ட வீரவாகு உணர்வு பெற்று மீண்டு சண்முகப் பெருமான் பாங்குபோயினார் தீயசூரன் வெட்டுண்டவில்லை வீசிவிட்டுச் சிறந்ததோர் சேமவில்லைக் கைக்கொண்டான்.

அத்த மேல்கிரி உதயமால் வரைத்துணை யான்று
நித்த லும்பிறர்க் கிடர்செய்து மேருவின் ஈண்டு
கொத்து நீடுபல் குவடுடைத் தாகியே குமரன்
சத்தி யாலட நின்றவெற் பனையதத் தனுவே. 172

பொருள் : அத்த மேல் கிரி உதயமால் வரைத்துணை ஆன்றே - மேற்றிசை அத்தகிரியும் கீழ்த்திசை உதயகிரியும் வரை அகன்றதாய், நித்தலும் பிறர்க்கிடர்செய்து என்றும் பிறருக்கு இடரே செய்வதாய், மேருவில் நீண்டு - மாமேரு வரையிலும் நீண்டதாய், கொத்து நீடுபல் குவடு உடைத்தாகியே - குழுவாக நீண்டுள்ள பலசிகரமும் கொண்டதாய், குமரன் சத்தியால் அடநின்ற வெற்பு அனையது அத்தனு - குமரப்பெருமான் தமது சத்திவேலால் அழிக்குமாறு நின்ற கிரவுஞ்சம் எனும் மாயமலைக்கு ஒப்பான தெனத்தக்கது எடுத்த அச்சேமவில்லானது.

பொழிப்பு : உதயாஸ்தமவரைவரை அகன்று, பிறருக்கிடர்விளைத்து மேருமலையிலும் நீண்டு உயர்ந்த பல சிகரமுடையதாய் நின்றமாயமலை கிரவுஞ்சம் அது குமரன் வேலால் அழிந்து பொடியானது அம்மலை போன்றது இச்சிலையாம்.

வனைக ருங்கழல் அவுணனக் கார்முகம் வளைத்துப்
புனலும் அங்கியும் காலுடன் ஒலிப்பது புரைய
எனைவ ருந்துளக் குறும்வகை நாணொலி யெடுத்தான்
அனைய பெற்றியை அறிந்தனன் அமரரை அளித்தோன். 173

பொருள் : வனைகருங்கழல் அவுணன் அக்கார்முகம் வளைத்து - கட்டிய பெரியவீரக்கழலுடைய சூரன் அவ்வில்லை வளைத்து, புனலும் அங்கியும் காலுடன் ஒலிப்பது புரைய - கடைநாளில் நீரும் தீயும் காற்றும் எழுந்து ஆர்க்கும் ஒலிபோல, எனைவரும் துளக்குறும்வகை நாணொலி எடுத்தான் - எவர்களும் பயந்து நடுங்கும்படி நாணொலியை எழுப்பினான், அனைய பெற்றியை அறிந்தனன் அமரரை அளித்தோன் - அத்தன்மையைத் தெரிந்தருளினார் தேவர்களைக்காக்க வந்த கந்தசுவாமியார்.

பொழிப்பு : தேவசேனாபதியாம் பெம்மான், சூரன்தன்வில்லை வளைத்து எவரும் அஞ்சி நடுங்குமாறு நாணொலி எடுத்ததனைத் திருவுளங்கொண்டார்.

புயலின் மேனியன் புவிநுகர் காலையும் போதன்
துயிலு மாலையுந் துஞ்சிய வேலையுந் தொலையா
தியலு மண்டத்தின் அடி முடி உருவிநின் றிலங்குங்
கயிலை போல்வதோர் நெடுஞ்சிலை எடுத்தனன் கந்தன். 174

பொருள் : புயலின் மேனியன் புவிநுகர்காலையும் - கார்வண்ணமாயன் உலகை உண்டொழிக்கும் ஊழியிலும், போதன் துயிலும் மாலையும் துஞ்சிய வேலையும் - மலர்மேலயன் உறங்கும் கற்பத்திலும் முடிந்திடும் காலத்திலும் தொலையாது - தான் அழிவற்றதாக நின்று, இயலும் அண்டத்தின் அடிமுடி உருவிநின்று இலங்கும் -

அண்டகடாகத்தின் கீழும் மேலும் உருவி நின்று தாங்கி விளங்கும், கயிலை போல்வதோர் நெடுஞ்சிலை எடுத்தனன் கந்தன் - என்றுமுள்ள ஈசன்வீற்றிருக்கையாம் கயிலைமலைக்கு நிகரான வில்லைக்கந்தசுவாமி எடுத்தார்.

பொழிப்பு : உலகம் ஓடுங்கும் அரிபிரமர் கற்பாந்தத்திலும் அழிவிலதாகி அண்டகோளத்தின் மேலும் கீழும் உருவிநின்றுதாங்கி விளங்கும் கயிலை மலையே போல்வதோர் சிலையைக் கந்தசுவாமியார் கைக்கொண்டார்.

வாரி யாலுல கழிந்திடும் எல்லையின் மருங்கின்
மேரு வாதியாம் வரைகளுங் கிரிகளும் விசும்பில்
காரு மேலுள உலகமும் அமரருங் கயிலைச்
சாரல் சூழ்தல்போல் விரவியார்ப் புடையதத் தனுவே. 175

பொருள் : வாரியால் உலகு அழிந்திடுகாலையில் - சலப்பிரளயத்தால் உலகம் அழிந்திடும் கற்பாந்தத்தில், மருங்கில் மேருவாதியாம் வரைகளும் - மேருமலையும் மற்றும் குல மலைகளும், கிரிகளும் - மற்றுமுள்ளவரைகளும், விசும்பிற்காரும் - வானிலுள்ள முகில்களும், மேலுள உலகமும் அமரரும் - மேலேயுள்ள உலகங்களும் தேவரும், கயிலைச்சாரல் சூழ்தல் போல் - கயிலையே சார்பாம் இடமென்று ஓலமிட்டுச் சூழ்வதுபோல, விரவி ஆர்ப்புடையது அத்தனுவே - தஞ்சமென்று செறிந்தவர் ஓலமும் அஞ்சலெனும் அபய ஒலியுடன் இணைந்து பேரொலி காட்டுவதுபோலப்பேரொலியுள்ளது கந்தனெடுத்த அத்தனுவாம்.

பொழிப்பு : சலப்பிரளயத்தில் எல்லாமலைகளும் உலகங்களும் தேவராதியருமான சராசரம் யாவும் சார்பாமிடமென்று சார்ந்து ஓலமிடும் ஒலிபோலத் தானும் தஞ்சமாய் அபயமளித்து ஆரவாரம் மிக்கதாயுளது அவ்வில்லாகும்.

நீட்ட மிக்கதோர் அப்பெருஞ் சிலையினை நிமலன்
தோட்டு ணைக்கொடு வாங்கியேழ் வகையினால் தோன்றும்
ஈட்ட மிக்கபல் லுயிர்களும் வான்உரும் ஏற்றின்
கூட்ட மாகியே யார்த்தெனக் குணத்தொலி கொண்டான். 176

பொருள் : நிமலன் நீட்டம்மிக்கதோர் சிலையினை - அமலரான அறுமுகன் நீண்ட அவ்வில்லை, தோட்டுணைக் கொடுவாங்கி - விற்றலை தோளளவிலே தொடவளைத்து, குணத்தொலி கொண்டான் - நாணோதை எழுப்பினார், ஏழ்வகையினால் தோன்றும் ஈட்டம் மிக்க பல்லுயிர்களும் - ஏழ்வகையான பிறப்பினாலே தோன்றி நிறைந்துள்ள பல உயிர்களும், வானுருமேற்றின் கூட்டமாகியே ஆர்த்தென - வானத்துள்ள இடியேற்றின் தன்மையாக உருமாறி நின்று முழங்கும் முழக்கொலிபோலிந்தது (அந்நாணோசைஎன்க).

பொழிப்பு : குமரப்பிரான் வில்லை வளைத்து நாணோதையை எழுப்பினார்; அவ்வொலி பலவாம் உயிரும் இடியேறாக உருமாறி நின்றொலித்தது போன்றது.

குணங்கொள் பேரொலி கோடலும் இரலையூர் கொற்றத்
தணங்கு லாவரு கார்முகங் குழைத்துளை யவதி
இணங்க வாக்கியே பத்துநூ றாயிரத் திரட்டி
கணங்கொள் வெஞ்சரம் உகைத்தனன் கூற்றினுங் கடியோன். 177

பொருள் : குணங்கொள் பேரொலிகோடலும் - முருகன் நாணொலி எடுத்தலும், கூற்றினும் கடியோன் - இயமனிலும் கடிய சூரன், இரலையூர் கொற்றத்து அணங்கு, மானை ஊர்தியாக்கிய கொற்றவையாம் தெய்வம், உலாவரு கார்முகம் குழைத்துளை அவதி இணங்கவாங்கியே - நின்றுநடிக்கும் வில்லின் தலை காதுத்தொளையைத் தீண்டுமளவாகவுறப் பொருந்தவளைத்து, பத்து நூறாயிரத் திரட்டி - இருபதிலட்சம் ஏண் கொண்ட கணங்கொள்வெஞ்சரம் உகைத்தனன் - பெருந்திரளான பாணங்களை ஏவினான்.

பொழிப்பு : முருகன் வில் நாணோசை எடுக்க கூற்றனிலும் கடிய சூரன் தன்வில்லையும் செவிதொடவளைத்து இருபது லட்சம் அம்புகளை எய்தான்.

வான்ம றைத்தன மாதிரம் மறைத்தன மதிதோய்
மீன்ம றைத்தன கதிர்வெயின் மறைத்தன வேலை
தான்ம றைத்தன வசுமதி மறைத்தன தருவார்
கான்ம றைத்தன வரைகளை மறைத்தன கணைகள். 178

பொருள் : வான்மறைத்தன - வானத்தை மறைத்தன, மாதிரம் மறைத்தன - திக்குகளை மறைத்தன, மதிதோய் மீன்மறைத்தன - சந்திரன் தழுவும் உடுக்களையும் மறைத்தன, கதிர்வெயில் மறைத்தன - சூரிய ஒளியை மறைத்தன, வேலைதான் மறைத்தன - சமுத்திரங்களை மறைத்தன, வசுமதி மறைத்தன - பூமியையும் மறைத்தன, தருவார் கான் மறைத்தன மரங்கள் நிறைந்த காடுகளை மறைந்தன. வரைகளை மறைத்தன மலைகளையும் மறைந்தன கணைகள் - சூர் செலுத்திய பாணங்கள்.

பொழிப்பு : சூர் ஏவிய சரங்கள், வானம் திசை மதி உடு வெயில் கடல் பூமி காடுகளை மறைத்தன.

காற்றிற் செல்வன அங்கியிற் படர்வன கடுங்கட்
கூற்றிற் கொல்வன வேலைவெவ் விடத்தினுங் கொடிய
பாற்றுத் தொல்சிறை உள்ளன ப.றலை படைத்த
நாற்றிக் கும்புகழ் அவுணர்கோன் ஆணையின் நடப்ப. 179

பொருள் : காற்றில் செல்வன - வாயுவேகத்தில் ஏகும், அங்கியிற்படர்வன - தீயைப் போல் வெம்மையாய் செல்லும், கடுங்கண் கூற்றில் கொல்வன - தறுகணனான காலன் போலக்கொல்லும், வேலை வெவ்விடத்தினும் கொடிய - கடலிலெழும் நஞ்சினும் கொடிய, பாற்றுத்தொல் சிறை உள்ளன - பருந்து போலச்சிறகுடையன, ப.றலை படைத்த - பல நுதிகளைக் கொண்டன, நாற்றிக்கும் புகழ் அவுணர் கோன் ஆணையிற் செல்வ - எத்திசையோரும் புகழும் சூரனின் ஆணைபோலத்தடையிலாது செல்வன.

பொழிப்பு : காற்றுவேகம், கனல்வெம்மை, கூற்றன்கொலை, நஞ்சின் கொடுமை, பருந்து போற்கிறகு, பல முனைகள் உடையனவாகி சூராணை போல எங்கும் சென்றன.

பருமி தத்தன மேருவைத் துளைப்பன பாங்கர்
வரைகி ழிப்பன அண்டமும் பொதுப்பன வான்தோய்
உருமி டிக்குலம் பொருவன வீடத்தையுண் டுமிழ்வ
கருமை பெற்றன சேயன தீயவன் கணைகள். 180

பொருள் : பருமிதத்தன - பேருருவின, மேருவைத்துளைப்பன - மேருமலையையும் பிளப்பன, பாங்கர் வரைகிழிப்பன - மலைகளைக் கிழிப்பன, அண்டமும் - அண்டச்சுவரையும், பொதுப்ப - போழுவன, வான்தோய் உருமிடக்குலம் பொருவன - வானிலுள்ள இடிமின்னலையும் போல்வன, விடத்தை உண்டு உமிழ்வன - நஞ்சூட்டப்பட்டுப் பாயுமிடத்தில் உமிழ்வன, கரியன சேயன - கரியநிறம் செந்நிறம் உள்ளன, தீயவன்கணைகள் - தீய சூரன் ஏவியசரங்கள்.

பொழிப்பு : தீயசூர்விட்டசரங்கள், பெரியன, மேருமற்றை மலைகளையும் அண்டகோளத்தையும் துளைப்பன, இடியேறு போல்வன, தீற்றிய நஞ்சை உமிழ்வன, கருமை செம்மை வண்ணம் பெற்றனவாயிருந்தன.

துண்ட வெண்பிறை வாளெயிற் றவுணர்கோன் தூரப்ப
மிண்டு வெங்கணை யெங்கணுஞ் செறிந்திட வீண்ணோர்
கண்டு கண்ணனை அணுகியே கைகுலைத் தைய
உண்டு கொல்நமக் கொளிப்பதோர் இடமென உரைத்தார். 181

பொருள் : பிறைத்துண்ட வாளெயிற்றவுணர் கோன் தூரப்ப மிண்டும் வெங்கணை - பிறைத்துண்டனைய வக்கிரதந்தமுடைய அவுணர்தலைவன் தூண்டமிடைந்த கொடியகணைகள், எங்கணும் செறிந்திட விண்ணோர்கண்டு - எங்கும் செறிந்தமையைத்தேவர்கள் கண்டு அஞ்சி, கண்ணனை அடைந்து - மாயவனிடம் போய்,

கைவிதிர்த்து - கைகள் பதறியவராய், ஐய நமக்கு ஒளிப்பதோர் இடம் உண்டுகொல் என உரைத்தார் - இச்சரங்களிலிருந்து தப்பி நாமுய்வதற்கு ஒளித்திருக்க ஓரிடம் உண்டோ உரைப்பாயாக என உரைத்தார்.

பொழிப்பு : சூரன் துரந்த அம்புகள் சுற்றுமுற்றும் செறியக்கண்ட அமரர், திருமாலிடம்போய் ஐயனே நாம் உயிர்பிழைக்க ஓடிஒளிக்க ஓரிடம் உண்டோ என வேண்டினர்.

உரைத்து ளார்க்குமால் மாறுரை வழங்குமுன் ஒள்வேல்
கரத்தி லேந்திய குமரவேள் இன்னது கண்ணால்
தெரித்து வெங்கனல் வீடுத்திடும் ஊதைபோற் சிலதன்
சரத்தினாலவன் தூண்டிய கணையெலாந் தடிந்தான். **182**

பொருள் : உரைத்துளார்க்குமால் மாறுரை வழங்குமுன் - ஒளிப்பிடம் வேண்டிய விண்ணவர்க்கு மால் விடைகூறுமுன்பே, ஒள்வேல் கரத்திலேந்திய குமரவேள் இன்னது கண்ணால் தெரித்து - ஒளிகாலும் வேலைக்கரத்திலே தாங்கிய குமரவேள் இவற்றைக் கண்ணாலே கண்டருளி, வெங்கனல் விடுத்திடும் ஊதைபோல் - பெருந்தீயால் வேகமாகத் தூண்டப்படும் வாயுபோலவே, தன்சிலசரத்தினால் - தாம் செலுத்திய சிலபாணங்களால், அவன்தூண்டிய கணை எலாம் தடிந்தான் - சூரனாலே தூவப்பட்ட இருபதிலட்சம் சரங்களையும் துண்டித்து விட்டார்.

பொழிப்பு : விண்ணவர்க்கு விஷ்ணுவிடையிறுக்கு முன்னமே, வேற்கரத்திறைவர் நிலைமைகண்டு தாம் தூண்டிய சிலசரங்களால் சூரனம்புகளைத் துண்டித்தார்.

மடிந்தி டும்படி மாற்றலன் சரங்களை வள்ளல்
தடிந்த தன்மைகண் டமரர்கள் உவகையில் தழைத்தார்
படர்ந்து நீடிய கங்குலின் பாயிருள் புலர
விடிந்த காலையின் எழுங்கதிர் கண்டமே தினிபோல். **183**

பொருள் : மாற்றலன் சரங்களை மடிந்திடும்படி வள்ளல் தடிந்ததன்மைகண்டு - சூரனது கணைமுற்றும் அழியுமாறு வள்ளலாகிய பெருமான் சிதைத்த தன்மையை நோக்கி, அமரர்கள் உவகையில் தழைத்தார் - தேவர்கள் மகிழ்ச்சியிலே திளைத்துத் தழைத்தார்கள், படர்ந்து நீடிய கங்குலில் பாயிருள் புலர - பரந்து நீண்ட இரவில் எங்கும் செறிந்த இருள் அகலுமாறு, விடிந்தகாலையில் எழும் கதிர்கண்ட மேதினிபோல் - விடியும் வேளையிலே எழும் சூரியோதயத்தைக் கண்டு களிப்புறும் உலகம் போலவே (களிப்புற்றார்)

பொழிப்பு : குமாரசாமியார் தாம் தூண்டிய அம்புகளாலே, சூர்தூண்டிய கணைகளையெல்லாம் துண்டிக்க வீழ்ந்ததைக் கண்டசுரர்கள், இரவு இருள் நீங்கவிடியும் வேளையில் சூரியோதயம் கண்டு மகிழும் உலகம் போல உவகையாய்த்தழைத்தார்.

குறிப்பு : இரவுக்கும் இருளுக்கும் சூரனும் துரந்த சரங்களும், சூரியனுக்கும் பகல் ஒளிக்கும் சுவாமியும் பாணங்களும், தேவருக்கும் உவகைக்கும் உலகத்துயிர்களும் பெற்ற மகிழ்ச்சியும் உவமையாம்.

வேறு
அங்க வெல்லை அவுணர்கோன்
எங்கள் நாதன் எதிருற
மங்குல் போல்வ ரம்பிலாச்
செங்கண் வாளி சிதறினான். **184**

பொருள் : அங்கு அவ்வெல்லை அவுணர்கோன் - அங்கு அப்போது சூரபன்மன், எங்கள் நாதன் எதிருற - எங்கள் குமரநாயகன் முன் செல்லுமாறு, மங்குல் போல் வரம்பிலா - மழைபோல எண்ணிறந்த, செங்கண்வாளி சிதறினான் - சிவந்த நுதிச்சரங்கள் சிந்தினான்.

பொழிப்பு : சூரன் அப்போது பெருமான் எதிரே மழைபோல் அம்புகளைச் செலுத்தினான்.

ஆய காலை அறுமுகன்
தீயன் உந்து செறிகணை
மாய வாளி மா மாழை
ஏயெ னாமுன் ஏவினான். 185

பொருள் : ஆயகாலை அறுமுகன் - அப்போது அறுமுகப்பிரானும், தீயன் உந்துசெறி கணைமாய - சூர்விடுத்த கணைகள் அழியுமாறு, வாளிமாமழை ஏ எனாமுன் ஏவினான் - அவற்றுக்கெதிராகக் கணைமழையை ஏ என்பதன் முன் ஏவினார்.

பொழிப்பு : அப்போது குமரவேளும் சூரன்கணைக்குமாறாக ஏ எனுமுன் சரமாரி விடுத்தார்.

எங்கள் நாதன் ஏவிய
துங்க வாளி சூர்விடும்
புங்க வங்க ளைப்புரத்
தங்கி போல றுத்தவே. 186

பொருள் : எங்கள் நாதன் ஏவிய துங்கவாளி - எம்பிரான் ஏவிய மேலான கணைகள், சூர்விடும் புங்கவங்களைப் புரத்து அங்கிபோல் அறுத்த - சூரன் விட்ட அம்புகளைத்திரி புரத்தில் சேர்ந்த புன்னகை அங்கிபோல் பொடிபடுத்தின.

பொழிப்பு : முருகன் அம்புகள், சூரன்கணைகளை புரம் பொடித்த தீபோல அழித்தன.

அறுத்த பின்னும் அறனிலான்
மறுத்தும் வாளி மாமழை
கறுத்த கண்டர் காளைமேல்
செறுத்து வல்லை சிந்தினான். 187

பொருள் : அறுத்த பின்னும் அறனிலான் - தன் சரங்கள் அழிந்தபின்னும் அறமிலாச் சூரன், மறுத்தும் வாளிமாமழை -

மீண்டும் சரமாரியை, கறுத்த கண்டர்காளை மேல் - நீலகண்டர் குமரன்மேல், செறுத்துவல்லை சிந்தினான் - சினந்துவிரைந் தேவினான்.

பொழிப்பு : அறனிலாச் சூரன் தன்சரம் அழிந்த பின்னும் சினந்து சேந்தன் மேல் கணை தூர்த்தான்.

சிந்து கின்ற செஞ்சரம்
வந்து றாமுன் வந்தெனக்
கந்தன் நூறு கணைதொடா
அந்தில் பூழி ஆக்கினான். 188

பொருள் : சிந்துகின்ற செஞ்சரம் வந்துறாமுன் - ஏவியவாளி தம் முன் வந்து சேருமுன், கந்தன் வந்தென நூறுகணைதொடா - முருகனும் காற்றெனச் சென்று பொடியாக்குமாறு சரந்தூண்டி, அந்தில் பூமி ஆக்கினன் - ஆங்கவற்றைத்துகளாக்கினார்.

பொழிப்பு : விட்ட பாணம் வந்துறுமுன் முருகன் வாளி தூண்டி அவற்றைத் தூளியாக்கினார்.(நூறுகணை - அழிக்கும்அம்பு)

பூழி செய்து பொள்ளென
ஊழி நாதன் ஒண்சரம்
ஏழு நூற தேவினான்
குழு மாயை தோன்றல்மேல். 189

பொருள் : ஊழிநாதன் பொள்ளெனப்பூழிசெய்து - ஊழிமுதல்வனாம் முருகன் கணத்தில் சூர்வாளி பொடியாக்கிப் பின்னும், ஏழுநூறது ஒண்சரம் - ஏழுநூறு ஒளிகாலும் வாளிகளை, சூழும் மாயை தோன்றல் மேல் ஏவினான் - சூழ்ந்துவரும் மாயைமகனான சூரன்மேல் ஏவினார்.

பொழிப்பு : குமரேசர், சூர்கணையைத்துகளாக்கிப் பின்னும் சூரன் மீது எழுநூறு அம்புகளை ஏவினார்.

மாயை மைந்தன் மற்றதை
ஆய வாளி யால்அறுத்
தேயி னானி ராயிரஞ்
சேயின் முன்சி லீமுகம். 190

பொருள் : மாயை மைந்தன் மற்றதை ஆயவாளியால் அறுத்து - மாயைமகன் சூரன் அவற்றை ஏற்ற கணைகளால் அறுத்து, சேயின்முன் சிலீமுகம் இராயிரம் ஏயினான் - சேந்தர்முன்பு அம்புகள் இராயிரத்தை ஏவிவிட்டான்.

பொழிப்பு : மாயை மகன் சூரன், குமரனின் அம்புகளை அறுத்து மேலும் ஈராயிரம் அம்புகளைப் பெருமான்முன் ஏவினான்.

வேறு
விட்டதனை அத்தொகை விறற்பகழி தன்னால்
அட்டுவிரை வீற்கடவுள் ஆயிர வீரட்டி
கட்டழலை யொத்துள கடுங்கணைகள் தம்மைத்
தொட்டனன் வருத்மொடு சூர்கிளை துளங்க. 191

பொருள் : விட்டதனை - சூர்விட்ட சரங்களை, கடவுள் - குமரப்பிரான், அத்தொகை விறற்பகழிதன்னால் அட்டு - அத்தனை வலிய வாளிகளால் அறுத்து, விரைவில் ஆயிர இரட்டி - விரைவாக இராயிரம் எண்ணிக்கையுள்ள, கண்தழலை ஒத்துள கடும் கணைகள் தம்மை - நெற்றிகண் நெருப்புக்கு நிகரான கடியகணைகளை, சூர்கிளை வருத்தமொடு துளங்க தொட்டனன் - சூரனும் சுற்றமும் வருந்தி நடுங்கும் வண்ணம் தூண்டினார்.

பொழிப்பு : சூரன்கணைகளைக் குமரன் அழித்த பின்னும், விரைவாக நெற்றிக்கண் நெருப்பு நிகரான இராயிரம் வெங்கணையை சூரன்கிளையோடு வருந்தி நடுங்கத் தொடுத்தார்.

முராரியுத வுஞ்சுதனை முந்துதளை இட்டாண்
டொராயிரம் அளித்தபரன் உய்த்தகணை செல்ல
இராயிர நெடும்பகழி ஏவியவை நீக்கி
அராவிறையும் வையமும் அழுங்கலுற ஆர்த்தான். 192

பொருள் : முராரி உதவும் சுதனை முந்து தளையிட்டு ஓராயிரம் ஆண்டு அளித்தபரன் - முரனை அழித்த முகுந்தன் தந்த மகன் பிரமனை முன்னாளிலே சிறைப்படுத்தித் தாமே ஓராயிரமாண்டு சிருட்டி செய்த பரமபதியாம் முருகன், உய்த்த கணை செல்ல - ஏவிய சரங்கள் செல்லுதலும், இராயிர நெடும் பகழிஏவி அவை நீக்கி - சூரனும் இராயிரம் அம்புதொடுத்து அவற்றைமாற்றி, அராவிறையும் வையமும் அழுங்கலுற ஆர்த்தான் - சுமக்கும் சேடனும் பூமியும் வருத்தமுற வீரமுழக்கம் செய்தான்.

பொழிப்பு : முன்னே அயனைச் சிறையிட்டுப்படைப்பை ஆயிரமாண்டுசெய்த பரமன் செலுத்திய கணையைச் சூரன் இராயிரம் அம்பெய்து நீக்கிச் சேடனும் புவியும் வருந்த ஆர்த்தான்.

ஆர்த்தவன் விடுங்கணை அனைத்தினையும் முக்கண்
மூர்த்திதரு கான்முளை செயலச்செல முடித்தான்
கார்த்தெழு புகைப்படலை கான்றுநிமிர் செந்தீச்
சேர்த்தினவை யாவையும் மிசைந்திடு திறம்போல். 193

பொருள் : ஆர்த்தவன் விடும் கணை அனைத்தினையும் - ஆர்த்த சூரன் ஏவிய சரமனைத்தையும், முக்கண்மூர்த்திதரு கான்முளை செலச் செல முடித்தான் - முக்கட் பகவர் மகனாம் முருகப்பிரான் வரவர அழித்தருளினார், அச்செயலானது, கார்த்திடு புகைப்படலைகான்று நிமிர்செந் தீ - கரியபுகைகக்கியவாறு கொழுந்துவிட்டெரியும் தீ, சேர்த்தினவையாவையும் மிசைந்திடுதிறம் போல் - தன்பக்கத்துள்ளவற்றையெல்லாம் தன்னுள்ளே ஈர்த்துச் சேர்த்து உண்டொழிப்பது போலிருந்தது.

பொழிப்பு : சூரன்விட்ட அம்புகள் வரவர அவற்றையெல்லாம் சிவகுமாரர் அழித்தொழித்தார், அச்செயல், பெருந்தீயானது அயலிலுள்ளவற்றை இழுத்துச் சேர்த்து ஒருங்கே எரித்தழிப்பது போலிருந்தது.

ஐயன்விடு வாளிகளை அவ்வசுரன் நீக்கும்
வெய்யன்விடு வாளிகளை வேள்கடி தறுக்கும்
எய்யுநெடு வெம்பகழி இற்றவைகள் சிந்தி
வையமிசை போகியன வான மணித் தென்ன. 194

பொருள் : ஐயன் விடுவாளிகளை அவ்வசுரன் நீங்கும் - பெருமான் ஏவும் சரங்களை அச்சூரன் மாற்றுவான், வெய்யன் விடுவாளிகளை வேள் கடிதுஅறுக்கும் - சூரன் ஏவும் வாளிகளைச் செவ்வேளும் அறுப்பார், எய்யும் நெடு வெம்பகழி இற்றவைகள் சிந்தி - இவ்வாறு இருவரும் எய்த அம்புகள் துணிந்து வீழ்ந்தவையாவும், வையமிசை வானம் அணித்தென்னப்போகியன - தரையிலே குவிந்து வானம் அணித்தெனும்படி மேலே வளர்ந்து போயின.

பொழிப்பு : மாறி மாறி இருவரும் ஏவிய வாளிகள் வெட்டுண்டு வீழ்ந்து தரையிலே குவிந்து வளர்ந்து வானத்துக் கணித்தாகப் போயின.

முற்றிய அமர்தலை முனிந்திவர் செலுத்துங்
கொற்றநெடு வாளிகள் குறைந்துழி எழுந்தீப்
பற்றியது பாரிடை பகிர்ந்தவரை முற்றும்
வற்றிய அளக்கரும் வறந்துளது கங்கை. 195

பொருள் : முற்றிய அமர்த்தலை - முதிர்ந்தபோர்முனையில், முனிந்திவர் செலுத்தும் கொற்ற நெடுவாளிகள் குறைந்துழி - சினந்து இவர்கள் செலுத்திய வெற்றிமிக்க நீண்ட வாளிகள் தறிபடும் போது, எழுந்தீ - பிறந்தெழும் தீயானது, பற்றியது பாரிடை பகிர்ந்தவரை முற்றும் - பூமியெங்கும் பற்றிப்படர்ந்தது மலைகளும் எல்லாம் வெம்மையாலே பிளந்தன, அளக்கரும் வற்றிய - சமுத்திரங்களும் நீர்வற்றின, கங்கை வறந்துளது - கங்கையின் நீரும் வரண்டு போயிற்று.

பொழிப்பு : முனையில் இருவர் சரங்களும் தறிபடும்போது எழுந்த தீ பாரெங்கும் பற்றவே மலைகள் பிளந்து சமுத்திரமும் வற்றிக்கங்கையும் வரண்டதாயிற்று.

தார்கெழுவு வேற்படை தடக்கையுடை யோனுஞ்
சூரனும் இவாறமர் இயற்றுதொழில் காணா
வீரமட மாதுளம் வியந்திவர் தமக்குள்
ஆரிடை நடத்துமென ஐயமொடு நின்றாள். **196**

பொருள் : தார்கெழுவு வேற்படை தடக்கையுடையோனும் சூரனும் - மாலையணிந்த வேற்படைத் தடக்கையினராகிய பெருமானும் சூரனும் ஆகிய இருவரும், இவ்வாறு அமர் இயற்று தொழில் காணா - இவ்வாறு பெரும் போர் இயற்றி நிற்றலை நோக்கி, வீரமடமாது உளம்வியந்து - வெற்றித்திருமகள் மனத்திலே பெரிதும் அவர் வீரத்தை வியந்து, இவர்தமக்குள் ஆரிடை நடத்துமென ஐயமொடு நின்றாள் -இவ்விரு வீரருள்ளே சிறந்த வீரர் யார்? இவருள் எவரிடம் நாம் சேரலாம் என்று துணியமாட்டாது சந்தேகித்துத் திகைத்து நின்றாள்.

பொழிப்பு : பெருமானும் சூரபன்மனும் போரிடும் திறத்தைப் பார்த்து வீரலக்குமி வியந்து இருவரும் ஒத்த வீரராக உள்ளனரே, நாம் இவருள்ளே சிறந்தவ ரெவரெனக்கண்டு எவரிடம் சேரலாமென அறியாது ஐயுற்று நின்றாள்.

ஆளரிதன் முன்னிளவல் ஆனைவத னத்துக்
காளைமகிழ் பின்னிளவல் கார்முகம் உகைக்கும்
வாளிமழை யேலது மற்றவர்கள் தம்மை
நீள்வீழியி னால்தெரிகி லார்புடையின் நின்றோர். **197**

பொருள் : ஆளரிதன் முன்னிளவல் - சிங்கமுகனுக்கு முன்வந்த சூரபன்மனும், ஆனைவதனத்துக் காளைமகிழ் பின்னிளவல் - ஆனைமுகப்பிள்ளையார் பின் வந்த முருகனும், கார்முகம் உகைக்கும்வாளி மழையே யலது - பிடித்த வில்லிருந்து

செலுத்தப்படும் பாணமழையே காணமுடிந்ததல்லாமல், மற்றவர்கள் தம்மை - கணை ஏவும் அவ்விருவரையும், நீள்விழியினால் தெரிகிலார் புடையிலுள்ளார் - தங்கள் கூர்ந்த கண்களாலே காணொணாதவராகி நின்றனர் பாங்கிலுள்ள எவரும்.

பொழிப்பு : சூரனும் குமரப்பிரானும் தம்வில்லிலிருந்து விடுத்த சரமாரியைக் கண்டனரேயன்றி அவ்விருவரில் எவரையும் பாங்கு நின்ற எவரும் காண்கிலராயினர்.

குறிப்பு : ஆள் + அரி - ஆளரி - மனித சிங்கம் - சிங்கன். பின் இளவல் குமரன் - இருவரும் முதுமையுறாது இளமை யோடிருந்தமையால் கூறினார்.

நீடுசமர் இன்னணம் நிகழ்ச்சியுறும் எல்லை
மேடமிசை ஊர்பரன் விடுத்தகணை எல்லாம்
ஈடுபட நூறியவன் ஏறிவரு மான்தேர்
ஆடுறு பதாகையை அறுத்துவிரைந் தார்த்தான். 198

பொருள் : நீடுசமர் இன்னணம் நிகழ்ச்சியுறும் எல்லை - நீண்டுதொடரும் போர் இங்ஙனம் நிகழும் போது, மேடமிசை ஊர்பரன் - ஆட்டுக் கடா வாகனரான பிரான், விடுத்தகணையெல்லாம் ஈடுபடநூறி - விட்ட சரங்களையெல்லாம் ஆற்றல் கெடப் பொடியாக்கி, அவன் ஏறிவருமான்றேர் ஆடுறுபதாகையை அறுத்து - அவர்ஏறி வரும் பெருந்தேரில் நின்றாடுகின்ற கொடியை அறுத்து வீழ்த்தி, விரைந்தார்த்தான் - அதைப்பெருவெற்றியாய் நினைந்து விரைந்து வெற்றிமுழக்கம் செய்தான் சூரன்.

பொழிப்பு : போர்தொடர இடையே குமரன்கணையைப் பொடியாக்கிப் பெருமான் ஏறிவரும் தேரின் கொடியை அறுத்துப்பெருவெற்றியென ஆர்ப்பரித்தான் சூரன்.

ஆர்த்துவிறல் வால்வளையை அம்பவள வாயில்
சேர்த்தியிசைத் தான் தனது சீர்த்தியிசைத் தென்ன
மூர்த்தமது தாழ்க்கிலன் முனிந்துகணை பின்னுந்
தூர்த்துமுரு கன் தனது தோற்றமறைத் திட்டான். 199

பொருள் : ஆர்த்து விறல் வால்வளையை அம்பவள வாயிற் சேர்த்தி - சூரன் ஆர்ப்பரித்து வெற்றி குறித்து வெண்சங்கை பவளம் போற் சிவந்த வாயிலே வைத்து, தனது சீர்த்தி இசைத்தென்ன இசைத்தான் - தனது கீர்த்திதானே எழுந்தொலிப்பது போல ஊதினான், மூர்த்தமது தாழ்க்கிலன் முனிந்து பின்னும் கணைதூர்த்து - சிறிதும் தாமதியாமலே சினந்து கணை தூர்த்து, முருகன் தோற்றம் மறைத்திட்டான் - குமரப்பிரானின் திருக் கோலம் மறையும் படி போர்த்தான்.

பொழிப்பு : சூரன் ஆர்த்து வெற்றிச்சங்கைவாய் வைத்து தன்புகழே ஒலிப்பது போல ஊதிப் பின்னும் தாமதியாதே கணைமழை பொழிந்து பெருமான் திருவுரு மறையும்படி செய்தான்.

குறிப்பு : தனது சீர்த்தி இசைத்தென்ன என்பதற்குத் தற்பெருமை பேசும் வீம்பு போல என உணரத்தலுமாம்.

மறைத்தபக ழித்தொகையை வாளிமழை தன்னாற்
குறைத்தவுணன் ஊர்ந்திடு கொடிஞ்சிநெடு மான்தேர்
விறற்கொடி தனைக்கொடிய வெஞ்சரமொ ரேழால்
அறுத்துமுரு கன் பரவை யாழ்கடலின் இட்டான். 200

பொருள் : மறைத்த பகழித்தொகையை வாளிமழை தன்னால் குறைத்து - தமது உரு மறையச் செய்த சரக்தொகையைத் தமது கணைமழைகளால் அறுத்தகற்றி, அவுணன் ஊர்ந்திடு கொடிஞ்சி நெடுமான் தேர் - சூரன் ஏறிவரும் கொடிஞ்சி உறுப்புள்ள குதிரை பூண்டதேரிலுள்ள, விறற் கொடிதனை - வீரியமுள்ள சிங்கக் கொடியினை, கொடிய வெஞ்சரம் ஒரேழால் அறுத்து - மிகக்கொடிய ஒரேழ் கணைகளாலே அறுத்து, முருகன்பரவை

ஆழ்கடலில் இட்டான் - முருகன் அதனைப்பரந்த ஆழமான கடலிலே விழச்செய்தார்.

பொழிப்பு : பெருமான் தம்மை மூடிய சரங்களைக் கணைமழையால் அறுத்தொழித்து, பின்னும் சூரன் தேரிலுள்ள சிங்கக் கொடியை ஏழம்பால் அறுத்துக் கடலில் வீழ்த்தினார்.

வேறு

தான வர்க்குத் தலைவன் தனிக்கொடி
மீன வேலையில் அற்றுடன் வீழ்ந்துழிப்
பான கம்பனெ னப்படு பாரிடர்
சேனை காவலன் தெற்றென நோக்கினான். **201**

பொருள் : தானவர்க்குத் தலைவன் தனிக்கொடி - அசுரேந்திரனாம் சூரின் ஒப்பில்லாத கொடியானது, மீனவேலையில் அற்றுடன் வீழ்ந்துழி - அறுபட்டு மீனுள்ள கடலிலே வீழ்தலும், பானுகம்பன் எனப்படும் - பானுகம்பர் எனும் பெயர்கொண்ட, பாரிடர்சேனை காவலன் தெற்றென நோக்கினான் - பூதசேனைத்தலைவர் அதனைத் தெளிவாகக் கண்ணுற்றார்.

பொழிப்பு : சூரபன்மனின் கொடி அறுபட்டுக்கடலில் வீழ்ந்தபோது அதனைப் பூதசேனைத்தலைவரான பானுகம்பர் என்பவர் தெரியக்கண்டார்.

கண்டு சிந்தை களித்துப் பெருமிதங்
கொண்டு குப்புற் றிசைத்துக் குனித்திடா
அண்டர் போற்றத்தன் ஆயிரம் வாயினும்
ஒண்தி ரட்சங்கம் ஒல்லைவைத் தூதினான். **202**

பொருள் : கண்டு சிந்தைகளித்துப் பெருமிதம் கொண்டுகுப்புற்று - கண்டபானுகம்பர் உளங்களித்துப் பெருமிதமுற்றுகளிதுக்குதித்து இசைத்துக் குனித்திடா - முருகன் வெற்றியை முழக்கிக் கூத்தாடி, அண்டர்போற்றிட - கண்டுகேட்டு நிற்கும் தேவர்யாவரும் போற்றுமாறு,

தன் ஆயிரம்வாயினும் - தமது ஆயிரம் வாய்களிலும், ஒண்டிறற் சங்கம் ஒல்லை வைத்தூதினான் - ஒளிபொருந்திய வெற்றிச் சங்குகளை (ஆயிரமும்) விரைவிலே வைத்து ஊதினார்.

பொழிப்பு : பானுகம்பர் கண்டுகளிப்புற்று வெற்றி முழக்கம் செய்து ஆனந்தக் கூத்தாடி இதனை அண்டரும் அறிந்து போற்றுமாறு ஆயிரம் வாயிலும் வெற்றிச் சங்குகளை வைத்து ஊதினார்.

கானு கம்படு கந்துகத் தேருடைப்
பானு கம்பன் பனிமதி ஆயிரம்
மானு கம்பவை வாய்வைத் திசைத்தலுந்
தானு கம்பல தங்கிற்றவ் வோசையே. 203

பொருள் : கால் நுகப்படுகந்து கத் தேர் மிசைப் பானுகம்பன் - உருள்களும் நுகமும் பொருந்திய மாக்கள் பூண்டதேர்மீதுள்ள பானு கம்பர் எனும் தலைவர், பனிமதி ஆயிரம் மானு கம்பவைவாய்வைத்திசைத்தலும் - தண்மதி ஆயிரம்போலும் சங்குகளை வாயில் வைத்தூதுதலும், அவ்வோசைதான் உகம்பலதங்கிற்றே - அவ்வெற்றிச் சங்கநாதமானது பலயுககாலம்வரை நின்றொலித்தது.

பொழிப்பு : பானுகம்பர் நிறைமதிநிகர் ஆயிரம் சங்குகளை வாய்வைத்து ஊத அச்சங்கநாதம் பலயுககாலம் வரையும் நின்று முழங்கியது.

குறிப்பு : கால் - தேர்ச்சில், மதி வெண்சங்குக் குவமை, கந்துகம் - குதிரை.கம்பு - சங்கு

பாய்பெ ரும்புகழ்ப் பானுகம் பன்வளை
ஆயி ரங்களும் ஆர்த்திட அண்டர்தம்
நாய கன்தன் விறல்கண்டு நாரணன்
தூய சங்கு முழங்கிற்றுத் துண்ணென. 204

பொருள் : பாய்பெரும் புகழ்ப் பானுகம்பன் வளை - பரந்த பெரும்புகழுள்ள பானு கம்பரது, சங்குகள் ஆயிரங்களும் ஆர்த்திட - ஆயிரங்களும் ஒருங்கே முழங்கவே, அண்டர்தம் நாயகன் தன்விரல்கண்டு - தேவசேனாபதியாம் சேந்தனது வெற்றித்திறத்தை அறிந்து, நாரணன் தூயசங்கும் துண்ணென முழங்கிற்று - திருமாலின் பாஞ்ச சன்யம் எனும் சங்கும் உடனே வெற்றிமுழக்கம் செய்தது.

பொழிப்பு : பானுகம்பர் சங்கநாதத்தால் குமரன் வெற்றியை அறிந்து திருமாலின் சிறந்த பாஞ்சசன்னியமும் ஊதப்பட்டு ஜெயகோஷம் செய்தது.

போதம் அங்கதிற் புங்கவர் யாவருஞ்
சோதி வேற்படைத் தூயவன் ஏறுதேர்
மீது கேதனம் இல்லை வியன்கொடி
ஆதி நீயென் றழவினை ஏவினார். **205**

பொருள் : போதம் அங்கதில் புங்கவர்யாவரும் - அப்போது தேவர்கள் யாவரும், சோதிவேற்படைத்தூயவன் ஏறுதேர்மீது - ஒளிகாலும் வேற்படை கொண்ட சுத்தராம் முருகன் ஏறியதேர்மேலே, கேதனம் இல்லை - உள்ளகொடியில்லையாயிற்று, வியன் கொடி ஆதி நீயென்று - ஆதலால் மேலான சேவற்கொடியாகி நின்று நீ பணி புரிவாய் என்று, அழவினை ஏவினார் - அக்கினி தேவனைப் பணித்தனர்.

பொழிப்பு : அப்போது அமரர் அறுமுன் தேரிலே கொடியில்லை நீ கொடியாகி நின்று பணி செய்க என்று தீக்கடவுளை ஏவினார்கள்.

ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி யாகியே
தேவதேவன் திருநெடுந் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட. **206**

பொருள் : ஏவலோடும் எரிதழற்பண்ணவன் - ஏவப்பட்டபோதே தீக்கடவுள், வாவுகுக்குடமாண்கொடியாகியே வாவிச்செல்லும் சேவற்கொடியாகி, தேவதேவன் திருநெடுந்தேர்மிசை - ஆறுமாமுகன் திருப்பெருந்தேர்மீது, மேவி அண்டம் வெடிபட ஆர்த்தனன் - பொருந்தி அண்டம் வெடிபட ஆரவாரித்தான்.

பொழிப்பு : ஏவப்பெற்ற தீக்கடவுள் சேவற்கொடியாகி சேந்தர் தேர்மீது பொருந்திநின்று அண்டம் வெடிபட முழங்கி ஆரவாரித்தான்.

படியி லாதமலர் பண்ணவன் தேர்மிசைக்
கொடிய தாய்நின்று குக்கு டங்கூயது
கடிய தானவர் கங்குல் புலர்ந்திடும்
விடியல் வைகறை வேலையைக் காட்டல்போல். 207

பொருள் : படியிலாது அமர் பண்ணவன் தேர்மிசைக் கொடிய தாய் நின்று குக்குடம்கூயது - நிகரிலாதவராயுள்ள குமாரசுவாமியின் தேர்மீது கொடியதாக நின்று சேவலானது. கூவியது; அச்செயல், கடியதானவர் கங்குல் புலர்ந்திடும் - கொடிய அசுரராகிய இரவு கழிந்து போகும், விடியல் வைகறை வேலையைக் காட்டல் போல் - சூரிய உதயமாகிய வைகறைப்பொழுதாய் விட்டது எனக்காட்டுவது போன்றது.

பொழிப்பு : அவுணராம் இரவும் எமது துன்ப இருளும் கழிகிறது, விடுதலையாம்விடிவும் இன்பமாம் சூரியோதயமும் வருகிறது எனக் கூறுவது போலிருந்தது சேவலின் கூவல்.

குறிப்பு : இது உவமையோடு கூடியதற்குறிப்பேற்ற அணி.

சங்க மோடு தபனனும் ஆர்த்தலும்
மங்குல் வண்ணத்து மாயவன் ஆர்த்தனன்
பங்க யாசனப் பண்ணவன் ஆர்த்தனன்
திங்கள் ஆர்த்தது செங்கதிர் ஆர்ப்பவே. 208

பொருள் : சங்கமோடு தபனனும் ஆர்த்தலும் - வெற்றிச்சங்க நாதங்களுடனே சேவலாம் அக்கினியும் ஆர்த்தலும், மங்குல்வண்ணத்து மாயவன் ஆர்த்தனன் - முகில் வண்ண மாயவனும் ஆர்த்தான், பங்கயாசனப்பண்ணவன் ஆர்த்தனன் - மலராசனனான அயனும் ஆர்த்தான், திங்கள் ஆர்த்தது செங்கதிர் ஆர்ப்பவே - சூரியனும் ஆர்க்கச் சந்திரனும் ஆர்த்தான்.

பொழிப்பு : சங்கநாதத்தோடு சேவலும் ஆர்ப்ப அரிபிரமரும் சந்திர சூரியரும் ஆர்த்தனர், சங்கமோடுதபனன் - பானுகம்பர் என உரைப்பினுமாம்.

மறலி ஆர்த்தனன் மாருதங் கட்கெலாம்
இறைவன் ஆர்த்தனன் இந்திரன் ஆர்த்தனன்
அறைக டற்கர சானவன் ஆர்த்தனன்
குறைவில் செல்வக் குபேரனும் ஆர்த்தனன். 209

பொருள் : மறலிஆர்த்தனன் - காலனும் ஆர்த்தான், மாருதங்கட்கெலாம் இறைவன் ஆர்த்தனன் - வாயுக்களுக்கதிபதியாம் தேவன் ஆர்த்தான், அறை கடற்கு அரசானவன் ஆர்த்தனன் - ஒலிக்கின்ற சமுத்திரராசனாம் வருணன் ஆர்த்தான், குறைவில் செல்வக்குபேரனும் ஆர்த்தான் குறைவிலாச் செல்வமுள்ள குபேரனும் ஆரவாரித்தான்

பொழிப்பு : கூற்றனும் வாயுதேவனும், வருணனும் குபேரனுமான திக்குப்பாலரும் ஆர்த்தனர்.

ஆர்த்த ஓசைபோய் அண்டத்தை முட்டியே
சூர்த்த நோக்குடைச் சூரபன் மன்செவிச்
சீர்த்து ளைக்குட் செறிதலுந் தேவரைப்
பார்த்த னன்கடு உண்டன்ன பான்மையான். 210

பொருள் : ஆர்த்தஓசைபோய் அண்டத்தை முட்டியே - இவ்வாரவாரவெற்றி முழக்கம் போய் அண்டத்தை நிறைத்து, சூர்த்த

நோக்குடைச் சூரபன்மன் செவிச்சீர்த்துளைக்குள் செறிதலும் - அஞ்சத்தகும் நோக்குடைய சூரபன்மனது செவியிலுள்ள சீரியதுளையில் சேர்தலும், கடுஉண்டன்ன பார்வையான் தேவரைப்பார்த்தனன் - கண்பார்வையில் நஞ்சு உண்டெனத்தகும் தறுகண்மையோடு தேவரைப்பார்த்தான்.

பொழிப்பு : கூறியவெற்றிமுழக்க ஒலி அண்டத்தில் முட்டிச் சூரன் செவித்தொளையிலே சென்று செறிதலும் திட்டிவிடமெனும் பாம்பு போலத் தேவரைப்பார்த்தான்.

குறிப்பு : திட்டிவிடம் - திருஷ்டிவிடம் - பார்வையிலே நஞ்சுடைய பாம்பு, பார்வையால் விஷமேறி மடிவர். அப்பாம்புபோலப் பார்த்தான் என்பதாம். கடு + உண்டு + அன்னபார்வையாள் - பார்வையிலேயே நஞ்சு உளது எனத்தகும் பார்வையுள்ளவனாக நோக்கினான் என்க.

மாறி லென்முன் வருவதற் கஞ்சியே
பாறு போன்று பழுவத்த லைந்துளார்
தேறி வந்து தெழித்தனர் என்முனும்
ஆறு மாமுகன் ஆற்றல்கொண் டேகொலாம். 211

பொருள் : மாறில் என்முன் வருவதற்கு அஞ்சியே - சாதிப்பகைகாரணமாக என்முன்வரப்பயந்து, பாறுபோன்று பழுவத்து அலைந்துளார் - பருந்தின்முன் ஏனைப்பறவைபோலக்காடுகளிலே கரந்து அலைந்த இத்தேவர்கள், தேறிவந்து என்முன்னும் தெழித்தனர் - மனந்துணிந்துவந்து என்முன்னேயும் வீரமுழக்கம் செய்கின்றனர் - இதற்குக் காரணம், ஆறுமாமுகன் ஆற்றல்கொண்டேகொலாம் - அறுமுகனாகிய இச்சிறுவனின் ஆற்றலை நம்பியதாற்போலும்.

பொழிப்பு : என் முன் வரவும் அஞ்சிப்பறவைகள் போலக் காட்டிலே ஒளித்து உலைந்து திரிந்த இத்தேவர்கள் மனந்துணிந்து வந்து என்முன் வீரமுழக்கம் செய்வது முருகன்வலியை நம்பியேயாம்.

நன்று நன்றிது நான்முகன் ஆதியா
நின்ற தேவர் நிலையழித் தொல்லையில்
கொன்று பின்னர்க் குமரனை வெல்வனால்
என்று சீறினன் யாரையும் எண்ணலான். **212**

பொருள் : நன்றுநன்று இது - இச்செயல் மிக நன்றாயிருக்கிறது, நான் முகன் ஆதியா நின்ற தேவர் நிலை அழித்து ஒல்லையில் கொன்று - பிரமன் முதலாகச் செருக்குற்று நிற்கின்ற தேவர்களின் தருக்கை அழித்து விரைவிலே கொன்று, பின்னர் - அதன்பின்பு, குமரனை வெல்வனால் என்று சீறினன் - குமரனையும் பொருதுவெல்வேன் என்று சீறினான், யாரையும் எண்ணலான் - எவரைபொருளாக மதியாத சூரன்.

பொழிப்பு : எவரையும் பொருட்படுத்தாத சூரன், தேவர் செயல் மிக நன்று - இகழ்ச்சி - முதலிலே விரைவிலே பிரமாமுதலிய தருக்குற்றதேவர் செருக்கழித்துக் கொறபின் குமரனையும் பொருது வெல்வேன் என்று கூறிச் சீற்றமுற்றான்.

இருக்க மைந்தன் இகலிவண் விண்ணிடைச்
செருக்கு தேவர் திறலினைச் சிந்துவான்
அருக்க னோடிய அந்தரத் தூய்க்குதி
தருக்கு தேரினைச் சாரதி நீயென்றான். **213**

பொருள் : மைந்தன் இகல் இவண் இருக்க - குமரன் போர் இவ்வளவில் நிற்பதாக, விண்ணிடைச் செருக்குதேவர் திறலினைச்சிந்துவான் - விண்ணில் செருக்குற்று நிற்கும் தேவர்களின் வலியை அழிப்பதற்கு, அருக்கன் ஓடிய அந்தரத்து - சூரியன் உலாவும் வான்மீது, சாரதி நீ தருக்கு தேரினை உய்க்குதிஎன்றான் - பாகனே நீ வலியதேரினை ஓட்டிச்செல்லுதி எனப் பணித்தான் சூரன்.

பொழிப்பு : முருகனோடு புரியும் போர் நிற்பதாக, விண்ணிலே செருக்குற்றுநிற்கும் தேவர் திறலை அழிக்குமாறு சாரதி நீ வலிய தேரை வானிலே ஓட்டிச்செல்லுதி என்றான் சூரன்.

குறிப்பு : அருக்கன் ஓடிய என்பதற்கு, சூரியனும் அஞ்சி ஓடஎன எதிர்காலவினை எச்சமான செய்யிய எனும் வாய்பாடாகக்கொளலும் ஆகும்.

மற்றிவ் வாறு வலவனை நோக்கியே
சொற்ற காலைத் தொழுதெந்தை நன்றெனாப்
பொற்றை போலும் பொலன்மணித் தேரினை
வெற்றி யாகென வீண்மிசைத் தூண்டினான். 214

பொருள் : வலவனைநோக்கி மற்றிவ்வாறு சொற்றகாலை - பாகனைப்பார்த்து இவ்வாறு பணித்தலும், தொழுது எந்தை நன்றென - அவன் வணங்கி பணிஏற்று நலமாகுக அரசே எனக்கூறி, பொற்றைபோலும் பொலன்மணித்தேரினை - மலைபோன்றதாய் பொன்னும் மணியும் புனைந்தசேரினை, வெற்றியாகென வீண்மிசைத் தூண்டினான் - மன்னன் வெற்றிபெறுக என விண்ணிலே செலுத்திச் சென்றான்.

பொழிப்பு : சூரன் பணி ஏற்ற சாரதி அரசே நலமாக எனக்கூறி மலைபோன்ற அழகிய தேரை வேந்தன் வெற்றி பெறுக என விண்ணிலே செலுத்தினான்.

பாகன் தூண்டிய பாண்டிலந் தேரெழீஇ
மேகங் கீண்டு மிசைப்படு சூறையின்
ஆகங் கீறி அமரர்கள் ஈண்டிய
மாகஞ் சென்றது வானிழிந் தென்னவே. 215

பொருள் : பாகன் தூண்டிய பாண்டிலந்தேர் எழீஇ - பாகனாலே தூண்டப்பட்ட பாண்டில் எனும் உறுப்பமைந்ததேர் மேலெழுந்து, மேகம் கீண்டு மிசைப்படு சூறையின் ஆகம் கீறி - மேகமண்டலத்தைக் கடந்து மேலுள்ள வாயுமண்டலத்தையும் கிழித்து, அமரர்கள் ஈண்டிய மாகம் சென்றது - தேவர்கள் சேர்ந்து நிற்கும் வானகத்தை அடைந்தது, வான் கிழிந்தெனவே - வானம் - சுவர்க்கம் - தாழ்ந்துவிட்டதோ எனுமாறு விரைந்தணுகியது தேர்.

பொழிப்பு : சாரதி செலுத்தியதேர் மேகமண்டலம் வாயுமண்டலம் கடந்து தேவர்கள் உள்ள இடமாகிய வானகத்தை அணுகியது, சுவர்க்கம் தாழ்ந்து விட்டதெனுமாறு.

சென்ற தேரொடு சேணிடைப் புக்குளான்
குன்ற மன்ன கொடுஞ்சிலை கோட்டியே
துன்று தேவர் தொகைஇரிந் தோடுற
மன்ற வாளி மழைகளை வீசினான். 216

பொருள் : சென்றதேரொடு சேணிடைப்புக்குளான் - செலுத்தியரொடு சேணிலே புகுந்த சூரன், குன்றமன்ன கொடுஞ்சிலை கோட்டியே - மலைபோன்ற தன்வில்லை வளைத்து, துன்று தேவர்தொகை இரிந்து ஓடிட - நிறைந்த தேவர்களின் கூட்டம் பயந்து ஓடுமாறு, மன்றவாளிமழைகளை வீசினான் - மிகவும் அம்புகளை மழைபோல அவர்கள் மீது பொழிந்தான்.

பொழிப்பு : சேணிலே சென்ற சூரபன்மன் வில்லை வளைத்து, செறிந்த தேவர்கள் தொகை பயந்தோட மிகவும் சரங்களை மழைபோல் அவர்மேற் பொழிந்தான்.

வீசுகின்றுழி விண்ணவர் மேற்சரம்
நீசன் விட்டிடு நீர்மையை நோக்கியே
ஈசன் மாமகன் ஈண்டுநின் றெண்ணிலா
ஆசு கங்களுய்த் தங்கவை சிந்தினான். 217

பொருள் : வீசுகின்றுழி - கணைபொழிதலும், நீசன் - சூரன், விண்ணவர்மேல் சரம் விட்டிடு நீர்மையை நோக்கியே - தேவர்கள் மேல் அம்புகளை ஏவும் செயலைக்கண்டு, ஈசன்மாமகன் - சிவகுமாரர், ஈண்டுநின்று எண்ணிலா ஆசுகங்கள் உய்த்து - இங்கு நின்றவாறே எண்ணற்ற அம்புசெலுத்தி, அன்னவை சிந்தினான் - சூரன் அம்புகளைத் துண்டித்தார்.

பொழிப்பு : சூரன் கணைசொரிய, அவன்தேவர்க்கு அம்பெய்வதைக் கண்டு குகன் இங்கிருந்தே எண்ணற்ற அம்பெய்து அவற்றைச் சிதைத்து விட்டார்.

வேறு

மற்றவை துணித்தபின் வடிக்கயிறு முட்கோல்
பற்றிய தடக்கையுள பாகுதனை நோக்கிக்
கொற்ற அயில் தூண்டியொரு குன்றைவெளி கண்டோன்
தெற்றெனவீண் மேல்றமது தேர்வீடுதி யென்றான். 218

பொருள் : மற்றவை துணித்த பின் - அம்புகளைத்துணித்தபின், வடிக்கயிறு முட்கோல் பற்றிய தடக்கையுள பாகுதனை நோக்கி - கடிவாய்க்கயிறும் முட்கோலும் பிடித்த கையினனான வாயுதேவனை நோக்கி, கொற்ற அயில் தூண்டி ஒரு குன்றை வெளிகண்டோன் - வெற்றிவேலை ஏவிக்கிரவுஞ்சமலையைப் பொடியாக்கிய பெருமான், தெற்றெனவிண் மேல் நமது தேர் விடுதி என்றான் - விரைவில் விண்ணில் நம் தேரைச் செலுத்து என்றார்.

பொழிப்பு : சூர் அம்புகளைத் துணித்த பின் பாகனை நோக்கிச் சிரவுஞ்ச பேதகரான குமாரபிரான் விரைந்து நம்தேரை விண்ணிற் செலுத்துக என்றார்.

என்னலும் இறைஞ்சிஇர லைப்பரியின் மேலோன்
பொன்னுலகு பாருலகு புக்கெழுவ தென்ன
மின்னின்மிளிர் தேரதனை வின்மிசைகடாவி
நன்னெறி செலா அவுணர் நாயகன்முன் உய்த்தான். 219

பொருள் : என்னலும் - பிரானார் ஏவியவுடன், இரலைப்பரியின் மேலோன் - மானைவாகனமாய்க் கொண்டவாயுதேவன், இறைஞ்சி - வணங்கிப் பணியேற்று, பொன்னுலகு பாருலகு புக்கு எழுவது என்ன - பொன்னாடு பூவுலகத்தில் வந்திருந்து மீண்டு செல்லும் காட்சித்தாக, மின்னின் மிளிர்தேரதனை விண்மிசை கடாவி - மின்னல் போல் ஒளிரும் அந்தமனோ வேகத் தேரை வானத்திற் செலுத்தி, நன்னெறி செல்லா அவுணர் நாயகன் முன் உய்த்தான் நல்வழிவராத் தீ நெறியாளனான சூரன்முன் சேர்வித்தான்.

பொழிப்பு : குமரன் ஏவ வாயுதேவன் வணங்கிப்பணியேற்று, பொன்னாடு மண்ணாட்டில் வந்திருந்து மீண்டு செல்வது போல பொற்றேரை வானில் ஊர்ந்து சூரன்முன் சேர்த்தான்.

வையநெடு வானமிசை வல்லைபுகும் எல்லை
ஐயன்இமை யோர்கள் அயர்ந் தோடுவது நோக்கி
நையலிர் புலம்பலிர் நடுங்கலிர்கள் என்றோர்
செய்யகரம் ஏந்திமுரு கன்கருணை செய்தான். **220**

பொருள் : வையம் நெடு வானமிசை வல்லை புகுமெல்லை - தேருடன் நீண்டவான் வழியே விரைந்து செல்லும் போதே, ஐயன் இமையோர்கள் அயர்ந்தோடுவது காணா - பெருமான் தேவர்கள் அஞ்சி ஓடுவதைப் பார்த்து, நையலிர் புலம்பலிர் நடுங்கலிர்கள் என்று - இமையவரே, நீவிர் வருந்தாதீர் மெலிவுறீர், நடுங்காதீர் என்று கூறி, ஓர் செய்யகரம் ஏந்தி முருகன் கருணை செய்தான் - தமது ஓர் செம்மையான திருக்கரத்தை உயர்த்தி அபயம் அளித்தார் குமரநாயகர்.

பொழிப்பு : வான்வழி வரும்போதே அமரர் அவலமாய் ஓடுவதுகண்டு ஐயன் முருகன் அஞ்சாதீர் என ஒருதிருக்கரத்தை உயர்த்தி அபயமளித்தருளினார்.

கந்தன்மொழி வானவர்க ணத்தவர்கள் கேளா
எந்தையீவண் வந்திடலின் யாமுயிர் படைத்தே
உய்ந்தனம் எனாவிரைவில் ஓடுவது நீங்கிச்
சிந்தைமகிழ் வத்தொடு திகந்தமுற நின்றார். **221**

பொருள் : கந்தன் மொழிவானவர் கணத்தவர்கள் கேளா - கந்த சுவாமியாரின் அபய மொழியை வானோர் குழுவினர் கேட்டு, எந்தை இவண் வந்திடலில்யாம் உயிர்பிழைத்தே உய்ந்தனம் எனா - எங்கள் பரமதந்தையே நீர் இங்கு வரப்பெற்றதால் யாமெல்லாம் உயிர்தப்பி உய்திபெற்றோம் என நன்றி நவின்று, விரைவின் ஓடுவது நீங்கி - விரைந்தோடும் செயலைவிட்டு, சிந்தை மகிழ்வத்தொடு

திகந்தமுற நின்றார் - மனக்களிப் போடு சென்ற சென்ற திசைகளில் தேறி நின்றார்கள்.

பொழிப்பு : பெருமானின் அபயமொழி கேட்டதேவர், சுவாமீ நீர் இங்கே எழுந்தருளியதால் நாம் உயிர்தப்பி உய்ந்தோம் என்று, பயம் நீங்கி ஓடுவதை நிறுத்தி ஆங்காங்கு நின்றனர்.

நின்றிடலும் வெவ்வவுணன் நீர்மையது நோக்கிப்
பின்றிடுவ ராம்பிரம னேமுதல தேவர்
ஒன்றொர்சிறு வன்கொலெனை உற்றெதிரு நீரான்
நன்றிதென வேவெகுளி கொண்டுநகை செய்தான். 222

பொருள் : நின்றிடலும் நீர்மையது வெவ்வவுணன் நோக்கி - தேவர் தேறி நிற்றலும் அத்தன்மையை அசுரன் பார்த்து, பிரமனே முதல தேவர் பின்றிடுவராம் - பிரமன் முதலான தேவர்களெல்லாம் எனக்கு முன் நிற்கமாட்டாது பயந்தோடுவராம் அப்படியிருக்க, ஒன்றொர் சிறுவன் கொல் எனை உற்று எதிரும் நீரான் - தனியே வரும் ஒரேயொரு சிறுபாலனோர என்முன் எதிர்த்துப் பொரவல்ல தன்மையுள்ளான், நன்று இது எனவே வெகுளி கொண்டு நகை செய்தான் - இது நன்று, வேடிக்கையாயுளது எனக் கூறிச் சினம்மூள ஏளனமாக அட்டகாசம் செய்தான்.

பொழிப்பு : அபயம் பெற்றுத் தேவர்நிற்கவே சூரன்கண்டு பிரமனாதிதேவர் பலரும் எனக்கு அஞ்சி ஓடவும் அவர்களுக்கும் அபயம் கொடுத்து ஒருதனிச்சிறுவன் தானோ என்முன் எதிர்ந்து பொரவல்லான் நன்று என்று சினந்து நகைத்தான்.

காய்சின மிகுந்தவுணர் கோவலன் அநந்தம்
ஆசுகம் விரைந்துபடர் ஆசுக மென்ன
விசுதலும் வாளிபல விட்டவை விலக்கி
ஈசனருள் மாமதலை ஏற்றிகல் புரிந்தான். 223

பொருள் : அவுணர்காவலன் காய் சினம்மிகுந்து - சூரபன்மன் சுடுசினம் மிகுந்து, ஆசுகமதென்ன விரைந்துபடர் அநந்தம் ஆசுகம் - வாயுவேகமென விரைந்து செல்லும் அநந்தம் வாளிகளை, வீசுதலும் - ஏவவே, வாளிபலவிட்டு அவை விலக்கி - மாறாகப்பல கணை ஏவி அவற்றை அறுத்து, ஈசன் அருள் மாமதலை ஏற்று இகல்புரிந்தான் - சிவகுமாரரும் எதிரேற்றுப் போர்புரிந்தார்.

பொழிப்பு : சூரன் கோபம் மிகுந்து, சண்டமாருதம் போல் விரைந்து செல்லும் அநந்தம் கணைகளை ஏவுதலும் சிவகுமாரரும் மாறாகப் பலசரம் ஏவி அறுத்துத் தொடர்ந்து சமர்புரிவாராயினார்.

சுறுக்கொள மயிர்ப்பொடி உயிர்ப்புவிடு சூரன்
கறைக்கதிர் அயிற்பொலி கரத்தன்இவர் தம்மில்
செறுத்துடன் வடிக்கணை செலுத்தி அகல் வானம்
மறைப்பது மறுக்குவது மாகிமலை வுற்றார். 224

பொருள் : சுறுக்கொள மயிர்ப்பொடி உயிர்ப்புவிடு சூரன் - மயிர்தீய்ந்து துர் நாற்றம் வீசுமாறு சுடுமூச்சுவிடும் சூரபன்மனும் - கறைக்கதிர் அயிற் பொலிகரத்தன் - கறையும் ஒளியும் பொருந்திய வேற்கரத்து முருகனும் ஆகிய இருவரும், தம்மிற் செறுத்து உடன் வடிக்கணை செலுத்தி - தம்முள்ளே முரணுற்று உடனுடன் கூரிய பாணங்களைச் செலுத்தி, அகல் வானம் மறைப்பதும் அறுக்குவதுமாகி - வான்வெளியை மறைப்பதும் அறுத்து வெளியாக்குவதுமாக, மலைவுற்றார் - அமர் பொருதார்.

பொழிப்பு : சூரனும் முருகனுமாமிவரிருவரும் உடன்று உடனுடனே சரங்கள் விடுத்து விண்வெளியை மறைப்பதும் அறுப்பதுமாய் அமர் செய்தனர்.

குறிப்பு : சுறு - உரோமம் எரிந்து கருகுவதால் எழும் துர்நாற்றம்.

வேறு

விரைந்திரு வோர்களும் வியன்கனை மாரிகள்
சொரிந்தனர் பேரமர் தொடர்ந்துசெய் போழ்தினில்
எரிந்தது மாதிரம் இரங்கினர் பாருளர்
திரிந்தன சாரிகை சிறந்தவர் தேர்களே. 225

பொருள் : விரைந்து இருவோர்களும் வியன்கணைமாரிகள் சொரிந்தனர் பேரமர் தொடர்ந்துசெய் போழ்தினில் - விரைவாக இருவீரரும் மேலான சரங்களை மாரி போலச் சொரிந்து பெரும் போரைத் தொடர்ந்து செய்யும் போதில் அதனால், மாதிரம் எரிந்தது பாருளர் இரங்கிளர் - திசாமுகங்கள் எரிந்தன பாரிலுள்ளார் வருந்தினர், சிறந்தவர் தேர்களே சாரிகை திரிந்தன - வான் வெளியியில் வீரரிருவரதும் தேர்கள் இடம் வலமாகச் சாரிசூழ்ந்து திரிந்தன.

பொழிப்பு : வீரர் இருவரும் சிறந்த பாணமழை பொழிந்து தொடர்ந்து பொருது நின்ற காரணத்தால் திசைகள் ஏரியவே உலகினர் வருந்தினர், அவர்தேர்கள் சாரிதிரிந்தன.

கறங்கினம் போல்வன கலஞ்செய் குலாலன
திறங்கொளும் ஆழிகள் திரிந்தன மானுவ
மறங்கெழு சூறைகள் மயங்கின போல்வன
துறுங்கணை மாரிகள் சொரிந்தவர் தேர்களே. 226

பொருள் : துறும்கணை மாரிகள் சொரிந்தவர் தேர்களே - செறிவாக அம்புகளைப் பொழிகின்ற அவ்விருவர்தேரும் சாரிவரும் போது, கறங்கினம் போல்வன - சுழலும் காற்றாடிகள் போலும், கலம்செய்குலாலன திறங்கொளும் ஆழிகள் திரிந்தனமானுவ - மட்பாண்டம் செய்யும் குயவனது சக்கரம் சுழல்வது போலுமிருந்தன. மறங்கெழு சூறைகள் மயங்கிய போல்வன - வலிமைவாய்ந்த சண்டமாருதங்கள் சேர்ந்து சுழன்று வீசுவது போலவும் விரைந்து சூழ்ந்தன.

பொழிப்பு : சாரியாகச் சுற்றிச் சுழன்றுவரும் இருவர் தேர்களும், காற்றாடி போலவும், குயவன் சக்கரம் போலவும், சூறைக்காற்றுகள் கலந்து சுழன்று வருவது போலவும் காணப்பட்டன.

குறிப்பு : கற்றாடி குயவன் சக்கரம் நின்றவிடத்திற் சுழல்வதற்கும், சூறைக்காற்று இடம் பெயர்ந் தோடிச் சுழல்வதற்கும் உவமையாயின.

பாதல மூழ்குவ பாரிடை சூழ்குவ
மாதிர மோடுவ வாரிதி சேர்குவ
பூதர மேவுவ பூமல ரோன்நகர்
மீதினும் ஏகுவ மீளுவ தேர்களே. 227

பொருள் : தேர்கள் பாதலம் மூழ்குவ - தேர்கள் பாதலத்திலும் அமிழ்ந்திச் செல்லும், பாரிடை சூழ்குவ - நிலத்திலும் சூழ்வரும், மாதிரம் ஓடுவ - திகாந்தரங்களிலும் ஓடும், வாரிதிசேர்குவ - கடல்மேலும் சேர்ந்திடும், பூதரம் மேவுவ - மலை மேலும் தாவிச் செல்லும், பூமலரோன் நகர் மீதினும் ஏகுவ - கமலமலரோனது சத்திய லோகத்திலும் சஞ்சரிக்கும், மீளுவ - மீண்டு போர்க்களத்திலும் புகும்.

பொழிப்பு : தேர்கள், பாதலம் பூமி திகாந்தரம் கடல் மலை சத்திய லோகமாகிய பல்வேறிடங்களிலும் கணப்பொழுதிற் சென்று களத்தில் மீண்டும் வரும்.

எண்டிசை சூழும் இருங்கடல் பாய்வன
வீண்டொடு நேமி வியன்கிரி வாவுவ
கொண்டலின் ஆரிருள் கொண்டுழி போகுவ
அண்டமுன் ஏகுவ அங்கவர் ஏறுதேர். 228

பொருள் : அங்கவர் ஏறுதேர் - அவ்விருவரும் ஊரும்தேர்கள், எண்திசை சூழும் இருங்கடல்பாய்வன - எட்டுத்திசையும் சூழ்ந்த புறவாழியெனும் பெருங்கடலிலும் பாய்ந்து செல்லும், விண்தொடும் நேமிவியன் கிரிவாவுவ - விண்ணளவுயர்ந்த சக்கரவாளவரை மேலும்

தாவிச் செல்வன, கொண்டலின் ஆரிருள் கொண்டுழி போகுவ - கார்முகில் போல் மண்டிய இருளுலகத்திலும் போய்வரும், அண்டம் முன் ஏகுவ -அண்டகோளகை எல்லைவரையும் போய் வருவனவாயின.

பொழிப்பு : அவர்தேர்கள், புறவாழிக்கடல், சக்கரவாளமலை, இருளுலகம் கடந்து அண்டகோளகை எல்லை வரையும் போய் மீண்டுவருவனவாயின.

பெயர்ந்திடு தேருறு பிழம்பவை காணுபு
தியங்கினர் நான்முகர் தெரிந்திலர் சீருரு
மயங்கினர் ஆதவர் மருண்டனர் வானவர்
உயங்கினர் பாருளர் உலைந்தனர் நாகரே. 229

பொருள் : பெயர்ந்திடுதேருறு பிழம்பவை காணுபு - இவ்வாறு போய்வரும் தேரிலிருந்துவரும் ஒளிக்கற்றையைக் கண்டு, நான்முகர் தியங்கினர் - பிரமர்களும் திகைத்தனர், ஆதவர் சீருருதெரிந்திலர் மயங்கினர் - சூரியர்களும் ஒளியையன்றிச் சிறந்த உருவைக் காணாது மயங்கினர் - வானவர் மருண்டனர் - தேவர்கள் மருட்கை கொண்டனர், பாருளர் உயங்கினர் - புவியிலுள்ளவர் வருந்தினர், நாகர் உலைந்தனர் - பாதலவாணரும் உலைந்துதடுமாறினர்.

பொழிப்பு : தேரிலெழும் ஒளிக்கற்றையைக் கண்டதல்லது, தேரின் உருவத்தை எவரும் கண்டிலர்; அதனால் பிரமாவும் சூரியனும் தேவரும் புவியிலுள்ளவரும் பாதலவாசிகளும் பெரிதும் திகைத்து வருந்தி மருண்டு மயங்கி வாடினர்.

முதிர்ந்திடு போரினர் முழங்கிய தேர்செல
அதிர்ந்தது பாருல கலைந்தன வேலைகள்
பிதிர்ந்தன மால்வரை பிளந்தது வான்முக
டுதிர்ந்தன தாரகை உகுந்தன கார்களே. 230

பொருள் : முதிர்ந்திடுபோரினர் முழங்கிய தேர்செல - கடும் போர் புரிவோரது தேர்கள் பெருமுழக்கத் தோடு செல்ல - பூமி அதிர்ந்தது,

பூமிநடுங்கியது வேலைகள் அலைந்தன - வரம்பு கடந்து கடல்கள் அலைந்தன, மால்வரை பிதிர்ந்தன - பெரியமலைகள் பிளந்தன, வான்முகடு பிளந்தன - வானமுகடும் வெடித்தது, தாரகை உதிர்ந்தன - உடுக்கணங்கள் உதிர்ந்தன, கார்கள் உகுந்தன - முகில்கள் வீழ்ந்தன.

பொழிப்பு : போரிடுவோர் தேர்கள் முழக்கத்தோடு ஓடுவதால், பூமிநடுங்கியது, கடல்கள் அலைமோதின, மலைகள் பிதிர்ந்தன, வான்முகடு பிளந்தது உடுக்கள் உதிர்ந்தன, முகில்கள் வீழ்ந்தன.

வேறு

தேரிவை இரண்டு மாகித் திகழுழி தண்ட மெங்குஞ்
சாரிகை வருத லோடுஞ் சண்முகன் மீது செல்லச்
சூரெனும் அவுணர் கோமான் தொலையுநாள் எழிலி பொங்கி
ஆரழல் மழைகான் றென்ன அடுசரமாரி தூர்த்தான். 231

பொருள் : தேர் இவை இரண்டுமாகித் திகழும் மூதண்டம் எங்கும் சாரிகை வருதலோடும் - தேர்கள் இரண்டும் இவ்வாறு விளங்கும் பழைய அண்டம் முழுவதிலும் சாரிதிரிந்து வரும் போது, சூரெனும் அவுணர்கோமான் சண்முகன் மீது செல்ல - சூரனாகிய அசுரேந்திரனானவன் சண்முகப்பிரான் மேலே செல்லுமாறு, தொலையும் நாள் எழிலிபொங்கி - கடையுக காலத்தில் ஊழிமுகில்கள் பொங்கியெழுந்து, ஆரழல் மழைகான்றென்ன - செறிந்த அக்கினிமழை பொழிவது போல், அடுசரமாரி தூர்த்தான் - அழிக்கும் சரங்களை மழைபோல ஏவினான்.

பொழிப்பு : தேர்கள் அண்டம் அடங்கலும் சாரிதிரிகையில் சூரனானவன் சண்முன் மீது கற்பமுடிவுகாலத்து முகில்கள் தீமழைபொழிந்தது போலச் சரங்களைப் பொழிந்தான்.

மழுப்படை அநந்த கோடி வச்சிரந் திகழ்முச் சென்னிக்
கழுப்படை அநந்த கோடி கப்பணம் அநந்த கோடி
கொழுப்படை அநந்த கோடி குலிசம்வேல் அநந்த கோடி
எழுப்படை அநந்த கோடி இடையிடை இடிபோல் உய்த்தான். 232

பொருள் : மழுப்படை அநந்தகோடி, அநந்தகோடி மழுப்படைகளும், வச்சிரம் திகழ் முச்சென்னிக்கழுப்படை அநந்த கோடி - அந்த கோடி வச்சிரம் முத்தலைச் சூலங்களும், கப்பணம் அநந்தகோடி - எண்ணற்ற கோடி நெரிஞ்சிமுட்படையும், குலிசம் வேல் அநந்த கோடி - குலிசமும் வேலும் அந்த கோடியும், எழுப்படை அந்தகோடி - எழுப்படைகள் அந்தகோடியும், இடையிடை இடிபோல் உய்த்தால் - அந்தச் சரமழையில் இடையிடையே இடியேறு போலச் செல்லவிட்டான்.

பொழிப்பு : சரமழையினிடையே இடியேறு போல முழங்கிச் செல்லுமாறு மழுப்படையும் வச்சிரமும் முத்தலைச் சூலமும் கப்பணமும் குலிசமும் வேலும் எழுப்படையும் ஆகியபடைகளை எண்ணில்லாத கோடிக்கணங்கானவற்றை ஏவினான்.

கூற்றுயிர் குடிக்குந் துப்பிற் கொடும்படை மாரிதன்னை
ஆற்றலின் அவுணர் கோமான் விடுத்துழி அவற்றை யெல்லாங்
காற்றெனப் பகழி தூண்டி முறைமுறை கடிதிற் சிந்தி
மாற்றினன் திரிந்தான் ஐயன் முதண்ட வரைப்பு முற்றும். 233

பொருள் : கூற்று உயிர் குடிக்கும்துப்பில் கொடுஞ் சரமாரிதன்னை - கூற்றனது உயிரையும் குடிக்கவல்ல கொடிய பாணமழையை, ஆற்றலின் அவுணர் கோமான் விடுத்துழி அவற்றையெல்லாம் - வலியால் சூரபன்மன் ஏவியபோது அப்படைகளையெல்லாம், காற்றெனப்பகழி தூண்டி முறைமுறை கடிதிற்சிந்தி - வாயுவேக அம்புகள் தூண்டி முறைமுறையாக விரைவில் அழிவுசெய்து, ஐயன்மாற்றினன் பெருமான் செயலறச்செய்து, முதண்டவரைப்பு முற்றும் திரிந்தான் - இவ்வண்டம் முழுவதும் சாரிவருவாராயினார்.

பொழிப்பு : காலனுயிரையும் கவரும் கொடிய படைகளை மழை போலவே சூரன் ஏவுதலும் வாயுவேகமாக வாளிகள் தூவி அவற்றைச் செயலறச் செய்தவாறே பெருமான் அண்டம் முழுவதும் சாரிவருவாராயினார்.

இத்திறந் திரிந்த செவ்வேள் இடைதெரிந் தேழொ டேழு
பொத்திரந் தன்னைத் தூண்டிப் புகழ்றும் அவுணர் செம்மல்
சித்திரத் தேரும் மாவின் தொகுதியுஞ் சிந்தி நீக்கத்
கைத்தனு வோடுந் தீயோன் கதுமெனப் புவிக்கண் உற்றான். 234

பொருள் : இத்திறம் திரிந்த செவ்வேள் இடைதெரிந்து - இவ்வாறுசாரிதிரிந்த பெருமான் தருணம்நோக்கி, ஏழொடு ஏழுபொத்திரம் தன்னைத்தூண்டி - பதின் நான்கு பாணங்கள்செலுத்தி, புகழுறும் அவுணர்செம்மல் சித்திரத்தேரும் - புகழமைந்த சூரனாம் அசுரேந்திரனின் அழகிய தேரையும், மாவின் தொகுதியும் சிந்தி நீக்க - பூண்டமாக்களையும் சிதைத்தழிக்க, கைத்தனுவோடு சூரன் கதுமெனப் புவிக்கண் உற்றான் - கைவில்லோடு சூரன் விரைந்து சேமத்தேரில் பாய்ந்தான்.

பொழிப்பு : சாரி வந்த சண்முகனார் தக்கதருணத்தில் பதினான்கு கணை ஏவிச் சூரபன்மனின் அழகிய தேரையும் குதிரைகளையும் சிந்தினார், உடனே அவனும் சேமத்தேரில் பாய்ந்தான்.

நானுடை வரிவில் வாங்கி நண்ணலன் நஞ்சு பில்கும்
ஏனுடை வயிர வாளி எண்ணில தூண்டிஏற்பத்
தானுவின் மதலை கண்டு தன்பெருஞ் சிலையைக் கோட்டித்
தூணிகொள் கணையின் மாரி தொடுத்தவை துணித்து விட்டான். 235

பொருள் : நண்ணலன் நாணுடைவரிவில்வாங்கி - சூரன் நாணுடையதான வில்லை வளைத்து, நஞ்சுபில்கும் ஏனுடைவயிர வாளி எண்ணில தூண்டி ஏற்ப - நஞ்சுமிழும் வலிமிக்க வச்சிரவாளிகள் எண்ணிறந்தவற்றை ஏவி எதிர்க்க, தானுவின்ம தலைகண்டு தன் பெருஞ் சிலையைக் கோட்டி - சிவகுமாரரும் கண்டு தம்பெரிய வில்வளைத்து, தூணிகொள் கணையின் மாரி தொடுத்து அவை தொலைத்துவிட்டான் - தூணியிலுள்ள வாளிகளை மழைபோல ஏவி அவற்றைத் தொலைவு செய்தார்.

பொழிப்பு : சேமத்தேரில் சென்ற சூரன் வில்வாங்கி வலிமிக்க எண்ணிறந்தவாளிகளைத் தூண்டி எதிர்த்தலும், சிவகுமாரரும் கண்டு வில்வளைத்து வாளிமழை தொடுத்து அவற்றைத் துணிபடுத்தினார்.

துணிப்புறும் எல்லை வல்லே சுடர்க்கணை அநந்த போடி
தணப்பற விடுத்த லொடுஞ் சண்முகன் அவற்றையெல்லாங்
கணைப்பெரு மழையால் மாற்றிக் காசிபன் தனது செம்மல்
அணிப்படு தோள்மேற் பின்னும் ஆயிரம் பகழி உய்த்தான். 236

பொருள் : துணிப்புறும் எல்லைவல்லே - துணிப்புண்ட போது விரைவிலே, சுடர்க்கணை அநந்தகோடி தணப்பறவிடுதலோடும் - சுடர்விடும் அநந்த கோடி வாளிகளை இடைவிடாது சூரன் தூண்டுதலும், சண்முகன் அவற்றையெல்லாம் - ஆறுமுகன் அச்சரங்கள் முற்றையும், கணைப்பெருமழையால் மாற்றி - தமது பாண மழையினாலே மாற்றி, காசிபன் தனது செம்மல் - காசிபமுனிவர் புத்திரன் சூரனின், அணிப்படுதோள் மேல் - அணிகள் பொருத்திய புயங்களில், பின்னும் ஆயிரம் பகழி உய்த்தான் - சென்று படுமாறு பின்னரும் ஆயிரம் பாணம் தொடுத்தார்.

பொழிப்பு : தன்வாளிகள் துணிபடுதலும் இடைவிடாது பின்னும் பலகோடி பாணம் சூரன் தூண்டவே, சண்முகனும் கணை மழையால் மாற்றி அவன் தோள் மீது செல்லுமாறு ஆயிரம் சரம் தூண்டினார்.

ஊழியின் முதல்வன் மைந்தன் ஓராயிரங் கணையுஞ் சூரன்
பாழியம் புயத்து மீது படுதலுங் கடிதே இற்றுச்
சூழுறச் சீதறிற் றம்மா தொலைவிலா வயிரங் கொண்ட
காழ்க்ளிர் வரைமேல் வீழ்ந்த கன்மழைத் தன்மை யேபோல். 237

பொருள் : ஊழியின் முதல் வன்மைந்தன் ஓராயிரங்கணையும் - ஊழிமுதல்வனாம் அவன் சேய்விட்ட ஆயிரம்பாணமும், சூரன் பாழியம் புயத்து மீதுபடுதலும் - சூரனது பருத்தவச்சிரத் தோளிலே பட்டமாத்திரமே, கடிதே இற்றுச் சூழுறச்சிதறிற்றம்மா - விரைந்து துகளாகிச் சுற்றுமுற்றும் சிதறியது, வயிரங்கொண்ட காழ்கிளர்

வரை மேற் சிந்தும் கல்மழைத் தன்மையே போல் - வயிரமணியாலான உறுதிமிக்கமலை மீது பெய்த கல்மழையின் தன்மை போலப் பொடியாய்ப் போயின அப்பாணம்.

பொழிப்பு : வயிரமணியாலான மலைமீது பெய்த கல்மழையின் கற்கள் யாவும் பொடியாகி உதிர்வது போலவே சூர்தோளிற்பட்ட கணைகளும் பொடிபட்டுப் போயின. இதனால் அவன் வச்சிரயாக்கையின் அழிவின்மை அறியப்படும்.

அந்தமில் வன்மை சான்ற அவுணன்மற் றதனை நோக்கி
முந்துறு வெகுளி தூண்ட முறுவலும் உயிர்ப்புந் தோன்ற
எந்தைதன் மொய்ம்பிற் செல்ல இராயிரம் பகழி வாங்கிச்
சிந்தையிற் கடிது தூண்டித் தேவரும் மருள ஆர்த்தான். 238

பொருள் : அந்தமில்வன்மை சான்ற அவுணன் மற்றதனை கோக்கி - அழியாதவலிமிக்க சூரபன்மன் அதனைப்பார்த்து, முந்துறுவெகுளிதூண்ட முறுவலும் உயிர்பும் பொங்க - முற்படும் கோபம் தூண்டப் பெருநகையும் வெய்துயிர்ப்பும் எழ, எந்தை தன் மொய்ம்பிற்செல்ல - எம்பிரானின் தோளே குறியாகச் செல்லுமாறு, இராயிரம்பகழி வாங்கிச் சிந்தையில் கடிதுதூண்டி - இராயிரம் அம்புகளைத்தொடுத்து மனத்திலும் விரைநது செல்லுமாறு செலுத்தி, தேவரும் மருள ஆர்த்தான் - தேவரும் மருளுமாறு ஆர்த்தான்.

பொழிப்பு : அழியாவரம் பெற்ற சூரன் கந்தன் கணையின் செயல்கண்டு, கோபத்தோடு நகையும் வெய்துயிர்ப்பும் தோன்ற இராயிரம் கணைகளை எம்பிரான் தோளுக்குக் குறியாகச் செலுத்தி ஆர்ப்பரித்தான், தேவர்களும் மருண்டனர்.

உட்டெளி வுற்றோர் காணும் ஒப்பிலா முதல்வன் தோள்மேல்
விட்டிடு பகழி முற்றும் வெந்துவெந் துகள தாகிப்
பட்டன திசைகள் முற்றும் பரந்தன பரத்தின் மேலான்
கட்டழல் அதனால் மாய்ந்த காமவேள் யாக்கை யேபோல். 239

பொருள் : உட்டெளிவுற்றோர்காணும் ஒப்பிலா முதல்வன் தோள்மேல் விட்டிடு பகழி முற்றும் - மெய்யுணர்ந்து தெளிந்த உள்ளத்தராம் ஞானிகளே கண்டுணரும் சமானாதீதராம் பெருமான் தோள் மீது விடுத்த அம்புகள் முற்றும் அணுகுமளவிலேயே, வெந்து வெந்துகளதாகிப்பட்டன திசைகள் முற்றும் பரந்தன - வெந்து நீறாகி வெறுந்துகளாகித் திசைகளெங்கும் பரந்துபோயின, பரத்தின் மேலோன் கண்தழலதனால் மாய்ந்த காம வேள் யாக்கையே போல் - பராபரனாம் சிவனது நெற்றிக்கண் தீயால் வெந்து மடிந்த மன்மதனது உடம்பு நீறானது போலவே சூரன் விட்ட அம்புகளும் பிரானைத் தீண்டுமுன்னே நீறாய் முடிந்தன என்பதாம்.

பொழிப்பு : சிவனது நெற்றிக் கண் நெருப்பால் மாண்டமன்மதன் உடம்பு சாபரானவாறு சூரன் விட்ட அம்புகளும் பிரானைத் தீண்டாமலே தூரத்தில் வெந்துகளாயின.

குறிப்பு : 228, 229 ஆகிய இருபாடலிலும் சூரனும் குமரப்பிரானும் பிறிதொன்றாலும் அழியாத பேராற்றல் உடையவர் என்பதும், சூரன் யாக்கை வேலாலன்றி வேறெதனாலும் ஊறுபடுவதன்று எனவும் உணர்த்தப்பட்டன.

ஆங்கது காலை தன்னில் அறுமுகம் படைத்த ஐயன்
நீங்கரு நெறியால் உய்த்த நெடுஞ்சரம் அனைத்தும் மாற்றிப்
பாங்கமர் வயவர் மீதும் பாரிடப் படைகள் மீதுந்
தீங்கணை அழுத்த லுற்றான் தேவரை இடுக்கண் செய்தான். 240

பொருள் : ஆங்கது காலை தன்னில் - அப்போது, அறுமுகம் படைத்த அண்ணல் - ஆறு மாமுகப் பெருமான், நீங்கரும் நெறியாலுய்த்த நெடுஞ்சரம் அனைத்தும் மாற்றி - இலக்குமாறாது செல்லவல்ல நீண்ட சரமாரி அனைத்தையும் தன்சரங்களாலே மாற்றி, பாங்கமர் வயவர்மீதும் பாரிடப்படைகள் மீதும் - பெருமான் பாங்கிலுள்ள வீரர் மேலும் பூதசேனை மேலும், தீங்கணை அழுத்தலுற்றான் - கொடிய கணைகளை அழுந்துமாறு ஏவினான், தேவரை அலக்கண் செய்தான் - தேவர்களை அல்லலுறுமாறு செய்த தீயனாம் சூரன்.

பொழிப்பு : அவ்வேளை செவ்வேட்பெருமான் செலுத்திய சரங்களையெல்லாம் மாற்றி வீரர் மேலும் பூதர் மேலும் தீக்கணைகள் அழுந்தச் செலுத்தினான் தேவர்களை அல்லலுறச் செய்த சூரபதுமன்.

தன்னிணை தானே யாகி நின்றிடுந் தனிவேல் வீரன்
அன்னதோர் தன்மை கண்டோ ராயிரம் பகழி பூட்டித்
துன்னலன் குனித்த சாபந் துணித்தனன் துணியா முன்னம்
பின்னுமோ சிலையை ஏந்திப் பெருமுகில் இரிய ஆர்த்தான். 241

பொருள் : தன்னிணை தானேயாகி நின்றிடுதனிவேல் வீரன் - தனக்கு நிகராவார் தானேயன்றிப் பிறரெவருமில்லாத மேலான வேற்கைப்பெருமான், அன்ன தோர்தன்மை கண்டு - அந்தச் சூரன் செயலைக்கண்ணுற்று, ஓர் ஆயிரம் பகழி பூட்டி - ஓராயிரம் வாளிகளை வில்லிலே தொடுத்து, துன்னலன் குனித்த சாபம் துணித்தனன் - சூரன்வளைத்த வில்லை வெட்டினார், துணியாமுன்னம் - வெட்டுண்ட உடனே, பின்னுமோர் சிலையை ஏந்தி - மீண்டும் ஒரு சேமவில்லை எடுத்து, பெருமுகில் இரிய ஆர்த்தான் - பெரிய மேக முழக்கமும் பின்வாங்குமாறு பேராரவாரம் செய்தான்.

பொழிப்பு : வீரர் பூதர் மேல் சூரன்வாளி தொடுத்தது நோக்கிய நிகரில்லாத வேல் வீரர் ஆயிரம் கணைஏவிச் சூரனது வில்லை வெட்ட அவன் சேமவில்லொன்றை எடுத்து மேக முழக்கமும் மெலிந்ததாகுமாறு வீர முழக்கம் செய்தான்.

இம்பரின் மலைந்த சூரன் இம்மென வருக்கொண் டேகி
அம்பரத் திடையே தோன்ற அன்னது குமரன் காணா
உம்பரிற் சென்று தாக்க ஓரிறை எதிர்ந்து நின்று
நம்பியொ டாடல் செய்வான் நவிலரும் மாயை சூழ்வான். 242

பொருள் : இம்பரின் மலைந்த சூரன் இம்மென அருக்கொண்டு ஏகி - இங்குநின்று போர் புரிந்த சூரன் "இம்" எனுமுன் உருக்கரந்து

போய், அம்பரத்திடையே தோன்ற - ஆகாயத்திலே தோற்றமாதலும், அன்னது குமரன் காணா உம்பரில் சென்றுதாக்க - அதைக்குமார சுவாமியார் கண்டு ஆகாயத்தில் சென்று பொரவே, ஓரிறை எதிர்ந்து நின்று - ஒரு நொடிப்பொழுது எதிர் பொருதுபின், நம்பியோடு ஆடல் செய்வான் நவிலரும் மாயை செய்வான் - செவ்வேளுடன் போராடுமாறு சொல்லொணாத மாயங்கள் புரிவானானான்.

பொழிப்பு : இங்கு நின்று பொருத சூரன் கணத்தில் உருக்கரந்து சென்று ஆகாயத்திலே தோன்ற, பெருமான் அங்குவந்து பொர ஒரு கணம் பொருது பின்னும் பெருமானுடன்சமராட நினைந்து பல மாயங்களைச் சூழ்ந்து செய்வானானான்.

குறிப்பு : நம்பி என்பது ஆண்களிற் சிறந்தோருக்குரிய பெயர். இங்கு முருகனுக்காய் வந்தது.

வீண்ணிடை நின்ற சூரன் விரைந்துடன் கரந்து சென்று
மண்ணிடை மீட்டுஞ் செல்ல மாநில வரைப்பிற் செவ்வேள்
துண்ணென வந்து வெம்போர் தொடங்கலுந் தோற்றமாற்றிக்
கண்ணகல் தூய நீத்தக் கனைகடல் நடுவண் ஆனான். 243

பொருள் : விண்ணிடை நின்ற சூரன் விரைந்துடன் கரந்துசென்று - வானத்தில் நின்று பொருத சூரன் விரைந்து மறைந்து சென்று, மண்ணிடை மீண்டுஞ் செல்ல - நிலத்தில் மீட்டுச் செல்ல, மாநிலவரைப்பிற் செவ்வேள் துண்ணெனவந்து - பெரிய நிலத்திலே செவ்வேளும் வேகமாகவந்து, வெம்போர் தொடங்கலும் - தோற்றம் மாற்றி - கடும் போர் தொடங்குதலும், சூரன் கரந்து, கண்ணகன் தூய நீத்தக் கனைகடல் நடுவணானான் - பரந்த இடமுள்ள சுத்த நீருள்ள ஒலிக்கின்ற புறவாழிக் கடலினிடமாகப் போய்நின்றான்.

பொழிப்பு : விண்ணில் நின்று பொருத சூரன் மறைந்து போய்மண்ணிலே நிற்க குமரன் அங்குவந்து பொரவே சூரன் அங்கிருந்து மறைந்து போய்ச் சுத்த நீர்ச்சமுத்திரத்தில் போய் நின்றான்.

ஆயிடை முருக வேள்சென் றடுசமர் இயற்றும் எல்லை
மாயையின் மறைந்து சூரன் மாதிர முடிவில் தோன்ற
ஏயென ஆண்டுஞ் செவ்வேள் ஏகியே நெடும்போர் ஆற்றக்
காய்கனல் உமிழும் வேலான் கரந்துபா தலத்தின் நின்றான். 244

பொருள் : ஆயிடை முருகவேள் சென்று அடுசமர் இயற்றுமெல்லை - அங்கும் முருகவேள் சென்று அடுசமர் புரிய, சூரன் மாயையின் மறைந்து மாதிர முடிவில் தோன்ற - சூரன்மாயமாக மறைந்து போய்த்திகாந்தரத்தில் தோன்றுதலும், செவ்வேள் ஏ என ஆண்டும் ஏகியே நெடும் போராற்ற - செவ்வேள் அங்கும் விரைந்தேகி நெடும் போர் புரியவே, காய்கனல் உமிழும் வேலான் - சுடும் தீயுமிழும் வேலுடைய சூரன், கரந்து பாதலத்திலானான் - அங்கிருந்து மறைந்து போய்ப்பாதல உலகிலே நின்றான்.

பொழிப்பு : சுத்த நீர்க்கடலிலே குமரன் சென்று பொரவே சூரன் மாயமாய் மறைந்து போய்த்திக்கின் அந்தத்தில் நிற்க, செவ்வேள் அங்குற்று அமர்புரியவே, சூரன் மறைந்து பாதலத்துற்றான்.

ஆறிரு தடந்தோள் வள்ளல் அதுகண்டு பிலத்து ளேகி
மாறமர் இயற்றும் எல்லை வல்லைதன் னுருவ மாற்றி
வீறுள சிமையச் செம்பொன் மேருவின் குவட்டின் நிற்ப
ஏறுடை முதல்வன் மைந்தன் இம்மென அங்கட் சென்றான். 245

பொருள் : அறிரு தடந்தோள் அண்ணல் அதுகண்டு பிலத்துள்ஏகி - ஆறிரண்டு பெரிய திருக்கரங்களுள்ள பெருமான் அவன் செய்கைகண்டு பாதலத்திற் சென்று, மாறமர் இயற்றும் எல்லை - எதிர்த்து அமர்புரியும் போது, வல்லைதன் உருவம் மாற்றி - சூரன் தனது உருக்கரந்து, வீறுள சிமயச் செம்பொன் மேருவின் குவட்டில் நிற்ப - சிறந்ததலையுள்ள பொன்வண்ண மேருமலைச் சிகரத்திலே போய்நிற்றலும், ஏறுடை முதல்வன் மைந்தன் இடபவாகனராம் சிவபிரானது குமாரர், இம்மென அங்கட் சென்றான் - இம்மென்னுமுன்னே அவ்விடம் சேர்ந்தார்.

பொழிப்பு : குமரப்பெருமான் பாதலத்திற் சென்று பொருதலும் இமைப்போதில் மறைந்து சென்று சிறந்த மகாமேருமலையின் சிகரத்தில் போய்நின்றான்.

மேருவின் சிகரம் நண்ணி வேலுடைத் தடக்கை வீரன்
பேரமர் இயற்றத் தீயோன் பின்னரும் ஆண்டு நீங்கி
நாரணன் உலகில் தோன்ற நம்பியுந் தொடர்ந்து போந்து
சூரெனும் அவுண னோடு தொல்சமர் ஆற்றி நின்றான். 246

பொருள் : வேலுடைத் தடக்கை வீரன் மேருவின் சிகரம் நண்ணிப் பேரமர் இயற்ற - வேற்கரத்திறைவராம் பெருமான் மேருமலையின் சிகரத்திலே போய்ப் பெருஞ்சமர் புரியவே, தீயோன் பின்னரும் ஆண்டு நீங்கி - சூரன்பின்னரும் அவ்விடம் விட்டகன்று, நாரணன் உலகில் தோற்ற நம்பியும் தொடர்ந்து போந்து - நாராயணனது வைகுந்த உலகில் சென்றுநிற்கவே குமரப்பிரானும் துரந்து போய், சூரெனும் அவுணனோடு தொல்சமர் ஆற்றிநின்றான் - சூரனாம் அசுரேந்திரனுடன் முன்போலத்தொடர்ந்து பொருதார்.

பொழிப்பு : வேற்கைப்பிரான் மேருச் சிகரத்தில் எய்திச்சமர்புரிதலும் சூரன் அங்கிருந்தகன்று வைகுந்த உலகிலே தோன்றி நிற்றலும் முருகப்பிரானும் தொடர்ந்து சென்று முன்போலவிடாது அமர்புரிவாரானார்.

ஆற்றிடு கின்ற காலத் தவுணர்கோன் அண்ட கோள
மேற்றிகழ் வாயில் செல்ல விமலனும் அங்கண் ஏகி
ஏற்றெதிர் மலையா அன்னான் ஏறிய இவுளித் தேரைக்
கூற்றுமழ் பகழி தன்னால் அட்டனன் கொற்றங் கொண்டான். 247

பொருள் : ஆற்றிடுகின்ற காலத்து - போராற்றிய போது, அவுணர்கோன் அண்ட கோள மேற்றிகழ் வாயில் செல்ல - சூரன் அண்ட கோளத்தின் மேலே விளங்கும் வாசலில் செல்லுதலும், விமலனும் அங்கண் ஏகி - அமலராம் பெருமானும் அங்கே சென்று, ஏற்று எதிர்மலையா அண்ணான் ஏறிய இவுளித்தேரை - எதிரேற்று

அமராற்றிச் சூரன் ஏறியூரும் குதிரை பூண்ட இரதத்தை, கூற்றுறழ் பகழிதன்னால் அட்டனன் கொற்றம் கொண்டான் - காலனுக்கு நிகரான பாணங்களால் அழித்து வெற்றி கொண்டார்.

பொழிப்பு : செவ்வேள் செருச்செய்தலும் சூரன் அண்டகோள வாயிலை அடைதலும் பிரானும் சென்று சமராற்றி அவனது தேரை அழித்து வெற்றி கொண்டார்.

கந்துக விசய மான்தேர் இற்றலுங் கடுங்கோன் மன்னன்
இந்திர ஞாலம் என்னும் எறுழ்மணித் தடந்தேர் தன்னைச்
சிந்தனை செய்த லோடுஞ் சேண்கிளர் செலவிற் றாகி
வந்திட அதன்மேல் ஏறி வல்லைபோர் புரிதல் உற்றான். 248

பொருள் : கந்துக விசயமான்தேர் இற்றலும் - தனது குதிரை பூண்ட பெருந்தேர் சிதைதலும், கடுங்கோல் மன்னன் - கொடுங்கோல் மன்னன் சூரன், இந்திரஞாலம் என்னும் எறுழ் மணித்தடந்தேர் தன்னைச் சிந்தனை செய்தலோடு - இந்திரஞாலமெனும் வலிய அழகிய பெருந்தேரை வருமாறு சிந்தையில் நினைதலும், சேண்கிளர் செலவிற்றாகி வந்திட - அவ்விரதம் விண்வழியாக வல்லே வந்துசேர, அதன் மேலேறிவல்லை போர்புரிதலுற்றார் - அத்தேர் மீதேறிவிரைந்து சமர்புரிவானானான்.

பொழிப்பு : தேர்சிதையவே சூரபன்மன் இந்திரஞாலத்தேரை அங்குவருமாறு சிந்தையில் நினையவே தேர் உடனே விண்ணாறாக விரைவில் வந்துற்றதும் அதில் ஏறி விரைந்து போர்புரிந்தான்.

மண்டமர் புரியும் எல்லை வள்ளல்தன் பகழி தன்னால்
அண்டம தடைந்த வாயில் அடைத்ததும் அப்பால் உள்ள
தண்டம தெல்லாஞ் செல்லாத் தன்மையுந் தகுவர் கோமான்
கண்டனன் நன்று நன்றென் றிறைத்தொழிற் காவ லென்றான். 249

பொருள் : மண்டமர்புரியுமெல்லை - பெருஞ்சமர் நிகழும் போது, வள்ளல்தன்பகழி தன்னால் அண்டமதடைந்தவாயில் அடைத்ததும்

- செவ்வேள் தம்பாணங்களாலே அண்டத்துள்ள வாயிலை அடைத்தமையும், அப்பாலுள்ள தண்டமது எல்லாம் செல்லாத் தன்மையும் - புற அண்டங்களிருந்து வந்த சேனைகளெல்லாம் உட்செல்ல மாட்டாது தடைபட்ட தன்மையும், தகுவர் கோமான் கண்டனன் - தானவரதிபனாம் சூரன் கண்டான், நன்று நன்றென் இறைத் தொழிற்காவல் என்றான் - எனது இறைமைத் தொழிலும் அதனைக்காத்திருப்பதும் மிகநன்று என்று பெருநகை புரிந்தான்.

பொழிப்பு : போர் நிகழும் போது குமரப்பிரான் கணைகளால் அண்டவாயிலானது அடைபட்டிருப்பதும், புறஅண்டத்துச் சேனை உட்புகமாட்டாது தடைபட்டிருப்பதும் கண்டு சூரபன்மன் தனது இறைமையும் காவலும் நன்றாயிருக்கிற தென ஏளனமாகக் கூறி நகைத்தான்.

இறைத்தொழில் அவுணர் செம்மல் ஏந்துதன் சிலையை வாங்கித்
திறத்தொடும் அநந்த கோடி செஞ்சரந் தூண்டி அண்ட
நெறிப்படு வாயில் பொத்து நெடுங்கணைக் கதவ முற்றும்
அறுத்துநுண் தூளி ஆக்கி அம்பரஞ் சுழல விட்டான். 250

பொருள் : இறைத்தொழில் அவுணர் செம்மல் - காவலனாகிய சூரபன்மன், ஏந்துதன் சிலையை வாங்கி - எடுத்த தன்வில்லை வளைத்து, திறத்தொடும் அநந்த கோடி செஞ்சரம் தூண்டி - திறலோடு அநந்த கோடி சிறந்த கணைகளைச் செலுத்தி, அண்ட நெறிப்படுவாயில் பொத்தும் - அண்டவழிக்கான வாயிலை மூடிய, நெடுங்கணைக் கதவம் முற்றும் - நீண்டகணைகளாலான கதவுகளையெல்லாம், அறுத்து நுண் தூளியாக்கி அம்பரம் சுழலவிட்டான் - அறுத்து நுண்ணிய துகள்களாக்கி ஆகாய வெளியிலே பறந்து சுழலவிட்டான்.

பொழிப்பு : சூரபன்மன் வளைத்தவில்லில் அநந்தம் வலிய அம்புதொடுத்தேவி அண்ட வழிக்கமைந்த அண்டவாயிலையடைத்த பாணங்களாலான கதவை வெட்டிச் சிதைத்தான்.

காவலன் அண்ட வாயிற் கணைகளின் கபாடம் நீக்கி
மாவொரு களிறுந் தேரும் வயவரும் வரம்பின் றாகி
ஓவரு நெறியின் அப்பால் உற்றதன் தானை தன்னைக்
கூவினன் வருக என்று குவவுத்தோள் கொட்டி ஆர்த்தான். 251

பொருள் : காவலன் அண்டவாயிற் கணைகளின் கபாடம் நீக்கி - சூரபன்மன் அண்ட வாயிலிலான பாணங்களாகிய கதவை வெட்டி நீக்கி, மாவொடுகளிறும் தேரும் வயவரும் - குதிரை யானை தேர்காலாள் ஆகி, வரம்பின்றாகி ஓவரு நெறியில் அப்பால் உற்றதன் தானைதன்னைக் கூவினன் - நால்வகையாய் அளவற்றதாய் ஒழிவற்று வந்து வழியிலே புறத்தே தடையுற்றதன் சேனைகளை வருமாறு அழைத்து, குவவுத்தோள் கொட்டி ஆர்த்தான் - திரண்டதன் புயங்களில் தட்டி அறை கூவிப்போருக்கழைத்தான்.

பொழிப்பு : சூரபதுமன் அண்டவாயிலில் அம்புகளாலான கதவைத்துகளாக அறுத்த பின் தடையுண்டு அப்பால் நிற்ற சதுரங்க சேனையையும் உள்ளேவருமாறு தோள் கொட்டி ஆர்த்தான்.

ஆர்த்திடு கின்ற காலத் தண்டத்தின் அப்பால் நின்ற
தேர்த்தொகை களிற்றின் ஈட்டந் திறல்கெழும் இவுளிப் பந்தி
சூர்த்திடும் அவுண வெள்ளந் துண்ணென ஈண்டை ஏகிப்
போர்த்தொழில் முயன்று செவ்வேள் புடையுறத் தெழித்துச் சூழ்ந்த. 252

பொருள் : ஆர்த்திடுகின்ற காலத்து சூரன் ஆர்த்த வேளையில், அண்டத்தின் அப்பால் நின்ற - புற அண்டத்தில் தடைபட்டுநின்ற, தேர்த்தொகை களிற்றினீட்டம் திறல் கெழும் இவுளிப்பந்தி சூர்த்திடும் அவுணவெள்ளம் - தேர் நிரையும் யானைக் கூட்டமும் திறல் மிக்க குதிரைப்பந்தியும் அச்சம்மிகும் அசுர வீரர் வெள்ளமுமாம் நால்வகைப்படையும், துண்ணென ஈண்டை ஏகி - காண்போர் நடுங்க இங்கு விரைந்தேகி, போர்த்தொழில் முயன்று - சமர்புரிதலில் ஊக்கமுடையவாய், செவ்வேள் புடையுறத் தெழித்துச் சுழ்ந்த- குமரப்பிரான் பாங்கரில் வீரமுழக்கத்தோடு வந்து சூழ்ந்தன.

பொழிப்பு : சூரபன்மன் ஆர்த்து அழைத்தலும், புறத்தே நின்ற இரதகசதுரகபதாதி ஆகிய சதுரங்க சேனையும் பிறர் அஞ்சும்படி போர்புரியும் ஊக்கத்தோடு வீரமுழக்கம் செய்து கொண்டு செவ்வேளைப் புடை சூழ்ந்து செறிந்தன.

நீணுதல் வீழியின் வந்த நிருமலக் கடவுள் தன்னை
ஏணொடும் அண்டத் தப்பால் இருந்திடு தானை சுற்றச்
சேணுறு நெறிக்கண் நின்ற திசைமுகன் முதலாந் தேவர்
காணுத லோடும் உள்ளங் கலங்கிமற் றினைய சொல்வார். 253

பொருள் : நீள் நுதல் விழியில் வந்த நிருமலக்கடவுள் தன்னை - சிவனது நீண்ட நெற்றிக் கண்தீயில் சம்பவித்த அமலராம் பிரானை, அண்டத்தப்பால் இருந்திடுதானை ஏணொடு சுற்ற - அப்புற அண்டங்களிலிருந்து வந்த சேனைகள் செருக்குடன் சூழ்ந்துவிடுதலும், சேணுறு நெறிக்கண் நின்ற திசை முகன் முதலாம் தேவர் - வான்வழிகளில் நின்ற நான்முகன் முதலாகவுள்ள தேவர்கள், காணுதலோடும் உள்ளம் கலங்கி - கண்டபொழுதே அச்சத்தால் மனங்கலங்கி, மற்றினைய சொல்வார் - பின்பு மேல்வருமாறு பேசுவாராயினர்.

பொழிப்பு : நெற்றிக்கண் நெருப்பில் உதித்த பிரானை அவுணப்படை சூழ்ந்ததனைக் கண்டபோதே பிரமன் முதலான அமரர் அஞ்சி மனங்கலங்கிப் பின்வருமாறு பேசுவாராயினர்.

குறிப்பு : அம்மை அரனார்கண்ணை அங்கையால் விளையாட்டாக மறைக்க வானசோதிகள் ஒளியிழக்க இருள் உலகை மூடவே, பிரான் நெற்றிக்கண் திறந்து ஒளிபிறப்பித்ததாலும், சர்வசங்கார காலத்தும் அந்நெற்றிக்கண்தீயே சகத்தை அழிப்பதாலும் அம்மகிமை விளக்க நீணுதல் விழி (நீள் + நுதல்விழி) எனச்சிறபபித்தார்.

காலமோ டுலகம் உண்ணக் கனன்றெழு கரிய தீயின்
கோலமோ அண்டத் தப்பாற் குரைபுனல் நீத்தந் தானோ
ஆலமோ அசனிக் கொண்மூ ஆயிர கோடி சூழந்த
சாலமோ யாதோ என்று தலைபனித் தரியல் போனார். 254

பொருள் : காலமோடு உலகம் உண்ணக்கனன்று எழுகரியதீயின் கோலமோ - அக்கினிப்பிரளய காலத்தில் உலகை எரித்துண்ணச் சுவாலித்தெழும் கரிய தீயின் கோலமோ, அண்டத்தப்பாற் குரைபுனல் நீத்தந்தானோ - பிருதுவி அண்டத்துக்கு மேலுள்ள அப்பு அண்டத்தில் ஒலித்தெழுந்துவரும் பிரளய வெள்ளமோ, ஆலமோ - அன்றெழுந்த ஆலகாலவிடந்தானோ, அசனிக் கொண்மூ ஆயிரகோடி சூழ்ந்த சாலமோ - இடிமுழங்கும் ஆயிரகோடி முகில்கள் ஒருங்கே கூடிவந்த குழாமோ, யாதோ என்று - இவற்றில் எதுவோ என்று, தலைபனித்து இரியல்போனார் - மிகஅஞ்சித் தலைநடுங்க ஓடினார்கள்.

பொழிப்பு : கற்பாந்த காலத்து வரும் தீயோ, சலப்பிரளய வெள்ளமோ, ஆலகாலவிடமோ, இடியுடன் வரும் ஊழிகால முகிலோ இங்குவரும் இப்பெரும் படை என்று வியந்தேங்கித் தேவர் தலை தெறிக்க ஓடினர்.

குறிப்பு : கரியதீ என்பது இல்பொருளுவமை உள்ளது செந்தீ ஒன்றே, அவுணரின் கரிய தோற்றமும் தீத்தொழிலும் ஆகிய பண்புகள் பற்றி உவமையான தீயையும் கரியதீயென விசேடித்துக் கூறினார்.

ஆயின காலை தன்னில் அண்டங்கள் தோறும் நின்ற
மாயிருந் தகுவன் தானை வந்துதன் மருங்கு சுற்றிப்
பாய்புனல் முகில்கான் றென்னப் படைத்தொகை வீசி ஆர்ப்பத்
தீயுரு வான செம்மல் சிறிதுதன் நாட்டம் வைத்தான். 255

பொருள் : ஆயின காலைதன்னில் - அப்போது, அண்டங்கள் தோறும் நின்ற மாயிரும் தகுவன் தானை - ஏனைய ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமிருந்த சூரனுடைய மிகப்பெரிய சேனைகள், வந்து தன்மருங்குசுற்றி - வந்துதன்னை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு, பாய்புனல் முகில்கான்றென்னப் படைத்தொகை வீசி ஆர்ப்ப - பரந்த மழையை முகில்கள் சோனையாகப் பொழிவது போல பல்வேறுபடைகளின் தொகையை வீசி ஆர்ப்ப, தீயுருவான செம்மல் சிறிதுதன் நாட்டம் வைத்தான் - ஞானத்தீவண்ணரான செவ்வேட் பெருமான் அப்படைகள் மீது சிறிதேதிரு நோக்கம் செய்தார்.

பொழிப்பு : அப்போது பல அண்டங்களிலுமிருந்த அசுரர் சேனைகள் நாற்புறமும் சூழந்து சோனாமழை போலப் பலபடைகளையும் சொரிந்து ஆர்ப்பரித்தலும் அங்கியுருவான குமரப் பெருமான் படைமேல் சிறிதேதம் பார்வையைச் செலுத்தினார்.

குறிப்பு : அக்கினி ஜன்மபூ என்பது குமரன் பெயர். தீயிலே பிறந்தவன் தீயின் வண்ணன் என்பது ஞானத்தீயாம்.

அடலையின் நலத்தை வீட்டி அரும்பெறல் ஆக்கஞ் சிந்தி
அடலையின் உணர்வின் றாகும் அவுணர்கோன் தானை முற்றும்
அடலையின் நெடுவேல் அண்ணல் அழலெழ விழித்த லோடும்
அடலையின் உருவாய் அண்டத் தொல்லுரு வழித்த மன்னோ. 256

பொருள் : அடல் அயில் நலத்தைவீட்டி - சமைத்தல் உண்ணுதலுக்குரிய செல்வத்தை யாகத்தியில் அவியாக ஈந்து, அரும் பெறல் ஆக்கம்சிந்தி - சிவனருளால் அரும் பேறாகப் பெற்ற செல்வச் சிறப்புகளை அழியவிட்டு, அடலையில் உணர்வின்றாகும் அவுணர் கோன் தானை முற்றும் - போர்முகத்திலே சினத்தாலும் செருக்காலும் அகமும் புறமும் கண்ணும் கருத்தும் இழந்துள்ள சூரபன்மனின் சேனை முழுதும், நெடுவேல் அண்ணல் அடல் ஐயில் அழலெழ விழித்தலோடும் - நீண்ட வெற்றிவேற்கரராகும் பிரானார் சங்காரத்தலைவராம் உருத்திர மூர்த்திபோல அழல் எழுந்து போய்ப்பற்றுமாறு நோக்கியருளுதலும், அடலையின் உருவாய் அண்டத்தொல்லுரு அழித்த மன்னோ - வெந்த சாம்பரின் உருவமாகி எங்கும் பரந்து படிந்து அண்டத்தின் இயல்பான படைப்பழகை மாற்றிச் சாம்பலினுருவாக்கிவிட்டது.

பொழிப்பு : போகத்திரவியங்களை யாகத்தீக்கு அவியாக்கி சிவனிடம் பெற்ற வரப்பிரசாதமான செல்வங்களை அழியவிட்டு, சினமும் செருக்கும் காரணமாக அறிவிழந்து குருடனாகி நிற்கும் சூரனின் சேனைமுற்றும் சங்காரருத்திர மூர்த்திபோலவே முருகன் தீப்பற்றுமாறு நோக்கவே வெந்து நீறாய் இயற்கையான அண்டத்தின் அழகிய கோலம் மறைய பரந்து சாம்பரின் கோலமாக்கியது. அவுணன் தானை வெந்த சாம்பராய் எங்கும் பரந்து தொல்லுரு மறைத்த என உரைக்க.

குறிப்பு : அடல், சமைத்தல், அடலை - போர்முனை, அடல் ஐ - சங்கார உருத்திரன், அடலை - சாம்பர்.

முற்படும் அனிக முற்றும் முடிதலும் முடித லின்றி
எற்படும் அண்டத் தப்பால் ஈண்டிய பதாகி னிக்குள்
பிற்பட அளப்பில் சேனை பெயர்ந்துமற் றீண்டை துன்னிச்
சிற்பரன் குமரன் தன்பாற் படைமுறை சிதறிச் சூழ்ந்த. 257

பொருள் : முற்படும் அனிகம் முற்றும் முடிதலும் - முன்வந்த அவுணசேனை முழுவதும் முடிதலு, முடிதலின்றி எற்படும் அண்டத்தப்பால் ஈண்டிய பதாகினிக்குள் - முடிவில்லாமல் ஒளிரும் அண்டத்துக்கப்பால் வந்து நிறைந்த சேனைக்குள்ளே உள்ளவற்றில், பிற்பட அனப்பில்சேனை - பின்னேயும் அளவீறந்த சேனை, பெயர்த்தும் மற்றிண்டை துன்னி - மீளவும் வந்து இங்கே செறிந்து, சிற்பரன் குமரன் தன்பால் - ஞானமுதல்வனாம் சிவன் மகன் பாங்கரில், படைமுறை சிதறிச் சூழ்ந்த - படைகளை முறைபெறத் தூண்டியவாறே சூழ்ந்தன.

பொழிப்பு : முன்புகுந்த சேனை பிரான் பார்வையால் முற்றவும் முடியவும் பின்னேயும் எண்ணிறந்த சேனை மீளவும் வந்து சிவகுமாரர் பாங்கிலே படைகள் ஏவிச்சூழ்ந்தன.

பரப்பொடு மிடைந்த தானைப் பரவையை நோக்கி ஐயன்
நெருப்புமிழ் தன்மைத் தென்ன நெட்டுயிர்ப் பனில முந்தி
உரப்பினன் சிறிதே அற்றால் உம்பரில் குவிந்த பூளைப்
பொருப்பிடை அழல்புக் கென்னப் பூழியாய் உலகம் போர்த்த. 258

பொருள் : பரப்பொடு மிடை ந்த தானைப்பர நோக்கி ஐயன் - பெரும் பரப்பில் செறிந்து சூழுகின்ற சே த்தரத்தைக் கண்டபெருமான், நெருப்பு உமிழ்தன்மைத்து என நெட்டுயிர்ப்பு அனிலம் உந்தி சிறிதே உரப்பினன் - நெருப்பு உமிழ்ந் தன்மைபோலப் பெருமூச்சாகிய காற்றைத் தூண்டிச்சிறிதே உறுக்கினார், அற்றால் - அந்த செயலால், உம்பரில் குவிந்த

பூளைப் பொருப்பிடை அழல்புக்கென்ன - விண்ணுறக் குவிந்த பஞ்சுமலை மீது தீ புகுந்தால் பஞ்சுமலையாதாமோ அது போலவே, பூழியாய் உலகம் போர்த்த - சேனைகணத்தில் வெந்து சாம்பராய் உலகைப் போர்த்தது.

பொழிப்பு : பெருமான் சூழ்ந்த சேனைப் பெருக்கை நோக்கி தீயுமிழ்வது போலச்சுடுமூச்சு விட்டுச் சிறிதே உரப்பினார் அதனாலே பஞ்சுமலை தீபற்றி வெந்தது போலச் சேனைவெந்து சாம்பலாகி உலகில் பரந்தது.

மாட்சியின் உலவு சேனை வடிவெலாம் விடுத்துத் தொல்லை
மாட்சியின் உயிரே தாங்கி மலைகுமென் றுன்னிப் பின்னுஞ்
சூட்சியின் வளைந்த வாபோற் சோதிவேற் குமரன் தன்பாற்
சூட்சியின் மேவிற் றம்மா தூயநுண் ணுகளின் ஈட்டம். 259

பொருள் : மாட்சியின் உலவுசேனை வடிவெல்லாம் விடுத்து - மாண்போடு உலாவிய சேனைகளெல்லாம் தமது ஊனுடம்பாகிய தூலவடிவைவிட்டு, தொல்லை மாட்சியின் உயிரேதாங்கி - தொன்மையாய் என்றுமுள்ளதாம் சிறப்பாகிய உயிர் எனும் சூக்கும வடிவெடுத்து, பின்னும் மலைதுமென்று சூழ்ச்சியின் வளைந்தவாபோல் - பின்னரும் பொருவோம் என்று ஒரு சூழ்ச்சியோடு வளைந்தவாறு போல சோதிவேற் குமரன் தன்பால் - சுடர்காலும் வேலேந்திய குமரப்பெருமான் பாங்கரிலே, தூயநுண்துகளின் ஈட்டம் சூழ்ச்சியின் மேவிற்றம்மா - தூய்மையான நுண்ணிய தூசிக்கற்றை சூழ்ச்சியாக வந்தணைந்தது.

பொழிப்பு : மாட்சியுள்ள தூலமான ஊனுடம்பைவிட்டு மூலமான சூக்கும உருவமாகும் உயிரின் உருவுடன் படைகள் மீண்டும் குமரனை வஞ்சத்தோடு சூழ்ந்தது போல வெந்த தூய நுண்ணிய சாம்பர் முருகனைச் சூழ்ந்தது.

அந்தமில் தானை முற்றும் அத்தன்ஓர் உங்கா ரத்தால்
வெந்துக ளாகப் பின்னும் மேலையண் டத்துள் நின்ற
தந்தியும் பரியுந் தேருந் தானவப் படையும் ஆர்த்து
வந்துவந் தயலிற் சூழ வரம்பிலா முதல்வன் கண்டான். 260

பொருள் : அந்தமில் தானை முற்றும் - எல்லையில்லாத சேனைமுற்றும், அத்தன் ஓர் "ஊம்" காரத்தால் - பிரானின் ஊம்கார ஒலியால் வெந்து சாம்பராக, பின்னும் - மேலும் தொடர்ந்து, மேலை அண்டத்துள்நின்ற - ஏனைய அண்டங்களில் நின்ற, தந்தியும் பரியும் தேரும் தானவப்படையும் - யானை குதிரை தேர் அவுணராகிய படைகள், ஆர்த்து வந்து வந்து அயலில் சூழ - ஆர்ப்பரித்தவாறு மென்மேலும் வந்து தம்மயலிலே சூழுதலும், வரம்பிலா முதல்வன் கண்டான் - வரம்புகாணொணாப் பிரான் கண்டார்

பொழிப்பு : பிரான் தமது ஊம்கார உரஒலியாற்சேனை அழிந்த பின்னும் புறத்தே நின்ற கசரததுரகபதாதியாம் நால்வகைப்படையும் மென்மேலும் வந்து சூழ்வதைக்கண்டார்.

திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன்பொருள் நிறுக்கு மாற்றால்
உருத்திர சரும னாகி உற்றிடு நிமலன் வெம்போர்
அருத்திகொள் கணிச்சி சூலம் ஆழிதண்டெழுவ தாகுங்
கரத்தினிற் படைகள் தம்மை நோக்கியே கழற லுற்றான். 261

பொருள் : திருத்தமிழ் மதுரைதன்னில் சிவன் பொருள் நிறுக்கு மாற்றால் - திருத்தக்க தமிழ்தழையும் மதுரை நகரிலே ஆலவாயுடையார் அருளிய அகப்பொருள் நூலின் பொருளுரை இதுவுவெனச் சீர்தூக்கிக் காட்டும் பொருட்டு, உருத்திர சருமனாகி உதித்திடு நிமலன் - உருத்திர சன்மனாகத் தோன்றிய நிமலராகிய குமாரப் பெருமான், வெம்போர் அருத்திகொள் - வெய்யபோரிலே விருப்புடைய, கணிச்சி சூலம் ஆழி தண்டு எழுவதான - கணிச்சியும் சூலமும் ஆழியும் தண்டும் எழுவும் என்னும், கரத்தினிற் படைகள் தம்மை நோக்கியே கழறலுற்றான் - திருக்கரத்திருக்கும் ஐம்படைகளையும் பார்த்துப் பின்வருமாறு பணித்தருவாராயினர்.

பொழிப்பு : இறைவனார்களவியல் நூலுக்கு உரைகண்ட சங்கப்புலவரிடையே சிறந்த பொருள் இதுவே என்றறியாத ஐயந்தீர்க்க வேண்டி உருத்திர சன்மனாகவந்து உரைகளைக் கேட்டு நக்கீரருரையே உரையெனச் சீர்தூக்கித் தெளிவித்த சிவகுமாரர் திருக்கரத்திருந்த ஐம்படைகளையும் நோக்கி மேல்வருமாறு பணித்தருளுகின்றார்.

குறிப்பு : கூடல் நகரில் (மதுரையில்) ஆலவாய்ச்சிவனும் குமரக்கடவுளும் சங்கப்புலவருடன் இருந்து தமிழைச் செம்மை செய்ததாலும் நாயன்மார்முதலிய அருளாளர் பாடல்கள் அமைதலாலும் கடவுளர் அற்புதம்பல அவ்வாக்குகளால் நிகழ்ந்ததாலும் திருத்தமிழ் எனச்சிறப்புற்றது.
இறைவனார்களவியல் நூலுரையில் உருத்திரசன்மர் தன்மை அறியலாம்.

வென்றியம் படைகாள் கேண்மோ விரைந்துடன் தழுவீ நம்பாற்
சென்றிடும் அனிகந் தன்னைச் சென்னெறி பெறாமல் அப்பால்
நின்றிடு படையை எல்லாம் நீவிர்பல் லுருக்கொண் டேகிக்
கொன்றிவண் வருதி ரென்று கூறிமற் றிவற்றைத் தொட்டான். 262

பொருள் : வென்றியம்படைகாள் கேண்மோ - செல்லும் செருமுனையில் செயமேகாணும் திவ்விய படைகளே நும்பணியைக் கேட்பீர், விரைந்துடன் தழுவி நம்பாற் சென்றிடும் அனிகம் தன்னை - விரைந்து ஒன்றிணைந்து எம்முன் எய்திய படைகளையும், செல்நெறிபெறாமல் அப்பால் நின்றிடும் படையை எல்லாம் - உட்செல்ல வழிபெறாது புறத்தே தடைபட்டு நிற்கும் படைகளையுமாக எல்லாவற்றையும், நீவிர் பல்லுருக்கொண்டு ஏகி - நீவிர் பலவேறு படைகளாய் வேண்டுருக் கொண்டு சென்று, கொன்று இவண்வருதிர் என்று கூறி - கொன்றுவென்று மீண்டு இங்கு வருக எனக்கூறி, மற்றிவற்றைத் தொட்டான் - அந்த ஐந்து திவ்வியபடைகளையும் ஏவினார்.

பொழிப்பு : வெற்றிகாணும் படைகளே நிவிர் பலவேறுபடைகளாம் உருக்கொண்டு சென்று நமுன்வந்தவையும் வராது புறம் நிற்பனவுமான அவுணப்படையை எல்லாம் கொன்று வெற்றியுடன் மீண்டுவருவீராக என்று அவற்றை ஏவினார்.

ஆதிநா யகன்விட் டுள்ள படையெலாம் அநந்த கோடி
சோதியார் கதிருந் தீயும் பணிகளும் போலத் தோன்றி
ஏதிலான் அனிக மாகி இம்பருற் றனவி மைப்பின்
பாதியின் முன்னம் அட்டுப் பெருவிறல் படைத்த மன்னோ. **263**

பொருள் : ஆதிநாயகன் விட்டுள்ள படையெல்லாம் அநந்தகோடி - ஆதிமுதல்வராம் அறுமுகப்பிரான் ஏவிய ஐந்து படைகளும் அநந்த கோடிக்கணக்கான, சோதியார் கதிரும் தீயும் பணிகளும் போலத்தோன்றி - ஒளிநிறைந்த சூரியர்களும் தீக்கோளங்களும் பாம்புக்கூட்டங்களுமான பல படைகளாக உருக்கொண்டு சென்று, ஏதிலான் அனிகமாகி இம்பருற்றன இமைப்பின் பாதியின் முன்னம் அட்டு - சூரன்படையாக இங்கு எம் பிரான் முன்வந்த படையாவையும் அரைநொடிப் பொழுதில் அழித்து, பெருவிறல்படைத்த மன்னோ - பெருவெற்றியைச் சாதித்தன.

பொழிப்பு : குமரன் ஏவியபடைகள் ஒளிமிக்க சூரியனும் அக்கினியும் பாம்புகளும் பிறவுமாம் பல்வேறுவகையான அநந்த கோடி படைகளாக உருக்கொண்டு பகைப்படையாகப் பிரான் முன்வந்தவற்றை அரைக்கணத்தில் அழித்துப் பெருவெற்றி பெற்றன. படைவகை ஒவ்வொன்றிலும் அநந்த கோடிக்கணக்கில் உருக்கொண்டன.

தூயதோர் குமரற் சூழ்ந்த படையைமுன் தொலைத்து வீட்டி
ஏயின படையோ ரைந்தும் இம்பரே ஒழிய நின்ற
ஆயிரத் தோரேழ் அண்டத் தகலமுஞ் சென்று சென்றாங்
கோய்வற எழுந்த தானை முழுதுமட் டுலவு கின்ற. **264**

பொருள் : தூயதோர் குமரற் சூழ்ந்த படையை முன் தொலைத்துவீட்டி - தூயராம் பெருமானைச் சூழ்ந்த சேனையை முன்னம் சிதைத்தழித்து - ஏயினபடை ஓரைந்தும் இம்பரே ஒழியநின்ற - ஏவப்பட்ட ஓரைந்து படைகளும் இவ்வண்டம் தவிர எஞ்சி நின்ற, ஆயிரத்தோரேழ்அண்டத்து அகலமும் சென்றுசென்று - ஆயிரத்தேழு அண்டங்களின் பரப்பெங்கும் போய்ப்போய் ஆங்கு ஓய்வற எழுந்த தானை முழுதும் அட்டு உலாவுகின்ற ஆங்காங்கு ஒழிவின்றிப் புறப்படும் சேனை முற்றையும் அழித்து உலாவின.

பொழிப்பு : குமாரர் ஏவிய படை ஐந்தும் இங்குற்ற படைகளை அழித்த பின், ஆயிரத்தேழு அண்டம் எங்கெங்கெங்கும் சென்று ஓயாமல் எழுகின்ற சேனைகளையும் அழிவு செய்து திரிவனவாயின.

ஐவகைப் படைகள் முற்றும் அண்டங்கள் தோறும் நின்ற
வெவ்விய அவுணர்த் தேய்த்து வீரைவொடு திரித லோடுந்
தெவ்வியல் அவுணர் மன்னன் செயிர்த்துமற் றிதனை நோக்கி
இவ்வொரு கணத்தின் முன்னம் இவனுயிர் உண்பன் என்றான். 265

பொருள் : ஐவகைப் படைகள் முற்றும் அண்டங்கள் தோறும் நின்ற - அந்த ஐந்து வகைப் படைகளும் ஏனை அண்டங்கள் முழுவதிலும் நின்ற, வெவ்விய அவுணர்த்தேய்த்து விரைவொடு திரிதலோடும் - வெய்யவர்களான அவுணர்களைச் சிதைத்து விரைந்து திரியும் போது, தெவ்வியல் அவுணர்மன்னன் செயிர்த்து மற்றிதனை நோக்கி - பகைமை இயல்புள்ள அசுரேந்திரனாம் சூரன் சினந்து இச்செயலைக்கண்டு, இவ் ஒரு கணத்தின்முன்னர் இவனுயிர் உண்பன் என்றான் - இந்த ஒருகணம் கழியுமுன் இப்பாலனின் உயிர் போக்குவேன் என எண்ணினான்.

பொழிப்பு : அங்ஙனம் ஐம்படையும் அண்டந்தோறும் சென்று அங்கெழும் அசுரசேனைகளை முற்றும் சிதைத்துத்திரியக் கண்ட சூரபன்மன் சினந்து இக்கணத்தில் இவனுயிரை நான் போக்குவேன் என்றான்.

சாற்றியித் தன்மை தன்னைத் தானவர்க் கரசன் முன்னங்
கூற்றுயிர் குடித்த நோன்றாட் பண்ணவன் கொடுப்பக் கொண்ட
மாற்றருந் திகிரி தன்னை வாங்கினன் வழிபட் டேத்திக்
காற்றினுங் கடிது செல்லக் கந்தவேள் மீது விட்டான். 266

பொருள் : தானவர்கதிபன் இத்தன்மை தன்னைச்சாற்றி - தானவாதிபன் சூரன் இங்ஙனம் கூறி, கூற்றுயிர் குடித்த நோன்றாட் பண்ணவன் முன்னம் கொடுப்பக்கொண்ட - காலனுயிரைப் போக்கிய வலியகாலுள்ள சிவன் முன்னாளிலேதரப்பெற்ற, மாற்றரும் திகிரிதன்னை - எதிரில்லாத சக்ரத்தை, வாங்கினன் வழிபட்டு ஏத்தி - எடுத்து அதனைவணங்கித் துதித்து, காற்றினும் முந்து செல்லக் கந்தவேள் முன்னர் உய்த்தான் - காற்றினும் விரைந்து முன் செல்லுமாறு கந்த சுவாமி முன்னே ஏவிவிட்டான்.

பொழிப்பு : எண்ணிய சூரன் காலகாலராம் சிவன் முன்வரமாகத் தரப்பெற்ற சக்கராயுதத்தை எடுத்து வணங்கிப் பூசித்துக் கந்தசுவாமியார் மேற்செல்ல வாயு வேகமாய் ஏவிவிட்டான்.

குறிப்பு : சரணடைந்தாரைத் தாங்கும் தாள் என்பதும், பகை அழிக்கும் வலியபாதம் என்பதும் தோன்ற கூற்றுயிர் குடித்து அந்தண குமாரன் உயிர்காத்த செய்தி குறிப்பிடப்பட்டது.

விட்டிடு திகிரி யாரும் வெருக்கொள விரைந்து சென்று
கிட்டிய காலைச் செவ்வேள் கிளர்ந்ததோர் பாணி நீட்டி
வட்டணை நேமி தன்னை வருதியால் என்று பற்ற
ஒட்டலன் அதனை நோக்கி உளந்தளர்ந் துயிர்த்து நின்றான். 267

பொருள் : விட்டிடு திகிரியாரும் வெருக்கொள விரைந்து சென்று - ஏவியசக்கரம் எவரும் அச்சுற விரைந்து சென்று, கிட்டிய காலை - அணுகியபோது, செவ்வேள் கிளர்ந்ததோர் பாணி நீட்டி - செவ்வேட் பெருமான் மேலெழுந்த திருக்கரம் ஒன்றை நீட்டி, வட்டணை நேமிதன்னை வருதியால் என்று பற்ற - வட்டவடிவான சக்கரத்தை நம்பால் வருவாய் என்று பற்றிக் கொள்ளவே, ஒட்டலன் அதனை நோக்கி உளந்தளர்ந்து உயிர்த்து நின்றான் - பகைவனாவ சூரன் அதனைக்கண்டு மனம் சோர்ந்து நெடுமூச்சுவிட்டு வாடி நின்றான்.

பொழிப்பு : சூரன் விட்ட சக்கரம் விரைந்து வந்தணுகவே குமாரசுவாமியார் ஒருகரத்தை நீட்டி எம்மிடம் வா என்று அதனைப் பிடித்தருளவே சூரன் அது கண்டு மனந்தளர்ந்து நெடுமூச்செறிந்து வாட்டமுற்றான்.

உண்ணிலா மாயை வல்ல ஒருதனித் தேர்மேல் நின்றோன்
எண்ணிலா உருவங் கொண்டே இருங்கணை மாரி தூர்ப்பத்
தெண்ணிலா மௌலி அண்ணல் உதவிய செம்மல் நோக்கி
நண்ணலான் ஒருவன் மாய நன்றுநன் றென்று நக்கான். 268

பொருள் : உள்நிலாம்மாயைவல்ல ஒரு தனித்தேர் மேல் நின்றோன் - தன்னுள் நிலைத்த மாயம்மிக்க இந்திரஞாலமேல் நின்ற சூரன், எண்ணிலா உருவங்கொண்டே இருங்கணைமாரிதூர்ப்ப - எண்ணற்ற மாய உருவங்கள் கொண்டு பெரும் பாணமழைகளைப் பொழிதலும், தெண்ணிலா மௌலி அண்ணல் உதவிய செம்மல் நோக்கி - தெளிந்த பிறையணி சென்னியராம் சிவன் தந்த குமரப்பெருமான் கண்டருளி - நண்ணலான் ஒருவன் மாயம் நன்று நன்றென்று நக்கான் - பகைவனாம் சூரன் செய்கின்றமாய விளையாட்டு மிக நன்றாயிருக்கிறதே என்று இகழ்ச்சியாகச்சிரித்தார்.

பொழிப்பு : மாயம்வல்ல தேர் மேல் நின்ற சூரன் தானும் எண்ணற்றமாய உருவங்களை எடுத்து நின்று அளவில்லாத சரங்களை மாரிபோலப் பொழியக்கண்டு எம்பெருமானும் சூரனது மாயங்கள் மிக நன்றென ஏளனமாகச் சிரித்தார்.

குறிப்பு : செலுத்துவாரின்றியும் தானே சென்று பணியாற்றவல்லதால் ஒருத்தனித்தேர் என்றார்.

சீறுநகை செய்து மேலாஞ் சேதனப் பகழி பூட்டி
அறுமுகன் அவுணர் செம்மல் ஆற்றிடு மாய முற்றும்
இறைதனில் முடித்தி யென்றே ஏவலும் விரைவின் ஏகி
முறைநெறி பிழைத்தோன் மாயம் முற்றொருங் கட்டதன்றே. 269

பொருள் : (அறுமுகன்) சிறுநகைசெய்து - அறுமுகப் பெருமான் எள்ளல் நகைசெய்து, மேலாம் சேதனப்பழி பூட்டி - சிறந்த மெய்ஞ்ஞானக் கணையைப் பூட்டி, அவுணர் செம்மல் ஆற்றிடும் மாயம் முற்றும் இறைதனில் முடித்தி என்றே ஏவலும் - அவுணர் தலைவன் கொண்ட மாயங்களை எல்லாம் நொடியில் அழிப்பாய் என்று பணித்து ஏவுதலும், விரைவின் ஏகி - அதுவிரைந்து சென்று, நெறிமுறை பிழைத்தோன்மாயம் முற்றொருங்கு அட்டதன்றே - வாழும் நெறிமுறைகளைப் பிழைப்பித்த சூரன் மாயம் முற்றும் ஒருங்கழித்தது.

பொழிப்பு : பெருமாள் நகைத்து ஞானாஸ்திரம் எடுத்து நீ போய் சூரனது மாயங்களை முற்றும் அழித்து வா என்றேவ, அது சென்று முறைகேடனின் மாயம் முற்றையும் ஒருங்கழித்தது.

மாயையின் உருவ நீங்க வலியழிந் துள்ளம் மாழ்கித்
தீயவன் ஒருவ னாகிச் சேணுயர் தேரின் நின்றான்
ஆயது தெரிந்து வானோர் அறுமுகத் தவனைப் போற்றிப்
பாய்புனற் கடலின் ஆர்த்துப் பனிமலர் மாரி தூர்த்தார். 270

பொருள் : மாயையின் உருவம் நீங்க வலி அழிந்து உள்ளம் மாழ்கி - தன்மாய வேடம் அழிதலால் வலிகுன்றி உள்ளம் கலங்கி, தீயவன் ஒருவனாகிச் சேணுயர் தேரில் நின்றான் - தீய சூரன் தனித்தவனாக இந்திர ஞாலத்தேரில் நின்றான், வானோர் ஆயது தெரிந்து - இதனைத் தெரிந்த தேவர்கள், அறுமுகத்தவனைப் போற்றி - வீரராம் ஆறுமுகப் பெருமானைப் போற்றி, பாயிரும் கடலின் ஆர்த்துப் பனிமலர்மாரி தூர்த்தார் - பரந்த பெருங்கடல் கொந்தளிப்பது போல மகிழ்ச்சி பொங்கி ஆர்த்து கற்பகதருமலர் மழை பொழிந்து போற்றினர்.

பொழிப்பு : சூரன் தனது மாயா ரூபங்கள் சிதையவே தனியனாகவே தேரில் நின்றான், அது கண்ட தேவர் மகிழ்ந்து முருகனைப் போற்றிப் பொங்கும் கடல் போல ஆர்த்துப் பூமாரி பொழிந்தனர்.

தூர்த்தலுந் தேருந் தானுந் தண்ணெனக் கரந்து சூரன்
பேர்த்திடு மண்ட கூடப் பித்திகை வாயி லெய்தி
ஆர்த்தறை கூவிப் புக்காங் கப்புறத் தண்டஞ் செல்லத்
தீர்த்தனும் அதனை நோக்கித் தீயனைத் தொடர்ந்து போனான். 271

பொருள் : தூர்த்தலும் - பூமாரிதூர்த்துப் போற்றலும், சூரன் தேரும் தானும் தண்ணெனக்கரந்து - சூரபதுமன் தேருடன் தானும் ஒருங்கே மறைந்து, பேர்த்திடும், அண்டகூடப்பித்திகைவாயில் எய்தி - செல்வழியான அண்ட கோளகையின் வாயிலை அடைந்து, ஆர்த்து அறைகூவிப்புக்கு ஆங்கு அப்புறத்து அண்டம் செல்ல - ஆர்ப்பரித்து போருக்கழைத்தவாறே அவ்வழியால் அப்பாலுள்ள அண்டத்தில் செல்லுதலும், தீர்த்தனும் அதனைநாடித் தீயனைத்தொடர்ந்து சென்றான் - தீர்த்தராம் பெருமானும் அச்செயல்கண்டு தீயசூரனைதொடர்ந்து பின் சென்றார்.

பொழிப்பு : தேவர் போற்றக்கண்ட சூரன் தானும் தேருடன் மறைந்து அண்டகோள வாயிலையடைந்து அவ்வழியே அறைகூவி ஆர்த்து மற்றைய அண்டம் செல்லவே பெருமானும் பின் தொடர்ந்து துரந்து சென்றார்.

தொடர்ந்துதன் மனத்திற் செல்லுந் தொல்லைமால் இரதத் தோடுங்
கடந்தபேர் ஆடல் மிக்க காசிபன் தனயன் நின்ற
இடந்தலைப் படலும் அன்னான் எந்தையோ டிகற்போ ராற்றி
அடுந்திறல் மாயை நீரால் அப்புறத் தண்டம் போனான். 272

பொருள் : தொடர்ந்து தன்மனத்திற் செல்லும் தொல்லைமாலிரதத்தோடும் - சூரனைத்துரந்து, மனோவேகமாகச் செல்லும் தம் பழையதேரோடும், கடந்த பேராற்றல்மிக்க காசியன் தனையன் நின்ற இடம் தலைப்படலும் - யாவரையும் வென்ற பெருவலிமிக்க காசிபமுனிமகன் சூரன்நின்ற இடத்தைப் பெருமான் அடைந்தபோது, அன்னான், எந்தையொடு இகற்போராற்றி - அச்சூரன் எம்பிரானுடன் இகலுடன் போராற்றி, அடுந்திறல் மாயைநீரால் அப்புறத்தண்டம் போனான் - பகையை அடும்வலிமிக்க மாயத்தன்மையினால் மறு அண்டத்தினில் ஓடினான்.

பொழிப்பு : சூரனைத்துரந்தவாறு சுவாமியும் மனோவேகத்தேரோடு சென்று காசிபமுனிமகன் நின்ற இடத்தடைய அவனும் போர்புரிந்து பின் மறைந்த மறு அண்டத்தில் போனான்.

இந்நிலை அவுணர் கோமான் இருநிலத் தண்ட முற்றும்
மின்னெனப் படர்ந்து தோன்றி வெய்யபோர் விளைத்து நின்று
பின்னருங் கரந்து செல்லப் பிரானும்அவ் வண்டந் தோறுந்
துன்னலன் தனைவிடாது தொடர்ந்தமர் இயற்றிப் போனான். 273

பொருள் : இந்நிலை அவுணர் கோமான் இருநிலத்தண்டம் முற்றும் - இங்ஙனமே சூரபன்மன் பிருதுவியின் பாலதாய்த்தனது ஆட்சியிலுள்ள அண்டம் முழுவதும், மின்னெனபடர்ந்துதோன்றி - விரைந்து மின்னல் போல மறைந்தோடியும் தோன்றியும், வெய்யபோர் விளைத்து நின்று - கடும் சமர்செய்து, பின்னரும் மறைந்து செல்ல - பின்னும் மறைந்து அப்பாற்செல்ல, பிரானும் அவ் அண்டம்தோறும் - பெருமானும் அவ்வவ் அண்டங்கள் முற்றும், துன்னலன் தனைவிடாது தொடர்ந்து - சூரனை விடாமலே தொடர்ந்து துரத்திச்சென்று, அமர் இயற்றிப் போந்தான் சமர் புரிந்தவாறே போவாராயினார்.

பொழிப்பு : சூரன் இங்ஙனம் தனதாட்சியிலுள்ள அண்டம் தோறுமறைந்தும் தோன்றியும் மின்னலைப்போலவே ஓடிச்செல்ல பிரானும் விடாது துரத்திச்சென்று அவனுடன் அமர்பொருது செல்வாராயினார்.

வேறு
ஆய காலை அயன் முதல் தேவர்கள்
நேய மிக்க குரவரை நீங்கிய
சேயி னோர்களில் தேம்பித் திருமகள்
நாய கன்றனை நோக்கி நவிலுவார். 274

பொருள் : ஆயகாலை அயன் முதல் தேவர்கள் - அந்நிலையில் அயனாதியான அமரர்கள், நேயம்மிக்க குரவரை நீங்கிய - அன்பு

மிக்கதம் இருமுதுகுரவரைப் பிரிந்த சேயினோர்களில் தேம்பி - பிள்ளைகள்போலத் தேம்பிப் புலம்புவாராய், திருமகள் நாயகன் தனைநோக்கி நவிலுவார் - தேவிற்சிறந்த திருமகள் நாயகரின் முன்வந்து நேர்ந்தது கூறி இரங்கினார்.

பொழிப்பு : அவ்வேளை பிரமனாதிதேவர், பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகள்போல அநாதராகி வருந்தித் திருமால் முன்வந்து முறையிடுவாராயினர்.

வலங்கை வாளுடை மாயைதன் மாமகன்
பொலன்கொள் அண்டப் புரைதனுட் போயினான்
இலங்கு வேற்படை யெந்தைதன் போரிடை
விலங்கி னானலன் என்றும் விளிகிலான். **275**

பொருள் : வலங்கை வாளுடைமாயை தன்மாமகன் - வலந்தரும் கைவாளுடைய மாயா புத்திரனானசூரன், பொலங்கொள் அண்டப்புரைதனுட்போயினான் - பொன்மயமான அண்ட வாயில் வழியே அப்பாற் சென்றான், இலங்கு வேற்படை எந்தைதன்போரிடை - மிளிரும் வேற்படையுடைய எம்பிரான்போரிலே, விலங்கினான் அல்லன் என்றும் விளிகிலான் - என்றும் இறவாவரம் பெற்றசூரன் மெலிந்து தோற்றவனல்லன்.

பொழிப்பு : வீரவாளுடைய சூரன் அண்டவாயில் வழியே புறத்தோடிவிட்டான் எனினும் அவன் இறவாவரமுடையான் எம்பிரான் போரிலே தோற்றவனல்லன்.

மாயை ஆற்றவும் வல்லவன் ஈண்டொரீஇப்
போய தன்மை புணர்ச்சிய தேயலால்
ஆயின் வேறிலை ஆறிரு மொய்ம்புடைத்
தூயன் மற்றது சூழ்ந்திலன் போலுமால். **276**

பொருள் : மாயை ஆற்றவும் வல்லவன் - சூரன் மாயங்கள் மிகவல்லவன், ஈண்டு ஒரீஇப்போய தன்மை புணர்ச்சியதே - ஆதலின்

இங்கிருந்து புறத்தே ஓடியது பயந்தன்று ஒருசூழ்ச்சியான செயலே, அல்லால் ஆயின் வேறிலை - அதுவன்றி வேறெதுவுமில்லை, ஆறிருமொய்ம்பு உடைத்தூயன் - பன்னிரு கரத்தராம் தூயவர், மற்றது சூழ்ந்திலன்போலுமால் - மற்றுச் சூரன் செய்யும் இச்சூழ்ச்சியைக் கருதாதே வெள்ளைமனத்தோடு பின் தொடர்ந்தார் போலும்.

பொழிப்பு : மாயம்வல்ல சூரன் ஓடியது சூழ்ச்சியே, பயந்து உயிர்பிழைக்கவன்று; மாயம் நினையாத பெருமான் உணராது பின் தொடர்ந்தாரே, என்ன நிகழுமோ.

வாடி னானென மாற்றல னைத்தொடர்ந்
தோடி னான்எந்தை ஒல்லையிற் சூரனைக்
கூடி னான்கொல் குறுகல னாகியே
நாடி னான்கொல் அறிகிலம் நாமெலாம். **277**

பொருள் : வாடினான் என எந்தை மாற்றலனைத் தொடர்ந்து ஓடினான் - மெலிந்து ஓடுகிறான் பகைவனென எம்பெருமான் எண்ணி அவனைத் துரந்து ஓடினாரே, ஒல்லையில் சூரனைக்கூடினால்கொல் - பிரான் வல்விரைந்து சூரனைக் கண்டு கூடினாரோ அல்லது, குறுகலனாகியே நாடினான்கொல் - கண்டடையாமலே எங்கும் தேடுகின்றாரோ, நாமெல்லாம் அறிகிலம் - நாமெவரும் நேர்ந்ததெதுவென அறியமுடியவில்லையே.

பொழிப்பு : சூரன் அஞ்சிஓடுகிறானென எண்ணி எம்பிரான் பின்தொடர்ந்தார், அவர் சூரனைக்கண்ணுற்றாரோ அன்றிக் காணாது தேடுகிறாரோ நிகழ்ந்ததெதுவென நாம் எவரும் அறியமுடியவில்லையே தவிக்கிறோம்.

மாக மேல்நிமிர் மற்றையண் டத்தினுஞ்
சேகு லாவிய சிந்தையன் தன்னுடன்
ஏகி னான்ஐயன் என்னினித் தான்விளை
வாகு மோவென்றும் அஞ்சுதும் ஏழையேம். **278**

பொருள் : மாகமேல் நிமிர் மற்றை அண்டத்தினும் - வானில் நிமிர்ந்து பரந்துள மற்றைய அண்டத்திலும், சேகுலாவிய சிந்தையன் தன்னுடன் ஏகினான் ஐயன் - வயிரம் பாய்ந்தமனத்தன்சூரனோடு எம்பிரான் பின்தொடர்ந்து சென்றனரே, என் இனித்தான் விளைவாகுமோ என்றும் அஞ்சுதும் ஏழையேம் - அங்கு இனி என்ன நேருமோ என்று சிற்றறிவுள்ள ஏழையராகிய நாம் அஞ்சுகிறோம் தலைவரே.

பொழிப்பு : விண்ணிலுள்ள வேறண்டத்திலும் வயிரமனத்துச் சூரனைத்தொடர்ந்து எம்பிரான் சென்றாரே இனி அங்கு என்னவாகுமோ எனவும் நாம் சிற்றறிவோம் அஞ்சுகின்றோம்.

என்ற காலையில ங்கெழிற் பூவைபோல்
நின்ற மாயவன் நீள்மல ரோன்முதல்
துன்றும் வானவர் சூழலை நோக்கியே
ஒன்றும் அன்பொ டுளப்பட ஓதுவான். **279**

பொருள் : என்றகாலை - என இமையவர் இயம்பி இரங்கவே, இலங்கெழிற்பூவைபோல் நின்ற மாயவன் - கேட்டுநின்ற விளங்கும் காயாம் பூவண்ணரான மாயவன், நீண்மலரோன்முதல் துன்றும் வானவர் சூழலை நோக்கியே - பிரமாமுதலாக நெருங்கிச்சூழ்ந்த தேவர் குழுவினரைப்பரிவுடன் பார்த்து, ஒன்றும் அன்பொடு உளப்பட ஓதுவான் பொருந்திய அன்போடு அவர்கள் உள்ளந்தெளியுமாறு உண்மையை உரைப்பாராயினர்.

பொழிப்பு : இவ்வாறு தேவர் முறையிடவே கேட்ட பூவைவண்ணரான மாயன் பரிந்து பார்த்து அயன் முதலாம் அமரர் அகந்தெளிய அன்போடு உண்மை உணர்த்துவாராயினர்.

வேறு

வஞ்ச மேதகும் அவுணர்கோன் ஆற்றலை மதித்தீண்
டஞ்சி அஞ்சியே இரங்கலீர் அறுமுகத் தொருவன்
செஞ்சி லைத்தனி வன்மையும் வீரமுந் தெரிந்தும்
நெஞ்ச கத்திடை ஐயுறு கின்றது நெறியோ. 280

பொருள் : வஞ்சம்மேதகும் அவுணர்கோன் ஆற்றலைமதித்து - வஞ்சனைமிகுந்த அசுரர்தலைவனின் ஆற்றலை ஒருபொருளாக மதித்து, ஈண்டு அஞ்சி அஞ்சியே இரங்கலீர் - இங்குநீவீர் எல்லீரும் பயந்து பயந்து இரங்கவேண்டாம், அறுமுகத்தொருவன் - ஆறுதிருமுகமுள்ள ஒப்பற்றபெருமானது, செஞ்சிலைத்தனி வன்மையும் வீரமும் தெரிந்தும் - சிறந்த வல்வில்லான்மையையும் நிகரிலாதவீரத்தையும் பலமுறையும் நீவிர் கண்கூடாகக்கண்டு தெளிந்தும், நெஞ்சகதிடை ஐயுறுகின்றதும் நெறியோ - உங்கள் உள்ளத்திலே பெருமானுக்கும் எமக்கும் ஏது நேருமோ என்று ஐயங்கொள்வதும் தகுமோ.

பொழிப்பு : மாயம் வல்ல சூரனின் வலிமையை ஒருபொருளாக நினைத்து தேவிர்காள் நீவிர் பயந்து விடாதீர். ஆறுமுகப்பெருமானின் வில்லாண்மையையம் வீரபராக்கிரமத்தையும் பன்முறை கண்ணாரக்கண்டு தெளிந்தும் சஞ்சலமடைவது உமக்குத்தகுமோ.

ஓதி யாகியும் உணர்ந்தவர்க் குணரவும் ஒண்ணா
நீதி யாகியும் நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியுந் தொழுதிடும் எம்மனோர்க் கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ. 281

பொருள் : ஓதிஆகியும் - தனதியல்பு சுத்தஞானமயமாயும், உணாந்தவர்க்கு உணரவும் ஒண்ணா நீதி ஆகியும் - கலைஞானம் கற்றும் சாதனைகள் பயின்றும் நல்லுணர்வு பெற்றவர்களாலும் முற்றும் தன்னியல்பு அறியொணாத நீதியாகியும், நிமலதாகியே நிகழும் சோதியாகியம், இயல்பாகவே பாசபந்தங்களின்றிநிற்கும் சோதியாகியும், தொழுதிடும் எம்மனொர்க்கெல்லாம் ஆதிஆகியும்

- தொழும்புக்குரிய பசுவர்க்கமாயுள்ள நம்மனோர் யாவருக்கும் ஆதிமுதலாயும், நின்றவன் அன்றோ அறுமுகன் - பதிலகணம் அமைந்தவனாக நித்தனாக உள்ள பரமசிவன் அல்லவா எமக்கருள்புரியவந்த அறுமுகப்பிரான்.

பொழிப்பு : ஞானமயமாயும், ஒருவாறு உணர்வுபெற்றார் அம்மெய்யுணர்வாய் அடங்கி நிற்றலால் மறித்து இன்னதன்மையது எனச் சுட்டி உணரப்படாத நீதிவடிவாயும், இயல்பாக மனமிலாமலுள்ள பரஞ்சோதி வடிவாயும், தொழுகுலமாயுள்ள பசுக்களாம் எங்களுக்கெல்லாம் ஆதியாயுள்ளதுமான பிரமமாம் சிவன் அல்லவா ஆறுமுகனாக முன்வந்து நிற்பவன்.

குறிப்பு : பாச பசு பதி ஞானமென்றும், தசகாரியம் என்றும் பலபடித்தரத்து அறிவுகளை, கலைகள்
சாத்திரங்கள் கற்றும், யோகசாதனை செய்தும், மெய்யுணர்வில் தலைப்பட்டவர் மற்றொன்றறியாராய், மறப்பு நினைப்பற்றுத் தானது வாய் விடுதலால், பின்சுட்டியுணரார்; ஆதலின் உணர்ந்தவர்க்கு உணரவும் ஒண்ணா நீதி எனக் கூறினார்.

ஈறி லாதமர் பரமனே குழவியின் இயல்பாய்
ஆறு மாமுகங் கொண்டுதித் தானென்ப தல்லால்
வேறு செப்புதற் கியையுமோ மேலவன் தன்மை
தேறி யுந்தெளி கின்றில உமதுசிந் தையுமே. **282**

பொருள் : ஈறிலாதமர் பரமனே குழவியின் இயல்பாய் - அழிவின்றி என்றுமுள்ளவனாய் இருக்கும் பரமேஸ்வரனே குழவியின் வடிவம் தாங்கி, ஆறுமாமுகம் கொண்டு உதித்தான் என்பதல்லால் - ஆறுதிருமுகம் தோன்ற எழுந்தருளினார் என்பதல்லாமல், வேறு செப்புதற்கு இயையுமோ - அப்பரம் பொருளினின்று வேறான ஒருவரெனச் சொல்வதற்கு ஏதுஉண்டெனலாமோ, மேலவன் செய்கை தேறியும் உமது சிந்தையும் தெளிகின்றிலவே - பெருமான் பெருமையும் ஆற்றலும் முன்மேருமலையிலே காட்டியருளக்கண்டு தெளிந்திருந்தும் தெளிந்த உமது சிந்தையும் இன்று தெளிகின்றிலவே மயங்குவது தகுமோ.

பொழிப்பு : அநாதிநித்தியனாம் பரமசிவனே திருவிளையாடல் மூலம் தேவாசுரராம் எமக்கருள்புரியம் ஆடல் செய்ய ஆறுமுகக் குழந்தையாக உருமாறி வந்தருளினார், அன்றி அச்சிவத்தினின்று வேறான ஒருவர் இவரெனச் சொல்வதற்கு எந்த ஏதுவும் இல்லை. முன்மேருவிலே திருப்பெருவடிவம் காட்டியருளக்கண்டு தேறிய தேவர்களே உங்கள் உள்ளமும் உட்டெளிவின் றிமயங்கலாமா.

ஐயம் எய்தலீர் ஆயிர கோடி அண்டத்தும்
வெய்ய னேகினுந் தொடர்ந்துபோய் வெஞ்சமர் இயற்றிச்
செய்ய வேலவன் துரந்துவந் திடுந்தினைத் துணையில்
கையில் நெல்லிபோற் காட்டுவன் நீவிருங் காண்டிர். **283**

பொருள் : ஐயம் எய்தலீர் - ஆதலால் தேவர்களே ஐயுறாதீர், ஆயிரகோடி அண்டத்தும் வெய்யன் ஏகினும் - தனதாளுகையிலுள்ள ஆயிரத்தெட்டன்றி ஆயிரகோடி ஆண்டத்திலும் கொடிய சூரன் சென்றாலும், தொடர்ந்துபோய் வெஞ்சமர் இயற்றி - தொடர்ந்துதுரந்து சென்று கடுஞ்சமர் செய்து, செய்யவேலவன் துரந்துவந்திடும் தினைத்துணையில் - செம்மையான வேற்கரத்தெம்மான் தினைப்பொழுதினுள்ளே சூரனைத்துரத்திக் கொண்டு இங்கு வந்திடுவார், கையில் நெல்லிபோல் காட்டுவன் - அங்கை நெல்லிக்கனிபோலத் தெளியக்காடுவோம், நீவிரும் காண்டிர் - தெளிவீர், பின் நீவிரும் கண்ணாரக்கண்டுகொள்வீர்.

பொழிப்பு : சூரன் ஆயிரகோடி அண்டத்தும் எங்குசென்றாலும் எந்தை தொடர்ந்துபோய் அவனுடன் சமராற்றித்தினைப் பொழுதினுள்ளே இங்கு சூரனைத் துரந்து கொண்டு வந்திடுவார் காண்பீராக. அங்கைநெல்லி என்பது பிரத்தியட்சக்காட்சிக்கு எடுத்துக்காட்டு.

குறிப்பு : கருநெல்லிப்பழம் "எக்ஸ்ரே" போல தன்னுள்ளடக்கத்தை உள்ளவாறு புறத்தே காட்டும் என்பது ஆன்றோர்கூற்று; அதனையே இங்கு அநுவதித்தார்.

என்று மாயவன் கழறலும் அயன்முதல் எவரும்
நன்றெ னத்தெளி வுற்றனர் அவ்வழி நண்ணான்
ஒன்றின் ஆயிர கோடியண் டத்தினும் ஓடி
நின்று நின்றமர் ஆடினன் எந்தையை நேர்ந்து. **284**

பொருள் : என்று மாயவன் கழறலும் அயன்முதல் எவரும் - என்று திருமால் உள்ளத்தூன்ற எத்துரைத்தலும் கேட்டபிரமன் முதலியதேவர்கள் யாவரும், நன்றெனத்தெரிவுற்றனர் - நல்லது அறிந்தோம் எனச் சித்தம் தெளிந்தனர், அவ்வழி நண்ணான் - அவ்வளவிலே சூரனும், ஒன்றின் ஆயிரகோடி அண்டத்தினும் ஓடி - ஒற்றுபோலவே ஏனைய ஆயிரகோடி அண்டங்களிலும் ஓடி மறைந்தும் தோன்றியும், நின்று நின்றமர்ஆடினன் எந்தையை நேர்ந்து - சற்றுச்சற்று நின்று நின்று எம்பிரானை நேர்ந்து போராடினான்..

பொழிப்பு : எனத்திருமால் அறிவுறுத்தவே தேவர்கள் நன்று மனந்தெளிந்தோம் என மகிழ்ந்தார், இது இவ்வாறாக, சூரனும் ஆயிரகோடி அண்டத்திலும் சென்று நின்று நின்று பெருமானை நேர்ந்து எதிர்த்துப் போராடிவந்தான்.

வெந்தி றற்சமர் ஆற்றியே அவுணர்கோன் மீட்டும்
இந்த வண்டத்து மகேந்திர வரைப்பில்வந் திறுத்தான்
முந்து நீழலை விடாதுசெல் வோரென முனிந்து
கந்த னுந்தொடர்ந் தவனொடு போந்தனன் கடிது. **285**

பொருள் : வெந்திறற்சமர் ஆற்றியே அவுணர்கோன்மீட்டும் - கொடியவலியோடு வீரம்மிகு போராற்றியவாறே சூரபன்மன் ஓடிமீளவும், இந்த அண்டத்து மகேந்திரவரைப்பில் வந்திறுத்தான் - இவ்வண்டத்தின் மகேந்திர யுத்தக்களத்தில் வந்துற்றான. முந்து நீழலைவிடாது செல்வோரென முனிந்து - தாம் செல்வழியில் முன்னே அமைந்த நிழலைவிடாதே தொடர்வார்போலவே முனிவுடன், கந்தனும் தொடர்ந்து அவனுடன் போந்தான் - கந்தசுவாமியாரும் தொடர்ந்து துரத்தியவண்ணமே சூரனுடன் பின்னே வந்து சேர்ந்தார்.

பொழிப்பு : ஓடுவதும் நின்று சமராடுவதுமாகச் சூரன் செல்ல முருகனும் துரத்தி வந்தார். சூரன் முன்வர முருகனும் பின் தொடர்ந்து மகேந்திரம் வந்துற்றார், முன் செல்லும் நிழலைப்பின்தொடர்வார் செயல்போலிருந்தது இது. தன்னுடைய நிழல் சாய்ந்து படியம் திசையில் நடப்பவர் முந்து நிழலைவிடாது செல்பவராகக்காணப்படுவர். பொதுவாகச்செல்பவரைவிடாது தொடர்ந்துசெல்வது நிழலென்றே உவமைகூறுவர். அதனைமாற்றி உவமான உவமேயப் பொருத்தம் உணர முந்துநிழலை விடாது செல்வோர் என்றார். "நிழல்அசைப்பான்போல் புவனம் ஆக்கி அசைத்தருளும் ஆணை எனும் கந்தர் கலி வெண்பா உவமையும் காண்க. மற்றும் சூரன் வழியில் முருகன் சென்றிலன், முருகன் தூண்டிய வழியே (தூண்டிய நெறியிலேதான்) சூரன் சென்றான் என்பதும், சகடத்தைச்சாரதி ஓட்டிச் செல்வதுபோல என்பதும் குறிப்பால் உணரவைத்தவாறும் சிந்திக்கற்பாலது..

வேறு

போந்திடு தன்மை நோக்கிப் புராரிதன் புதல்வன் நங்கள்
ஏந்தலைத் தொடர்ந்தான் என்னா இம்பரில் அவுணர் தானை
தீந்தழ லென்னப் பொங்கிச் செங்கையிற் படைகள் வீசி
ஆய்ந்திடும் உணர்வின் மேலாம் ஆதிதன் புடைசூழ்ந் தார்த்தார்.286

பொருள் : போந்திடு தன்மைநோக்கிப் புராரிதன் புதல்வன் எங்கள் ஏந்தலைத் தொடர்ந்தான் என்னா - சூரனும் குமாரவேளும் மீண்டும் வந்தவாற்றைநோக்கி, புராரியாம் சிவனார்மகன் எங்கள் அரசனைத் துரத்திவருகிறானே என்று, இம்பரில் அவுணர்தானை - மகேந்திரப்போர் முகத்தில் பிழைத்து நின்ற அவுணர்சேனையானது, தீந்தழல் என்னப்பொங்கி - சுவாலிக்கும் தீப்போலச் சீறிஎழந்து, செங்கையிற் படைகள்வீசி - கரங்களிற் படைக்கலங்களை வீசிஎறிந்து, ஆய்ந்திடும் உணர்வின் மேலாம் ஆதிதன் புடையிற் சூழ்ந்தார் - நாம் அறிவோம் என்று முயல்வாரின் தற்போததைக்கடந்து நிற்கும் ஆதிமுதல்வராம் ஆறுமாமுகப் பெருமானைப் புடையிற் சூழ்ந்து ஆர்ப்பரித்தனர்.

பொழிப்பு : களத்தில் பிழைத்து எஞ்சிநின்ற அசுரசேனையிலுள்ளோர் இருவர்வரவும் கண்டு எம்அரசனைச் சிவகுமாரர்துரந்துவருகிறாரே என்று அவர்மீது கைப்படைகளை வீசி அவரைப்புடைசூழ்ந்து ஆர்ப்பரித்தனர்.

நாதனும் அதனை நோக்கி நன்றிவர் முயற்சி யென்னா
ஓதினன் முறுவல் செய்ய ஒன்னலன் தானை தொன்னாள்
மூதெயில் என்ன நீறாய் வெந்துடன் முடிந்த தம்மா
தாதைதன் செய்கை மைந்தன் செய்வது தக்க தன்றோ. 287

பொருள் : நாதனும் அதனைநோக்கி நன்றிவர் முயற்சிஎன்னா ஓதினன் முதுவல்செய்ய - பிரானும் அதனைக்கண்டு இவர்கள் போர்முயற்சி நன்றென்று கூறி எள்ளி நகைத்தலும், ஒன்னலன்தானை - உடனே சூரன்சேனையானது, தொன்னாள் மூதெயில் என்னநீறாய் வெந்துடன் முடிந்ததம்மா - சிவன்புன்னகைத்தீயால் முன்னாளிலே பழையதிரிபுரம் வெந்து நீறானவாறு வெந்து சாம்பாராயிற்று, தாதைதன் செய்கை மைந்தன் செய்வது தக்கதன்றே - தந்தையின் (சிவனின்) செயலை மைந்தன்(மகன் கந்தன்) செய்வது தக்ககாரியமேயாம்.

பொழிப்பு : பிழைத்த படையினர் செய்பிழையாம் செயலைப்பிரான் நோக்கி முறுவலித்தார் அதனால் அப்படையினர் திரிபுரம்போல எரிந்து நீறாயினர்.. இதில் உவமை உறவுகாட்டப்படாமையால் வேற்றுப்பொருள்வைப்பணி.

ஆனதோர் காலை தன்னில் அறுமுகம் படைத்த அண்ணல்
தூநகை அங்கி செல்லத் துண்ணெனப் பதைத்து வீழ்ந்து
தானவர் அனிகம் வெந்த சாம்பரின் குன்றை நோக்கி
வானவர் மகிழ்ந்து பூத்தூய் வள்ளலை வழுத்தி நின்றார். 288

பொருள் : ஆனதோர் காலைதன்னில் - அவ்வேளையில், அறுமுகம்படைத்த அண்ணல் தூநகை அங்கிசெல்ல - அறுமுகப்பெருமானின் தூயநகையில் தோன்றிய தீசென்று சுடவே,

துண்னெனப்பதைத்து வீழ்ந்து - விரைவிலே பதைத்து வீழ்ந்து, தானவர் அனிகம் வெந்தசாம்பரின் குன்றைநோக்கி - அவுணசேனை வெந்துகிடக்கும் சாம்பல் மலையைப் பார்த்து. வானவர் மகிழ்ந்து - தேவர்கள் மிகமகிழ்ந்து, பூத்தூய்வள்ளலை வழுத்திநின்றார் - மலர்மழை பொழிந்து அருள்வள்ளலான பிரானைத்ததித்து நின்றார்கள்.

பொழிப்பு : அப்போது குமரப்பிரான் புன்னகைத்தீபற்றவே பதைபதைத்து விழுந்து வெந்த அவுணசேனையின் சாம்பர் மலையைப்பார்த்து வானவர் மகிழ்ந்து மலர் தூர்த்து வள்ளலைத் தோத்திரித்தனர்.

முருகவிழ் தொடைய லான்றன் முறுவலான் அனிக முற்றும்
விரைவின் நுண் துகளதாகி வீழ்தலும் அவுணர் வேந்தன்
ஒருவனுந் தமியன் நின்றான் ஒண்டமிழ் முனிவன் உண்ணத்
திரைகட லின்றித் தோன்றுந் தீப்பெருங் கடவுள் ஒத்தான். 289

பொருள் : முருகவிழ் தொடையலான் தன்முறுவலால் அனிகம் முற்றும் - மணங்கமழும் கடப்பமாலை அணிந்த முருகனது முறுவலாலே தனது சைனியம் முழுவதும், விரைவில் நுண்துகளதாகி வீழ்ந்ததும் விரைவிலே நுண்ணியசாம்பராகி மாண்டுவீழ்தலும், அவுணர்வேந்தன் ஒருவனும் தமியன் நின்றான் - அசுரேந்திரன் சூரன் ஒருவனே தனி நின்றான் அக்காட்சியானது ஒண்டமிழ் முனிவனுண்ணத் திரை கடலின்றித்தோன்றும் - ஒள்ளிய தமிழ்முனியாகிய அகத்தியர் அங்கையில் ஒருதிவலையாக எடுத்து ஆகமனம் செய்ததால் அலைமோதும் நீர்இன்றிப்போகவே, தோன்றும் தீப்பெருங் கடவுள் ஒத்தான் - தனியே தோன்றிநின்ற பெரியஊழித்தீக்கடவுளின் தோற்றம் போன்றிருந்தான்.

பொழிப்பு : கந்தசுவாமியின் புன்முறுவலாலே சேனைமுற்றும் வெந்தழியவே தனியனாக முனிவுடன் நின்ற சூரன், அகத்தியர் கடல் நீர் முழுவதையும் உண்டொழித்ததாலே தனித்துநின்ற ஊழித்தீபோலத் தோன்றினான்.

முன்படை குமரன் அங்கண் முறுவலித் திட்ட வாறும்
தன்படை அழிந்த வாறும் தமியன்றான் நின்ற வாறும்
கொன்படை வீர ரோடு குறட்படை ஆர்க்கு மாறும்
துன்படை அவுணன் கண்டாங் குளத்தொடுஞ் சொல்ல லுற்றான். 290

பொருள் : முன்படைகுமரன் அங்கண் முறுவலித்திட்டவாறும் - தன்முன்னுள்ளகுமரன் புன்னகை புரிந்ததும், தன்படை அழிந்தவாறும் - அந்த நகைத்தீயால் தன்தானை வெந்தழிந்ததும், தமியன்தான் நின்றவாறும் - தமியனாகத் தானொருவனே நிற்பதும், கொன்படை வீரரோடு குறட்படை ஆர்க்குமாறும் - பெருமைமிக்க வீரர்களுடனே பூதப்படையினரும் மகிழ்ந்து வெற்றி முழக்கம் செய்து நிற்பதும் ஆகியவற்றை துன்புஅடை அவுணன் கண்டுஆங்கு பெருந்துன்புற்ற சூரபன்மன் கண்டு அப்போது, உளத்தொடும் சொல்லல் உற்றான் - தன்மனத்துள்ளே பேசிக்கொள்கிறான்.

பொழிப்பு : குமாரவேள் புன்முறுவல் பூத்ததும், அதனாலேதன் படை வெந்தழிந்ததும், எல்லாமிழந்து தானே தனி நிற்பதும், வீரரும் பூதரும் வெற்றி முழக்கம் செய்வதும் ஆகியவற்றைக்கண்டு துன்படைந்த சூரபன்மன் தன்மனத்துள் பின்வருமாறு பேசிக்கொள்கிறான்.

பின்னுறு துணைவர் மைந்தர் பேரியல் அமைச்சர் ஏனோர்
முன்னுற முடிந்தார் இன்று முடிவுறாத் தானை முற்றும்
பன்னிரு கரத்து மைந்தன் படுத்தனன் தமிய னானேன்
என்னிவண் செய்வ தென்னா உயிர்த்தனன் எண்ண மிக்கான். 291

பொருள் : பின்னுறு துணைவர்மைந்தர் - என்பின்வந்த மக்களும் தம்பியரும் முன்னுற முடிந்தார் - பேரியல் அமைச்சர்ஏனோர் - பெரியதிறமையுள்ள மந்திரிகள் மற்றும் சேனைத்தலைவர்கள் ஆகியவர்கள் முந்தியபோர்களிலே முடிந்துபோயினர், இன்றுமுடிவுறாத்தானை முற்றும் பன்னிருகரத்துமைந்தன் படு:த்தனன் - இன்றோ முடிவறியாத நமது சேனைகள் முற்றையும் பன்னிருகையுள்ள பாலகன் முடிவாக்கினான், தமியன் ஆனேன் -

நான் தன்னந்தனியனாயினேன், என்னிவண்செய்வது என்னா - இனி இங்குயான் செய்வது எதுவோ என்று, எண்ணம் மிக்கான் உயிர்த்தனன் - சிந்தாகுலம்மிக்கவனாக பெருமூச்செறிந்து நின்றான்.

பொழிப்பு : உடன் பிறந்த தம்பியரும், சிறந்த மந்திரிகளும், மற்றும் மக்கள் ஆகியவர்கள் முன்னமே போரில் முடிந்தனர் இன்று நமது பெரும்படையாவையும் முருகன் முடிவாக்கினான் யான் ஒருவனே தனியனாய் நிற்கிறேன். என் செய்வது என்று மனக்கவலை கொண்டான் சூரன்.

மாயவள் தன்னை மன்னன் மனத்திடை நினைத்த லோடும்
ஆயவள் வந்து தோன்றி அரும்பெறல் ஆற்றல் மைந்த
நீயொரு தமிய னாகி நின்றுளந் தளர்ந்தே என்னைக்
கூயினை முன்னிற் றென்னை தெரிவுறக் கூறு கென்றாள். 292

பொருள் : மாயவள் தன்னை மன்னன்மனத்திடை நினைத்தலோடும் - வருந்திய சூரபன்மன் அன்னைமாயவளை உதவவருமாறு மனதில் நினைத்தலும், ஆயவள்வந்து தோன்றி - தாயாகிய அவள் அங்கு வந்து தோன்றி, அரும் பெறல் ஆற்றல் மைந்த - பெருதற்கரிய ஆற்றல் மிக்க மகனே, நீ ஒரு தமியனாகி நின்று உளந்தளர்ந்தே என்னைக்கூயினை - இன்று நீ துணையிழந்து தனிஒருவனாக நின்று மனந்தளர்ந்து என்னை அழைத்தனை, முன்னிற்று என்னை - என்மூலம் நிறைவாக்க நீ எண்ணிய குறையாது, தெரிவுறக்கூறுக என்றாள் - யான் தெரிந்துகொள்ள அதனைக் கூறுவாயாக என்றாள்.

பொழிப்பு : சூரபன்மன் மாயையை வருமாறு எண்ணவே, அவளும் முன்னெ வந்து பேராற்றலுள்ள மகனே, நீ தனியனாகிநின்று மனம் சோர்ந்து என்னை அழைத்தாயே, உனக்கு நான் நிறைவு செய்யவேண்டியுள்ள குறைதான் யாது தெரியக் கூறுக என்றாள்.

அறிந்திடு மாயை இவ்வா றறைதலுங் குமரன் போரின்
மறந்தகு துணைவர் மைந்தர் மந்திரி தானை முற்றும்
இறந்திட எஞ்சி னேன்யா னியாவரும் எழுதற் கொத்த
திறந்தனை அருண்மோ என்ன நகைத்தவள் செப்ப லுற்றாள். 293

பொருள் : அறிந்திடும் மாயை இவ்வாறு அலமதலும் - குறையைஅறிந்தவளான மாயை அறியாள்போல இவ்வாறு வினாவவே மகன் கூறுவான், குமரன்போரில் சிவகுமாரனோடான போரிலே, மறந்தகு துணைவர்மைந்தர் மந்திரிதானை முற்றும் - திறலமைந்த தம்பியர் புத்திரர் மந்திரிகள் சேனைகள்ஆக உள்ள எல்லாம், இறந்திட எஞ்சினேன்யான் - இறந்தொழிய யான் எஞ்சினேன். நானே தனிய எஞ்சியுள்ளேன், யாவரும் எழுதற்கொத்த திறந்தனை அருண்மோ என்ன - மாண்டவர் யாவரும் மீண்டுவருதற்கு ஏற்ற வழியை அருளுக என்று வேண்ட, நகைத்து அவள் செப்பலுற்றாள் - அவள் நகையோடு சொல்வாள்.

பொழிப்பு : அறிந்தும் அறியாதவள் போல மாயைகூறவே சூரன், நடந்தபோரிலே படையுடன் சேர்ந்தவர் யாவரும் மாண்டனர் நானே எஞ்சினேன் அவர்கள் மீண்டும் வரும் வழியைக்கூறுக என்றலும் நகையோடு மாயை கூறுவாள்.

உறுபடை சுற்றந் துஞ்ச ஒருவனே யாயும் வீண்ணோர்
சிறைவிடுத் துய்யு மாறு சிந்தனை செய்தி லாய்நீ
அறுமுகன் தன்னோ டின்னும் அமர்செயக் குறித்தி யாயின்
நிறைபெருஞ் செல்வ வாழ்க்கை நீங்கினை போலும் அன்றே. 294

பொருள் : உறுபடை சுற்றம்துஞ்ச ஒருவனேயாயும் - குமரன்போரிலே பெரும் படையும் சுற்றமும் முற்றும் அழியக்கண்டும் தனித்தொருவனாய் நின்றும், வீண்ணோர் சிறைவிடுத்து உய்யுமாறு சிந்தனை செய்திலாய் நீ - இனியாவது தேவர்கள் சிறையை நீக்கிப் பகையின்றி உய்ந்திருக்கும் வகையைச் சிந்திக்கின்றிலையேநீ, அறுமுகன் தன்னோடின்னும் அமர்செயக் குறித்தியாயின் - இன்னமும் அறுமுகப்பெருமானோடு போர்புரியவே

துணிந்து நிற்பாயேல், நிறைபெரும் செல்வவாழ்க்கை நீங்கினை போலுமன்றே - உனக்குள்ள நிறைந்த பெரிய செல்வவாழ்வையே நீங்கினாய் போலும் என்பதே முடிபாகும்.

பொழிப்பு : பெரும்படை சுற்றம் எல்லாம் முருகன்போரில்முடிய நீயே தனிமையானது கண்டும், அமரர்சிறைவிடுத்துப் பகையொழிய அமைதிபிறத்தலான வழியை நினைக்கிலாய், இன்னமும் பொரவேதுணிவாயேல் செல்வமும் வாழ்வும் நீங்கினாய் என்பதே முடியாம்.

குறிப்பு : முருகனோடு தொடர்ந்த போரிலே இழப்பேயன்றி எய்தியபேறு ஏதுமில்லை. தொடர்வதும் இதுவே; முன் ஆற்றாத அமரர் போன்றவரல்லர்; அவர் வரம்பிலா ஆற்றலுள்ள இறைவன் எனக்கண்டும் பொரக்கருதலாமோ! நகைப்புக்குரியது இவ்வெண்ணம்; போர்தொடர்வையேல் நீயே நின்செல்வத்தையும் வாழ்வையும் நீக்கிக்கொண்டவனாவாய்; இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல் துன்பம் உழத்தொறும் காதற்றுயிர் என்ற குறளுக்கு இலக்கியமானான் சூரன் என்பது குறிப்பாகும். துணிவுபற்றி நீங்கினை என்றாள் இறந்தகாலத்தில் காலவழுமைதி

பன்னிரு தடந்தோள் கொண்ட பகவனைப் பாலன் என்றெ
உன்னலை அவன்கை வேலால் ஒல்லையிற் படுதி கண்டாய்
இன்னுயிர் துறக்க நின்றாய் என்மொழி கேட்பாய் அன்றே
சென்னியில் விதியை யாவ ராயினுந் தீர்ந்தார் உண்டோ. 295

பொருள் : பன்னிருதடந்தோள் கொண்ட பகவனைப் பாலலென்றே உன்னலை - பன்னிரண்டு திருப்புயமுள்ள பகவராகிய இவரைச் சிறுபாலகனே என்று எண்ணுவதை மறந்துவிடுக, அவன் கைவேலால் ஒல்லையில் படுதிகண்டாய் - அவன் தன்கைவேலை ஏவினால் ஒரு கணத்தில் நீயும் முடிந்துபோவாய் நன்கு அறிந்துகொள், இன்னுயிர் துறக்கநின்றாய் என்மொழி கொள்வாயன்றே - இனிய உயிரை இழக்கவேண்டிய விதிக்குவசமாகியுள்ளநீ உய்திறமாக என்னாலே சொல்லப்படும் அறிவுரையை ஏற்று நடப்பதற்கு

இணங்காய், சென்னியில் விதியை யாவராயினும் தீர்ந்தார் உண்டோ - தத்தமது தலைவிதியை வென்று தாம் எண்ணியவாறு வாழ்ந்தவர் எவரேனும் உண்டோ? நின்நிலையும் அதுவே.

பொழிப்பு : பன்னிருகரமுள்ள பிரானைச்சிறு பாலன்தானே என்று என்னுவதைத்தவிர் விரைவில் அவரது வேற்படையால் இறுதியாவாய், உண்மை, உணர்ந்துகொள், உயிரிழக்கவேண்டிய விதியின் வழியில் மதிமயங்கி நிற்கிறாய், யான்கூறும் உய்திவழி உறுதியென உணர்ந்து கொள்ளாய், விதியை வெல்வார் யார், உன்விதியும் அதுவேயாம்.

நின்றிட அனைய தன்மை நின்னுளம் மகிழு மாற்றால்
பொன்றினர் எழுதல் வேண்டில் புறக்கடற் கொருசா ராக
மன்றல்கொள் அமுத சீத மந்தர கூடம் என்றோர்
குன்றுள ததனை ஈண்டே கொணருதி கூடும் என்றாள். 296

பொருள் : அனையதன்மை நின்றிட - இவ்வறிவுரைகள் நிற்பதாகபோதும், நின்னுளம் மகிழுமாற்றால் பொன்றினர் எழுதல் வேண்டில் - நின் நெஞ்சம் மகிழுமாறு இறந்தவர் மீள உயிர்த்தெழுமாறு வேண்டுமாயின், புறக்கடற்கொருசாராக - புறவாழிக்கடலின் ஒருமருங்கில், மன்றல் கொள் அமுதசீத மந்தரகிரிஎன்றோதும் - நறுமணமுள்ளதான அமுதசீதமந்திரம் எனும் பெயருள்ள, குன்றுளது ஓருமலையுள்ளது, அதனை ஈண்டு கொணருதி கூடும் என்றாள் - அதனை இங்குக் கொண்டுவந்தால் உனது எண்ணம் கைகூடும் என்றாள் மாயை.

பொழிப்பு : இறுதி உபதேசம் போதும் நிற்பதாக, உன்உள்ளம் உவப்பஉயிர்நீத்தார் பிழைத்தெழ வேண்டில் புறவாழியின் மருங்கிலுள்ள மந்தரமலையை வருவிப்பாய் கைகூடும் என்றாள்.

இவ்வகை உரைத்து மாயை ஏகினள் ஏக லோடும்
மைவரை யென்ன நின்ற மன்னவர் மன்னன் கேளா
அவ்வைதன் சூழ்ச்சி நன்றால் அடுகளத் தவிந்தோர் யாரும்
உய்வகை இதுவே என்னா உன்னினன் உவகை மிக்கான். 297

பொருள் : இவ்வகை உரைத்து மாயை ஏகினள் ஏகலோரும் - இவ்வாறு ஏற்றஉபாயம் கூறித்தாயாம்மாயை போயினாள் போதலும், மைவரை என்ன நின்ற மன்னவர் மன்னன்கேளா - கரிய பெரியமலைபோல நின்ற பேரரசன் சூரன்கேட்டு, அவ்வைத்தன் சூழ்ச்சி நன்றால் அடுகளத்து அவிந்தோர்யாரும் - அன்னைகூறிய உபாயம் நல்லது ஆதலால் போர்க்களத்தில மடிந்த படையினர் யாவரும், உய்வகை இதுவே என்னா - உயிர் பிழைத்தெழவழி இதுவே என்று, உன்னினன் உவகைமிக்கான - கருதினான் களிப்புள்ளம் மிகப்பெற்றாள்.

பொழிப்பு : தாய் மாயை உபாயம் கூறிப்போந்தாள், போகவே சூரமன்மன் அன்னையின் உரை நல்லதே, யாவரும் உயிர்பிழைக்க வழிஇதுவே என்று எண்ணி உளக்களிப்புமிக்கவனானான்.

ஆவகை உவகை கொள்ளா அமுதமந் தரங்கொண் டேக
ஏவரை விடுத்தும் என்றே இறைப்பொழு தவுணர் தங்கள்
காவலன் முன்னி மாயக் கடுமுரண் தேரின் நீங்கித்
தேவியல் அரிமான் ஏற்றுத் திறலுடை எருத்தம் புக்கான். 298

பொருள் : ஆவகை உவகைகொள்ளா - அவ்வகையால் மனம்மகிழ்ந்து, அமுதமந்தரம் கொண்டு ஏக ஏவரை விடுத்தும் என்றே - அமுதமந்தரமலையை எடுத்துவருதற்குநாம் எவரை ஏவலாம் என்பது குறித்தே, இறைப்பொழுது அவுணர்தங்கள் காவல்முன்னி - ஒரு கணநேரம் அசுரேந்திரனாம் சூரன் சிந்தித்து, மாயக்கமுரண் தேரின் நீங்கி - மாயமும் மிகுவலியுமுள்ள தேரிலிருந்து நீங்கி, தேவியல் அரிமானேற்றுத் திறலுடை எருத்தம்புக்கான் - தெய்வீகமான சிங்கேற்றுவாகனத்தின் வலிதங்கிய பிடர்மேல் ஏறி அமர்ந்தான்.

பொழிப்பு : அவ்வைசொல் உபாயத்தால் உவப்புற்று, அம்மலையைக் கொணர ஏவரை ஏவலாம் என்று ஒருகணம் சிந்தித்த சூரபன்மன், தன்மாயத்தேனின் றிறங்கிச் சிங்கேற்றுவாகனத்தின் பிடரில் ஏறி அமர்ந்தான்.

இந்திர ஞாலந் தன்னை இறையவன் விளித்து நீயென்
புந்தியின் விரைந்து சென்று புறக்கடல் மருங்கின் மேவி
அந்தம தடைந்தோர்க் காவி அளித்திடும் அமுதங் கொண்ட
மந்தர கிரியைக் கீண்டு மற்றிவண் கொணர்தி யென்றான். 299

பொருள் : இறையவன் இந்திரஞாலந்தன்னை விளித்து - சூரன் இந்திரஞாலத்தேரை அழைத்து, நீ என்புந்தியில் விரைந்து சென்று - தேரே நீ எனது மனத்தினும் விரைந்து சென்று, புறக்கடல் மருங்ல்மேவி - பறவாழியின் பாங்கரிலே பொருத்தியதாய், அந்தமது அடைந்தோர்க்கு ஆவி அளித்திடும் அமுதங்கொண்ட - இறந்தோர்க்கு மீளஉயிர்தரவல்ல அமுதினைக் தன்னிடம் கொண்டுள்ள - மந்தர கிரியைக்கீண்டு மற்றிவண்கொணர்தி என்றான். மந்தரமலையைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு மீண்டு இங்கு வருவாய் என்று பணித்தான்.

பொழிப்பு : சூரன் மாயத்தேரை அழைத்து நீ என் மனத்திலும் விரைந்துபோய் புறக்கடலின் பக்கத்தில் இறந்தார்க்கு மீட்டும் உயிர்தரும் அமுதடங்கிய மந்தர மலையை எடுத்துக்கொண்டு மீண்டு இங்கு வருகுதி எனப் பணித்தான்.

வீழுமிய மாய மான்தேர் வினவியோர் கணத்தின் முன்னம்
எழுகட லினுக்கும் அப்பால் இருந்திடு கடலின் சார்போய்
அழிவுறா தங்கண் நின்ற அமுதமந் தரத்தைக் கொண்டு
வழிபடர் கதியின் மீண்டு மகேந்திரம் புக்க தன்றே. 300

பொருள் : விழுமிய மாயமான் தேர்வினவி - விழுப்பமுள்ள அந்த மாயமாத்தேர் பணிஎற்று, ஓர் கணத்தின் முன்னர் - ஒருநொடிப்பொழுதினுள்ளே, எழுகடலினுக்கும் அப்பால் இரந்திடு கடலின் சார்போய் - ஏழு கடலுக்கும் அப்பாலே சூழ்ந்து கிடக்கும் கடலின் பாங்கரில் சென்று, அழிவுறாது அங்கண்நின்ற அமுதமந்தரத்தைக் கொண்டே - அமுதுள்ளதாலே அழிவற்றதாக அங்கு நிலைபெற்றுள்ள அமுதமந்தரத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டே, வழிபடர் கதியின் மீண்டும் மகேந்திரம் புக்கதன்றே - தன் வழியிலே மீண்டும் மகேந்திர புரியில் வந்து சேர்ந்தது.

பொழிப்பு : விழுமிய மாயத்தேர் ஆணைப்படி கணப்பொழுதில் எழுகடலுக்கப்பாலே புறஞ்சூழ்ந்த கடலின் பக்கம் போய் அழிவின்றிநிற்கும் அமுதமந்தரத்தை எடுத்துக்கொண்டு மீண்டு விரைந்துவந்து மகேந்திரபுரம் சேர்ந்தது.

குறிப்பு : அமுதம் பெறக்கடைந்த மத்தாயிருந்ததால் ஆமுதப்பற்று மந்தரத்தில் பற்றியுளது ஆதலின் ஏனைய மலைபோலாது அழிவற்றிருந்தது. சந்திரனுக்கு முள்ளதால் அமுதகிரணன் பெயர்.

வேறு

அக்காலையில் இரதந்தரும் அமுதத்தனி வரையின்
மெய்க்கால்வர அந்நாள்வரை வெம்பூசல் இயற்றி
மைக்காலன்மெய் யுயிருண்டிட மறியும்படை முழுதும்
தொக்காலம தெழுந்தாலெனத் துண்ணென் றெழுந்தனவே. 301

பொருள் : அக்காலையில்-மாயத்தேர் மந்தரமலை கொண்டுவரவே, இரதந்தரும் அமுதத் தனிவரையின்மெய்க்கால்வர-தேர்கொணர்ந்த சிறந்த அமுதமலை தழுவிய காற்று இரணகளத்தில் வந்ததுமே, அந்நாற்வரை வெம்பூசல் இயற்றி-ஆரம்பம் தொட்டு அன்றுவரை கொடிய போர்புரிந்து, மைக்காலன் மெய்உயிர் உண்டிடமறியும் படை முழுதும்-கரிய காலன் உடம்பிலிருந்து உயிர்கவர மாண்டபடைகள் முழுவதும், தொக்கு ஆலமது எழுந்தாலெனத் துண்ணென்று எழுந்தனவே-ஆலகாலவிடம் எழுந்துவந்தது போல ஒருங்கே உயிர்பெற்று உடன் எழுந்தன.

பொழிப்பு : தேரில் வந்த அமுதமலை தழுவிய காற்று வந்ததும் அன்றுவரை அமர்புரிந்து அந்தகன் உயிர் கவர மாண்டபடை முழுதும் ஒருங்கே ஆலம் எழுந்தது போல் உடன் எழுந்தன.

பரியின்தொகை முழுதுய்ந்தன பனைபோலிய நெடுங்கைக்
கரியின்தொகை முழுதுய்ந்தன கடுந்தேர்த்தொகை ஈர்க்கும்
அரியின்தொகை முழுதுய்ந்தன அவுணப்படை யாகி
விரியுந்தொகை முழுதுய்ந்தன மெய்யூறது நீங்கி. 302

பொருள் : பரியின் தொகை முழுதுய்ந்தன-குதிரைப்படைமுழுதும் உயிர்பெற்றுய்ந்தன, பனைபோலிய நெடுங்கைக்கரியின் தொகை முழுதுய்ந்தன-பனைபோன்ற நீண்டகையுள்ள யானைப்படை முழுதும் உய்ந்தன, கடுந்தேர்த் தொகை ஈர்க்கும் அரியின் தொகைமுழுதுய்ந்தன-கடுவேகமாகத் தேரிழுத்துச் செல்லும் சிங்கங்களும் முழுதும் உய்ந்தன, அவுணப்படையாகி விரியும் தொகை முழுதுய்ந்தன-அவுணசேனையெனப்பரந்த படைத்தொகை முற்றும் உய்ந்தெழுந்தன, மெய் ஊறது நீங்கி-உடம்பிலுற்ற ஊனம் ஒழிந்து உய்ந்தன என்க.

பொழிப்பு : குதிரை, யானை, சிங்கம் இவற்றுடன் அவுண வீரராயினோருமாகிய படைகள் எல்லாம் உடலிலுற்ற ஊறுபாடெல்லாம் நீங்கிப் பண்டுகோல உயிர்த்தெழுந்தன.

குறிப்பு : மெய்யூறது நீங்கி என்பது தீபகமாக ஒவ்வொன்றோடும் சேர்த்துரைக்க நின்றது.

வடிவற்றுடல் அழிந்திட்டிடும் உயிரானவும் மருமம்
அடிகைத்தலம் முடிதோள்முதல் அங்கங்கள் குறைந்தே
முடிவுற்றிடும் உயிரானவும் முளரிக்கனல் உண்ணப்
பொடிபட்டிடும் உயிரானவும் எழுந்திட்டன புவிமேல். **303**

பொருள் : வடிவற்று உடல் அழிவுற்றிடும் உயிரானவும்-உருக்குலைந்து உடல் அழிவுற்ற உயிர்களும், மருமம் அடி கைத்தலம் முடி தோள்முதல் அங்கங்கள் குறைந்தே-மார்பும் காலும் கையும் தோளும் முதலிய உறப்புகள் துணிபட்டு விழ, முடிவுற்றிடும் உயிரானவும்-இறந்துபட்ட உயிர்களும், முளரிக்கனல் உண்ணப் பொடிபட்டிடும் உயிரானவும்-கமலமலர் போன்ற பெருமானின் கண்ணோக்கு வாய் முறுவல்களில் தோன்றிய தீபற்ற வெந்து பொடியாகிய உயிர்களும், புவிமேல் எழுந்திட்டன-ஆகிய உயிர்யாவும் பூமியில் பிழைத்தெழுந்தன.

பொழிப்பு : உருக்குலைந்து உடல் அழிந்த உயிரும், பாதாதிகேசம் உறுப்புகள் துணிந்துவிழ இறந்தனவும், பெருமானது நோக்கம் முறுவல்களில் எழுந்த தீயால் வெந்து சாம்பரான உயிர்களும் பூமியிலே முன்போல் உயிர்த்தெழுந்தன.

மிண்டிக்கடி துயிர்பெற்றெழு வெஞ்சூர்முதல் அனிகம்
எண்டிக்கொடு புவிபாதலம் இருநாற்கடல் எங்கும்
மண்டிக்கக னத்தேழ்வகை உலகங்களும் மல்கி
அண்டத்தனி முடிகாறும் அடைந்திட்டன மிடைந்தே. 304

பொருள் : கடிது உயிர்பெற்று மிண்டிஎழும் வெஞ்சூர் முதல் அனிகம் - விரைவிலே உயிர்பெற்று நெருங்கி எழுந்த கொடிய சூரனாம் தலைவனின் சேனைகள்,எண்திக்கொடு புவி பாதலம் இருநாற்கடல் எங்கும் மண்டி - எட்டுத்திசையும் பூமியும் பாதலமும் எட்டுக்கடலும் ஆகிய எவ்விடமும் நிறைந்து, ககனத்து ஏழ்வகை உலகங்களும் மல்கி - வானிலுள்ள மேலேழு உலகிலும் மலிந்து, அண்டத்தனி முடிகாறும் அடைந்திடனவன்றே-அண்டகோளத்தின் உயர்ந்த முகடுவரை அடைந்துவிட்டன.

பொழிப்பு : உயிர்த்தெழுந்த அவுணசேனை, எண்டிசை பூமிபாதலம் சமுத்திரம் மேலுள்ள ஏழு உலகங்கள் எங்கும் நிறைந்து அண்டமுகடுவரை போய்ச் செறிந்தன.

மாதண்டம்எ ழுத்தோமரம் வயிரப்படை வாள்கோல்
கோதண்டமு தற்பல்படை கொடுதானவர் அனிகம்
வேதண்டமெ னச்சேணுயர் வேழம்பரி நிரைகள்
மூதண்டம்வெ டிக்கும்படி முழங்குற்றன அன்றே. 305

பொருள் : மாதண்டம் எழுத்தோமரம் வயிரப்படைவாள்-பெரிய தண்டாயுதமும் ஏழுவும் தோமரமும் வசசிராயுதமும் வாளும், கோல் கோதண்டம் முதற்பல்படைகொடு - அம்பும் வில்லும் முதலான பல படைகளும் ஏந்தி, தானவர் அனிகம் - அசுரப்படையும், வேதண்டம் எனச் சேணுயர் வேழம் பரிநிரைகள்-மலைபோல

மீதுயர்ந்த யானையும் குதிரைகளும் ஆகியவையும், மூதண்டம் வெடிக்கும்படி முழங்குற்றனவன்றே- பழைய அண்டகோளமும் அதிர்ந்து வெடிக்கும்படி வீர முழக்கம் செய்தன.

பொழிப்பு : தண்டுமுதல் தனுவரை பல படைகளும் பற்றிய அசுரப்படையும், யானை குதிரையாகிய படையும் எல்லாம் அண்டகோளம் வெடிக்கும்படி ஆர்ப்பரிந்தன.

குறிப்பு : இவற்றோடு மறந்தும் தேர் கூறப்படாத நுட்பம் கருதற்பாலது உயிரின் மையால்.

எழுந்தான்வயப் புலிமாமுகன் இரவிப்பகை எழுந்தான்
எழுந்தான்எரி முகவெய்யவன் இளமைந்தனும் எழுந்தான்
எழுந்தான்அறத் தினைக்காய்பவன் இருபாலரும் எழுந்தார்
எழுந்தார்ஒரு மூவாயிரர் ஏனோர்களும் எழுந்தார். **306**

பொருள் : எழுந்தான் வயப்புலிமாமுகன் - வீரம்மிக்க சிங்கமுகன் எழுந்தான் இரவில் பகை எழுந்தான் - பானுகோபனும் எழுந்தான் எரிமுகவெய்யவன்-அக்கினிமுகனும் எழுந்தான், இளமைந்தனும் எழுந்தான் - இளையமகன் வச்சிரவாகுவும் எழுந்தான், எழுந்தான் அறத்தினைனக் காய்பவன் - தருமகோபனாம் மந்திரியும் எழுந்தான், இருபாலரும் எழுந்தார் - சிங்கன் தாரகன் மக்களாகும் அசுரேந்திரன் வீரமகேந்திரன் எனும் இருவரும் எழுந்தனர், எழுந்தார் ஒரு மூவாயிரர்-சூரனது மூவாயிரம் மக்களும் எழுந்தனர், ஏனோர்களும் எழுந்தார்-சொல்லப்படாமல் எஞ்சியுள்ளவரும் எழுந்து வந்தனர்.

பொழிப்பு : சிங்கன், பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு, தருமகோபன் பாலர் மூவாயிரர் எனும் சுட்டியுரைத்தவரும் ஏனையரும் உயிர்பெற்றெழுந்தனர். சிங்கன் மக்கள் நூற்றுவர்

குறிப்பு : மகேந்திரப் போர்முனையில் மடிந்தவரே மீட்டெழுந்தமை கூறப்பட்டது வேலால் வீய்ந்த தாரகன் மற்றும் புறத்தே மாய்ந்தவர் மிண்டிலர் மாண்டவரே.

சூர்க்கின் றதொல் வடிவங்கொடு துண்ணென்றெழு கின்றோர்
பார்க்கின்றனர் அணிகங்களைப் பகுவாய்திறந் திடிபோல்
ஆர்க்கின்றனர் தமதாடலை அறைகின்றனர் நம்மேல்
போர்க்கின் றுவந் தனர்யாரெனப் புகல்கின்றனர் இகலால். 307

பொருள் : சூர்க்கின்ற தொல்வடிவங்கொடு துண்ணென்று எழுகின்றோர் - அச்சந்தரும் முன்னை வடிவுகளுடன் விரைந்தெழுந்த அவுணவீரர்கள், பார்க்கின்றனர் அணிகங்களை சூழ்ந்துள்ள பெரும் படையைப் பார்த்தனர், பருவாய் திறந்து இடிபோல் ஆர்க்கின்றனர்- தமது பேழ் வாயைத்திறந்து இடிபோல முழங்குகின்றனர், தமது ஆடலை அறைகின்றனர் - தத்தம் ஆண்மை வீரங்களைப் பேசுகின்றனர், நம் மேல் போர்க்குஇன்று வந்தவர் யார் எனப் புகல்கின்றனர் இகலால் - நம்மீது போராட இன்று வந்தவர் யார் என்று பகைமை உணர்வோடு பேசுகின்றவருமாயினர்.

பொழிப்பு : பண்டுபோலெழுந்த வீரர்கள் படைகளைப் பார்க்கிறார்கள், இடிபோல ஆர்ப்பரிக்கிறார்கள், தம்வீரம்பேசுகிறார்கள், பகைமை உணர்வுள்ளவராய் இன்று நம்முடன் அமர்புரிய வந்தவர் யாவரென்றும் பேசுவார்.

ஈடுற்றிடு சமரெல்லையில் இடையுற்றிடு படைகள்
நாடுற்றிவண் எடுத்திட்டனர் நறையுற்றிடு தும்பை
சூடுற்றிடு மணிமாமுடிச் சூரன்புடை தன்னில்
கூடுற்றனர் வெம்போர்செயுங் குறிப்புற்றனர் அன்றே. 308

பொருள் : ஈடுற்றிடு சமரெல்லையிலிடை உற்றிடு படைகள் நாடுற்று இவண் எடுத்திட்டனர்-இணையாக எதிர்நின்று சமர்பொருத களத்தினிடையே சிந்திக்கிடந்த படைக்கலங்களை நாடி இங்கு எடுத்துக்கொண்டனராய், நறையுற்றிடுதும்பை சூடுற்றிடு மணிமாமுடிச்சூரன் புடைதன்னில் கூடுற்றனர் - தேனுள்ள தும்பைமாலை அணிந்த மணிமகுடம் தரிந்த சூரபன்மனின் பக்கம் வந்து கூடினர், வெம்போர் செயும் குறிப்புற்றனரன்றே-கடும் போராற்ற வேண்டுமெனும் எண்ணம்மிக்கவராயினர்.

பொழிப்பு : சமநிலையில் இருசாராரும் சமர்புரிந்த களத்திலே கிடந்த படைக்கலங்களைத் தேடி எடுத்துக்கொண்டு சூரன் பால்வந்துகூடி வெம்போர் புரியும் எண்ணம்மிக்கவராயினர்.

வேறு

உய்ந்திவர் யாவரும் ஒல்லை எழுந்தே
அந்தமில் சேனையொ டார்த்திடு காலை
இந்திர ஞாலம் எனப்படு மான்தேர்
வந்தது தானவர் மன்னவன் முன்னம். **309**

பொருள் : இவர்யாவரும் உய்ந்து வல்லை எழுந்து - இவர்கள் யாவரும் உயிர்பெற்று விரைவில் ஊக்கமொடுஎழுந்தே, அந்தமில் சேனையொடு ஆர்த்திடுகாலை - எண்ணற்ற சேனைகளுடனே ஆர்ப்பரிந்து நிற்கையில், இந்திரஞாலம் எனப்படுமான்தேர் - இந்திரஞாலம் எனப்படும் மாவிரதம், தானவர் மன்னவன் முன்னம் வந்தது - அசுரர் மன்னனாம் சூரபன்மன்முன்னே வந்துற்றது.

பொழிப்பு : இவ்வாறிவர் யாவரும் உய்ந்து எழுந்து ஆர்ப்பரிந்து நிற்கையில் இந்திரஞாலத் தேரானது மருத்துமலையுடன் அவுணர் மன்னவன் முன்பு வந்தது.

பொற்றையி னோடு பொலன்கெழு மான்தேர்
உற்றதும் அன்பினர் உய்ந்தெழு மாறும்
இற்றப தாதி இரைத்தெழு மாறுந்
தெற்றென மாயவள் செம்மல் தெரிந்தான். **310**

பொருள் : பொற்றையினோடு பொலன்கெழுமான்றேர் உற்றதும் - அமுதமலை கொண்டு அழகிய பெருந்தேர் வந்தவாறும், அன்பினர் உய்ந்தெழுமாறும் - அன்பாளரான தம்பி தனயர் முதலியோர் உய்ந்தெழுந்தவாறும், இற்றபதாதி இரைத்தெழுமாறும் - மாண்டசேனையாவும் மீண்டும் ஆரவாரித்தெழுமாறும் ஆகியவற்றை, தெற்றெனமாயவள் செம்மல் தெரிந்தான் - தேற்றமாக விரைவிலே மாயைமகன் சூரன் கண்ணுற்றான்.

பொழிப்பு : மருந்துமலை கொண்டு தேர்வந்ததும்,தம்பி மைந்தர் உறவினரான அன்புடையார் உய்ந்தெழுந்ததும், மாண்டசேனை மீண்டெழுந்ததும் ஆகியவற்றைத் தெளிவாகவே விரைவில் சூரபன்மன்கண்டான்.

மகிழ்ந்தனன் ஆர்த்தனன் வானவர் தம்மை
இகழ்ந்தனன் விம்மிதம் எய்தினன் யாயைப்
புகழ்ந்தனன் மேனி பொடித்தனன் நெஞ்சந்
திகழ்ந்தனன் நன்னகை செய்தனன் அன்றே. **311**

பொருள் : மகிழ்ந்தனன் - எண்ணியவாறானதால் மகிழ்ந்தான், ஆர்த்தனன் - ஆர்ப்பரித்தான், வானவர் தம்மை இகழ்ந்தனன்- பகைவராம் தேவர்களை இகழ்ந்தான், விம்மிதம் எய்தினான்- ஆச்சரியப்பட்டான், ஆயைப்புகழ்ந்தனன் - தாயைமெச்சிப் புகழ்ந்தான், மேனிபொடித்தனன் - ஆனந்தத்தால் மேனிபுளகம் பூத்தவனானான், நெஞ்சம் திகழ்ந்தனன் - உள்ளத்து ஒளிவிளங்கக் கண்டான், நன்னகை செய்தனனன்றே-உவகைப் பெருமிதத்தோடு அட்டகாசம் செய்தான்.

பொழிப்பு : தன்னுள் மகிழ்ந்தான், ஆர்த்தான், வானவரை இகழ்ந்தான், அதிசயித்தான், மாயையைமெச்சினான், புளகம் போர்த்தான், உள்ளத்தொளி மிளிரப் பெற்றான் உவகைப் பெருமிதம் காரணமாகப் பெருஞ்சிரிப்புச் சிரித்தான்.

உந்திநி ரப்புறும் உண்டிய தின்றி
முந்திநி ரப்பிடை மூழ்கினன் வல்லே
வெந்திறல் ஆளி வியன்றவி சேறி
இந்திர நல்வளம் எய்திய தொத்தான். **312**

பொருள் : உந்தி நிரப்புறும் உண்டியதின்றி முந்தி நிரப்பிடை மூழ்கினன் - முன்னே வயிறார உண்ண உணவின்றிவறுமையில் அழுந்திக்கிடந்த ஒருவன், வல்லேவெந்திறல் ஆளிவியன் தவிசுஏறி - எதிர்பாராமல் விரைவிலே ஆற்றல்மிக்க சிங்காசனத்தமர்ந்து,

இந்திர நல்வளம் எய்தியது ஒத்தான் - தேவேந்திர செல்வமும் சுகமும் அனுபவிக்கப் பெற்றால் மகிழ்வது போலும் பேரானந்தமுற்றான் சூரபன்மண்.

பொழிப்பு : வயிறார உண்வழியின்றி வறுமையிலே முன்னாளில் வாடிய ஒருவன் அதிஷ்டவசமாகச் சிங்காசனத்தமர்ந்து இந்திரயோகம் அனுபவிக்கப்பெறின் எத்துணை மகிழ்வானோ அதுபோலவே சூரனும் இழந்தவை மீளப் பெற்றுப் பேரானந்தமுற்றான்.

ஓங்கிய சென்னி உயர்ந்தன மொய்ம்பு
வீங்கிய தாலுடன் மிக்கு மதர்ப்புத்
தேங்கிய சிந்தை சிலிர்த்த உரோமம்
ஆங்கவன் எய்திய தாரறை கிற்பார். **313**

பொருள் : சென்னி ஓங்கிய சூரபன்மனின் குனிந்த தலை நன்கு நிமிர்ந்தது, மொய்ம்பு உயர்ந்தன - தோள்கள் உயர்ந்தன, உடல்வீங்கியது - மெலிந்திருந்த உடம்பு பூரித்தது, மிக்குமதர்ப்பு தேங்கியசிந்தை - சிந்தையிலே செருக்கு வளர்ந்து நிலைபெற்றது, உரோமம் சிலிர்த்த - மேனியிலுள்ள உரோமங்கள் சிலிர்த்து நின்றன, ஆங்கு அவன் எய்தியது யார் அறைகிற்பார் - அப்போது சூரனடைந்த ஆனந்தக் களிப்பை யார்தான் உள்ளபடி செல்லவல்லார் முடியாது.

பொழிப்பு : எல்லாம் இழந்து தனிமரமாய் மெலிந்த சூரன் யாவும் மீளப் பெற்ற மகிழ்ச்சி நிலையில் தோன்றிய மெய்ப்பாடு கூறப்பட்டது, தலைநிமிரத் தோள்வளர உடல் பூரிக்க மனத்தில் செருக்கு மிக, உரோமம் சிலிர்க்கப் பெருங்களிப்புற்றான்.

குறிப்பு : இவ்வாறான உலகை மகிழ்ச்சி கொள்ளல் அரசருக்கு விசேடமாயும் மற்றெவர்க்கும், நலமன்று.

வஞ்சனி தந்திடு மைந்தன்இவ் வாற்றால்
நெஞ்ச மகிழ்ந்தவண் நின்றிடு காலை
நஞ்சம் எழுந்திடு நாள்கொலி தென்றே
அஞ்சி நடுங்கினர் அண்டர்கள் எல்லாம். **314**

பொருள் : வஞ்சனி தந்திடுமைந்தன் இவ்வாற்றால் நெஞ்சம் மகிழ்ந்தவண் நின்றிடும் காலை வஞ்சகி மாயைதந்த சூரன் இவ்வாறு மனம் மகிழ்ந்து களிப்புடன் அங்கு நிற்கின்ற நேரத்திலே, நஞ்சம் எழுந்திடுநாள்கொலிது என்றே - ஆலகால நஞ்சு எழுந்து வந்த நாள்தானோ இதுவென்று, அண்டர்கள் எல்லாம் அஞ்சி நடுங்கினர் - தேவர் எல்லாரும் யாது நேருமோ என்று பயந்து நடுங்கினார்கள்.

பொழிப்பு : மாயைமகன் மகிழ்ந்து நிற்க சேனை எழுந்தது கண்டதேவர் ஆலகாலம் எழுந்த நாளோ ஈதுவென்று எண்ணுபவராகவே யாவரும் பயந்து நடுங்கினார்கள்.

பொன்னகர் வாழ்க்கை புவித்திசை வாழ்க்கை
பின்னுறு கின்ற பெரும்பத வாழ்க்கை
எந்நகர் வாழ்க்கையும் எய்திய இன்னே
ஒன்னலர் கொல்லுமுன் ஓடுதும் என்றார். **315**

பொருள் : பொன்னகர், வாழ்க்கை புவித்திசை வாழ்க்கை - பொன்னுலக நகரில் இருக்கும் சுகவாழ்வும் புவியிலும் திசைகளிலும் இருக்கும் சுகவாழ்வும், பின்னுறுகின்ற பெரும்பத வாழ்க்கை - பின்னே பெறவுள்ள பெரும் பதமாம் வீட்டுலக வாழ்வும் எந்நகர் வாழ்க்கையும் எய்தியது இன்னே - மற்றும் எந்தநகரிலும் எய்தும் சுகபோகவாழ்வும் எல்லாமே ஒருங்கே இப்போதே இவ்விடத்தில் எமக்கு எய்தும் போலாயிற்று, ஒன்னலர் கொல்லுமுன் ஓடுதும் என்றார் - நம்பகைவர் கொல்லுவதன் முன் யாங்காயினும் ஓடி உய்வோம் என்றனர்.

பொழிப்பு : எய்தியிருந்து இழந்து போனவையும் இனி எய்தலாமென எண்ணுவதுமான எல்லா விதமான (சுவர்க்கம எண்டிசை பூமியில்)

சுகபோக வாழ்வும் வீட்டின்பமும் எமக்கு இப்போதே எய்திக் கனவாகிவிடும் போல நேர்ந்துளதே பகைவர் எம்மைப்படுக்குமுன் ஓடிஒளித்து உயிர் பிழைப்பதே ஏற்றதெனக் கூறினர் தேவர் யாவரும்.

ஊர்ந்திடும் ஊர்திகள் ஓர்புடை தம்பாற்
சார்ந்தவர் ஓர்புடை தாமொரு பாலாய்ச்
சேர்ந்திடு கைப்படை சிந்திவிண் ணோர்கள்
பேர்ந்திரி கின்றனர் பின்னது நோக்கார். **316**

பொருள் : ஊர்ந்திடும் ஊர்திகள் ஓர்புடை - தாம் ஊர்ந்து செல்லும் வாகனங்கள் ஒருபுறமாகவும், சார்ந்தவர் ஓர் புடைதாம் ஒரு பாலாய் - தம்மொடுசார்ந்தவர் ஒரு புறமாகவும் - தாம் மற்றோர் புறமாகவும், விண்ணோர்கள் சேர்ந்திடுகைப்படைசிந்தி - தேவர்கள் கையிலுள்ள படைக்கலங்களும் தவறிவிழ, பின்னது நோக்கார் பேர்ந்து இரிகினறனர் - பின்புறம் திரும்பிப் படைகளையோ தொடர்வாரையோ பாராமலே ஓடினார்கள்.

பொழிப்பு : தம் வாகனம் ஒருபுறம் சார்ந்தோர் ஒருபுறம் தாமும் ஒரு புறமாகக் கைப்படைகளும் இந்து பின்பு அவற்றைப் பாராமல் வானவர் பயந்து ஓடிய வணணம் போனார்.

கிள்ளை புறாமயில் கேழ்கிளர் அன்னம்
பிள்ளை மணிக்குயில் பேரிசை ஆந்தை
கள்ளுணும் வண்டு கரண்டம தாதிப்
புள்ளுரு வங்கொடு வானவர் போனார். **317**

பொருள் : கிள்ளைபுறா மயில் கேழ்கிளர் அன்னம் - கிளியும் புறாவும் மயிலும் வெண்ணிறம் விளங்கும் அன்னமும், பிள்ளை மணிக்குயில் பேரிசை ஆந்தை - கரிய காகமும் குயிலும் பேரோசை காட்டும் ஆந்தையும், கள்ளுணும் வண்டு கரண்டமதாதி - தேன் பருகும் வண்டும் நீர்க்காக்கையும் முதலிய புள்ளுருவம் கொடு வானவர், போனார் - வல்வேறு பறவைகளின் வடிவில் உருமாறி வானவர்கள் ஒளித்தோடிப் போனார்.

பொழிப்பு : கிளிமுதல் நீர்க் காகவரை கூறிய பல்வேறுவகையில் தம் உருமாறி உம்பர் ஓடினர்.

அங்கது நோக்கி அடற்கண வீரர்
மங்கிய தானையும் மாண்டுளர் யாரும்
இங்கெழு கின்றனர் யாமிவண் வீந்தாஞ்
சங்கையி லென்று தளர்ந்தலை வுற்றார். 318

பொருள் : அங்கது நோக்கி - அங்கு இந்நிகழ்வுகளை நோக்கி, அடற்கணவீரர் - வலிமிக்க பூத கணவீரர்கள் தம்முள் எண்ணுவார், மங்கிய தானையும் மாண்டுளர்யாரும் - அழிந்த சேனையும் மாண்ட அவுணர்களும், இங்கு எழுகின்றனர் - இங்கு உய்ந்து எழுகின்றனர் ஆதலால், யாம் இவண் வீந்தாம் - இவர்களால் தாக்குண்டழிவோம், சங்கைஇல் என்றுதளர்ந்து அலைவுற்றார் - இதற்கு ஐயமில்லை என்று எண்ணி மனந்தறர்ந்து அலைவுற்றனர்.

பொழிப்பு : நிலைமை கண்ட பூதவீரர் அழிந்த சேனையுடன் மாண்ட அவுணரும் ஒருங்கே உயிர்பெற்று உய்ந்தெழுந்தனர், நாமிவரால் அழிவது திண்ணம், ஐயமில்லை எனத் தளர்ந்தார்.

இலக்கரும் எண்மரும் ஏந்தலும் நோக்கி
அலக்கணும் அச்சமும் அற்புத நீருங்
கலக்கமும் வெய்ய கடுஞ்சின முங்கொண்
டுலைக்கனல் அன்ன உயிர்ப்பொடு நின்றார். 319

பொருள் : இலக்கரும் எண்மரும்ஏந்தலும் நோக்கி - இலட்சத்தெட்டுவீரரும் வீரபாகுவும் பார்த்து, அலக்கணும் அச்சமும் அற்புதரும் கலக்கமும் வெய்ய கடுஞ்சினமும் கொண்டு - சஞ்சலமும் பயமும் அற்புதமும் மனக்கலக்கமும் வெம்மையான கடுஞ்சினமும் கொண்டவராய், உலைக்கனல் அன்ன உயிர்ப்பொடுநின்றார் - உலைக்கனலோடு கூடிய துருத்திக் காற்றுப் போலும் சுடுமூச்செறிபவராய்த் திகைத்து நின்றனர்.

பொழிப்பு : வீரவாகு உள்ளிட்ட இலட்சத்தொன்பது வீரரும் இதை நோக்கிச் சஞ்சலமும் பயமும் அற்புதமும் மனக்கலக்கமும் கடுஞ்சினமும் கொண்டவராய் நெடுமூச்செறிந்து திகைத்து நின்றார்கள்.

குறிப்பு : இந்நாள்வரை பொருது வென்றதெல்லாம் விழலாயிற்றே என்பதால் அலக்கணும், மீண்டெழுந்தோர் அழிப்பாரே என அச்சமும், உய்ந்தெழுந்த வாறென்னே என அதிசயமும், இவரெல்லவரோடும் இனிச்சமர் புரிவ தெங்ஙனம் எனக் கலக்கமும், எவ்விதத்திலும் இவரை அழித்தே தீரவேண்டுமெனக் கடுஞ்சினம் மூளவும் திகைப்பில் ஆழ்ந்தனர்.

வேறு

வென்றி கொண்டவேற் குமரன் இவ் விளைவெலாம் நோக்கி
நின்ற ஒன்னலன் சூழ்ச்சியும் வலவைசொல் நெறியுங்
குன்றின் வன்மையும் உய்ந்தெழு பரிசனர் குழுவும்
நன்று நன்றெனக் கையெறிந் தழலெழ நகைத்தான். 320

பொருள் : வென்றிகொண்ட வேற்குமரன் இவ்விளைவெலாம் நோக்கி - வெற்றியே விளங்க நிற்கும் வேற்படை ஏந்திய குமரவேட் பெருமான் இவ்விளைவுகளைத் திருவுளங்கொண்டு, நின்ற ஒன்னலன் சூழ்ச்சியும்,வலவை சொல் நெறியும் அதற்கு மூல உபாயமாக மாயை கூறிய வழியும், குன்றின் வன்மையும் - உயிர்ப்பித்த மருந்து மலையின் ஆற்றலும், உய்த்தெழுபரிசனர் குழுவும் - உயிர்ந்தெழுந்த பரிசனராயுள்ளவர் கூட்டமும் ஆகியவற்றை யெல்லாம் எண்ணி, நன்று நன்றெனக்கையெறிந்து - மிகநன்று நன்றென்று கூறி, கைகொட்டி, அழல் எழ நகைத்தான் - தீப்பிழம்பெழக் கோபத்தோடு ஏளமாகச் சிரித்தருளினார்.

பொழிப்பு : வெற்றிவேற் பெருமான்யாவையும் நோக்கி, சூரன் சூழ்ச்சியும் மாயை சொன்ன உபாயமும், உய்ந்தெழுந்த படையும், உய்வித்த மலையின் ஆற்றலும் ஆயினவற்றைக் கருதி எல்லாம் மிக நன்றென்று கூறியருளிக்கையெறிந்து தீக்கொழுந்தெழக் கோபச் சிரிப்புச் சிரித்தார்.

ஆன காலையில் அரிமுகன் அலரிதன் பகைஞன்
ஏனை மைந்தர்கள் அறத்தினை வெகுண்டிடும் ஏந்தல்
சேனை காவலர் யாவருஞ் சூரன்முன் சென்று
மான வீரமோ டிறைஞ்சிநின் றினையன வகுப்பார். **321**

பொருள் : ஆனகாலையில் அரிமுகன் - அப்போது சிங்கனும், அலரிதன் பகைஞன் - பானுகோபனும், ஏனையமைந்தர்கள் - மற்றைய மக்களும், அறத்தினை வெகுண்டிடுமேந்தல் - தருமகோபனும், சேனைகாவலர் யாவரும் சூரன்முன் சென்று - சேனாதிபதிகளும் ஆகியவர்கள் சூரபன்மன் முன்வந்து மானவீரமோடு இறைஞ்சிநின்று, இனையனவகுப்பார் - அபிமானத்தோடும் வீரத்தோடும் வணங்கி நின்று பின்வமாறு கூறுவாராயினர்.

பொழிப்பு : அப்போது சிங்கன் பானுகோபன் மற்றை மக்கள் தருமகோபன் சேனாதிபதிகள் ஆகிய இவர்கள் யாவரும் மானவீரத்தோடு சூரன்முன் சென்று மேல் வருமாறு கூறுவாராயினர்.

எந்தை நீயிவண் நிற்குதி யாமெலாம் ஏகிக்
கந்தவேளுடன் அவன்படை வீரரைக் கடிந்து
சிந்தராகிய பூதர்தந் தொகையையுஞ் செகுத்து
வந்து நின்னடி வணங்குதும் வல்விரைந் தென்றார். **322**

பொருள் : எந்தை நீ இவண்நிற்குதி - எங்கள் தந்தையாம் அரசே, நீ இவண் நிற்குதி - நீ இங்குதானே நிற்பாயாக, யாமெலாம் ஏகி - நாம் எல்லோரும் பகை முனையிலே சென்று, கந்தவேளுடன் அவன் படைவீரரைக் கடிந்து - கந்தவேளுடனே அவன் படைவீரரையும் ஒறுத்து, சிந்தராகிய பூதர்தந் தொகையையும் செகுத்து - குறளினரான பூதர்களையும் சிதைவித்து, வந்து நின்னடி வணங்குதும் வல்விரைந்து என்றார் - வெற்றிகொண்டு வந்து நின்பாதங்களை வணங்குவோம், இதனை மிக விரைவிலே செய்து முடிப்போம் என்றனர்.

பொழிப்பு : அரசே, போரிட வேண்டாம் நீ இங்கு நிற்க நாமெல்லாம் சென்று போராடி கந்தவேளுடன் வீரர்களையும் ஒறுத்தடக்கி, பூதர்களைச் சிதைத்து வெற்றியுடன் வந்து நின்பாதங்களை மிகவிரைவில் வணங்குவோம் என்றனர்.

கொற்ற வீரர்கள் இவ்வகை உரைத்தலுங் கொடியோன்
மற்றிவ் வாசகம் நன்றெனைப் போற்றுவான் வந்தீர்
பற்ற லன்பெரு வன்மையும் வீரமும் படுத்து
வெற்றி இன்றெனக் கருளுதி ராலென விடுத்தான். **323**

பொருள் : கொற்ற வீரர்கள் இவ்வகை உரைத்தலும் கொடியோன் - வெற்றி வீரர்கள் இவ்வாறு கூறக்கேட்ட கொடிய சூரன், மற்றிவ்வாசகம் நன்று - நீவிர் கூறிய உரை நல்லதே, எனைப் போற்றுவான் வந்தீர் - உற்றவிடத்து எனக்குதவிக்காக்க வந்தீர்கள், பற்றலன் வெருவன்மையும் வீரமும்படுத்து -பகைவனுடைய வலியையும் வீரத்தையும் அழித்து, வெற்றி இன்றெனக்கு அருளுதிரால் எனவிடுத்தான் - இன்றே எனக்கு வெற்றியை உதவுவீர் என விடுத்தான்.

பொழிப்பு : வீரர்கள் விளம்பியது கேபட்ட சூரபன்மன், நீர் கூறியது நல்லது, தக்க சமயத்தில் எனக்கு உதவிக்காக வந்தீர்கள், பகைவன் வலியையும் வீரத்தையும் அழித்து எனக்கு இன்றே வெற்றியை அருளுவீராக என்றான்.

குறிப்பு : போற்றுவான் வந்தீர், வெற்றியருளுவீர் என்ற தொடர்கள் சூரன் எளிமையானதைக் காட்டும்.

விடுத்த காலையில் விடாது சூழ் அனகங்கள் விரவி
அடுத்து வந்திடப் பொள்ளென ஏகியே ஆர்த்துப்
பிடித்த பல்வகைப் படைகளும் உருமெனப் பெய்து
வடித்த வேற்படை நம்பியை அன்னவர் வளைத்தார். **324**

பொருள் : விடுத்த காலையில் - சூரன் விடைதந்துவிடவே, விடாதுசூழ் அனிகங்கள் விரவி அடுத்து வந்திட - நிழல் போல

விடாது தொடர்ந்து சூழும் அனிகம் செறிந்து சேர்ந்து வர, பொள்ளென, ஏகியே ஆர்த்து - விரைந்து சென்று ஆர்ப்பரித்து, பிடித்த பல்வகைப்படைகளும் உருமெனப் பெய்து - கைக்கொண்ட பல்வேறுபடைகளையும் இடியேறுபோலப் பொழிந்து, வடித்த வேற்படை நம்பியை அன்னவர் வளைந்தார் - கூரிய வேற்கரத்திறைவராம் பெருமாளை அவ்வீரர்கள் சூழ்ந்தனர்.

பொழிப்பு : சூரன் விடைதந்துவிடவே, அவ்வீரர்கள் விடாது தொடரும் படைகளுடன் விரைந்து சென்று இடியேறு போலப் பலபடைகளும் பொழிந்து வேற்கரராகும் பெருமானைச் சூழ்ந்தனர்.

தீங்கனற் பெருங் கடவுள் பாற் செறியிருட் டொகைபோல்
வாங்கு விற்கரத் தையனை அவுணர்கள் வளைப்ப
ஏங்கல் உற்றனர் பாரிடர் ஏனையோர் எம்மால்
தாங்கு தற்கரி தீப்பொரும் படையெனத் தளர்ந்தார். **325**

பொருள் : தீங்கனல் பெருங்கடவுள்பால் செறிஇருட்கணம் போல் - வெய்ய தீக்கொழுந்து செறிந்த அக்கினி தேவனையே மறைத்திடலாமெனச் செறிந்து சூழும் இருளின் குழுப்போலவே, வாங்குவிற்கரத்து ஐயனை அவுணர்கள் வளைப்ப - வளைத்த விற்பிடித்த கரத்தராகிய பிரானை அவுணப்படையினர் சூழ்ந்திடவே, பாரிடர் ஏங்கலுற்றனர் - பூதர்கள் ஏங்கினார்கள், ஏனையோர் இப்பெரும்படை தாங்குதற்கு அரிதெனத் தளர்ந்தார் - மற்றைய இலக்கத்தொன்பது வீரரும் இந்தப் பெரும் படையை இனி எம்மால் எதிர்த்து நிறல் அரிது இயலாது என எண்ணி மனந்தளர்ந்தவரானார்.

பொழிப்பு : பெரிய தீக்கடவுளை அவிப்போமெனச் சூழும் இருட் குழுவைப் போல விற்பிடித்த வீரராகிய செவ்வேளை அவுணர் படைசூழவே, பூதர்கள் ஏங்கினர், ஏனைய வீரரும் இப்பெரும் படையை எம்மால் எதிர்கொள்வது இயலாது என மனந்தளர்ந்தார்.

வீறலு டைப்பஃ றானையும் வெய்யவர் தொகையும்
நொறிலு டைக்கதி கொண்டுசூழ் வுற்றது நோக்கி
அறுமு கத்தனிப் பண்ணவன் உயிர்த்தொகை அனைத்தும்
இறுதி யைப்புரி கடவுள்மாப் படையினை எடுத்தான். 326

பொருள் : விறலுடைப் ப.ஃறானையும் வெய்யவர் தொகையும் - வலியமைந்த பலவகைச் சேனையும் வெய்யவராகிய அவுணவீரரும், நொறிலுடைக் கதி கொண்டு சூழ்வுற்றது நோக்கி - வேகமான நடை கொண்டு வந்து தம்பாற் சூழ்ந்து கொண்டதைப் பார்த்து, அறுமுகத் தனிப் பண்ணவன் - ஆறுமுகம் படைத்த ஒரு தனிமுதல்வராம் பெருமாள், உயிர்த் தொகை அனைத்தும் இறுதியைப்புரி - உயிர்க்குலம் முழுவதையும் ஈறுசெய்யும், கடவுள் மாப்படையினைஎடுத்தான் - மகாசங்கார கருத்தாவாகிய சிவனின் பெரும் படையைத் திருக்கரத்திலெடுத்தார்.

பொழிப்பு : சேனையும் அவுணவீரரும் ஒருங்கு வேகமாய் வந்து சூழ்ந்து கொண்டது கண்ட குமரப் பெருமான் சர்வசங்கார மூர்த்தியின் உருத்திரப் படையைக் கரத்தில் எடுத்தருளினார்.
பல் + தாளை ப.ஃறான - பலபடை. மாப்படை - தலைமையான பெரும்படை.

அங்கை யிற்கொடு சிந்தையால் வழிபடல் ஆற்றிச்
சிங்க மாமுகன் ஆதியாம் அவுணர்தந் திறத்தைச்
சங்கை இன்றியே நின்றிடு தானைகள் தம்மை
இங்கு வல்லையில் அடுதியால் எனவிடுத் திட்டான். 327

பொருள் : அங்கையிற்கொடு சிந்தையால் வழிபடல் ஆற்றி - திருக்கரத்தில் ஏந்தியவாறு படைக்கு மானசீகமாகப் பூசனைகள் புரிந்து, சிங்கமாமுகன் ஆதியாம் அவுணர்தம் திறத்தை - சிங்கமுகாசுரன் முதலாக உள்ள அவுணவீரர்களின் தொகையையும், சங்கையின்றியே நின்றிடும் தானைகள் தம்மை - எண்ணிலடங்காது சூழ்ந்துள்ள அவுணர்படைகளையும், இங்கு வல்லையில் அடுதியால் என விடுத்திட்டான் - விரைவில் அழித்துவருக என அப் பாசுதப்படையை ஏவியருளினார்.

பொழிப்பு : எம்பிரான் எடுந்த அப்படைக்கு வழிபாடு செய்து, படைக்கலத்திறையே சிங்கனாதி அவுணவீரரையும் எண்ணிவாத சேனா சமூகத்ததையும் விரைந்தழிக்க என விட்டார்.

விடுத்த காலையில் கட்செவி நிரைகளும் விடமும்
இடிக்கு ழாங்களும் உருத்திரர் உருக்களும் எரியுங்
கடற்பெ ருங்கணத் தொகுதியும் அளவிலாக் கடவுட்
படைக்க லங்களு மாய்விரிந் ததுசிவன் படையே. **328**

பொருள் : விடுத்த காலையில் கட்செவி நிரைகளும்விடமும் - ஏவிய அளவிலே அப்படையானது பாம்புகளின் வரிசையும் நஞ்சும், இடிக்குழாங்களும் - இடியேற்றுக் கூட்டமும், உருத்திரர் உருக்களும் - உருத்திர மூர்த்திகளின் வடிவுகளும், எரியும் - தீச்சுவாலைகளும், கடற்பெரும் கணத்தொகுதியும் - கடல்போன்ற பூத கணங்களின் தொகையும் அளவிலாக்கடவுட் படைக்கலங்களுமாய் - எண்ணிலடங்காத கடவுளர் நாமங்கொண்ட படைக்கலங்களுமாக உருக் கொண்டு, சிவன் படையே விரிந்தது - அந்தப் பாசு பதப்படையொன்றே பலவாய்ப்பரந்தது.

பொழிப்பு : செவ்வேள் செலுத்திய சிவப்படை ஒன்றுதானே, பாம்புகளும்விடமும் இடியேறுகளும் உருத்திரரும் தீக்கொழுந்தும் பெரும் பூதப்படையும் பற்பல தேவர்களின் படைகளுமாக உருக்கொண்டு எங்கும் விரிந்து பரந்தது.

குறிப்பு : சர்வ வியாபி, சர்வேசுவரன், ஒருவர் தாம் பலபேருளர் என்பனவாதியாக உள்ள இறையுண்மையை உரைத்து நின்றதுஇது. படையே - பிரிநிலைதேற்றப் பொருளில் வந்தது.

இன்ன தன்மையால் அரன்படை மூதண்டம் எங்குந்
துன்னி யார்த்தெழீஇத் துண்ணெனச் சென்றுசூழ் வுற்று
முன்னர் உய்ந்தெழும் அவுணர்தம் படையெலாம் முருக்கி
ஒன்ன லன்தமர் யாரையும் ஒருங்குகொன் றதுவே. **329**

பொருள் : அரன்படை இன்ன தன்மையால் மூதண்டம் எங்கும் துன்னி - சிவப்படையானது இத்தன்மையாக அண்டம் முழுதும் செறிந்து வியாபகத் தன்மை காணுமாறு, ஆர்த்து எழீஇ துண்ணெனச் சென்று - ஆரவாரித்தெழுந்து அஞ்சுமாறு விரைந்து சென்று, சூழ்வுற்று, முன்னர் உய்ந்தெழு படையெலாம் முருக்கி - சூழ்ந்து கொண்டு முன் உய்ந்து எழுந்து செறிந்த சேனையை முழுவதும் அழித்து, ஒன்னலன்தமர் யாரையும் ஒருங்கு கொன்றதுவே - சூரபன்மனின்தமர் எனப்படும் பந்துமித்திர் யாரையும் ஒருங்கே கொன்றுதீர்த்தது.

பொழிப்பு : உருத்திரப்படை இவ்வண்ணம் அண்டம் முழுவதும் சென்று உய்ந்து வந்தடைந்த சேனை முற்றையும் சூரபன்மன் உறவினரையும் ஒருங்கே கொன்றழித்தது.

முந்து வெய்யசூர்ப் பரிசனத் தொகையெலாம் முருக்கி
இந்தி ரப்பெரு ஞாலமாந் தேர்மிசை இருந்த
மந்த ரப்பெருங் கிரியினைத் துகளெழ மாய்த்துக்
கந்த வேள்புடை மீண்டது சிவன்படைக் கலமே. 330

பொருள் : முந்து வெய்யசூர்ப் பரிசனத்தொகை எல்லாம் முருக்கி - முதற்காரியமாக கொடிய சூரபன்மனின் பரிசனத் தொகையை எல்லாம் அழித்து பின்னர், இந்திரப் பெருஞாலமேல் இருந்த - இந்திரஞாலத் தேர்மேல் வந்துற்ற, மந்தரப் பெருங்கிரியினைத்துகள் எழமாய்த்து - அமுதமந்தரமாம் பெரும்மலை துகளாய்ப் போகச் சிதைத்து, கந்தவேள்புடை மீண்டது சிவன் படைக்கலமே - பணிமுடிந்த பின் கந்தசுவாமியாரிடம் மீள வந்தது சிவப்படை.

பொழிப்பு : சூரனது உய்ந்தெழுந்த பரிசனம் முழுவதையும் முன்னே முடித்து, பின்னும் உய்திபெற உதவிய இந்திரஞாலத்தில் இருந்த மந்தரமலையைப் பொடிபடுத்தியது சிவப்படைக் கலம் மீளவும் பெருமாள்பால் வந்துற்றது. உறவும் படையும் பரிசனத்தில் அடங்கும்.

அரிமு கத்தவன் ஆதவன் தனைமுனம் அழன்றேன்
எரிமு கத்தவன் வச்சிர மொய்ம்பன் நூற் றிருவர்
முரண் மிகுத்தமூ வாயிரர் அறப்பகை முதலோர்
விரிக டற்படை வெற்பொடு முடிந்தவண் வீழ்ந்தார். 331

பொருள் : அரிமுகத்தவன் ஆதவன் தனைமுனம் அழன்றோன் - சிங்கனும் பானு கோபனும், எரிமுகத்தவன் வச்சிரமொய்பன் - அக்கினிமுகனும் வச்சிரவாகுவும், நூற்றிருவர் - சிங்க தாரகர் மக்கள் நூற்றிருவரும். முரண்மிகுத்த மூவாயிரர் அறப்பகை முதலோர் - விறல் மிக்க மூவாயிரரும் தரும கோபனும் முதலாயுள்ள உறவினர்கள், விரி கடற்படை வெற்பொடு முடிந்தார் - பரந்த கடல் போலும் படையோடும் மந்தரமலையோடும் மடிந்து போயினர்.

பொழிப்பு : தம்பியும் மக்களும் மந்திரியும் ஆகிய யாவரும் கடல் போலும் சேனையோடும் மந்தரமலையோடும் சேர நொடியில் முடிந்து போயினர்.

தன்மை அங்கவை யாவையுங் கண்டனன் தளர்ந்தான்
வன்மை நீங்கினன் கவன்றனன் இரங்கிமெய் மறந்தான்
புன்மை யாயினன் உயிர்த்தனன் செயிர்த்தனன் புலர்ந்தான்
தொன்மை போலவே தமித்தனன் துணையிலாச் சூரன். 332

பொருள் : துணையிலாச் சூரன் - இணையில்லாத சூரபன்பன், தன்மை அங்கவை யாவையும் கண்டனன் - நிகழ்ந்த அச்செயல் யாவற்றையும் கண்டான், தளர்ந்தான் - மனந்தளர்ந்தான், வன்மை நீங்கினன் - வலிமை இழந்தான், கவன்றனன் - கவலையுற்றான், இரங்கிமெய் மறந்தான் - இரங்கித் தன்வசமிழந்தான், புன்மையாயினன் - சிறுமையுற்றான், உயிர்த்தனன் - சுடுமூச்செறிந்தான், செயிர்த்தனன் - சினங்கொண்டான், புலர்ந்தான் - வாடினான், தொன்மை போலவே தமித்தனன் - கணப் போதின் முன்பு தானிருந்த வண்ணமாகவே எல்லாமிழந்து தனித்தவனாகி விட்டான்

பொழிப்பு : நிகரிலாத சூரபன்மன், அங்கு நடந்தமைகண்டு, தளர்ந்தும் வலியிழந்தும் கவலுற்றும் இரங்கியும் வசமிழந்தும் எளிமையாயும் பெரு மூச்சுவிட்டும் கோபித்தும் வாடியும் வருந்தியவனாக எல்லாமிழந்து தனித்தவனாய் நின்றான்.

கண்ட கன்படை முற்றொருங் கிறந்தது காணா
எண்டோ கைப்படு பூதரும் ஏனை வீரர்களும்
முண்ட கந்தனில் இருந்திடு புங்கவன் முதலாம்
அண்டவர் யாவரும் துயரொரீஇ உவகை பெற் றார்த்தார். 333

பொருள் : கண்டகன் படை முற்றொருங்கு இறந்தமை காணா - கீழ்மைக் குணமுள்ள சூரபன்மன் படைமுற்றும் ஒருங்கே அழிந்தமையைக் கண்டு, எண்தொகைப்படும் பூதரும் ஏனைவீரர்களும் - இராயிர வெள்ளமெனும் எண்ணுள்ள பூதர்களும் இலட்சத்தொன்பது வீரர்களும், முண்டகந்தனில் இருந்திடு புங்கவன் முதலாம் அண்டர்யாவரும் - மலராசனராகிய அயன் முதலாகவுள்ள அமரரும் ஆகிய அனைவரும், துயர் ஒரீஇ உவகை பெற்று ஆர்த்தார் - துயரம் முழுதும் நீங்கினராய் மிக மகிழ்வுற்று ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

பொழிப்பு : சூரபன்மன் படை ஒருங்கே அழிந்தது கண்ட பூதர்களும் வீரர்களும் அயன் முதலிய தேவரும் கவலை கழிந்தவராகிக் களிகொண்டு ஆர்ப்பரித்தனர்.

அழுத்தும் ஆரிருள் ஒருவிவிண் மிசைதனில் அடைவோர்
கழிந்த தோரிடை ஊற்றினான் மீட்டும் அக் கதியில்
வீழுந்த தேயெனத் துன்பொடு நின்றனன் விளிவுற்
றெழுந்த தானையை இழந்திடும் அவுணருக் கிறைவன். 334

பொருள் : அழுந்தும் ஆரிருள் ஒருவி விண்மிசைதனில் அடைவோர் - அமிழ்ந்திக்கிடந்த செறிந்த இருளாம் நரகத்தில் நீங்கிக் சுவர்க்க வாழ்வுற நின்றவர், கழிந்ததோர் இடையூற்றினால் - முன்செய்துள்ளதொரு தீவினை காரணமாக, மீண்டும் அக்கதியில்

விழுந்ததே என - மீளவும் நரகமாகிய நிலயத்தில் வீழ்ந்து விட்டது போலவே, விளிவுற்று எழுந்ததானையை இழந்திடும் அவுணருக்கிறைவன் - மாண்டுபோய் மீண்டும் எழும்பப் பெற்ற சேனையை இழந்து போன அசுரேந்திரனாம் சூரன், துன்பொடு நின்றான் - துயரில் தோய்ந்து நின்றான்.

பொழிப்பு : நரகிலே நலிவுற்றவர் சுவர்கம் புகவாய்த்தபோது, முன்தீவினை குறுக்கிட மீளவும் நரகிலே விழுந்து துன்புறுவது போலவே, இறந்து போய் மீண்டுயிர்த்தெழுந்த சேனை மறுகணமே மாய்ந்து போகப் பெற்ற சூரபதுமன் துயரத்தோடு மறுகிநின்றான்.

குறிப்பு : முன்னம் சேனை முடிய நின்றது நரக வாழ்வும், மீளப்பெற்றது சுவர்க்க மேறலும் மறுகணம் அழிந்தது மீள நரகம் போய் விழலும் போலும் என இன்பதுன்ப நிலைகளுக்கு காட்டப்பட்ட உவமை காண்க.

அனைய தன்மையின் நின்றிடும் அவுணர்கோன் ஆற்றச்
சினம தெய்தியென் படையெலாஞ் சிதைத்தபா லனையுந்
தனிமை செய்து பின் வெல்வனென் றுளங்கொடு தழற்கண்
முனைவன் நல்கிய தேரினை நோக்கியே மொழிவான். 335

பொருள் : அனைய தன்மையில் நின்றிடும் அவுணர்கோன் - அந்தத்துன்ப நிலையில் நின்ற சூரபன்மன், ஆற்றச்சினமது எய்தி - மிகவும் சீற்றமுற்று, என்படையெலாம் சிதைத்த பாலனையும் - என்படை முழுதையும் அழித்த இப்பாலகனையும், தனிமை செய்த பின் வெல்வனென்று உளம் கொடு - தனிமைப்படுத்திய பின்பு பொருது வெல்வேன் என்று மனத்தெண்ணி, தழற்கண் முனைவன் நல்கிய தேரினை நோக்கியே மொழிவான் - நெருப்புக் கண் நெற்றியரான சிவன் தந்த இந்திரஞாலத் தேரை நோக்கி பின் சொல்லும் பணியைப் புரிவாய் எனப் பணிப்பான்.

பொழிப்பு : சினமுற்ற சூரன் எனது படையை அழித்த பாலனையும் படையிழந்துதனியன் ஆகச் செய்து பின்பு அவனுடன் பொருது வெல்வேன் என எண்ணிச் சிவன் தந்த தேருக்குப் பணிப்பான்.

கொச்சக் கத்தியற் குதலைவாய் மதலைபாற் குழீஇய
வச்சி ரத்தெயி றுடையவெம் பூதரை வயின்சூழ்
கைச்சி லைத்திறல் வீரரைக் கவர்ந்து போய் அண்டத்
துச்சி யிற்கொடு வைத்தனை இருத்தியென் றுரைத்தான். 336

பொருள் : மாயத்தேரே நீ, கொச்சகத்தியல் மழலைபாற் குழீகிய - திருந்தாமழலைமொழி பேசும் குமரன் பக்கத்துக்குழுமியுள்ள, வச்சிரத்து எயிறுடையவெம் பூதரை - வயிரமான தந்தமுள்ள கொடிய பூதர்களையும், வயின் சூழ்கைச் சிலைத்திறல் வீரரைக் கவர்ந்து போய் - அயிலில் சூழ்ந்துள்ள கைவில்லாண்மை மிக்க வீரரையும் ஒருங்குகவர்ந்து கொண்டு சென்று, அண்டத்து உச்சியிற் கொடுவைத்தனை இருத்தி என்று உரைத்தான் - அண்ட முகட்டின் கண் வைத்துக் காவல் செய்திருப்பாயாக எனப்பணித்தான்.

பொழிப்பு : தேரே; நீ குமரன் பாங்கிலுள்ள பூதரையும் வில்லாண்மையுள்ள வீரர்களையும் கவர்ந்து கொண்டு சென்று அண்ட முகட்டில் காத்து வைத்திருத்தி என்றான். கொச்சகம் - ஒரு வகை எளிய நடையிலுள்ள பாடல் அது போலிளிய என்று மாம் கொச்சை - திருத்தமற்ற.

உரைத்த காலையில் நன்றென வினவியே ஓடித்
திருத்த குந்திறல் வாகுவை முதலினோர் திறத்தைக்
கிருத்தி மப்பெருந் தானையைக் கிளையொடும் வாரிக்
கருத்தை மாமயல் செய்தது கைதவன் கடுந்தேர். 337

பொருள் : உரைத்த காலையில் நன்றென வினவியே ஓடி - சூரன் கட்டளையிட்டவுடன் தேரானது நன்றெனஏற்றுச் சென்று, திருத்தகும்திறல் வாகுவே முதலியோர் திறத்தை - திருத்தகும் வீரமுள்ள வீரவாகு முதலாம் இலக்கத் தொன்பது வீரரையும், கிருத்திமப் பெருந்தானையைக் கிளையுடன் வாரி - பூதங்களாகிய பெருஞ்சேனையையும் கூட்டமாகக் கவர்ந்து, கருத்தை மாமயல் செய்தது கைதவன் கடுந்தேர் - அவர்கள் எதையும் அறியாதவாறு அறிவு மயங்கச் செய்தது சூரன்தேர்.

பொழிப்பு : சூரபன்மன் உத்தரவிடவே கேட்டு நன்றென்று போய், அம்மாயத்தேர் வீரர்களையும் பூதப் படையையும் ஒருங்கே கவர்ந்து அவர்கள் உணர்வின்றி மயங்கச் செய்தது.

கையர் தன்மையிற் கடற்படை முழுவதும் கவர்ந்து
மையல் சிந்தையிற் செய்துதன் வயினிடைத் தாங்கி
ஒய்யெ னச்சென்று மூதண்ட கோளகை யுழிப்போய்
வெய்ய வன்பணி ஆற்றி ஆண் டிருந்தது வியன்தேர். 338

பொருள் : கையர் தன்மையில் கடற்படை முழுவதும் கவர்ந்து - வலைஞர்போலவே கடல் போன்ற சேனை முழுதையும் கவர்ந்து, மையல் சிந்தையிற் செய்து தன் வயினிடைத்தாங்கி - மயக்கத்தைச் சிந்தையில் உண்டாக்கிப் படையைத் தன்னிடத்தடக்கிச் சுமந்து, ஒய்யெனச் சென்று மூதண்ட கோளகை உழிப்போய் - விரைந்து போய் அண்டமுகட்டினிடத்தைச் சேர்ந்து, வெய்யவன்பணி ஆற்றி ஆண்டிருந்தது வியன்தேர் - கொடிய சூரனது ஏவலைச் செய்தபடி அண்டத்துச்சியில் காவல் பூண்டிருந்தது சிறந்த அத்தேர்.

பொழிப்பு : கீழான வலைஞர் செயல்போல் சேனைக்கடல் முழுவதையும் கவர்ந்து சிந்தையை மயக்கிச் சுமந்து கொண்டு விரைந்து அண்டமுகடடைந்து காவல் பூண்டு சூர்பணி செய்திருந்தது தேர்.

நிமலன் அவ்வழித் தானையம் பெருங்கடல் நீங்கத்
தமியன் நின்றனன் ஆங்கது தகுவர்கோன் காணா
நமது தேர்வலி நன்றென உவகையால் நகைத்தான்
அமரர் அச்செயல் நோக்கியே பின்னரும் அயர்ந்தார். 339

பொருள் : அவ்வழித்தானையம் பெருங்கடல் நீங்க நிமலன் தனியன் நின்றனன் - அவ்வாறு சேனைக்கடல் முழுவதும் நீங்கிவிடவே நிமலராகிய பெருமானும் தனியே நின்றார், அங்கது தகுவர் கோன் காணா - அங்கு அதனைச் சூரபன்மன் கண்டு, நமது தேர்வலி நன்றென உவகையால் நகைத்தான் - நமது தேரின் ஆற்றல்

நன்றென்று மகிழ்ச்சியோடு சிரித்தான், அமரர் அச்செயல் நோக்கியே பின்னரும் அயர்ந்தார் - தேவர்கள் அச்செயலைக் கண்டு பின்பும் வருந்திச் சோர்ந்தனர்.

பொழிப்பு : சேனைகள் கவரப் பெற்று நீங்கவே நிமலரான பெருமானும் தனியே நின்றார், அச்செயலைச் சூரன்கண்டு எனது தேரின் ஆற்றல் நன்றே என மகிழ்ச்சியினாலே சிரித்தான், அவற்றைக் கண்ட தேவர்கள் பின்பும் வருந்திச் சோர்ந்தனர்.

சூரி டத்துறு சூழ்ச்சியுந் துணைவர்கள் தம்மைப்
பாரிடத்தொடு முகந்தெழீஇ மாயையிற் படர்ந்த
தேரி டத்தியல் வன்மையும் ஆங்ஙனந் தெரிந்தான்
நேரி டப்பிறர் இன்றியே தமியனாம் நெடியோன். **340**

பொருள் : நேரிடப்பிறர் இன்றியே தமியனாம் நெடியோன் - தமக்கு நிகராவார் எவருமின்றி ஒருவராயுள்ள பெரியோனாம் பெம்மான், சூரிடத்துறு சூழ்ச்சியும் - சூரனிடமுள்ள சூழ்ச்சியும், துணைவர்கள் தம்மைப் பாரிடத்தொடு முகந்து எழீஇ மாயையிற் படர்ந்த - தம்பியரைப் பூதப் படையோடு ஒருங்கே வௌவிக் கொண்டு மாயமாக மறைந்து போய்விட்ட, தேரிடத்தியல் வன்மையும் - இந்திரஞாலத் தேரிடமுள்ள ஆறலும் ஆகியவற்றை ஆங்னம் தெரிந்தான் - அப்போது பெருமான் திருவுளங் கொண்டார்.

பொழிப்பு : ஒப்புயர்வில்லா ஒருவராம் எம்பிரான், சூரபன்மனின் சூழ்ச்சியையும் வீரரையும் பூதரோடு ஒருங்கு வௌவிக் கொண்டு மாயமாக மறைந்த தேரின் வலியையும் திருவுளங் கொண்டார்.

கண்டு சீறியோர் கார்முகம் வாங்கியே கடிதோர்
திண்டி றற்கணை பூட்டிநஞ் சேனையைப் பற்றி
அண்ட கோளகை புக்குறும் அடுமுரண் தேரைக்
கொண்டு வல்லையின் வருகென விடுத்தனன் குமரன். **341**

பொருள் : கண்டு குமரன் சீறிஓர் கார்முகம் கடிது வாங்கியே - திருவுளங்கொண்ட குமரப்பிரான் சீற்றங்கொண்டு ஒரு வில்லை

விரைந்து வளைத்து, ஓர் திண்டிறற்கணை பூட்டி - ஒரு மிக வலிசான்ற அம்பைத் தொடுத்து, நம் சேனையைப்பற்றி அண்டங்கோளகைபுக்குறும் அடுமுரண் தேரை - நம்சேனைகளைக் கவர்ந்து கொண்டு அண்டமுகட்டிலே போய் காவல் செய்திருக்கும் அடல்வலிகொண்ட மாயத்தேரை, கொண்டு வல்லையில் வருகென விடுத்தனன் - பற்றியீர்த்துக் கொண்டு விரைந்து வா என்று ஏவிவிட்டார்.

பொழிப்பு : திருவுளங்கொண்ட பிரான் விரைவாக ஒருவில்லை வளைத்து கடியகணை ஒன்றைத்தொடுத்து நம்சேனையைக் கவர்ந்து அண்டமுகட்டில் வைத்திருக்கும் தேரைவிரைவிலே பற்றியீர்த்துவா என ஏவிவிட்டார்.

விடுந்த னிக்கணை வேலெனச் சென்றுவில் வீசி
இடந்தி கழ்ந்திடும் ஏழ்வகை உலகமும் இமைப்பில்
கடந்து மற்றுள பதங்களும் நீங்கியோர் கணத்தில்
தொடர்ந்து மூதண்ட கோளகை புகுந்தது துன்னி. **342**

பொருள் : விடுந்தனிக்கணை வேலெனச் சென்று வில்வீசி - ஏவிய ஒப்பற்ற பாணம் வேல்போலவேகமுடன் ஒளிகான்று சென்று, இடந்திகழ்ந்திடும் ஏழ்வகை உலகமும் இமைப்பினிற் கடந்து - பரந்த இடமுள்ள மேலேழுலகையும் கணநேரத்தில் கடந்து, மற்றுளபதங்களும் கடந்து - மேலேயுள்ள பதங்களையும் கடந்து, ஓர் கணத்தில் தொடர்ந்து மூதண்ட கோளகை - ஓர் கணத்துள் தொடர்ந்து அண்டகோளத்துச்சியிடத்தில் போய், துன்னிப் புகுந்தது - தேருக்கு அணிந்தாக வந்தடைந்தது.

பொழிப்பு : பெருமான் விடுத்த கணை விரைந்து வேல்போல் ஒளிவீசிச் சென்று மேலேழு உலகங்களும் மேலுள பதங்களும் கணத்திற் கடந்து அண்டமுகடடைந்து தேரைக் கிட்டியது.

துன்னி வெஞ்சரம் மாயமான் தேர்வலி தொலைச்சி
அன்ன தைக்கொணர்ந் தொல்லையின் மீண்டுள தம்மா
மின்னு லாய்நிமிர் எழிலியை விண்ணினும் பற்றி
இந்நிலத்தினிற் கொடுவரும் மாருதத் தியல்போல். **343**

பொருள் : வெஞ்சரம் துன்னி மான்தேர்மாய வலிதொலைச்சி - வலியசரம் அணுகிப் போய் அத்தேரின் மாயவலியைச்சிதைத்து அன்னதைக் கொணர்ந்து ஒல்லையில் மீண்டுளதம்மா - தேரைப் பற்றிக்கொண்டு விரைவில் மீண்டும் வந்தது அச்செயல், மின்னுலாய் நிமிர் எழிலியை விண்ணினும் பற்றி - மின்னலோடு உலாவி மேலெழுந்துள்ள முகிலை விண்ணிலிருந்து பற்றி, இந்நிலத்தினில் கொடுவரும் மாருதத்து இயல்போல் - இந்த நிலத்திற்கு மழைதரக் கொண்டு வரும் வாயுவின் செயல் போலிருந்தது.

பொழிப்பு : மின்னலுடனுள்ள விண்ணிலுயர்ந்த முகிலைப் பற்றி இழுத்து இந்நிலத்திலே கொண்டுவரும் வாயுவின் தன்மைபோல, அக்கடிய கணை அணுகித் தேரின் மாய வலியைச் சிதைத்து அதனைப் பிடித்திழுத்துக் கொண்டு விரைவில் மகேந்திரம் வந்தது.

வேறு
வெந்திறல் நெடுங்கணை மீண்டு ஞாலமேல்
இந்திர ஞாலமாம் இரதத் தைக்கொடு
கொந்தவிழ் மாலைவேற் குமரன் தன்முனம்
வந்தது வானவர் வழுத்தி ஆர்ப்பவே. **344**

பொருள் : வெந்திறல் நெடுங்கணை - பெருவலிகொண்ட நீண்ட அம்பு, இந்திரஞாலமாம் இரதத்தைக் கொடு ஞாலமேல் மீண்டு - இந்திரஞாலத்தேரைப் பற்றிக் கொண்டு பூமியில் மீண்டுவந்து, கொந்தவிழ் மாலை வேற்குமரன் தன்முனம் வந்தது - கொத்தான மலர்மாலை அணிந்த வேற்கைக் குமரப் பிரான் முன்னே, வானவர் வழுத்தி ஆர்ப்பவந்தது - தேவர்கள் போற்றி மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்க வந்து சேர்ந்தது.

பொழிப்பு : பெருமானது பேராற்றல் மிக்க பாணம் இந்திரஞாலத் தேரைப் பற்றிக் கொண்டு பூமியில் மீண்டுவந்து வேற்கரப்பிரான் முன்பு தேவர் புகழ்ந்து ஆர்ப்பரிக்க வந்தணைந்தது.

முப்புரம் முடித்தவன் முருகன் தன்கணை
இப்புவி வருதலும் இலக்கத் தெண்மரும்
ஒப்பரும் இளவலும் ஒல்லென் பூதருங்
குப்புறல் உற்றனர் கொடியன் தேரிலும். **345**

பொருள் : முப்புரம் முடித்தவன் முருகன் தன்கணை - முப்புரதகனராம் சிவன்மகனாகிய முருகவேளின் வாளி, இப்புவிவருதலும் - இப்புவியில் வந்த மாத்திரமே, இலக்கத்தெண்மரும - இலட்சத்தெட்டுத் தம்பியரும், ஒப்பரும் இளவலும் - நிகரில்லாத வீரவாகு தேவரும், ஒல்என் பூதரும் - ஒல் என்று ஆர்க்கும் பூதர்களும், கொடியன் தேரினும் குப்புறலுற்றனர் - சூரபன்மன் தேரினின்றும் குதித்திறங்கினர்.

பொழிப்பு : தேரோடு பிரானார் கணை பூமியில் வருதலும் தெளிவுற்ற வீரர்களும் பூதர்களுமான யாவரும் களிப்புடன் தேரிலிருந்து தரையிலே குதித்தனர்.

குதித்தனர் புடவியில் குமர வேள் இரு
பதத்திரு மலர்தனைப் பணிந்து பன்முறை
துதித்தனர் புடையராய்த் துன்னி நின்றனர்
கதித்திடு பேரருட் கடலின் மூழ்கியே. **346**

பொருள் : புடவியிற் குதித்தனர் குமரவேளிரு பதத்திரு மலர்களைப்பணிந்து - குதித்த வீரர் முதலியோர் குமரவேளின் இரண்டு பாதத்திரு மலர்களைப்பணிந்து, பன்முறை துதித்தனர் புடையராய்த் துன்னி நின்றனர் - பலவாறு துதித்து அருள் பெற்றுப்பாங்கராகச் செறிந்து நின்றனர், கதித்திடுபேரருட் கடலில் மூழ்கியே - நிறைந்த பெருமானின் அருள் வெள்ளத்தில் மூழ்கித்திளைத்து நின்றனர்.

பொழிப்பு : குதித்தோர் குமரவேளின் பாதங்களைப் பணிந்து பலவாறு துதித்து மருங்கிலே அருள் வெள்ளத்தில் திளைத்து நெருங்கி நின்றார்கள்.

ஆவதோர் காலையில் அகிலம் யாவுமாம்
மூவிரு முகனுடை முக்கணான் மகன்
வாவியல் வனப்படை மாயத் தேர்தொரீஇத்
தேவர்கள் பரசுற இனைய செப்புவான். 347

பொருள் : ஆவதோர் காலையில் அகிலம் யாவுமாம் மூவிருமுக முடை முக்கணான்மகன் - அவ்வேளை சர்வவியாபியும் அறுமுகருமாகிய சிவகுமாரர், வாவியல் வனப்புடைமாயத் தேர்தொரீஇ - தானே விரைந்தோடுவதும் அழகும் மாயமுமுள்ளதுமான தேரை நோக்கி, தேவர்கள் பரசுற இதனைச் செப்புவான் - தேவர்கள் போற்ற இவ்வாறு சொல்வார்.

பொழிப்பு : அப்போது முக்கணர்மகனாம் முருகவேள் இந்திர ஞாலத்தேரை அழைத்துத் தேவர்கள் போற்ற இவ்வாறு கூறியருளுகின்றார்.

தொல்லையில் வரம்பெறு சூரன் தன்புடை
செல்லலை ஆங்கவன் முடிகை திண்ணமால்
மல்லலந் திருவுடை மாயத் தேரைநீ
நில்லிவண் என்றனன் நிகரில் ஆணையான். 348

பொருள் : தொல்லையில் வரம் பெறு சூரன் தன்புடை செல்லலை - முன்புவரப்பேறாக உன்னைத் தனதுடைமையாகப் பெற்ற சூரபன்மன்பால் இனி நீ செல்லுதற் குரியாயல்லை செல்லேல், ஆங்கவன் முடிகை திண்ணமால் - அழிவிலா வச்சிரயாக்கை பெற்ற அவன் இறப்பதும் நிச்சயமாகும், மல்லலந் திருவுடைமாயத்தேரை - வளமான தெய்வீகத்திருவுடைய மாயத்தேரே!, நீ இவண் நில் என்றனன் - நீ இங்குநம்பால் நில் எனப்பணித்தார், நிகரில் ஆணையான் - நேரிலா ஆணையுள பிரான்.

பொழிப்பு : வளமான திருவும் மாயமுமுள்ள தேரே முன்பு உன்னை வரம்பெற்ற சூரபன்மாவிடம் இனி நீ செல்லாதே, அவனும் இறப்பது திண்ணம் ஆதலின் இங்கு இனிமேல் நிற்குதி என்றார் மேலாணை இலாத பிரான்.

ஆண்டது வினவுறா அவுணர் கோன்புடை
மீண்டிடல் அஞ்சியே மேலை வன்மைபோய்
மாண்டிடல் பிறப்பிலான் மதலை மாடுறப்
பாண்டிலந் தேரது பணியின் நின்றதே. **349**

பொருள் : ஆண்டு அதுவினவுறா - பிரானின் அவ்வாணையைக் கேட்டு, அவுணர் கோன் புடைமீண்டிடல் அஞ்சியே - சூரபன்மனிடம் மீண்டுசெல்ல அஞ்சியதாய், மேலை வன்மைபோய் - பழையவலியும் நீங்கி, மாண்டிடல் பிறப்பிலான் மதலைமாடுற - பிறப்பிறப்பில்லாச் சிவன்மகனாம் குமரவேள் பாங்கரில், பாண்டிலந்தேரது பணியின் நின்றதே - உருளையுள்ள அத்தேர் குமரனாணைப் படியே நின்றது.

பொழிப்பு : குமரன் ஆணைகேட்டு அத்தேரானது அஞ்சிச் சூரனிடம் செல்லாமலே, நித்தியராகிய சிவனுக்குக் குமாரராம் பெருமான்பாங்கரில் ஆணைவழியே நின்றது.

அண்டம தடைந்ததேர் ஐயன் வாளியால்
மண்டலம் இழிந்து தன்மருங் குறாததும்
எண்டரு பூதரும் யாரும் மீண்டதுங்
கண்டனன் அவுணர்கோன் கனலிற் சீறினான். **350**

பொருள் : அண்டம தடைந்த தேர் ஐயன்வாளியால் மண்டலம் இழிந்து - அண்டமுகட்டை அடைந்த தன்தேரானது, குமரவேள்கணையாலே பூமியில் இறங்கிவந்து தன்மருங்கு உறாததும் - பின்தன் பக்கம் வராததும், எண்டரும் பூதரும் யாரும் மீண்டதும் - எண்ணத்தகும் பூதரும் வீரர் யாவரும் மீண்டதும்,அவுணர்கோன் கண்டனன் - சூரன் கண்டான், கனலிற் சீறினான் - கடுந்தீப்போலச்சீற்றமுற்றான்.

பொழிப்பு : தன்னேவல் செய்து அண்டமுகடுற்றதேர் சுவாமியின் கணையால் மண்ணில் இழிந்துவந்து தன்பால் வராததும், பூதரும் வீரரும் மீண்டுவந்ததும் கண்டு சூரபன்மன் கனல் போலச் சினமுற்றான்.

அன்னது காண்டலும் அவுணன் ஆங்கொரு
கொன்னெடுஞ் சிலையினைக் குனித்து வல்லையிற்
பன்னிரு கரமுடைப் பண்ண வன்மிசை
மின்னிகர் பகழிகள் மீட்டும் வீசினான். 351

பொருள் : அன்னது காண்டலும் அவுணன் ஆங்கொரு கொன்னெடும் சிலையினைக்குனித்து - அதுகண்ட சூரபன்மன் அங்கு ஒருபெரும் வில்லை வளைத்து, வல்லையில் மின்னிகர் பகழிகள் - விரைவாக மின்னல் போன்ற கணைகளை, பன்னிரு கரமுடைப்பண்வன் மிசை - பன்னிரு கரத்தராகும் குமரவேள் மீது மீட்டும் வீசினான் - மீண்டும் செலுத்தினான்.

பொழிப்பு : அதுகண்ட சூரன் பெரியவில்லை வளைத்து விரைவாக மின்னல் போலும் கணைகளை பன்னிருகரமுள்ள குமரவேள் மீது மீண்டும் செலுத்தினான்.

மாசறு கங்கைதன் மதலை அவ்வழிக்
காய்சினங் கொண்டொரு கார்மு கம்வளைஇ
ஆசுக மாரிபெய் தவுணர் கோமகன்
வீசிய கணையெலாம் விலக்கி னானரோ. 352

பொருள் : மாசறுகங்கைதன் மதலை அவ்வழி - அச்சமயம் நீராடியவர்களின் மலமாசை அறுக்கும் கங்கைமகனாம் காங்கேயர், காய்சினம் கொண்டு ஒரு கார்முகம் வளைஇ - கடும் சினம் கொண்டு ஒரு வில்லை வளைத்து, ஆசுகமாரிபெய்து - அம்புமழைபொழிந்து, அவுணர் கோமகன் வீசிய கணையெலாம் விலக்கினான் - சூரபன்மன் செலுத்திய சரங்களை யெல்லாம் விலக்கி வீழ்த்தினார்.

பொழிப்பு : அப்போது கங்கை புத்திரரான குமரர் சினமுற்று வில்வளைத்து அம்பு பொழிந்து சூரன்விட்ட கணைகள் அனைத்தையும் அட்டு நீக்கினார்.

குறிப்பு : மாசு அறுகங்கைதன் மதலை - தன்னிடம் நியமத்தோடு தீர்த்த மாடுவாரின் மும்மலமும் கழுவி முத்திதரவல்ல கங்கை மகன் குமரவேள் ஆதலின் அவரும் அடைந்தார்க்கு அவ்வாறாருளுவார். என்பது தோன்ற உரைத்தது கருத்துடை அடைகொளிஅணி.

கையனும் அத்துணை காய்சி னங்கொளீஇ
ஒய்யென எந்தைதேர் உய்க்கும் வன்மையோன்
மெய்யிடம் எங்கணும் வெளியுறாவகை
செய்யன பகழிகள் செறித்துப் போர் செய்தான். **353**

பொருள் : அத்துணை கையனும் காய் சினம் கொளீஇ - அப்போது சிறுமகனாம் சூரனும் கடும் சினம் கொண்டு, ஒய்யென எந்தைதேர் உய்க்கும் வன்மையோன் மெய்யிடம் எங்கணும் - விரைவாக எம்பிரானின் தேரோட்டும் திறன் மிக்க வாயுதேவனின் மேனியிடம் எங்கும், வெளி உறாவகை செய்யன பகழிகள் செறித்துப் போர் செய்தான் - இடைவெளி யில்லாத படி சிறந்த பாணங்களை அழுந்துமாறு எய்து அமர்புரிந்தான்.

பொழிப்பு : அப்போது சிறியோனான சூரனும் சினங்கொண்டு எம்பிரானின் தேர்ச் சாரதியின் உடம்பெங்கும் வெற்றிடமில்லாமலே அழுந்தச் சரம் பொழிந்து பொருதான்.

பொருந்தவன் கணைபடப் புலம்பிக் காற்றினோன்
வருந்தினன் மயங்கினன் மாக்கள் தூண்டலன்
இருந்தனன் வறிதவன் இயற்கை யாவையுந்
தெரிந்தனன் குமரவேள் அருளின் செய்கையான். **354**

பொருள் : பொருந் தலன் கணைபடக்காற்றினோன் புலம்பி - பகைவன் சூரனின் பாணங்கள் படுதலால் வாயுதேவன் மெலிந்து,

வருந்தினன் மயங்கினன் மாக்கள் தூண்டலன் இருந்தனன் வறிது - வருந்தி மயங்கிக் குதிரைகளைத் தூண்டமாட்டாதவனாகவே சும்மா இருந்தான், அவன் இயற்கையாவையும் அருளின் செய்கையான் குமரவேள் அறிந்தனன் - வாயுதேவனாம் சாரதியின் வாட்டமான நிலையாவையும் அருளிள் செயலாளரான குமரவேட் பெருமான் திருவுளம் பற்றினார்.

பொழிப்பு : சூரபன்மன் பாணம் தாக்கியதாலே, வலவனாகியவாயு தேவன் மெலிந்து வருந்தி மயங்கி மாக்களைத் தூண்டமாட்டாதே செயலற்றுவறிதேயிருந்தான், அருட் செய்கையாளராம் பெருமான் அவனது வருத்தங்களைத் திருவுளங்கொண்டார்.

குறிப்பு : வினைமுற்றுகள் எச்சமாகப் பொருள் கொள்ளவுள்ளன.

கண்டிடு முருகவேள் கணைகள் ஆயிரம்
விண்டொடர் செலவினால் விடுத்து வெய்யசூர்
கொண்டிடு சிலையினைக் குறைந்துப் பல்பெருந்
துண்டம தாக்கினான் அமரர் துள்ளவே. **355**

பொருள் : கண்டிடு முருகவேள் - கண்ணுற்ற கந்த சுவாமியார், கணைகள் ஆயிரம் விண்தொடர் செலவினால் விடுத்து - அம்புகள் ஆயிரத்தை விண்வழி விரைந்து செல்ல விடுத்து, வெய்யசூர் கொண்டிடு வில்லினைக் குறைத்து - கொடிய சூரன் பிடித்தவில்லை வெட்டி, பல்பெருந்துண்டமதாக்கினான் - பலபெரியதுண்டாக விழச் செய்தார், அமரர் துள்ளவே - தேவர்கள் கண்டு மகிழ்ந்து துள்ளும்படி செய்தார்.

பொழிப்பு : கண்ட குமரவேள் ஆயிரம் சரங்கள் ஏவிச்சூரன் பற்றியவில்லை வெட்டிப் பலபெரிய துண்டங்களாக வீழ்த்தினர் தேவர்கள் கண்டு ஆனந்தக் கூத்தாடினர்.

வேறு

கைச்சிலை முரியச் சூரன் கண்ணுதற் பெருமான் தந்த
முச்சீகைப் படையொன் றேந்தி முடங்குளை யூர்தி தன்னை
உச்சியின் நீபஞ் சூடும் உலகுடை, யொருவ னூர்ந்த
அச்சுறு தடந்தேர் முன்னர் அணுகுறத் தூண்டிச் சென்றான். 356

பொருள் : கைச்சிலைமுரிய - கைவில் வெட்டுண்டதால், சூரன் - சூரபன்மன், கண்ணுதற் பெருமான் தந்த முச்சிகைப்படை ஒன்று ஏந்தி - கண்ணுதற் பெருமானாம் சிவன் தந்தருளிய முத்தலைச் சூலப்படை ஒன்றைக் கைக்கொண்டு, முடங்குஉளை ஊர்திதன்னை - மடிந்தபிடரி மயிருடைய சிங்கவாகனத்தை, உச்சியில் நீபம் சூடும் உலகுடை ஒருவன் ஊர்ந்த - முடியில் கடப்பமாலை சூடிய உலகுடை நாயகனாம் நிகரிலாத பெருமான் ஏறிவரும், அச்சுறுதடந்தேர் முன்னர் - அச்சுடைய தேரின் முன்னே, அணுகுறத்தூண்டிச் சென்றான் - அணித்தாகும்படி செலுத்தி வந்தான்.

பொழிப்பு : சிலை சேதமானதும் சிவன் தந்த திரி சூலத்தை ஏந்தியவனாக, சூரன் தனது ஊர்தியாம் சிங்கத்தை குமரவேட்பிரான் ஏறிவரும் தேர்முன்னே அணுகிவரச் செலுத்திவந்தான்.

தூண்டிய அரிமான் ஏறு சூரன துளத்திற் போந்து
மாண்டகு தனது தீய வள்ளுகிர்க் கரத்தால் எந்தை
பாண்டிலந் தேரை ஆற்றும் பரித்தொகை பதைப்ப மோதி
ஆண்டயல் நின்ற பூதர் அலமர ஆர்த்த தன்றே. 357

பொருள் : தூண்டிய அரிமானேறு சூரனது உளத்திற்போந்து - செலுத்திய சிங்கேறானது சூரபன்மன் மனம் போலவே சென்று, மாண்டகு தனது தீய வள்ளுகிர்க்கரத்தால் - சிறந்த தனது தீங்குசெய்யும் கூரிய நகமுள்ள முன் கால்களால், எந்தை பாண்டிலந்தேரை ஆற்றும் பரித்தொகை பதைப்பமோதி - எம்பிரானாரது உருளைகளுள்ள தேரையீர்த்துச் செல்லும் குதிரைகள் பதைபதைக்கத்தாக்கி, ஆண்டு அயல் நின்ற பூதர் அலமர ஆர்த்ததன்றே - அங்கே பிரான்பாங்கர் நின்ற பூதர்கள் அஞ்சி அலைவுறும்படி ஆர்ப்பரித்தது.

பொழிப்பு : ஊர்தியான சிங்கேறு சூரனின் மனம் போலவே சென்று தனது கொடிய கூரிய நகமுள்ள கைகளாலே பெருமானது தேரையீர்த்துவரும் குதிரைகள் பதைப்புறுமாறு மோதி அயலில் நின்றபூதர் அலமரும்படி கர்ச்சித்தார்த்தது.

அன்னது பொழுது தன்னில் அரிமிசைச் சென்ற சூரன்
தன்னுடை வலங்கை கொண்ட தனிப்பெருஞ் சூலந் தன்னைப்
பன்னிரு தடந்தோள் கொண்ட பகவன்மேற் றிரித்து வீச
மின்னென நிலவு கான்று விண்வழிப் படர்ந்த தன்றே. 358

பொருள் : அன்னது பொழுது தன்னில் அரிமிசைச் சென்ற சூரன் - அப்போது சிங்கத்தை ஊர்ந்து சென்ற சூரபன்மன், தன்னுடை வலங்கை கொண்டதனிப்பெரும் சூலந்தன்னை - தனது வலம்மிக்கரத்தில் பற்றிய ஒப்பற்ற சூலப்படையை, பன்னிரு தடந்தோள் கொண்ட பகவன் மேற்திரித்து வீச - பன்னிரு தடம்புயமுள்ள பெருமாள் மீதுசுழற்றி வீச, மின்னென நிலவுகான்று விண்வழிப்படர்ந்ததன்றே - மின்னல் போல ஒளிவீசியவாறு விண்வழியே வேகமாகச் சென்றது.

பொழிப்பு : அப்போது சிங்கத்தில் சென்ற சூரபன்மன் தன்கையில் இருந்த சூலப்படையைச் சுழற்றி குமரவேள் மீது எறிய அது மின்னல் போல ஒளிவீசி விண்வழியே விரைந்தது.

நீடிய சூலஞ் செல்ல நிமிர்ந்தன எழுந்து செந்தீ
கூடின அசனி ஈட்டங் குழீஇயின படையின் கொள்ளை
ஆடியல் கணங்கள் ஈண்டி ஆர்த்தன அதனை நோக்கி
ஓடினர் அமரரா னோர் உலகெலாம் வெருவிற் றம்மா. 359

பொருள் : நீடிய சூலம் செல்ல எழுந்து செந்தீ நிமிர்ந்தன - நீண்டசூலம் செல்ல அதிலிருந்து எழுந்து சிவந்த தீச்சுவாலைகள் நிமிர்ந்தன, அசனியீட்டம் கூடின - இடியேற்றுக்கூட்டம் குழுமின, படையின் கொள்ளை குழீஇயின - பலபடை வகைகளும் கூடிவந்தன, ஆடியல் கணங்கள் ஈண்டி ஆர்த்தன - அடல்வல்ல பூதகணம்

செறிந்து ஆர்த்தன, அதனை நோக்கி அமரரானோர் ஓடினர் - அது கண்ட தேவர்பயந்தோடினர், உலகெல்லாம் வெருவிற்றம்மா உலகத்துள்ள சீவராசிகள் அனைத்தும் மிகவும அஞ்சின.

பொழிப்பு : சூலம் செல்லவே அதிலிருந்து தீகொழுந்து எழுந்தன. இடியேற்றுக் கூட்டமும் பலவேறு தெய்வப்படைக் குழுவும் ஆர்க்கும் பூதகணமும் தோன்றிவந்தன அவ்வியல்பைத் தேவர் கண்டு பயந்தோடினர், உலகிலுள்ள சீவராசிகள் மிக அச்சுற்றன.

அண்ணலும் அதனை நோக்கி ஆயிர கோடி வாளி
கண்ணகன் சிலையிற் பூட்டிக் கதுமென எதிர்தந் துய்ப்பத்
துண்ணென அவற்றை எல்லாஞ் சூலவேல் துணித்து வீட்டி
நண்ணலன் வெகுளித் தீயின் உருவென நடந்த தன்றே. 360

பொருள் : அதனை அண்ணலும் நோக்கி - தேவசேனாதி பதியாம் பிரானும் அவற்றை நோக்கி, கண்ணகன் சிலையில் ஆயிரகோடிவாளி கதுமென எதிர்தந்துய்ப்ப - பெரியவில்லின் கண் ஆயிரகோடி அம்புகள் தொடுத்து விரைந்து சூலத்தின் மீது எதிராக ஏவ, சூலவேல் அவற்றை எல்லாம் துண்ணெனத் துணித்து வீட்டி - சூலவேலானது அவ்வம்புகளையெல்லாம் துண்ணெனத் துண்டமாகத்தடிந்து வீழ்த்தி, நண்ணலன் வெகுளித்தீயின் உருவென நடந்ததன்றே - சூரபன்மனது கோபத்தீயின் வடிவுபோல மேற்செல்வதாயிற்று.

பொழிப்பு : சுவாமி சூலத்தின் வரவுகண்டு வில்லின் ஆயிரகோடி அம்புதொடுத்து எதிரே ஏவச் சூலம் அவற்றைத் துண்டித்து வீழ்த்திச் சூரனது கோபத்தீ உருவம் போல மேலும் தொடர்ந்து செல்லலாயிற்று.

நடந்தவும் முகமா றுள்ளோன் ஞானநா யகன்ஈந் துள்ள
படைத்திறல் வன்மை உன்னிப் பாணியொன் றதனின் மேவி
அடுத்திடு குலிசந் தன்னை அடையலன் உய்த்த சூலம்
பிடித்தனை வருதி யென்று பேசினன் செல்ல விட்டான். 361

பொருள் : நடத்தலும் - சூலம் மேற் செல்லுதலும். முகம் ஆறுஉள்ளோன் ஞானநாயகன் ஈந்துள்ள படைத்திறல் வன்மை உன்னி - அறுமுகப் பெருமான் ஞானநாயகனாம் சிவன் அருளிய படையின் வீரம் வலி என்பவற்றை எண்ணி, பாணி ஒன்றதனில் மேவி அடுத்திடு குலிசந்தன்னை - தமது ஒரு திருக்கரத்தில் பொருந்தியிருக்கும் குலிசப்படையை நோக்கி, அடையலன் உய்த்த சூலம் பிடித்தனை வருதி என்று பேசினன் செல்லவிட்டான் - சூரனாம் பகைவன் ஏவிய சூலப்படையை நீ சென்று பற்றிக்கொண்டு வருதி என்று பணித்து ஏவினார்.

பொழிப்பு : சூலம் மேலும் வருதலும் செவ்வேள், சிவன் கொடுத்த சூலத்தின் வீரமும் வலியும் கண்டு, தம்கரத்திலே பொருந்தியுள்ள குலிசத்தை நோக்கி நீ சென்று சூலத்தைப்பற்றிவா எனப்பணித்துச் செலுத்தினார்.

வீட்டிடு கின்ற எல்லை வியன் பெருந் குலிசம் ஏகி
நெட்டழற் சிகைமீக் கான்று நிமிர்ந்திடு சூலந் தன்னைக்
கிட்டுத லோடும் பற்றிக் கிளர்ந்தமுத்தலையுங் கவ்வி
ஒட்டலன் சிந்தை உட்க ஒய்யென மீண்ட தன்றே. 362

பொருள் : விட்டிடுகின்ற எல்லை வியன்பெரும் குலிசம் ஏகி - ஏவியவுடனே சிறந்த பெரிய குலிசப்படை சென்று, நெட்டழற் சிகை மீக்கான்று நிமிர்ந்திடு சூலந்தன்னைக் கிட்டுதலோடும் - நீண்ட தீக்கொழுந்துகளை உமிழ்ந்து கொண்டு உன்னதமாகவரும் சூலத்தைக் கிட்டியவுடனே, கிளர்ந்த முத்தலையும் கவ்விப்பற்றி - கிளரும் மூன்றுதலைகளையும் கவ்விப்பிடித்து, ஒட்டலன் சிந்தை உட்க ஒய்யென மீண்டதன்றே - உடன் பாடற்ற சூரன் உள்ளம் உட்குமாறு விரைவில் பிரானிடம் மீண்டுவந்தது.

பொழிப்பு : ஏவியகுலிசம் விரைந்தேகிச் சூலப்படையைக் கிட்டி அதன் கிளர்ந்த மூன்று தலைகளையும் கவ்விப்பிடித்து சூரனது உளங்கலங்க விரைந்து பிரானாரிடம் மீண்டுவந்தது.

முத்தலைப் படையைக் கொண்டு முரண்மிகு குலிசஞ் செவ்வேள்
கைத்தலம் உய்த்துத் தானுங் கதுமென இருந்த தம்மா
பைத்தலைப் பாந்தள் போற்றும் பருவரைச் சிகர மூன்றும்
இத்தலப் புணரி தன்னில் இடுமருத் தியற்கை யேபோல். 363

பொருள் : பைத்தலைப் பாந்தள் போற்றும் பருவரைச்சிகரம் மூன்றும் - படம் பொருந்திய ஆயிரம் தலைகளினாலே ஆதிசேடனாலே பாதுகாக்கப்பட்டிருந்த பெரிய மேருமலைச்சிகரம் மூன்றையும், மருத்து இத்தலப் புணரிதன்னில் இடும் இயற்கையேபோல் - வாயுதேவன் வலிமையோடு பறித்தெடுத்துப் பூமியிலுள்ள சமுத்திரத்தினிடத்தே வீசிவிட்டசெயல் போலவே, - முரண்மிகு குலிசம் முத்தலைப்படையைக் கொண்டு செவ்வேள் கரதலம் உய்த்து முரண்மிகு குலிசம் முத்தலைச் சூலத்தைக் கொடுபோய்ச் செவ்வேட் பெருமானின் திருக்கரத்திலே சேர்த்து, தானும் கதுமென இருந்ததம்மா - தானும் பின்புதனது இருக்கையான கரத்திலே சென்றிருந்தது.

பொழிப்பு : சேடன் காத்திருந்த பெரிய மேருச் சிகரங்களில் மூன்றை வாயுதேவன் பறித்தெடுத்துப் பாரிலுள்ள சமுத்திரத்தில் வீசிவிட்டது போலவே குலிசமும் முத்தலைச் சூலப்படையைப் பற்றிக்கொடுசென்று பெருமான் கரத்திலுய்த்துத் தானும் தனதிருக்கை சேர்ந்தது.

குறிப்பு : சூலத்துக்கு மேருச்சிகரமும் குலிசத்திற்கு வாயுதேவனும் பெருமான் கரத்திற்குச் சமுத்திரமும் உவமையாய் உரைக்க வுள்ளன.

ஆண்டது காலை தன்னில் அறுமுகத் தையன் கையில்
தூண்டிய குலிசத் தோடு சூலமும் வருத லோடுங்
காண்டரும் அமரர் எல்லாம் கரதலம் உச்சி கூப்பி
ஈண்டிவன் தன்னை அட்டே எமையளித் திடுதி யென்றார். 364

பொருள் : ஆண்டு அதுகாலை தன்னில் - ஆங்கே அப்போது, அறுமுகத்து ஐயன்கையில் தூண்டிய குலிசத்தோடு சூலமும்

வருதலோடும் - ஏவப்பட்டகுலிசத்தோடு சூலமும் ஒருங்கே ஆறுமாமுகத்தெம்பெருமானிடம் வந்து சேரவே, காண்டகும் அமரரெல்லாம் கரதலம் உச்சி கூப்பி - கண்ட அமரர் யாவரும் தமது கைகளைச் சிரமேற்குவித்து வணங்கி, ஈண்டு இவன் தன்னை அட்டே எமை அளித்திடுதி என்றார் - சேனாபதிப் பெருமானே இப்போதே நீர் இச்சூரபன்மனைக் கொன்று எம்மையெல்லாம் காத்தருளுக என வேண்டினர்.

பொழிப்பு : செலுத்திய குலிசம் சூலத்தோடு பெருமானிடம் வருதலும் கண்டதேவர் யாவரும் கரங்களைச் சிரமேற்குவித்து வணங்கிச் சுவாமி இவனைக் கொன்று எமைக்காப்பீர் என்றனர்.

என்னலும் எந்தை கேளா இராயிரம் பகழி பூட்டி
ஒன்னலன் ஊர்ந்து செல்லும் ஒருபெரு மடங்கல் ஏற்றின்
சென்னியில் அழுத்த வோடுஞ் சேண்கிளர்ந் தரற்றி வீழ்ந்து
தன்னுயிர்ஒல்லை வீந்து தரையிடைப் பட்ட தன்றே. 365

பொருள் : என்னலும் எந்தைகேளா - எனத்தேவர் வேண்டுதலை எம்பெருமான் கேட்டருளி, இராயிரம் பகழிபூட்டி - ஈராயிரம் சரங்கள் தொடுத்து, ஒன்னலன் ஊர்ந்து செல்லும் ஒருதனிமடங்கலேற்றின் சென்னியில் அழுத்தலோடும் - சூரபன்மன் ஏறிவருகின்ற ஒப்பற்ற சிங்கேற்றில் சிரசிலே சென்றழுந்த எய்தலும், சேண்கிளர்ந்து அரற்றி வீழ்ந்து - உயரக்கிளர்ந்து எழுந்து கதறிவிழுந்து, தன் உயிர் ஒல்லை வீந்து தரையிடைப் பட்டதன்றே - தனதுயிர் உடனே நீங்கி நிலமீது இறந்து கிடந்தது.

பொழிப்பு : விண்ணவர் வேண்டுதலை எம் பிரான் கேட்டு இராயிரம் வாளி தொடுத்து சூரனின் சிங்கேற்றின் சிரசில் அழுந்திச் செறிய எய்யவே, சிங்கம் மேலே கிளர்ந்து புலம்பியபடி உயிர் நீங்கித் தரையில் வீழ்ந்து இறந்து கிடந்தது.

ஊர்திய திறந்து விழ ஒருதனிச் சூரன் காணாப்
பார்தனிற் பாய்ந்து நின்று பராபரன் செம்மல் கையில்
கூர்தரு சூலம் பொன கொள்கையுந் தெரிந்து பின்னாட்
சேர்தரு வடவை என்னச் செயிர்த்திவை சிந்தை செய்வான். 366

பொருள் : ஊர்தியது இறந்து வீழ ஒருதனிச் சூரன் காணா - தனது ஊர்தி இறந்து வீழ்ந்ததை நிகரில்லாத தனித்தவனான சூரன் கண்டு, பார்தனில் பாய்ந்து நின்று - நிலத்திலே குதித்து நின்று, பராபரன் செம்மல் கையில் கூர்தரு சூலம் போன கொள்கையும் தெரிந்து - பராபரனாம் சிவனது குமாரரது கையிலே தன்சூலம் அடங்கிக்கிடப்பதையும் தெரிந்து, பின்னாட் சேர்தரு வடவையென்னச் செயிர்த்து - பின்னே கற்பாந்த காலத்தில் வரும் வடவைத் தீபோல சினம் மிக்கவனாக, இவை சிந்தை செய்வான் - பின்வருமாறு சிந்தனை செய்வானாயினான்.

பொழிப்பு : தனது ஊர்தியாம் சிங்கேறு செத்து வீழவே சூரன்கண்டு, தனது சூலமும் சிவகுமாரர் கையிலே சேர்ந்தடங்கியது கண்டு, வடவைத் தீபோல எழுந்த சீற்றத்தனாகி நின்று பின்வருமாறு சிந்தனை செய்வானாயினான்.

தேரொடு படையை வௌவித் திறலுடை மடங்கல் சிந்தி
நேரலன் வலிய னேபோல் நின்றனன் அனையன் தன்னைச்
சாரதர் தொகையை ஏனைத் தலைவர்கள் தம்மை எல்லாம்
ஓருருக் கொண்டி யானே விழுங்குவன் ஒல்லை என்றான். 367

பொருள் : தேரொடு படையை வௌவித் திறலுடைமடங்கல் சிந்தி - எனது தேரையும் சூலப்படையையும் கவர்ந்து தனதாக்கி, பராக்கிரமம் மிக்க ஊர்தியாம் சிங்கத்தையும் கொன்று இவற்றாலே, நேரலன் வலியனே போல் நின்றனன் - எமக்கு நிகராகாத பாலன் வெற்றி வீரன் போல நிற்கின்றான், அனையன்தன்னை அப்படி நிற்கும் பாலனையும், சாரதர் தொகையை ஏனைத் தலைவர்கள் தம்மை எல்லாம் - பூதர் கணத்தவரையும் மற்றும் தலைவராகிய வீரரையும் எல்லாம், ஓருருக் கொண்டு யானே விழுங்குவன் ஒல்லை என்றான் - ஒருமாய வடிவெடுத்து விரைவிலே யானே விழுங்கி ஒழிப்பேன் என்று கூறினான்.

பொழிப்பு : எனக்கு நேரில்லாத இப்பாலன் எனது தேரும் படையும் கவர்ந்தும் ஊர்தியாம் சிங்கேற்றினைக் கொன்றும் விஞ்சிய வெற்றி வீரன் போல நிற்கின்றான். இவனையும் பூதரையும் வீரரையும் ஒருங்கே நான் ஓர் மாயவடிவு கொண்டு தின்று விழுங்குவேன் என்றான்.

என்றிவை மனத்தி லுன்னி இணையறு மாயை நீரால்
நின்றுள அவுணர் செம்மல் நேமியம் புள்ளே போல
ஒன்றொரு வடிவ மெய்தி ஒலிதிரைக் கடலின் ஆர்த்துத்
தன்துணைச் சிறகர் பெற்ற தனிப்பெருங் கிரிபோ லுற்றான். 368

பொருள் : என்றிவை மனத்தில் உன்னி இணையறு மாயை நீரால் - என்றிவற்றை மனதில் எண்ணி இணையில்லாத மாயவன் மையால், நின்றுள அவுணர் செம்மல் நேமியம் புள்ளே போல ஒன்றொரு வடிவமெய்தி - எண்ணம்மிக்கு நின்ற சூரபன்மன் சக்கரவாகப்புள் போலப் பொருந்திய ஒரு மாயவடிவந்தாங்கி, ஒலிதிரைக்கடலின் ஆர்த்து - ஒலிபொருந்திய திரைக்கடல் போல் ஆர்த்து, தன்துணைச் சிறகர் பெற்ற தனிப்பெருங்கிரிபோலுற்றான் - இழந்த தனதிருசிறகுகளையும் பெற்ற ஒப்பில்லாத பெருமலை போல நேர்ந்தான்.

பொழிப்பு : என இவற்றை எண்ணித்தன் மாயாவல்லபத்தால் சூரபன்மன் சக்கரவாகப்புள் போன்ற ஒரு பேருருவம் கொண்டு சமுத்திரம் போல் ஆர்த்து மீளச்சிறகு பெற்ற மலையென நேர்ந்தான்.

கறையடித் தந்தி சிந்துங் காய்சின அரிமேல் உய்க்கும்
நறையடிக் கமலத் தையை ஞாட்பிடை ஆடற் கொத்த
பறையடித் திட்ட தேபோல் படிமகள் உடலம் விள்ளச்
சிறையடிக் கொண்டு தீயோன் சேணிடை எழுக லுற்றான். 369

பொருள் : கறை அடித் தந்தி சிந்தும் காய்சின அரிமேல் உய்க்கும் நறைக்கல அடிக்கமலத்து ஐயை - உரல் போன்ற காலுள்ள யானையைக் கொல்ல வல்ல கடுங் கோபமுள்ள சிங்கத்தின்மேல் ஊர்ந்துவரும் தேன் உள்ள கமல மலர்போற் பாதமுள்ள துர்க்காதேவி, ஞாட்பிடை ஆடற்கொத்த பறை அடித்திட்டதே போல்

- போர்க்களத்திலே களித்தாடும் நடனத்துக்குகேற்ற பறையை முழக்கியது போல, படிமகள் உடலம்விள்ள - அதிர்ந்து நிலமகளின் மேனி பிளவுபடையும் படி, சிலநடி கொண்டு தீயோன் சேனிலட எழுதலுற்றான் - சிறகடிப்பவனாக விண்ணிலே எழுந்து பறந்தான்.

பொழிப்பு : யானையின் பகையாகிய சிங்கமேல் பவனிவரும் துர்க்கா தேவி சமர்க்களத்திலே களித்தாடும் கூத்துக்கு ஏற்ற பறையை அடிக்கும் ஒலிபோலத் தன்சிறகுகளை அடித்துச் சக்கரவாகப் புள்ளான சூரன் வானிலே கிளர்ந்து சென்றான்.

மண்ணிடை வரைப்பு முற்றும் மணிச்சிறை யதனான்மூடி
விண்ணிடைப் பரிதி யொள்வாள் விலக்கியே சுழலும் வேலைக்
கண்ணிடைப் பெருமீன் குப்பை கவர்ந்திட வூக்கிற் றென்னத்
துண்ணெனப் பூதர் தானைச் சூழல்புக் கெறியு மாதோ. 370

பொருள் : மண்ணிடைவரைப்பு முற்றும் மணிச்சிறையதனால் மூடி - நிலப்பரப்பின் எல்லை முழுவதையும் அழகிய சிறகுகளால் மறைத்து, விண்ணிடைப்பரிதி ஒள்வாள் விலக்கியே - வானிலியங்கும் சூரியனின் பிரகாச ஒளியைத் தடைசெய்து, சுழலும் - சுழன்றுவருவான், வேலைக்கண்ணிடைப் பெருமீன்குப்பை கவர்ந்திட வூக்கிற்றென்ன - சமுத்திரத்தில் வாழும் பெரிய மீன் கூட்டத்தைக் கவர்ந்துண்ண முயன்றவாறு போல, துண்ணெனப் பூதர்தானைச் சூழல்புக்கு எறியும் மாதோ - வேகமாகப்பூதசேனைக்கடலிடையே பாய்ந்து பாய்ந்து சாடும்.

பொழிப்பு : நிலப்பரப்பை சிறகுகளால் மறைத்தும் கதிரவன் ஒளியை விலக்கியும் பறந்து சுழன்றுவரும், சமுத்திரத்திலுள்ள பெரிய மீன்கூட்டத்தைப் பற்றமுயல்வது போலப் பூதசேனைகள் செறிந்த சூழலில் பாய்ந்து பாய்ந்து சாடுவான்.

அடித்திடுஞ் சிறகர் தன்னால் அளவையில் பூதர் தம்மைப்
பிடித்திடும் புலவு நாறும் பெருந்தனி மூக்கிற் குத்தி
மிடற்றிடைச் செறித்து மெல்ல விழுங்கிடும் விறல்வேல் அண்ணல்
கொடித்தடந் தேரைச் சூழுங் கொடியபுள் வடிவக் கூற்றம். 371

பொருள் : கொடிய புள்வடிவக் கூற்றம் - கொடியபட்சிவடிவில் வந்த சூரனாகிய இயமனானது, அளவையில் பூதர்தம்மைச் சிறகர்தம்மால் அடித்திடும் - அளவற்ற பூதர்களைத்தன் சிறகுகளால் அடித்து வீழ்த்தும், பிடித்திடும் புலவு நாறும் பெருந்தனி மூக்கிற் குத்தி - கால்களாலே பிடித்தெடுக்கும் அவற்றைப புலால் நாற்றம் வீசும் பெரிய இணையிலாத அலகினாலேகுத்தி, மிடற்றினில் செறித்துமெல்லவிழுங்கிடும் - .மிடற்றிலே செறியச் செய்து மெல்லவிழுங்கிவிடும், விறல்வேல் அண்ணல் கொடித்தடம் தேரைச்சூழும் - வெற்றிவேற்பெருமானின் கொடியுள்ள பெருந்தேரைச் சூழ்ந்து வட்டமிட்டும் வரும்.

பொழிப்பு : புள்வடிவான சூரபதுமனெனும் கூற்றம் பூதர்களைச் சிறகுகளால் அடிக்கும் கால்களாற் பற்றி எடுக்கும் அலகினாலே குத்திமிடற்றிலே செறித்து மெல்லவிழுங்கும் பெருமானது கொடியுள்ள பெருந்தேரைச் சூழ்ந்து வட்டமிட்டுவரும்.

சுற்றிடுங் குமரன் தேரைத் தூண்டிய வலவன் தன்னை
எற்றிடுங் கொடிஞ்சி எஞ்ச இறுத்திடும் பரிகள் தம்மைக்
குற்றிடு மூக்கிற் சென்னி கொய்திடுங் குழீஇய வீரர்ப்
பற்றிடும் படைகள் முற்றும் பறித்திடு முறித்து வீசும். 372

பொருள் : சுற்றிடும் குமரன் தேரை - குமரேசரது தேரைச்சுற்றிவரும், தூண்டியவலவன் தன்னை எற்றிடும் - தேர்செலுத்தும் சாரதியை அடிக்கும், கொடிஞ்சி எஞ்சஇறுத்திடும் - கொடிஞ்சியெனும் உறுப்புச்சிதையமுரிக்கும் பரிகள் தம்மை மூக்கிற்குற்றிடும் சென்னிகொய்திடும் - தேர்க்குதிரைகளை அலகினாலே குத்தும் தலைகளைக் கொய்திடும், குழீஇய வீரர்ப்பற்றிடும் - குழுமிய வீரரைப்பற்றிச் செல்லும், பற்றியபடைகள் முற்றும் பறித்திடும் முறித்துவீசும் - கைக் கொண்ட படைகளையும் பறிக்கும் அவற்றை முறித்தெறியும்.

பொழிப்பு : சூரனாம் பறவை முருகன் தேரைவட்டமிடும் பாகனை அடிக்கும் கொடிஞ்சியை முறிக்கும் குதிரைகளை அலகாற்குத்தும் தலைகளைக் கொய்யும், வீரரைப்பற்றிச் செல்லும் பிடிதிருந்த படைகளைப் பறிக்கும் முறித்தெறியும் இவ்வாறு சமர் பொருதது.

இத்திறம் அவுணர் செம்மல் இருஞ்சிறைப் புள்ள தாகி
அத்தலைக் கறங்கி வீழ்வுற் றந்தரந் திரித லோடும்
முத்தியை உதவு நோன்றாள் மூவிரு முகத்தன் காணாக்
கைத்தலம் புடைத்து நக்கு நன்றிவன் கற்பி தென்றான். 373

பொருள் : அவுணர்செம்மல் இத்திறம் இருஞ்சிறைப்புள்ளதாகி - இவ்வாறே சூரபன்மன் பெரிய சிறகுகள் உடைய பறவை உருவாய், அத்தலைக் கறங்கி வீழ்வுற்று அந்தரம் திரிதலோடும் - அந்தப் போர்க்களத் தெல்லையிலே சுழன்றும் குதித்தும் வானத்திலே திரியும் நிலையில், முத்தியை உதவும் நோன்றாள் மூவிரு முகத்தன் காணா - சரணமெனச்சார்ந்தார்க்கு வீடுபேறருளும் பாதங்கள் கொண்ட ஆறுமுகப்பெருமான் கண்ணுற்று, கைத்தலம் புடைத்து நக்கு நன்று இவன் கற்புஇது என்றான் - கைகொட்டிச் சிரித்து இச்சூரனின் இந்த மாயச்செயல் நன்றே என்றான்.

பொழிப்பு : சூரன் புள்வடிவாய் இங்ஙனம் சமராடி வானிற் சுழன்று வருவதை முத்திதரும் முதல்வராம் முருகப்பெருமான் நோக்கிச் கைபுடைத்துச்சிரித்து இவன் மாயச்செயல் நன்றாயுளது என்றான்.

குறிப்பு : பசுவர்க்கத்தின் பாரத்தைச் சுமத்தலின் நோன்றாள் எனப்படும், பந்தமும் வீடும் பசுக்களுக்கருளி என்றும் பரிபாலிக்கும் பற்றாய திருவடி உள்ளவன். தன்கடன் அடியேனையும் தாங்குதல் எனும் அப்பர்வாக்கும் சான்று.

எறித்தரு சுடர்வேல் அண்ணல் இம்மென வெகுண்டு போரில்
நிறுத்திய மேரு வென்ன நிமிர்ந்ததோர் வரிவில் வாங்கி
விறற்கணை அநந்த கோடி மிசைமிசைக் கடிது பூட்டித்
திறத்தியல் புள்ளாய்ச் சூழும் அவுணன்மேற் செல்ல வுய்த்தான். 374

பொருள் : எறித்தரு சுடர்வேலண்ணல் இம்மென வெகுண்டு - பிராகாசிக்கும் சுடர்வேல் ஏந்திய பெருமான் நொடியில் வெகுண்டு, போரில் நிறுத்திய மெருவென்ன நிமிர்ந்ததோர் வரிவில்வாங்கி -

போர்முகத்தில் நிமிர்த்திய மேருமலைக்கு ஒப்பான நீண்டவில்லொன்றை வளைத்து, விறற்கணை அநந்தகோடிமிசை மிசைக்கடிது பூட்டி - வீறமிக்க அநந்த கோடிவாளிகளை மென்மேலும் வேகமாகத்தொடுத்து, திறத்தியல்புள்ளாய்ச் சூழும் அவுணன் மேற்செல்ல உய்த்தான் - வலிமிக்க பறவையாக வட்டமிடும் சூரனைத்தாக்குமாறு தூண்டினார்.

பொழிப்பு : சுடர்வேற்பெருமான் சினந்து மேருபோலும் வில்லை வளைத்து வலிய அநந்தகோடி அம்புதொடுத்து புள்ளுருவாய்ச் சூழவரும் சூரன்மீது செல்லத்தூண்டினார்.

நெறித்திகழ் பகழி மாரி நிமலன்விட் டிடலும் வெய்யோன்
சிறைப்புடைக் கொண்டு பாங்கிற் சிந்திட அவற்றை மோதிக்
குறைத்திடுந் துண்டந் தன்னாற் கொய்திடுந் தாளிற் பற்றி
முறித்திடுங் கிளர்ந்து வானம் முழுவதுஞ் சுழன்று செல்லும். 375

பொருள் : நெறித்திகழ் பகழிமாரி நிமலன் விட்டிடலும் - நன்னெறியில் திகழ்விக்கும் பாண மழைகளை நிமலராம் பெருமான் விடுதலும், வெய்யோன் சிறைப்புடைக்கொண்டு - கொடிய சூரன் சிறகடிப்பதால், பாங்கிற் சிந்திட அவற்றை மோதி - பாங்கரிலே சிந்திவிழும்படி அவற்றை மோதி, குறைத்திடும் - துண்டங்களாக்கும், துண்டந்தன்னாற் கொய்திடும் - அலகினாலே கொய்திடும், தாளிற் பற்றிமுறித்திடும் - கால்களால் பிடித்து முறித்திடும், கிளர்ந்து வானம் முழுவதும் சுழன்று செல்லும் - வானம் முழுவதும் எழுந்துவட்டமிட்டுச் செல்லும்.

பொழிப்பு : நிமலர் பாணமழை பொழியப் புள்ளாகிய சூரன் சிறகடிப்பதால் பாங்கு சிந்தச் செய்வான் அலகினால் கொய்திடுவான் காலாற்பற்றிமுறிப்பான் மேலெழுந்து வானில் வட்டமிடுவான்.

குறிப்பு : சூரனைத் தீநெறி விட்டு நன்னெறிப்படுத்தவே செய்யும் செயலாதலால் நெறித்திகழ் பகழி எனப்பட்டது.

வேலைகள் எல்லை முற்றும் படர்ந்திடும் விராவி மேவு
ஞாலம தகல முற்றும் படர்ந்திடும் நாகர் வைகும்
வாலிய உலக முற்றும் படர்ந்திடும் வந்து பூத
சாலம தெறிந்து கவ்வித் தலைத்தலை மயங்கிச் செல்லும். 376

பொருள் : வேலைகள் எல்லைமுற்றும் படர்ந்திடும் - சமுத்திரப்பரப்பெங்கும் செல்லும், விராவி மேவும் ஞாலமதகலம் முற்றும் படர்ந்திடும் - செறிந்துள்ள நிலப்பரப்பெங்கும் செல்லும், நாகர்வைகும் வாலிய உலகம் முற்றும்படர்ந்திடும் - தேவர்கள் வாழும் தூயசுவர்க்க உலகம் முற்றும் செல்லும், வந்து பூதசாலமதெறிந்து கவ்வி - இடையிலே வந்து பூத கணங்களை அடித்துக் கவிவிக்கொண்டு, தலைத்தலை மயங்கிச் செல்லும் - இடமிடந் தோறும் கலந்து பறந்து செல்லும் அந்தப்புள்.

பொழிப்பு : கடற்பரப்பு முற்றும் தரைப்பரப்பு முற்றும் தேவர்வாழ் சுவர்க்க தலம் முற்றும்செல்லும், மீண்டு பூதகணங்களை அடித்துக்கவ்வி இடந்தோறும் மயங்கிச் செல்லும்.

சூரன்மற் றினைய வாற்றால் சுலாய்க்கொடு திரித லோடும்
பூரணன் அதனைக் காணாப் புள்ளெனப் பெயர்வான் தன்னைத்
தேரொடுந் தொடர்ந்து கோறல் பழியெனச் சிந்தை செய்து
வாரணம் உயர்த்தோன் தன்னை நோக்கினன் வானோர் தம்முள். 377

பொருள் : சூரன் மற்றினையவாற்றால் சுலாய்க்கொடு திரிதலோடும் - புள்ளாகிய சூரன் இங்ஙனம் எங்கும் சுழன்று பறந்துதிரியவே, பூரணன் அதனைக்காணா - நிறைந்தவராம் பிரான் அதனைக்கண்டு, புள்ளெனப் பெயர்வான்தன்னைத் தேரொடு தொடர்ந்து கோறல் பழி எனச்சிந்தை செய்து - பறவையாகச் செல்பவனை நாம் தேரோடு துரந்து சென்று கொல்லுதல் தர்மமன்று பழிப்புக்கிடமாமெனச் சிந்தித்து, வாரணம் உயர்த் தோன்தன்னை வானோர் தம்முள் நோக்கினன் - அங்குள்ள வானவர்களுள்ளே அயிராவதவாகனனான இந்திரனைக் குறிப்பாக நோக்கியருளினார்.

பொழிப்பு : சூரன் பறவையாய் வட்டமிடப் பூரணனாம் பிரான் பறவையாம் இவனை நாம் தேரோடு துரத்திச் சென்று கொல்லல் அறமன்று, பழியாம் என்றெண்ணி வானவருள்ளே யானைவாகனனான இந்திரனைக் குறிப்பாகப் பார்த்தருளினார்.

குறிப்பு : சூரபன்மன் மயிலும் சேவலுமாதல் வேண்டியதை நினைவுறுத்தவும், அசுரேந்திரனும், சுரேந்திரனும் நேர் பொருதனரல்லர் அக்குறை தீர்க்கவும் திருவுளம்பற்றினார்.

இந்திரன் அனைய காலை எம்பிரான் குறிப்புந் தன்மேல்
அந்தமில் அருள்வைத் துள்ள தன்மையும் அறிந்து நோக்கிச்
சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி மரகத மலைபோல் நின்றான். 378

பொருள் : இந்திரன் அனைய காலை எம்பிரான் குறிப்பும் - இந்திரன் அப்போது எம்பிரானது திருநோக்கத்தின் குறிப்பையும், தன்மேல் அந்தமில் அருள் வைத்துள்ள தன்மையும் அறிந்து நோக்கி - தன்மீது அளப்பரிய கருணையை நல்கிய தன்மையையும் தெரிந்து மேலே தான் செய்யவுள்ள பணியைக் கருதியவனாக, சுந்தரநெடுங்கண் பீலித் தோகைமாமயிலாய்த் தோன்றி வந்தனன் - அழகிய நீண்டகண்ணும் பீலித் தோகையும் கொண்ட பெரியமயிலினது வடிவாகித் தோன்றி வந்தான், குரற்போற்றி மரகதமலை போல் நின்றான் - வந்த இந்திரன் குமரவேளை வணங்கித் துதித்தவனாய் மரகத மலையோல நின்றான்.

பொழிப்பு : அப்போது இந்திரன் பெருமானின் குறிப்பையும் தன்மீது கருணைகாட்டியதையும் அறிந்து தன்பணியையும் உளங்கொண்டு அழகிய தோகைமயிலாம் வடிவாகிவந்து குமரனை வணங்கி மரகத மலை போலப் போற்றி செய்து நின்றான்.

நின்றிடு மஞ்ஞைப் புத்தேள் நெடுநிலங் கிழிய மேருக்
குன்றமும் புறஞ்சூழ் வெற்புங் குலைந்திடக் கரிகள் வீழ
வன்றிரை அளக்கர் நீத்தம் வறந்திடப் பணிகள் அஞ்சத்
தன்றுணைச் சிறகால் மோதி இனையன சாற்ற லுற்றான். 379

பொருள் : நின்றிடு மஞ்ஞைப் புத்தேள் - போற்றி நின்ற தோகைமயிலான இந்திரன், நெடுநிலம் கிழிய - நீண்ட பூமண்டலம் கிழியவும், மேருக் குன்றமும் புறஞ் சூழ் வெற்பும் குலைந்திட - மாமேருமலையும் புறத்தேயுள்ள குலமலைகளும் குலுங்கவும், கரிகள் வீழ - அட்டதிக்கு யானைகள் விழவும், வன்திரை அளக்கர் நீத்தம் வறந்திட - வலிய திரைக்கடலில் நீர் வற்றவும், பணிகள் அஞ்சத்தன்துணைச் சிறகால்மோதி - சேடன் முதலாம் பாம்புகள் அஞ்சவும் தனது இரு சிறகுகளாலும் மோதி, இனையன சாற்றலுற்றான் - பெருமானிடம் இவ்வாறு விண்ணப்பிப்பானாயினான்.

பொழிப்பு : நின்றமயிலாகிய இந்திரன், நிலம்பிளக்க மலைகள் நிலைகுலைய திக்குயானைகள் நடுங்கிவிழ கடல்நீர் வற்ற அட்டநாகமும் அஞ்ச இருசிறகால் மோதிக்குமரனிடம் விண்ணப்பித்தான்.

ஐயகேள் அமர ரெல்லாம் வழிபட அளியன் தன்பால்
செய்ய பேருளை வைத்தாய் ஆதலிற் சிறுமை தீர்ந்தேன்
உய்யலாம் நெறியுங் கண்டேன் உன்னடி பரிக்கப் பெற்றேன்
பொய்யுலாம் மாய வாழ்க்கைப் புன்மையும் அகல்வன் மன்னோ. 380

பொருள் : ஐயகேள் - எந்தையே கேட்டருளுக, அமரரெல்லாம் வழிபட - தேவர்யாவரும் வழிபட்டு ஏவல் ஏற்கக் காத்திருக்கவும், அளியன்தன்மேற் செய்ய பேர் அருளை வைத்தாய் - எளியவனான என்மீதே சிறந்த ஏவலாகிய பேரருளை வழங்கினாய், ஆதலில் சிறுமை தீர்ந்தேன் - ஆதலினால் நான் சிறுமை நீங்கி ஒரு பொருளாயினேன், உய்யலாம் நெறியுங்கண்டேன் - உய்ந்து ஈடேறும் வழியும் கண்டேன், உன்னடிபரிக்கப் பெற்றேன் - உனது திருவடிகளைச் சுமக்கும் பெறும் பெற்றேன், பொய்யுலாம் மாய வாழ்க்கைப் புன்மையும் அகல்வன் மன்னோ - பொய்மையான மாய வாழ்வாகிய இழிவும் அகன்றிடுவேன் இதுவே உறுதி.

பொழிப்பு : தொழுது ஒழுகும் சுரர்யாரும் நிற்க எம்பிரான் என்மேலே அருள்நோக்கம் அளித்தீர் அதனாலே, சிறுமை தீர்ந்தது உய்வழி கண்டேன், திருவடி சுமக்கப் பெற்றேன், மாயவாழ்வாம் பொய்யும் நீங்குவேன்.

குறிப்பு : சற்குருவின் சட்சு தீட்சை (பார்வை)யே அறியாமை நீக்கி மெய்யறிவுதருவதென உணர்த்தினார்.

அல்லல்செய் தெமரை எல்லா மருஞ்சிறைப் படுத்தி வீட்டிப்
பல்வகை உலகை யாண்ட அவுணர்கோன் பறவை யாக்கை
செல்லுழிச் சென்று சென்று செருவினை இழைத்து வெல்வான்
ஒல்லையில் அடியேன் தன்மேல் ஏறுதி ஊர்தற் கென்றான். 381

பொருள் : எமரையெல்லாம் அல்லல் செய்து அருஞ்சிறைப்படுத்தி வீட்டி - தேவராம் நம்மனோரை அல்லற்படுத்தியும் அருஞ்சிறைப்படுத்தியும் செல்வவாழ்வைக் கெடுத்தும், பல்வகை உலகை ஆண்ட அவுணர்கோன் பறவை ஆக்கை - பலவகை உலகையும் ஆண்ட சூரபதுமனாம் புள்ளினது உருவம், செல்லுழிச் சென்று சென்று செருவினை இழைத்து வெல்வான் - செல்லுமிடமெல்லாம் சென்று சென்று செருச் செய்து வெற்றி பெறற்கு, ஊர்தற்கு ஒல்லையில் அடியன் தன்மேல் ஏறுதி என்றான் - ஊர்ந்து செல்ல விரைவில் அடியேன் மேல் ஏறியமர்ந்தருளுக என்றான்.

பொழிப்பு : சுவாமீ எம்மையெல்லாம் அல்லற்படுத்தியும் சிறையிட்டும் வாழ்வைக் கெடுத்தும் பல அண்டங்களை ஆண்ட சூரனாகிய புள்செல்லுமிட மெங்கும் துரந்து சென்று, சமர் பொருது வெற்றி பெறும் பொருட்டு ஊர்தியாக என்மேல் ஏறிவீற்றிருப்பீராக என்றான்.

என்னலும் உளத்திற் செல்லும் இவுளிமான் தேரின் நீங்கிப்
பன்னிரு நாட்டத் தண்ணல் படர்சிறை மயூர மாகி
முன்னுறு மகவான் தன்மேல் மொய்ம்புடன் புக்கு வைகி
ஒன்னலன் செலவு நோக்கி உம்பரில் ஊர்த வுற்றான். 382

பொருள் : என்னலும் பன்னிரு நாட்டத்து அண்ணல் - என இந்திரன் வேண்டிய போது பன்னிரு கண்ணுள்ள சேனாபதிப்பிரான், உளத்திற் செல்லும் இவுளிமான் தேரினீங்கி - குதிரைபூண்டமனோ

வேகப் பெருந்தேரினின்றிறங்கி, படர்சிறை மயூரமாகி முன்னுறு மகவாள்தன்மேல் - அகன்ற சிறகுகள் கொண்ட மயூரமாகி முன்னிற்கும் இந்திரன் மேல், மொய்புடன்புக்கு வைகி - வல்லமையுடன் ஏறி வீற்றிருந்து, ஒன்னலன் செலவு நோக்கி உம்பரில் ஊர்தலுற்றான் - சூரனது செல்வழியை நோக்கி வானிலே ஊர்ந்து போவாராயினார்.

பொழிப்பு : இந்திரன் வேண்ட எம்பிரான் மனோ வேகத் தேரிலிருந்து நீங்கி இந்திரனாகிய மயில் வாகனத்தேறி வைகிச் சூரன் செல்வழி நோக்கி வானிலே தொடர்ந்து ஊர்ந்து சென்றார்.

ஆறுமா முகத்தெம் மண்ணல் அசனிபோல் அகவி ஆர்க்கும்
மாறிலா மயூர மென்னும் வயப்பரி தனைந டாத்தி
ஈறுசேர் பொழுதிற் சூழும் எரியினை அடுவான் முன்னிச்
சூறைமா ருதஞ்சென் றென்ன அவுணனைத் தொடர்ந்து சூழ்ந்தான். 383

பொருள் : ஆறுமாமுகத்து எம் அண்ணல் - ஆறு திருமுகமுள்ள எம் பிரான், அசனிபோல் அகவிஆர்க்கும் மாறிலா மயூரமென்னும் வயப்பரிதனை நடாத்தி - இடியேறு போல அகவுதலைச் செய்து ஆர்ப்பரிக்கும் இணையில்லாத மயிலாகிய வலிமிக்க ஊர்தியைச் செலுத்தியவாறு, ஈறுசேர்பொழுதிற் சூழும் எரியினை அடுவான் முன்னி - கனட நாளில் எழுந்து சூழ வரும் வடவைத் தீயை அவித்தடக்கக் கருதி, சுறைமாருதம் சென்றென்ன - ஊழிநாளிலே சூறைக்காற்றுத் துரந்து செல்வது போலவே, அவுணனைத் தொடர்ந்து சூழ்ந்தான் - புள்ளாகிய சூரபன்மனைத் தொடர்ந்து வளைத்துச் சென்றார்.

பொழிப்பு : சண்முகர் இந்திரனாகிய இடியேறு போல அகவியார்க்கின்ற மயிலாகிய ஊர்தியை ஊர்ந்து, பறவையான சூரனைத்துரந்து சென்றார், அது ஊழிநாளில் உலகுண்ண வரும் வடவைத் தீயினை அவித்தடக்கவரும் சூறைக்காற்றுத் தொடர்ந்து துரப்பது போன்றிருந்தது.

ஆகிய பொழுது தன்னில் ஆழியம் புள்ளாய்த் தோன்றி
மாகம குலவு கின்ற மாற்றலன் அதனை நோக்கிச்
சீகர அளக்க ரென்னத் தெழித்துமேற் சென்று தாக்கக்
கேகய அரசன் தானுங் கிடைத்தமர் புரித லுற்றான். **384**

பொருள் : ஆகிய பொழுது தன்னில் - அங்ஙனம் நிகழவே, ஆழியம் புள்ளாய்த் தோன்றி மாகமது உலாவுகின்ற மாற்றலன் - சக்கரவாகப்புள்ளுருவாகி ஆகாயத்தில் உலாவிவருகின்ற பகைவனாம் சூரபன்மன், அதனை நோக்கி - பெருமானின் செயலை நோக்கி, சீகர அளக்கரென்னத் தெழித்து மேற்சென்றுதாக்க - திரை எறியும் கடல் போல அறைகூவிச்சென்று தாக்குதலும், கேகய அரசன் தானும் கிடைத்து அமர் புரிதலுற்றான் - மயிலுருவான இந்திரனும் அச்சமின்றிச் சூரனோடு எதிர்த்துப் போராடும் வாய்புக்கிடைத்து போராடுவானாயினான்.

பொழிப்பு : சக்கரவாகப் புள்ளாகி வானிலே திரிந்த சூரன் இந்திரன் சுவாமியை மயிலாகிச் சுமந்து வருதலை நோக்கிக் கடல் போல ஆர்ப்பரித்துச் சென்று மயிலைத்தாக்கவே இந்திரனும் அவனுடன் எதிரேற்று நின்று சமர் பொருவானாயினான்.

குறிப்பு : சூரனை எதிர்த்து நின்று பொர அஞ்சி ஒளித்த இந்திரன் பெருமான் துணையிருப்பதால் துணிந்து கிடைத்துப் போர் பொருதான்.

நிறங்கிளர் பசலைத் துண்ட நீட்டியே யாக்கை முற்றும்
மறங்கொடு கீண்டு செந்நீர் வாய்ப்படக் கவ்வி வாங்கிப்
புறங்கிளர் சிறைகள் தம்மாற் புடைத்துவெங் காலில் தாக்கிப்
பிறங்குபுள் ளுருவ மானோர் இவ்வகை பெரும்போர் செய்தார். **385**

பொருள் : பிறங்கு புள்ளுருவமானோர் - விளங்கும் பட்சிவடிவினரான இவ்விரு தலைவர்களும், நிறங்கிளர் பசலைத்துண்டம் நீட்டியே - பொன்னிறம் விளங்கும் அலகுகளை நீட்டி, யாக்கைமுற்றும் மறங்கொடு கீண்டு - மறத்தோடு உடம்புமுழுதும் குத்திக்கிழித்து,

செந்நிர் வாய்படக் கவ்வி வாங்கி - சோரிநீர் வாயிற் சேரும்படி கவ்விஎடுத்து, புறங்கிளர்சிறகர்தம்மால் புடைத்து - இருபுறமுமுள்ள சிறகுகளால் மோதி, வெங்காலில்தாக்கி - கொடியகாலால் உதைத்து, இவ்வகை பெரும்போர் செய்தார். - இங்ஙனம் தம்மிடையே பெரும்போர் புரிந்தனர்.

பொழிப்பு : பறவை உருவான இந்திரர்கள் இருவரும் ஒருவரையொருவர் அலகினாலே குத்திக்கிழித்தும், சோரிநீர் கவர்ந்தெடுத்தும் புறத்துச்சிறகுகளால் அடித்தும் காலால் உதைத்தும் இவ்வாறு பெரும்சமராற்றினர்.

இத்திறம் பொருத காலைப் பிணிமுகத் தேந்தல் தன்னைப்
பைத்தலை யுடைய தூவி பறித்திடா வதன முற்றுங்
குத்திவெங் குருதி வீட்டிக் குருமணிக் கலாபம் ஈர்த்து
மெய்த்துயர் புரிந்தான் நேமிப் புள்ளுருக் கொண்ட வெய்யோன். 386

பொருள் : இத்திறம் பொருதகாலை - இங்ஙனம் போரிடும்போது, பிணிமுகத்த ஏந்தல்தன்னை - மயிலுருவில் உள்ள இந்திரனை, பைத்தலையுடையதூவி பறித்திடா - பசியதலையிலுள்ள தூவிகளைப்பிடுங்கி, வதனம் முற்றும் குத்தி வெங்குருதி வீட்டி - முகத்தில் அலகாற்குத்திக் குருதி பெருகச்செய்து, குருமணிகலாபமீர்த்து - நீலமணி நிறமுள்ள தோகையைப்பறித்து, மெய்த்துயர் புரிந்தார் - மேனிமுழுவதும் மிகவருந்துமாறு செய்தான், நேமிப்பள்ளுருக்கொண்ட வெய்யோன் - சக்கரவாகப் புள்ளின் வடிவுடைய கொடியசூரன்.

பொழிப்பு : போராடும்போது சக்கரவாகமான கொடியசூரன், மயிலுருவான இந்திரனை அவனது தலையிலுள்ள தூவியைப்பிடுங்கியும் முகத்திலே குத்திச் சோரிபெருகச்செய்தும் நீலமணி வண்ணமான தோகையைப்பறித்தும் மேனிமுழுவதும் வருந்துமாறு வாட்டினான்.

அச்செயல் முருகன் காணா ஆரழல் என்ன நக்குக்
கைச்சிலை யதனை வாங்கிக் கடுந்தொழில் அவுணர் மன்னன்
உச்சியின் முகத்திற் காலில் உரத்தினில் சிறைகள் தம்மில்
வச்சிர நெடுங்கண் வாளி வரம்பில தொடுத்து விட்டான். 387

பொருள் : அச்செயல் முருகன் காணா ஆரழல் என்னநக்கு - சூரனாலே, இந்திரன் தன்புறுத்தப்பட்ட அத்தன்மையைப் பெருமான்கண்டு பேரழல் பிறந்ததுபோலச்சிரித்து, கைச்சிலை அதனை வாங்கி - கையிலுள்ளவில்லை வளைத்து, கடுந்தொழில் அவுணர்மன்னன் - கொடுங்கோலனாம் சூரபன்மனின், உச்சியில் முகத்தில் காலில் உரத்தினில் சிறைகள்தம்மில் - தலையிலும் முகத்திலும் காலிலும் நெஞ்சிலும் சிறகுகளிலும் சென்றுதைக்குமாறு, வச்சிரநெடுங்கண்வாளி வரம்பில தொடுத்துவிட்டான் - நீண்டவயிரமான முனைகளுள்ள அளவில்லாத வாளிகளைத் தொடுத்து ஏவிவிட்டார்.

பொழிப்பு : சூரனால் மயில் துன்புறலைப் பார்த்துத் தமது தனுவை வளைத்து நீண்ட வயிரமாகியுள்ள எண்ணிறந்த அம்புகளைத் தொடுத்து சூரனின் உறுப்பகள் தோறும் செறியும்படி செல்லவிடுத்தார்.

விட்டிடு கின்ற வாளி வெய்யவன் அங்கமெங்கும்
பட்டிடு கின்ற காலைப் பதைபதைத் துதறிச் சிந்தி
எட்டுள திசையும் வானும் இருங்கடல் உலக மெங்குங்
கட்டழல் சிந்திச் சீறிக் கறங்கெனத் திரியா நின்றான். 388

பொருள் : விட்டிடுகின்றவாளி - ஏவப்பட்டசரங்கள், வெய்யவன் அங்கம்எங்கும் பட்டிடுகின்றகாலை - கொடியசூரனது அங்கந்தோறும் சென்றுதாக்கியபோது, பதைபதைத்து உதறிச்சிந்தி - மிகவும் பதைத்து உதறி அவற்றை வீழ்த்தி, எட்டுளதிசையும் வானும் இருங்கடல் உலகம்எங்கும் - எட்டுத்திக்கிலும் வானிலும் பெரிய கடல்சூழ்ந்த பூமியெங்கும், கட்டழல் சிந்திச் சீறிக்கறங்கெனத்திரியா நின்றான் - கண்கோபக்கனல் சிந்த சீற்றத்தோடு காற்றாடி பொலச்சுழன்று வட்டமிட்டுத் திரிந்தான்

பொழிப்பு : விட்ட சரங்கள் வெய்யவனது மெய்யெங்கும் படவே பதைத்து உதறி வீழ்த்தி, திக்கும்வானமும் பூமியுமாக எவ்விடமும் கோபத்தீ சிந்தச்சீறி காற்றாடிபோலவே சுழன்று விட்ட மிட்டுத்திரிந்தான்.

திரிந்திடு கின்ற காலைச் செஞ்சுடர்த் தனிவேல் அண்ணல்
புரந்தரன் உருவாய் நின்ற பொறிமயில் நடாத்தி யேகி
அரந்தெறு கணைகள் தூண்டி அகிலமும் அவுணன் தன்னைத்
துரந்தமர் இழைக்க லுற்றான் விண்ணவர் தொழுது போற்ற. 389

பொருள் : திரிந்திடுகின்றகாலை - சூரன் அங்ஙனம் திரியவே, செஞ்சுடர்த்தனி வேலண்ணல் செவ்வொளிவீசும் ஒப்பற்ற வேற்கரத்திறைவர், புரந்தரன் உருவாய்நின்ற பொறிமயில் நடாத்தி ஏகி - இந்திரன் உருமாறி நின்ற புள்ளிமயிலை ஊர்ந்து சென்று, அரந்தெறுகணைகள் தூண்டி - அரத்தையும் தேய்க்கும் வலிய வாளிகளைத்தூண்டி, அகிலமும் அவுணன் தன்னைத்துரந்து - அனைத்துலகிலும் சூரனைத்தொடர்ந்து சென்று, அமர் இழைக்கலுற்றான் - போர்புரிந்தார், விண்ணவர் தொழுதுபோற்ற - தேவர்கள் தொழுதுபோற்ற - அமர்புரிந்து சென்றார்.

பொழிப்பு : அவ்வாறு சூரன் திரியவே, பெருமான் மயிலூர்ந்து சென்று துரந்து உலகம் முழுவதும் தொடர்ந்து போய் வலியவாளிகளைத் தூண்டித் தேவர்தொழுது துதிக்கப் போர்புரியலானார்.

அத்தகும் எல்லை தன்னின் அவுணர்கள் எவர்க்கும் மேலோன்
எய்த்துளம் மெலிந்து சால இடருழந் திரக்க மெய்தி
மெய்த்தழ லென்னச் சீறி வேற்படை கொண்ட செம்மல்
கைத்தலத் திருந்த வில்லைக் கறிப்பது கருதி வந்தான். 390

பொருள் : அந்தரும் எல்லை தன்னில் - அவ்வாறு அமர்நிகழும்போது, அவுணர்கள் எவர்க்கும் மேலோன் - அவுணர்யாவரிலும் மேலவனாகியசூரன், எய்த்து உளம் மெலிந்து - இளைத்து

உளந்தளர்ந்து, சாலஇடருழந்து இரக்கம் எய்தி - மிக வருந்தி இரக்கமுற்று, மெய்த்தழல் என்னச்சீறி - சுவாலிக்கும் தீப்போலச்சீறி, வேற்படை கொண்ட செம்மல் கைத்தலத்தி லிருந்தவில்லை - வேற்படை கொண்ட பிரானார்கரத்திலிருந்தவில்லை, கறிப்பது கருதிவந்தாள் - துணிப்பனெனக் கருதி அணுகிவந்தான்.

பொழிப்பு : சமர் நிகழும்போது அசுரேந்திரனான சூரன், மெய்வருந்தி உளம்சோர்ந்து மிகத்துன்புற்று இரங்கி மிகச்சினந்து பெருமானது வில்லைக்கறித்துத்துணிக்கநினைந்து அணுகிவந்தாள்.

வருவது நிமலன் காணா மலர்க்கரம் ஒன்றில் வைகும்
ஒருதனி ஒள்வாள் வீசி ஒன்னலன் பறவை யாக்கை
இருதுணி யாகி வீழ எறிந்தனன் எறித லோடும்
அரியயன் முதலாந் தேவர் அனைவரும் ஆடல் கொண்டார். **391**

பொருள் : வருவது நிமலன் காணா மலர்க்கரம் ஒன்றில்வைகும் - சூரனாகியுபறவைவரும் குறிப்பை நிமலராம் பெருமான் கண்டு மலர்போன்ற திருக்கரமொன்றில் இருக்கும், ஒருதனி ஒள்வாள்வீசி ஒன்னலன் பறவை யாக்கை - ஒப்பற்ற ஒளிவீசும் சிறந்த வாளால் வீசி சூரபன்மனது பறவையாக்கையை, இருதுணியாக வீழ எறிந்தனன். - இருதுண்டுகளாக விழும்படி வெட்டினார். எறிதலோடும் அரியயன் முதலாம் தேவர்யாவரும் ஆடல்கொண்டார் - வெட்டிவீழ்த்தவே அரிபிரமேந்திராதி தேவர் யாவரும் பிரானைப்போற்றிக் களிகொண்டாடினார்.

பொழிப்பு : சக்கரவாக வரவைக்கண்டு பெருமான் திருக்கரத்து வாளால் பறவை இருதுணியாக வெட்டிவீழ்த்தினார். கண்ட அரிபிரிமேந்திராதிதேவர் மகிழ்ந்து போற்றிக்களிக்கூடத்தாடினார்.

வேறு
தாரார் வாகை சூடிய வேலோன் தன்கையிற்
கூரார் வாளாற் புள்ளுரு வத்தைக் குறைவிக்கச்
சூராம் வெய்யோன் அண்டமு கட்டைத் தொடவோங்கிப்
பாராய் நின்றான் விண்ணவர் யாரும் பரிவெய்த. **392**

பொருள் : வாகைசூடியதாரார் வேலோன் - வெற்றிகொண்ட மாலை சூட்டிய வேற்கரராம் பிரானார், தன்கையில் கூரார் வாளால் புள்ளுருவத்தைக் குறைவிக்க - தமதுதிருக்கரத்துள்ள கூர்வாளாலே பறவை உருவை இருதுணியாக்குதலும், சூராம் வெய்யோன் - சூரனாகியதீயவன் பின்பு, அண்டமுகட்டைத்தொட ஓங்கி - அண்டமுகட்டைத்தொடுமாறு நிமிர்ந்து பராய்நின்றான் விண்வர்யாரும் பரிவெய்த - மண்மலையாக மாறிநின்றான் தேவர்யாவரும் வருந்த.

பொழிப்பு : பெருமான் வாளாலே சக்கரவாக உருவை இருதுணியாக்கவே, தீயசூரன் அண்டமுகடுவரை நிமிர்ந்து மண்மலையாகமாறித் தேவர்யாவரும் வருந்துமாறு நின்றான்.

ஏழுட் பட்ட ஆழ்திரை நேமி யிடை தூர்த்துத்
தாழ்விற் செல்லுமாதவர் தேரைக் தடைசெய்து
சூழிக் கால்கள் வானெறி செல்லுந் துறைமாற்றிப்
பாழித் திக்கை மூடினன் நின்றான் படியானோன். 393

பொருள் : ஏழுட்பட்ட ஆழ்திரை நேமியிடைதூர்த்து - ஏழாகிய ஆழமுள்ள திரைகடல்களின் இடங்களைத்தூர்த்து, தாழ்விற்செல்லும் ஆதவர் தேரைத்தடைசெய்து - வானில்கிட்டிய கதியிலே செல்லும் சூரியரது தேரையும் தடுப்பதாய்:, சூழிக்கால்கள் வான்நெறி செல்லும் துறைமாற்றி - சூழ்ந்துவரும் காற்றுகள் வானவழியிலே செல்லும் - துறைகளையும் மூடி, பாழித்திக்கை மூடினன்னின்றான் படியானோன் - பரந்ததிசைகளையும் மூடியவாறு நின்றான் மணற்குற்றான சூரன்.

பொழிப்பு : மணற்குன்றான சூரன் எழுகடலையும் தூர்த்து, சூரியர் தேரையும் தடுப்பதாய், வாயுக்கள் செல்வழிகளையும் மாற்றி திசைகளையும் மறைத்துநின்றான்.

ஆறார் சென்னிப் பண்ணவன் மைந்த னகுகாணாச்
சீறா நன்றாற் சூர்புரி மாயத் திறன்என்னாக்
கூறா அங்கைச் செஞ்சிலை தன்னைக் குனிவித்தே
ஊறார் வெங்கோல் ஏழு தொடுத்தே யுரைசெய்வான். 394

பொருள் : ஆறார் சென்னிப்பண்ணவன் மைந்தன் அதுகாணா - கங்கைதங்கிய சடையராம் சிவன் மகனாகிய செவ்வேள் அதனைக்கண்டு, சீறா - சீறி, சூர்புரிமாயத்திறன் நன்றால் என்னா கூறா - சூரன் செய்யும் மாய விளையாட்டு நன்றென்று கூறி, அங்கைச் செஞ்சிலை தன்னைக் குனிவித்தே - திருக்கரத்துள்ளவில்லை வளைத்து, ஊறார்வெங்கோல் ஏழுதொடுத்தே உரை செய்வான் - ஊறுசெய்யவல்ல சிறந்த ஏழுகணைகளைத் தொடுத்துச் செய்பணியைச் செப்புவார்.

பொழிப்பு : கங்காதரர் குமாரர் சூரன்செய்கைகண்டு சீறி அவன் மாயச்செயல் நன்றென்றுகூறி கைவில் வளைத்து கணை ஏழுதொடுத்து அவைசெய்பணியை எடுத்துரைப்பாராயினர்.

நெடுவா னத்தின் காறும் எழுந்தே நிமிர்வெய்தி
முடிவான் வெய்யோன் பாரக மாய்என் முன்நின்றான்
கடலேழ் என்னுந் தன்மையின் நீவீர் கடிதேகி
அடுவீர் என்றே விட்டனன் யார்க்கும் அறிவொண்ணான். 395

பொருள் : வெய்யோன் நெடுவானத்தின்காறும் எழுந்தே நிமிர்வெய்தி - வெய்யவனாம் சூரன்வான முகடுவரை எழந்துயர்ந்து, முடிவான் பாரகமாய் என் முன்னின்றான் - அழியவேண்டியவனாகப் பிருதுவிவடிவாக என்முன்னே நிற்கின்றான். ஆதலின், நீவிர் கடல் ஏழு என்னும் தன்மையில் கடிது ஏகி - பாணங்களே நீவிர் ஏழுகடல் எனும் உருத்தாங்கி விரைந்தேகி, அடுவீர் என்றே விட்டனன் யார்க்கும் அறிவொண்ணான் - அழிப்பீராக என்று பணித்து ஏவினார் யாரும் அறிவரியவர்.

பொழிப்பு : கொடிய சூரன் முடிவெய்தவேண்டியவன் என்முன்னே மண்மலையாகி நின்றான் ஆதலின் நீர் ஏழுகடலுருவாகி விரைந்தேகி அதனை அழிப்பீர் என்றார் அறிதற்கரியபிரானார்.

ஒற்றைச் செவ்வே லோன்விடு வாளி யுலகெல்லாஞ்
சுற்றிக் கொண்டே உண்டிடு நேமித் தொகைபோலாய்ச்
செற்றத் தோடும் ஆர்ப்பொடும் ஏகித் திரைவீசி
மற்றைச் சூரன் தன்னுரு வத்தை வளைவுற்ற. 396

பொருள் : ஒன்றைச் செவ்வேலோன் விடுவாளி - ஒருவேலைத்தாங்கிய பிரான் விட்ட வாளிகள், உலகெங்கும் சுற்றிக்கொண்டே உண்டிடும் நேமித்தொகை போலாய் - எழுதீவு முழுவதையும் சூழ்ந்துகொண்டு உண்டொழிக்கும் பிரளய வெள்ளம்போலாகி, செற்றத்தோடும் ஆர்ப்பொடும் ஏகி - சினத்தோடும் ஆர்ப்போடும் சென்று, மற்றச் சூரன் தன்னுருவத்தை வளைவுற்ற அச்சூரபன்மன் கொண்ட மண்மலைவடிவைச் சூழ்ந்து வளைத்தன.

பொழிப்பு : வேற்கரப்பிரான் ஏவியவாளிகள் உலகைவிழுங்கும் பிரளயவெள்ளவடிவாகிச் சினந்து ஆர்த்துச் சென்று சூரனது மண்மலையான வடிவைச் சற்றி வளைத்தன.

வளையா வெஞ்சூர் மாயிரு ஞால வடிவத்தைக்
களையா உண்டே இன்மைய தாக்கிக் கணையேழுந்
திளையார் நீத்தத் தொல்லுரு நீங்கிச் செருவின்கண்
விளையா டுற்ற எம்பெரு மான்பால் மீண்டுற்ற. 397

பொருள் : வெஞ்சூர் மாயிருஞால வடிவத்தை வளையா களையா உண்டு - வெய்ய சூரன் எடுத்த மாபெரும் மண்மலையான மாயா வடிவத்தை வளைத்துக் கவர்துண்டு, இன்மையதாக்கிக் கணை ஏழும் - இல்லாமற்செய்தபின் அம்புகள் ஏழும், திளையார் நீத்தத்தொல்லுருநிங்கி - நிறைவுற்ற நீராகிய வடிவைவிட்டு செருவின்கண் விளையாடுற்ற எம்பெருமான்பால் மீண்டுற்ற - போர்க்களத்தில் விளையாடல் செய்யும் எம்பிரானிடம் மீண்டுசென்று சேர்ந்தன.

பொழிப்பு : கொடிய சூரன் கொண்டமாயமான மண்மலையைச் சுற்றிவளைத்து அடியோடற்றுப்போக உண்டொழித்து இல்லையாகச்செய்து பின் ஏழுகணைகளும் போர்க்களவிளையாடல் செய்யும் எம்பிரானிடம் மீண்டெய்தின..

குறிப்பு : போரின்கண் விளையாடுற்ற என்பதனைக் கணைகளுக் குரியதாகக் கொண்டு கணைகள் ஏழும் வெற்றிக்களிப்பினாலே களத்திலேநின்று விளையாடின: என்பதும் உண்டு.

காணா வெய்யோன் பாருரு நீங்கிக் கடல்எல்லாம்
ஊணா வையம் வானொடும் உண்டற் கெழுமாபோல்
ஏணார் நீத்தத் தோர்வடி வாகி யிறைமுன்னம்
நீணா கத்தின் காறும் நிமிர்ந்தே நின்றிட்டான். 398

பொருள் : வெய்யோன்காணா - சூரன்தன்மாயவுரு மாய்ந்ததுகண்டு, பாருரு நீங்கி - புவியானவடிவைவிட்டு, கடலெல்லாம் - கடலெல்லாம் ஒன்றுசேர்ந்து, வையம்வானொடும் ஊணாஉண்டற் கெழுமாபோல் - வையகத்தை வானுலகோடும் ஒருங்கு ஊணாக உண்ணஎண்ணிக்கிளர்ந்தெழுவதுபோல, ஏணார் நீத்தத் தோர்வடிவாகி இறைமுன்னம் செருக்குள்ள பிரளய வெள்ளம் போன்ற ஒருவடிவாகிப் கணப்பொழுதிலே, நீள்நாகத்தின் காறும் நிமிர்ந்தே நின்றிட்டான் - உயர்ந்த வான்முகடுவரை நிமிர்ந்தோங்கி நின்றான்.

பொழிப்பு : சூரன்தன்மாயம் சிதைந்தது கண்டு அவ்வுருவிட்டு, சமுத்திரங்கள் ஒன்று சேர்ந்து பூமியைவானோடும் ஒருங்கே ஊணாக விழுங்க எழுவதுபோல வானுறநிமிர்ந்த நீர்வடிவாகி நின்றான்.

குறிப்பு : இறைமுன்னம் - எம்பெருமான் திருமுன்புஎனலுமாம்.

நேரான் மாயத் தொல்லுரு வத்தின் நிலைநோக்கிக்
கூரார் வாளி நூறு தொடுத்தே கொடியோன்பாற்
சேரா வூழித் தீயியல் பாகிச் செறிவுற்றுப்
பேரா தட்டே வம்மென விட்டான் பெயர்வில்லான். 399

பொருள் : நேரான்மாயத் தொல்லுருவத்தின் நிலை நோக்கி - பகைவன் சூரன் கொண்ட பழைய மாய வடிவின் நிலையைப்பார்த்து, கூரார் வாளி நூறு தொடுத்தே - கூரியவாளிகள் நூற்றைத்தொடுத்து, கொடியோன்பாற்சேரா - கணைகளே நீவிர் கொடிய சூரிடம் சென்று, ஊழித்தீயியல்பாகிச் செறிவுற்றே - வடவைத்தீபோல வெம்மையொடு செறிந்து, பேராது அட்டே வம்எனவிட்டான் பெயர்வில்லான் - தப்பிச்செல்லாதவாறு அழித்துவிட்டு வருவீராக என்று ஏவினார்.

நிர்விகாரியான பிரானார் வம் வம்மின்; உண்மின், உண்ம், சென்மின்சென்ம் போல் என்பனபோல்.

பொழிப்பு : சூரனின் மாயவடிவை நோக்கி நிர்விகாரியாம் பிரானார் நூறுகணைகளைத் தொடுத்து நீவிர் சூர்வடிவைக்கிட்டி வடவைத்தீவடிவாகச் செறிந்து தப்பாது முற்றும் அழித்துவருக என விட்டார்.

அவ்வா றாக வாளிகள் நூறும் அருள்நீரால்
வெவ்வாய் அங்கிப் பேருரு வாகி விரவிப்போய்த்
தெவ்வாய் நின்றோன் நீத்தம தாகுஞ் செயல்நீங்க
வெவ்வா யுஞ்சென் றுண்டன அம்மா இறைதன்னில். 400

பொருள் : வாளிகள் நூறும் அவ்வாறாக அருள் நீரால் - ஏவிய நூறுவாளியும் அவ்வாறே பெருமான் அருள்வழியே, வெவ்வாய் அங்கிப் பேருருவாகிவிரவிப்போய் - வெப்பம்மிக்கமுகமுள்ள வடவைத்தீவடிவாகிச்செறிந்து சென்று, தெவ்வாய் நின்றோன் நீத்தமதாகும் செயல் நீங்க பகைவனாக நிற்கும் சூரன் எடுத்த பிரளயவெள்ளம் போன்ற நீர் வடிவும் மாயமும் நீங்குமாறு, இறைதன்னில் எவ்வாயும் சென்று அட்டன அம்மா - ஒரு கணத்தினில் எல்லாவழியாலும் சூழ்ந்து சென்று எரித்தழித்தன. அம்மா வியப்பு.

பொழிப்பு : நூறுகணைகளும் அவ்வாறு அருளாணை வழிபோய் வடவைத்தீவடிவமாகி சூரன் கொண்ட பிரளய வெள்ளவடிவை எல்லாவழியாலும் வளைத்து நொடியில் அழித்தன.

தண்டா தார்க்கும் நீத்த இயற்கை தனையெல்லாம்
உண்டா லித்தே வாளிகள் மீண்டே யுறுகாலைக்
கண்டான் மாயத் தன்மை படைத்தோன் கனல்மேனி
கொண்டான் அண்டங் காறும் நிமிர்ந்தே குலவுற்றான். 401

பொருள் : தண்டாது ஆர்க்கும் நீத்த இயற்கைதனை எல்லாம் உண்டு. ஆலித்து வாளிகள் - குறையாது ஆர்க்கும் நீர்மயமான

மாயவடிவம் முழுவதையும் குடித்து ஒழிவித்து களிப்புற்று அம்புகள், மீண்டே உறுகாலை, மாயத்தன்மை படைத்தான் கண்டான் - வெற்றியுடன் கணைகள் மீண்டு செல்வதை மாயம் மிக்க சூரன் கண்டான், கனல்மேனிகொண்டான் அண்டம்காறும் நிமிர்ந்தே குலவுற்றான் - கண்ட சூரன் ஊழித்தீவடிவெடுத்தான் அண்டமுகடுவரை நிமிர்ந்து நின்று குலாவினான்.

பொழிப்பு : ஆரவாரித்தெழுந்த நீர்வடிவையெல்லாம் உண்டொழித்து அந்தவாளிகள் வெற்றிக்களிப்புடன் மீள்வதைக்கண்டான் சூரன், பின் கனல்வடிவாகி அண்டமுகடுறநிமிர்ந்து குலாவினான்.

குலவுங் காலைக் கண்டு நகைத்தே கூற்றென்ன
நிலவுஞ் செங்கோல் ஆயிரம் வாங்கா நீடுழிசுலவுஞ்
சண்ச் சூறையின் ஏகிச் சூர்மாயம்
பலவுஞ் செற்றே வம்மென உய்த்தான் பரமானோன். 402

பொருள் : குலவும் காலைக்கண்டு நகைத்தே - சூர்தீயின் உருவாகிக் குலாவிநிற்றலைப்பார்த்துச் சிரித்து, கூற்றென்னக் குலவும் செங்கோல் ஆயிரம் வாங்கி - கூற்றுவனைப்போல நிலவுகின்ற சிறந்த ஆயிரம் கணைகளை எடுத்து, நீடுஊழி சுலவும் சண்டச் சூறையின் ஏகி - நீண்டகடை ஊழி நாளில் எங்கும் சுலாவிவரும் சண்டமாருதம்போல நீவிர் விரைந்துபோய், சூர்மாயம் பலவும் செற்றேவம் என உய்த்தான் பரமானோன் - சூரன் காட்டிநிற்கும் மாயச்செயல்களையெல்லாம் சிதைத்து வென்று வருவீரெனச் செலுத்தினார் பரமபதியாம்பெருமான் வம் வாரும் - வருவீர்.

பொழிப்பு : சூரன் தீப்பிழம்பாகக் கிளர்ந்தெழவே பெருமான் காலன் போலும் ஆயிரம் கனைகளைத்தொடுத்து நீர் ஊழிச்சண்டமாருத வடிவிற்போய்ச் சூர்மாயத்தை அழித்துவருக என விட்டார்.

உய்க்குங் காலத் தொய்யென ஏகி யுலகெங்குந்
திக்கும் வானுஞ் சூழு மருத்தின் திறனெய்தி
மைக்குந் தூமம் போல்பவன் மெய்த்தீ வடிவெல்லாம்
பொய்க்கும் வண்ணஞ் சாடின ஐயன் புகர்வாளி. 403

பொருள் : உய்க்கும் காலத் ஒய்யென ஏகி - தூண்டியபோது கணைகள் கடிதிற்சென்று, உலகெங்கும் திக்கும்வானும் சூழும்மருத்தின் திறன் எய்தி - உலகம் எங்கும் திக்குகளும் வானும் எனப் பரந்து சூழும்சண்டமாருதத்தின் திறலும் வேகமும் கொண்டு, மைக்கும் தூமம் போல்பவன் மெய்த்தீவடிவெல்லாம் - கரும்புகைபோல் மேனிச்சூரன் எடுத்த உருவாம் தீயின் பிழம்பையெல்லாம், பொய்க்கும் வண்ணம் ஐயன்புகர்வாளிசாடின பொய்யாய்ப் போகுமாறு பெருமான் ஏவிய புகர்வாளிகள் சாடிஅழித்தன.

பொழிப்பு : உய்த்த கணைகள் விரைந்து சென்று உலகமெங்கும் பரந்து சூழ்ந்து அழிக்கும் கடைநாளிற் சண்டமாருதத்தின் திறனுள்ளவையாய்ச் சென்று சூரனின் மாயத் தீயுருவம் முழுதும் பொய்யாகும் வண்ணம் சாடி அழித்தன.

வேறு

வண்டு லாவரு வாகையந் தாரினான்
கொண்டெ ழுந்த கொழுந்தழல் யாக்கையை
உண்டு வாளிகள் ஒய்யென மீண்டொராய்
அண்டர் நாயகன் பாங்கர் அணைந்தவே. **404**

பொருள் : வண்டு உலாவரு வாகையந்தாரினான் - வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் அழகிய வாகைமாலை அணிந்த சூரன், கொண்டெழுந்த கொழுந்தழல்யாக்கையை - உருமாற்றிக் கொண்டு கிளர்ந்தெழுந்த சுவாலிக்கும் தீயின் வடிவத்தை, உண்டுவாளிகள் ஒள்யென மீண்டு ஓராய் - உண்டு ஒழித்து ஆயிரம் சரங்களும் விரைந்து மீண்டேகி, அண்டர் நாயகன் பாங்கர் அணைந்தவே - தேவசேனாபதியாம் குமரப்பிரான் பாங்கரிலே சேர்ந்தன.

பொழிப்பு : வாகைமாலை சூடிய சூரன்கொண்ட பெருந்தீச்சுவாலை வடிவை வாளிகள் உண்டு ஒழித்துப் பின்குமரப் பெருமானிடம் மீண்டு வந்துற்றன.

ஆங்க வெல்லையில் அவ்வடி வத்தினை
நீங்கு மாற்றலன் நீள்சின மேற்கொளா
ஓங்கு மோதை உருவுகொண் டார்த்தலும்
ஞாங்கர் எந்தை நகையொடு நோக்கினான். **405**

பொருள் : அங்கு அவ்வெல்லையில் - அங்கு அச்சமயம், அவ்வுருவத்தினை நீங்கும் மாற்றலன் - அந்தத்தீயின் வடிவொழிந்த பகைவன் சூரன், நீள்சினம் மேற்கொளா - பெருஞ்சினம் மிகப்பெற்று, ஓங்கும் ஓதை உருவுகொண்டு ஆர்த்தலும் - வீறுடன் எழும் காற்றின் உருவங்கொண்டு ஆர்த்தலும், ஞாங்கர் எந்தை நகையொடு நோக்கினான் - வேல்தரித்த எம்பெருமான் புன்முறுவலோடு அச்செயலைக் கண்டருளினார்.

பொழிப்பு : அப்போது தீயின் வடிவிழந்த சூரன், சினம் மிகப்பெற்று ஊழியில்எழுந்து ஓங்கும் சண்டமாருதமாய் நின்று ஆர்க்கவே பெருமான் நகையோடு அதைப்பார்த்தார்.

ஆய்ந்து வாளியொ ராயிர நூற்றினை
வாய்ந்த கைக்கொடு மாற்றலன் வன்மையைப்
பாந்த ளாகிப் படுத்து வம்மோவெனா
ஏந்தல் கூறி இமைப்பினில் தூண்டினான். **406**

பொருள் : ஆய்ந்துவாளி ஓராயிரநூற்றினை வாய்ந்த கைக்கொடு - ஆராய்ந்து சீரிய இலட்சம் அம்புகளைக் கையிலெடுத்து, பாந்தளாகி மாற்றலன் வன்மையைப் படுத்துவம்மோஎனா - நீவிர் பாம்புவடிவாகிச் சென்று சூரன் மாயவல்லமையை அழித்து வருவீர் என, ஏந்தல் கூறி இமைப்பினில் தூண்டினன் - எம்பிரான் பணித்து அக்கணைகளைக் கணப்பொழுதினிலே ஏவினார்.

பொழிப்பு : எம்பிரான் சிறந்த இலக்கம் அம்புகளை எடுத்துத் தொடுத்து நீவிர் பாம்பாகிய வடிவுகள்கொண்டுபோய்ச் சூரனது மாயவடிவை அழித்து வருவீராக எனப்பணித்து ஏவினார்.

அவ்வயிற்கணை அந்தரத் திற்செலாச்
செவ்வி திற்கிளர் செந்தழல் போல்எழீஇப்
பைவி ரித்த ப∴றலைப் பன்னக
வெவ்வு ருக்கொடு சூர்மிசை மேயதே. **407**

பொருள் : அவ்வயிற்கணை அந்தரத்திற்செலா - அக்கூரிய அம்புகள் வான்வழிச்சென்று, செவ்விதில்கிளர் செந்தழல் போல்எழீஇ - நன்கு சுவாலித்தெழும் தீக்கொழுந்து போலெழுந்து, பைவிரித்த பா∴றலைப் பன்னக வெவ்வுருக்கொடு - படம்விரித்த பலதலைப்பாம்புகளின் கொடிய வடிவாகஎழுந்து, சூர்மிசைச் சென்றதே - சூரன்மேற் சென்றது.

பொழிப்பு : அவ்வம்புகள் வான்வழியே படம்விரித்த பலதலையுள்ள பாம்புகள்போலும் வடிவங்கொண்டு சூரன்மேற் சீறிச்சென்றன.

கூற்றம் அன்ன கொடுந்தொழில் மன்னவன்
காற்றின் யாக்கை கரப்ப மிசைந்திடா
ஆற்றல் மேவி அணைந்துடன் மீண்டன
வேற்ற டக்கை விமலன் புடைதனில். **408**

பொருள் : கூற்றமன்ன கொடுந்தொழில் மன்னவன் காற்றின் யாக்கைகரப்ப - கூற்றுவன் போன்ற கொடுந்தொழில் மன்னனாம் சூரனது காற்றாகிய வடிவம் மறைந்தொழிய, மிசைந்திடா - முற்றவிழுங்கி, ஆற்றல் மேவி அணைந்துடன் மீண்டன - ஆற்றலும் வெற்றியும் கொண்டு சேர்ந்து மீண்டு சென்றன, வேல் தடக்கை விமலன் புடைத்தனில் - வேல்தாங்கிய கரமுடைய அமலராம் பெருமானிடமே மீண்டுற்றன.

பொழிப்பு : காலனே அன்ன கடுந்தொழிற் சூரனின் மாயக் காற்றுவடிவைக் கரந்துபோக விழுங்கி ஆற்றல் மிக்கனவாகி அவ்வாளிகள் வேற்கரத்தெம்மானிடம் மீண்டுவந்துற்றன.

இன்ன தன்மையில் ஈரிரு நாள்வரைத்
துன்ன லன்தொலை யாதமர் ஆற்றியே
பின்னும் மாயையின் பெற்றியைப் புந்தியுள்
உன்னி யேபல் லுருக்கொடு தோன்றினான். 409

பொருள் : இன்னதன்மையில் ஈரிரு நாள்வரைத் துன்னலன் - இத்தன்மையதென வொண்ணாதவகைகளால் நான்கு நாள்வரை துன்னலனாகிய சூரன், தொலையாது அமர் ஆற்றியே - தோலாதும் அழியாதும் நின்று போர்புரிந்து, பின்னும் மாயையின் பெற்றியை புந்தியுள் உன்னி - பின்பும் மாயச் செயல் புரியவே மனத்தெண்ணியவனாய், பல்உருக்கொடு தோன்றினான் - பலவேறுமாயா வடிவங்கள் தாங்கி வருவானாயினான்.

பொழிப்பு : இவ்வகையால் சூரன் நான்கு நாள்வரை தொலைவில்லாமலே பொருது நின்று, பின்னும் மாயத்தன்மையே எண்ணிப் பல்வேறு வடிவங்கள் கொண்டு பொர முயன்றான்.

வேறு
ஓவாஇயல் புரிமூவரில் ஒருசார்வரு மொழியுந்
தேவாசுரர் பிறராமென ஒருசார்வரும் சேணாள்
கோவாமென ஒருசார்வரும் ஒருசார்வருங் குறள்போல்
ஆவாவெனக் கொடுங்கூற்றென ஒருசார்வரும் அன்றே. 410

பொருள் : ஓவா இயல்புரி மூவரின் ஒருசார்வரும் - ஒழியாமலே உலகியல் நிகழுமாறு முத்தொழில் நடத்தும் மும்மூர்த்திகள் வடிவிலே ஒருபுறத்தில் வருவான், ஒழியும் தேவ அசுரர் பிறராமென ஒருசார்வரும் - மற்றுமுள்ள தேவர் அசுரர் முதலாக எண்ணும் பிறர்போலவும் மற்றொரு புறம்வருவான், சேண்ஆள் கோவாம் என ஒருசார்வரும் - சுவர்க்கத்தை ஆளும் இந்திரன்போல ஒருபுறம் வருவான், குறள்போல் ஒருசார்வரும் - பூதகணங்கள்போல ஒரு புறம் வருவான், ஆ ஆ எனக் கொடுங்கூற்றென ஒருசார்வரும் - கண்டோர் ஆ ஆ என்று அஞ்சி அலமரக் கொடிய கூற்றுவன் போல ஒருபுறத்தில் வருவான்.

பொழிப்பு : மும்மூர்த்திகளாகவும், தேவர் அசுரர்களாகவும், இந்திரனாகவும், பூதகணங்களாகவும், கண்டோர் அஞ்சும் காலன் வடிவாகவும் இங்ஙனம் தனித்தனி பல்வேறு வடிவுகளில் ஆங்காங்குப் பரந்துவந்தான்; ஒருவனே பலராக மாயமாக வந்தான்.

குறிப்பு : ஓவா - ஒழியாது. மூவர் அயன் அரி அரன் என்பர். சேண் - சுவர்க்கம். கோ - அரசு - இந்திரன். ஒருசார்வரும் ஒருபால் எனும் சொற்றொடர்கள் 410-415 வரையுள்ள பாக்களில் மீள மீள அதே பொருளில் வருகிறது. இது சொற்பொருட் பின்வருநிலையென்னும் அணி. உலகம் என்று காணவுள்ள எவையும் மாயையின் பரிணாம பேதப்படிவங்களே எனப்படியெடுத்துக் காட்டுஞ் செயல் போல மாயா சூனுவான சூரன் செயலிலே காட்டுவித் தருளுகிறார் பிரான்.

பேயாமென ஒருபால்வரும் பிறழ்வெம்புகைப் படலைத்
தீயாமென ஒருபால்வரும் திசைஎங்கணும் சுழலும்
ஓயாமருத் தினமாமென ஒருபால்வரும் அகிலம்
பாயாவெழு திரையாழியில் ஒருபால்வரும் பரவி. 411

பொருள் : பேயாமென ஒருபால்வரும் - பேயாகவும் ஒருபால் வருவான், பிறழ்வெம்புகைப் படலைத்தீயாமென ஒருபால்வரும் - பிறங்கும் வெவ்விய புகைப்படலம் கவிந்த தீக்கொழுந்துகளாக ஒருபால் வருவான், திசை எங்கணும் சுழலும் ஓயாமருத்து இனமாமென ஒருபால் வரும் - எத்திசையிலும் சுழன்று ஓயாது வீசும் காற்றினமாக ஒருபால் வருவான், அகிலம்பாயாஎழு திரை ஆழியில் ஒருபால்வரும் பரவி - பூமிமேல் பாய்ந்தெழுந்து திரைவீசும் ஆழமான பிரளயசமுத்திரமாய் ஒருபால் பரவிவருவான்.

பொழிப்பு : பேய்க்கணமாயும், தீப்பிழம்பு வடிவாயும், ஊழிக்காற்றாயும், தரைமீது திரை வீசிப்பாய்ந்துவரும் பிரளய வெள்ளமாயும் வருவான். பரவி என்பதைத் தீபகமாகக் கூட்டுக.

ஒருசார்விட மெனவந்திடும் ஒருசார்வரும் பணிபோல்
ஒருசார்முகி லெனவந்திடும் ஒருசார்வரு மிருள்போல்
ஒருசாருரு மெனவந்திடும் ஒருசார்வரும் வரைபோல்
ஒருசார்தன துருவாய்வரும் ஒருசார்வருங் கதிர்போல். **412**

பொருள் : ஒருசார்விடமெனவந்திடும் - ஒருபுறம் ஆலகாலவிடமெனவருவான், ஒருசார்வரும் பணிபோல் - ஒருபுறம் விடப்பாம்புகளாக வருவான், ஒருசார் முகிலென வந்திடும் - ஒருபுறம் கடைநாள் முகில்போல வருவான், ஒருசார்வரும் இருள்போல் - ஒருபுறம் செறிந்த இருளுருவாய்வருவான், ஒருசார் உருமென வந்திடும் - ஒருபுறம் இடியேற்றுக்குழாம் போல்வருவான், ஒருசார்வரைபோல் வரும் - ஒருபுறம் மலைபோல வருவான், ஒருசார் தனது உருவாய்வரும் - ஒருபுறம் சூரபதுமனாம் தனது வடிவாய் வருவான், ஒருசார்வரும் கதிர்போல் - மற்றும் ஒருபுறத்தே சூரியன் போல வருவான்.

பொழிப்பு : ஒவ்வொரு புறத்தில் ஆலகாலமாயும், பாம்புகளாயும், முகிலாயும், இருளாயும், இடிக்குழாமாயும், மலையாயும், சூரனாம் வடிவாயும், சூரியனாயும் வெவ்வேறுருவுகளில் வருவான்.

தொக்கார்பல படையாமென ஒருசார்வருஞ் சூழுந்
திக்கார்களிற் றினமாமென ஒருசார்வருஞ் சினத்தால்
நக்கார்தரும் அரியேறென ஒருசார்வரும் நலிவான்
அக்கால்வரு தனிப்புள்ளென ஒருசார்வரும் அன்றே. **413**

பொருள் : தொக்கு ஆர்பலபடையாமென ஒரு சார்வரும் - ஒன்று சேர்ந்து ஆர்ப்பரிக்கும் பல சேனைக்கடல் போல ஒருபால் வருவான், சூழும் திக்கார்களிற்றுஇனமாமென ஒருசார்வரும் - சூழவுள்ள எட்டுத்திசையிலுமுள்ள யானைகள் போல ஒருபால் வருவான், சினத்தால் நக் கார்தரும் அரியேறென ஒருசார்வரும் - சினத்தாலே அட்டகாசம் செய்தெழுந்த அரியாகிய நரசிங்கம் போல ஒருபால் வருவான், நலிவான் அக்கால் வருதனிப்புள்ளென ஒருசார் வருமன்றே - தேவர்பூதர்களை வருத்துமாறு முன்னே தோன்றிவந்த ஒப்பற்ற சக்கரவாகப் புள்ளின் உருவிலும் ஒருபால்வருவான்.

பொழிப்பு : சேர்ந்த நால்வகைச் சேனைகளாயும், திக்குகளிலுள்ள எட்டு யானைகளாயும், நரசிங்கமாயும், சக்கரவாகப்பறவையுருவாயும் ஒவ்வொரு புறமாக வந்தான்.

கரியின்முகத் துணைவன்னென ஒருசார்வருங் கடுங்கண்
அரியின்முகத் திளையோனென ஒருசார்வரும் அளக்கர்ப்
பரியின்முகத் தினில்வந்திடு பாழிக்கனல் படுக்கும்
எரியின்முகத் தனிமைந்தனில் ஒருசாரிடை யேகும். 414

பொருள் : கரியின் முகத்துணைவன் என ஒருசார்வரும் - கரிமுகத்தம்பி தாரகனென ஒருதிசையில் வருவான், கடுங்கண் அரியின் முகத்துஇளையோன் என ஒருசார்வரும் - தறுகண்ணனான சிங்கமுகத்தம்பி சிங்கனென ஒருதிசையில் வருவான், அளக்கர்ப் பரியின் முகத்தினில் வந்திடும் பாழிக்கனல்படுக்கும் - கடலிலே கடைநாளில் குதிரையில்வாயிலே தோன்றும் பெரிய ஊழித்தீயையும் செறுக்கும், எரியின்முகத்தனிமைந்தனில் ஒருசாரிடை ஏகும் - ஆற்றலுள்ள அக்கினிமுகனென்னும் சிறந்த மகன்போல ஒருதிசையிலே வருவான்.

பொழிப்பு : தாரகாசுரன் சிங்கமுகாசுரன் எனும்தம்பியர் போலவும் ஊழிநாள் வடவா முகாக்கினியைச் செறுக்கும் அக்கினி முகன் போலவும் ஒவ்வொரு திசைகளில் வருவான்.

எல்லோன்றனை வெகுண்டோனென ஒருசார்வரும் ஏனைச்
சொல்லோங்கிய திறன்மைந்தரில் ஒருசார்வருஞ் சூழ்ச்சி
வல்லோனென ஒருசார்வரு மானப்படை மள்ளர்
பல்லோர்களுஞ் செறிதாலென ஒருசாரிடைப் படரும். 415

பொருள் : எல்லோன்தனை வெகுண்டோனென ஒருசார்வரும் - பானுகோபனைப் போல ஒருபுறம்வருவான், ஏனைச் சொல்லோங்கிய திறல் மைந்தரில் ஒருசார்வரும் - மற்றைய புகழ் மிக்க வலிசான்ற மைந்தர்கள் போல ஒருபுறம் வருவான், சூழ்ச்சி வல்லோன் என ஒருசார்வரும் - சூழ்ச்சித் திறன் மிக்க மந்திரியாம் தருமகோபன்

போல ஒருபுறம் வருவான், மானப்படை மள்ளர் பல்லோர்களும் - மானமுள்ள படைவீரர் பலரும் திரண்டு, செறிந்தாலென ஒருசாரிடைப்படரும் - செறிந்து வருவது போல ஒருபுறத்திலே வருவான்.

பொழிப்பு : பானுகோபன் போலவும், மற்றையமக்கள் போலவும், மதிமந்திரி தரும்கோபன் போலவும், படைவீரர்பலர் போலவும் ஒவ்வொருபுறத்தில் வந்தான்.

இத்தன்மையில் அவுணர்க்கிறை யாண்டுஞ்செறி வாகி
அத்தன்தனைப் புடைசூழ்தலும் அவைநோக்கிய இமையோர்
சித்தந்தளர்ந் திரிகுற்றனர் திரிகுற்றனர் அம்மா
கத்துங்கடற் புவிமாய்ந்திடு காலத்துயிர் எனவே. 416

பொருள் : இத்தன்மையில் அவுணர்க்கிறை யாண்டும் செறிவாகி - மேற்கூறியவண்ணம் அவுணத்தலைவன் சூரன் எவ்விடமும் தனதுமாய வடிவங்களாலே செறிவுற்றவனாகி, அத்தன்தனைப்புடைசூழ்தலும் - எமது பரமதந்தையாம் பெருமானை எப்புறமும் செறிந்து சூழ்தலும், அவை நோக்கிய இமையோர் - அந்தமாயக் கோலங்களைக் கண்ட தேவர்கள், கத்தும் கடற்புவிமாய்ந்திடும் காலத்து உயிரெனவே - ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த பூமி அழியும் கற்பகாலத்தில் உய்வழிகாணாது வருந்தும் சீவகோடிகள் போலவே, சித்தம் தளர்ந்து இரிகுற்றனர் திரிகுற்றனர் அம்மா - சிந்தை தளர்ந்து பின் வாங்கியவராய் திசையறியாது திகைத்துத் திரிந்தனர்.

பொழிப்பு : இவ்வாறு சூரன் மாயவடிவினால் எங்கும் செறிந்து எம்பிரானைப் புடைசூழக்கண்டதேவர் உலகழியும் ஊழிநாளிலே சீவகோடிகள் உய்வழிகாணாது அலமருதல் போல அல்லோலகல்லோலப்பட்டனர்.

வேறு

அங்கதன் நிலைமைநோக்கி ஆயிர கோடி வாளி
செங்கையில் வாங்கி வாங்குந் திருநெடுஞ் சிலையிற் பூட்டி
இங்குள அமரர் தங்கள் இருஞ்சிறை அகற்ற வந்து
பங்கயற் சிறைசெய் திட்ட பகவன்மற் றிதனைச் சொல்வான். 417

பொருள் : அங்கதன் நிலைமை நோக்கி - அங்கு அந்தமாயாவடிவங்களின் நிலையைத் திருவுளங்கொண்டு, ஆயிரகோடிவாளி செங்கையில் வாங்கி - ஆயிரகோடி பாணங்களைத் திருக்கரத்தில் எடுத்து, வாங்கும் திருநெடும்சிலையில் பூட்டி - வளைத்த திருத்தக்க நீண்ட வில்லில் தொடுத்து, பகவன் மற்றிதனைச் சொன்னான் - செவ்வேட்பெருமான் பின்வருமாறு பணிக்கின்றார், இங்குள அமரர்தங்கள் இருஞ்சிறை அகற்றவந்து பங்கயற்சிறை செய்திட்ட(பகவன்) - இங்கு சூரனிட்டசிறையிலுள்ள தேவர் சிறை நீக்கத்திருவவதாரம் செய்து மலராசனனாம் பிரமனைச் சிறையிட்டுச்சிட்டி செய்த குமரவேள் பணித்தருளுவார் எனமுற்கூட்டுக.

பொழிப்பு : தேவர் சிறை நீக்கவந்து பிரமனைச்சிறையிட்ட பெருமான், சூரன் மாயங்கண்டு, அதைமாற்ற ஆயிரகோடி அம்பை எடுத்து வில்லிற்பூட்டி அவற்றுக்குக் கட்டளை இடுகிறார்.

குறிப்பு : வாங்கி வாங்கும், சிறை அகற்றவந்து சிறை செய்திட்ட எனவும் வருவன பிராசம், பின்னது பிராசத்தோடு முரண்தொடையுமாம். பகவன் - சாட்குண்ணியன். சர்வவல்லமை காட்டியது.

தெவ்வடு பகழி யென்னும் தேவிர்காள் நீவி ரேகி
மெய்வலி படைத்து நின்ற மேவலன் ஒருவன் கொண்ட
இவ்வுரு வனைத்து மெய்தி ஆங்கவன் மாய முற்றும்
இவ்விடை அட்டு நீக்கி ஏகுதி ரென்று விட்டான். 418

பொருள் : தெவ் அடு பகழியென்னும் தேவிர்காள் நீவிர் ஏகி - பகையை அழிக்கவல்ல வாளிகளாகிய தேவர்களே நீவிர்சென்று, மெய்வலி படைத்து நின்ற மேவலன் ஒருவன் கொண்ட - தேகவலியே கொண்டுமாயம் காட்டும் பகைவனாம் சூரபன்மன் எடுத்த, அவ்வுரு அனைத்தும் எய்தி - அந்தமாய உருவங்கள் அனைத்திலும் சென்றுதாக்கி, ஆங்கவன் மாயம் முற்றும் அட்டு நீக்கி - அவனுடைய மாயங்களை முற்றும் அழித்துப்போக்கி, இவ்விடை ஏகுதிர் என்று விட்டான் - இங்கு நம்பால் வருகுதிர் என்று பணித்துத் தூண்டினார்.

பொழிப்பு : பகையை அழிக்கும் பாணங்களே நீவிர்சென்று, தேகவலிகொண்ட சூரன்எடுத்த மாயவடிவம் அனைத்திலும் சென்று தாக்கிமாயத்தை அழித்து இங்கு மீண்டுவருவீராக எனவிடுத்தார்

குறிப்பு : சூக்குமமான மெய்யுணர்வுவலியின்றித் தூலமான உடல்வலியே சூரனிடமிருந்ததால் மெய்வலிபடைத்த எனக்குறிப்பிட்டது. அவ்வுரு அனைத்தும் எய்தி என்பதால் மாயவடிவுகள் ஒவ்வொன்றையும் அழிப்பதற்கேற்ற வெவ்வேறு வடிவுகொண்டு செல்ல ஏவினான்.

விட்டிடுசிலீமு கங்கள் வீரைந்துபோய் வெகுளி வீங்கி
ஒட்டலன் கொண்ட ஒவ்வொன் றுருவினுக் கெழுமை யாகி
எட்டுள புலமும் வானும் இருநில வரைப்பும் ஈண்டி
அட்டடல் பெற்ற அம்மா அனையவன் மாயந் தன்னை. 419

பொருள் : விட்டிடு சிலீமுகங்கள் வெகுளிவீங்கி விரைந்து போய் - ஏவப்பட்ட சரங்கள் சினம் மிக்கு விரைந்தெய்தி, ஓட்டலன் கொண்ட ஒவ்வொன்றுருவினுக்கு எழுமையாகி - சூரன் எடுத்த வடிவம் ஒவ்வொன்றினுக்கும் எழுமடங்காக விருத்தி பெற்று, எட்டுளபுலமும் வானும் இருநிலவரைப்பும் ஏகி - எட்டுத்திசை வானம் நிலப்பரப்பு எங்கும் நெருங்கிச் சென்று, அனையவன் மாயம் தன்னை அட்டு அடல்பெற்ற அம்மா - சூரன்மாயம் முற்றும் அழித்து வெற்றிபெற்றன.

பொழிப்பு : ஏவின சரங்கள் மிக வெகுண்டு விரைந்து போய் சூரன்எடுத்த மாயவடிவங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் எழுமடங்காக

மாற்றுருவங்கள் தாங்கி, திக்கும் வானமும் பூமியும் எங்கும் நெருங்கி மாயம் முற்றும் அழித்துச்சயம் பெற்றன.

உடல்சின மோடு சூரன் ஒருவனாய் அங்கண் நின்றான்
அடல்வலி கொண்ட வாளி அந்தர நெறியான் மீண்டு
புடையுறு சரங்களோடு பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடுந் தனிவே லண்ணல் அவன்முகம் நோக்கிச் சொல்வான். 420

பொருள் : உடல் சினமோடு சூரன் ஒருவனாய் அங்கண்நின்றான் - அந்த நிலையிலே சூரன் முரணாக எழும் சீற்றத்தோடுதனி ஒருவனாக அங்கு செயலற்று நின்றான், அடல்வலி கொண்ட வாளி அந்தர நெறியால் மீண்டு - சூரனது திறலையும் வலியையும் கவர்ந்து கொண்டவாளிகள் வான்வழியாக மீண்டு சென்று, புடையுறுசரகளோடும் பொள்ளெனத்தூணி புக்க - எஞ்சி அங்கிருந்த சரங்களுடன் அம்பறாத்தூணியுள் விரைந்து புகுந்து தங்கின, சுடர் நெடுந்தனிவேலண்ணல் அவன்முகம் நோக்கிச் சொல்வான் - ஞானப்பிரகாசமுள்ள நீண்ட ஒப்பற்றவேல் ஏந்திய பெருமான் சூரனை நோக்கிச் சொல்லியருளுகின்றார்.

பொழிப்பு : தனது மாயமெல்லாம் மாய்ந்தமையாற்சூரன், பகைமேல் மாறுபட்டெழும் சீற்றத்தோடு தனியனாக நின்றான், பணியை முற்றிய பாணங்கள் மீண்டு வான்வழி ஏகித்தூணியினிடமாக இருந்த பாணங்களுடன் புகுந்து தங்கியிருந்தன.

குறிப்பு : ஞானச் சுடர் வேற்பெருமான் சூரபன்மனுக்கு தீட்சாக்கிரமத்தால் விசுவ ரூபம் காட்டியருளி வாசகதீட்சை செய்து திருவடியில் கூட்டியருள் செயல் மேல்வருவது.

வெம்புய லிடையில் தோன்றி விளிந்திடு மின்னுவென்ன
இம்பரில் எமது முன்னம் எல்லையில் உருவங் கொண்டாய்
அம்பினில் அவற்றை யெல்லாம் அட்டனம் அழிவி லாத
நம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்றான். 421

பொருள் : வெம்புய விடையில் தோற்றி விளிந்திடும் மின்னு என்ன - வேண்டப்படும் முகில்களினிடையே தோன்றிமறுகணமே நிலையின்றி மறையும் மின்னலைப் போலவே, இம்பரில் எமது முன்னம் எல்லையில் உருவம் கொண்டாய் - சூரனே இங்கு எம்முன்னே எண்ணில்லா மாயவடிவங்கள் எடுத்துக்காட்டினை, அம்பினில் அவற்றை எல்லாம் அழித்தனம் - சாதாரண அம்புகளை ஏவியே அவற்றையெல்லாம் அழித்து விட்டோம், அழிவில்லாத நம்பெருவடிவம் கொள்வம் நன்று கண்டிடுதி என்றான் - ஆனால் என்றும் அழிவற்று நித்தியமாயிருக்கும் நம்திருப்பெருவடிவத்தைக் காட்டுவோம். அதனை நன்றாகக் கண்டு தெளிக எனக்கூறியருளினார்.

பொழிப்பு : முகில்களிடையே தோன்றி உடனே மறைந்துவிடும் மின்னல்போல இங்கு எம்முன்னே பலமாயவடிவங்களைக் காட்டினாய் அவற்றையெல்லாம் நாம் சாதாரண அம்புகளால் அழித்தோம், ஆனால் அழிவற்றதாய் என்றுமுள்ள நமது திருப்பெருவடிவத்தைக் காட்டுகின்றோம் நன்கு பார்த்து உண்மையைத் தெளிவாயாக. நன்று கண்டிடுதி எனஇருமுடிபுகளாகக் கொண்டு இக்காட்சி உனக்கு நன்மை தரும்; காண்பாய்; எனவும் கொள்ளலாம்.

கூறிமற் றினைய தன்மை குரைகடல் உலகந் திக்கு
மாறிலாப் புவனம் அண்டம் வானவர் உயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளல் மேனியில் அமைந்த தன்றி
வேறிலை என்ன ஆங்கோர் வியன்பெரு வடிவங் கொண்டான். 422

பொருள் : இனையதன்மைகூறி - இங்ஙனம்கூறியருளி, மற்று - இதன் மேல், குரைகடல் - ஒலிக்கின்ற கடலும், உலகம் - உலகமும், திக்கு - திசைகளும், மாறிலாப்புவனம் - மாறின்றியமைந்த புவனங்களும், அண்டம் - இவை உள்ளடங்கிய அண்டகூடமும், வானவர் உயிர்கள் யாவும் - தேவர் முதலாக எண்ணும் உயிர்வர்க்கங்களும் ஆகிய அனைத்தும், ஆறுமாமுகத்துவள்ளல் மேனியில் அமைந்தது அன்றி வேறில்லை என்ன - ஆறுதிருமுகமுள்ள அருள் வள்ளலாம் பெருமானின் திருவுருவிலே அமைந்துளதே அன்றி, வேறிலை என்ன ஆங்கோர்

வியன்பெருவடிவம் கொண்டான் - அதற்கு வேறாக எதுவுமே இல்லையெனும்படி ஒரு வியத்தகு திருப்பெரு வடிவத்தை எடுத்தார்.

பொழிப்பு : குமரப்பெருமான் இங்ஙனம் கூறியருளி, அதன்பின் அண்ட புவனங்களும் சராசர உயிர்களுமாகியயாவும் தமது திருமேனியில் அமைந்ததே யல்லாமல், அதில் வேறாக யாதொன்றுமில்லை எனும்படி பெருவடிவம் கொண்டார். இவ்வடிவை விசுவரூபம் பாரமேஸ்வர வடிவம், திருப்பெருவடிவம் எனக்கூறுவதுண்டு.

உள்ளடி வரைகள் யாவும் ஒண்புற வடியின் நீத்தம்
வள்ளுகிர் விரல்கள் முற்றும் வான்உரு மேறுநாள்கோள்
எள்ளரும் பரடு தன்னில் இரும்புனற் கிறைவன் சோமன்
நள்ளிருள் அனைய மேனி நிருதியோ டரக்கர் நண்ண. 423

பொருள் : உள்ளடிவரைகள் யாவும் - உள்ளந்தாளில் மலைகள் எல்லாம் அமைந்தன,ஒண்புற அடியில் நீத்தம் - காந்தியுள்ள புறந்தாளிலே சமுத்திரம்யாவும் அமைந்தன; வள் உகிர்விரல்கள் முற்றும் வான் உருமேறு நாள் கோள் - கூரிய நகமுள்ளகால் விரல்களிடமாக வானத்து இடியேறும் நட்சத்திரங்களும் கிரகங்களும் அமைந்தன; எள்ளரும் பரடுதன்னில் இரும்புனற்கிறைவன் சோமன் - இகழப்படாத பரட்டுக்காலில் நீருக்கதிபனாம் பூத சூரியனும் சந்திரனும், நள்இருள் அனையமேனி நிருதயோடு அரக்கர் நண்ண - நள்ளிரவு இருள்போலக் கரியமேனியுடைய நிருதியும் அரக்கரினமும் அமைந்திருக்க.

பொழிப்பு : உள்ளந்தாளில் மலைகள் யாவும், புறந்தாளில் நீர்நிலை யாம் சமுத்திரம் யாவும், திருவடிவிரல்களில் வானில் இடியேறும் நாளும் கோளுமாம் யாவும், காற்பரட்டுறுப்பில் சூரியசந்திரர் நிருதி அரக்கர் இனம் யாவும் பொருந்த.

குறிப்பு : வரையாவும் எனவே பூமியிலிருந்து பாதலமும் அடங்கும் "பாதமலர் பாதாளம் ஏழினும் கீழ்" காண்க. நீத்தம் சமுத்திரமுட்பட நீர்நிலையாவும், புனற்கிறைவன், கடல் நீர்வற்றி மழையாக

வருவிக்கும் சூரியன். இந்தச்சூரிய சந்திரர் பூதகாரியமானவர். இப்பாடல் முதலாகத் தொடர்வன விசுவரூபத்தில் அகிலமும் அமைந்தவாற்றைக் கூறுவன.

அடிதிரள் கணைக்கால் தன்னில் ஆரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை வானவ ராதியானோர்
தொடைதனின் மகவான் மைந்தன் தொடைமுதல் நடுவன் காலன்
கடிதடத் தசுரர் பக்கங் கடவுளர் யாரும் நிற்ப. **424**

பொருள் : அடிதிரள் கணைக்கால் தன்னில் ஆரிடர் மணிகள் - மேலுறத்திரண்டு செல்லும் கணைக்காலில் முனிவர்கள் மணிவகைகளும், சானுவடிவு அமைமுழந்தாள் விஞ்சை வானவர் ஆதியானோர் - சானு எனும் பெயருள்ள அழகிய முழந்தாளினிடத்தே விஞ்சையர் முதலாகிய தேவர்களும், தொடைதனில் பகவான் மைந்தன் - திருத்தொடைகளின் மத்தியில் இந்திரனும் மகன் சயந்தனும், தொடை முதல் நடுவன் காலன் - தொடையின் ஆரம்பத்தில் இயமனும் துணைவனாம் காலனும், கடிதடத்து அசுரர் - கடிதடமாம் அரையிலே அசுரரும், பக்கம் கடவுளர்யாரும் நிற்ப - வயிற்றின் அடிப்பாகத்திருபுறமும் தேவர்கள் யாவரும் பொருந்தியிருக்கவும்.

பொழிப்பு : கணைக்காலில் முனிவர்களும் நவமணிகளும் பொருந்த, முழந்தாளில் வித்தியாதரர் முதலிய வானவர்பொருந்த, இருதொடைகளிலும் இந்திரனும் சயந்தனும் பொருந்த, தொடை மூலத்தில் இயமனும் காலனும் பொருந்த, அரையில் அசுரர்பொருந்த, இருபக்க விலாவின் கீழே தேவர்கள் யாவரும் பொருந்தி இருக்க.

குறிப்பு : நவமணிகளின் மேலும் சிந்தாமணி கௌவுத்துவமணி சூளாமணி சியமந்தகமணி என்பன சிறப்பானவை. தலையன்புக்குரியவரை இருத்திவைக்கும் இடம் தொடையாம் அங்கே இந்திரன் சயந்தன் இருவரையும் காணுமாறு சூரனுக்குக் காட்சிதந்தார்.

இருப்பினில் நாகர் கோச எல்லையில் மருந்தே யுந்திக்
கருப்படும் உயிர்கள் மார்பிற் கலைகள்முந் நூலிற் போதம்
அருப்பயில் உரோமத் தண்டம் அங்கையில் அகில போகந்
திருப்பெருந் தடந்தோள் வைப்பிற் செங்கண்மால் விரிஞ்சன் மேவ. 425

பொருள் : இருப்பினில் நாகர் - மூலத்தில் சர்ப்பர்களும், கோச எல்லையில் மருந்தே - குறியினிடத்தில் அமிர்தமும், உந்திக் கருப்படும் உயிர்கள் - உந்தியின் கண்கருவழியே செல்லும் சீவர்களும், மார்பிற்கலைகள் - மார்பிலே சகலகலைகளும், முந்நூலிற் போதம் - முப்புரிநூலிலே ஞானமும், அருப்பயில் உரோமத்து அண்டம் - அரும்பிவரும் உரோமங்களிலே அண்டங்களும், அங்கையில் அகிலபோகம் - உள்ளங்கையின் கண்ஊட்டும் சுகதுக்க அநுபவமாகிய அனைத்துப் போகங்களும், திருப்பெருந் தடந்தோள் வைப்பில் செங்கண்மால் விரிஞ்சன்மேவ - திருத்தக்க பெரிய தோள்களினிடமாக திருமாலும்பிரமாவும் ஆகிய இருவரும் பொருந்தவும்.

பொழிப்பு : மூலத்தில் சர்ப்பர் அமைய, கோசத்தில் அமிர்தம் அமைய, உந்திவயிற்றில் பிறப்பெடுக்கும் உயிர்கள் அமைய, மார்பிலே கலைகள் அமைய, முந்நூலிலே ஞானம் அமைய, உரோமங்களில் அண்டங்கள்அமைய அங்கையில் அகில போகமும் அமைய இருதோளிலும் பிரமவிஷ்ணுக்கள் அமையவும்.

மெல்லிதழ் அனைய செங்கை விரல்மிசை அணங்கின் நல்லார்
ஒல்லொலி அங்கி கண்டம் ஒப்பிலா மணிவாய் வேதம்
பல்லிடை யெழுத்து நாவிற் பரமவா கமத்தின் பேதம்
நல்லிதழ் மனுவின் விஞ்சை நாசியிற் பவனன் மன்ன. 426

பொருள் : மெல்லிதழ் அனைய செங்கை விரல் மிசை அணங்கின் நல்லார் - மென்மையான செங்காந்தள் மலரின் இதழ்போன்ற சிவந்த கைவிரல்களில் தேவமகளிராம் நல்லார் அமையவும், ஒல்ஒலி அங்கி கண்டம் - ஒல்லென ஒலிக்கும் ஓசை ஒலிகளும் அவற்றை அங்கமாகவுடைய அங்கியெனும் தீயும் கழுத்தில் அமையவும்,

ஒப்பிலா மணிவாய் வேதம் - ஒப்பில்லாத அழகிய திருவாயில் வேதங்கள் அமையவும், பல்லிடை எழுத்து - பல்லின்கண் எழுத்துகள் அமையவும், நாவில்பரம ஆகமத்தின் பேதம் - திருநாவிலே மேலாகிய ஆகம பேதங்களும் அமையவும், நல்லிதழ் மனுவின் விஞ்சை - நல்ல உதடுகளில் மனுதர்மசாத்திரங்கள் அமையவும், நாசியில் பவனன் மன்ன - திரு நாசியிலே - வாயுதேவன் அமையவும்.

பொழிப்பு : திருக்கரவிரல்களில் தெய்வமகளிரும், கழுத்தில் ஒலிகளும் அங்கியும், திருவாயில் வேதமும், பல்லில் எழுத்துகளும், நாவிலே ஆகமங்களும், உதடுகளிலே மனுதர்மங்களும், நாசியில் வாயுதேவனும் இவ்வாறு பொருந்தவும்.

கருணைகொள் விழியில் சோமன் கதிரவன் செவியில் திக்குத்
திருநுதற் குடிலை வைப்புச் சென்னியில் பரம ஆன்மா
மரபினின் மேவித் தோன்ற மாறிலா திருக்குந் தொல்லை
ஒருதன துருவங் காட்டி நிற்றலும் உம்பர் கண்டார். 427

பொருள் : கருணைகொள் விழியிற் சோமன் கதிரவன் - கருணை குடிவாழும் திருவிழிகளில் ஞானசந்திர சூரியர் அமையவும், செவியில் திக்கு - திருச்செவிகளில் திசைகள் அமையவும், திருநுதற் குடிலை வைப்பு - திருநெற்றிமத்தியில் பிரணவம் அமையவும், சென்னியில் பரம ஆன்மா - சிரசிலே பரமான்மாவாம் பதி அமையவும், மரபினில் மேவித் தோன்ற - சங்காரக்கிரமத்தில் அவயவம் தோறும் பொருந்தி விசுவமேதான் (தானே விசுவம்) எனும் மெய்ம்மை விளங்குமாறு, மாறிலாதிருக்கும் தொல்லை ஒருதனது உருவம் காட்டி நிற்றலும் - என்றும் நிர்விகாரமாயிருக்கும் தொன்மையான தனது ஒப்பிலாத திருப்பெருவடிவைக் காணக் காட்டிநின்றருளவே, உம்பர் கண்டார் பக்குவத்தால் உயர்ந்த தேவர்கள் கண்டார்கள்.

பொழிப்பு : திருவிழிகளிலே சூரிய சந்திரரும், திருச்செவியில் திசைகளும், திருநுதலில் பிரணவமும் சிரசிலே பரமான்மாவும் ஆகப் பொருந்த, சிவாகமசாஸ்திரங்கள் மந்திர நியாச முறைகளிலே

தெளியக் கூறுமாறு அம்மரபிலே காணக்காட்டவே, பக்குவமுதிர்வுள்ள தேவர் முதலில் கண்டனர்.

குறிப்பு : சிருட்டி கேசாதி பாதக்கிரமம், சங்காரம் பாதாதி கேசக்கிரமுமாகச் சாத்திரங்கள் கூறும். இங்கு சங்காரக் கிரமமாக உள்ளந்தாள் நின்று உச்சிவரை விசுவரூபவிளக்கம் காட்டினார். சங்கத்தமிழ் நூல்களிலும் கீழேயுள்ள தத்துவங்கள் கிரம முறையில் ஒன்றிலொன்றாகவே ஒடுங்கிச் சென்று முடிவில் ஒழிவிலா ஒடுக்கமாகிய ஏகப்பொருளில் இலயமாகும் எனும் இவ்வுண்மை நிலைகள் அவனருளே கண்ணாகக் காணவேண்டியன, காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே எனும் திருவாக்குகள் காண்க.

தேவர்க்கு முன்னும் பெருமான் காட்டக்கண்ட பக்குவமுடைமையால் முன்கண்டனர். சூரனுக்கு இனியே காட்டக் காண்பான். பக்குவக்குறையால்.

செஞ்சுடர் அநந்த கோடி செறிந்தொருங் குதித்த தென்ன
வீஞ்சிய கதிர்கான் றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி வீண்ணோர் நின்றனர் நிமல மூர்த்தி
அஞ்சல்மின் அஞ்சல் மின்னென் றருளினன் அமைத்த கையான்.428

பொருள் : செஞ்சுடர் அநந்த கோடி செறிந்து ஒருங்கு உதித்ததென்ன - அநந்த கோடி சூரியர்கள் செறிந்து ஒருங்கே ஒருருவமாகி உதித்தெழுந்த வாறுபோல, விஞ்சிய கதிர்கான் றுள்ள வியன்பெருவடிவை நோக்கி - அளவிறந்த பேரொளி வீசுகின்ற அதிவியப்புக்குரிய திருப்பெருவடிவைப் பார்த்தமாத்திரமே, விண்ணோர் நெஞ்சகம் துளங்கி நின்றனர் - தேவர்கள் துணுக்குற்று அஞ்சிநின்றனர், நிமலமூர்த்தி - அதனைத்திருவுளங்கொண்ட அமல மூர்த்தியாம் பெருமாள், அஞ்சன்மின் அஞ்சன்மின் என்று அமைத்தகையான் அருளினன் - அஞ்சாதீர் அஞ்சாதீர் என்று அபயத்திருக்கரம் காட்டி அருள்புரிந்தார்.

பொழிப்பு : ஆயிரகோடி சூரியர் செறிந்து ஒருருவமாய் உதித்துவந்தது போல அளவில்லாத ஒளிகாலும் திருக்கோலத்தை நோக்கிய தேவர் அஞ்சி உளம் நடுங்கவே பெருமான் தேவிர்களே அஞ்சாதீர் என்று அபயம் தந்தருளினார்.

அண்டர்கள் யாரும் எந்தை அருள்முறை வினவி யுள்ளம்
உண்டிடு விதிர்ப்பு நீங்கி உவகையால் தொழுது நின்றார்
தண்டுளி வரைய தென்னத் தணப்பறச் சிதறும் ஊழிக்
கொண்டலின் தோற்றம் நோக்கிக் குலவுறு மஞ்ஞையே போல். 429

பொருள் : அண்டர்கள் யாரும் எந்தை அருள்முறைவினவி - அபயம் பெற்ற தேவர்யாவரும் எம்பிரானின் திருவருட்குறிப்புணர்ந்து, உளளம் உண்டிடுவிதிர்ப்பு நீங்கி - தங்கள் உள்ளத்தை ஆக்கிரமித்த அச்சநடுக்கம் நீங்கியவராய், உவகையால் தொழுது நின்றார் - மனக்களிப்புமிக்கவராய்ப் பெருமானைத் தொழுது துதித்தவராய் நின்றார் அச்செயல், தண்துளி வரைய தென்னத் தணப்பறச்சிதறும் - தண்மையான நீர்த்திவலைகளை மூங்கிற் கழிகள் போல விடாது பொழிகின்ற, ஊழிக்கொண்டலின் தோற்றம் நோக்கி - ஊழி மழைமுகிலின் வரவுகண்டு, குலவுறும் மஞ்ஞையே போல் - களித்துநின்று அகவிஆடும் மயிலின் தன்மை போலவிளங்கியது.

பொழிப்பு : அமரர் அபயம் பெற்றுத் தொழுதுதுதித்து விசுவரூபத்தை நோக்கி நின்றது, பெருமழை பொழியும் முகில் வரவுகண்டு களி கொண்டாடும் மயிலின் தன்மை போலிருந்தது.

குறிப்பு : ஊழிக் கொண்டலின் தோற்றம் பெருமானின் திருப்பெருவடிவுக்கும் அகவிக்களித்தாடும் மயில் அபயம் பெற்றுப் பெருமானைத் தொழுது துதித்து நிற்கும் தேர்களுக்கும் உவமமாம். வரையதென்னத்தண்டுளி சிதறும் என்பதற்கு மலைபோன்ற மழைத்துளி என்பதிலும் மூங்கிற்காம்புகள் போன்றமழைத்துளி என்பது பொருத்தமாகும்.
வரை - மூங்கில் - மலையென இரண்டுக்கும் பொருந்தும்.

இறுதியும் முதலும் இல்லா இப்பெரு வடிவந் தன்னைக்
கறைவிட முறழுஞ் சூரன் கண்டுவிம் மிதத்தின் நிற்ப
அறிவரும் உணர்தல் தேற்றா ஆறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் லுணர்ச்சி நல்க இனையன செப்ப லுற்றான். **430**

பொருள் : இறுதியும் முதலும் இல்லா இப்பெருவடிவந்தன்னை - முடிவும் முதலுமாம் எல்லையின்றி என்றுமுள்ள இத்திருப் பெருவடிவத்தை, கறைவிடம் உறழும் சூரன் கண்டு விம்மிதத்தில் நிற்ப - கரியவிடம் போன்ற சூரபன்மன் கண்டு அதிசயித்தவனாகநிற்க, அறிவரும் உணர்தல்தேற்றா ஆறுமா முகத்துவள்ளல் - கற்று அறிவுற்றவராலும் உள்ளவாறுணர்ந்து தெளியவொண்ணாத ஆறுமுகமுள்ளவள்ளற் பெருமான், சிறிதுநல்லுணர்ச்சி நல்க இனையன செப்பலுற்றான் - சிறிது மெய்யுணரும் திருவளைப்பாலிக்கச் சூரன் பின்வருமாறு பேசுவானாயினான்.

பொழிப்பு : ஆதியந்தமற்ற நித்தியமான திருப்பெருவடிவைக்கண்டு சூரன் அதிசயித்து நிற்கவே, பிரான் சிறிதே மெய்யுணருமாறு அருள் பாலிக்கவே நல்லுணர்வு பெற்றவனாகிப் பின்வருமாறு பேசுவான்.

குறிப்பு : இப்பாடல் முதலாகச் சூரன் சிந்தைதெளிந்து கூறும் கருத்துகள் தொடர்கின்றன.

எண்ணிலா அவுணர் தானை யாவையும் இமைப்பிற செற்று
விண்ணுலா அண்டந் தோறும் வியன்சமர் ஆற்றி என்பால்
நண்ணினார் தம்மைஎல்லாம் நாமறக் கடிந்து வீட்டி
வண்ணமான் தேரும் மீண்டு வராநெறி தடுத்தான் மன்னோ. **431**

பொருள் : எண்ணிலா அவுணர்தானை யாவையும் இமைப்பில் செற்று - அளவிடலரிய அவுணசேனை அனைத்தையும் இமைப்பொழுதில் அழித்து, விண்ணுலா அண்டந்தோறும் வியன்சமர் ஆற்றி - விண்ணிலே பரந்துள்ள அண.டங்கள் தோறும் துரந்து

வந்து பெரும் போர்புரிந்து, என்பால் நண்ணினார் தம்மையெல்லாம் நாமறந்தடிந்து வீட்டி - நம்மைச்சார்ந்த தம்பியர்மக்கள் உறவினர் யாவரையும் பெயருமில்லாமலே துணித்துவீழ்த்தி, வண்ணமான் தேரும் மீண்டுவரா நெறி தடுத்தான் மன்னோ - அழகிய இந்திரஞாலத் தேரையும் நம்மிடம் மீளவராமலே தடுத்து விட்டான்.

பொழிப்பு : அளவிலா அவுணசேனையை அழித்து, அண்டந்தோறும் துரந்து வந்து சமர் செய்து, நமது உறவினரையும் அழித்து, மாயத் தேரையும் மீளவராதபடி தடுத்துவிட்டான்.
குறிப்பு : தேரும் என்பதில் உம்மை எச்சம் எண்ணு சிறப்பு எனும் பொருளில் வந்தது.

திண்டிறல் உடையேன் தூண்டுந் திறந்படை யாவும் நீக்கிக்
கொண்டவென் மாய முற்றுங் கொடுஞ்சரம் அதனான் மாற்றி
அண்டமும் புவனமும் யாவும் அமரரும் பிறவுந் தன்பாற்
கண்டிடும் வடிவ மொன்று காட்டியயென் கண்முன் நின்றான். 432

பொருள் : திண்திறல் உடையேன் தூண்டும் திறற்படையாவும் நீக்கி - பெருந்திறல் உள்ளநான் தூண்டிய படைக்கலங்கள் யாவைவும் நீக்கி, கொண்ட என் மாயம்முற்றும் கொடும்சரமதனால் மாற்றி - நான் எடுத்த மாயாவடிவங்களையும் கொடிய அம்புகளாலே இல்லாற் போகமாற்றி, அண்டமும் புவனம் யாவும் அமரரும் பிறவும் - அண்டங்களும் அங்குள்ள புவனங்களும் தேவர்களும் மற்றுமுள்ள சிவகோடிகளுமாம் அகிலமும், தன்பாற்கண்டிடும் வடிவம் ஒன்று காட்டி - தான்காட்டிய வடிவிலே அடங்கிக் காணக்கிடப்பதாகும் பெருவடவம் ஒன்றைக் காட்டி, என்கண்முன் நின்றான் - என்கண்ணாரக்காண என் முன்னே நிற்கிறான்.

பொழிப்பு : நான்ஏவிய திவ்வியபடைகளையும் செயலறச் செய்து, நான் எடுத்த மாயவடிவங்களையும் சிதைத்து, சராசரம்யாவும் அடங்கிய அகிலமும் தன் பெருவடிவிலே அடங்கியுள்ளபடிகாணப் பெருவடிவு காட்டிக் கண்ணெதிரே நிற்கின்றான்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ. 433

பொருள் : கோலமாமஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னை - அழகிய நீலமயில் மீது உல்லாசனாகக் குலாவிய குமரனை, அந்நாள் பாலனென்று இருந்தேன் முன்னாளில் அறிவும் திறனுமில்லாத சிறு பாலன் தானே என்று அலட்சியம் செய்தேன், பரிசுஇவை உணர்ந்திலேன்யான் இன்று அறியவுள்ள பேராற்றல் சிறப்புக்களை அறியாமையால் நான் தற்கேடனாயினேன், மால் அயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும் - அரியயனுக்கும் ஏனையதேவர்க்கும் மற்றும்மேலவரெனும் எவருக்கும், மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ - மூலகாரணமாய் நின்ற மூர்த்தி தோற்ற ஒடுக்கத்துக்கெல்லாம் மூலகாரமாயுள்ள பரமேஸ்வரமூர்த்தியானவரே, இம்மூர்த்தியன்றோ - இந்த விசுவ ரூபமாய்நிற்கும் மூர்த்தியேயாவர். இவர் அவரில் வேறல்லர்

பொழிப்பு : மயில்மீது உல்லாசனாகக் குலவிய இவனைச் சிறுபிள்ளைதானே என்று அந்நாளில் அலட்சியமாக இருந்தேன், இன்றுகாணும் பெருமையைஅன்று அறியாததாலேநான் தற்கேடனாயினேன் இன்று உண்மை கண்டேன் அப்பரமேசரே இம்மூர்தியாம் வேறல்லர் அரிபிரமர்க்கும் மற்றும் யாவருக்கும் மூலகாரண மூர்த்திஇவரே.

ஒற்றென முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிக லின்றி நின்ற பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற எல்லாந் துணிபெனக் கொண்டி லேனால்
இற்றையிப் பொழுதில் ஈசன் இவனெனுந் தன்மை கண்டேன். 434

பொருள் : ஒற்றெனமுன்னம் வந்தோன் - தூதனாக முன்னேவந்த இளையவன், ஒருதனி வேலோன் தன்னை - ஒப்பற்ற சிறந்த

வேற்படை கொண்ட பிரானைக் குறித்து, பற்று இகல் இன்றி நின்ற பராபரமுதல்வன் என்றே சொற்றனன் - விருப்பு வெறுப்பின்றி நிர் விகாரியாய் நிற்கின்ற பராபரமாகிய சர்வலோக நாயகன் என்றே கூறினான்., சொற்ற எல்லாம் துணிபெனக்கொண்டிலேன்யான் - அங்ஙனம் சொல்லியவற்றை யெல்லாம் ஆய்ந்துகண்ட மெய்யென நான் ஏற்றேனல்லன், இற்றைஇப்பொழுதில் - இன்று இப்பொழுதிலேதான், ஈசன் இவன் எனும் தன்மை கண்டேன் - சர்வேசுவரன் இவனே யாம் வேறிலர் என்னும் உண்மை உணர்ந்துள்ளேன். (ஈசனேஇவன், அல்லது ஈசன் இவனே என அமையவேண்டிய தேற்றத்தோடு பிரிநிலைப் பொருள் தர வேண்டிய ஏகாரம் விகாராத்தால் தொக்கது)

பொழிப்பு : தூதாகவந்த வீரவாகு, வேற்கரப் பெருமானே பராபரமுதல்வனென எடுத்துக்கூறினான், அதனை நான் துணிந்த பொருளென ஏற்காது இகழ்ந்தேன் அன்று; ஆனால் இன்றோ இப்பொழுது ஈசன் இவனே வேறிலர் என மெய்யுணர்ந்தேன்.

மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா மற்றியான் பெற்ற அண்டம்
ஆயவை முழுது மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்தில் தோன்றியே நிற்கும் அன்றே. 435

பொருள் : மீஉயர் வடிவங்கொண்டு மேவிய தூதன் - மேம்பட்ட சிறந்த தெய்வீக வடிவுடன் நம்முன் வந்த ஒற்றனாம் வீரன், சொற்றவாய்மைகள் சரதம் அம்மா - சொல்லியவை வாய்மையாம், யாவும் சத்தியமே, அம்மா; மற்றுயான் பெற்ற அண்டம் ஆயவை முழுதும் மற்றும் - நான் வரமாகப் பெற்ற ஆயிரத்தெட்டண்டம் முழுவதும் மற்றும் பிருதுவியன்றி ஏனையதத்துவங்களிலுள்ள அண்டகோடிகளுமாகியயாவும், அறுமுகம் படைத்த செம்மல் தூயபொற்பதரோமத்தில் - ஆறுமுகங்கொண்ட செவ்வேட்பெருமான் காட்டிநிற்கும் பெருவடிவிலுள்ள தூயபொற்பாதத்திற்காணும் ஒருஉரோமத்தில் தானே, தோன்றியே நிற்குமன்றே - தோன்றி நிலைத்து நிற்கின்றனவல்லவா.

பொழிப்பு : தெய்வத் திருவடிவில் வந்த ஒற்றனாகிய வீரவாகு சொல்லியவையாவும் முக்காலும் சத்தியமானவை, நான் ஆளப்பெற்றஅண்டங்களும் ஏனைய அண்டகோடிகளும் எல்லாம் குமரன் திருவுருவில் பாதகமலத்து ஒரு உரோமத்தில் தோன்றிநிற்கக் காணலாமே இது என்ன அதிசயம் அம்மா.(வீரவாகு கூறியவை மகேந் - காண் அவைபுகுபடலத்தில் 140.....140 பாடல்காண்க.)

அண்டர்கள் முனிவர் ஏனோர் அகிலமுங் காட்டி அண்ணல்
கொண்டிடு படிவ முற்றுங் குறித்தியார் தெரிதற் பாலார்
எண்டகு விழிகள் யாக்கை எங்கணும் படைத்தோர்க் கேனுங்
கண்டிட அநந்த கோடி கற்பமுங் கடக்கும் அன்றே. 436

பொருள் : அண்டர்கள் முனிவர் ஏனோர் அகிலமும்காட்டி - தேவர்கள் முனிவர்கள் மற்றுள்ளோர் அடங்க அகிலமும் தன் திருப்பெருவடிவில் அமையக்காட்டி, கொண்டிடுபடிவம் முற்றும் குறித்துயார் தெரிதற்பாலார் - பெருமான் எடுத்துள்ள இவ்விசுவ ரூபத்தின் முழுச்சிறப்பையும் சுட்டியாவர் தான் தெரியவல்லார் முடியாது, எண்டகுவிழிகள் யாக்கையெங்கணும் படைத்தோர்க்கேனும் - உறுப்பிற்சிறந்ததாக எண்ணப்படும் கண்கள் உடம்பு முழுவதும் அமையப்பெற்றவராயுள்ளவர்க்கேனும், கண்டிட - இதனைக் கண்டறியவேண்டுமாயின், அநந்த கோடிகற்பமும் கடக்குமன்றோ - அநந்தகோடி கற்பகாலம் வேண்டுவதாயிருக்குமே.

பொழிப்பு : தேவர் முனிவர் மற்றுமுள்ளோர் மற்றுளசித்தும் சடமுமான அகிலமும் தமது திருப்பெருவடிவிலே அமைந்திருக்கக் கந்தசுவாமி காட்டிய இவ்விசுவரூபத்தை முற்றும் சுட்டி அறிய எவராலும் இயலாது உடம்பெல்லாம் கண்ணாகப் பெற்றவராலும் காண்பதற்கு அநந்தகோடி கற்பகாலம் வேண்டும்.

சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
ஏர்க்குறும் ஒளியுஞ் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்
ஆர்க்குள வுலகில் அம்மா அற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை இன்னுமென் பார்வை தானும். 437

பொருள் : சீர்க்குரேசன் கொண்ட திருப்பெருவடிவந்தன்னில் - சீரார்ந்த செவ்வேட் பிரான் எடுத்த இத்திருப்பெருவடிவிலேயுள்ள, ஏர்க்கு உறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம் - அழகுக்கு ஏதுவான காந்தியும் திவ்விய சிறப்பும் மாறா இளமையும் வனப்பும் பிறவுமெல்லாம்,உலகில் ஆர்க்குஉளஅம்மா -உலகில் எவரிடம் தான் காணவுள்ளது? அம்மா என்ன அதிசயம், அற்புதத்தோடு பல்கால் பார்க்கினும் - ஆச்சரிய உணர்வுடன் பார்த்ததையே பலமுறை பார்த்தபோதினும், இன்னும் என்பார்வைதானும் தெவிட்டிற்றில்லை - இன்னமும் எனது பார்வைதானும் போதும் என்று திருப்திப்படவில்லை.

பொழிப்பு : சீர்நிறைந்த குமரவேளின் இத்திருவுருவின் அழகுக்கு ஏதுவாயுள்ள ஒளியும் சீரும் இளமையும் வனப்பும் பிறவுமான அனைத்தும், உலகில் எவருக்குத்தான் உள்ளது அதிசயம், அற்புதமென்று பலமுறை நோக்கினும் என்பார்வை இன்னும் தெவிட்டியதில்லை. மேலும் பார்த்திருக்கவே விழைகின்றது.

குறிப்பு : சீர் - தெய்வீக அருட் செல்வம், ஒளி - காந்தி, இத்திருவுரு கண் ணையும் கருத் தையும் மீளவிடாது தன் பால் கவர்ந்துநிறுத்தியுள்ளதே, பலயுகம் வாழ்ந்து பல அண்டபுவனங்கள் தோறுமுள்ள சிறப்பெல்லாம் கண்டு தெளிந்த என்கண் என்பது என்பார்வைதானும் என்பதனால் உணர்த்தியது உம்மை - உயர்வு சிறப்பு.

நேரில னாகி ஈண்டே நின்றிடும் முதல்வன் நீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதுமச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பார் அமரரில் அழிவிலாத
சீரிய வரங்கொண் டுள்ளேன் ஆதலின் தெரிகின்றேனால். **438**

பொருள் : நேர் இலனாகி ஈண்டே நின்றிடும் முதல்வன் நீடும் பேருருவதனை - ஒப்பிலியாக இங்கு நிற்கும் தலைவனாகிய குமரன் எடுத்த நீண்ட திருப்பெருவடிவாம் இதனை, நோக்கிப் பெரிதும் அச்சுறுவதல்லால் - கண்டமாத்திரமே பெரியபயங் கொள்ள

வேண்டியதாகிறது அப்படியில்லாமல், யார்இது நின்றுகாண்பார் - யாவர்தான் இதனை நின்று காணவலவர் இல்லை. அமரரில் அழிவில்லாத சீரியவரங்கொண்டுள்ளேன் ஆதலில் - தேவர் போல அழிவில்லாத சிறந்த வரம்பெற்றவன் ஆதலினால் தெரிகின்றேனால் - அஞ்சாது நின்று தெரியக்காண்கின்றேன்.

பொழிப்பு : ஒப்புயர்வில்லா ஒருமுதல்வன் கொண்ட விசுவரூபத்தைக் கண்டுஅஞ்சி அகல்வதல்லால் யார் நின்று காண வல்லார், எவருமில்லை, நான் அழியாவரம் பெற்றவன் ஆதலில் நின்று தெரியக் காண்கின்றேன்.

குறிப்பு : அமரரில் யார் இது காணவல்லார் எனவும் கூட்டி உரைப்பினும் அமையும், எனினும் தன்போலவே தேவரும் கண்டுநிற்கக்காணுதலால் தகுமோ ஐயம். அமரரில் என்பது ஒப்புப்பொருளன்றி உறழ்பொருவாக அமரரிலும் மேலாக எனலுமாம், ஒப்பிலான் என்பதால் உயர்ந்தாரும் இலன் என்பதுதானே அமையும்.

ஆயிரகோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார். 439

பொருள் : ஆயிரகோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாகிமேயின எனினும் - ஆயிரம் கோடி மன்மதர்களது அழகுயாவும் சேர்ந்து ஒருருவமாகிப் பொருந்தி நிற்பினும், செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில் தூயநல்எழிலுக்கு - குமரவேளின் அமலமான திருவடி ஒன்றிலுள்ள அழகுக்கே, ஆற்றாது என்றிடில் - சிறிதும் நிகர்நிற்க மாட்டாதெனில்,இனையதொல்லோன் மாயிருவடிவிற்கெல்லாம் - இத்தன்மையனான முன்னைப்பழம் பொருட்கு முன்னவனாம் முருகனது திருப்பெருவடிலுள்ள வனப்புகள் அனைத்திற்கும், உவமையார் வகுக்கவல்லார் - உவமையாக எவர்தான் எதனைக் கற்பித்துக் காட்டவல்லார்.

பொழிப்பு : ஆயிர கோடி மன்மதரின் அழகும் ஒன்றாய் உருப்பெற்றாலும் குமரவேளின் திருப்பெருவடிவிற் திருவடியில் உரோமத்துக்கே ஒப்பிலாதொழியுமெனில், இத்திருமேனியிலுள்ள இயல்பான தெய்வீக அழகுக்கு யார்தான்உவமை ஒன்று கற்பித்துக் கூறவல்லார்.

குறிப்பு : கைபுனைந்த செயற்கையோடும் சம்பந்தமானதே மன்மதரது அழகும் ஆனால் கைபுனைந்தியற்றாக் கவினுடைத்தாய மாறா இளமை அழகு முருகனது ஆதலின் அதற்கு உவமை உரைத்தலியலாததாம் எனக்காட்டியவாறு.

இங்கென துயிர்போல் உற்ற இளவலும் இளையசேயுஞ்
செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென் றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகும் என்றார்
அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே ஆன தன்றே. 440

பொருள் : இங்கு எனது உயிர்போலுற்ற இளவலும் இளைய சேயும் - இங்கே எனது உயிர்போற் சிறந்தவராயிருந்த தம்பிசிங்கனும் இளம் மகன் இரணியனுமான இருவருமே, செங்கையில் வேலோன்தன்னைச் சிறுவனென்று எண்ணல் கண்டாய் - திருக்கரத்தில் வேல் ஏந்திய குமரனைச் சிறுவனே என எண்ணற்க, இது தவறெனக்கண்டுகொள் , பங்கயன் முதலோர் காணாப் பரமனேயாகும் என்றார் - பிரமன் முதலான தேவராலும் முற்றவும் அறிய வொண்ணாத பரமேசுவரனேயாம், வேறல்லன் என இடித்துரைத்தனர், அங்குஅவர் மொழிந்தவாறும் சரதமேயான தன்றே - அன்றுஅவர் கூறிய அறிவுரைகளும் இன்று உண்மைப் பொருளாகவே உள்ளனவாயிற்லல்லவா.

பொழிப்பு : இங்கு எனதுயிர்போலிருந்த தம்பியும் இளங்குமாரனும், வேற்கைப்பிரானை இளம்பிள்ளையென அலட்சியம் செய்யாதே, இது தவறாகும், அயன் முதலாம் அமரரும் அறியொணாத பரமேசுவரனேயாவர், பிறரல்லர் என்றனர், அவருரையும் இன்று உண்மையே யாயிற்று.

அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா வூழி காலம் எத்திறம் நோக்கி னாலுங்
கண்ணினால் அடங்கா துன்னிற் கருத்தினால் அடங்கா தென்பால்
நண்ணினான் அமருக் கென்கை அருளென நாட்ட லாமே. 441

பொருள் : அண்ணலார் குமரன் மேனி - பரமபதியாம் பகவத் பண்பார்ந்த குமரன் திருவுருவை, எண்ணிலா ஊழிகாலம் எத்திறம் நோக்கினாலும் - பலகற்பகாலம்வரை எவ்வெவ்வாற்றாலே நோக்கியறியமுயன்றாலும், கண்ணினால் அடங்காது உன்னிற் கருத்தினால் அடங்காது - கண்ணின் காட்சியளவிலும் அடங்குவதாயில்லை, கருதினால் கருதலளவிலும் அடங்கிற்றில்லையே, என்பால் நண்ணினான் அமருக் கென்கை - அத்தனை சர்வசக்திமானான பெருமான் என்னிடம் அமர்புரியத் தேடிவந்தான் என்பது, அருளென நாட்டலாமே - ஏனையோர் செயல் போன்றதன்று, எமக்கு அருளானந்த ஆடல்காட்ட வந்த கருணையாம் கருமம் என்பதே உண்மையென உறுதிகொள்ள வேண்டியது.

பொழிப்பு : பதித்துவம் முற்றுமுள்ள முருகப்பெருமானின் திருக்கோலத்தை, எண்ணிலாத கற்பகாலம்வரையும் எவ்வகையால் நோக்கிலும், கண்ணிலும் அடங்காது கருத்திலும் அடங்காது அப்பால் விஞ்சி நிற்குமாயின் அவ்வியல்பான அவர் என்னிடம் தேடி அமர் புரியவந்தார் என்றால், வந்தது அழித்துவிடவன்று அருளாட்சி புரிய என்பதே உறுதியாம்.

குறிப்பு : இது இவ்வாறாக என எண்ணுமளவிலேயே (சங்கற்பமாத்திரையால்) எனைத்தும் இயற்றாதே இயற்றவல்ல பிரான் ஆதலில் அமர்புரியவந்தது ஓர்அருட்டிரு விளையாட்டேயாம்.

திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவின் ஊக்கம்
அருகிய குரோமம் பள்ளி ஆயின விழியில் தூநீர்
பெருகிய திவன்பால் அன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானும் உலைமெழு காகும் அன்றே. 442

பொருள் : திருகிய வெகுளிமுற்றும் தீர்ந்தன - முரண்பாடாக எழுந்த சினம்முற்றும் தீர்ந்தது, செருவில் ஊக்கம் அருகியது - சமராடுவதிலுள்ள ஊக்கம் குறைந்தேவிட்டது, உரோமம் புள்ளி ஆயின - மேனியில் உரோமங்கள் சிலிர்த்து நிற்கின்றன, விழியில் தூநீர் பெருகியது - கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது, இவன்பால் அன்பு பிறந்தன - இந்தக் குமரன்மேல் அன்பும் அதன்வெளிபாடான மெய்ப்பாடுகளும் விளைந்தன, தமியேற்கு உள்ளம் ஊருகியது - தமியேனான எனக்கு உள்ளம் உருகுகின்றது, என்புதானும் உலைமெழுகு ஆகுமன்றே - எலும்புகளும் உலைவாய் மெழுகுபோல உறுதியிழந்து நெகிழ்கின்றன.

பொழிப்பு : பெரிதும் பந்தங்கள் இழந்து தனியேனான எனக்கு, வெகுளி தீர்ந்தது, சமரகம் சுருங்கியது, புளகம் போர்த்தது, ஆனந்தபாஷ்பம் பெருகுகிறது, முருகனிடம் அன்புண்டாயிற்று, எலும்பும் எரிவாய்மெழுகுபோல நெகிழ்ந்துவிட்டதே.

குறிப்பு : சிவகுருவாகிய செவ்வேளின் தீட்சாக் கிரமங்களால் சூரபன்மன் பந்த பாசங்கள் பற்றறப்பக்குவனாகும் தன்மையாலே தமியேன் என்றான். முன்கூறிய சினைவினைகள் யாவும் முதலாகிய சூரனதாதலின் தமியேற்கு என்பதை அவற்றோடு சார்த்திக் கொள்க. மேல்வரும் பாடல்களிலும் தமியேற்கு என்பது சார்த்தி உரைக்கற்பாலதே.

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
துலயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயனீ தன்றோ. 443

பொருள் : போயின அகந்தை - அகந்தை மமதைகள் போய்விட்டன, போதம் புகுந்தன - மெய்யுணர்வுச் செயல் வந்தடைந்தன, வலத்ததோர் தோளும் கண்ணும் துடித்தன - வரும் நலத்தை உணர்ந்த வலப்பாலுளவான தோளும் கண்ணும் துடித்தன,

புவனமெங்கும் மேயின பொருள்கள் முற்றும் - அண்டபுவனங்களும் ஆங்குள்ள பொருள்கள் முற்றும், வெளிப்படுகின்ற விண்ணோர் நாயகன்வடிவம் - வெளித்தோன்றவும் ஒடுங்கவும் ஆதாரமாகவே உள்ள தேவதேவராம் பெருமானின் திருப்பெருவடிவினை, கண்டேன் ஈதுநற்றவப்பயனன்றோ - கண்ணாரக் காணும் பேறடைந்தேன் இது எனது நல்லதவபயனல்லவா.

பொழிப்பு : யான் எனதெனும் செருக்கு ஒழிந்தது, எல்லாம் அவன் செயலெனும் மெய்யுணர்வுற்றது. நல்லசகுனமாக வலத்தோளும் கண்ணும் துடித்தன, சர்வமும் தானாம் தன்மையுள்ள குமரன் விசுவரூபமும் கண்டேன், ஆகவே நான் செய்த நற்றவத்தின் பேறு இன்றெய்திய இதுவேயாம், முன்னுற்றவையல்ல.

குறிப்பு : தோளும் கண்ணும் வலந்துடித்தல் ஆண்களுக்கும், இடம்துடித்தால் பெண்களுக்கும் நற்சகுனமாம் நலம்வருதற்கு அறிகுறி. மாறித்துடிப்பதுமாறானபயனாகும்.

சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலு
ஆழுதல் வேண்டுந் தீமை அகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே. 444

பொருள் : தாள்கள் சூழுதல் வேண்டும் - பாதங்கள் இப்பிரானை வலம் சூழ வேண்டுகின்றன, அங்கைதொழுதிடல்வேண்டும் - கைகள் பிரானைத்தொழ வேண்டுகின்றன, சென்னி தாழுதல் வேண்டும் - தலை அப்பிரானின் தாளை வணங்குதலை வேண்டுகிறது, தாலுதுதித்திடல் வேண்டும் - நாவானது அவன் சீர்துதிக்க வேண்டுகிறது, தீமை ஆழுதல் வேண்டும் - என்னை இதுவரை ஆழ்த்தி நின்ற தீமை என்னை விட்டுத்தானே ஆழ்ந்து போக வேண்டுவதாயுள்ளது, அகன்று நான் இவற்காளாகி வாழுதல் வேண்டும் நெஞ்சம் - என்நெஞ்சமும் பந்தங்களைவிட்டு இவனுக்கே அடியானாகித் தொண்டாற்றி வாழ்தலை வேண்டுகின்றது, மானம் ஒன்றே தடுத்தது - இவ்வெணங்களையெல்லாம் நிறைவாக்க ஒட்டாது மானம் ஒன்றே இடைமறிக்கின்றது.

பொழிப்பு : பாதங்கள் இவனை வலம்சூழ விரும்பும், கைகள் தொழவிரும்பும், சென்னிவணங்க விரையும், நாவும் துதிக்கத் தொடங்குகிறது, என்னைப்பற்றி நின்ற தீவினைகள் தாமே அகன்று ஆழுகின்றன, நெஞ்சமும் இந்தத் தொடக்கைவிட்டு அன்பினால் அகன்று இவனுக்கே அடிமைபூண்டு வாழவே நினைகிறது ஆனல் அவை செய்ய வொட்டாது அபிமானம் ஒன்றே குறிக்கிட்டுத் தடுக்கிறது.

குறிப்பு : ஆழுதல் வேண்டும் என்பதைத் தனிமுற்றாக்கித் தீமைக்கும் பயனிலை யாக்காது, தான் சார்ந்தவரை ஆழ்த்திவிடவேண்டுகின்ற தீமையை எனப்பெயரெச்ச அடையாகக் கொண்டு பொருள் கூறலும்தரும்.

ஒன்னலர் பொருட்டா லேகி உறுசமர் இழைத்த செம்மல்
தன்னுரு வதனைக் காண்கின் முனிவதே தகுதி யாகும்
வன்னிகொள் வெண்ணெ யேபோல் வலியழிந் துருகிற்றென்றால்
என்னுடை வயத்த வன்றோ உணர்ச்சியு மியாக்கை முற்றும். 445

பொருள் : ஒன்னலர் பொருட்டால் ஏகி உறுசமர்இழைத்த - நம்பகைவர் பொருட்டு அவர்சார்பாக வந்து பெரும் போர்செய்த, செம்மல் தன்னுரு அதனைக்காண்கின் முனிவதே தகுதியாகும் - குமரனது வடிவைக்காணில் முனிவுகொள்ளலே தகுதியான செயலாகும், வனிகொள் வெண்ணெயே போல் வலியழிந்து உருகிற்று என்றால் - ஆனால் அதற்குமாறாக அன்புற்று தீமுன்னர் வெண்ணெய் போல வலியிழந்து நெக்குருகியது என்றால், என்னுடைவயத்த வன்றோ உணர்ச்சியும் யாக்கைமுற்றும் - என்னுடைய என்றெண்ணியிருந்த எனது உணர்சிகளும் உடம்பும் ஆகிய எவையும் என்வயத்தன வல்ல என்பது தெளிவாயிற்றே.

பொழிப்பு : எம்மிடையே பகையில்லை; பகைவர் சார்பாய் அவர்பொருட்டுப் பொரவந்தான், பெருஞ் சமர் செய்தான், இவனது உருவைக்காண நேர்ந்தால் முனிந்து பொருவதேதக்க செயலாம், ஆனால் மாறாக அன்புற்றுத் தீயின்முன் வெண்ணெயாக

உருகுகிறதே, ஆதலின் என் உணர்வும் உடம்பும் எல்லாம் என்வயமானவையல்ல, எல்லாமே அவன் வசத்தில் நின்றாடும் பாவையே.

குறிப்பு : நாம் அவனடிமை மற்றுள அவன் உடைமை. இதில் எதுவும் எவரும் வேறாதல்இல்.

ஏடவிழ் அலங்கல் மார்பன் என்னுடன் இந்நாள் காறும்
நீடிய இகற்போர் ஆற்றி நீங்கலான் நின்ற தெல்லாம்
ஆடலின் இயற்கை யென்றே அறிந்தனன் அ:தான் றன்னான்
சாடிய வேண்டு மென்னின் யாரது தாங்கற் பாலார். **446**

பொருள் : ஏடவிழ் அலங்கல்மார்பன் என்னுடன் இந்நாள் காறும் - இதழ்விண்டலர்ந்த மாலை விளங்கும் மார்பராகிய பெருமான் என்னுடனே இந்நாள் வரையும், நீடிய இகற் போர் ஆற்றி நீங்கலான் நின்ற தெல்லாம் - என்னைவிட்டு நீங்காதே மாறுபட்டு நீண்டபோர் செய்து கொண்டே நின்ற செயல்யாவும், ஆடலின் இயற்கையென்றே அறிந்தனன் - எனக்குக் காட்டிய அருள் விளையாட்டின் செயலே யாகும் என அறிந்தேன், அ:தான்று அன்னான் சாடிய வேண்டுமென்னின் - அவ்வாறன்றி சர்வமும்வல்ல அவன் என்னை அழித்தருள வேண்டுமென எண்ணினால் அக்கணமே ஆற்றுவான், யார் அது தாங்கற் பாலார் - அதனையாவர் எதிர் நின்று தடுக்கவல்லார் எவருமிலர்.

பொழிப்பு : மாலைமார்பன் குமரன் அன்று முதல் இன்றுவரை நீண்ட இகற்போர்புரிந்தவாறே என்னைவிட்டு நீங்காது நிற்கும் நிலைமையை நோக்கின் எனக்குத் தனது அருளாடலைக் காட்டியவாறெனவே அறிகிறேன், அவன் அதைவிட்டு அழிக்க நினைந்தால் யாவரே எதிர்நின்று தாங்கவல்லார், எவருமிலர்.

குறிப்பு : நீங்கலான் நின்றதெல்லாம் என்பதால் இறைவன் பெத்தம் முத்தியாகிய நிலைகளில் என்றுமே ஆன்மாவை விட்டகலாமை குறிப்பாக உணரப்படும்.

ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாந்
தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலருங் காணா
நாதனிங் கணுகப் பெற்றேன் நன்றதே யான தன்றே. 447

பொருள் : ஏதமில் அமரர் தம்மையான் சிறை செய்ததெல்லாம் - குற்றமற்ற தேவர்களை நான் சிறை செய்த தெல்லாம், தீதென உனரத்தார் பல்லோர் - தீய செயலாம் என்று பலரும் கூறினர், அன்னதன் செயற்கையாலே - அவ்வாறான தீச்செயல் செய்தமையாலேதான், நாதன் இங்கு அணுகப்பெற்றேன் - உலகுடை முதல்வனான குமரன் இங்கு என்முன் எய்தப்பெற்றேன், அது நன்றேயானதன்றோ - ஆதலின் பிறர்தீதென்ற அச்செயலும் என்னளவில் நன்றேயான செயலாயிற்றே; (வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா நாதன் - வேதங்களும் பிரமனும் மற்றும் அமரரும் இவன் என்று அறிய ஒண்ணாத சர்வலோக நாதன் எனமுன்கூட்டுக).

பொழிப்பு : சற்சனரான தேவரைச் சிறையிட்டது தீவினை என்றார்கள் பலரும், ஆயினும் அச்செயலாலேதான் சர்வலோகநாதன் குமரன் இங்குவரப்பெற்றேன், ஆதலின் அந்தத் தீவினையே என்னளவில் நல்வினையாய் நற்பேறு நல்கியதே, இம்முறை பிறழ்தல் "அஞ்சுதரு தீவினையினால் அழுதும் நஞ்சாம்; நஞ்சும் அமுதாம் உரிய நல்வினையின் மாதோ" எனும் வில்லி பாரதப்பாடலாலும் அறியலாம்.

ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப தண்டோ.448

பொருள் : ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி முன்னம் - ஒரே ஒரு நாயகனாக நித்தியமாய் உள்ள குமரமூர்த்திமுன்னே, இந்நாள் நினறமர் பொருதேன் நெஞ்சினித் தளரேன் - இந்நாள் வரை எதிர்த்து நின்று போர் பொருதேன் ஆதலின் இனி

என்நெஞ்சுறுதிதளரமாட்டேன். அம்மா நன்றிதோர் பெருமை பெற்றேன் - என்னவியப்பு. நல்ல இந்த நிகரிலாப் பெருமை பெற்றுளேன். வீரனும் நானேயானேன் - அன்றியும் நேரிலாவீரனும் நானேயாகிவிட்டேன். என்றும் இப்புகழே நிற்கும் - உலகுள்ளவரை என்றும் இப்புகழ் நிலைக்கும். இவ்வுடல் நிற்பதுண்டோ - எனதுடல் வச்சிரயாக்கையேயாயினும் நிலை நிற்கவல்லதோ அல்லவே. பிறந்தவர் இறக்கை திண்ணம்.

பொழிப்பு : ஏகநாயகனாயுள்ள முருகமூர்த்திமுன் இந்நாள்வரை எதிர்த்துநின்று பொருதேன். இனிநெஞ்சுறுதிதளரேன். அம்மா நல்லதோர் பெருமைபெற்றேன். அன்றியும் இணையிலா வீரனும் நானேயாயினேன். என்றும் உலகில் என்புகழ் நிலைபெறும். ஆனால்மாயாகாரியமான இவ்வுடம்பு நிலைக்குமா இல்லை, ஒருநாள் அழியவேண்டியதேயாம்.

குறிப்பு : அம்மா - வியப்புப் பொருள். புகழே - ஏகாரம் பிரிநிலை தேற்றம்; உண்டோ எதிர்மறைப்பொருள் தந்தது. சூரன் பரவச நிலை மெல்லமாறிச் சுயவச நிலைக்குச் சென்று பேசுவன இனித்தொடரும்.

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி அளியர்போல் உறுவன் என்னின்
ஆனதோ எனக்கி தம்மா ஆயிர கோடி யண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றி டாவோ. 449

பொருள் : வானுளோர் சிறையை நீக்கி - பிறர்பேசியபடி தேவர்களின் சிறையை நீக்கி. வள்ளலை வணங்கி - வள்ளல் குமரனை வணங்கி. இந்த ஊனுலாம் உயிர் உயிரைப் போற்றி - இந்த ஊனுடம்பில் வாழ்வதுவிரும்பி. அளியர் போல் உறுவன் என்னில் - பிறர்கண்டு இரங்கத் தக்கவன் இவனென எளிமைப்பட்டு வாழ்வேனாயின். எனக்கு இது ஆனதோ அமா - முன்கூறிய பெருமைகளுக்குரிய எனக்கு இது தகுந்த செயலாகுமோ. அம்மா அது எத்தனை இழிவானது அதனால். ஆயிரகோடி அண்டம் போனதோர் புகழும் வீரத்தன்மையும்

- அண்டசக்கராதிபத்யென அண்டமெங்கும் பரந்த புகழும், அவற்றைவென்று ஆண்ட வீரபராக்கிரமமும், ஒருங்கே, பொன்றிடாவோ - நான்பொன்றுமுன் தாம் பொன்றிவிடமாட்டாவோ.

பொழிப்பு : வானோர் சிறையைவிட்டு, வள்ளலாம் குமரனை வணங்கி, நிலையில்லாத ஊனுயிர் வாழ்வை நம்பி எளியவர்போலிருப்பேனோ இது நான் செய்யத்தகுவதோ, அச்செயலால் அண்டங்கள் எங்கும் பரந்த என்புகழும் வீரமும் என்முன்னே பொன்றிப்போகாவோ.

குறிப்பு : ஆனதோ, பொன்றிடாவோ - ஓகாரம் எதிர்மறைப்பொருள்.

என்னஇத் தகைய பன்னி நிற்றலும் எவர்க்கும் மேலோன்
உன்னருந் தகைத்தாய் நின்ற ஒருபெருந் தோற்றம் நீத்து
மின்னிவர் கலாபம் ஊர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போத மாற்றித் தொன்மைபோ லாகச் செய்தான். 450

பொருள் : என்ன இத்தகைய பன்னி நிற்றலும் - என்று இவ்வாறு சூரன்பேசி நிற்கையில், எவர்க்கும் மேலோன் - உயர்வறஉயர்ந்த மேலோனாம் குமரன், உன்னரும் தகைத்தாய் நின்ற ஒரு பெரும்தோற்றம் நீத்து - எவரும் எண்ணவும் ஒண்ணாமவ் நின்ற ஒப்பற்ற திருப்பெருவடிவை நீத்து, மின்னிவர் கலாபம் ஊர்ந்த வியனுருக் கொண்டு நண்ணி - மின்போல் ஒளிரும் கலாபமயிலூர்ந்து நிற்கும் சிறந்த வடிவுகாணத் தோன்றி, துன்னலன் போதம் மாற்றி - சூரபன்மனுக்கருளிய மெய்யுணர்வை மாற்றி, தொன்மை போல் ஆகச் செய்தான் - முன்போலவே அஞ்ஞான ஆணவவசத்தனாக நிற்கச் செய்தார்.

பொழிப்பு : இங்ஙனம் சூரன் பேசிநிற்கையில் மேலவராகிய குமாரசுவாமி தாம் காட்டி நின்ற விசுவரூபத்தை நீக்கி, கலாபமயில்வாகன மேலுள்ளவராகிய போர்க் கோலத்தோடு நண்ணி அவனுக்கு நல்கிய மெய்யுணர்வை மாற்றி, முன்போலவே அகத்தை வசந்தனாய் அஞ்ஞானியாகச் செய்தார்.

காரண னாகித் தானே கருணையால் எவையும் நல்கி
ஆருயிர் முழுது மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன் போதகம் அளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யுஞ் சூழ்ச்சியோ அரிய தன்றே. 451

பொருள் : காரணனாகித் தானே கருணையால் எவையும் நல்கி - தான் ஒருவனே நிமித்த காரணனாகியிருந்து, திருவருளாகிய சத்தி மூலம் அனைத்தையும் தோற்றுவித்து, ஆருயிர் முழுதும் மேவி - அரிய ஆன்மகோடிகளுள் பரமான்மாவாக நீங்காது நின்று, அனைத்தையும் இயற்றி நிற்கும் பூரணமுதல்வன் மைந்தன் - சடசித்தெனஉள்ள பிரபஞ்சம் முழுவதையும் இயக்கி நிற்கும் பரிபூரணராம் சிவனது மைந்தன், சூரனைப் போதகம் அளித்து மாற்றி - சூரனைப்மெய்யுணர்வு பெற்றவனாக்கியும், மாற்றிமயக்கஞ் செய்யும் சூழ்ச்சியோ அரியது அன்றே - மறித்தும் அவனை மெய்யுணர்வற்று மயங்கி நிற்கவும் செய்த சூழ்ச்சித்திறனோ அவர்க்கு அரியது, அரிதன்றுமிக எளிதே.

பொழிப்பு : தாமே உலகின் நிமித்த காரணனாக இருந்து, தமது அருட்சத்தி காரியமாகப் பிரபஞ்சம் அனைத்தையும் தோற்றுவித்து உயிர்க்குயிராய் நீங்காது நின்று அனைத்தையும் இயக்கி நிற்கும் பரிபூரணன் சிவன், அவன் மைந்தன் குமரன். இச்சூரன் ஒருவனைத்திரோத சத்தி அருட்சத்தி மூலம், அறியாமை அறிவுநிலைகளில் மாறிநிற்க மயக்கிய செயல் அவருக்கு அரியதோ அல்லவே.

குறிப்பு : முதல் துணை நிமித்தமாகிய காரணங்களில் மாயைமுதலும் சத்தி துணையும் இறைவன் நிமித்தமுமாம் ஐந்தொழிலும் இயற்றவல்லான் சிவன். அத்தகுவல்லானே குமரனும் என்பதுபட மைந்தன் என்றார். ஆதலின் மருள்தெருள் ஆக்கல் எளிதாம்.

அத்தகு காலை தானே அவுணர்கோன் உணர்ச்சி நீங்கிச்
சித்தம திடையே தொல்லைச் சீற்றமும் இகலும் உற்ற
மெய்த்தகு குழவித் திங்கள் விண்ணெறி செல்லச் செல்லும்
எத்திசை இருளும் அன்ன தகன்றுழி எழுந்த தேபோல். 452

பொருள் : அத்தகுகாலைதானே - அவ்வாறு பெருமான் மாற்றிய அளவிலேயே, அவுணர்கோன் உணர்ச்சி நீங்கி - சூரபன்மன்மெய்யுணர்வு நீங்கியவனாகிவிடவே, சித்தமதிடையே தொல்லைச் சீற்றமும் இகலும்உற்ற சூரனுளத்தில் முன்போலவே சினமும் பகைமை உணர்வும் உண்டாயின, அது

மெய்த்தகுகுழவித்திங்கள் விண்நெறிச் செல்லச் செல்லும் எத்திசைஇருளும் - உருவளரும் பிள்ளைமதி வானிலே வரவிலகிச் சென்ற எத்திசைகளிலுமுள்ள இருளானது, அன்னது அகன்றுழி எழுந்ததே போல் - அந்தப்பிறைமதி அப்பால் அகன்று செல்ல எவ்விடமும் மீண்டும் இருள்கவிந்தது போலிருந்தது.

பொழிப்பு : முருகவேள் அருளால் சூரனுளத்துதித்தது பிறைமதிபோல ஞானம் அதனால் அறியாமை இருள்விலகியது. பின்மறைத்தற் சத்தியின் தூண்டலால் பிறையகல இருள் கவிந்தது போலவே தெருள் நீங்கமருள்வந்து மண்டியது.

குறிப்பு : சூரன் உளத்துக்கு வானவெளியும், சிறிதுநேரம் தோன்றிமறைந்த ஞானத்திற்கு சிறிதுகாலப்பொழுது தோன்றிநின்று மறையும் பிறை மதியும், மீளவும் சூழ்ந்த அறியாமைக்கு பின்பு நிரம்பிய இருளும் உவமானங்கள்.
சிறிது பொழுதுதோன்றி நின்று மறைந்த குறைபாடுடைய மெய்யுணர்வுக்கு அப்படியான பிறைமதியை உவமைகாட்டினார். சூரன் ஞானம் பூரணமற்றது.

பிணிமுகம் உயர்த்து நின்ற பெருந்தகை தோற்றங் காணூஉத்
தணிவருஞ் சினமேற் கொண்டு சமரின்மேல் ஊக்கஞ் சேர்த்தி
அணியதென் றிண்மை என்னா அங்கையோ டங்கை தாக்கி
மணிமுடி துளக்கி நக்கு மற்றிவை புகல் உற்றான். 453

பொருள் : பிணிமுகம் உயர்த்துகின்ற பெருந்தகை தோற்றம் காணூஉ - மயில்வாகனத்தில் வரும் பெருந்தகையாளராம் பெருமானது தோற்றத்தைக்கண்டு, தணிவரும் சினம்மேற்கொண்டு - தணிதற்கரிய சினம்மிக்கவனாய், சமரின்மேல் ஊக்கம் சேர்த்தி சமர்புரிவதில் ஊக்கம் கொண்டு, என்திண்மை அணியது என்னா அங்கையோடு அங்கைதாக்கி - என்மன உறுதி நன்றென இகழ்ச்சியாகக் கூறி கையோடுகையை அடித்து, மணிமுடிதுளக்கி நக்கு - மணிமுடியுள்ள தலை அசைத்து அட்டகாசம் செய்து, மற்றிவை புகலலுற்றான் - பின்வருமாறு பேசுவானாயினான்.

பொழிப்பு : மயிலூர்ந்துவரும் குமரன் தோற்றங்கண்டு சூரன் சினம்மிக்குப் போரில் ஊக்கமாய், என் உடல்உள உறுதி நன்றென எள்ளி, கைகொட்டிப் பெருநகை செய்து பின்வருமாறு பேசுகின்றான்.

குறிப்பு : மயில் வாகனமாய்ச் சுமப்பவன் இந்திரன் சூரனுக்குப் பிறவிப்பகைவன். அவனை ஊர்தியாக்கி துணை போந்தவகையால் சூரபன்மனுக்கு சினமும் பகைமையும் சமரில் ஊக்கமும் கிளர்வதாயிற்று. சிறிதுநேரத்துக்கு முன்பரவசனாய் நின்று பேசிய நிலையை நினைந்து எள்ளி நகைத்தான். அணியது - அழகிதுநன்று.

சேயுரு வமைந்த கள்வன் செருவினை இழைக்க லாற்றான்
மாயையி னொன்று காட்டி எனையிவண் மையல் செய்தான்
ஆயது துடைத்தேன் என்றால் ஆரெனக் கொப்புண் டென்றுங்
காயம தழிவி லாதேன் கருத்தழி கின்ற துண்டோ. 454

பொருள் : சேயுரு அமைந்த கள்வன் செருவினை இழைக்கலாற்றான் - குழந்தை உருவம் கொண்ட இந்த மாயக்கள்வன், என்னுடன் செருச் செய்யச்சத்தியிலனாகி, மாயையின் ஒன்றுகாட்டி எனை இவண்மையல் செய்தான் - தன் சூழ்ச்சியால் மாயாவடிவொன்றைக் காட்டி என்னை இங்குச் சிறிது மயங்கி நிற்கச் செய்தான், ஆயது துடைத்தேன் என்றால் ஆர்தான் எனக்கு ஒப்புண்டு -அந்தமயக்கத்தை மாற்றி மனந்தெளிந்துவிட்டேன் என்றால் எனக்குயார் நிகரானவராவார், என்றும் காயமது அழிவிலாதேன் கருத்து அழிகின்றது உண்டோ

- எந்நாளும் அழியாதவச்சிரயாக்கையுடைய நான் திண்ணிய என்உள்ளத்துணிவை அழியவிடுவதும் உண்டாகுமோ.

பொழிப்பு : குழந்தை வடிவுள்ள குமரனாம் கள்வன் சமராட வலியிலனாகி என்முன் மாயா வடிவொன்றைக் காட்டி சிறிதே என்னை மதிமயக்கி விட்டான். நான் அதனை விரைவிலே துடைத்து ஒழித்தேனாதலால் எனக்குயார் நிகராகுவார், அன்றியும் அழிவதாம் உடம்பையே அழியாவுடலாக்கியுள்ள யான் அழிவிலவாம் உயிர் உள்ளங்கள் அழிவுறவிடுவேனோ.

குறிப்பு : தன்னையே அளவு கருவியாக அளப்பார் போலவே சூரபன்மனும் குமரப்பிரானையும் ஆற்றாராய் மாயம் செய்து வெல்ல எண்ணினர் என்றும் பிறர்தயவு உண்டாமென்று குழந்தையுருவில் வந்தாரென்றும் மயங்கிக்கூறினான்.

குன்றினை எறிந்த வேற்கைக் குமரனோ டமர தாற்றி
வென்றிடு கின்றேன் மெல்ல மேலது நிற்க இந்த
வன்றிறற் சமரை மூட்டி நின்றவா னவரை யெல்லாம்
தின்றுயிர் குடித்துமுன்னென் சினஞ்சிறி தகல்வன் என்றான். 455

பொருள் : குன்றினை எறிந்த வேற்கைக் குமரனோடு - மாயமலையை மாய்த்த ஞானவேல் ஏந்தியகரமுள்ள கந்தனோடு, அமர தாற்றி மெல்ல வென்றிடுகின்றேன் - சமராடி மெல்ல வெற்றி கொள்வேன், மேல் அதுநிற்க - பின்பு அக்காரியம் இவ்வளவில் நிற்பதாக, முன் இந்த வன்திறந் சமரை மூட்டி நின்றவானவரை எல்லாம் - முதலிலே இந்த வலிய திறல் மிக்க போரை மூளச்செய்து அதன் காரணகர்த்தராய் நிற்கின்ற தேவர்கள் யாவரையும், கொன்று உயிர்குடித்து முன் என்சினம் சிறிது அகல்வன் என்றான் - கொன்றுதின்று உயிரைக் குடித்து முன்பு எனது சினப்பசியை சிறிது ஆற்றுவேன் என்றான்.

பொழிப்பு : குன்றம் எறிந்த குமரனோடு சமர்செய்து மெல்லவெல்வேன் அது பின்செய்வது, அதுநிற்க, முதலில் இந்தக்கொடிய யுத்தத்தை

மூட்டி முதற்காரணம் போல நிற்கும் தேவர் யாவரையும் கொன்று தின்று உயிர் குடித்து என்சினப்பசி சிறிது தணிப்பேன் என்றான்.

குறிப்பு : தேவர்பகை சிறிதாதலில் சினப்பசி சிறிதே ஆற்றுவேன் என்றும், செவ்வேள் பெரும்பகை ஆதலின் அதனைப் பின் மாற்றுவேன் என்றும் கருதினான், தின்று குடித்து நயமொழிகள்.

ஆயது துணிவாக் கொண்ட அவுணர்கள் மன்னன் பின்னும்
தீயதோர் தொல்லை மாயச் சீர்கொள்மந் திரத்தைப் பன்னி
ஞாயிறு மருட்கை கொள்ள ஞாலமுங் ககன முற்றும்
மாயிருள் உருவங் கொண்டு மறைந்துநின் றார்க்க லுற்றான். 456

பொருள் : ஆயது துணிவாக் கொண்ட அவுணர்கள் மன்னன் - அவ்வாறு செய்தலை மனத்திலே துணிந்த சூரபன்மன், பின்னும் தீயதோர் தொல்லை மாயச்சீர் கொள் மந்திரத்தைப் பன்னி - பின்னரும் தீமைநிறைந்த பழைய மாயச்சிறப்புமிக்க ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்து, ஞாயிறு மருட்கை கொள்ள - சூரியனும் ஒளியின்றி மருளவும், ஞாலமும் ககனம் முற்றும் - பூமியும் ஆகாயமுமாகிய எங்கும், மாயிருள் உருவங்கொண்டு - பேரிருள் வடிவினாலே போர்த்துக்கொண்டு, மறைந்துநின்று ஆர்க்கலுற்றான் - தனதுருவும் செயலும் அவ்விருளிலே மறைந்து கிடக்க நின்று பெரிய ஆரவாரமுழக்கம் செய்தான்.

பொழிப்பு : தன்செயலைத் துணிந்த சூருன், பின்னும் தீயமாயச் செயல்வல்ல மந்திரம் ஒன்றைச் செபித்து, அதனாற்றலால், பூமி ஆகாயம் எங்கும் சூரியனும் ஒளியிழந்து மருள இருள் செறிவித்து உள்ளேமறைந்து நின்று பேராரவாரம் செய்தான்.

குறிப்பு : பன்னி - செபம் செய்து மாயச்சீர்கொள் மந்திரம் - மாயச்சிறப்பான வலிமை. மறைந்து நின்று ஆர்த்தல் - தேவர்கள் ஆர்ப்பொலியன்றித் தன் உருவும் செயலும் காணவொட்டாது கரந்த நிலை.

தெண்டிரை நேமி தன்னில் தீவிடம் எழுந்த தென்ன
எண்டிசை எல்லை முற்றும் இருநில வரைப்பும்எல்லா
அண்டமு மாகி ஈண்டும் ஆரிருள் வடிவை வானோர்
கண்டனர் அவுணன் மாய மீதெனக் கலக்க முற்றார். **457**

பொருள் : தெண்டிரை நேமிதன்னில் தீவிடம் எழுந்ததென்ன - தெளிந்த திரை எறியும் பாற்கடலில் தீய விடம் எழுந்தது போல, எண்திசை எல்லைமுற்றும் இருநிலவரைப்பும் - எட்டுத்திசை எல்லையும் பெரு நிலப்பரப்பும், எல்லா அண்டமுமாகி ஈண்டும் - அண்டவெளி எல்லாமாக எங்கும் சூழ்ந்து செறிந்த, ஆரிருள் வடிவை பேரிருள் வடிவை, வானோர் கண்டனர் ஈது அவுணன் மாயம் எனக் கலக்கமுற்றார் - தேவர்கள் கண்டனர், கண்டபோதே இது சூரன் மாயமென எண்ணி உளம் கலங்கினர்.

பொழிப்பு : பாற்கடலில் ஆலகாலம் எழுந்து விரைவில் எங்கும் கலந்தது போலவே திக்கு பூமி வானம் அண்டவெளி எல்லாம் இருள் மண்டி நிற்றலைத் தேவர்கள் கண்டனர், கண்டபோதே இது சூரனின் மாயச் சூழ்வினை என்றுணர்ந்து நெஞ்சம் கலங்கினர்.

அத்துணை அவுணர் மன்னன் அவ்விருள் இடையே பாய்ந்து
பத்திகொள் சிகர மன்ன ப.றலை அளவை தீர்ந்த
கைத்தல முளதோர் யாக்கை கதுமெனக் கொண்டு விண்ணோர்
மெய்த்தொகை நுகர்வான் உன்னி விண்ணிடைக் கிளர்ந்து சென்றான். 458

பொருள் : அத்துணை அவுணர் மன்னன் அவ்விருளிடையே பாய்ந்து - வானோர் கலக்கமுறும் வேளையில் அசுரேந்திரனாம் சூரன் அவ்விருளினிடையே வேகமாகப் பாய்ந்து செல்பவனாகி, பத்திகொள் சிகரமன்னப. .றலை - வரிசையான மலைச்சிகரம் போன்ற பலதலைகளும், அளவை தீர்ந்தகைத்தலம் உளதோர் யாக்கை - அளவில்லாத கைகளும் உள்ள ஒரு மாய உடம்பை, கதுமெனக் கொண்டு - வேகமாக எடுத்துக்கொண்டு, விண்ணோர் மெய்த் தொகை நுகர்வான் முன்னி - தேவர்களின் ஊனுடம்புத்தொகையை பிடித்துத் தின்னக்கருதி, விண்ணிடைக் கிளர்ந்து சென்றான் - வான்மீது வாவிச் செல்வானாயினான்.

பொழிப்பு : அப்போது சூரன் இருளிடையே பாய்ந்து, மலைச்சிகரம் போன்ற வரிசையான பலதலைகளும் கைகளும் உள்ள ஒரு மாயவடிவுடன், விரைந்து விண்ணவர்களின் உடம்பைப்பற்றிப் பசியாற எண்ணி வானிலே வாவிச் செல்வானானான்.

குறிப்பு : முன்னம் வானவரைத் தின்று உயிர்குடித்து என்று துணிவுசெய்தவாறே, வானோர் மெய்த்தொகை நுகர்வான் என்பது உடலைச்சுவைத்து உயிர்குடிப்பதே எனலாம்.

ஆடியல் கொண்ட சூரன் அந்தரத் தெழலும் வானோர்
கூடிய ஓதி தன்னால் குறிப்பினால் தெரிந்து நம்மைச்
சாடிய வருவன் என்னாத் தலைத்தலை சிதறி நில்லா
தோடினர் கூற்றை நேர்ந்த உயிரென இரங்க லுற்றார். 459

பொருள் : ஆடியல் கொண்ட சூரன் அந்த ரத்து எழலும் - கொல்லும் இயல்பையே குறியாக எண்ணிய சூரன் வானிலே கிளர்ந்தெழவே, விண்ணோர் கூடிய ஓதிதன்னால் குறிப்பினால் தெரிந்து - தேவர்கள் தமக்குள்ள ஞானத்தாலும் சூரனின் செயலிலுள்ள உட்குறிப்பாலும் எதிர்வருவதைத் தெரிந்து, நம்மைச் சாடியவருவன் என்னா - இவன் எம்மைக் கொல்லவே வருகிறான் என்று கூறியபடி, தலைத்தலை சிதறி நில்லாது ஓடினர் - நிலைகொள்ளாதவராய் திரும்பிய திசைகள் தோறும் சிதறி ஓடுவாராயினர், கூற்றை நேர்ந்த உயிரென இரங்கலுற்றார் - இயமனைக் கண்ட உயிபோல இரங்கினார்கள்.

பொழிப்பு : கொலையைக் குறியாக் கொண்டு சூரன் வானில் எழுதலும், வானோர் தமது ஞானத்தாலும் சூரன் செயற் குறிப்பாலும் இவன் எம்மைக் கொல்லவே வருகிறான் என்று கூறுபவராய் அஞ்சி நில்லாமலே சிதறிப்பலதிசைகளிலும் ஓடுவாராயினர். இயமனைக்கண்ட உயிர் போல மிகவருந்தினர்.

குறிப்பு : ஆடியல் - அடுதல் + இயல் - விகாரம். ஓதி - ஞானம். சாடிய - செய்யிய வாய்பாட்டு எதிர்கால வினை கொல்வதற்கு. தலைத்தலை - கண்டகண்ட இடமெல்லாம்.

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்குங் கடவுளே ஓலம் ஓலம். 460

பொருள் : நண்ணினர்க்கு இனியாய் ஓலம் - ஆசாபாசங்களை அறுத்து நின் பாதமே பற்றென்று அடையும் அன்பர்க்கு இனியவரே ஓலம், ஞான நாயகனே ஓலம் - மெய் யன்பராய் ஞான வேட்கை கொண்டுறுவார்க்குப் போதித்தருளும் ஞானபண்டிதனே ஓலம், பண்ணவர்க்கு இறையே ஓலம் - நம்மாலே தொழப்படும் தேவர்யாவரும் தொழநின்றருளும் இறைவனே ஓலம், பரஞ்சுடர் முதலே ஓலம் - எல்லாச் சுடரொளிகளிலும் வியாபித்து நின்று ஒளிதரும் மேலாகிய மூலஒளி வடிவினரே ஓலம், எண்ணுதற்கு அரியாய் ஓலம் - இப்படியன் என்று கற்பிதம் பண்ணிக்காணக காட்டற்கரியவனே ஓலம், யாவையும் படைத்தாய் ஓலம் - கடசித்துப்பிரபஞ்சம் முழுவதையும் படைத்து நடத்தி நிற்பவனே ஓலம், கண்ணுதற்பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம் - நெற்றிநாட்டத்தராகும் பரமேசுவரர் அக்கண்ணில் எழுவித்த தீப்பொறிகளாலே தோற்றுவித்தருளிய கடவுளே ஓலம் ஓலம்.

பொழிப்பு : சார்ந்தார்க்கு இனிய புகலிடமே, ஞானபோதகபண்டிதனே, தேவாதி தேவரே, பரஞ்சோதி யாம் மூலமுதலே, சிந்தனைக் கெட்டாதவனே, அகிலமும் ஆக்கி நடத்துபவனே, நெற்றிக்கண் நிமலர் நல்கியகடவுளே ஓலம் ஓலம்.

குறிப்பு : "என்னிலும் எனக்கினியான் ஒருவன் உளன்" அவன் என்னுளே மன்னும் இன்னம்பர் ஈசனே எனும் அப்பர்வாக்கு அறுமுகத்தையனுக்குமாம். பண்ணவர்க்கு இறை என்றது தேவசேனாபதிப் பெருமான் எனலுமாம்.
ஓலம் - பயந்தீர்த்தருளவேண்டி எழுப்பும் ஒலிக்குறிப்புரை.

தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம். 461

பொருள் : தேவர்கள் தேவே ஓலம் - எவ்வகைத் தேவர்க்கும் மேலாம் பெருந்தேவரே ஓலம், சிறந்த சிற்பரனே ஓலம் - சிறந்த அதிசூக்கும ஞானமுதல்வரே ஓலம், மேவலர்க்கு இடியே ஓலம் - பகைமையால் சாராதாருக்கு இடியேறு போலப்பயங்கரரே ஓலம், வேற்படை விமலா ஓலம் - ஞானசத்தியாம் வேலேந்திய மலரகிதராம் பிரானே ஓலம், பாவலர்க்கெளியாய் ஓலம் - பாவலராகப் படிப்பரசுவார்க்கு எளிதில் வந்தருள்பவரே ஓலம், பன்னிரு கரத்தாய் ஓலம் - பன்னிரு திருக்கரங்கள் உள்ளவரே ஓலம், மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம் - மும்மூர்த்திகளை அதிட்டித்து நின்று முத்தொழிலாற்றுவித்தும் நிராதாரமாய் ஏகனாய் நின்றருளும் முருகமூர்த்தியே ஓலம் ஓலம்.

பொழிப்பு : தேவர்க்கும் தேவரே, ஞானபரமானவரே, வேண்டார்க்கு அசனி போன்றவரே, வேற்கரத்திறைவரே, பாவலருக்கு எளிதில் எட்டுபவரே, பன்னிரு திருக்கரத்தரே, மூவருமாகியும் ஏகமாயும் நின்றருளும் மூர்த்தியாம் முருகவேளே ஓலம் ஓலம்.

குறிப்பு : "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கல்லால் நலமிலன் நாடொறும் நல்குவான் நலன்" என்ற அப்பர் அருள்வாக்கின் விளக்கமானது இப்பாடல்.

கங்குலின் எழுந்த கார்போல் கனையிருள் மறைவின் ஏகி
நுங்கிய செல்வான் சூரன் ஓடவும் நோன்மை யில்லேம்
எங்கினீ உய்வம் ஐய இறையுநீ தாழ்க்கல் கண்டாய்
அங்கவன் உயிரை உண்டெம் மாவியை யருளு கென்றார். 462

பொருள் : கங்குலின் எழுந்த கார் போல் கனை இருள் மறைவின் ஏகி - நடுயாமத்தில் எழுந்த கருமுகில் போலவே, செறிந்த மாய

இருளிடையே புலப்படாது நுழைந்துவந்து, நுங்கிய செல்வான் சூரன் - எம்மைப்பற்றி விழுங்குமாறு வருகின்றான் சூரன், ஓடவும் நோன்மை இல்லேம் - அகப்படாது ஒளித்தோடவும் ஆற்றலும் வழியும் இல்லாதவராயினோம், எங்குஇனி உய்வம் - நாம் இனி எவ்விடத்து எவ்வாறு உய்வேமோ அறியேம், ஐய - எமை ஆளுடைய சுவாமி, இறையும் நீ தாழ்க்கல் கண்டாய் - ஒருகணமேனும் காலதாமதம் செய்யாதீர் யாவும் அறிவீர், அங்கு அவன் உயிரை உண்டு எம் ஆவியை அளித்தி என்றார் - ஆதலின் அந்தக் கொலையாளியாகிய சூரபன்மன் உயிரை உண்டருளி, அடியேமாகிய எமக்கெல்லாம் உயிர்வாழ்ந்திருக்கும் ஆக்கத்தை அருளுவீராக என்றனர் தேவர்யாவரும்.

பொழிப்பு : ஐயனே! நள்ளிருளில் எழுந்த கார்முகில் போலச் சூரன்மாய இருளிலே மறைந்து எம்மை விழுங்கவருகிறான், தப்பி ஓடியுய்யவும் வலியிலேம் ஆதலின் கணமும் தாமதியாது அச்சூரனது உயிரைவாங்கிக் கொண்டு எமக்கு வாழ உயிரைத் தருவீராக என்றிரந்தனர் தேவர்.

குறிப்பு : இருளிலே கண்பார்வை இழந்தமையாலும் அவன் வலி விஞ்சியதாயிருப்பதாலும் ஓடவும் நோன்மை இல்லேம் என்றனர் நொடிப்பொழுது தாமதமாயின் அவர் எம்மை முடிப்பது திண்ணம் என்று அஞ்சினர் தேவர்.

தேற்றலை போலு மீது சிறிதுநீ பாணிப் பாயேல்
ஆற்றலின் மறைந்து நின்றே அகிலமுந் தானே யுண்ணும்
மாற்றலன் ஆவி தன்னை வாங்குதி வல்லை யென்னாப்
போற்றினன் முதல்வன் தன்னை மயூரமாய்க் கொண்ட புத்தேள்.463

பொருள் : தேற்றலை போலும் ஈது சுவாமி தேவரீர், சூரன் குறிப்பும் எங்கள் நிலையும் தெரிந்திவீர்போலும், சிறிது நீ பாணிப்பாயேன - மிகச் சிறுபொழுதுதானும் தாமதஞ் செய்வீரேல், ஆற்றலின் மறைந்து நின்றே தனதாற்றலால் மறைந்துநின்றுஅகிலமும் தானே உண்ணும் தனதாற்றலினால் மறைந்து நின்று அகிலஉலகையும் தானொருவனே

உண்டொழிப்பான், மாற்றான் - பகைவனாகிய சூரன் இந்தச் குறிக்கோளை மாற்றமாட்டான், ஆவிதன்னை வல்லைவாங்குதி என்று - ஆதலினால் சூரன் ஆவியை அதிவிரைவிலே கவர்ந்து கொள்வீராக என்னா, முதல்வன் தன்னை மயூரமாய்க் கொண்டபுத்தேகள் போற்றினான் - தம்தலைவராகிய முருகவேளைப் போற்றினான் அப்பெருமானை மயிலவாகனமாகச் சுமந்து கொண்டு நிறகும் இந்திரன்.

பொழிப்பு : சுவாமி நிலைமையைத் தெறிந்திலீரோ? கணமேனும் தாமதிப்பீராயின் இவன் எம்மையன்றி அனைத்துலகையுமே மறைந்து நின்று தனதாற்றலால் விழுங்கிவிடுவான் மாற்றலனாம் ;சூரன் எண்ணத்தை மாற்றகிலான் ஆதலின் அவன் ஆவியை வாங்கி எமக்கு ஆவிப்விச்சை தருவீர் என்று பிரானை மயிலாய்ச்சுமந்து நிற்கும் இந்திரன் போற்றி வேண்டினான்.

குறிப்பு : மாற்றவன் - பகைவன், எண்ணத்தை மாற்றான் இரு பொருள் கொண்டபுத்தேன் - ஆட்கொள்ளாப்பெற்ற இந்திரன் எனச் செயப்பாட்டு விளைப் பெயரச்சமுமாகலாம் இருபொருள்.

அங்கவர் மொழியும் வெய்யோன் ஆற்றலுந் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந் திருநெடு வேலை நோக்கி
இங்கிவன் ஆகம் போழ்ந்தே ஏகுதி இமைப்பின் என்னாத்
தூங்கம தூடைய சீர்த்திச் சூரன்மேற் செல்லத் தொட்டான். 464

பொருள் : செவ்வேன் - தேவசேனாபதிப் பெருமாள், அங்கவர் மொழியும் - தம்மால் ஆளப்படும் அத்தேவர்களது ஓல மொழியும், வெய்யோன் ஆற்றலும் தெரிந்து - இனித்தமக்கு இனியானாகும் பக்குவம் பெற்ற சூரபன்மனின் - ஆற்றலையும் திருவுளங்கொண்டு, செங்கையதொன்றில் வைகும் திருநெடுவேலை நோக்கி - தம்செவ்விய திருக்கரத்தில் ஆணையை நோக்கி வீற்றிருக்கும் திருத்தக்க நீண்ட வேலைத் திருநோக்கம் செய்து, இங்கிவன் ஆகம் போழ்ந்தே ஏகுதி இமைப்பில் என்னா - வேலே இமைப்போதில் சென்று இங்கு இச்சூரனது உடம்பைப் பிளவாக்கிவிட்டு வருவாயாக

என்றுபணித்து, துங்கமது உடைய சீர்த்திக் சூரன்மேற் செல்லத் தொட்டான் - உத்துங்கமான சிர்த்தியுள்ள சூரன்மேற் செல்லுமாறு வேலைத் தூண்டியருளினார்..

பொழிப்பு : தேவர்களின் அபயம் வேண்டுதலையும் சூரனது ஆற்றலையும் திருவுளம் கொண்டுசெவ்வேட்பிரான், தனது திருக்கரத்துள்ள வேல் நாயகத்தை நோக்கி நீ சென்று இவனது உடலைப் பிளந்து விட்டு விரைவில் மீளுக என்று பணித்துச் சூரபன்மன் மேற் செல்ல விடுத்தருளினார்.

குறிப்பு : சூரசங்காரத்துக்கென்றே சிவபிரானால் கொடுக்கப்பெற்றுப் பணிமுற்ற அவர்கரத்தில்ஆனையை நோக்கியிருந்த வேல் ஆதலின் "செங்கையை தொன்றில் வைகும் திருநெடுவேல்" என்று கூறப்பட்டது.

ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட
மயிருள் உருவ முற்றும் வல்வீரைந் தகன்ற தன்றே. **465**

பொருள் : ஏ என முருகன் தொட்ட இருதலைப்படைத்த ஞாங்கர் - "ஏ" என்ற சொல் முடிப்பு முன் விரைவாகவே முருக வேளாலே தூண்டப்பட்ட இருபுறமும் கூர்ந்த துதிகளைக் கொண்ட வேலானது, ஆயிரகோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றி - ஆயிரகோடி சூரியர் ஒன்று திரண்டது போலப் பேரொளிப் பிழம்பாக விளங்கித் தோன்றி, தீ அழற்சிகழி கான்று சென்றிட - தீயினது சுடும் சுவாலைகளைச் கக்கியவாறு செல்லுதலும், அவுணன் கொண்ட மாயிருள் உருவம் முற்றும் - சூரன் எடுத்துக் கொண்ட மாயமானபேரிருள் வடிவம் முற்றும், வல்விரைந்த கன்றதன்றே - அதிவிரைவில் சுவடும் இல்லாது ஒழிந்தகன்றது.

பொழிப்பு : ஏ என்ற ஒலிபிறந்து முடியுமுன் முருகன் ஏவிய வேல், பலசூரியர் ஒருங்கு உதித்தது போலப் பேரொளியுடன், தீச்சுவாலைகளை உமிழ்ந்து கொண்டு செல்லவே அவ்வொளிமுன்

நிற்க மாட்டாது சூரபன்மன் கொண்டமாய இருளும் வடிவும் மிக விரைவில் சுவடும் இலாமலே ஒழிந்த கன்றது.

அன்னவன் தனது மாயம் அழிந்ததும் ஐயன் வைவேல்
முன்னுறு மாறு நோக்கி முடிவிலா வரத்தி னேனை
என்னிவட் செய்யும் அம்மா இவன்விடும் எ.்க மென்னா
உன்னினன் முறுவல் எய்தி உருகெழு சீற்றங் கொண்டான். 466

பொருள் : அன்னவன் - அந்தச்சூரன், தனது மாயம் அழிந்ததும் - தனது மாயமெல்லாம் அழிந்ததையும், ஐயன் வைவேல் முன்னுறுமாறும் நோக்கி - எம்பிரானது வேல் வெற்றி வீரமுடன் தன்னை நோக்கி வருவதையும் கண்டு, முடிவிலா வரத்தினேனை இவன் விடும் எ.்கம் என் இவண் செய்யும்ம்மா என்னா அழிவிலாவரம் பெற்ற என்னை இவன் விடும் இவ்வேல் என்ன செய்ய வல்லது என்று, உன்னினன் முறுவல் எய்தி - எண்ணியவனாக நகை செய்து, உருகெழு சீற்றம் கொண்டான் - அஞ்சுதகும் கடும் சினம் கொண்டவனானான்.

பொழிப்பு : சூரன் தனது மாயம் அழிந்ததையும் அழித்தவேல் தன்னெதிரே வருவதையும் கண்டு அழிவிலா வரமுள்ளோனை இவன்வேல் என்செய்யுமென்று எண்ணி நகைத்து அஞ்சுதரு சினமுற்றான்.

வாரிதி வளாகந் தன்னை மாதிர வரைப்பை மீக்கீழ்ச்
சேருறு நிலயந் தன்னைத் திசைமுகன் முதலா வுள்ள
ஆருயி ரோடும் வீட்டி அடுவன்மே லிதனை என்னாச்
சூரெனும் அவுணன் மற்றைத் தொடுகடல் நடுவண் ஆனான். 467

பொருள் : வாரிதிவளாகந்தன்னை - கடற்பரப்பையும், மாநிலவரைப்பை - பெரு நிரப்பரப்பையும், மீக்கீழ் சேருறு நிலையந்தன்னை - புவியின் மெலும் கீழும் உள்ள உலகங்களையும், திசைமுகன் முதலாயுள்ள ஆருயிரோடும் வீட்டி - பிரமாமுதலாக ஆங்காங்குள்ள உயிர்களோடும் அழித்து, மேல்

- அதன்பின், இதனை அடுவன் என்னா - இவ்வேலையும் அழிப்பேன் என்றெண்ணி, சூர் எனும் அவுணன் மற்றைத் தொடுகடல் நடுவணானான் - சூரனாகிய அவுணன் சமுத்திரமத்தியைச் சேர்ந்தான்.

பொழிப்பு : சமுத்திரம் பூமி மேல்கீழ் உலகங்கள் அங்குள்ள பிரமதேவர் முதலிய உயிர்க்குலம் ஆகிய அனைத்தையும் அழித்து பின்பு வேலையும் அழிப்பேன் என உன்னி சமுத்திரமத்தியில் போய்ச் சேர்ந்தான்.

வன்னியின் அலங்கல் கான்று வான்தழை புகையின் நல்கிப்
பொன்னென இணர்கள் ஈன்று மரகதம் புரையக் காய்த்துச்
செந்நிற மணிகள் என்னத் தீம்பழங் கொண்டு கார்போல்
துன்னுபல் கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான். 468

பொருள் : வன்னியின் அலங்கல்கான்று - அக்கினிக்கொழுந்து போலச் சிவந்த இளந்தளிர்களைத் தளிர்த்தும், வான்தழைபுகையின் நல்கி - முதிர்ந்த இலைகளைப் புகைபோலக் கொண்டும், பொன் என கிணர்கள் ஈன்று பொன்போல பூக்கொத்துக்களை தோற்றுவித்தும், மரகதம்புரையக் காய்த்தும் - மரகதமணி போற்பசியகாய்களைக்காய்த்தும், செந்நிற மணிகள் என்னத் தீம்பழம்கொண்டும் - சிவந்த மாணிக்கமணிபோன்ற இனிய கனிகளைத் தூங்கவிட்டும், கார்போல் துன்னுபல்கவடுபோக்கி - முகில்போல விளங்கிச் செறிந்த பல கிளைகளையும் பல திசைகளிலும், நீட்டியும், சூதமாய் அவுணன் நின்றாய் - ஒருமாமர உருவுகொண்டு சூரபன்மன் நின்றான்.

பொழிப்பு : தீக்கொழுந்துபோல இளந்தளிரும், புகைபோல் முதிர்ந்த இலையும், பொன்னிறப் பூங்கொத்தும், மரகதம்போற் காயும், மாணிக்கமணிபோற்பழமும், கருமுகில்போலப்பலபலதிசையும் அடர்ந்து நீண்ட கிளைகளும் கொண்டு மாமரவடிவாகிச் சூரன் நின்றான்.

குறிப்பு : இப்பாடல் முதல் சூரன் எடுத்த மாயமாமரத்தின் இயல்புபற்றிக் கூறுகின்றன சில பாடல்கள். இதுவும் ஒடுக்கமுறையாம்.

மாசறு ககன கூட வரம்பதன் அளவு மேல்போய்
ஆசையின் எல்லை காறும் அளவைதீ ருலவை ஓச்சிக்
காசினி அகலந் தாங்குங் கச்சபத் துணைத்தூ ரோட்டிப்
பாசடை பொதுளி வெஞ்சூர் பராரைமால் வரையின் நின்றான். 469

பொருள் : மாசறுகன கூடவரம்பதன் அளவும் மேல்போய் - மாசில்லாத வானமுகட்டின் எல்லைவரை மேலே உயர்ந்து, ஆசையின் எல்லைகானும் அளவை தீர் உலவை ஓச்சி - திக்கின் எல்லைவரையும் அளவிறந்த கிளைகளைநீட்டி, காசினிஅகலம் தாங்கும் கச்சபத்துணை தூர்ஓட்டி- பூப்பரப்பைச் சுமந்திருக்கிற ஆதிகூர்மம்வரையும் வேர்களை நிலத்துள்ளே செலுத்தி, பாசடைபொதுளி - பச்சிலைகளும் எங்கும் செறியக்கொண்டு, வெஞ்சூர் பராரைமால்வரையில் நின்றான் - கொடிய சூரன் பருத்த அரை(நடு)ப் பாகத்தையுடைய பெருமலைபோல நின்றான்.

பொழிப்பு : வான்முகடுவரை வளர்ந்து திக்கெல்லைவரை கிளைநீட்டி, ஆமைவரையும் வேர்களை நிலத்துள்ளே செலுத்தி, பச்சிலைகள் நிறையப்பெற்றுச் சூரன் பருத்த அடியுள்ள மால்வரைபோல மாமரமாய் நின்றான்.

குறிப்பு : ககனம் - வான், ஆசை - திசை, உலவை - கிளைகள், கச்சபம் - கூர்மம் - ஆமை, தூர் - வேர், பாசடை - பச்சிலை பொதுளல் - அடர்தல் பராரை - பருமை + அரை - பருத்தநடுப்பாகம்.

ஓராயிர நூற தென்னும் ஓசனை அளவை யான்ற
பராரைமா வுருவ மாகிப் பலவுடைச் சினைமாண் கொம்பர்
விராவிய சூழ்ச்சி தன்னால் வேலைகள் முழுதும் விண்ணும்
தராதல வரைப்பும் எல்லாந் தண்ணிழல் பரப்பி நின்றான். 470

பொருள் : ஓராயிர நூறு அதென்னும் ஓசனை அளவை ஆன்ற - ஓரிட்சம்யோசனைப்பரப்பு எனும் எல்லைவரை அகன்ற. பராரைமா உருவமாகி - பருத்த அடிமரமுள்ள மாமரமாகிய உருவெடுத்து. பலவுடைச்சினை மாண்கொம்பர் விராவிய சூழ்ச்சிதன்னால் - பலவாயுள்ள சிறுகிளைகளும் பெரிய கொம்பர்களும் செறிந்திருந்த சூழ்சியாலே, வேலைகள் முழுதும் விண்ணும்தராதலவரைப்பும் எல்லாம் - சமுத்திரங்கள் ஆகாயம் நிலப்பரப்பு ஆகிய எல்லா இடங்களும், தண்நிழல் பரப்பிநின்றான் - குளிர்நிழல் பரப்பிநின்றான்.

பொழிப்பு : ஓரிட்சம் யோசனைப் பரப்பளவாக அகன்ற பெரிய அடியோடுள்ள மாமரமாகி பலவாகிய சிறுகிளை பெரும்கொம்பர்களும் செறிந்துள்ள சூழ்ச்சியினாலே சமுத்திரம் வானவெளிபூமி ஆகிய எங்கும் குளிர்ந்த நிழலைப்பரப்பி நின்றான் சூரன்.

நெடுங்கலை முயல்மான் கொண்டு நிலவும்அம் புலியும் நீத்தம்
அடுங்கதிர் படைத்த கோவும் அளகையை யாளி தானுங்
கடங்கலுழ் கின்ற ஆசைக் கரிகளுங் கடாவிற் செல்லும்
மடங்கலும் வெருவச் சூரன் மாவுருக் கொண்டு நின்றான். 471

பொருள் : நெடுங்கலை முயல்மான் கொண்டு நிலவும் அம்புலியும் - வளரும் கலைகளும் முயல்மான் என்று சொல்லப்படும் களங்கங்களுமுள்ள. சந்திரனும், நீத்தம் அடும் கதிர்படைத்த கோவும் - நீர் நிலைகளின் நீரை ஆற்றச்செய்யும் கிரணங்களுள்ள சூரியனும், அளகையை ஆளிதானும் - அளகாபுரியை ஆளும்குபேரனும், கடம் கலுழ்கின்ற ஆசைக்கரிகளும் - மதம்பொழிகின்ற திக்குயானைகளும், கடாவிற்செல்லும் மடங்கலும் வெருவ - எருமைக்கடாவை வாகனமாகக் கடாவிவரும் இயமனும் அஞ்ச சூரன்மா உருக்கொண்டு நின்றான் - சூரபன்மன் மாவின் உருக்கொண்டு நின்றான்.

பொழிப்பு : சந்திரனும் சூரியனும் குபேரனும் திக்குயானைகளும் இயமனும் அஞ்சும்படி சூரன்மா (குதிரை) உருவம் கொண்டு

நின்றான். கலையும் முயலும் மானும் புலியும் கோ(பசு)வும் யாளியும் கரி(யானை)களும் கடாவும் மடங்க(சிங்கம்)லும் ஆகிய மிருகங்களின் பெயரும் தொனிப்பொருளாக அவைகள் அஞ்சவே மா(குதிரை) உருவாய் நின்றான் எனவும் ஒரு பொருள் தோன்ற நிற்றல் காணலாம்.

மிக்குயர் உவணம் அன்ன மிசைப்படும் எகினப் புள்ளும்
மைக்குயில் சேவ லாகி மயூரமாம் வலியன் தானும்
புக்கமர் தெரிக்கும் ஆடற் பூவையுங் கொடிய தான
குக்குட முதலும் அஞ்சக் கொக்குரு வாகி நின்றான். 472

பொருள் : மிக்குயர் உவணம் அன்னம் மிசைப்படும் எகினப்புள்ளும் - உயர்ந்தகருடன் அன்னம் ஊர்பவராய் இருவருமே அன்மாகிய வடிவம் எடுத்வராம் அரியும் அயனும், மைக்குயில் சேவல் ஆகிமயூரமாம் வலியன்தானும் - கரியகுயில் சேவல்வடிவாகியும் இன்று மயிலாகிப் பிரானைச் சுமக்கும் வலியனும் ஆகிய இந்திரனும், புக்குஅமர்தெரிக்கும் ஆடற்பூவையும் - போர்முகத்திற் புகுந்து சுத்தவீரரைத் தெரிந்து வெற்றிவழங்கும் நாகணவாய் போன்ற வீரலக்குமியும், கொடியதான - பிரானார் தேரிற்கொடியாயுள்ள, குக்குடமுதலும் - கோழிச்சேவலாம் அக்கினிதேவனும் அஞ்ச, கொக்குரு ஆகி நின்றான் - கொக்கின் மாவின் வடிவு கொண்டு நின்றான் சூரன்.

பொழிப்பு : பிரமவிஷ்ணுவும் இந்திரனும் வீரலக்குமியும் அக்கினிதேவனும் அஞ்சக்கொக்குருவில் நின்றான்.

குறிப்பு : உவணம்(கருடன்) அன்னம் எகினப் குயில் சேவல் மயூரம் வலியாள் பூவைகுக்குடம் ஆகிய பறவைகளின் பெயர் தொனிப்பொருள். இவை அஞ்சக்கொக்குரு (மாவுரு) வாகிநின்றான். பறவைச்சாதிகளில் பட்சியரசன் கருடன் அன்னம் வாகனமாகக் கொண்டவரும் தாமும் ஒவ்வோர் ஏதுவால் அன்னவ்டிவம் கொண்டவரும் அயனும்அரியுமாவார். அஞ்சி உயிருய்யக்குயிலாயும் அகலியை காரணத்தால் சேவலாயும் இன்றுமயிலாயும் மாறியது.

இந்திரன் போர்முனையில் வீரரைத்தெரிந்து வெற்றிதருவது கொற்றவை வீரலக்குமி குக்குடம் - கோழிச்சேவல் ஆகிநிற்பவன் அக்கினிதேவன்.

காலெனு மொய்ம்பன் உட்கக் கட்செவி கவிழ்ந்து சோர
வாலிய வசுக்கள் ஏங்கி மலர்க்கரம் மறிக்க வெய்யோன்
பாலர்மெய் வியரா நிற்பப் பணைமுலை அரிவை மார்கள்
சேலெனும் விழிகள் பொத்தச் சேகர மாகி நின்றான். 473

பொருள் : கால் எனும் மொய்ம்பன் உட்க - வாயுதேவனாம் வலியவன் உள்ளம் கலங்கவும், கட்செவிகவிழ்ந்துசோர - பூமியைச்சுமக்கும் ஆதிசேடன் தலைகவிழ்ந்து சோரவும், வாலியவசுக்கள் எங்கிமலர்க்கரம்மறிக்க - தூயவசுக்கள் ஏங்கிமலர்கைவிதிர்விதிர்க்கவும், வெய்யோன் பாலர் மெய்வியராநிற்ப - சூரியன் புதல்வனான அசுவினி தேவர் மேனிவியர்வுறவும், பணைமுலை அரிவைமார்கள் சேலெனும் விழிகள் பொத்த - பருத்த தனங்களுள்ள தேவமகளிர் அஞ்சிச் சேல்போன்ற கண்களைப்பொத்தவும், சேகரம் ஆகி நின்றான் - சேகரம்(மாமரம்) ஆயினான்.

பொழிப்பு : வாயுதேவன் அஞ்சவும், ஆதிசேடன் தலைகவிழவும், வசுக்கள் ஏங்கிக் கைவிதிர்க்கவும் அசுவினி தேவர்மேனி வியர்வுறவும் தேவமகளிர் கண்மூடவும் சேகர (மாமர) மாயினான்.

குறிப்பு : கால், மொய்ம்பு, கண், செவி,வால், கரம், மெய், முலை, விழி எனும் உறுப்பக்களின் பெயர்கள் தொனிப்பொருளாக இவை அஞ்சச்சேகரம் - சிரம் -தலை-மாவாகி நின்றான். இதிலும் அடிமுதல் முடிவரை ஒடுக்கமுறைகூறுவது காணலாம்.

அத்தியின் அரசு பேர ஆலமும் தெரிக்கில் ஏங்க
மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற வீரை யாவுந்
தத்தம திருப்பை நீங்கத் தாதவிழ் நீபத் தாரோன்
உய்த்திடு தனிவேல் முன்னர் ஒருதனி மாவாய் நின்றான். 474

பொருள் : அத்தியின் அரசுபேர - சமுத்திர அரசனாம் வருணன் நிலைபெயரவும், ஆலமும் தெரிக்கில் ஏங்க - ஆலகாலவிடமும் காணில் ஏங்கவும், மெய்த்திறல் வாகைவன்னிமெலிவுற - உடல் வலியும் வெற்றியுமுள்ள அக்கினிதேவனும் மெலிவுறவும், வீரையாவும் தத்தமது இருப்பை நீங்க - சமுத்திரங்கள் எல்லாம் தங்கள் இருப்பிடம் விட்டு அலையவும், தாது அவிழ் நீபத்தாரோன் உய்த்திடு தனிவேல் முன்னர் - மகரந்தம் உதிரும் கடம்பமலர் மாலையணிந்த குமரக்கடவுள் தூண்டிய ஒப்பற்ற வேல் நாயகத்தின் முன்னே, ஒருதனிமாவாய் நின்றான் - இணையற்ற பெரிய மாயமான மாமரவடிவெடுத்து நின்றான்.

பொழிப்பு : வருணன் நிலை பெயரவும், ஆலவிடமும் ஏங்கவும், அக்கினிதேவன் ஆற்றல் குன்றவும், சமுத்திரங்கள் இடம் பெயரவும் மாமரமாகியமாயவடிவெடுத்து நின்றான் சூரன்.

குறிப்பு : அத்தி அரசு ஆல் வாகை வன்னி வீரை என்னும் மரங்களின் பெயர்தொனிப்பொருள் இந்த மரங்கள் வலியிழக்கமாமரவடிவாக நின்றான் சூரன்.

நிலமிசை இனைய வாறோர் நெடும்பெருஞ் சூத மாகி
உலவையின் செறிவு தன்னால் உம்பருந் திசையும் எற்றித்
தலைமுதல் அடியின் காறுஞ் சாலவுந் தளர்ந்து தள்ளுற்
றலமரு வாரிற் றானே அசைந்தனன் அசைவி லாதான். 475

பொருள் : நிலமிசை இளையவாறு ஓர்நெடும் பெரும் சூதமாகி - பூமியில் இவ்வாறு ஒரு நீண்டபெரிய மாவாகி, உலவையின் செறிவுதன்னால் உம்பரும் திசையும் எற்றி - கிளைகளின் செறிவினாலே சுவர்க்கத்தையும் திசைகளையும் மோதி அலைத்து, தலைமுதல் அடியின் காறும் சாலவும் தளர்ந்து தள்ளுற்று - உச்சிமுதல் அடிமரம்வரையும் மிகவும் தளர்ந்துதள்ளாடி, அலமருவாரில் தானே அசைந்தனன் அசைவிலாதான் - (தள்ளப்பட்டு) நிலைதடுமாறி அலைவுறுவார்போலவே எதற்கும் அசையாத சூரன் அசைந்தான்.

பொழிப்பு : மாய மாவுருவாய், கிளைகளாலே வானையும் திசைகளையும் மோதி, தலையிலிருந்து தாள் வரையும் மிகத்தளர்ந்தாடி, தள்ளுண்டு அலைவார் போல அசைவிலாச்சூரன் அசைந்தான்

பைவிரி பாந்தட் புத்தேள் பரம்பொறா தழுங்கப் பாரின்
மைவிரி படிவச் சூறை மாருதம் எறிய மாழை
மெய்விரி குடுமிக் கோட்டு மேருவெற் பசைந்தா லென்ன
மொய்விரி அவுணன் யாக்கை அலைத்தனன் முடிவதோரான். 476

பொருள் : பைவிரி பாந்தட் புத்தேள் பரம் பொறாது அழுங்க - (முறிபடாமலே பாதுகாப்பேன் என்று) தனது ஆயிரம் படங்களையும் பரப்பி நின்ற பாம்புத்தெய்வமான சேடன் தாக்கும் சுமையைத்தாங் கொணாது மிக நலிவுறும் வண்ணம், பாரில் மைவிரிபடிவச் சூறைமாருதம் எறிய - கரிய தூசிப்படலத்தைப் பரப்பும் உருப்பெற்ற பிரசண்டச் சூறைக்காற்று அடித்ததால், மாழை மெய்விரி குடுமிக்கோட்டுமேரு வெற்பு - பொன்மயமான சிகரம் உள்ள மாமேரு வெற்பு அசைந்தது போலவே, மொய்விரி அவுணன் யாக்கை அலைத்தனன் - வலிமை மிகுத்தவனான சூரபன்மன் தனது மாவுருவான யாக்கையை அலைத்தவாறு நின்றான் பின்னே, முடிவது ஓரான் - தன்முடிவு அணுகியதை அறியாதவனாக அலைத்தான்.

பொழிப்பு : முன்னாளில் வாயுதேவனும் சேடனும் முரண்பட்டுத் தம்வலிகாட்டமுனைந்து சேடன் மேருசிகரங்களைப்படத்தால் மூடிக்காத்திருக்க, மாறாக வாயுதேவன் தன்வலியால் சிகரத்தைச் சாய்க்கமுயலவே, சேடனும் தளர மேருவும் தள்ளாடியது, அதுபோலச்சூரன் தனது மாவுருவை அசைத்து ஆடுமாறு காட்டிநின்றான், தன் முடிவுநாள் வந்ததை அறியாதவனாய் அசைத்தான். "பவனமாய்ச் சோடையாய்" எனும் சம்பந்தர் தேவாரம் நினைவுற, இறுதி மூச்சு எழும் குறிப்புக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பு : பாந்தள் + புத்தேள் - சேடனாகியதேவன். மாழை பொன். கோடு - சிகரம்.

இடிந்தன சரிந்த ஞாலம் ஏழ்வகைப் பிலங்கள் முற்றும்
பொடிந்தன கமட நாகம் புரண்டன புழைக்கை மாக்கள்
முடிந்தன மறிந்த வேலை முழுவதும் ஒன்றா குற்ற
மடிந்தன உயிரின் பொம்மல் வரைக்குலம் மறிந்த அன்றே. 477

பொருள் : ஞாலம் இடிந்தனா சரிந்த - நிலப்பரப்பு இடிந்து சரிந்தன, ஏழ்வகைப்பிலங்கள் முற்றும் - கீழுள்ள பாதல உலகம் ஏழும் பொடிந்துதிர்ந்தன, கமடம் நாகம் புரண்டன - பூபாரம் சுமக்கின்ற ஆமையும் அட்டநாகங்களும் புரண்டன, புழைக்கைமாக்கள் முடிந்தன - உட்டுளை பொருந்திய துதிக்கை யானைகளும் வீழ்ந்தன, மறிந்த வேலை முழுவதும் ஒன்றாருற்ற - அலைமோதிய சமுத்திரங்கள் எல்லாம் பெருகிக்கலந்தொன்றாகின, மடிந்தன உயிரின் பொம்மல் - சீவராசிகளின் கூட்டம் முழுவதும் மடிந்தன, வரைக்குலம் மறிந்தவன்றே - குலமலைகளும் பெயர்ந்து சாய்ந்தன.

பொழிப்பு : சூர்மாவின் பொறையாலும் அசைப்பாலும், தரை இடிந்து சரிந்தது, ஏழுபாதலமும் பொடிபட்டது, கூர்மமும் அட்டநாகமும் புரண்டன, திக்குயானைகள் வீழ்ந்தன, சமுத்திரங்கள் அலை மோதிக் கலந்து ஒன்றாயின, சீவராசிகள் மடிந்தன, குலமலைகள் பெயர்ந்து சாய்ந்தன.

குறிப்பு : வரைக்குலம் - குலமலைகள். கமடமும் நாகமும் கமடநாகம் உம்மைத்தொகை, கமடம் - கூர்மம் - ஆமை. இப்பாடல் முதலாக மாவுருவின் அசைப்பால் நேர்ந்த அநர்த்தங்கள் கூறப்படுகின்றன.

தாரகை உதிர்ந்த கோளுந் தலைபனித் திரிந்த வெய்யோன்
தேரொடு மாவுந் தானுந் தியங்கினன் திங்கட் புத்தேள்
பேருறு மானம் நீங்கிப் பெயர்ந்தனன் ஏனை வானோர்
மேருவுங் கயிலை வெற்பும் புக்கனர் வெருவு நீரார். 478

பொருள் : தாரகை உதிர்ந்த - உடுக்கள் உதிர்ந்து விழுந்தன, கோளும் தலைபனித்திரிந்த - நவக்கிரகங்களும் தலைநடுங்கி

இரிந்தோடின. வெய்யோன் தேரொடு மாவும் தானும் தியங்கினன் - சூரியன் தேரிலே பூண்ட குதிரைகளோடு தானும் திகைத்துநின்றான். திங்கட்புத்தேள் பேருறுமானம் நீங்கிப் பெயர்ந்தனன் - சந்திரதேவனும் ஊர்ந்துசெல்லும் விமானத்தை விட்டுப் பெயர்ந்தான். ஏனைவானோர் வெருவுநீரார் - ஏனைய தேவர்களும் அச்சமுற்றவராய். மேருவும் கயிலை வெற்பும் - புகலிடங்களாம் மேருவும் கயிலாயமுமா கியஇடங்களிவ். புக்கனர் - தஞ்சம் புகுந்தனர்.

பொழிப்பு : அச்சமுற்ற தன்மையால் உடுக்கள் உதிரவும். கிரகங்கள் பெயர்ந்தோடவும். சூரியன் தேர்க் குதிரைகளோடு திகைத்து நிற்கவும். சந்திரன் விமானத்தைவிட்டுப் பெயரவும். தேவர்கள் மேருவும் கயிலாயமுமாம் இடங்களிலே அடைக்கலம் புகுந்தனர்.

குறிப்பு : வெருவும் நீரார் விளக்கணியாக வேண்டுமிடங்களிலே சேர்க்க.

ஏற்றமில் சுவர்க்க முற்றும் இற்றன அதற்கும் அப்பால்
மேற்றிகழ் முனிவர் வைகும் உலகமும் பகிர்ந்து வீழ்ந்த
நாற்றிசை முகத்தன் மாயோன் நண்ணிய உலகும் அற்றே
சாற்றுவ தென்கொல் அண்டச் சூழலுந் தகர்ந்த தன்றே.

479

பொருள் : ஏற்றமில் சுவர்க்கம் முற்றும் இற்றன - எரியுண்டதால் மேன்மையிழந்திருந்த சுவர்க்க உலகம் முற்றும் தகர்ந்தன. அதற்கும் அப்பால் மேல்திகழ் முனிவர் வைகும் உலகமும் பகிர்ந்து வீழ்ந்த - சுவர்க்கத்தின் மேலுள்ள முனிவர்கள் வாழும் உலகமும் பிளந்து வீழ்ந்தது. நால் திசைமுகத்தன் மாயோன் நண்ணிய உலகும் அற்றே - அதன்மேல் நாலுதிசையும் முகமுள்ள அயனும் அரியும் வீற்றிருக்கும் சத்திய உலகும் வைகுந்த உலகமும் அவ்வாறே சிதைவுற்றன. சாற்றுவது என்கொல் - மேலும் விரித்துரைப்பதில் பயன்யாது? அண்டச்சூழலும் தகர்ந்ததன்றே - அண்டச் சூழலும் தகர்ந்ததன்றே - அண்டத்தைச் சூழ்ந்துள்ள அண்டகோளகையும் தகர்ந்து விட்டது.

பொழிப்பு : பானுகோபன் எரியூட்டியதாலே ஏற்றமிழந்த தேவருலகும் சிதைந்தது, முனிவர்வாழும் உலகும் வெடித்தது, அதன்மேலுள்ள பிரமலோகம் வைகுந்த உலகங்களும் சிதைவுற்றன, அனைத்தையும் சூழ்ந்துள்ள அண்டச்சுவரும் தகர்ந்தது என்றால் இதன் மேலும் விபரிப்பதில் பயன்யாது.

தெண்டிரை நடுவண் நின்ற தீயவன் செயலும் அன்னான்
கொண்டிடும் உருவும் உள்ளக் கொள்கையும் வலியுஞ் சீரும்
அண்டர்கள் எவர்க்கும் மேலாம் ஆதியம் பகவன் தொட்ட
வீண்டொடர் தனிவேல் காணா வெஞ்சினம் விளைத்த தன்றே. 480

பொருள் : தெண்டிரை நடுவண் நின்ற தீயவன் செயலும் - சமுத்திரமத்தியில் மாவாகிநின்ற தீய சூரனது செயலையும், அன்னான் கொண்டிடும் உருவும் - அவன் எடுத்துள்ள மாயாவுருவத்தையும், உள்ளக்கொள்கையும் - உள்ளத்திற் கொண்டுள்ள குறிக்கோளையும், வலியும் சீரும் - வலிமையையும் சிறப்பும் என எல்லாவற்றையும், அண்டர்கள் எவர்க்கும்மேலாம் ஆதியம் பகவன் தொட்ட - தேவரனைவர்க்கும் மேலவரும் ஆதிபகவனுமாகிய முருகவேள் ஏவியருளிய, வீண்தொடர் தனிவேல்காணா - வானிலே செல்லும் வடிவேற்படைகண்டு, வெஞ்சினம் விளைத்ததன்றே - கடும் கோபம்கொண்டது. அனுக்கிரகமே புரியும் வேல்சினம் கொண்டது நிக்கிரகம் செயும் பொருட்டே தற்காலிகமானது. இயற்குணமன்று.

பொழிப்பு : சூரன் செயலும் உருவும் குறிக்கோளும் வலிமையும் சீரும், ஆகிய அனைத்தையும் நோக்கியதால் தேவசேனாபதிப் பெருமான் ஏவியதாய் வான்வழிப்படும் வேல்நாயகம் சினம் கொண்டது.

தேயுவின் எடுத்த அண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிர கோடி அண்டத் தங்கியும் ஒன்றிற் றென்ன
மீயுயர்ந் தொழுகி ஆன்றோர் வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் தனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே. 481

பொருள் : தேயுவின் எடுத்த அண்டத்திறங்களும் - தேயு எனும் அக்கினி பூதத்திலிருந்து தோன்றிய அண்டங்களனைத்திலும் உள்ளதும், பிறங்குஞாலத்து ஆயிரகோடி அண்டத்து அங்கியும் - விளங்கும் பிருதுவியின் பாலதான ஆயிரகோடி அண்டத்திலும் உள்ள அக்கினியும், ஒன்றிற்று என்ன - ஒன்றாகி ஒருருவு ஆயிற்றெனும்படி, மீஉயர்ந்து ஒழுகி - மிகவே உயர்ந்து சென்று, ஆன்றோர்வெருவரும் தோற்றம் கொண்டு - மெயுணர்வால் மிக்க ஆன்றோரும் கண்டு அச்சுறும் தோற்றம் கொண்டு, நாயகன் தெய்வப்படைக்கலம் நடந்ததன்றே - தேவநாயகர்விட்ட தெய்வீகவேல் நாயகப் படை உக்கிரமாகச் சென்றது.

பொழிப்பு : அக்கினியின் பாற்பட்டனவும் பிருதுவியின் பாற்பட்ட ஆயிரகோடி அண்டகளின் பாற்பட்டனவுமாகிய தீஅனைத்தும் ஒன்றாகி ஒருருவுகொண்டதே இது எனும்படி தோன்றி, ஆன்றோரும் கண்டு அஞ்சும்படி உக்கிரமான உருவொடு வேல்நாயகம் சென்றது.

குறிப்பு : இது முதலாக 87ம் பாடல்வரை வேலின் திருக்கோலமும் மாதடிந்ததும் கூறுகின்றன.

வயிர்த்திடு நிலைமை சான்ற வன்கணான் உயிரை வெளவச்
செயிர்த்திடுந் தெய்வச் செவ்வேல் திணிநில வரைப்பில் அண்டம்
அயிர்த்தொகை யாக ஏனைப் பூதமும் அழிய அங்கண்
உயிர்த்தொகை முருக்கத் தோன்றும் ஒருவனிற் சென்ற தன்றே.482

பொருள் : வயிர்த்திடு நிலைமைசான்ற வன்கண்ணான் உயிரைவவ்வச் செயிர்த்திடுகின்ற - வயிரம் பாய்ந்த உள்ளத்தன்மை நிறைந்த தறுகண்ணனாகிய சூரன் உயிரைக்வ்வதற்காகவே சினம் கொண்டுவந்த, தெய்வச் செவ்வேல் - தெய்வீகமான செவ்விய வேற்படையானது, திணிநிலவரைப்பின் அண்டம் அயிர்த்தொகையாக - திண்ணிய பிருதுவி அண்டங்கள் வெந்துசாம்பராகவும், ஏனைப்பூதமும் அழிய - ஏனையபூதபேதத்து அண்டகளும் அழியவும், அங்கண் உயிர்த்தொகை முருக்க - ஆங்காங்குள்ள சீவகோடிகளையும் அழிப்பதற்காக, தோன்றும் ஒருவனிற்

சென்றதன்றே - கற்பாந்தத்தில் தோன்றும் சர்வசங்கார மூர்தியாம் ஒருவன் போலச்சென்றது.

பொழிப்பு : வயிரித்த உள்ளம்மிக்க தறுகணனான சூரன் உயிர்கவர வேண்டிச் சினந்தெழும் தெய்விக வேற்படையானது, பிருதுவி அண்டங்களேயன்றி ஏனையபூத அண்டங்களையும் ஆங்குள்ள சீவகோடிகளையும் ஒருங்கே அழிவிக்கத் தோன்றும் சர்வசங்காரகர்த்தா சிவன்போலச் சென்றது.

மாறமர் உழந்து பன்னாள் வரம்பறு பிரம மாவார்
வேறிலை யாமே என்ற இருவரும் வெருவி நீங்க
ஈறொடு முதலும் இன்றி எழுகிரி விலக்கி விண்மேற்
சேறலின் நிலைமை காட்டிப் படர்ந்தது கடவுட் செவ்வேல். **483**

பொருள் : பல்நாள் மாறமர் உழந்து வரம்பறு பிரமமாவோர் வேறிலை - பலநாளாக மாறுபட்டுப் பெரும்போர் புரிந்து எல்லைகடந்த பரம்பொருளாம் பதிவேறில்லை, யாமே என்ற இருவரும் வெருவி நீங்க - நாமே என்று வாதிட்ட அரிபிரமர் இருவரும் தாமல்லர் என்று அஞ்சி, செருக்கும் செருவும் நீங்குமாறு, ஈறொடு முதலும் இன்றி எழுகிரி - அவ்விருவரின்நடுவே அடிமுடிகாணொணாது எழுந்த சிவஞானச் சோதிஉருவான அருணகிரியானது, விலக்கி விண்மேற் சேறலின் நிலைமைகாட்டி - அவர்களின் இருள் சேர்இருவினையையும் விலக்கி விண்மேல் நிமிர்ந்துசென்ற நிலையைக்காட்டியவாறு, கடவுட் செவ்வேல் படர்ந்தது தெய்வீகச் செவ்வேற்படை சென்றருளியது.

பொழிப்பு : தாமே பிரமமெனத் தருக்குற்றுச்சமர்புரிந்த அரியயன் இருவருக்கும் நடுவே அடிமுடி அறியொணாவாறு சிவஞானச் சோதியாய் எழுந்து அவர்கள் செருக்கும் அகன்று செந்நிலை பெறச்செய்த அருணாசலத்தின் நிலையைக் காட்டியவாறு செவ்வேல் சென்றது.

வேதனை அகத்த ராகும் விண்ணவர் படைகள் தம்முள்
யாதனை இதற்கு நேரா இயம்புவ தெரியில் தோன்றிப்
பூதனை உயிருண் கள்வன் புண்டரீ கத்தன் வன்மை
சோதனை புரிந்த மேலோன் சூலமே என்ப தல்லால். **484**

பொருள் : வேதனையகத்தராகும் விண்ணவர்படைகள் தம்முள் - இருவினைக்குட்பட்டு உழலுகின்ற தேவர்களின் படைகளில், யாதனை இதற்கு நேராஇய்புவது - எதனைத்தான் இவ்வேற்படைக்கு உவமையெனலாம், எதுவுமாகாது, ஆனால், எரியில் தோன்றி - சிவஞானச்சோதியிலே தோன்றிவந்து, பூதனை உயிருண்கள்வன் புண்டரீகத்தன்வன்மை சோதனைபுரிந்த மேலோன் - அரி அயன் இருவரதும் அகந்தை மமதைகளைச்சோதித்து மெய்யுணர்வுநல்கிய மேலவராகிய, வைரவமூர்த்தியின் சூலமே என்பது அல்லால் - சூலப்படை ஒப்பெனலாம், அல்லது வேறிலை, பூதனை உயிருண்கள்வன் - பூதகி என்னும்மாய அரக்கியின்முலைப்பாலுடன் உயிருமுண்டகள்வன் புண்டரீகத்தன் - மாயன் உந்திக்கமலத்துதித்தவன் .இவை முறையே அரி அயன் இருவரையும் சுட்டி வைரவப்பெருமானது பதித்துவத்துக்கு சான்றாகி நின்றன. கள்வனும் பொய்யனுமாகிய இருவர் அரியயன்.

பொழிப்பு : அரி அயன் இருவரையும் சோதித்துத் தூய்மைசெய்தவர் வைரவர், அவர்சிவஞானச்சோதியிலிருந்து தோற்றியவர் அவரது சூலம் ஒன்றே இவ்வேலுக்கு ஒப்பாகும், ஏனைய சுவர்க்கத்தவராய் இருவினைக்காய சுகதுக்கானுபவன் பெறும் ஏனையதேவர்படை ஒப்பாகா.

குறிப்பு : வேதனை அகத்தராகும் விண்ணவர் என்பதற்கு பிரமா உள்ளிட்ட தேவர் எனலுமாம் எரியில் தோன்றிச் சோதனை புரிந்த மேலோன் என்பதற்கு - சோதியாகிய அக்கினி மலையாகத் தோன்றிச் சோதனை புரிந்தவரான சிவன் எனலுமாம் இதற்கு இல் உருபு 5ம், 7ம் வேற்றுமையன்று.

மண்டல நிலத்தின் வைப்பும் வாரிதி ஏழு மற்றைத்
தெண்டிரைக் கடலும் வானுஞ் சேணுயர் பிறங்கல் முற்றும்
எண்டிசைப் புறமும் அண்டத் தேணியின் பரப்பும் ஈண்ட
ஒண்டழற் சிகையின் கற்றை உமிழ்ந்ததால் ஒருங்கு ஞாங்கர். 485

பொருள் : ஞாங்கர் - எம்பிரான் கைவேலானது, மண்டல நிலத்தின் வைப்பும் - பூமியாகிய இடம் முழுவதும், வாரிதி ஏழும் - ஏழுசமுத்திரங்களிலும், மற்றைத் தெண்டிரைக்கடலும் - மற்றும் புறஞ்சூழ்ந்த தெளிந்ததிரையுள்ள புறவாழியிடத்தும், வானும் - வானவெளியிடத்தும், சேண் உயர் பிறங்கல் முற்றும் - நெடிதுயர்ந்துள்ள எல்லாமலைகளிடத்தும், எண்திசைப்புறமும் = எட்டுத்திக்குகளின் எல்லை முழுவதிலும், அண்டத்து ஏணியின் பரப்பும் ஈண்ட - ஏணிப்படி போல் அடுக்காயுள்ள புவனங்கள் அனைத்திலும் எங்கும் சென்றடையுமாறு, ஒண்டழற் சிகையின் கற்றை ஒருங்கு உமிழ்ததால் - ஒளியார்ந்த தீச்சுவாலையின் திரளை ஒருங்கே கான்று சென்றது.

பொழிப்பு : அவ்வேல் நாயகமானது, பூமண்டலம், சமுத்திரதலம், புறவாழிக்கடல், வானமண்டலம், உயர்ந்த மலைகள், எட்டுத்திக்கெல்லை, ஏணிப்படி போலுள்ள அண்ட புவனம் ஆகிய எவ்விடமும் தீக்கொழுந்துக்கற்றையைக் கான்று சென்றது.

பற்றிய ஞெகிழி பாரில் படர்ந்தன பௌவம் யாவுஞ்
சுற்றிய திசையும் வானுஞ் சூழ்ந்தன சோதி வைகும்
பொற்றைய தொன்றே அல்லாப் பொருப்பெலாஞ் செறிந்த பொன்றோய்
கற்றையங் கதிரின் அண்டச் சூழலுங் கதுவ லுற்ற. 486

பொருள் : பற்றி ஞெகிழிபாரில் படர்ந்தன - வேலிலிருந்தெழுந்த தீக்கொழுந்துகள் பாரெங்கும் பரந்தன, பௌவம் யாவும் - எல்லாச் சமுத்திரங்களும், சுற்றியதிசையும் - எங்கும் சூழவுள்ளதிசைகளும், வானும் சூழ்ந்தன - வானமும் ஆகிய இடம் எங்கும், தீச்சுவாலைகள் சூழந்தன, சோதி வைகும் பொற்றையது ஒன்றே அல்லாப் பொருப்பெலாம் செறிந்த - பரம்சோதியாம் சிவன் சீற்றிருக்கும் கயிலைமலை ஒன்றே ஒழிய மற்றுள்ள மலையிடமெங்கும் செறிந்தன, பொன் தோய் கற்றையங்கதிரின் அண்டச் சூழலும் கதுவலுற்ற - பொன்வண்ணமான ஒளிக்கற்றை வீசும் அண்டச்சுவரின் சூழலிலும் கலந்து கதுவின.

பொழிப்பு : வேலிற் பிறந்த தீநாக்குகள் பூமியெங்கும் பரவின. சமுத்திர மனைத்திலும். சூழ்ந்த எட்டுத்திசையிலும் வானிலும் தீண்டின. சிவனது கயிலாயம் தவிர மற்றைய மலையிடங்களிலும் செறிந்தன. பொன்வண்ண அண்டச்சுவரின் சூழலையும் தொட்டன.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே. 487

பொருள் : விடம் பிடித்து அலன் - விமலரான சிவன் மிடற்றிலுள்ள விடத்தை வெளியில் எடுத்து அதனால் வேலுருவத்தை வடித்து. செங்கண்வெங்கனல் உறுத்தி - சிவந்த நெற்றிக்கண் தீயிலே காய்ச்சி. பாணி இடம்பிடித்த தீயில் தோய்த்து - திருக்கரத்துள்ள தீயிலே பதமுற வேவித்து (பாணி - நீரிலே உடன்) தோய்த்தெடுத்து. முன் இயற்றியன்ன - முன்னே உருவாக்கியதை ஒத்த. உடம்பிடித்தெய்வம் - வேல் நாயகமான தெய்வம். இவ்வாறு. உருகெழு செலவின் ஏகி - அச்சந்தரும் வடிவும் வெம்மையும் பொருந்தச் சென்று. மடம் பிடித்திட்ட வெம்சூர்மா முதல் தடிந்ததன்றே - அறியாமையால் பீடிக்கப்பட்டுள்ள கொடிய சூரனாகியமாவை முதலுடன் தடிந்து சாடியது.

பொழிப்பு : சிவபிரன ஆல காலத்தை எடுத்து அதனாலே வேலுருவத்தை வடித்து. நெற்றிக்கண்தீயிலே காய்ச்சி. பின்னும். பாணியினிடத்துள்ள தீயிலும் பதமுறும்வகை வேவித்து. (பாணி - நீர்) அணித்திலுள்ள நீரிலே தோய்த்தெடுத்து முன்னமே ஆக்கிக்கொடுத்தது எனும்படி வடிவம் வெம்மைவேகம் கொண்டதாயுள்ள வேல் நாயகமானது. அச்சம் விளைவித்தலில் மிக்கதாய்ச் சென்று. அஞ்ஞானத்துக்கு ஆட்பட்டு நிற்கும் சூரனாகிய மாவை முதலுடன் தடிந்தது.

குறிப்பு : வடித்தல் - உருவம் அமைத்தல். முதலில் நெற்றிக் கண்நெருப்பிலே வேகவைத்து. பின்னும் கையிலுள்ள (பாணி நீர்)

அயலுள்ள கைத்தீயில் பதம்வரக்காய்ச்சி, பாணியில் நீரிலே தோய்த் தெடுத்தே ஆயுதம் ஆக்குதல் முறை காட்டியவாறு இது.

சூர் மாமுதல் - சூரனாகிய மாவை முதல்வனை என்றும், அடிமரத்தோடு, வேரோடு என்றும் பொருள்தரும. இங்கு மா முதல் என்பதை உம் மைத்தொகை எனக்கொண்டு மாவையும் அதற்கு முதற்காரணமாயிருந்த மாயையினையும் தடிந்தது எனல் சிறப்பாகும். மடம் பிடித்திட்ட அறியாமையையே அறிவெனப்பற்றி நின்றவன் எனலும் தகும் அதாவது பிடிவாதமான விடாக் கண்டன் என்பது மாயமெல்லா முடிந்தது இதோடு.

ஆடல்வேல் எறித லோடு ஆமிர வடிவாய் அண்ட
கூடமும் அலைத்த கள்வன் அரற்றொடு குறைந்த வீழ்ந்தும்
வீடிலன் என்ப மன்னோ மேலைநாள் வரத்தின் என்றால்
பீடுறு தவமே அன்றி வலியது பிறிதொன் றுண்டோ. 488

பொருள் : ஆடல்வேல் எறிதலோடும் - ஆடலில் வல்லவேல் நாயகம் வெட்டிச் சாய்த்தலும், ஆமிரவடிவாய் அண்டகூடமும் அலைந்தகள்வன் - மாமர வடிவாய் நின்று அண்டமுகடுவரை உலகையும் உயிரையும் அலைவித்த மாயக்கள்வனாம் சூரன், அரற்றொடு குறைந்து வீழ்ந்தும் - புலம்பலுடன் வலிகுன்றி வீழ்ந்தானாயினும், மேலைநாள் வரத்தில் வீடிலன் என்பமன்னோ - முன்னை நாளில் தவமும் வேள்வியும் செய்து ஈசனிடம் பெற்ற வரபலத்தால் இறவாதிருக்கப் பெற்றான் என்று விதந்து பேசுவர் பெரியோர். என்றிங்ஙனம் புகழுரைபெறற்பாலனெனில் சிந்திக்கும் போது, பீடுஉறுதவமேயன்றி வலியது பிறிதொன்று உண்டோ - தவஞ்செய்து உறுதிபெறுதலினும் மேலான பயன்தரத்தக்க ஆற்றலுள்ள பிறிதொரு செயலும் உண்டோ இல்லையாதலின் பிறவேண்டற் பாலவல்ல.

பொழிப்பு : மாமரவடிவாய் அண்டம் முழுதும் அலைத்து நின்றகள்வனாம் சூரன் வேலெறிய வெட்டுண்டு வீழ்ந்தும் இறந்திலன், இதுமுன்செய்தவத்தாற் பெற்ற வரபலத்தால் ஆனது என்று அறிந்தோர் விதந்து கூறுவர். ஆதலின் தவச் செயலினும் உயர்ந்த

உறுதிதரும் செயல் பிறிதொன்றும் உண்டெனக்கருதலாகுமோ. அல்லவே.

குறிப்பு : வேண்டிய வேண்டியாங்கு எய்தவும், ஒன்னாரைத்தெறவும், உவந்தாரை ஆக்கவும், கூற்றனையும் குதிக்கவும் எண்ணினால் தவம்தரும் எனநூல்கள் கூறுவதைக் கச்சியப்ப சிவாசாரியரும் ஆங்காங்கு நினைவுபடுத்தும் முறையில் கூறினார்.

கிள்ளையின் வதனம் அன்ன கேழ்கிளர் பசுங்காய் தூங்கித்
தள்ளரும் நிலைத்தாய் நின்ற மாவுருச் சாய்த லோடும்
உள்ளுறு சினமீக் கொள்ள ஒல்லைதொல் லுருவம் எய்தி
வள்ளுறை யுடைவாள் வாங்கி மலைவது கருதி ஆர்த்தான். 489

பொருள் : கிள்ளையின் வதனம் அன்ன கேழ்கிளர் பசுங்காய்தூக்கி - கிளியின் மூக்குப் போன்ற வண்ணம் விளங்கும் பசிய காய்களைத் தொங்கவிட்டு, தள்ளரும் நிலைத்தாய் நின்றமாவுருச் சாய்தலோடும் - தடிந்து சாய்க்க முடியாத உறுதிநிலை யோடிருந்த மாமரவடிவம் சாய்த்து அழிக்கப்படுதலும், உள்ளுறு சினம் மிக்கொள்ள ஒல்லைதன் உருவமெய்தி - உள்ளத்திலே பெருஞ்சினம் மேலோங்க விரைவிலே தனது இயல்பாயுள்ள சூரபன்மனாம் உரு எடுத்து, வள்ளுறை உடைவாள் வாங்கி மலைவதுகருதி ஆர்த்தான் - கூரியதாய் உறையுள் இருந்த உடைவாளை உருவி எடுத்துக்கொண்டு மேலும் போராடும் மூர்க்க உணர்வோடு ஆரவாரித்து வந்தான்.

பொழிப்பு : சூரன் தான் எடுத்த மாமரவடிவம் வெட்டி வீழ்த்தப்படுதலும் உள்ளத்திலே கடுஞ்சினம் கிளர உடைவாளை உறையினின் றெடுத்துக் கொண்டு பொர எண்ணிவந்தான்.

குறிப்பு : கிள்ளையின் வதனம் - கிளியின் முகம் - முகம் ஆகுபெயராக அலகை - சொண்டைக்குறித்தது. மாங்காயின் வடிவுக்கு ஒத்தவடிவு. தொல் உருவம் - பழைய சூரனாகியவடிவம்.

செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன் றுருமின் ஆர்த்துத்
துங்கமொ டெதிர்ந்து சீறுஞ் சூருரங் கிழித்துப் பின்னும்
அங்கம திருகூ றாக்கி அலைகடல் வரைப்பில் வீட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப எ:கம்வான் போயிற் றம்மா. 490

பொருள் : செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன்று உருமின் ஆர்த்து - சிவந்த ஒளிவீசுகின்ற கூரிய வாளைக் கைக்கொண்டு போருக்கத்தோடு இடிபோல முழங்கி அறை கூவியவனாக, துங்கமொடு எதிர்ந்து சீறும் சூர் உரம் கிழித்து - பெருமிதத் தோடு எதிர்த்துச் சீறிவருகின்ற, சூர்உரங்கிழித்து - சூரபன்மனின் மார்பைப்பிளந்து, பின்னும் அங்கமது இருகூறாக்கி - இருவர் இணைந்து பின்னிய உடம்பை இருகூறாக்கி, அலைகடல் வரைப்பில் வீட்டி - அலைவீசும் கடலின் இருகரையிலும் வீசி, எங்கணும் மறைகள் ஆர்ப்ப - எத்திசையிலும் வேதங்கள் துதிமுழக்க, எ:. கம் - தன்கடன் சாதித்த வேல் நாயகம், வான் போயிற்றம்மா - வான்வழியே கிளர்ந்து சென்றது அம்மா துயர் துடைத்து விட்டது.

பொழிப்பு : கூரியவாளைக் கைக்கொண்டு போருக்கத்தோடு ஆர்த்துச் சீறிவரும் சூரனின் மார்பைப் பிளந்து ஆக்கையை இருகூறாக்கி சமுத்திரத்தின் இருகரையிலும் வீசி எங்கும் வேதங்கள் துதிசெய்ய வெற்றிவேல் விண்வழிமேற் சென்றது.

குறிப்பு : பின்னும் அங்கம்- சூரன் பதுமன் எனும் இருவர் ஆவியும் ஆக்கையும் ஒன்றிணைந்து ஒருவராய் நின்ற உடம்பு கடல் வரைப்பு - கடலில் இருகரை. வீசி - பின்இருபாகமும் இணையாதவாறு இடம்வலம், அடிதலை மாறிக் கிடக்க எறிந்து எனக்கூறுவதுண்டு. எ:.கவேல் கிழித்துக் கூறாக்கி வீசிப் போயிற்று என எச்சங்களைக் கூட்டி முடிக்க. கந்தபுராண கடவுள் வாழ்த்து 13ம் பா. சூர் அலைவாயிட..... ஈர் அலைவாயிடும் எனவரும் செந்தூர் முருகனைப்போற்றுமாறு காண்க.

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை யிடையின் ஏகி
அங்கியின் வடிவம் நீங்கி அருளுருக் கொண்டு வான்றோய்
கங்கையிற் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள் தம் பெருமான் செங்கை எய்திவீற் றிருந்த தவ்வேல். 491

பொருள் : அவ்வேல் - ஆறுமுகப்பெருமானின் பிரதிநிதியாகப் பாவனை செய்து வழிபடற்குரிய அஸ்திரதேவராம் அவ்வேற்பெருமான், புங்கவர்வழுத்திச் சிந்தும் பூமழையிடையின் ஏகி - தேவர்கள் போற்றி நின்று பொழியும் மலர்மழையூடு சென்று, அங்கியின் வடிவம்நீங்கி - நிக்கிரக நிமித்தமாய் எடுத்த கோரமான அக்கினிவடிவம் நீங்கி, அருள் உருக்கொண்டு - என்றும் அன்பர்க்கு அநுக்கிரக நிமித்தமாம் அருளுருவே கொண்டு, வான் தோய் கங்கையில் படிந்து மீண்டு - வானிலே தங்கியுள்ள தெய்வகங்காதீர்த்தத்தில் மூழ்கிப் புனிதமாகி மீண்டுவந்து, கடவுளர் இடுக்கண் தீர்த்த- அரிபிரமேந்திராதி தேவர் ஏவரதும் துயர்துடைத்த, எங்கள் தம் பெருமான் செங்கை எய்தி - எங்கள் பிரானாகும் குமரவேட் பெருமானின் திருக்கரத்தைச் சேர்ந்து, வீற்றிருந்தது - படைக்கல நாயகமாம் நிலைமையில் வீற்றிருந்தது.

பொழிப்பு : சூரசங்காரம்முடியவே அவ்வேல் புங்கவர் பூமாரி பொழியச் சென்று, கோர வடிவொழித்து அருளுருக் கொண்டு, தெய்வகங்கா நதியில் மூழ்கித்தாய்மையொடு வந்து தேவர் குறைதீர்த்த செவ்வேளாய எம்பிரான் திருக்கரத்தில் படைக்கல நாயகனாக வீற்றிருந்தது.

குறிப்பு : அவ்வேல் ஏகி, நீங்கி, கொண்டு, படிந்து, மீண்டு, எய்தி வீற்றிருந்தது எனமுடிக்க.

தாவடி நெடுவேல் மீளத் தற்பரன் வரத்தால் வீடா
மேவலன் எழுந்து மீட்டும் மெய்பகிர் இரண்டு கூறுஞ்
சேவலும் மயிலு மாகிச் சினங்கொடு தேவர் சேனை
காவலன் தன்னை நாடி அமர்த்தொழில் கருதி வந்தான். 492

பொருள் : தாவடி நெடுவேல் மீள - போர் முகத்திலிருந்து வெற்றி வேலானது மீண்டு குமரவேளிடம் வந்ததாதலும், தற்பரன் வரத்தால் வீடா மேவலன் எழுந்து - தற்பரராம் சிவனருளியவரபலத்தால் இறவாதவனாய் முருகப்பெருமானை அடைதற்குரிய சூரபன்மன் உய்ந்தெழுந்து, மீட்டும் மெய்பகிர் இரண்டு கூறும் - மீளவும் உடம்பிலிருந்து பிளந்தெறியப்பட்ட இருகூறுகளும் இணையாமலே தனித்தனியே, சேவலும் மயிலுமாகிச் சினங்கொடு - சேவலும் மயிலுமாகிய வடிவங்களாக அமைய சினம் மூள, - தேவர் சேனை காவலன் தன்னை நாடி - தேவசேனாபதியாகிய பெருமானை நோக்கி நடந்து, அமர்த்தொழில் கருதி ஆர்த்தான் - அமர்புரிதலையே கருதி அறைகூவி ஆர்ப்பரித்தான்.

பொழிப்பு : போர்முகத்தில் வேல் மீண்டபின் சிவனருள் வரத்தால் இறப்பில்லாதவனாய் பெருமானைச் சேரும் பேறுடைய சூரபன்மன் உய்ந்து, பிளந்த இருகூறுடம்பும் தனித்தனி சேவல் மயிலென உருவாய் அமையச் சினங்கொண்டு தேவசேனாபதியைக் குறித்துப் போர்புரியும் கருத்தோடு அறைகூவி ஆர்த்துவந்தான்.

குறிப்பு : வீடா - வீடாத - இறவாத. மேவலன் - பகைவன் - மேவாதவன் எனவே எதிர்மறை வினைப்பகுபதமாய் 'ஆ' எனும் எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டதெனப் பதமுடிவுகூறுவர். இது பொதுவிதி. சிறப்பாகச் சூரனைச் சுட்டிவரும் இடங்களில் அதுசிறப்பன்று. ஒட்டலன் அடையலன் நண்ணலன் மேவலன் என்பன ஆதியாகவரும் பெயர்கள் உடன்பாட்டுவினைப்பகுபதமாகக் கொண்டு, ஒட்டுதற்கு அடைதற்கு நண்ணுதற்கு, மேவுதற்கு உரியவன் என்பதே சிறப்பாம். இதில் 'ஆ' -இடைநிலை புணர்ந்து கெட்டதெனும் விதிவேண்டப்படாது முடியும். உதாரணமாக "மகன் எனல் மக்கட்பதடி எனல்" எனவரும் 'எனல்' என்ற வியங்கொள் ஏவல் வினைப்பகுபதம் ஒன்றே எதிர்மறை உடன்பாடு என இரு எதிர் எதிரான பொருளில் வருதலையும், என்று சொல்லற்க, என்று சொல்லுக என நிற்றலையும் காண்க.

மணிகிளர் வரைய தொன்றும் மரகதப் பிறங்க வொன்றுந்
துணையடி சிறகர் பெற்றுச் சூற்புயல் அழிய ஆர்த்துத்
திணிநில விசும்பின் மாட்டே சென்றெனச் சேவ லோடு
பிணிமுக வுருவாய் வந்து பெருந்தகை முன்னம் புக்கான். 493

பொருள் : மணிகிளர் வரையது ஒன்றும் - மணிவண்ணமாக விளங்கும் மலை ஒன்றும், மரகதப் பிறங்கல் ஒன்றும் - மரகத மணிவண்ண மலையொன்றும், துணை அடி சிறகர் பெற்று - இருகால்களும் சிறகுகளும் பெற்றனவாய், சூல் புயல் அழிய ஆர்த்து - கருக்கொண்ட முகில் முழக்கும் நேரின்றித் தோல்வியுற ஆரவாரித்து, திணிநிலம் விசும்பின் மாட்டேசென்றென - திண்ணிய நிலத்திலும் வானத்திலும் வருவது போல, சேவலோடு பிணிமுக உருவாய்வந்து - சேவலும் மயிலுமாகிய உருவங்களில் வந்து, பெருந்தகை முன்னம் புக்கான் - குமரப்பெருமானின் முன்பே புகுந்தான்.

பொழிப்பு : மணிமலை மரகதமலைகள் சோடான கால் சிறகுகள் பெற்று மழை முகில் முழக்கமும் தாழ்வுற ஆர்த்து, வானிலும் மண்ணிலும் வருவது போல சேவலும் மயிலுமாம் வடிவில் பெருமான் முன் வந்து புகுந்தான் சூரன்.

குறிப்பு : மணி - மாணிக்கம் சிவப்பு, வைரம் வெள்ளை மணிகளைக் குறிக்கும், இருவகையாயும் பொருள் கூறுவர். இங்கு அமைத்த நிரனிறை அணியில் மணிமலை சேவலுக்கும், மரகதமலை மயிலுக்கும் உவமையாம் ஆதலின் திணிநிலம் விசும்பின்மாடு என்பதும் முன்பின்னாக்கி விசும்பில் நிலத்தில் என்று பொருள் கோடல் முறை.

ஆட்படு நெறியிற் சேர்த்தும் ஆதியின் ஊழ்தந் தூய்க்கத்
தாட்படை மயூர மாகித் தன்னிகர் இல்லாச் சூரன்
காட்படை யுளத்த னாகிக் கடவுளர் இரியல் போக
ஞாட்பியல் செருக்கில் வந்தான் ஞானநா யகன் றன் முன்னம். 494

பொருள் : ஆட்படும் நெறியில் சேர்த்தும் ஆதியின் ஊழ்தந்து உய்க்க - முருகனுக்கு ஆளாகிச் சேவைபுரியும் வழியிலே கூட்டும் முன்னைய ஊழ் பயனளித்துச் செலுத்துதலால், தாட்படை மயூரமாகி - சேவலும் மயிலுமாகிய உருப்பெற்று, தன் நிகர்இல்லாச் சூரன் - தனக்கு எவரும் நிகரில்லாத சூரபன்மன், காட்பு அடை உளத்தனாகி - உருமாறினும் உளம்மாறாது பகைமை பற்றிய காழ்ப்புடையவனாகியே, கடவுளர் இரியல்போக - தேவர் அஞ்சியகன்றோட, ஞாட்பியல் செருக்கில் வந்தான் - அமர் செய்யும் செருக்கோடு வந்தான், ஞானநாயகன்தன் முன்னம் - ஞானநாயகரான குமரப் பெருமான் முன்பு வந்தான்.

பொழிப்பு : முன்னைப் பிறப்பில் மயிலும் சேவலுமாகுமாறு தவம்புரிந்துவரம் பெற்றவர் சூரபதுமர் அந்த ஆக்கந்தரும் ஊழ் பயன்தருவதாய் வந்து உந்துதலால் சேவலும் மயிலுமாய் உருப்பட்டும், உள்ளம் பகைமைக் காழ்பு உள்ளவனாக பெருமான் முன்வந்தான்.

குறிப்பு : தாள் + படை - காலாயுதம் சேவற் பெயர், ஆதிஊழ் - சூரன் பதுமன் சாகத் தீவின் மன்னன் மைந்தர். அன்று ஆற்றியதவப்பேறு. இது ஆகூழ் எனவந்து பயன்தந்தது உந்தியது. சாகத் தீவின் மன்னன் பிரபாகரன் மனைவிசுகுமாரி. மக்கள் நால்வர் சூரன் பதுமன் சிங்கன்தாரகன் என்பவர். சூரனும் பதுமனும் இரட்டையர். இவர்கள் முருகனுக்காளாகத்தவம் புரிந்தோர். சிங்கன் அம்பிகைக்கும் தாரகன் ஐயனாருக்கும் வாகனமாயினர்.

மருள்கெழு புள்ளே போல வந்திடு சூரன் எந்தை
அருள்கெழு நாட்டஞ் சேர்த்த ஆங்கவன் இகலை நீங்கித்
தெருள்கெழு மனத்த னாகி நின்றனன் சிறந்தார் நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன் னாகிய இயற்கை யேபோல். 495

பொருள் : மருள்கெழு புள்ளேபோல வந்திடுசூரன் - அறியாமை மிக்க பறவைபோல அங்குவந்த சூரன், எம்பிரான் குமாரவேள் அருள் நிரம்பியநோக்கத்தோடு பார்த்தலும், அங்கு அவன் இகலை

நீங்கி - அங்கு அந்த சூரன் பகைமையும், சினமும் தீர்ந்தவனாகி, தெருள்கெழு மனத்தவனாகி நின்றனன் - மெய்யுணர்வு நிறைந்த மனமுள்ளவனாகி நின்றான், சிறந்தார் நோக்கால் இருள்கெழு கரும்பொன் செம்பொன் ஆகிய இயற்கையேபோல் - சிறந்த சித்தர்களின் (தரிசனவேதி) எனப்படும் பார்வையினாலே இருண்ட கரிய இரும்பானது செம்பொன்னாக மாறும் தன்மைபோல இருந்தது. அம்மாற்றம்

பொழிப்பு : அறியாமையுள்ள மயில்வடிவில் வந்த சூரன்மேல் எம்பிரானின் அருட்பார்வை பதிதலும், அறியாமை சினம் நீங்கி மெய்யுணர்வு பெற்றவனாகி மாறிநின்றான். அச்செயலானது சிறந்த சித்தர்களின் தரிசனவேதி எனப்படும் பார்வையால் காரிரும்பு செம்பொனாயதுபோலிருந்தது.

குறிப்பு : தரிசனம் -பார்வை, தரிசனவேதி - பார்வையாலே ஒன்றை ஒன்றாக மாற்றுதல்; பெருமானது பார்வையால் பசுகரணங்கள் சிவகரணங்களாயினது மாற்றம்.

தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான். 496

பொருள் : தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் - என்றும் தீவினைகளே புரிந்தாராயினும் குமாரசுவாமியின் திருமுன்பு சேரப்பெற்றால் - தூயவர் ஆகிமேலைத் தொல்கதி அடைவர் என்கை ஆயவும் வேண்டும் கொல்லோ - அவர்கள் குற்றமற்ற தூயவர்களாகி மேன்மையுள்ள பழைய வீடுபேற்றை அடைவார் என்பது ஆராய்ந்தறிய வேண்டிய ஒரு காரியமோ, அல்லவே; அடுசமர் இந்நாட் செய்த மாயையின் மகனுமன்றோ - கொல்லும் போர்த்தொழிலை இந்நாள் வரை செய்த மாயா புத்திரனான சூரனுமல்லவா, வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான். - எல்லையில்லாதபேரருளை இன்று பெற்று உய்தியாகி முத்தியடைந்தான். இது ஒன்றே அமையாதோசான்றாக.

பொழிப்பு : தீவினையாளராயினும் குமரவேள் திருமுன் குறுகியவர் தூயவராகி மெய்யுணர்ந்து முத்திபெறுவர் என்பது சத்தியம். இதில் ஐயமும் ஆராய்ச்சியும் வேண்டா. ஏனெனில் இன்றுவரைபெருமான் முன்கொடும்போர் புரிந்து நின்ற சூரனும் அவரருளால் மாசகன்று முத்தி பெற்றானல்லவா இதுவே சான்றாகும்.

குறிப்பு : தீயவை புரிந்தாரேனும் மாயையின் மகனும் இழிவுசிறப்புமைகள், ஆயவும் எதிர்மறை உம்மை, என்கை - என்று ஆன்றோர் சொல்லுதல், அன்றோ ஓகாரம் வியப்பு.

அக்கணம் எம்பிரான்தன் அருளினால் உணர்வு சான்ற
குக்குட வுருவை நோக்கிக் கடிதில்நீ கொடியே ஆகி
மிக்குயர் நமது தேரின் மேவினை ஆர்த்தி என்னத்
தக்கதே பணியீ தென்னா எழுந்தது தமித்து விண்மேல். 497

பொருள் : அக்கணம் எம்பிரான் தன் அருளினால் உணர்வுசான்ற - அக்கணத்திலே எம்பிரான்குமாரவேள் தமது அருளினாலே மெய்யுணர்வு சாலப்பெற்ற, குக்குடஉருவை நோக்கி - பதுமனாம் சேவலின் உருவைநோக்கி, நீகடிதில் கொடியேயாகி - நீவிரைவில் முன்னும் நமது கொடியே அதனால் அப்பணி ஏற்று, மிக்குயர் நமது தேரில் மேவினை ஆர்த்தியென்ன - மிக உயர்ந்த நமது தேர்மேல் அமர்ந்து ஆர்ப்பரிப்பாயாக என்றருளலும், இதுபணிதக்கதே என்னா - சுவாமீ இப்பணி எமக்கு ஏற்றதென்று உவந்தேற்று, விண்மேல் தமித்து எழுந்தது - தனியெ விண்ணிலேதாவிக்கிளர்ந்து சென்றது.

பொழிப்பு : அப்போது பெருமான் பதுமனாம் சேவலை நோக்கி நீவிரைவிலே கொடியாய் நமது தேரில் இருந்து ஆர்த்துப் பணியாற்றுக என, எனக்குஇது தக்கதென்று ஏற்றுத்தனியே விண்ணில் தாவிச்சென்றது.

குறிப்பு : யான் எனது என்னும் செருக்கு அறுந்தபோதில் வானொர்க்குயாந்த உலகம்புகும் என்றது. அவ்விரண்டன் வடிவாகவே சூரபதுமராயிருந்து அறுத்துவேறாக்கப்பட்டனர்.

செந்நிறங் கெழீஇய சூட்டுச் சேவலங் கொடியொன் றாகி
முன்னுறு மனத்திற் செல்லும் முரண்டகு தடந்தேர் மீப்போய்
இந்நில வரைப்பின் அண்டம் இடிபட உருமே றுட்க
வன்னியும் வெருவ ஆர்த்து மற்றவண் உற்ற தன்றே. 498

பொருள் : செந்நிறம் கெழீஇய சூட்டுச் சேவலங்கொடி ஒன்றாகி - பணித்தவாறே பதுமன் செந்நிறம் கெழுமிய தலைச்சூட்டுள்ள சேவலாகிய ஒரு அழகிய கொடியாகி, முன்றுறுமனத்திற் செல்லும் முரண்தகு தடந்தேர் மீப்போய் - எண்ணுகின்ற மனவேகத்திற் செல்லும் வலிய பெரிய தேரின்மேற்போய் இந்நில வரைப்பின் அண்டம் இடிபட இந்தப்பிருதுவியிலுள்ள அண்டம் அதிர்ந்து இடிபடவும், உருமேறுஉட்க இடியேறும் அஞ்சி ஒடுங்க, வன்னியும் வெருவ - இடையிலே கொடியாயிருந்த அக்கினி தேவனாகிய சேவலும் பயப்படவும், ஆர்த்து மற்றவண் உற்றதன்றே - ஆர்ப்பரவம் செய்தவாறு அங்கே தனக்குரிய இடத்தில் வீற்றிருந்தது (மற்று அன்று அசைநிலைகள்)

பொழிப்பு : செந்நிறத்தலைச் சூட்டுள்ள ஒருசேவற் கொடியாகி மனோவேகத் தேர்மேற்சென்று இப்பூமி அண்டம் இடிய உருமும் உட்க வன்னியாகிய சேவலும் அஞ்சி ஒதுங்க ஆர்ப்பரவம் செய்தவாறு அங்கு உரிய இடத்தில் அமர்ந்தது.

குறிப்பு : மயிலின் தலை அலங்காரம் தூவி எனவும் சேவலின் தலை அலங்காரம் சூட்டு, எனவும் வழங்குவர்.

சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியின் இருக்கை நீங்கி உணர்வுகொண் டொழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி எம்மை என்னாப்
பார்திசை வானம் முற்றும் பரியென நடாத்த லுற்றான். 499

பொருள் : சீர்திகழ் குமரமூர்த்தி - சீர்சிறந்தவராம்குமர மூர்த்தியானவர், செறிவிழி கொண்டதொல்லை ஊர்தியின் இருக்கை நீங்கி - செறிந்த கண்ணாயிரம் கொண்ட இந்திரனாம் பழைய

மயிலூர்தியில் இருத்தலைவிட்டு, உணர்கொண்டு ஒழுகிநின்ற சூர்திகழ்மஞ்சைஏறி மெய்யணர்வுபெற்று ஆபட்டவர்க்குரிய ஒழுக்கத்தோடு நின்று விளங்கும் சூரனாகிய மயில் மீது ஏறிஅமர்ந்து, நம்மைச்சுமக்குதிஎன்னா - நம்மைச் சுமந்து செல்க, எனப் பணித்து, பார்திசை வானம் முற்றும் - பூமிதிசைகள் வானம் ஆகிய இடமெங்கும், பரியென நடத்தலுற்றான் - வாகனமாக ஊர்ந்து செல்வாராயினர்.

பொழிப்பு : சிறந்த குமாரவேள் இந்திரனாகிய மயிலிலிருந்து இறங்கி, சூரனாம் விளங்குகின்ற மயில்மீது ஏறி அமர்ந்து நம்மை நீசுமக்குதி எனப் பணித்து, பாரிலும் திசையிலும் வானிலும் எங்கும் வாகனமாக ஊர்ந்து செல்வாராயினர்.

தடக்கடல் உடைய மேருத் தடவரை இடிய மற்றைப்
படித்தலம் வெடிப்பச் செந்தீப் பதைபதைத் தொடுங்கச் சூறை
துடித்திட அண்ட கூடந் துளக்குறக் கலாபம் வீசி
இடித்தொகை புரள ஆர்த்திட்டேகிற்றுத் தோகை மஞ்ஞை. 500

பொருள் : தடக்கட்ல் உடைய - பெரியசமுத்திரங்கள் கரைபுரண்டோடவும், மேருத்தடவரை இடிய - மேருவாகிய பெருமலை இடியவும், மற்றைத்படித்தலம் வெடிப்ப - மற்றும் பூமியிடம் வெடிக்கவும், செந்தீப் பதைபதைத்து ஒடுங்க சிவந்ததீகடவுள் பதைபதைத்து ஒடுங்கவும், சூறை மாருதம் துடித்திட சூறையாம் வாயுதேவன் அஞ்சித்துடிக்கவும், அண்டகூடம் துளக்குற - அண்டகூடம் நடுங்கவும், கலாபம் வீசி - கலாபமாகிய சிறகடித்து, இடித்தொகைபுரள ஆர்த்திட்டு - இடியேறுகள் அஞ்சிப் புரண்டுவிழ அகவி ஆர்த்தவாறு, தோகைமஞ்சை ஏகிற்று - தோகையுடன்மயில் உல்லாசமாக உலாவந்தது.

பொழிப்பு : கடல் உடைய, மேருஇடிய பூமிவெடிக்க, தீக்கடவுள் ஒடுங்க சூறைமாருதம் துடிக்க, அண்டகூடமும் நடுங்க சிறகைவீசிக் கொண்டும் இடியேறும் புரண்டுவிழ அகவி ஆர்த்துக்கொண்டும் தோகை மயில் சென்றது.

படத்தினின் உலகம் போற்றும் பணிக்கிறை பதைப்பப் பாங்கர்
அடுத்திடு புயங்கம் முற்றும் அலமர அவனி கேள்வன்
இடத்தமர் கின்ற பாம்பும் ஏங்குற விசும்பிற் செல்லும்
உடற்குறை அரவும் உட்க உலாயது கலாப மஞ்ஞை. **501**

பொருள் : படத்தினில் உலகம் போற்றும் பணிக்கு இறைபதைப்ப - தனதுதலையில் பூமியைச் சுமக்கும் பாம்பரசனான சேடன் பதைக்கவும், பாங்கர் அடுத்திடு புயங்கம் முற்றும் அலமர - பாங்கரிலே துணையாகச் சேர்ந்த எட்டு நாகங்களும் அலமரவும், அவனிகேள்வனிடத்து அமர்கின்ற பாம்பும் ஏங்குற - நிலமகள் நாயகனான நாராயணனிடம் சயனிக்கும் அணையாயுள்ள அனந்தனெனும் அரவும் ஏக்கங் கொள்ளவும், விசும்பிற் செல்லும் உடற்குறை அரவும் உட்க வானிலே சஞ்சரிக்கும் குறையுடலாயுள்ள இராகு கேது எனும் சர்ப்பங்களும் உளங்கலங்கவும், உலாயது கலாபமஞ்ஞை கலாபமயில் ஆர்ப்பரித்துச் சென்றது.

பொழிப்பு : நகுலம் கருடன் மயில் பகையானவை ஆதலால், பாம்புச்சாதியைச் சேர்ந்த சேடனும் அடுத்துள்ள எட்டு நாகங்களும் விஷ்ணுவின் பாயலான அனந்தனும், வானிலே உலாவும் இராகு கேது வாகிய பாம்புகளும் மயிலின் ஆரவாரத்தாலே மிக அச்சமுற்றன.

குறிப்பு : பணிக்குக்கிறை - பாம்பரசன்சேடன், அவனி கேள்வன் - பூமிதேவிக்கு நாயகன் அரி , அவன்பால் உள்ளது பாயலான அனந்தன். உடறகுறைஅரவு - வெட்டுண்டகுறையுடல் உருவுள்ள இராகுவும் கேதுவும், இந்தச் சிரேட்டமான அரவுகளும் அஞ்சினவெனில் எனையசொல்லவேண்டா; பணி. புயங்கம், பாம்பு, அரவு ஒருபொருள் பாம்பு. பொருட்பின் வருநிலையணி.

பாரொடு விரிஞ்சன் தன்னைப் படைத்திடப் பன்னாள் மாயன்
காரென வந்து முக்கட் கடவுளைப் பரித்த தேபோல்
வீரருள் வீரனாகும் வேலுடைக் குமரன் தன்னைச்
சூருரு வாகி நின்ற தோகைமேல் கொண்ட தம்மா. **502**

பொருள் : பாரொடு விரிஞ்சன் தன்னைப்படைத்திட - உலகையும் அதனைப் படைக்கும் பிரமனையும் முதலிலேதான் தோற்றுவிக்கும் ஆற்றல்பெறவேண்டி, மாயன்காரெனவந்துபல்நாள் முக்கட்கடவுளைப் பரித்ததேபோல் - விஷ்ணுதேவர் முகிலின் உருவெடுத்து வந்து முக்கட்கடவுளாம் சிவனைச் சுமந்து திரிந்தவாறுபோலவே, வீரருள்வீரனான வேலுடைக்குமரன் தன்னை - வீராதிவீரராகும் வேலேந்திய குமரவேட் பெருமானை, சூருருவாகிநின்ற தோகை மேல் கொண்டது. - சூரன் உருவெடுத்து வந்ததான மயில் வாகனமாக மேற் சுமந்து உலாவந்தது.

பொழிப்பு : உலகையும் பிரமனையும் தன்னிடம் தோற்றுவிக்கும் ஆற்றல் பெறவேண்டி விஷ்ணு முகில்வடிவாகிப் பலநாள் சிவபிரானைச் சுமந்துசென்றது போலவே வீராதிவீரனான குமாரசுவாமியை சூரன்எடுத்த வடிவமான மயில்வாகனம் சுமந்து உலாவியது.

குறிப்பு : குமரனுக்கு சிவனும் மயிலுக்கு விஷ்ணுவானகார் முகிலும், சுமந்து உலாவருதல் பொதுத்தன்மையாகவும் உவமஉறுப்புகளைப் பொருத்திக் காண்க. விஷ்ணு முகிலாகிவந்து சிவனைச்சுமந்தது வாயுசங்கிதையில் கூறப்படும் செய்தி; இது பல கற்பங்களில் மேகவாகன கற்பத்தில் நிகழ்ந்தது.

வெயில்விடும் அநந்த கோடி வெய்யவர் திரண்டொன் றாகிப்
புயல்தவழ் கடவுள் வானில் போந்திடு தன்மை யேபோல்
அயிலினை யுடைய செவ்வேள் மரகதத் தழகு சான்ற
மயிலிடை வைகி ஊர்ந்தான் மாமுகந் திசைகள் முற்றும். 503

பொருள் : வெயில்விடும் அநந்தகோடி வெய்யவர் திரண்டு ஒன்றாகி - வெயில் ஒளிகாலும் அநந்தகோடி சூரியர் திரண்டு ஒருருவாகி, புயல்தவழ்கடவுள் வானில் போந்திடு தன்மையேபோல் - கருமுகில் தவழும்தெய்வீகமான வானிலே தோன்றி உலாவுதல் போலவே, அயிலினை உடைய செவ்வேள் - ஞானவேலையுடைய செவ்வேள் - மரகதத்து அழகுகான்ற மயிலிடை வைகி - மரகதமணிபோல்

பசியவண்ணமும் அழகும்படைத்த மயிலிடையே வீற்றிருந்து. மாகமும் திசைகள் முற்றும் ஊர்ந்தான் - ஆகாயமும் அட்டதிக்கும் ஆகியஇடமெங்கும் உர்ந்து ஊலாவந்தார்.

பொழிப்பு : வெயில் வீசும் அநந்தகோடி சூரியர் ஒன்று திரண்டு ஒருவடிவாகி முகில்கள் பயிலும் வானத்திலே பவனிவருவதுபோல, வேலேந்திய முருகவேளும் பச்சைமயில்மீதமர்ந்து, வானம் எட்டுத்திசை எங்கும் பவனியாக எழுந்தருளிவந்தார்.

குறிப்பு : ஓருருவான சூரியர் முருகனுக்கும், வானிலே தவழும் முகில் மயிலுக்கும் உவமைகள் இரண்டுக்கும் பொதுத்தன்மை செம்மை பசுமையாகிய நிறமும் உலாவருதலும்.

நேமிகள் ஏழும் ஒன்றாய் நிமிர்ந்தெழும் வடவை முற்றுந்
தாமொரு வடிவாய் அங்கட் சார்ந்திடு நிலைமை யென்ன
மாமயில் உயர்த்துச் சென்ற வாகைவேல் வீரன் மீண்டு
தீமைகொள் அவுணன் மூதூர்ச் செருநிலத் தெல்லை புக்கான். 504

பொருள் : நேமிகள் ஏழும் ஒன்றாய் - நீலமான சமுத்திரம் ஏழும் சேர்ந்து ஓருருவாயும், நிமிர்ந்து எழு வடவைமுற்றும் தாமொருவடிவாய் - ஏழுகடலிலும் எழுந்த வடவைத்தீ எல்லாம் தாம்சேர்ந்து தாமொருவடிவாயும் இணைந்து, அங்கட்சார்ந்திருதன்மை என்ன - அவ்விடத்தேவந்த தோற்றமே இதுவாகலாம் என்ன, மயிலினை உயர்த்துச்சென்ற வாகை வேல்வீரன் - மயில் வாகனத்துக்கு உயர்வுதந்து ஊர்ந்து வந்த வெற்றிவேல்கொண்ட வீரப்பெருமாள், மீண்டு - உலாமுடித்துமீண்டு, தீமைகொள் அவுணன்மூதூர் - தீமை சேர்ந்த சூரபன்மனின் மூதூராகிய மகேந்திர நகரில் உள்ள, செருநிலத்தெல்லைபுக்கான், - போர்க்களத்தில் வந்து சேர்ந்தான்.

பொழிப்பு : நீலக்கடல்ஏழும் ஓருருவாயும் அவற்றிலுள்ள வடவைத்தீஏழும் ஓருருவாயும் இணைந்து அங்குவந்த தோற்றமென எண்ணும்படி மயில்வாகனத்தின் மீது ஊர்ந்துவந்த வாகைவேல்

ஏந்திய பெருமாள் மீண்டு வீரமகேந்திரத்துப் போர்க்களத்தில் வந்தடைந்தார்.

குறிப்பு : நீலக்கடல் மயிலுக்கும் வட வைத்தீமுருகனுக்கும் உவமை, வடவைமுற்றும்தாம் ஒருவடிவாய் எனப்பன்மையாற் கூறியதால் ஏழுகடலிலும் ஏழுவடவை எழுந்தொன்றாயின எனக்கொள்க. மேலும் ஆறுமுகங்களுடன் வேலும் சேர்த்ததால், தீயை ஏழுநாவினன் என்பதற்கேற்ப உவமை சிறப்பதும் காணலாம்.

புக்குள குமர மூர்த்தி பொறிமயில் உருவ மாயுங்
குக்குட மாயும் நின்ற அமரரைக் குறித்து நோக்கி
மிக்கநும் மியற்கை யாகி மேவுதிர் விரைவின் என்ன
அக்கணம் அவருந்தொலை வடிவுகொண் டடியில் வீழ்ந்தார். 505

பொருள் : புக்குள் குமரமூர்த்தி - மீண்டுவந்துற்ற குமாரசுவாமியானவர், பொறிமயில் உருவமாயும் குக்குடமாயும் நின்ற அமரரைக்குறித்து நோக்கி - கண்போன்ற சின்னங்கள் உள்ள தோகைமயிலாயும் சேவலாயும் பணியாற்றி நின்றதேவர் (இந்திரன் அக்கினி) இருவரையும் அருள்நோக்கம்செய்து, மிக்க நும் இயற்கையாகி விரைவின் மேவுதிர் என்ன - மேலாகிய நுமது இயற்கையான தெய்வ உருவை விரைவிலே எடுத்திருப்பீராக என்று அருளவே, அக்கணம் அவரும் தொல்லை வடிவுகொண்டு அடியில் வீழ்ந்தார் - அக்கணத்திலே ஆணைபெற்ற தேவர் இருவரும் தத்தம் பழைய தேவவடிவினராய்ச்சென்று பிரானின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர்.

பொழிப்பு : மீண்ட குமாரவேள், மயில் சேவலாகி நின்ற தேவர்களை நோக்கி நீவிர்நுமது பழைய தேருருவுதாங்குக எனலும், அவர்களும் தேவர்வடிவில்வந்து, பிரானிடம் பாதங்களில் வீழ்ந்து பணிந்தனர்.

வள்ளலை வணங்கிப் பல்கால் வழுத்தியே தொழுது தத்தம்
உள்ளமும் புறத்தில் என்பும் உருகிட விழியில் தூநீர்
தள்ளுற வுரைகள் முற்றுந் தவறிடப் பொடிப்ப யாக்கை
கள்ளுண வுற்ற வண்டின் களிமகிழ் சிறந்து நின்றார். 506

பொருள் : வள்ளலை வணங்கிப் பல்கால் வழுத்தியே தொழுது - அருள்வள்ளலாகிய குமரனைப்பலமுறை வணங்கித்தொழுது நின்று பலதுதிகள் சொல்லி, தத்தம் உள்ளமும் புறத்தில் என்பும் உருகிட - தத்தமது உள்ளமும் புறத்துள்ள எலும்பும் அன்புமிகுதியாலே நெக்குருக, விழியில் துாநீர்தள்ளுற - கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பொழிய, உரைகள் முற்றும் தவறிட - முற்றும் உரை தடுமாற, யாக்கைபொடிப்ப - உடலுரோமங்கள் முகிழ்த்தெழப் பரசவராகி, கள்ளுணவுற்ற வண்டில் களிமகிழ் சிறந்து நின்றார் - கள்ளாகிய உணவைப் பெற்றுண்ணும் வண்டுகள் போலவே மிக்க ஆனந்தக்களிப்பில் சிறந்து திகழ்ந்தனர்.

பொழிப்பு : இந்திரனும் அக்கினியும், அளித்தஅருள் வள்ளற்பிரானை வணங்கித்துதித்து, தமது உள்ளமும் உடலில் என்பும் உருக, கண்ணீர்வார, உரைதழுதழுக்க, உரோமம்புளகமாக அன்பின்உருவாகி தேனுண்ட வண்டுபோலப் பரவசமாய்ப் களிமகிழ்ச்சி சிறந்தவராய்த்திகழ்ந்தனர்.

குறிப்பு : வேண்டுவார் வேண்டியபடி போக மோட்சங்களை வரையாது வழங்கும் அருள் வள்ளல் முருகன் என்பது குறிப்பித்தவாறு.

வீசுறு சுடர்வேல் ஐயன் வெய்யசூர் முதலைச் சாடித்
தேசுறு மஞ்ஞை ஊர்ந்து வந்தது தெரிந்து போர்செய்
காசினி யிடையே நின்ற கணங்களும் வீரர் யாரும்
ஆசறும் இளவ லுஞ்சென் றடிதொழு தார்த்துச் சூழ்ந்தார். 507

பொருள் : சுடர்வீசுவேல் ஐயன் - ஞான ஒளி வீசுகின்ற வேற்கரத்து உலகுடை முதல்வராம் குமரவேள், வெய்யசூர் முதலைச்சாடி - தமக்கு இனியனாம் சூரனெனும் முதல்வனைச் செருக்ககற்றி, தேசுறுமஞ்ஞை ஊர்ந்து வந்தது தெரிந்து - மெய்யுணர்வாகிய ஒளிபெற்று நிற்கும் மயிற்பரியாக்கி ஊர்ந்து களத்தின்கண் வந்தருளியமையைத் தெரிந்து, போர்செய்காசினியிடையே நின்ற - போர் நிகழ்ந்த களத்தினில் நின்ற, கணங்களும் வீரர்யாரும் - பூதகணத்தவர்களும் இலட்சத்தெட்டு வீரரும், ஆசறும் இளவலும் யாரும் சென்று - குற்றமில்லாத தம்பி வீரவாகு தேவருமாகிய

யாவரும் திருமுன்புவந்து. அடிதொழுது ஆர்த்துச்சூழந்தார் - பெருமாள் பாதங்களிலே பணிந்தும் துதித்தும் வெற்றி முழக்கம் செய்தும் சூழ்ந்து நின்றனர்.

பொழிப்பு : சுடர்விடும் வேற்கரத்தெம் மான் சூர்தடிந்து மயில் மீது வந்தருளியதைக் கண்டு போர்களத்தில் நின்ற பூதரும் வீரருமாகிய யாவரும் பெருமான் திருமுன்பு வந்து அடிபணிந்து போற்றி வெற்றிமுழக்கத்தோடு சூழ்ந்து நின்றனர்.

குறிப்பு : குமரவேளே ஞானபண்டிதன். அவர்கரத்துள்ள அஸ்திரதேவராம் வேலும் ஞானச் சுடராகவே உள்ளது, ஆதலின் அவர்திருக்கோலம் அநந்த கோடி சூரியர் சேர்ந்தொன்றாய் உதித்தது போல என உவமை கூறுவர். பல ஆலயங்களிலும் அன்பர் அகங்களிலும் ஞானச்சுடர் வேலே குமரனாகப் பிரதிட்டை செய்தும் தியானித்தும் வழிபடப் பெற்றுவருகிறது.
சுவாமியும் அவற்றிடமாய் நின்று வழிபாடேற்று வரம் அருளுகிறார். கந்த புராணமுதற்கடவுள் வாழ்திலும் "சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி" என்றும், இப்படல ஆரம்பத்தில் 'கொற்றவேல்' என்றே எடுத்துரைத்தும், இறுதிப்பாடலில் 'வீசுறுசுடர்வேல்' என்றும் அமைத்தமை, படைக்கல நாயகமாக விளங்கும் ஞானவேல் மகத்துவத்தையே காட்டுகிறது. சூரபன்மனின் இடக்கூறு சேவலும் வலக்கூறு மயிலுமாய் மேலும் கீழும்அமைய நடுநாயகமாகத்திருக்கைவேல் சுடர் ஒளிவீசிநிற்கிறது, இது ஆதிமத்தியாந்தம் கடந்த பொருள் கந்தன் கைவேலும் அத்தன்மையை தெனவும், யான் எனது என்னும் செருக்கறுத்து செந்நெறியில் சென்னெறியிற் சேர்த்தும் எனவும் தெளிவுதருவதாம்.

சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

சூரபன்மன் வதைப்படலம் நிறைவு.

"வேலும் மயிலும் துணை"

கச்சியப்பர் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

அநுபந்தம்

தேவர்கள் போற்று படலம்

நேரொரு சிறிதும் இல்லா நின்மலன் தனது வேலால்
குருடல் பிளந்தி யாணர் மஞ்ஞையில் தோன்று காலைப்
பாருல கயின்ற கண்ணன் பங்கயன் அமரர் கட்கோர்
ஆரமீர் தெய்திற் றென்ன அன்னது கண்டே ஆர்த்தார். 1

ஆர்த்தனர் எழுந்து துள்ளி ஆடினர் பாடா நின்றார்
போர்த்தனர் பொடிப்பின் போர்வை பொலங்கெழு பூவின்மாரி
தூர்த்தனர் அருளை முன்னித் தொழுதனர் சுடர்வேல் கொண்ட
தீர்த்தனை எய்திச் சூழ்ந்து சிறந்துவாழ்த் தெடுக்க லுற்றார். 2

வேறு

கார்தடிந்து துய்க்குங் கனைகடலின் நீர்வறப்பப்
போர்தடிந்து செல்லும் புகர்வேல் தனைவிடுத்துச்
சூர்தடிந்தாய் அன்றே தொழுமடியேம் வல்வினையின்
வேர்தடிந்தாய் மற்றெமக்கு வேறோர் குறையுண்டோ. 3

மாறுமுகங் கொண்டுபொரு வல்லவுணர் மாளாமல்
நூறு முகமெட்டு நோதக் கனபுரியத்
தேறு முகமின்றித் திரிந்தேமை ஆளவன்றோ
ஆறு முகங்கொண்டே அவதரித்தாய் எம்பெருமான். 4

நீதி முறையதனில் நில்லா அசுரர்புரி
தீது பலவுளவுந் தீர்ந்தோம் பழியகன்றோம்
வேத நெறிதொல்லை வெறுக்கையொடு பெற்றனமால்
ஏதும் இலையால் எமக்கோர் சூறையெந்தாய். 5

மன்ற அவுணர் வருத்திடஇந் நாள்வரையும்
பொன்றி னவரென்னப் புலம்பித் திரிந்தனமால்
இன்று பகைமாற்றி எமக்கருள்நீ செய்கையினால்
சென்றஉயிர் மீண்ட திறம்பெற்ற னம்ஜயா. 6

செய்யும்அவ னும்புலனுஞ் செய்வித்து நிற்போனும்
எய்த வரும்பொருளும் யாவையுநீ யேயென்கை
ஜய அடியேங்கள் அறிந்தனமால் அன்னதனால்
வெய்ய பவமகன்று வீடுமினிக் கூடுதுமால். 7

ஈண்டே எமருக் கிடர்செய் அவுணரெலாம்
மாண்டே விளியும் வகைபுரிந்து காத்தனையால்
வேண்டேம் இனியாதும் மேலாய நின்கழற்கே
பூண்டேந் தொழும்பு புகழேம் பிறர்தமையே. 8

என்னா இயம்பி எவருமினி தேத்துதலுங்
கொன்னார் அயில்வேற் குமர னதுகேளா
அந்நா ரணன்விரிஞ்சன் ஆதியாம் வானோர்க்குத்
தன்னா ரருளின் தலைமை புரிந்தனனே. 9

இரணியன் புலம்புறு படலம்

அதுநிகழ்ந் துழியகன்பதி அவுணர் கள்ஒரு சில்லோர்
கதுமெனச் சென்று காவலன் கந்தவேள் உய்த்திட்ட
நுதிகொள் வேலினான் மாய்ந்தனன் என்பதை நுவலுற்றார்
பதுமை அம்மொழி கேட்டனள் துணைவியர் பலரோடும். 1

காவல் மன்னவன் இறந்தனன் எனுமுரை கன்னத்துள்
மேவு மெல்லை யில்அசனி ஏறுண்ட வெம்பணியேபோல்
தேவி யாகிய பதுமகோ மளையெனுந் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி ஆகிய தகுவன்றோ. 2

எவ்வெ வர்க்கும்மே லாகிய அவுணர்கோற் கில்லாகி
அவ்வி டத்துறை துணைவியர் வயிறலைத் தழுங்குற்று
வெவ்வ ழற்பெருங் குண்டமொன் றாக்கியே விளிவுற்ற
தெய்வ தப்புனை வன்மகள் யாக்கைமுன் செலஉய்த்தார். 3

[1]மான்கி ளர்ந்தன அரிமதர் மழைக்கண்மெல் லியரெல்லாம்
வான்கி ளர்ந்தெழு கின்றதோர் மாபெருங் கனலூடே
கான்கி ளர்ந்திட மலர்தருந் தாமரைக் கானத்திற்
தேன்கி ளர்ந்துதம் மினத்தொடும் புகுந்தெனச் செல்லுற்றார். 4

செல்லல் போதுமென் றொழிந்திட அரற்றினோர் செந்தீயில்
செல்லல் போதுநாள் மாலையும் அங்கியிற் சேர்ந்தோங்கும்
அல்லல் போதுமுன் நின்றிடு நிசியெலாம் அகன்றென்ன
அல்லல் போதுமா நகர்த்திரு ஏகினள் அதுகாலை. 5

இந்த வாறிவர் அங்கியுள் மாண்டனர் இதுநிற்கத்
தந்தை பட்டதுஞ் சேவலும் மஞ்ஞையுந் தானாகிக்
கந்த வேள் புடை வந்ததுங் கண்டனன் கலங்குற்றுப்
புந்தி நொந்துநின் றிரணியன் வானிடைப் புலம்புற்றான். 6

வேறு

நன்றென் பதைஉணராய் நானுரைத்த வாசகங்கள்
ஒன்றுஞ் சிறிதும் உறுதியெனக் கொண்டிலையே
பொன்றும் படிக்கோ பொருதாய் புரவலனே
என்றுன்னை முன்போல் இருந்திடநான் காண்பதுவே. 7

அன்புடையன் கொல்லென் றயலா ரெடுத்துரைப்பத்
துன்புடையேன் போலத் துயரா அயர்கின்றேன்
என்புடையே முன்னர் எனதுயிர்கொண் டேகினனால்
நின்புடையே நின்று நெடும்பழியின் நீங்காதேன். 8

பா-ம்: 1 மீன்கிளர்ந்தன

மாற்றார் வலிகண்டு மற்றுன்னை வன்செருவில்
போற்றா தொளித்த பொறியிலியேன் தன்முன்னந்
தோற்றாமல் எங்கொளித்தாய் சொல்லாய் சுதன்போலக்
கூற்றான வனைஇன்னுங் கூடமனங் கொள்ளுதியோ. 9

கையார் அழலேந்துங் கண்ணுதலோன் தந்தவரம்
மெய்யாம் ஒருகாலும் வீடாய்அ:. தெல்லாம்
பொய்யாகும் வண்ணம் புதல்வனென வந்துதித்தோன்
ஐயா உனக்கோர் அருங்கூற்றம் ஆயினனே. 10

நில்லா உடலை நிலையா மெனக்கருதிப்
பல்லா ருங்கண்டு பழிக்கும் படிஉனக்குஞ்
சொல்லா தகன்றேன்நீ துஞ்சியபின் வந்தனனால்
நல்லார் களில்தேரின் நானே தலைஅன்றோ. 11

அத்திர நேர்கூறும் அவுணர் தமக்குள் மிகக்
குத்திர னேயாகுங் கொடியேன்நீ துஞ்சியபின்
மித்திரனே போன்றிரங்கி மீண்டேன் உனக்கென்னைப்
புத்திர னேயெனகை புவிக்குப் பொறையன்றோ. 12

ஆழியான் வேதன் அமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று வழுத்தியிட வைகியநீ
பூமியார் மேனிப் புராரிசிறு வன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ. 13

ஓகையால் அண்டத் துயிர்களெலாம் வந்திறைஞ்சச்
சேகையாய் மல்குந் திருத்தாள்கொண் டுற்றிடுநீ
வாகையார் கின்ற வடிவேற் கரத்தோனைத்
தோகையாய் நின்று சுமக்குதியோ தோன்றாலோ. 14

மேற்றான் விளையும் இ:தென்றே வினயமுடன்
ஆற்றான் மொழிந்தேன் அதுசிறிதுங் கேட்டிலையே
மாற்றான் எனவந்த மைந்தனுடன் போர்செய்தே
தோற்றாயே அற்றால் மயிலாய்ச் சுமக்குதியோ. 15

மாறுற்றி டாத்தொல் வடிவந்தனை இழந்து
வேறுற்ற புள்வடிவாய் மேவினாய் ஆங்கதனால்
ஈறுற் றனைஅன்றே என்செய்கை செய்வதற்கும்
பேறுற் றிலன்வாளா பேணினேன் இவ்வுயிரே. 16

பிள்ளைப் பிறைபுனைந்த பிஞ்ஞகன்றன் காதலனைப்
புள்ளிக் கலாபப் பொறிமயிலாய்ப் போற்றுமெல்லை
எள்ளற் பொருட்டா லியான்முன்னு ரைத்தவற்றை
உள்ளத் திடைஎந்தாய் உன்னுதியோ உன்னாயோ. 17

பொங்குற்ற சீற்றம் பொரும்போர் இகலுள்ளந்
தங்குற்ற மானஞ் சயமகந்தை வன்மையெலாம்
அங்குற்ற நின்னை அடைந்ததிலை அவ்வனைத்தும்
எங்குற்ற தையா இயம்பாய் எனக்கதுவே. 18

என்று கனகன் இரங்கி நெடுஞ்சேணில்
நின்று தளர்ந்து நெடிதுயிர்த்துப் பூதரெனைத்
தின்று சினந்தீர்வர் தெரியினெனச் சிந்தைசெய்து
துன்றுதிரை வேலையிடைத் தொன்மைபோற் புக்கனனெ. 19

புக்க கனகன் புலர்ந்து புகரோன்பால்
அக்கணமே எய்தி அழிவுற்ற தந்தையர்க்குந்
தக்க துணைவர்க்குந் தாயர்க்கும் ஏனையர்க்கும்
மிக்க கடன்கள் விதிமுறையே செய்தனனே. 20

தாக்கிச் சமர்மலைந்த தானவர்க்குச் செய்பரிசே
தூக்கிப் புரிந்து துயரினுக்கோர் வித்தென்றே
ஆக்கத் தினைவெறுத்தே ஆதிப் பிரானையுள்ளே
நோக்கிக் கதியடைவான் நோற்றொருசார் உற்றனனே. 21

மீட்சிப் படலம்

மற்றது காலத்து மணிதூங் கியபசும்பொற்
பொற்றை புரையும் பொறிமஞ்ஞை மீதுவைகும்
வெற்றி நெடுவேற்கை விமலன் வீறலோனைப்
பற்றி னொடுநோக்கி இனைய பகர்கின்றான். 1

கேட்டி இதுவீர கெடலுற்ற வெஞ்சூரன்
ஈட்டு திருவென்ன இருஞ்சிறையின் முன்வைப்ப
வாட்டமுறு சயந்தன் வானோர் தமையெல்லாம்
மீட்டு வருதி எனவே விளம்பினனால். 2

குன்றம் எறிந்த குமரன்இது கூறுதலும்
நன்றி தெனவே தொழுது நனிமகிழ்ந்து
வென்றி விடலை விடைபெற்றுப் போர்க்களத்தின்
நின்றும் அவுணன் நெடுநகரத் தேகினனால். 3

மீது படுதிண்டோள் விடலை அறந்திறம்புங்
கோது படுதீயோர் குழீஇயநக ருட்புக்குத்
தாது படுதண்டார்ச் சயந்தன் அமரருடன்
தீது படுவெய்ய சிறைக்களத்துச் சென்றனனே. 4

செல்லும் வீறலோன் திறத்தை நனிநோக்கி
அல்லல் அகலும் அரிசுதனும் வானோர்கள்
எல்லவரும் அற்புதநீர் எய்திப் பதம்பூட்டும்
வல்லி பரிய மலர்க்கை குவித்தனரே. 5

செங்கை குவித்தே திறலோய் சிறைப்பட்ட
நங்கள் துயர்அகற்ற நண்ணினையோ நீயென்றே
அங்கவர்கள் எல்லோரும் ஆர்த்தெழுந்து கூறுதலும்
எங்கள் பெருமான் இளவல் இதுபுகன்றான். 6

வம்மின்கள் வம்மின்கள் வானத்தீர் எல்லீரும்
நும்மை அயர்வித்த நொறில்பரித்தேர் வெஞ்சூரை
அம்ம அவுணர் அனிகத் துடன்எங்கோன்
இம்மெனவே வேலால் இதுபோழ் தெறிந்தனனே. 7

என்றாங் கிசைப்ப இமையோர் அதுகேளாப்
பொன்றாது முத்தி புகுந்தோர் எனமகிழ்ந்து
வன்றாள் மிசைப்பிணித்த வல்லிகளின் மூட்டறுத்துச்
சென்றார் அவுணன் திருநகரம் நீங்கினரே. 8

வேறு

நுணங்கு நூலுடை இளையவன் முன்செல நொய்தென்ன
அணங்கி னோருடன் சயந்தனுந் தேவரும் அவண்நீங்கிக்
குணங்கர் ஈண்டிய களத்திடை நணுகியே குமரன்தாள்
வணங்கி மும்முறை புகழ்ந்தனர் திகழ்ந்தனர் மகிழ்வுற்றார். 9

குன்றெ றிந்தவன் அமரர்பாற் பேரருள் கொடுநோக்கி
நன்றி யில்லவன் சிறையிடைப் பலபகல் நணுகுற்றீர்
துன்று பேரிடர் மூழ்கினீர் ஈங்கினித் துயரின்றி
என்றும் வாழ்குதீர் துறக்கமேல் வெறுக்கையில் இருந்தென்றான். 10

கந்தன் இம்மொழி வழங்கலுங் கடவுளர் களிப்பெய்தி
உய்ந்த னம்மெனப் பின்னரும் வணங்கினர் உகுகாணா
முந்து தொல்லிடர் நீங்கியே புந்தியில் *முதமெய்தி
இந்தி ரன்திருப் பெற்றிடு ஞான்றினும் இனிதுற்றான். 11

* முதம் - மகிழ்ச்சி

கண்டன ன்தொழு மைந்தனைப் புல்லினன் களிப்புள்ளங்
கொண்ட னன்புறம் நீவினன் பல்லுகங் கொடியோன்செய்
ஒண்ட ளைப்புகுந் தெய்த்தனை போலும்என் றுரைசெய்யா
அண்டர் யாரையும் முறைமுறை தழீஇயினன் அமரேசன். 12

செற்ற மேதகு மவுணர் தங்காவலன் செருவத்தில்
அற்றை காறுமா விளிந்திடு பூதர்தம் அனிகங்கள்
முற்று மாயிடை வரும்வகை முருகவேள் முன்னுற்றான்
மற்ற வெல்லையில் துஞ்சிய கணமெலாம் வந்துற்ற. 13

முஞ்சு தானைக ளார்ப்பொடு குழீஇக்குழீஇ முருகேசன்
செஞ்ச ரண்முனம் பணிந்துதம் மினத்தொடுஞ் செறிகின்ற
எஞ்ச லில்லதோ ரெல்லைநீர்ப் புணரியில் எண்ணில்லா
மஞ்சு கான்றிடு நீத்தம்வந் தீண்டிய மரபென்ன. 14

கருணை யங்கட லாகியோன் கனைகடற் கிறையாகும்
வருணன் மாமுக நோக்கியே வெய்யசூர் வைகுற்ற
முரணு றுந்திறல் மகேந்திர நகரினை முடிவெல்லைத்
தரணீ யாமென உண்குதி ஒல்லையில் தடிந்தென்றான். 15

என்ற மாத்திரைச் சலபதி விழுமிதென் றிசைவுற்றுத்
துன்று பல்லுயிர் தம்மொடு மகேந்திரத் தொல்லூரை
அன்று வன்மைசேர் புணரியுள் அழுத்தினன் அவனிக்கீழ்
நின்று மாயவன் அடுவுல குண்டிடு நெறியேபோல். 16

ஆன காலையில் அறுமுகன் முகுந்தனும் மலரோனும்
வானு ளோர்களும் இறைவனும் வழுத்தினர் மருங்காக
ஏனை வீரர்கள் யாவரும் புடைவர இகற்பூதத்
தானை ஆர்த்துடன் சென்றிடச் செருநிலந் தணப்புற்றான். 17

கலங்கல் கொண்டிடு மகேந்திர வரைப்பினைக் கடந்தேபின்
இலங்கை மாநகர் ஒருவியே அளக்கரை இகந்தேகி
நலங்கொள் சீருடைச்செந்தியில் தொல்லைமா நகரெய்தி
அலங்கல் அஞ்சுடர் மஞ்ஞைநின் றிழிந்தனன் அயில்வேலோன். 18

கேக யத்தின்நின் றிழிந்துதொல் சினகரங் கிடைத்திட்டுப்
பாக சாதன னாதியாம் அமரர்கள் பணிந்தேத்த
வாகை சேர்அரித் தவிசின்மேல் வதனமூ விரண்டுள்ள
ஏக நாயகன் உலகருள் கருணையோ டினிதுற்றான். 19

வேறு

ஈண்டிது நிகழ்ந்த எல்லை இப்பகல் அவுண ராகி
மாண்டவர் நமர்கள் அன்றே மற்றவர் படிவமுற்றுந்
தீண்டினங் கதிர்க்கை யாலுந் தீர்விதற் கிதுவென் பான்போல்
பூண்டகு தடந்தேர் வெய்யோன் புனற்பெருங் கடலுட் புக்கான். 20

வேலையின் நடுவு புக்கு மேவரும் வடவைச் செந்தீக்
காலம தறுதி யாகக் கடிதெழிஇக் ககன நக்கிப்
பாலுற விரிந்தி யாண்டும் படர்ந்துகொண் டென்ன வந்தி
மாலையம் பொழுதில் செக்கர் வான்முழு தீண்டிற் றன்றே. 21

வேறு

அன்னதொரு போழ்துதனில் ஆறிரு தடந்தோள்
முன்னவனை நான்முகவ னேமுதல தேவர்
சென்னிகொடு தாழ்ந்துசிறி யேங்கள்இவ ணுன்றன்
பொன்னடி அருச்சனை புரிந்திடுதும் என்றார். 22

என்றுரைசெய் காலைஎமை யாளுடைய வண்ணல்
நன்றென இசைந்திட நறைக்கொள்புனல் சாந்தத்
துன்றுமலர் தீபம்அவி தூப முதலெல்லாம்
அன்றொரு கணத்தின்முன் அழைத்தனர் கள்அங்ஙன். 23

எந்தையுமை தேர்ந்திட இயம்பிய குமார
தந்திர நெறிப்படி தவாதறு முகற்கு
முந்திய* குடங்கர்முதல் மூவகை யிடத்தும்
புந்திமகிழ் பூசனை புரிந்தனர் பரிந்தே. 24

எஞ்சலில் அருச்சனை இயற்றி இணைஇல்லோன்
செஞ்சரணி னைத்தமது சென்னிகொடு தாழா
அஞ்சலிசெய் தேத்திடலும் ஆங்க வரைநோக்கி
நெஞ்சுறு மகிழ்ச்சியொடு நீடருள் புரிந்தான். 25

நீண்டவருள் செய்திடு நெடுந்தகை நுமக்கு
வேண்டுகுறை யுண்டெனின் விளம்புதிர்கள் என்னக்
காண்டகைய சூர்முதல் களைந்தெமை அளித்தாய்
ஈண்டுனருள் பெற்றன மியாதுகுறை மாதோ. 26

ஒன்றினீ அளிப்பதுள துன்னடியம் யாக்கை
நின்றிடு பகற்றுணையும் நின்னிரு கழற்கண்
மன்றதலை யன்புற வரந்தருதி எந்தாய்
என்றிடலும் நன்றென இரங்கியருள் செய்தான். 27

வேறு

மலரய னாதியாம் வரம்பி லோரெலாம்
பலர்புகழ் குமரனைப் பரவி வைகினார்
உலகினில் யாரையும் ஒறுத்த தானவர்
குலமென மாய்ந்தது கொடிய கங்குலே. 28

கங்குலுந் தாரகா கணமும் மாய்ந்திடப்
பொங்கொளி வீசியே பொருவில் ஆதவன்
இங்குள வுலகெலாம் ஈறு செய்திடுஞ்
சங்கர னாமெனத் தமியன் தோன்றினான். 29

* குடங்கள் முதல் மூவகை இடம்-கும்பம், அக்கினி, உரவமாகிய திருமேனி என்னும் மூன்று இடங்களில்.

குணதிசை அமர்புரி கொடியர் உய்த்திடுங்
கணையென விரிகதிர் காட்டி அங்கவை
அணைதலுங் குருதிநீர் அடைந்த தன்மைபோல்
இணையறு செக்கர்பெற் றிரவி தோன்றினான். 30

அப்பொழு தவ்விடை அமரர் கம்மியன்
கைப்படு செய்கையாற் கந்த வேள்ஒரு
செப்பரு நிகேதனஞ் செய்வித் தீசனை
வைப்புறு தாணுவில் வருவித் தானரோ. 31

ஆமயம் முதலிய ஐந்து கந்திகள்
மாமலர் மஞ்சனம் அமிர்தம் வான்துகில்
தூமணி விளக்கொடு தூபங் கண்ணடி
சாமரை ஆதிகள் அமரர் தந்திட. 32

முழுதொருங் குணர்ந்திடு முருகன் யாவருந்
தொழுதகும் இறைவனால் தொடர்பு நாடியே
விழுமிய கண்ணுதல் விமலன் தாள்மலர்
வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால். 33

யுத்தகாண்டம் முற்றுப்பெற்றது
கச்சியப்பசிவாச்சாரியர் திருவடி வாழ்க.